145

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL
UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXXV (Nos. 1 to 5)

26th February and 1st to 4th March 1982.

©

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE *Rupees* 1

D
V211,32 N82
N83·183,5 1
122058

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

SIXTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*26th February and 1st to 4th March, 1982.*

VOLUME No. CLXXXV (Nos. 1 TO 5).

TABLE OF CONTENTS.

PAGES

*Friday, 26th February 1982.*


Personnel of the Government of Tamil Nadu .. .. i—v

Principal Officers of the Tamil Nadu Legislative Council. vii

List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. .. ix—xi

1. Announcements—
   (1) Message from the Governor .. .. .. 1
   (2) Decision of the Business Advisory Committee .. 48—49
2. General discussion on the Budget for the year 1982-83. 1—48
3. Papers laid on the table of the House .. .. .. 48—133

*Monday, 1st March 1982.*

1. Questions and Answers .. .. .. .. .. 135—153
2. Adjournment motion *re*—
   Attack on Thiru Theertharaman, M.L.A., at Legislators' Hostel .. .. .. .. 154—162
3. Call Attention Notices—
   (1) Strike by employees of the Tamil Nadu Dairy Development Corporation from 19th November 1982 .. .. .. .. .. .. 162—164
   (2) Hardship caused to the people of Madras and Ramanathapuram districts due ot mosquito menace .. .. .. .. .. 165

Monday, the 1st March 1982—*cont.*


| | Pages |
|---|---|
| 4. Government Bills— | |
| (1) The Indian Penal Code and the Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1982 (L.A. Bill No. 3 of 1982) .. .. .. | 166—208 |
| (2) The Tamil Nadu Prevention of Dangerous Activities of Boot-leggers, Drug-Offenders, Goondas, Immoral Traffic Offenders and Slum Grabbers Bill, 1982 (L.A. Bill No. 7 of 1982) .. .. | 209—258 |


*Tuesday, 2nd March 1982.*


| | |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. .. .. | 277—304 |
| 2. Call Attention Notices— | |
| (1) Lock out by the Wholesale rice dealers in Alandur. | 304—305 |
| (2) Expulsion of 300 students from Perarignar Anna Government Arts College at Namakkal and their inability to pursue their studies .. .. .. | 306—308 |
| 3. General discussion on the Budget for the year 1982-83 —*cont.* .. .. .. .. .. .. | 308—357 |
| 4. Papers laid on the table of the House .. .. .. | 357—358 |


*Wednesday, 3rd March 1982.*


| | |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. .. .. | 363—383 |
| 2. Privilege issue *re* publication of a news item in "Anna" newspaper, dated 1st March 1982 .. .. .. | 383—385 |
| 3. Adjournment motion *re* Police firing during clash between two religious factions in Kanniyakumari district. | 385—396 |
| 4. Call Attention Notices— | |
| (1) Refusal of employment to teachers trained in Secondary Grade in Karnataka State and refusal to regularise their services in Tamil Nadu .. .. | 396—400 |
| (2) Direct action by non-teaching staff of the Tamil Nadu Agricultural University to press their demands .. .. .. .. .. .. .. | 400—401 |
| 5. General discussion on the Budget for the year 1982-83 —cont. .. .. .. .. .. .. | 402—455 |




*Thursday, 4th March 1982.*


| | Pages |
|---|---|
| 1. Questions and Answers .. .. .. .. | 461—477 |
| 2. Information *re* opposition by Members of the Legislative Assembly to the presentation of the Budget for the Tamil Nadu Electricity Board and announcement of certain concessions to its employees in the Legislative Council .. .. .. .. .. .. | 477—478 |
| 3. Call Attention Notices— | |
| (1) Confiscation of paddy transported in bullock-carts by farmers in Thovalai taluk in Kanniyakumari district by the Food Cell Officials .. .. | 478—481 |
| (2) Stoppage of admission to degree courses in Annamalai University without making alternative arrangements .. .. .. .. .. | 482—484 |
| 4. General discussion on the Budget for the year 1982-83 —*cont* .. .. .. .. .. | 485—515<br>518—546 |
| 5. Statement under rule 82 of the Council Rules *re* Restrictions on the use of electricity .. .. .. | 515—518 |
| Index .. .. .. .. .. | 551—581 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. THE HONOURABLE DR. V. R. NERUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THE HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THE HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THE HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THE HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education, Official Language and Handlooms.

8. THE HONOURABLE DR. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor-Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised, Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister for Public Works and Khadi, in charge of Khadi, Prohibition excluding grant of liquor permits passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு இராம எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம்; கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராம தானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்பு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி—(போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன். (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவு சீட்டு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்றப் மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம.பொ. சிவஞானம்

மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப்பித்தன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. ரா. இலட்சுமிகாந்தன்
2. திருமதி. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
3. திரு. ஏ. ஜே. தாஸ்
4. திரு. சி. ராமலிங்கம்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலர்

திரு. த. ப. டில்லிதுரை, பி. எஸ். சி.பி, எல்.,

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி. ஏ., பி. ஜி.எல்.பி. எல்.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்,

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 | அருணாசலம், திரு. க. | நியமனம். |
| 2 | ஆறுமுகம், திரு. சோ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 | ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 | ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 | இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 | இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 | இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 | இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 | இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 | கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 | சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி — கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 | சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 | சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14 | சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 15 | சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 | சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 | சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம், |
| 18 | சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |

| தொடக்க இலக்கமும், உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 19 | தாமஸ், திரு. பா. ரா. | மதுரை—இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 | தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 | தாராசெரியன், திருமதி. | நியமனம். |
| 22 | தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 | துரைசாமி, திரு. ஓ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 | நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 | நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 | புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 | மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 | மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 | மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 | மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 | முத்து, திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 | முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 33 | முத்தையா செட்டியார், டாக்டர் ராஜா சர், எம். ஏ. | நியமனம். |
| 34 | முனுசாமி, திரு. பி. | நியமனம். |
| 35 | லீலாவதி, செல்வி அ. | சென்னை—செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 | லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு—தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 | வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 | வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 | வீரப்பன், திரு. இராம. (செய்தி - அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடக்க இலக்கமும், உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 40 | வெங்கடேசன், ஈ. எஸ். | நியமனம். |
| 41 | ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 | ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43 | வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 45 | ஷ்ஷ | சேலம் — தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 47 | ஷ்ஷ | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 49 | ஷ்ஷ | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 | ஷ்ஷ | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 | ஷ்ஷ | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 53 | ஷ்ஷ | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 55 | ஷ்ஷ | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 57 | ஷ்ஷ | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 59 | ஷ்ஷ | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 61 | ஷ்ஷ | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | ஷ்ஷ | ஷ்ஷ |
| 63 | ஷ்ஷ | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

**வெள்ளிக்கிழமை, 1982 பிப்ரவரி 26.**

**மாசி 14, துன்மதி, திருவள்ளுவராண்டு 2013.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4-00 மணியளவில் **மாண்புமிகு மேலவைத் தலைவர்** (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 19—2—1982 தேதியிட்ட, கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது :

"நான் 1—2—1982 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரையாற்றியதற்காகத் தாங்கள் அனுப்பிய நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை, மனநிறைவோடு பெற்றுக் கொண்டேன்."

## 2. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1981-82 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும் 1982-83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

என்பது வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையார் அரசு ஆட்சிப் புரிவோர்க்கு வழங்கிய அறிவுரையாகும். பொருள் ஈட்டும் வழிவகைகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளங்களை உருவாக்கி, நாட்டில் ஏற்படும் இடையூறுகளை ஆராய்ந்தறிந்து, அவற்றை நீக்கும் வல்லமை பெற்றவனே அரசுவினையை ஆற்ற வேண்டும் என்பது குறளாசிரியர் உணர்த்தும் கருத்துரையாகும். வள்ளுவனார் வகுத்துத் தந்த அறநெறிக் கருத்துரையின் படி, தமிழக அரசிற்குப் பொருள் வருவதற்கான வருவாய் வழிகளைப் பெருக்கி, அவற்றின் துணைகொண்டு தமிழ்நாட்டின் வளங்களைப் பல்வேறு வகைகளிலும் உருவாக்கி, அவற்றின் உதவியோடு நாட்டில் எதிர்ப்படும்

இடையூறுகளை ஆராய்ந்து அறிந்து நீக்கி மக்களுக்கு நல்வாழ்வு நல்கிடும் நோக்கத்தை இன்றைய அரசு இயன்றவரையில் நிறைவேற்றி வருகிறது. இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான், 1981-82 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடுகளையும் @ அவையின் ஆய்வுக்கு அளிக்க முற்பட்டுள்ளேன்.

3. தமிழ்நாடு, இந்தியாவின் நல இழப்புகளில் பங்குபெறும் பகுதிகளில் ஒன்றாகவும், இந்தியாவின் வளர்ச்சிக்கு வலிவூட்டும் பகுதிகளில் ஒன்றாகவும் இருந்து வருகின்றது. இந்தியாவைப் பாதிக்கின்ற எந்த ஒரு பிரச்சினையும் தமிழகத்தையும் பாதிக்கின்றது. எடுத்துக்காட்டாக பண வீக்கம், இன்றியமையாப் பண்டங்களின் பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், ஏழ்மை நிலை, எரிபொருள்கள், விவசாய இடுபொருள்கள் ஆகியவற்றின் விலை உயர்வு, இரயில்வே போக்குவரத்துக் கட்டணங்களின் உயர்வு போன்றவைகள் அகில இந்தியாவை எந்த அளவுக்குப் பாதிக்கின்றனவோ, அந்த அளவுக்குத் தமிழகத்தையும் பாதிக்கவே செய்கின்றன. மாநில மக்கள் தங்களுடைய குறைபாடுகளைக் களையவும், தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் பெரும்பாலும் மாநில அரசையே எதிர்பார்க்கிறார்கள். மாநில அரசுக்கு, மக்களை நல்வாழ்வில் வாழ வைப்பதற்கான பொறுப்புக்கள் அதிகமாக அமைந்திருந்தபோதிலும், அந்தப் பொறுப்புக்களைச் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றுவதற்கான பொருளாதார வசதிகளும் வாய்ப்புகளும், அதிகார அளவுகளும் குறைவாகவே அமைந்திருக்கின்றன. உடல் உறுப்புக்களெல்லாம் வலிவாக இருந்தால்தான், உடல் வலிவாக அமையும். அதுபோல இந்தியாவிலுள்ள மாநிலங்களெல்லாம் வலிவுடையனவாகவும், வளமுடையனவாகவும், தேவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்கின்ற வாய்ப்பு வசதியுடையனவாகவும் திகழ்ந்தால்தான், இந்தியா வலிவோடும், வளமோடும் விளங்க முடியும். ஆகவேதான் மாநிலங்களின் நிதி ஆதாரங்களையும், அதிகார அளவுகளையும் பெருக்குவதற்கான வழிவகைகளை மத்திய அரசு காண வேண்டும் என்ற கொள்கையை இந்த அவையில் அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தபோது இந்தக் கருத்தை இந்த அவையில் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்.

"நமக்கிருக்கிற கவலை எல்லாம் தாக்க முடியாத பாரத்தை மத்தி ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலி என்பது, மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிமைகளையெல்லா

@ 51-133 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால், வாதத்திற்கு ஏற்றது; அரசியலுக்கு நல்லது; காரியத்துக்கும் உகந்தது" என்று குறிப்பிட்டது உணரத்தக்கதாகும்.

4. தேசியப் பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில் இம்மாநிலத்தின் வளர்ச்சி குறித்து, இந்த அரசு கொண்டுள்ள வேணவாக்களுக்கும் குறிக்கோள்களுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் குரல் கொடுக்க முயன்றுள்ளேன். பொருளாதாரத்தின் சில முக்கியமான துறைகளில் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பான நிலையில் இந்நாடு உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பாமர மக்கள், ஏழை எளியவர்கள், ஆகியோரின் நிலையை உயர்த்துவதில் இவ்வரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது. இக்குறிக்கோளை எய்த மத்திய அரசு மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் மத்திய அரசுக்கு இம்மாநில அரசு தன்னாலான உதவிகள் அனைத்தையும் செய்ய எப்போதும் ஆயத்தமாயுள்ளது. அண்மையில் பிரதம அமைச்சர் அவர்கள் அறிவித்த புதிய 20 அம்சத் திட்டம், சமுதாயத்தில் நலிந்த மக்கள், ஏழை எளியவர்கள் ஏற்றமடையச் செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு இம்மாநில அரசு தனது உளமார்ந்த ஆதரவைத் தெரிவிப்பதுடன், அதனை வெற்றிகரமாகச் செயற்படுத்த, தன்னாலானதையெல்லாம் செய்யும். நான் முன்னர் விவரமாக தெரிவித்துள்ள அனைத்தையும் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கான பொருளாதார, சமூக, பண்பாட்டு நோக்கங்களையும் பிற நோக்கங்கள் பலவற்றையும் நிறைவு செய்யும் வகையில் அடுத்த நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை உருவாக்கியுள்ளேன்.

## உணவு நிலைமை.

5. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டம் இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டபோது, இம்மாநிலம் கடுமையான வறட்சியைச் சந்திக்க வேண்டியிருந்தது. கடுமையான தண்ணீர் பற்றாக்குறையினால் வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால், 1981-82 ஆம் ஆண்டில் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் உற்பத்தி முறையே 60 இலட்சம் டன் (அரிசியாக), 22.80 இலட்சம் டன், 3.30 இலட்சம் டன் அளவில்தான் இருக்கக்கூடும். ஆனால், 1982-83 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 68 இலட்சம் டன் (அரிசியாக), சிறு தானியங்கள் உற்பத்தி 23.50 இலட்சம் டன், பயறு வகைகள் உற்பத்தி 4.80 இலட்சம் டன் அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொது விநியோக முறையைத் திறமையாகச் செயல்படுத்தியதன் மூலம் அரிசி, ஏனைய இன்றியமையாப் பொருள்களின்

வெளி அங்காடி விலை உயர்வு கட்டுப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டில், 1981 டிசம்பர் வரை, இம்மாநிலத்தின் நகர்ப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு 6.7 இலட்சம் டன் அரிசி வழங்கப்பட்டது. உணவு தானியங்களையும் ஏனைய இன்றியமையாப் பொருள்களையும் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்குவது, எவ்வளவு பயனுள்ள ஏற்பாடு என்பதை இது தெளிவாகப் புலப்படுத்தியது.

6. பல்வேறு நியாய விலைக் கடைகளில் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள உணவுப் பங்கீட்டு குடும்ப அட்டைகள், 1975-ல் வீடு வீடாகச் சென்று கணக்கு எடுத்த பின்னர் வழங்கப்பட்டவையாகும். உணவுப் பங்கீட்டு குடும்ப அட்டைகள் வழங்கிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, பொதுவான கணக்கெடுப்பு செய்யப்பட்ட பிறகு, புதிய அட்டைகள் வழங்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணி, இந்த ஆண்டின் முற்பகுதியில் செய்து முடிக்கப்படும்.

7. இன்றியமையாப் பொருட்களை, குறிப்பாக அரிசியை, பொது விநியோக முறையின் மூலம் வழங்கும்போது, நுகர்வோர் அரசிடமிருந்து பெருமளவு உதவித் தொகை பெறுகின்றனர். அரிசியின் அடக்க விலை உயர்வாக இருந்தபோதிலும், நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டு விற்பனை விலையை வேண்டுமென்றே குறைவாக வைத்து, உணவுப் பொருள் வழங்கு நிறுவனம் விற்பனையை மேற்கொண்டுள்ளது. குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதில், அரசு பெரும் நிதிச் சுமையை ஏற்பதை உணர்ந்து, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக, வீடுதோறும் தகவல் சேகரிக்கும் சமயத்தில், சரியான தகவல்களை அளிப்பது, தங்கள் சமூகப் பொறுப்பு என்பதை மக்கள் உணர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## வேளாண்மை.

8. இம்மாநிலத்தில் வாழும் மக்கள் பெரும்பான்மையோர், வேளாண்மையையே நம்பி வாழ்பவர்கள். எனவே, இம்மாநிலத்தில் நிறைவேற்றப்படும் வளர்ச்சித் திட்டம் எதையும் இந்த அடிப்படை உண்மையைக் கருத்திற் கொண்டே வகுக்க வேண்டும். வேளாண்மைத் தொழில் மேம்பாட்டிற்கு அவசர முன்னுரிமை அளிப்பதே இம்மாநில அரசின் தலையாய கொள்கையாகும். உணவுதானிய உற்பத்திப் பெருக்கத்திற்கு, நல்ல தரமான வித்துக்கள் உற்பத்தி செய்வது மிக அவசியம். தரமான வித்துக்களின் உற்பத்தி, அடிப்படை வித்துக்கள் உற்பத்தி ஆவதைப் பொறுத்துள்ளது. அடிப்படை வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்க,



அடுத்த நிதி ஆண்டில் ரூ. 80 இலட்சம் இறுதிச் செலவில் ஒவ்வொன்றும் 200 ஏக்கர் பரப்பில் விதைப் பண்ணைகள் இரண்டு அமைக்கப்படும். தரமான விதைகள் உற்பத்திக்கு அவற்றை உரியவாறு பதப்படுத்துதல் முக்கியம். விதை பதப்படுத்தும் பெரிய பிரிவுகள் ஏழும், சிறிய பிரிவுகள் 28-ம் தற்போது இயங்குகின்றன. விதைகளைப் பதப்படுத்தும் வசதியைப் பெருக்க ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அடுத்த ஆண்டில் புதிய பிரிவுகள் மூன்று தொடங்கப்படும்.

9. இம்மாநிலத்தில் குறைந்த அளவிலேயே உள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பெருமளவுப் பயன் பெறுவதற்கு, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த மேம்பாடான நடைமுறைகள் அவசியமாகும். இதனை எய்த, முக்கிய ஆயக்கட்டுப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. காவிரி, பெரியாறு—வைகை பாசன ஆயக்கட்டுப் பகுதிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தின் வேறு சில பகுதிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

10. உழவர்கள் தங்களுடைய விளைபொருள்களை நட்டப்படும் விலைக்கு விற்பதைத் தவிர்க்க, அவற்றை ஈடுகாட்டி எளிதில் முன்பணம் பெறுவதற்கு அறிவியல் முறைகளுக்கேற்ற சேமிப்புக் கிடங்கு வசதிகள் இருந்தால்தான் உணவுதானியங்களின் உற்பத்தியைப் பெருக்க இயலும். இதற்காக, கிராமப் பகுதிகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும், கிராமக் கிடங்குகள் கட்டுவது மிகவும் அவசியமாகும். மத்திய அரசின் நிதி உதவியுடன் அத்தகைய கிடங்குகள் 62-ஐ ரூ. 62 இலட்சம் செலவில் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

11. எண்ணெய் வித்துக்கள் உற்பத்திப் பெருக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, 1981-82-ல் கன்னியாகுமரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் தென்னை வளர்ப்பு மும்முரத் திட்டம் ஒன்று தொடங்கப் பட்டது. இத்திட்டம் அடுத்த நிதி ஆண்டில் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும். இதனால், அடுத்த மூன்றாண்டுகளில் தென்னை மரத்தின் காய்க்கும் திறன் 45-லிருந்து 60 ஆக உயருமெனவும் அதன் மூலம் இம்மாநிலத்தில் தேங்காய் மொத்த உற்பத்தி 40 கோடியாக உயருமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன.

12. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசுத் தோட்டப் பண்ணை ஒன்று ஏற்படுத்துவது அரசின் கொள்கையாகும். திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் இரண்டு புதிய பண்ணைகள் ஏற்படுத்துவதன் மூலம், அடுத்த நிதி ஆண்டு இறுதிக்குள் இம்மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பண்ணை இருக்கும்.

13. சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், பங்கு முறைப் பயிரீட்டாளர், வேளாண்மைத் தொழிலாளர்கள், மற்ற தொழிலாளர்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் முதலியோரின் குடும்பங்கள் அடங்கிய, சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் நலனுக்காகச் செயல்படும் கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தில் மாநில அரசு சிறப்பு நாட்டம் செலுத்துகிறது. நடப்பு நிதி ஆண்டில், இதற்கு ரூ. 22.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இது ரூ. 30 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கால்நடை வளர்ப்பு.

14. சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தில், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள் பயனுக்காக, செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குச் சுகாதார வசதியும் போதுமான சிகிச்சையும் அளிக்கும் பொருட்டு, 1982-83 ஆம் ஆண்டில் கால்நடை மருந்தகங்கள் ஐந்துக்குக் கட்டிடங்கள் கட்டவும், புதிதாகக் கால்நடை மருந்தகங்கள் 25 தொடங்கவும், கால்நடை மருந்தகங்கள் ஐந்தினைக் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தவும் திட்டமிடப் பட்டுள்ளது. கால்நடைகளிடையே கோமாரி நோயை ஒழிக்கும்பொருட்டு, அடுத்த நிதி ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் ஒழிப்புக் கண்காணிப்புச் சாவடிகள் மூன்று தொடங்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் மத்திய அரசின் உதவியுடனும் இங்கிலாந்து நாட்டின் கூட்டு முயற்சியிலும் ரூ. 3 கோடிக்கும் அதிகமான செலவில் வெக்கை நோய் ஆய்வு— கட்டுப்பாட்டிற்கான முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டு வரப்படுகிறது. இது அடுத்த நிதி ஆண்டு முதல் செயல்படத் தொடங்கி, மூன்று ஆண்டுகளுக்குத் தொடரப்படும்.

சிறிய அளவில், கோழி; செம்மறியாட்டுப் பிரிவுகள் தொடங்கவும், மாடுகள் வளர்க்கவும், சிறு உழவர்கள், சொற்ப சில உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் முதலியோருக்குத் தேவையான உதவிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டத்தின் கீழ் 11,083 செம்மறியாட்டுப் பண்ணைகளும் 3,618 கோழி வளர்ப்புப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## பால் பண்ணை வளர்ச்சி.

15. ஆனந்த் முறையைப் பின்பற்றி பால்பண்ணை வளர்ச்சிக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதென்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் 3,708 பால்





வழங்கு தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் பால் வழங்குவதைச் சீராக்கி, முறைகேடுகளை அகற்ற, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், பொதுமக்களுக்குப் பால் வழங்கும் பணியை மேற்கொள்ளும் பொருட்டு, அமைக்கப்பட்டு வருகின்றன.

16. "பால் பெருக்கத் திட்ட" மாவட்டங்களில் உள்ள பகுதிகளுடன், பிற பகுதிகளிலும் வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊக்கம் அளிக்கப்படுகின்றது. தற்போது பால் பெருக்கத் திட்ட மாவட்டமல்லாத பிற மாவட்டங்களில் கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவுகள் நான்கு செயல்பட்டு வருகின்றன. அடுத்த நிதி ஆண்டில் மேலும் 4 பிரிவுகள் ஏற்படுத்தப்படும். திருநெல்வேலியில் குளிரூட்டு நிலையங்கள் இரண்டுடன் 50,000 லிட்டர் திறன் கொண்ட பால் பண்ணைப் பிரிவு ஒன்று ரூ. 29 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும். உழவர்களின் பயனுக்காக பாலைக் குளிர வைக்கும் நிலையம் ஒன்று ரூ. 9.5 இலட்சம் செலவில் புதுக்கோட்டையில் அமைக்கப்படும்.

## கூட்டுறவு.

17. கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றின் கடன் வழங்கு திட்டங்களுக்கு, அரசு பல்வேறு வழிகளில் உதவி செய்து வருகிறது. இயற்கைச் சீற்றங்கள் காரணமாகத் தரப்பட்டு, தொடக்க நிலவள வங்கிகளிடம் நிலுவையாக உள்ள கடன்களின் கால அளவை மாற்றியமைக்கும் பொருட்டு, மாநில நிலவள வங்கிக்கு அரசு ரூ. 2.07 கோடி கொடுத்துள்ளது. தொடக்கச் சங்கங்களின் தவணை கடந்த பாக்கிகளைக் குறைக்கும் நிலையை உருவாக்க ரூ. 47.44 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்தப்படுவது சீராகுமென்று எதிர்பார்த்து, வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் உதவியுடன் கூடிய திட்டங்களைச் செயல்படுத்த மாநில நிலவள வங்கி வெளியிடவிருக்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கு மூலத் தொகை கொடுப்பதற்காக ரூ. 60 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ரூ. 86 இலட்சத்துக்கும் மேற்பட்ட செலவில், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவிருக்கும் 100 கிராமக் கிடங்குகளுக்காகவும், விற்பனைச் சங்கங்கள் 5 விற்பனைக் கிடங்குகளைத் தொடங்குவதற்காகவும் கடனாகவும் மானியமாகவும் உதவித் தொகை வழங்கப்படும். மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்க ரூ. 11.30 இலட்சம் உதவித் தொகையாக அளிக்கப்படும்.

18. ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்து, தலைமைச் சங்கங்கள் அளிக்கும் கடன் வசதியையும் ஏனைய பயன்களையும் அவர்கள் பெறும் வகையில் அமைந்துள்ள திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அடுத்த நிதி ஆண்டில் இருபதாயிரம் பேர் அச்சங்கங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

19. பழங்குடி மக்களுக்கு, கடன் வசதி, விற்பனை வசதி, ஏனைய பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் ஒரே இடத்தில் அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, பெரிய அளவிலான பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த நிதி ஆண்டில் நீலகிரி, சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களில் இத்தகைய சங்கங்கள் மேலும் பல தொடங்கப்படும்.

20. ஆளுநர் உரையில், உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகிய இருவரின் நலன்களும் பாதிக்கப்படாமல் நியாய விலையில் உணவுப்பொருள் போன்ற இன்றியமையாப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்பின் மூலம் விநியோகம் செய்யும் முறை செயலுக்குக் கொண்டு வரப்படும் என்ற அரசின் முடிவு வெளியிடப்பட்டது. இதன் தொடர்பாகத் தொடக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதியுதவி அளிக்கப்படும்.

## மீனளமும் மீனவர் நலனும்.

21. பொருளாதார வகையில் மீனவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், பிடித்த மீனைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கும் வசதிகளும், நிலையான விற்பனை வசதிகளும் அவர்களுக்குத் தேவை என்பதை நன்குணர்ந்து, தமிழ் நாடு மீனள மேம்பாட்டு நிறுவனம் முக்கியமான இடங்களில் மீனை விலைக்கு வாங்கவும், விற்பனை செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மீனளத் துறை, மீனைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளையும், மீன்பிடி துறைமுக வசதிகளையும், மீன்பிடி தோணித் துறைகளையும், மீன் விற்பனைக்கான ஏலக் கூடங்களையும் பிற வசதிகளையும் அளித்து வருகிறது. சென்னையில் மீன்பிடி துறைமுகம் ரூ. 11 கோடி செலவில் கட்டப்பட்டு வருவது முடிவடையும் தருவாயில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலி நோக்கத்திலும் மீன்பிடி



துறைமுகங்களை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது, ஊக்கமளிப்பதாக இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பழையாறை மீன்பிடி துறைமுகத் திட்டத்திற்கு அனுமதியளிக்குமாறு மாநில அரசு மத்திய அரசை வேண்டியுள்ளது.

22. இயல்பான நிலைகளில் இறால் வளர்த்துப் பிடிக்கும் நோக்கத்துடன், 10 இடங்களில், உவர்நீர் இறால் கட்புல விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. காயல் பகுதிகளில் 300 ஹெக்டேர் பரப்பில் இறால் பண்ணைகளை 3 ஆண்டுகளில் தொடங்கி முடிக்கும் திட்டம் வகுக்கப்பட்டு, அனுமதி பெறும் பொருட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 2.60 கோடிக்கு மேல் செலவாகும்.

23. இப்போது 6 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ரூ. 1.20 கோடி திட்டச் செலவில் 10 நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை 12 ஹெக்டேர் பரப்பில் மீன் பண்ணை கூடுதலாக அமைய வகை செய்வதுடன் மேலும் 5 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யவும் உதவும். மீன் குஞ்சுகள் தேவை முழுவதையும் நிறைவு செய்யும் வகையில் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

24. மீனவர் வீட்டு வசதித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 9,900-க்கும் மேற்பட்ட வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை விற்பனை அங்காடிகளுக்கு எடுத்துச் செல்ல வசதி செய்து தரும்பொருட்டு, மீனவர் குப்பங்களிலிருந்து முக்கிய சாலைகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

25. தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனம் வாங்கியுள்ள மெக்ஸிகோ நாட்டு இழு படகுகள் இரண்டும் நல்ல வகையில் செயல்பட்டு வருகின்றன. இப்படகுகள் 1981 ஜூலை முதல் தேதியிலிருந்து இதுவரை 56 டன் இறால் மீன்களையும் 17.66 டன் எடையுள்ள பல்வகை மீன்களையும் பிடித்துள்ளன. பிடித்த மீன்களின் மதிப்பு ரூ. 34 இலட்சம் ஆகும்.

## காடு வளர்ப்பு.

26. சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாகும். ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன், சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், தமிழ் நாட்டில் 1—4—1981 முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 10 ஆண்டுக் கால அளவில் ரூ. 108 கோடி செலவு செய்யப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு

அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுக் காலம் செயல்படுத்தப்படும் முதல் கட்டப் பணிகளுக்கு ரூ. 45 கோடி செலவாகும். இத்திட்டத்திற்காக 1982-83-ல் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

27. காடு வளர்க்கப்படும் பரப்பளவைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதே நேரத்தில் வனச் செல்வத்தைப் பாதுகாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக, அடுத்த நிதி ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் கூடுதலாக மோட்டார் வண்டிகளையும் ஏனைய சாதனங்களையும் காட்டு வளப் பணியாளர்களுக்கு அரசு அளிக்கும். புதிதாகச் சாலைகள் அமைப்பு பணியையும் இருக்கிற சாலைகளை மேம்படுத்தும் பணியையும் அடுத்த நிதி ஆண்டில் ரூ. 36 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அரசு மேற்கொள்ளும். 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 34.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணியாளர் குடியிருப்புக்களும், சோதனைச் சாவடிகளும் கட்டப்படும். நீலகிரி தார் உய்விடம் ஒன்று, அடுத்த நிதி ஆண்டில் மத்திய அரசு நிதி உதவியுடன் அமைக்கப்படும்.

## பாசனம்.

28. பெரும் பாசனத் திட்டங்களுக்கும், நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கும் ரூ. 22.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு பாசன சிறப்புத் திட்டத்திற்குச் சுமார் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 3 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் புதிதாக மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பெரியார், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நொய்யல் நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 7.13 கோடி), தருமபுரி மாவட்டத்தில் கேசரி குலிஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம் (ரூ. 2.79 கோடி) ஆகியவை மேற்கொள்ளப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பரப்பு கால்வாய் விரிவுபடுத்தும் பணி ரூ. 46.70 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். இவற்றால் 5,700 ஹெக்டேர் கூடுதல் பரப்பளவுக்குப் பாசன வசதி கிடைப்பதுடன், 14,400 டன் உணவுதானியங்கள் கூடுதலாக உற்பத்தியாகுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நடப்பு நிதி ஆண்டில் 16 சிறு பாசனத் திட்டங்களைப் புதிதாக மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றால் 1,000 ஹெக்டேர் பரப்புக்குப் பாசன வசதி கிடைப்பதுடன், 2,150 டன் உணவுதானியம் கூடுதலாக விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

29. உப்பாறு நீர்த்தேக்கத் திட்டம் 1982-83 ஆம் ஆண்டில் நிறைவுறுமென்றும், இதனால் 720 ஹெக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பரம்பிக்குளம்—ஆழியாறு





பாசனத் திட்டத்தின்கீழ் 9,040 ஹெக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கும். அடுத்த நிதி ஆண்டில் ரூ. 10 கோடி செலவில் பெரியாறு—வைகை கால்வாய் ஏற்பாடுகளை நவீனப்படுத்தும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தற்போதுள்ள கால்வாய் ஏற்பாட்டில் ஏற்படுகிற நீர் இழப்பைத் தொடர்ந்து செயல்படும். இத்திட்டம் 1984 ஆம் ஆண்டுக்குள் நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள கால்வாய் ஏற்பாட்டில் ஏற்படுகிற நீர் இழப்பைக் குறைப்பதுடன், இது 10,300 ஹெக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசன வசதி அளிக்கும். இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

30. பெரும் பாசன, நடுத்தரப் பாசனத் திட்டங்களுடன் சிறுபாசனத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதற்கும், இந்த அரசு சம முக்கியத்துவம் அளித்து வருகிறது. 1982-83 ஆம் ஆண்டில், 30 சிறுபாசனத் திட்டங்கள் நிறைவேறி, 2,530 ஹெக்டேர் நிலத்திற்குப் புதியதாகப் பாசன வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்னாள் ஜமீன் ஏரிகளை உரிய தரத்திற்குக் கொண்டு வருவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்டப் பணியாக, வட ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள ஏரிகளை அடுத்த நிதி ஆண்டில் உரிய தரத்திற்குக் கொண்டு வரும் பணி மேற்கொள்ளப்படும். இதற்கென ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மின் உற்பத்தி.

31. இம்மாநிலத்தின் மின்சாரத் துறைதான் இம்மாநிலத்தின் நிதி ஆதாரங்களைப் பெரும் அளவில் பாதிக்கும் துறையாக அமைந்திருக்கிறது. இதுபற்றி பின்னர் நான் விரித்துக் கூறுவேன். ஒரு மாநிலம் வேளாண்மையிலாகட்டும், தொழில் துறையிலாகட்டும் முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்பது, அம்மாநிலத்தில் மின் விசை மேம்பாடு எவ்வாறுள்ளது என்பதை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது. புனல் ஆதாரங்களிலிருந்தும், அனல் ஆதாரங்களிலிருந்தும் மின்சக்தியை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு சிறப்பான சாதனைகளைச் செய்துள்ளது. மின்விசைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இம்மாநில அரசு தலையாய முன்னுரிமை அளிப்பதே இதற்குக் காரணமாகும். இம்மாநிலத்தின் ஆறாவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 3,150 கோடியில் மின் விசைத் துறைக்கு ஏறக்குறைய ரூ. 1,023 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அடுத்த நிதி ஆண்டிற்கு மின் உற்பத்திக்கென ரூ. 220 கோடி

ஒதுக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இப்போது பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் (210 மெகாவாட்) மூன்றாவது இயந்திரம் நிறுவுதல், சேர்வலாறு புனல் மின் உற்பத்தித் திட்டம் (20 மெகாவாட்), காடம்பாறை நீரேற்று சேமிப்புத் திட்டம் (ஒவ்வொன்றும் 100 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் 4 இயந்திரங்கள்), கீழ்மேட்டூர் புனல் மின் உற்பத்தித் திட்டம் (120 மெகாவாட்), குந்தா மின் நிலையம் (20 மெகாவாட்), மேட்டூர் புனல் மின் திட்டம் (420 மெகாவாட்) ஆகியவையே மேற்கூறிய திட்டங்களாகும். மேற்சொன்னவற்றுடன், கல்பாக்கத்தில் ஒவ்வொன்றும் 235 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இரண்டு இயந்திரங்கள், சென்னை அணுவாற்றல் நிலையத்தில் செயல்படத் தொடங்குவதை, இம் மாநில அரசு ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறது. முதல் இயந்திரம் அடுத்த ஆண்டின் தொடக்கத்திலும் இரண்டாவது இயந்திரம் அதற்கடுத்த ஆண்டிலும் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. 210 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் முதல் இயந்திரம் 1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென இலக்கிடப்பட்டுள்ளது. இருக்கின்ற புனல் மின் வளத்தைப் பயனுக்குக் கொண்டு வரும் முயற்சியாக 3 சிறு புனல் மின் உற்பத்தித் திட்டங்களை ரூ. 11.75 கோடி மதிப்பீட்டுச் செலவில் இம் மாநில அரசு மேற்கொண்டுள்ளது. இவை பைக்காராவிலும், கீழ்பவானியிலும், வைகை அணையிலும் அமைக்கப்படும். 1981 ஆகஸ்டில் மத்திய அரசின் அனுமதி பெற்ற இத் திட்டங்கள் 1984 நவம்பரில் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

32. 1981 டிசம்பர் இறுதிவரை, 9,38,500 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் 30,000 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதென இலக்கிட்டுள்ளோம். சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு மின் வசதி அளிக்கும்பொருட்டு, ஊராட்சிப் பகுதிகளில் குடிசைகளுக்கு விளக்கு வசதி அளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று 1979 ஜூலைத் திங்களில் தொடங்கப்பட்டது. இதுவரை 4.05 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1—1—1982 நிலவரப்படி, 15,595 கிராமங்களுக்கும் 47,454 சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள கிராமங்கள், உட்கிராமங்கள் ஆகியவற்றில் இவை 99 விழுக்காடு ஆகும். மின்வசதி பெறாத ஆதி திராவிடர் குடியிருப்பு எதுவுமே தமிழ்நாட்டில் இப்போது இல்லையெனலாம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், 'இந்த சாதனை நிகழ்ந்துள்ளது. என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.





## தொழில் வளர்ச்சி.

33. இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்பட வேண்டுமென்பதற்காக தற்போதுள்ள ஊக்கத் திட்டங்கள் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தொழில் வளர்ச்சியை வசதிப்படுத்துவதற்காகப் பின்வரும் சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (அ) தொழிற்சாலைகள் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் பெறுவதற்கான மேல்வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. (ஆ) இம்மாநிலத்தில் 5 இடங்களில் புதிய தொழில் தொகுதிகள் உருவாக்கப்படும். இத்தொகுதிகளில் அமைக்கப்படும் தொழிற்கூடங்கள் முதல் 5 ஆண்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கும் பெறும். (இ) மின் அணுவியல், மருந்துப் பொருள்கள், மோட்டார் துணைப் பகுதிகள் தயாரிக்கும் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டால் அவற்றிற்கு உதவித் தொகை அளிக்கப்படும். இவ்வாறு புதிய சலுகைகளும், ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்பட்டுள்ளமையாலும், நமது தொழில் அமைச்சர் வேறு சில மாநிலங்களுக்குச் சென்று வந்ததாலும், இம் மாநிலத்தில் அண்மையில் புதிய தொழில் முயற்சிகள் தொடங்குவது பற்றிப் பல தொழிலதிபர்கள் நமக்குக் கடிதங்கள் எழுதியிருப்பதுடன் மேற்கொண்டு விவரங்களும் கேட்டுள்ளனர்.

34. உள்ளூர் ஆதாரங்கள், மூலப் பொருள்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், அடிப்படை வசதிகள் முதலியவை, சில பகுதிகளில் கிடைப்பதைக் கருத்தில் கொண்டு, இம் மாநிலத்தில் மேலும் 6 வட்டங்களைப் பின்தங்கிய வட்டங்கள் என அறிவிப்பது என்றும், பின்தங்கிய பகுதிகளுக்குக் கிடைக்கிற எல்லாச் சலுகைகளையும் அந்த 6 வட்டங்களில் புதிய தொழில்களைத் தொடங்குகிற தொழில் முனைவர்களுக்கு அளிப்பதென்றும், அரசு முடிவு செய்துள்ளது.

35. கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள், எழுதும்தாள் ஆகியவற்றை ரூபாய் 190 கோடி மதிப்பீட்டுச் செலவில் உற்பத்தி செய்யும் திட்டம், இந்த நாட்டிலே புதியதொரு தொழில் உத்தியைத் தோற்றுவிக்கும். தமிழ்நாடு அரசும், இந்திய நிதி உதவி நிறுவனங்களும், உலக வங்கியும் அளிக்கும் நிதி வசதியைக் கொண்டு, இந்தக் காகித ஆலை தொடங்கப்படும். தமிழ் நாடு செய்தித்தாள், எழுதும்தாள் தயாரிக்கும் நிறுவனம், நிதி உதவி நிறுவனங்களுடனும், உலக வங்கியுடனும் அவசியமான உடன்படிக்கைகளைச் செய்துள்ளது. நிலத்தைக் கையகப்படுத்தும் பணியும் இத் திட்டத்திற்கு வேண்டிய இயந்திரங்களை வரவழைப்பதற்கு முன்பணம் கொடுக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

36. இம்மாநிலத்தில் அமைக்கப்படவிருக்கிற தொழில் முயற்சிகளுக்கு வெளி நாடுகளில் வசிக்கின்ற இந்தியர்களிடமிருந்து மூலதனம் திரட்டுவதற்காகத் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தில் தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மற்றொரு முக்கியமான சாதனையாகும்.

37. தொழில் துறையிலுள்ள அரசுத் துறை நிறுவனங்கள், இம் மாநிலத்தைத் தொழில் மயமாக்கும் பணியில் பயனுள்ள தொண்டாற்றி வருகின்றன. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் தமிழ்நாட்டின் அரசு நிதி உதவி நிறுவனமாகும். இந்த நிறுவனம் குறுந் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்கும் ரூ. 3,000 முதல் ரூ. 30 இலட்சம் வரை நிதி உதவி அளித்து வருகிறது. குறித்த காலக் கடன் வழங்குவதுடன், சில தொழில்களில் பங்கு மூலதன முதலீடு செய்யவும், வாங்கிய பின்னர் தொகை செலுத்தும் திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் வழங்குவதற்கு உறுதியளிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கிறது. குறைந்த முதலீட்டில் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் குறுந்தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் நிதி உதவி அளிப்பதற்கே, இம் மாநில அரசின் கொள்கையை ஒட்டி, இந்த நிறுவனமும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த நிதி ஆண்டில், ரூ. 37 கோடி மட்டுமே நிதி உதவியாக அளிக்கப்பட்டிருக்க, இந்த நிதி ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் ரூ. 31 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அளிக்கப்படும் நிதி உதவி ரூ. 45 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 60 கோடி அளவுக்கு நிதி உதவி அளிப்பதெனத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் இலக்கிட்டுள்ளது.

38. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், அரசுத் துறையில் பெருந் தொழிற்சாலைகளையும், நடுத்தரத் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி நிர்வகிக்கவும், தனிப்பட்ட தொழில் முனைவர்கள் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் தொழிற்கூடங்களை ஏற்படுத்தவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம், அரக்கோணத்தில் உருக்கு உற்பத்திச்சாலையையும், ஆலங்குளத்திலும் அரியலூரிலும் சிமிட்டி ஆலைகளையும் நிர்வகித்து வருகிறது. வெடி மருந்து தயாரிப்புத் திட்டம் உட்பட புதிய தொழில் திட்டங்கள் அமைக்கப் படும்போது, இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும். அரசுத் துறையில் மூன்றாவது சிமிட்டி ஆலையை நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் அளிக்குமாறு மத்திய அரசுக்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் விடுத்துள்ள வேண்டுகோளை மத்திய அரசு இன்னும் ஏற்கவில்லை.





39. மத்திய அரசுத் துறைத் திட்டங்களில் மாநிலத்தில் மத்திய அரசு செய்கிற முதலீடுகளைப் பொறுத்தே, ஒரு மாநிலத்தின் தொழில் முன்னேற்றம் அமைந்திருக்கும். இம் மாநிலத்தில் மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் மேலும் பலவற்றை நிறுவ வேண்டுமென மத்திய அரசிடம் இம் மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. இத் திட்டங்களுக்கு மத்திய அரசு உரிய ஏற்பு அளிக்குமென நம்புகிறோம்.

40. கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் தொழிற் பகுதிகளை ஏற்படுத்தும் பொறுப்பும் இப்பகுதிகளில் இன்றியமையாத அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரும் பொறுப்பும், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட இருக்கும் தொழிற் கூடங்களுக்கு இந்த நிறுவனம், உதவித் தொகையும் மற்ற தொழில்களுக்குக் குறித்த கால கடன் வசதி முதலியவற்றையும் தொடர்ந்து அளித்து வருகிறது.

41. தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் சுரங்கங்களிலிருந்து மாக்னசைட் மூலப்பொருளை எடுத்து வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் ரூ. 81.22 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்ய வெப்பந்தாங்கிக் கல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் சிறந்த மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்ய கனிப் பொருட்கள் செறிவுபடுத்தும் தொழிற்சாலை ஒன்றையும் இந்த நிறுவனம் அமைக்கக் கருதியுள்ளது. சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் மாக்னசைட் கற்களை, நன்றாகச் சுடப்பட்ட மாக்னசைட் கற்களாக மாற்றுவதற்காக ஏறக்குறைய ரூ. 5 கோடி செலவில் சூழற்காளவாய் ஒன்று முதலில் ஏற்படுத்தப்படும். இதனால் வேலை வாய்ப்புக்கள் பெருகும்.

42. தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனம் தொடர்ந்து சிறந்த வகையில் பணியாற்றி வருகிறது. மூன்றாவது ஆண்டிலேயே இந்த நிறுவனம் ரூ. 25 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இந்த நிறுவனம் சிவகங்கையில் கிராஃபைட் செறிவுச் சாலை ஒன்றை ஏற்படுத்தவும் கறுப்புக் கல் வெட்டி, மெருகேற்றும் தொழிற்கூடம் ஒன்றைச் சென்னைக்கருகில் ஏற்படுத்தவும் கருதியுள்ளது.

43. திருத்தணியில் அன்றாடம் 1,250 டன் கரும்பு பிழியும் திறனுள்ள சர்க்கரை ஆலை ஒன்றைத் தொடங்குவதற்கு உரிமம் வழங்குமாறு மத்திய அரசை இம் மாநில அரசு வேண்டியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலும் சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்கக் கருதியுள்ளது. அரசுத் துறையும், கூட்டுறவுத் துறையும் சர்க்கரை ஆலைகளை அமைக்க முன்வராத, கரும்பு

கிடைக்கிற பகுதிகளில், இப்போதுள்ள ஆலைகள் செயல்படுவதற்குக் குந்தகமின்றி, புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்குத் தனியார் துறையை அனுமதிக்கலாம் என்று இந்த அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

## சிறு தொழில் வளர்ச்சி.

44. சிறுதொழில் வளர்ச்சிக்கு இந்த அரசு எப்பொழுதுமே மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சியுறச் செய்யப் பாடுபடும் அரசு நிறுவனங்களில் முக்கியமான ஒன்றாகும். இந்த நிறுவனம், சிறு தொழில்களுக்குப் பலவகையிலும் ஒருங்கிணைந்த உதவியும், ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகிறது. தொழிற்கூடங்களைக் கட்டித் தருகிறது; அடிப்படை வசதிகளுடன் சீர் செய்த மனைகளை அளிக்கிறது; முக்கியமான மூலப் பொருள்களை வழங்குகிறது; மூலதன முதலீட்டிற்காக மத்திய அரசு தரும் மூலதன உதவித் தொகையையும் மாநில அரசு தரும் மூலதன உதவித் தொகையையும் வழங்குகிறது. 1981-82-ல் 5 பேட்டைகளில், சீர் செய்த 837 மனைகளை இந் நிறுவனம் இதுவரை ஒதுக்கிக் கொடுத்துள்ளது. சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தனக்குச் சொந்தமாயுள்ள தொழிற்பேட்டைகளில் 300 தொழில் கூடங்களை 1981-82-ல் கட்டியுள்ளது. இவற்றுடன், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தோல் பொருள் தயாரிப்புத் தொழில், மருந்தாக்கியல் தொழில், பொறியியல் தொழில் ஆகிய தொழில்களுக்கென்றே தனியாகத் தொழில் பேட்டைகளை 1982-83-ல் அமைக்கவும் இந் நிறுவனம் கருதியுள்ளது.

45. முக்கிய மூலப் பொருட்களை வழங்குவதில் இந்த நிறுவனத்தின் சாதனை சீராக உயர்ந்துள்ளது; அதாவது, வழங்கும் பொருள்களின் மதிப்பு 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 18 கோடியாக இருக்க, இந்த நிதி ஆண்டில் ரூ. 24 கோடியாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. விற்பனையைப் பொறுத்த வரையில், சிறுதொழில் பிரிவுகள் உற்பத்தி செய்த பொருள்களில் மொத்தத்தில் ரூ. 3 கோடி மதிப்புள்ள பொருள்களை அவற்றின் சார்பாக சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 1980-81-ல் விற்பனை செய்திருக்கிறது. சிறு தொழில் பிரிவுகளுக்கும் அரசுத் துறைகளுக்கும் உதவ, மதுரையிலும் கோயம்புத்தூரிலும் இரண்டு விற்பனை அங்காடி தகவல் திரட்டும் குழுக்களையும் சென்னையில் ஒரு வணிக நிலையத்தையும் அடுத்த நிதி ஆண்டில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.





## பட்டுப் புழு வளர்ப்புத் தொழில்.

46. கடந்த சில ஆண்டுகளாகத்தான் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில், இத்தொழில் தொடர்பாக அரசு எடுத்த வளர்ச்சி நடவடிக்கைகள் காரணமாக முக்கியத்துவம் பெற்று வருகிறது. கூடுதல் அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது உட்பட, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளதால் முசுக்கட்டை பயிரிடும் பரப்பு, 48,000 ஏக்கராக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83-ல் கூடுதலாக 8,000 ஏக்கர் பரப்பில் முசுக்கட்டை பயிரிடப்படும்; அதனால் 40,000 பேர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு கிடைக்கும். 6,000 உழவர்களுக்கும், 2,000 நெசவாளர்களுக்கும் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஏறத்தாழ ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்புல விளக்க-பயிற்சி நிலையங்கள் இரண்டு தொடங்கப்படும். திருந்திய வித்துக்கள் எளிதில் கிடைக்கச் செய்ய, ஏறத்தாழ ரூ. 24 இலட்சம் செலவில் உயர் ரக "விதை" பண்ணை ஒன்று அடுத்த நிதி ஆண்டில் நிறுவப்படும். உழவர்களது பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் பிரிவுகளின் தனித்தியங்கவல்ல தன்மையைப் பெருக்க உதவும் கிராம அளவிலான பட்டுப் புழு வளர்ப்புக் கொட்டகைகள் 40 தொடங்கப்படும். அடுத்த நிதி ஆண்டில் ரூ. 58.37 இலட்சம் கூடுதலாக முதலீடு செய்வதன் மூலம், அரசுப் பண்ணைகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும். பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்ற, பெரியார், செங்கற்பட்டு மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்படும்.

## கிராமத் தொழில்கள்.

47. கதர்-கிராமத் தொழில் வாரியம், கிராம மக்களிடையேயுள்ள வறுமையைப் போக்குவதையும், கிராமப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பின்மையை ஒழிப்பதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு கதர்-கிராமத் தொழில்களைப் பெருக்குவதோடு, மேம்படுத்தியும் வருகிறது. இவ்வாரியம், 1980-81-ல் ரூ. 48 கோடி பெறுமானமுள்ள பொருட்களை உற்பத்தி செய்து, ரூ. 53 கோடி அளவில் விற்பனையைப் பெருக்கியது. அடுத்த நிதி ஆண்டில் ரூ. 64 கோடி பெறுமானமுள்ள பொருட்களை உற்பத்தி செய்யவும் ரூ. 70 கோடிக்கு விற்பனையை விரிவாக்கவும் கருதியுள்ளது. 4.26 இலட்சம் பேர்களுக்கு இவ்வாரியம் வேலை வாய்ப்பினை அளித்துள்ளதோடு, 1982-83-ல் கூடுதலாக 33,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்குமெனக் கருதப்படுகிறது. ஆறாவது திட்டக் கால இறுதியில், இம்மாநிலத்திலுள்ள கதர்-கிராமத் தொழில் துறையில், ஏறத்தாழ 8.58 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். கைவினைஞர் பலருடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும்

நோக்குடன், இவ்வாரியம் அவர்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. 1982-83-ல் ரூ. 7 கோடி அளவுக்கு 18,000 கைவினைஞர்களுக்கு உதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

48. தென்னை நார் உற்பத்தி நிலையிலிருந்து தென்னை நார்ப் பொருள் தயாரிக்கும் நிலை வரை, தென்னை நார்த் தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொன்றும் ரூ. 8.50 இலட்சம் செலவில் தென்னங்கயிறு திரிக்கும் சங்கங்கள் இரண்டையும் ரூ. 5.40 இலட்சம் செலவில் தென்னை நார்ப் பாய் தயாரிக்கும் சங்கம் ஒன்றையும் அடுத்த நிதி ஆண்டில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. பழுப்பு நார் ஆராய்ச்சி-பயிற்சி நிலையம் ஒன்றைத் தொடங்க இவ்வாரியம் முன்வந்துள்ளது; இதற்கு ரூபாய் 5 இலட்சம் மதிப்புள்ள நிலத்தை மாநில அரசு உதவியாக அளிக்கும்.

## கைத்தறி.

49. கைத்தறித் துறைக்காக, மாநிலத்தின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 27.82 கோடி ஒதுக்கியிருக்க, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அது ரூ. 84.58 கோடியாக அதிகப்படுத்தப்பட்டுள்ளதிலிருந்து இத் தொழில் குறித்து மாநில அரசு எந்த அளவுக்கு அக்கறை எடுத்துள்ளது என்பது தெளிவாகும். ஏழைக் கைத்தறி நெசவாளர்களைத் தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவித்து, மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் நன்மைகளை அவர்களும் பெறும் வகையில் அவர்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ப்பதென, அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. தறிகள் வைத்திருக்கும் பெரிய முதலாளிகளின் பிடியிலிருந்து நெசவாளர்களை விடுவிக்கும் பொருட்டு, அவர்களுக்குச் செலவுக் கடன்களை அனுமதிப்பதற்கு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியைப் (பெறவும், அந்நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரவும் அரசு கருதியுள்ளது.

50. இம் மாநிலத்தில் மொத்தமுள்ள 5.56 இலட்சம் தறிகளில் 2.89 இலட்சம் (52 சதவீதம்) தறிகள் இதுவரை 1,251 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களாக நிறுவப்பட்டுள்ளன. ஆறாவது திட்டக்கால இறுதிக்குள் 67 சதவீதத் தறிகளைக் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வருவதென இவ்வரசு திட்டமிட்டுள்ளது. சொந்தத்தில் தறி இல்லாத நெசவாளர்களின் பயனுக்காக, பொதுப்பணிப் பட்டறை ஒன்றை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்த நிதி ஆண்டில் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 700 நெசவாளர்களின் பயனுக்கென்றே, பொதுப் பணிக் கொட்டகைகள் கொண்ட நெசவுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழினைப் புதிதாகத் தொடங்கக் கருதியுள்ளது.





51. கூட்டுறவு அமைப்பின்கீழுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படுகின்ற நூலினை வழங்கும் பணியை, இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 12-ம் தொடர்ந்து செய்துவருகின்றன. தறி நூலுக்கு இருக்கின்ற அதிகத் தேவையை ஈடு செய்ய, புதுக்கோட்டை, தருமபுரி, தேனி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு கூட்டுறவு நூற்பாலை வீதம் மூன்று புதிய கூட்டுறவு நூற்பாலை அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளன; நூற்பாலை ஒன்றுக்கு 25,000 கதிர்கள் என்கிற திறனளவுடன், மொத்தம் ரூ. 21 கோடி மூலதனச் செலவில் அந்த நூற்பாலைகளை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மகாகவி பாரதியாரின் நினைவாக, எட்டையபுரத்தில் 12,000 கதிர்கள் கொண்ட புதிய நூற்பாலை ஒன்றை நிறுவவும் கருதப்பட்டுள்ளது. சேலம், வேலூர், ஆகிய இடங்களில் தற்போதுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனளவு மேற்கொண்டும் 12,000 கதிர்களாகக் கூடுதலாக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும். மேற்சொன்ன புதிய ஆலைகளை நிறுவுவதன் மூலமும், தற்போதுள்ள ஆலைகளின் உற்பத்தித் திறனளவை உயர்த்துவதன் மூலமும் கூடுதலாக சுமார் 3,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டும்.

52. வருங்காலத்தில் தறி நூலுக்கு ஏற்படக்கூடிய தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் நோக்குடன் இந்திய அரசின் நிதி உதவியுடன் இணை மானிய அடிப்படையில் "மூலப் பொருள் சேமிப்பு வங்கி" ஒன்றைத் தொடங்க இந்த அரசு கருதியுள்ளது. தற்போது இம் மாநிலத்திலுள்ள பட்டு நூல் நெசவாளர்கள் நியாய விலையில் கோரா பட்டு நூலிழையைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர். இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, சீனாவிலிருந்து கோரா பட்டு நூலிழையை இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கோரா பட்டு நூலிழையின் முதல் ஒப்படைச் சரக்கு விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

53. அரசு 'கோ ஆப்டெக்ஸ்' நிறுவனம் மேற்கொள்ளும் விற்பனைக்குப் பெரிய அளவில் தன்னுடைய ஆதரவினை நல்கி வருகிறது. 1980-81-ல் 'கோ ஆப்டெக்ஸ்' நிறுவனம் ரூ. 45 கோடி அளவுக்குக் கைத்தறித் துணி விற்கும் என எதிர்பார்த்திருக்க, அதன் விற்பனைச் சாதனை ரூ. 48 கோடியாகும். நடப்பு நிதி ஆண்டில் இந்நிறுவனத்தின் விற்றுமுதல் ரூபாய் 65 கோடி அளவுக்கு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதிக விற்றுமுதல் இலக்கினை எய்தும் பொருட்டு, நடப்பு நிதி ஆண்டில் 'கோ ஆப்டெக்ஸ்' நிறுவனத்திற்கு, இவ்வரசு மத்திய அரசின் உதவியுடன் கூடுதலாக ஒரு கோடி ரூபாய் பங்கு மூலதன உதவித் தொகை வழங்கியுள்ளது. கூட்டுறவுக்

கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி, சேமிப்பு காப்புறுதித் திட்டம், வீட்டு வசதித் திட்டம் முதலிய நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

54. மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1981ஆம் ஆண்டு கைத்தறிப் பணியாளர் (வேலை நிலைமைகள்-பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரது இசைவினைப் பெற்று சட்டமாகியுள்ளது. இம் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் வேலை நிலைமைக;ள இச்சட்டம் முறைப்படுத்த விழைகிறது. இச்சட்ட விதித் துறைகளைச் செயல்படுத்துவதைக் கண்காணிக்கும் பொருட்டும், தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான உதவியை அளிக்கும் பொருட்டும், மாநிலக் கைத்தறி வாரியம் ஒன்றைப் போதிய அதிகாரங்களுடன் நிறுவும் செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.

## வீட்டு வசதி.

55. அரசு நிறுவனங்களின் வீட்டு வசதி நடவடிக்கைகள், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 1981-82-ல் பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினர், குறைந்த வருமானமுள்ளவர் முதலியோரது குடும்பங்கள் 8,030க்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஒன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வகுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில், 8,830 குடும்பங்களுக்கு வீட்டுவசதி அளிக்கப்படும். அரசுப் பணியாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டும் பணியையும் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. இதுவரை 11,975 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

56. குடிசைமாற்று வாரியத்தின் பணி செவ்விய முறையில் நடந்தேறி வருகிறது. 1980-81 வரையில் சுமார் ரூ. 35 கோடி செலவில் 31,000 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் 3,000 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டில் மேலும் 3,500 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும்.

57. 1979-ல் தொடங்கப்பட்ட கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், கிராம மக்களின் பேராதரவினால் பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளது. ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் என்னும் மூல இலக்கு, ஐந்தாண்டுகளில் இரண்டு இலட்சம் வீடுகளாக உயர்ந்துள்ளது. 1980-81-ல் 40,831 வீடுகள் கட்டப்பட்டன ; இவற்றில் 34,510 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு உரியவையாகும். 1982-83-ல் 40,000 வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி வழங்கப்படும்.





58. விரிவான சாலை வசதியின் முக்கியத்துவத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது ; பல்வேறு திட்டங்களின்கீழ், சாலைகள் அமைப்பு-மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், 1,500-க்கும் குறைவாக மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதே திட்டத்தின்கீழ், சாலை மதகுகள் கட்டப்பட்டு வருகின்றன ; 1981-82ஆம் ஆண்டில் சாலைகளுக்காகவும், மதகுகளுக்காகவும் ஏறத்தாழ ரூ. 43 கோடி செலவு செய்யப்படும். வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்தின்கீழ், புதிய சாலைகளை அமைப்பதற்காக ரூ. 6 கோடி செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாண்டில், ரூ. 18 கோடி செலவில் 31 புதிய சாலைகள் அமைக்க புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சவ்ராயன் மலைப்பகுதியிலும், ஏனைய பழங்குடியினர் பகுதிகளிலும் சாலை அமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கும், புதிய சாலைகளை அமைப்பதற்கும் மேலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 6 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருகின்ற நிதி ஆண்டிலும் இம் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். ரூ. 10 கோடி மதிப்பீட்டுச் செலவில் புதிய பணிகள் 1982-83-ல் மேற்கொள்ளப்படும். அதே ஆண்டில் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்திற்காக, இன்னுமொரு ரூ. 11.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் ஓடும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை எடுத்துக்கொள்வதற்காக, அடுத்த நிதி ஆண்டிற்கு ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1979-80 முதல் 1981-82 வரை, 8,103 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்துமாறு உத்தரவிடப்பட்டது. இதன்மூலம் 41 இலட்சம் மக்கள் தொகை அடங்கியுள்ள 4,052 கிராமங்கள் பயன் அடையும். அடுத்த நிதி ஆண்டில் சுமார் 1,220 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகள் எடுத்துக் கொள்ளப்படும் . இத்துடன் தற்போதுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்காக ரூபாய் 22.69 கோடி தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் சாலைகளை அமைக்கவும், பராமரிக்கவும், மேம்படுத்தவும் பெரு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது மேற்சொல்லியவற்றிலிருந்து தெரிய வருகிறது.

## சாலை-நீர்வழிப் போக்குவரத்து.

59. செயல்திறன் அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்களின் சாதனை மிகவும் நன்றாக உள்ளது. எரிபொருள் விலை ஏற்றம், ஏனைய இயக்கச் செலவுகள் உயர்ந்துள்ளதை ஈடுசெய்யும்பொருட்டு பேருந்து கட்டணங்கள் 1981ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் நாளிலிருந்து மாற்றியமைக்கப்பட்டபோதிலும், டீசல் எண்ணெய் விலையை மேலும் கணிசமாக உயர்த்தி மத்திய அரசு

1981ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் நாளில் அறிவிப்பு வெளியிட்டது, போக்குவரத்துக் கழகங்கள் போட்ட கணக்கை குலைத்துச் சிதைத்துவிட்டது.' ஒரு சில ஆண்டுகளுக்கு முன் ஆதாயம் ஈட்டி வந்த இக் கழகங்கள், தற்போது நிதி இடர்ப்பாடுகளில் சிக்கியுள்ளன. இருந்தபோதிலும், இக் கழகங்களின் பணியாளர்களுக்குப் பல்வேறு தாராள சலுகைகளும் வசதிகளும் அளிக்கப் பட்டுள்ளன.

60. இம் மாநிலத்தில், வேலூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், ஈரோட்டில் ஜீவா போக்குவரத்துக் கழகம், நாகர்கோவிலில் நேசமணி போக்குவரத்துக் கழகம், காரைக்குடியில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் முதலிய போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை 1982-83 முதல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள போக்குவரத்துக் கழகங்களின் பரப்பு வரம்பைக் குறைத்து, பேருந்துகளின் எண்ணிக்கையைக் கட்டுப் படுத்தி, செம்மையான நிர்வாகத்திற்கு வழி செய்யும் நோக்கத்துடன் இப்புதிய கழகங்கள் நிறுவப்படுகின்றன.

61. கன்னியாகுமரியில் கரைப் பகுதியிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்குப் படகுப் போக்குவரத்துப் பணியை விவேகானந்தர் கேந்திரம் நடத்தி வந்தது. சேறு வாருவதில் உள்ள இடர்ப்பாடுகளினாலும், ஏனைய உள்ளூர்ப் பிரச்சினைகளினாலும், படகு விடுவது நிறுத்தப்பட்டது. படகுப் போக்குவரத்துப் பணியை அரசு மேற்கொண்டு, 1981ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் முதல் நடத்தி வருகிறது. கரைப் பகுதிக்கும் நினைவுப் பாறைக்கும் இடையே இணைப்பு வசதியை உறுதிப்படுத்தவும், இதில் உள்ள பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காணவும் கரைப் பகுதியிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு நடைபாலம் கட்டுவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான விரிவான வரைபடங்களும் மதிப்பீடுகளும் தயாராகி வருகின்றன.

### கிராம வளர்ச்சியும் தன்னிறைவுத் திட்டமும்.

62. செய்த உழைப்புக்கான ஊதியத்தின் ஒரு பகுதியை உணவு தானியமாக வழங்கும் மத்திய அரசுத் திட்டமாக 1979-ல் தொடங்கப்பட்ட வேலைக்கு உணவுத் திட்டம் 1980 அக்டோபரிலிருந்து கிராம வேலை வாய்ப்பு தேசியத் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. (அ) கிராம மக்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பைப் பயனான முறையில் ஏற்படுத்தல்; (ஆ) கிராமப் பொருளாதாரம் விரைவாக வளரவும் கிராமத்தில் உள்ள ஏழை மக்களின் வருமானம் உயரவும் வழிகோலும் வகையில் கிராமப்புற அடிப்படை வசதிகளை வலுப்படுத்தி சமுதாயச் சொத்துக்களை ஏற்படுத்தல்; (இ) கிராம மக்களின் சத்துணவுத் தரத்தையும் வாழ்க்கை நிலையையும் மேம்படுத்தல் முதலியவையே மேற்சொன்ன திட்டத்தின் நோக்கங்களாகும். இம் மாநிலத்தில் உள்ள 378 வளர்ச்சி வட்டாரங்களிலும் இத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.



63. கிராமப் புறத்தில் உள்ள பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு இத் திட்டம் வேலைவாய்ப்பு வசதிகளை அளிப்பதுடன், சமுதாயச் சொத்துக் களையும் உருவாக்கியுள்ளது. 1981-82-ல் இம் மாநிலத்திற்கு ரூ. 22.20 கோடி மானியம் அளிக்கப்பட்டுள்ளது; 14,138 டன் அரிசியும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1982 ஜனவரி இறுதி வரை ரூ. 30 கோடி மதிப்புள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

64. பல்வேறு திட்டங்கள் மூலம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கமாகும். 1980-81-ல் 69 வளர்ச்சி வட்டாரங்களில் மட்டும், இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் முக்கியத்துவத்தையும், கிராம மக்களுக்கு இதன் மூலம் கிடைத்துள்ள எண்ணற்ற பயன்களையும் உணர்ந்த பின்னர், நடப்பு நிதி ஆண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதென அரசு முடிவு செய்தது. எஞ்சியுள்ள வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் இத் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும். 1981-82-ல் இத் திட்டச் செலவு ரூ. 89 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் குடிநீர் வழங்க ரூ. 30 கோடி செலவிடப்படும். மாநில அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 41 கோடி மானியமாகவும், ரூ. 11 கோடி கடனாகவும் அளிக்கிறது. எஞ்சிய தொகையை ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து செலவிடும். அடுத்த நிதி ஆண்டில் தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் குடிநீர் வழங்கு பணிகளுக்கும், ஏனைய பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கும் சுமார் ரூ. 97 கோடி செலவிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

65. கிராமப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதன் மூலம் கிடைத்த ஊக்கமளிக்கும் பலன்களினால் உந்தப் பெற்று, பேரூராட்சிகளுக்கும், போதிய நிதி வசதியற்ற நகராட்சிகளுக்கும் இத் திட்டம் தக்க மாறுதல்களுடன் 1982-83 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1982-83 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இதற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப் படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 26

66. கிராமப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் வழங்கும் இலக்கினை எய்த அரசு செயல்பட்டு வருகிறது. நீர் ஆதாரங்களை அறிவியல் முறைக்கேற்ப ஆய்வு செய்தும் பகுப்பாய்வு செய்தும் குடியிருப்புக்கள் ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பல்வகை குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உலக வங்கி உதவியுடன் 78 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

### சுற்றுலா.

67. திறமையான போக்குவரத்து அமைப்பு, நல்ல சாலைகள், உணவக வசதிகள் முதலிய நல்வாய்ப்புக்களால் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி அடைந்து வருகிறது. கலை வளம் நிறைந்துள்ள இம் மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் ஏராளமாக இருப்பதையும், வேலை வாய்ப்பு வசதிப் பெருக்கம் உட்பட சுற்றுலா வளர்ச்சியினால் கிட்டக் கூடிய சமூக, பொருளாதார நலன்களையும் உணர்ந்துள்ள அரசு சுற்றுலா வளர்ச்சிக்கு அதிக அளவு நிதி ஒதுக்கி வருகிறது. இக் கொள்கைக்கு ஏற்ப, அயல் நாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய முக்கிய சுற்றுலா இடங்களை இணைத்து, சுற்றுலா பயண வழித் தடங்களை வகுக்கும் வகையில், விரிவான இணைப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி முதலிய இடங்களை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டங்கள் தனியே தயாரிக்கப் பட்டுள்ளன, இவற்றிற்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரியுள்ளபோதிலும் நிதி உதவி கிடைப்பதற்குக் காத்திராமல், இவை படிப்படியாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

68. இம் மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இட வசதியும் போக்குவரத்து வசதிகளும் செய்து தருவதில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆற்றிவரும் பணி பலருடைய பாராட்டையும் பெற்றுள்ளது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக் கோலாலம்பூரிலும் சிங்கப்பூரிலும் இக் கழகம் முகவர்களை நியமித்துள்ளதன் பயனாக அதிக அளவு அன்னியச் செலாவணியை ஈட்ட இயன்றுள்ளது. வெவ்வேறு பொருளாதார நிலைகளிலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் அரசுக் கொள்கையை இக் கழகம் செயல்படுத்தி வருகிறது. வெளி நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள், உயர் வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகள், முதலியோரின் தேவையை நிறைவு செய்ய, இக் கழகம் மதுரையில் மூன்று நட்சத்திர உணவு விடுதி ஒன்றை அமைத்துள்ளது.



1982 பிப்ரவரி 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கோயம்புத்தூரில் இரண்டாவது 3 நட்சத்திர உணவுவிடுதி ஒன்றைக் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை ஓய்விட வசதி அதிகத் தொகை செலவிடும் வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் உல்லாசப் பகுதியாக விரிவு படுத்தப்பட்டு வருகிறது. நடுத்தர வருமானமுள்ள, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவையை நிறைவு செய்ய இக் கழகத்தின் தற்போதைய உணவகங்களும் தரம் உயர்த்தப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

69. இளம் சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமின்றி குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கும் அதிகச் செலவு ஏற்படாத வகையில், இட வசதி செய்து கொடுக்க, இக் கழகம் இளைஞர் இல்லங்கள் ஒன்பதைக் கட்டி வருகிறது. அத்தகைய இளைஞர் இல்லம் ஒன்று ஏர்க்காட்டில் தொடங்கப் பட்டுள்ளது. ஒகேனக்கல், இராமேஸ்வரம், மண்டபம் உதகமண்டலம், மாமல்லபுரம் முதலிய இடங்களில் இளைஞர் இல்லங்கள் தொடங்குவதற்குத் தயாராக உள்ளன. எஞ்சியுள்ள இல்லங்கள் அடுத்த சில திங்கள்களில் முடிக்கப்பட்டுவிடும். குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்குக் குறைந்த செலவில் இடவசதி செய்துதருவதில் நாட்டிலேயே மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடுதான் முன்னணியில் நிற்கிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது பேருந்துகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தியுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளில், அதன் செயலாக்கம் மேலும் விரிவுபடும். அப்போது சுற்றுலா மேம்பாட்டிற்காகப் புதிய நடவடிக்கைகளை அது மேற்கொள்ளும்.

### கல்வி.

70. கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் செய்யப்படும் நிதி ஒதுக்கம் கடந்த சில ஆண்டுகளில் தொடர்ந்து உயர்ந்துள்ளது, கல்விக்கு அரசு கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. 6—11, 11—14 வயதுள்ள மாணவ, மாணவியரைப் பள்ளியில் சேர்ப்பதில் அரசு நல்ல சாதனைகளைப் புரிந்துள்ளது. இளஞ் சிறார்கள் மனதில் பள்ளி செல்லும் மனப்போக்கை ஏற்படுத்தும் பொருட்டு, 4,433 சிறார் நல நிலையங்கள் (பாலவாடிகள்) ஒவ்வொன்றிலும் அடுத்த நிதியாண்டில் பாலர் கல்விப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதியளிக்கும். 6—11 வயதுள்ளவர்களில் தொடக்கப் பள்ளி நிலையில் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விடுபவர்களின் விழுக்காடு அண்மை ஆண்டுகளில் குறைந்து வருகிறது. 1973-74-ல் இது 51 விழுக்காடாக இருந்தது, 1980-81-ல் 30 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 26

71. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 1981 ஆம் ஆண்டு சூன் திங்கள் 1ஆம் நாள் முதல் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். ஏராளமான ஆசிரியர்கள் தேவைப்படுவதை நிறைவு செய்ய அடுத்த நிதி ஆண்டில் ஆசிரியர் பதவிகள் பலவற்றிற்கு அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது. 6—11, 11—14 வயதுள்ள மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதால், அதற்கேற்ப, 1,000 இடைநிலை ஆசிரியர்கள் பதவிகள் ஏற்படுத்தப்படும். அனுமதி வழங்கப்படவிருக்கும் ஏனைய பதவிகளில், தமிழ் ஆசிரியர் பதவிகள் 500, உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள் 150, உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவிகள் 50, பி.எட். நிலை ஆசிரியர் பதவிகள் 300 முதலியவை அடங்கும். அரசு மேல்நிலைப் பள்ளிகள் 67-ல் வகுப்பு அறைகளையும், ஆய்வுக்கூடங்களையும் ரூ. 167.50 இலட்சம் செலவில் கட்டும் பணி 1982-83-ல் மேற்கொள்ளப்படும்

72. ஆதி திராவிடர், பழங்குடியினரின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8 முதல் 10 வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடங்களில் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 1981-82-ல் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டம், பல மேல்நிலைப் பள்ளிகளில், முதல், இரண்டாம் ஆண்டு மேல் நிலை வகுப்புகளுக்கு அடுத்த நிதி ஆண்டிலிருந்து விரிவாக்கப்படும்

73. மாநில அரசு செயல்படுத்திவரும் முதியோர் கல்வித் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் 61 வளர்ச்சி வட்டாரங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 50 ஊராட்சி ஒன்றியங்களில் முறை சாராக் கல்வி நிலையங்களும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்காக 122 தொடர்கல்வி நிலையங்களும் 1982-83-ல் கூடுதலாகத் தொடங்கப்படும்.

74. பள்ளிக்கூட நிலையில் பொதுக் கல்விக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுபோன்றே கல்லூரிக் கல்விக்கும் தொழில்நுட்பக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். அரசுக் கல்லூரிகளில் பல புதிய பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு பாடமுறைகள் 1982-83-ல் தொடங்கப்படும். திருச்சி, அரசினர் சட்டக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டும் பணியும், மதுரை, சட்டக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

75 1979-80 முதல் இதுவரை 12 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. திருநெல்வேலியில் பொறியியல் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் பல்தொழில் பயிற்சிப்



1982 பிப்ரவரி 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பள்ளிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும், பல புதிய பாட முறைகள் தொடங்கப்படும்; தொழில்நுட்பக் கல்விக் கூடங்களை மேம்படுத்த, கட்டிடங்கள் கட்டவும் சாதனங்கள் வாங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம் தனது வசதிகளை மேம்படுத்திக் கொள்ளவும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து நிதி உதவி பெறவும் வகை செய்ய, இவ்வரசு மானியம் வழங்க 1982-83-ல் ரூ. 62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் அறிவியல், தொழில்நுட்பவியல் அரும் பொருட்காட்சியகங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கென அமைக்கப்பட்ட குழு ஏற்கெனவே செயல்படத் தொடங்கியுள்ளது.

76. விளையாட்டுத் துறையில், பள்ளி செல்லும் வயதடையா இளஞ்சிறார்களிடையே "விளையாட்டுகளில் ஆர்வமுள்ளவர்களை இளம் வயதிலேயே தேடிக் கண்டுபிடித்துப் பயிற்சியளித்து ஊக்குவித்தல்" என்னும் புதிய திட்டம் அடுத்த நிதியாண்டிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்படும். மகளிருக்காக விளையாட்டுப் பள்ளி ஒன்று கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்படும். 1982-83-ல் கூடுதலாக 150 கிராமப்புற விளையாட்டு நிலையங்களும் பொழுதுபோக்கு மையங்கள் எட்டும் ஏற்படுத்தப்படுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

77. அரசு நியமித்த உயர் அதிகாரக் குழு செய்த பரிந்துரைகளின்படி கன்னிமாரா பொது நூலகம் நவீனப் படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத் தொல்பொருளியல் துறை காவிரிப்பூம்பட்டினத்தை ஒட்டியுள்ள கடலுக்கு அடியில் ஆராய்ச்சிகளைத் தீவிரப்படுத்தும்.

## தமிழ்க் கலைகள், பண்பாடு.

78. தமிழ் வளர்ச்சி, மரபுவழித் தமிழ்க் கலைகள், பண்பாட்டு நடவடிக்கைகள் முதலியவற்றில் இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இக்கொள்கையை ஒட்டி, அடுத்த நிதி ஆண்டில் சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

79. தொலைதூரக் கிராமங்களில் பழைய பனை ஓலைச் சுவடிகள் நூற்றுக் கணக்கில் உள்ளன; இவை போதிய பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளன. கலை, அறிவியல் சம்பந்தப்பட்ட தமிழ் பனை ஓலைச் சுவடிகளையும் குறிப்பாக, இசை, சிற்பம், ஓவியம், தாவரவியல், வான் இயல், விலங்கியல், பறவையியல் போன்ற சில அறிவியல் துறைகளில் அதிகமாகப் புழக்கத்தில் இராத சுவடிகளையும் தேடித் திரட்டிப் பதிப்பிக்கக் கருதப்பட்டுள்ளது. தமிழ்

மக்களிடம் இலக்கிய, பண்பாட்டு விழிப்புணர்வை ஊக்கி வளர்க்கும் நோக்குடன், அரிய மதிப்புள்ள பழைய புத்தகங்களை மீண்டும் அச்சிட்டு வெளியிடக் கருதியுள்ளது.

80. தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களின் வரலாறு, பண்பாடு, கலை, சமூக வாழ்க்கையினை முறையாக எழுதி வைக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. அச்சில் ஏறியது போக, தலைமுறை தலைமுறையாக வாய் வழியாய் வந்த அரிய அறிவுச் செல்வங்கள் ஏராளமாக உள்ளன. இவை இலக்கிய மதிப்பும் கலைத் தரமும் செறிந்தவை. அவற்றை நாம் எழுத்தில் எழுதி வைக்காவிட்டால், அடுத்த தலைமுறைக்கு அவை கிடைக்காமல் போய் விடும். எனவே, தமிழ்நாட்டின் கிராம வரலாற்றுப் பாரம்பரியத்தை எழுத்தில் வடித்து நூற்களஞ்சியங்களைப் பதிப்பிக்க அரசு கருதியுள்ளது. அச்சிட்ட இந்தப் புத்தகங்கள் தவிர, நமது கிராம மக்களின் இசை வளத்தையும் ஏனைய கலைகளையும் பிரதிபலிக்கும் வகையில் இப் பாரம்பரியச் செல்வம் ஒலிப் பதிவும் செய்யப்படும்.

81. கிராமியக் கலைகள், கிராமியப் பாடல்களுடன், தமிழ்நாட்டின் பண் முறையைப் பிரதிபலிக்கும் கர்நாடக இசையைப் பாதுகாக்கும் பொருட்டு, இசை மேதைகள் பாடியவற்றை ஒலிப் பதிவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உருவாக்கிப் போற்றி வளர்க்கப்பட்டுள்ள தலைசிறந்த சில ராகங்கள் இந்த ஒலிப் பதிவுகளில் முக்கிய இடம் பெறும்.

**மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலன்.**

82. "கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் சுகாதார வசதி" என்பதே உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய சுகாதாரப் பட்டயத்தின் முழக்கமாகும். இதில் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. இச் சீரிய நோக்கத்தை எய்தும் பொருட்டு, நோய்த் தடுப்பு, சிகிச்சை அளித்தல், பொதுச் சுகாதாரம்-துப்புரவு மேம்பாடு, அனைத்திற்கும் மேலாக குடும்ப நலத் திட்டம் ஆகியவற்றில் முற்போக்குக் கொள்கையினை மாநில அரசு கடைப்பிடித்து வருகிறது.

83. கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளில் சிறார்கள், வயது வந்தவர் ஆகியோர் மீது மக்கள் நல்வாழ்வுத் துறை கவனம் செலுத்தி வருகிறது. பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் உடல் நிலையை அடுத்த நிதி ஆண்டில் முறையாகப் பரிசோதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 5—11 வயதுள்ள ஒவ்வொரு சிறார்க்கும் அனைத்துத் தகவல்களும் அடங்கிய சுகாதார அட்டை வழங்கப்படும். சென்னையிலுள்ள குழந்தைகள் மருத்துவ மனையில் தற்போதுள்ள 250 படுக்கைகள், 500 படுக்கைகளாக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 173.24 இலட்சம் செலவில் உயர்த்தப்படும். அடுத்த நிதி ஆண்டில் பன்னிரண்டு அரசு மருத்துவ மனைகளில் குழந்தை சிகிச்சைப் பிரிவுகள் திறக்கப்படும். அடுத்த நிதி ஆண்டில் ரூ. 140.49 இலட்சம் செலவில் 15 தொடக்கச் சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாகத் தரமுயர்த்தப்படும்.



84. தலை உறுப்பை முப்பரிமாணத்தில் படம் பிடிக்கும் கருவி ஒன்றைச் சென்னைப் பொது மருத்துவமனைக்கு அண்மையில் அரசு வாங்கியுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் சுமார் ரூ 1.5 கோடி செலவில் தஞ்சாவூர் மருத்துவ மனையில் தலை உறுப்பை முப்பரிமாணத்தில் படம் பிடிக்கும் கருவியையும் மதுரை மருத்துவ மனையில் உடல் முழுவதையும் முப்பரிமாணத்தில் படம் பிடிக்கும் கருவியும் வாங்கி அமைக்கப்படும். 1982-83 ஆம் ஆண்டில் மதுரையிலுள்ள நச்சாய்வியல் ஆய்வுக்கூடத்திற்கு ரூ. 20 இலட்சம் மதிப்பு உடைய சாதனங்கள் வாங்கப்படும். இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவ மனைகளில் பயன்படுத்த 'எக்ஸ்' கதிர் இயந்திரங்களும் ஏனைய கூடுதல் சாதனங்களும் வாங்கப்படும். காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனைக்கு, ரூ. 10 இலட்சம் செலவில் அவசியமான இணைப்புக் கருவிகளுடன் மிகை ஒலிசாதனம் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி பெறும் செவிலியர், செவிலிப் பணியாளர் ஆகியோருக்குச் சுமார் ரூ. 103 இலட்சம் செலவில் கோயம்புத்தூரிலும் மதுரையிலும் கூடுதல் இடவசதி செய்து கொடுக்கப்படும். இம்மாநிலத்தில் மின் உற்பத்தி இயந்திரங்கள் மிக அவசியமாகத் தேவைப்படும் சில மருத்துவ மனைகளில் அவை அமைக்கப்படும்.

85. 1982-83 ஆம் ஆண்டில் விபத்து அவசரப் பணிகள் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணி சுமார் ரூ. 50 இலட்சம் செலவில் மேலும் இரண்டு மாவட்டங்களுக்கு, அதாவது சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும்.

86. ஹாத்தி குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகத்தை, அரசு அண்மையில் பொதுச் சுகாதார-நோய்த் தடுப்பு மருந்துகள் இயக்கத்திலிருந்து பிரித்து, தனித் துறையாக அமைத்துள்ளது.

87. இந்திய முறை மருத்துவத்தை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அடுத்த நிதி ஆண்டில், மேலும், 10 தொடக்க சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும். சித்த மருந்துப் பொருள் தயாரிக்க, வட்டார மருந்துப் பொருள்கள் தயாரிப்பு நிலையம்

சுமார் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பொள்ளாச்சியில் அமைக்கப்படும். பாளையங்கோட்டை, அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் உள்ள மருந்துப் பொருள் தயாரிக்கும் பிரிவு ரூ. 10 இலட்சம் செலவில் வலுப்படுத்தப்படும். பாளையங்கோட்டையிலுள்ள அக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவ மனையில் இணைக்கப்பட்டவாறு 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்று தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவ மனையுடன் மருந்துப் பொருள் ஆய்வுக்கூடம் ஒன்று 1982-83 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

88. கிராம மக்களின் பல் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக அறிவியல் முறையில் தயாரிக்கப்பட்ட பற்பொடிகளை மருத்துவத் துணை நிலையங்கள், தொடக்கச் சுகாதார நிலையங்கள், அரசு மருந்தகங்கள், வட்ட மருத்துவமனைகள் முதலியவற்றின் மூலம் இலவசமாகக் கிராம மக்களுக்கு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் பாம்புக் கடியால் அவதிப்படும் மக்களுக்கு உடனடியாகவும் திறமையாகவும் சிகிச்சை அளிக்க மருத்துவத் துணை நிலையங்கள், தொடக்க சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள், முதலியவற்றின் மூலம் ஊனீர் மருந்து அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

89. விருப்ப அடிப்படையில் குடும்ப நலத் திட்டத்தை மிக வெற்றிகரமான முறையில் செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுபடுத்தப்படவில்லையானால், பொருளாதார வளர்ச்சி அனைத்தும் பயனற்றுப் போய்விடும். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தெரிவித்துள்ளபடி, இம்மாநிலத்தில் மக்கள் தொகையின் கட்டுப்பாட்டு நிலவரம் மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது. இம்மாநிலத்தில் பிறப்பு விதம் 1971—1980 பத்தாண்டுகளில் 17.23 விழுக்காடாகக் கணிசமாகக் குறைந்துள்ளது. இதுவே இந்நாட்டிலுள்ள மிகக் குறைவான பெருக்க விகிதம் எனலாம். சிறு குடும்ப முறையைப் பின்பற்றுமாறு தகுதியுடைய தம்பதியருக்கு அறிவுரை கூறவும் ஊக்குவிக்கவும் சிறந்த முறையில் முகாம்கள் நடத்தப்பட்டு, அவை நல்ல பயனை அளித்துள்ளன. 1981-82 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப நல அறுவைச் சிகிச்சை எண்ணிக்கையில் 1981 டிசம்பர் இறுதிவரையான இலக்கில் 83 விழுக்காடு எட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் குடும்ப நல அறுவை சிகிச்சை இலக்கு முழுவதையும் எய்துவதே இவ்வரசின் குறிக்கோளாகும். இதற்காக பல்வேறு சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவிகளும் பெறப்பட்டுள்ளன.





90. டேனிஷ் அனைத்து நாடுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் சுகாதாரப் பாதுகாப்பு-குடும்ப நலத் திட்டம், சேலம், தென்னார்க்காடு ஆகிய இரு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ரூ. 14.40 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். குறிப்பாக சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் சுகாதார-குடும்ப நல நிலையை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் பொதுவான நோக்கமாகும். சுகாதார முறையில் அடிப்படை வசதி ஏற்படுத்தி வலுப்படுத்துவது, சுகாதார குடும்ப நல வசதிகளை நல்குவது, துப்புரவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், சமுதாய நலத் திட்டங்கள் முதலியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். 58 சுகாதார துணை நிலையங்களையும், 20 சுகாதார பார்வையாளர்களுக்குக் (பெண்) குடியிருப்புகளைக் கட்டுவது, 95 சுகாதாரத் துணை நிலையங்களையும் கூடுதலாக ஏற்படுத்துவது போன்ற இத்திட்டத்தின் சில கூறுகளுக்கு அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது.

91. இரண்டு மாவட்டங்களிலுள்ள சுமார் 3,640 கிராமப்புற குடியிருப்புப் பகுதிகளில், 18 இலட்சம் பேர்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க, கிராமப்புற குடிநீர் வழங்கு துணைத் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளது. இத் திட்டத்தை அடுத்த 4 ஆண்டுகளில் செயல்படுத்த மத்திய அரசு மூலம்— 'டேனிடா' நிறுவனத்திடமிருந்து ரூ. 35 கோடி நிதி உதவி வேண்டப்பட்டுள்ளது.

### சமூக நலன்.

92. ஆதிதிராவிடர்களின் சமூக-பொருளாதார நிலைகளை மேம்படுத்துவது குறித்த பணியை, மாநில அரசு கடந்த சில ஆண்டுகளாக முழு மூச்சுடன் மேற்கொண்டுள்ளது. அரசுப் பணிகளில் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 விழுக்காட்டை அனைத்து துறைகளும் முறையாக ஒதுக்குவதை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கமாகும். கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 51,443 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்ட முறையில் அமைந்த, மத்திய அரசு சிறப்பு நிதி உதவியுடன் கூடிய திட்டத்தின் கீழ் 44,500 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. ஆதிதிராவிடர்களுக்கு உதவ கிராமப்புற நெசவுத் தொழில் நிலையங்களும், நெசவாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 804 கோடியாகும். இதனால் 10,384 பேர் பயன் பெறுவர். வேளாண்மைத் தொழிலாளர்களாகப் பணிபுரியும் ஆதிதிராவிடர்களுக்கு உதவும் பொருட்டு வேளாண்மைத் துறையில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்

கொள்ளப்பட்டு வருகின்றன. 1982 நிதி ஆண்டு தொடங்கி மூன்றாண்டுக் காலத்தில், ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதிகள், மூலக் கிராமங்களுக்குச் செல்லும் வசதிகள், பொதுச் சாலை வசதிகள், சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல், இன்றியமையாப் பொருள்கள் வழங்குதல் முதலிய வசதிகள் செய்து கொடுக்கச் சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிக்கும் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டியுள்ளது என்பதை ஆய்ந்தறிந்து, நல நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தனி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விட்டு மனைகள், வீடுகள் கட்டுவதற்கு ஏற்ற வகையில் சீராக்கப்படுவதை உறுதிப்படுத்த அரசு விரும்புகிறது இப் பணியை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். கிராமப் புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பெரும் பயன் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கே கிட்டியுள்ளது. ஏற்கெனவே தெரிவித்தபடி, 1980-81 ஆம் ஆண்டில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 40,831 வீடுகளில் 34,510 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு உரியவையாகும். நடப்பு நிதி ஆண்டில், 1981 டிசம்பர் வரை, கட்டி முடிக்கப் பெற்ற 9,756 வீடுகளில் 8,545 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்டவை. வீடுகள் கட்டிக் கொடுப்பதில் ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்படும் உதவி, வரும் ஆண்டுகளில் தொடர்ந்து முனைப்பாக செய்யப்படும்.

93. ஆதிதிராவிட மாணவர்களுக்கு மாணவர் விடுதிகள் கட்டும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ. 3,57.94 இலட்சம் செலவில் 51 மாணவர் விடுதிகள் கட்டவும், ரூ. 2,00.65 இலட்சம் செலவில் 27 மாணவியர் விடுதிகள் கட்டவும், திருத்திய அனுமதி அரசினால் 1981 டிசம்பரில் வழங்கப்பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக, ரூ. 22.50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அடுத்த நிதி ஆண்டில், பின் தங்கிய வகுப்பு மாணவர் விடுதிகள் 40 புதிதாகத் தொடங்கப்படும். குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் நலனுக்காக, புதிதாக மூன்று மாணவர் விடுதிகளும் தொடங்கப்படும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் பள்ளிகளுக்காகக் கட்டிடங்கள் கட்ட ரூ. 7.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

94. 1980-81ஆம் ஆண்டு முதற்கொண்டு சிறப்புக் கூறுகள் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

(அ) ஆறாவது திட்டக் காலத்தில் 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருக்கும் நிலை மாறி உயர்ந்திட உதவுவது;





(ஆ) குடிநீர், இணைப்புச் சாலைகள், மின்வசதி, சுகாதாரம், கல்வி முதலிய வசதிகள் செய்துகொடுத்தல். 1980-85ஆம் ஆண்டிற்கு இத் திட்டத் திற்கான ஒதுக்கீடு ரூ. 535 கோடியாகும். 1982-83ஆம் ஆண்டில், இதற்கான ஒதுக்கீடு ரூ. 114 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத னால், 1.66 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெறும். சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் அதிக ஆதிதிராவிடர்க்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்கள் உழைப்பைப் பயன்படுத்தும் புதிய தொழில் முயற்சிகளையும், உற் பத்தி நிலையங்களையும் மேற்கொள்வதன் மூலம் அவர்கள் பொருளாதார நிலையும், ஊதியம் ஈட்டும் திறனும் மேம்பாடு அடையும். இவை ஆதி திராவிடர்களுக்கு நிலையான பயன்கள் அளிப்பதோடு மட்டுமல்லாமல், புதிய சொத்துக்களையும் உருவாக்கும். கூடி உழைக்கும் தொகுப்புத் திட்டங்களும் ஊக்குவிக்கப்படும். ஆதிதிராவிடர்களின் நிலங்களுக்குப் பாசனம் அளிக்க உதவும் வகையில் அடிமட்டப் பகுதிகளிலும் கடைமடைப் பகுதிகளிலும் குழாய்க் கிணறுகள் நிறுவப்படும். 1982-83 ஆம் ஆண்டில் இதற்காக சுமார் 2,000 குழாய்க் கிணறுகள் நிறுவப்படும்.

95. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு நிறுவனம், ஆதி திராவிடர்களின் நலனுக்காகப் பல்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டங் களைச் செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்திலும் செலவில் 25 விழுக் காடு தொகையை 4 விழுக்காடு வட்டியில் தொடக்க உதவித் தொகையாக அளிப்பது இதில் ஒன்றாகும்.

96. மகளிர், சிறார் நலனுக்கான திட்டங்களையும் இந்த அரசு செயல் படுத்திவருகிறது. 18—30 வயதுள்ள 1,000 ஏழை மகளிருக்குத் தட்டச்சு, சுருக் கெழுத்தில் பயிற்சி அளிக்கும் வகையில் 1982-83ஆம் ஆண்டிலும் இத் திட்டத்தை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் கூடுதலாக 200 பாலர் நல நிலையங்கள் தொடங்கப் படும்.

97. சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்தவும், சிறார்களுக்கு சத்துணவு முதலியவற்றை வழங்கவும் இம் மாநிலத்தில் இப்போது செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் உதவும். குறிப் பிட்ட வயதைக் கடந்த ஆதரவற்ற கைம்பெண்கள், ஆதரவற்ற உடலூன முற்றோர், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், பார்வை இழந்தோர் ஆகியோருக்கு முதியோர் உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இத் துடன் அவர்களுக்கு அரிசியும் ஆடைகளும் அளிக்கப்படுகின்றன.

98. உடல் ஊனமுற்றோரின் நலனில் அரசு தனி கவனம் செலுத்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் பால் விற்பனை நிலையங்கள், தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் ஆகிய வற்றில் உடல் ஊனமுற்றோர் அரசு அளிக்கும் உதவியுடன் பணிக்கமர்த்தப் பட்டுள்ளனர். பொருத்துநர் தொழிலிலும், மின் கம்மியர் தொழிலிலும் காது கேளாதோருக்குப் பயிற்சி அளிக்க, நடப்பு நிதி ஆண்டில் கிண்டி, தொழில் பயிற்சி நிலையத்தில் இரண்டு தனிப் பிரிவுகள் தொடங்கப்பட் டுள்ளன. காது கேளாத பெண்களுக்குப் பயிற்சி அளிக்கத் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றில் தனிப் பிரிவு ஒன்று 1982—83ஆம் ஆண்டில் தொடங்கப் படும். 1982—83ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் இறுதி மதிப்பீட்டுச் செலவில் உடல் ஊனமுற்றோருக்கான 5 சிறப்புப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து நாடுகள் உடல் ஊனமுற்றோர் ஆண்டில் தொடங்கப் பெற்ற அனைத்துத் திட்டங்களும் அடுத்த நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

வருவாய்த் துறை நிர்வாகம்.

99. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 1,36,641 ஏக்கர் நிலம் உபரி என அறிவிக்கப்பட்டது. உபரி என அறிவிக்கப் பட்ட நிலத்தில், 88,907 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு கரும்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு 4,041 ஏக்கர் நிலம் கொடுக்கப் பட்டது; பொது காரியத்திற்காக 8,500 ஏக்கர் நிலம் ஒதுக்கி வைக்கப்பட் டுள்ளது. 16,289 ஏக்கர் நிலம் குறித்து நீதிமன்றத் தடை ஆணை உள்ளது. எஞ்சிய 18,904 ஏக்கர் நிலம் உடனடியாக ஒப்படை செய்வதற்கு உள்ளது. 88,907 ஏக்கர் நிலத்தில் 32,351 ஏக்கர் நிலம், 29,028 ஆதிதிராவிடர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

100. தமிழ்நாடு 1965ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகையாளர் உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின்கீழ், 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் நிலவரப்படிப் பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 4,37,117 ஆகும். அவர்கள் பயிரிடும் நிலம் மொத்தம் 6,26,538 ஏக்கர் ஆகும்.

101. வருவாய்த் துறை ஃபிர்க்கா ஆய்வாளர் அவர்களுக்கு அலுவலக குடியிருப்புக்கான 100 கட்டிடங்கள் அடுத்த நிதியாண்டில் கட்டப்படும்.



102. நிலப் பதிவேடுகளில் நில உரிமையாளர், பற்றிய விவரங்கள் நாளது வரை எழுதி வைக்கும் திட்டம், தமிழ்நாட்டில் 1979ஆம் ஆண்டு சூன் திங்கள் 1ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கி உள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்தப் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இத் திட்டம் உழவர்களுக்குப் பெரும் பயன் பயக்கிறது. தங்களது உடமைகளைப் பற்றி முழு விவரங்களும் அவர்களுக்குக் கிடைக்கச் செய்கிறது. அவர்களை வங்கிகளிலிருந்து நிதி உதவி பெற வகை செய்வதோடு, அவர்கள் சொத்துக் களை வர்த்தக ரீதியாகக் கையாளுவதையும் எளிதாக்குகிறது. நிலப்பதிவே டுகளில் நில உரிமையாளர், முதலிய விவரங்களை நாளது வரை எழுதி வைக்கும் பணி, விரைவில், குறிப்பாக இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டுமென்பதில் அரசு முனைப்பான அக்கறை கொண்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, அடுத்த நிதி ஆண்டில் இத்திட்டத்தை விரைந்து செயல் படுத்துவதற்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்

103. தொழிலாளர் நலனைப் பாதுகாக்க அரசு பின்பற்றும் நடைமுறைக் கேற்ற சீரிய கொள்கை காரணமாக தமிழ்நாடு, தொழில் நல்லுறவுகளைப் பொறுத்தவரை, அமைதியையும் சுமுகச் சூழ்நிலைகளையும் தொடர்ந்து பேணி வருகிறது. தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் சட்டங்கள் பல வற்றை இயற்றி நடைமுறைப்படுத்துவதில் அரசு கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது. வேளாண்மைத் தொழிலாளர் நிலையை மேம்படுத்தும் பொருட்டு, குறைந்த அளவு ஊதிய விதங்களைத் திருத்தியமைக்கும் செயற் குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

காவல் துறை, தீயணைக்கும் படையினர், நீதிமன்றங்கள்.

104. பொதுவாக இந்தியாவின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது சட்ட- ஒழுங்கு நிலைமை இம்மாநிலத்தில் சீராக உள்ளது. காவல் துறையினர் செவ்வனே பணியாற்றுவதே இதற்கு முக்கிய காரணமாகும். குற்றங்களை அறிவியல் முறையில் கண்டுபிடிக்கும் சாதனங்களைப் பயன்படுத்தச் செய்யவும் சாலைப் போக்குவரத்து ஒழுங்கு முறைகளை மேம்படுத்தச் செய்யவும் சட்ட ஒழுங்கு நிலைகளைச் சமாளிக்கச் செய்யவும் மாநில அரசு காவல் துறையை வலுப்படுத்தியுள்ளது. சென்னை மாநகரில் போக்குவரத்தை முறைப் படுத்தும் விளக்குகள் ஒருங்கிணைந்து சீராக இயங்கச் செய்வதற்கும் அதிக ஒளி வீசும் பெரிய மின் விளக்குகளை அமைப்பதற்கும் நடப்பு நிதி ஆண்டில் ரூ. 19 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 31 காவல் நிலையங்கள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு இவை யாவும் செயல்பட்டு வருகின்றன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 26

அடுத்த நிதி ஆண்டிலும் மேற்சொன்ன எண்ணிக்கையில் காவல் நிலையங்கள் தொடங்கப்படும். இந்த ஆண்டில் பழைய வண்டிகளில் 10 சதவீத வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகள் வாங்கப்படும்; அடுத்த நிதி ஆண்டில் ரூ. 160 இலட்சம் செலவில் புதிய வண்டிகள் வாங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டில் ரூ. 341 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 150 காவல் நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதி ஆண்டில் காவல் துறையில் சுமார் 2,500 கூடுதல் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரிலும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளிலும் நிலவும் கடினமானப் பிரச்சினைகளைச் செவ்வனே சமாளிப்பதற்காக ரூ. 2.5 கோடி செலவில் சென்னைப் பெருநகர் காவல் படையைச் சீரமைக்கும் செயற்குறிப்பு ஒன்றும் தற்போது பரிசிலனையில் உள்ளது. 1982—83-ல் மதுரையிலும் கோயம்புத்தூரிலும் பெருநகர் காவல் துறை அமைப்பை ஏற்படுத்த அரசு கருதியுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் துறையில் மேலும் ஒரு மாவட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம், அதிகார எல்லையைத் தக்கவாறு மாற்றியமைத்து, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காவல் துறையைச் சீரமைக்கவும் கருதப்பட்டுள்ளது. காவல் துறைப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது, காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இது மேலும் வேகத்துடன் நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. காவலர்களின் நற்பணிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 1,500 காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் பதக்கமும், மாதாந்திரப் படியும் அளிக்கும் திட்டத்தை அரசு ஆளுநர் உரையில் அறிவித்தது.

105. தீ விபத்துகள், ஏனைய விபத்துகள் ஆகியவற்றின் அறைகூவலைச் சமாளிக்கும் வகையில் தீயணைப்புத்துறை, தக்க சாதனங்களுடன் ஆயத்தமாக உள்ளது. தீயணைப்புத் துறைப்பணியாளர்களுக்கு நல நடவடிக்கையாக, அரசு, நடப்பு நிதி ஆண்டில் உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் ரூ. 40 இலட்சம் செலவில் குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது.

106. சாதனம், கட்டிடம், பணியாளர் முதலிய வகையில் நீதித் துறைக்கு வசதி செய்துகொடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில், உயர் நீதி மன்றம், மாவட்ட நீதி மன்றங்கள், நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் முதலியவற்றிற்குப் படி எடுக்கும் 'ஜெராக்ஸ்' கருவிகள் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இம்



1982 பிப்ரவரி 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாநிலத்திலுள்ள நீதித் துறை அதிகாரிகள் 464 பேர்களுக்கு ஒலிப்பதிப்,
பொறிகள் (டேப் ரெக்கார்டர்கள்) வழங்கப்படும். திண்டுக்கல்லில் இவ்
வாண்டு ஜனவரித் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து புதிதாக மாவட்ட செஷன்ஸ்
நீதிமன்றம் ஒன்று செயல்படத் தொடங்கியுள்ளது. உரிமை வழக்கு, குற்ற
வியல் நீதிமன்றங்களுக்கு இட வசதி அளிக்க திண்டுக்கல்லில் சுமார் ரூ. 34
இலட்சம் செலவில் நீதித்துறைக்காக, இணைந்த நீதிமன்றக் கட்டடங்கள்
கட்டப்படும். மதுவிலக்குக் குற்றங்களை விசாரிக்க, நடப்பு நிதி ஆண்டில்
துணை நீதிமன்றங்கள் 21 ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனித
உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், குற்றங்களை விசாரணை செய்ய,
நடப்பு நிதி ஆண்டில் முதல் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்டிரேட் துணை நீதி
மன்றங்கள் நான்கிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிப்புத்தூ
ரிலும், திருப்பூரிலும் துணை நீதிமன்றங்கள், பவானியிலும், போளூரிலும்
மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மாவட்ட, செஷன்ஸ் நீதிபதிகள், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள்
ஆகியோர் பயன்படுத்த 30 மோட்டார் வண்டிகள் வாங்க அரசு அனுமதி
வழங்கியுள்ளது.

107. அடுத்த நிதி ஆண்டில், புதிதாக மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள்
ஒன்பதும் கூடுதல் சிவில் நீதிமன்றங்கள் ஆறும், குற்றவியல் நீதிமன்றங்கள்
நான்கும், துணை நீதி மன்றம் ஒன்றும் செயல்படத் தொடங்கும். வழக்
கறிஞர்களுக்குக் கூடுதலாக அலுவலக இடவசதி அளிக்கச் சென்னை மாநகரில்
ரூபாய் 20 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்படும்.

சென்னை மாநகர் மேம்பாடு

108. சென்னை மாநகரையும் அதன் சுற்றுப்புற இடங்களையும் உலக
வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தவும் அழகுப்படுத்தவும் சில திட்டங்கள்
உள்ளன. உலக வங்கி நிதி உதவி பெறும் முதலாவது திட்டம் ரூ. 55 கோடி
மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. கொடுங்கையூரில்
மனைகள்-பணிகள் திட்டத்தைத் தவிர இத்திட்டம் 1982 ஜூனில் நிறை
வேற்றி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. குடிசைப் பகுதியிலுள்ள
26,000 குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளன. இத்திட்டம்
முடிக்கப்பட்டதும், பொருளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினருக்குச்
சீர் செய்த மனைகள் 13,500 வழங்கப்படும். உலக வங்கி நிதி உதவி பெறும்
இரண்டாவது திட்டத்திற்கு சுமார் ரூ. 74 கோடி செலவாகும். இத் திட்டமும்
செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் குடிசை வாழ் மக்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 26.

50,000 பேருக்கு இட வசதி அளிக்கக் கருதப்பட்டுள்ளது. மேலும், பொரு ளாதார அடிப்படையில் நலிந்த பிரிவினருக்குச் சீர் செய்த மனைகள் 15,000 வழங்கப்படும். மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளிலுள்ள குடிசை வாழ் மக்களுக்கு அவர்களது வீட்டு மனைகளுக்காகப் பட்டா வழங்குதல், வீடுகளைச் சீரமைப்பதற்காக எளிய மாதத் தவணைகளில் 15 ஆண்டு களில் திருப்பிச் செலுத்தும் கடன்களை அவர்களுக்கு அனுமதித்தல் ஆகி யவை இரண்டாவது திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இதன்மூலம் சுமார் 30,000 குடும்பங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குடிசைப் பகுதிகள் சீரமைப்பு, சாலைகளையும் வீட்டு வசதிகளையும் மேம் படுத்தல், சாலைப் போக்குவரத்து ஏற்பாடுகளைச் சீரமைத்தல் முதலியவை உலக வங்கி நிதி உதவி பெறும் திட்டங்களின் நோக்கமாகும்.

109. அடுத்த நிதி ஆண்டில் சென்னை நகரில் விற்பனை வரியின் மீது விதிக்கப்பட்டுள்ள உபரி தீர்வையிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ரூ. 4 கோடி ஒதுக்க இந்த வரவு-செலவு திட்டம் வகைசெய்கிறது. வெள்ள நீர் வடிகால்களைச் சீரமைத்தல், புதை கம்பி வடங்களை மீண்டும் அமைத்தல், சாலைகளைச் சீரமைத்தல் முதலிய திட்டங்களை மேற்கொள்வதற்காக மேலும் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கு, கழிவு நீரகற்று ஏற்பாடுகளை மேம்படுத்த தனியே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை மத்திய அரசு விரைவில் செயல்படுத்தும் எனவும் அந்த ஏற்பாடு, சென்னை நகர்ப் பயணிகளுக்குப் பெரும் பேறாக அமையும் எனவும் இவ்வரசு நம்புகிறது.

## ஆண்டுத் திட்டம்.

110. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்தே இம் மாநிலத்தில் திட்டப் பணிகள் செயல்படுத்துவது போற்றத்தக்க வகையில் இருந்து வருகிறது. 1980—81ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் ரூ. 408.25 கோடி செலவில் ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்தது. ஆனால் குடியானவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டிய கடனைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு மாநில அரசு சிறப்பு நிதி உதவி அளித்த பின்னரும் இம் மாநிலத்தின் திட்ட சாதனை ரூ. 456.46 கோடியாக அமைந்தது. நடப்பு நிதி ஆண்டில் ரூ. 514 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் சட்ட மன்றத்தில் வைக்கப்பட்ட போது, 1981—82ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவு ரூ. 559.46 கோடியாக உயருமென மதிப்பிடப்பட்டது. புதிய திட்டங்களை மேற்கொண்டதாலும்,



1982 பிப்ரவரி 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேறு சில பொறுப்புகளை நிறைவேற்றியதாலும், மாநில திட்டச் செலவு ரூ. 625.53 கோடியாக உயரக்கூடும். அடுத்த நிதி ஆண்டிற்கு ரூ. 711 கோடி அளவிலான திட்டத்திற்கு மத்திய நிதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், நிறைவேறி வரும் திட்டங்களையும் அடுத்த நிதி ஆண்டில் மேற் கொள்ளக்கூடிய புதிய திட்டங்களையும் கருத்தில் கொண்டு, திட்டச் செலவு ரூ. 772.61 கோடி அளவில் இருக்குமென வரவு-செலவுத் திட்டத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டிலும் மின் துறைக்கே மிக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு திருத்தத் திட்ட ஒதுக்கீட்டில் 26 சதவீதம் மின் துறைக்கு ஒதுக்கி இருக்க அடுத்த நிதி ஆண்டில் மாநில திட்ட ஒதுக்கீட்டில் இது 29 சதவீதமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் பல துறைகளுக்கும் ஒதுக்கியுள்ள தொகை விவரம் வருமாறு :— வேளாண்மையும் தொடர்புள்ள துறைகளும் ரூ. 171.54 கோடி ; பாசனம் ரூ. 40.39 கோடி ; மின்விசைத் துறை ரூ. 220 கோடி ; தொழில்களும் கனிவளமும் 42.07 கோடி ; போக்குவரத்தும் சாலைகளும் ரூ. 632.23 கோடி ; கல்வி ரூபாய் 29.64 கோடி ; தொழில் நுட்பக் கல்வி ரூபாய் 5.99 கோடி ; மருத்துவமும் பொதுச் சுகாதாரமும் ரூ. 27.56 கோடி ; கழிவு நீரகற்றலும் குடிநீர் வழங்கலும் ரூ. 62.15 கோடி ; வீட்டு வசதியும் நகர்ப்பகுதி வளர்ச்சியும் ரூ. 67.97 கோடி ; ஆதி திராவிடர் பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர் நலன் ரூ. 21.41 கோடி ; பிற துறைகள் ரூ. 20.66 கோடி

## வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள்.

111. இந்த நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது, திட்டச் செலவுகளுக்கும் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளுக்கும் போதிய ஒதுக்கீடுகள் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டது. இருப்பினும் தொடக்கத்தில் ஒதுக்கியதைவிட ரூ. 300 கோடிக்கு மேலாக சில கூடுதல் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்பாராத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த வறட்சிப் பணிகளுக்காக ரூ. 53.49 கோடி தன்னிறைவுத் திட்டத்தை 150 வளர்ச்சி வட்டாரங்களில் நீட்டிப் பதற்காகக் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 44 கோடி, மின்சார வாரியம் குடிமைப் பொருள் வழங்கு நிறுவனம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகிய வற்றுக்காக வழங்கியுள்ள முன்பணங்கள் ரூ. 85 கோடி, கல்வித் துறை திட்டங்களுக்கான கூடுதல் செலவாகிய ரூ. 8 கோடி, மருத்துவத் துறைக்குக் கூடுதலாக ரூ. 6 கோடி, சாலைகள் அமைப்பதற்காகக் கூடுதலாக ரூ. 7 கோடி போன்றவை இச் செலவினங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 26

## நிதி நிலைமை.

112. 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கை சென்ற ஆண்டு இந்த அவைமுன் வைக்கப்பட்டபோது, ஆண்டு இறுதியில் ரூ. 122.96 கோடி அளவில் பற்றாக் குறை இருக்குமெனக் குறிப்பிடப் பட்டது. திட்ட நிதி ஒதுக்கீட்டினை ரூ. 559.46 கோடியிலிருந்து ரூ. 625.53 கோடியாக உயர்த்திய பின்னரும், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் விவசாயிகளுக்குச் சில சலுகைகள் அளித்த பின்னரும், மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தியதால், வரி வருவாய் பெருகியது காரணமாக, இப் பற்றாக்குறை கணிசமான அளவுக்குக் குறைந்தது. 1981-82 ஆம் ஆண்டுக்குத் தற்போது தயாரித்துள்ள திருத்த மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1,423.46 கோடியாகவும் செலவுகள் ரூ. 1,297.83 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன ; இதனால், ரூ. 125.63 கோடி உபரி இருக்கும். திருத்த மதிப்பீட்டின்படி மூலதனச் செலவு ரூ. 156.35 கோடியாக இருக்கும். கடன் கணக்கில் ரூ. 126.24 கோடி, உபரி இருக்குமெனவும், கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிகரச் செலவு ரூ. 172.66 கோடியாக இருக்குமென்வும் இப்போது கணக்கிடப் பட்டுள்ளது. மின்வாரியம், நுகர்பொருள் வாணிபக் கழகம், போக்குவரத்துக் கழகங்கள் முதலிய அரசுத் துறை நிறுவனங்களுக்குக் கூடுதல் கடன்களும் வழிவகை முன்பணங்களும் வழங்கியதாலேயே கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிலைமை சீர்கேடுற்றது. இதன் நிகர விளைவு தொகுநிதியில் ரூ. 77.14 கோடி பற்றாக்குறை இருக்கும். பொதுக் கணக்கில் இருக்கிற ரூ. 68.98 கோடி உபரியைக் கணக்கில் கொண்டபின், இப்பற்றாக்குறை இப்போது ரூ. 8.16 கோடியாகக் குறைந்துள்ளது. ஆண்டுத் தொடக்கத்திலிருந்த பற்றாக்குறை ரூ. 9.61 கோடி, நடப்பு நிதி ஆண்டு பற்றாக்குறை ரூ. 8.16 கோடி ஆகியவற்றுடன் 1981-82 ஆம் ஆண்டு இறுதிக் கையிருப்பில் 17.77 கோடி பற்றாக்குறை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

113. 1982-83 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டப்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 1,569.49 கோடி அளவிலும், செலவுகள் ரூ. 370.04 கோடி அளவிலும் உபரி ரூ. 199.45 கோடி அளவிலும் இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு ரூ. 165.25 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கடன் என்பதன் கீழ் நிகர வருவாய் ரூ. 118.91 கோடி கிடைக்கக்கூடும். கடன்களும் முன்பணங்களும் என்பதன்கீழ் நிகரச் செலவு ரூ. 323.99 கோடியாக இருக்கும். எனவே, தொகுநிதியில் நிகரப் பற்றாக்குறை ரூ. 170.88 கோடியாக இருக்கும். வருவாய்க் கணக்கில் கணிசமான அளவுக்கு உபரி இருந்தபோதிலும், எல்லாக் கணக்குகளிலுமாகச்



1982 பிப்ரவரி 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சேர்த்துப் பார்க்கும்போது இந்த அளவுக்கு நிகரப் பற்றாக்குறை இருப்பதற்குக் காரணம், மாநில மின் வாரியத்திற்கு ரூ. 271 கோடி அளிக்க வகை செய்துள்ளதேயாகும். பொதுக் கணக்கில் கிடைக்கக்கூடிய உபரியான ரூ. 53.21 கோடியைக் கணக்கில் கொண்டால், இந்த ஆண்டில் ரூ. 117.67 கோடி பற்றாக்குறை இருக்கும். 1982-83 நிதி ஆண்டு தொடக்கப் பற்றாக்குறை ரூ. 17.77 கோடியாக இருப்பதையும் இவ்வாண்டுப் பற்றாக்குறை ரூ. 117.67 கோடியாக இருப்பதையும் சேர்த்துப் பார்த்தால், 1982-83 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கையிருப்பு நிலையில் ரூ. 135.44 கோடி பற்றாக்குறை இருக்கும்.

114. நடப்பாண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் ரூ. 9.57 கோடி பற்றாக்குறை இருக்குமென மதிப்பிட்டிருக்க, திருத்த மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் ரூ. 1,27.51 கோடி உபரி இருக்குமென மதிப்பிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கலாம். அடுத்த நிதி ஆண்டிற்கான வருவாய் உபரி ரூ. 1,99.45 கோடியாக இருக்கக்கூடும். வருவாய்க் கணக்கில் கணிசமான அளவுக்கு உபரி இருந்தபோதிலும், நடப்பு ஆண்டு இறுதியில் எல்லாக் கணக்குகளுக்குமாகச் சேர்த்துப் பார்க்கும்போது, மொத்தப் பற்றாக்குறை ரூ. 17.77 கோடியாக இருக்கக்கூடும். அடுத்த நிதி ஆண்டின் இறுதியில் இந்தப் பற்றாக்குறை ரூ. 1,35.44 கோடியாக உயரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை இருப்பதற்கான காரணங்கள் வருமாறு ;

(அ) நடப்பாண்டுக்குத் தமிழ்நாடு மின்வாரியத்தின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட அளவு ரூ. 167 கோடியாகும். மின்வாரியம் இப்போது ஈட்டிவருகிற வருவாய், மின்சார நிலையங்களை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவுகளுக்கும் ஏனைய இன்றியமையாப் பொறுப்புகளைத் தீர்ப்பதற்குங்கூட போதுமானதாக இல்லை. மின்வாரியத்தின் பற்றாக்குறை முழுவதையும் தமிழ்நாடு அரசு ஈடு செய்ய இயலாவிட்டாலும், மின்வாரியத்திற்கு இவ்வரசு மிகப் பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொதுப் பங்கீட்டு ஏற்பாடு மூலம் விற்பனை செய்கிற ஒவ்வொரு டன் அரிசிக்கும் ரூ. 500 இழப்பு அடைகிறது. எனவே, அந்த நிறுவனத்திற்கு மாநில அரசு வழிவகை முன் பணம் அளித்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் அரிசி விற்பனையில் மட்டிலும் ரூ. 35 கோடி இழப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனது பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக, அந்த நிறுவனத்திற்கு இவ்வரசு இந்த நிதி ஆண்டில் ரூ. 25 கோடி வழிவகை முன்பணம் அளிக்க வேண்டியிருந்தது.

இதுவரை மாநில அரசு அளித்துள்ள முன்பணத் தொகையில் ரூ. 65 கோடி நிலுவையாய் உள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை செலுத்த வேண்டிய ரூ. 11.44 கோடி வட்டியைக் கூட செலுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த நிறுவனத்தால் 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்தே அரசுக்கு வட்டி எதையும் செலுத்த முடியவில்லை.

(இ) பேருந்துப் பயணக் கட்டணங்களை உயர்த்தியிருந்த போதிலும், மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் தங்களுடைய நடப்புப் பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்க்கவும், அன்றாடச் செலவுகளைச் செய்யவும் இயலவில்லை. அந்த நிறுவனங்களும் நிதி உதவி செய்யுமாறு அவ்வப்போது இவ்வரசை வேண்டியுள்ளன.

(ஈ) தன்னிறைவுத் திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் பெரும் பயன அடைந்துள்ளனர் என்பது தெளிவானதால், கடந்த நிதியாண்டில் 69 வட்டாரங்களில் மட்டுமே இத்திட்டம் செயல்பட்டிருக்க, இப்போது இத்திட்டத்தை 150 வட்டாரங்களில் விரிவாகச் செயல்படவைக்க பெருஞ் செலவு செய்ய வேண்டியுள்ளது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இதற்கு முன்னாலே இந்த வினாவிற்குப் பதில் அளித்திருக்கிறேன்: எந்த ஆலயங்களிலே நிதி வசதி அதிகமாக இருக்கிறதோ, எங்கு இந்தத் திருமண நிகழ்ச்சிகளுக்கு நிதி உதவி அளிக்க முடிகிறதோ, அந்த ஆலயங்களிலேதான் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. சில மாவட்டங்களில், மாவட்ட அளவில் பெரிய ஆலயங்கள் இல்லை என்ற நிலைமைகள் இருந்தால், ஓரளவுக்கு வசதியிருக்கின்ற ஆலயங்களிலிருந்து நிதியை ஒதுக்கி, மொத்தமாக ஒரு இடத்திலே மாவட்ட அளவிலே திருமணங்களை நடத்தலாம் என்பதும் அறிவுரையாக வழங்கப்பட்டிருக்கிறது. மற்றொரு கேள்விக்கு பதில் சொல்கிறேன். இப்படிப்பட்ட ஆலயங்களிலே திடீர் திருமணங்கள் நடைபெறுவது பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தத் திருமணங்கள் திடீர் திருமணங்கள் அல்ல. முறையாக அனுமதி வழங்கப்பெற்று, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனை நடத்தி முடிந்த பிறகுதான், இந்தத் திருமணங்கள் நடத்தப் பெறுகின்றன. ஆலயங்களிலே இப்படி வேறு சிலர் திடீரென்று திருமணம் செய்துகொண்டு அதனாலே, சட்டச் சிக்கல் வந்ததையொட்டி, இப்போது ஆலயங்களிலே வந்து திருமணம் செய்துகொள்பவர்கள், அதை அந்த ஆலயத்தினுடைய நிர்வாகிகள் கவனத்திற்குக் கொண்டு வந்து நடத்த வேண்டும்: திருமணம் நடத்துகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர் முறையாக நடத்திக்கொள்கிறார்களா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் திருமணம் நடத்திக்கொள்ள அனுமதி வழங்க வேண்டுமென்று கண்டிப்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது:



### தற்காலிக உதவிப் பொறியாளர்கள்.

*** 123 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் தற்போது தற்காலிகமாகப் பணிபுரியும் நூற்றுக்கணக்கான உதவிப் பொறியாளர்களை நிரந்தரமாக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலம் சிறப்புத் தேர்வுக்கு ஏற்பாடு செய்யும் உத்தேசம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மற்றும் (இ) நெடுஞ்சாலைத் துறையில் தற்போது தற்காலிகமாகப் பணிபுரியும் உதவிப் பொறியாளர்களை சிறப்புத் தேர்வு மூலம் நிரந்தரமாக்க தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு இணங்கவில்லை.

(முற்பகல் 9-50)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, உதவிப் பொறியாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு தேர்வாணைக் குழுவால் தேர்வு கடைசியாக 1976 ல்தான் நடத்தப் பெற்றது: அதற்குப் பிறகு அந்தத் தேர்வு நடைபெறவில்லை. கடந்த 8 ஆண்டுகளாக, தற்காலிகமாக நியமிக்கப்படும் உதவிப் பொறியாளர்களின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது. இதன் காரணமாக, பணிக்கு முதலிலே வந்தவர்களுக்கு, 1976-லே வந்தவர்களுக்குப் பின் உரிமையும், 1980-லே வந்தவர்களுக்கு முன்னுரிமையும் கிடைக்கும் நிலை, சர்வீஸ் கமிஷன் சீனியாரிட்டியால் ஏற்படுகிறது. இதே போன்று, கல்வித் துறையிலே சிறப்புத் தேர்வு நடத்த தேர்வாணைக் குழு ஒப்புதல் அளித்து, தேர்வும் நடந்து முடிந்துவிட்டது. இந்தத் துறையிலே 8 ஆண்டுகளாகத் தேக்க நிலை இருப்பதால், சிறப்புத் தேர்வு மூலமாகவோ தேர்வு ஆணைக் குழுவின் ஒப்புதலோடு அரசே அவர்களின் பணியை வரன்முறைப்படுத்தியோ, அதைச் செய்ய வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்திலே அதற்கு உரிமை இருக்கிறது. அந்த வகையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நெடுஞ்சாலைத் துறையில் தற்காலிகமாகப் பணி புரியும் உதவிப் பொறியாளர்களை, தமிழ் நாடு தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வை எழுதச் செய்யலாமென்றும், அதற்காகத் தேவையானால் விதிகளைத் தளர்த்தலாமென்றும் தமிழ் நாடு

தேர்வாணைக் குழு கருத்து தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையிலே 200 பொறியாளர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. சி. சா. லெட்சுமிகாந்தன்:** எடுத்த எடுப்பில் சிறப்புத் தேர்வுக்கு ஒப்புதல் வழங்க மாட்டோம் என்பது தேர்வாணைக் குழுவின் வழக்கம். கல்வித் துறையிலேகூட அப்படிப்பட்ட கோரிக்கை வைக்கப்பட்டு, அது நிராகரிக்கப்பட்டது. மீண்டும் கல்வித் துறை வற்புறுத்தியதால், அந்தக் கோரிக்கையை தேர்வாணைக் குழு ஏற்றுக்கொண்டது. அதே நிலை நெடுஞ்சாலைத் துறையில் வந்திருப்பதால், மீண்டும் தேர்வாணைக் குழுவிடம் வற்புறுத்தி, சிறப்புத் தேர்வு மூலம் இவர்கள் பணியை வரன்முறை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மீண்டும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். தகுந்த ஆணைகள் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** நூற்றுக்கணக்கான தற்காலிகப் பொறியாளர்கள் பணி புரிந்துகொண்டிருக்கிறார்கள். எந்தக் காரணத்தால், 8 ஆண்டுகளாக தேர்வாணைக் குழு இந்தத் தேர்வை நடத்தவில்லை என்பதை அறிய விரும்புகிறேன். எவ்வளவு பேர்கள் தேவை என்று அந்தத் துறையிலிருந்து தேர்வாணைக்குழுவிற்கு செய்தி அனுப்பப்பட்டதா ? அப்படி அனுப்பப் படாமல், தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்க என்ன அவசியம்? கம்யூனல் ஜீ.ஓ.வை மீறி, வேண்டுமென்றே செய்த செயல் இது என்று அரசின் கவனத் திற்கு ஏதாவது செய்தி வந்துள்ளதா ? அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** கம்யூனல் ஜீ.ஓ. இதையெல்லாம் தாண்டி, வேறுவிதமாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணமில்லை. அப்படிச் செய்யப்பட்டதாகக் குறிப்புகள் இல்லை. கடந்த 4 முதல் 8 ஆண்டுகளாகப் பணிபுரியும் பொறியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. வேலை காலியான நேரத்தில் ஓபன் மார்க்கெட்டிலிருந்து நேரடியாகத் தேர்வு செய்து, நியமித்திருக்கிறோம். அவர்களை இப்போது நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னால், தேர்வாணைக் குழு மூலமாகத் தான் செய்ய வேண்டும். ஆனால் இதுபோன்ற நிலைமைகளைப் பரிசீலனை செய்து, அப்படிச் செய்ய முடியாதென்று சொல்லியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறைக்கு அப்படி பதில் கொடுக்கப்பட்டது. இப்போது நெடுஞ் சாலைத் துறை மூலமாகக் கேட்டோம். அது பரிசிலனையில் இருக்கிற தென்று பதில் வந்திருக்கிறது.



**திரு. த. சந்தோஷம்:** நான் கேட்க வேண்டுமென்று எண்ணிய கேள்வியை திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டுவிட்டார்கள். தேர்வாணைக் குழு பல துறைகளுக்கு வேண்டிய பணியாளர்களைத் தேர்ந்தெடுக்காமல் இருக் கிறது, தன்னுடைய கடமையைச் செய்யாமல் இருக்கிறது. நீதித் துறைக் கான தேர்வை 15 ஆண்டுகளாக நடத்தாமல் இருக்கிறது. அதேபோன்று நெடுஞ்சாலைத் துறையிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. 8 ஆண்டுக் காலம் தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல், நேரடியாக வேலை பார்த்த பிறகு இப்போது அவர்கள் சிறப்புத் தேர்வு எழுத வேண்டுமா என்பதை ஆலோசிக்க வேண்டும். கல்வி இலாகாவில் ஒரு வருடம் பணி புரிந்தால், ஆட்டோமேடிக்காக நிரந்தரப்படுத்தப்படுகிறார்கள். அந்த முறையில் விதியைத் தளர்த்தி, இத்தனை ஆண்டுகளுக்கு மேலாக வேலை பார்த்திருந் தால், தானாகவே நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற விதியைக் கொண்டு வந்து, அதன் மூலம் இவர்களை நிரந்தரமாக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தேர்வாணைக் குழு என்று ஒன்று இருக்கும்போது, அவர்களைக் கலந்தாலோசித்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பிலே அரசு இருந்துகொண்டிருக்கிறது. கல்வி இலாக்கா விலே ஓராண்டு அல்லது அதற்கு மேலே பணி புரிகிறவர்கள் எப்படி நிரந்தர மாக்கப்பட வேண்டுமென்று இருக்கிறதோ அப்படித்தான் நாமும் கேட்கி றோம். நெடுஞ்சாலைத் துறையிலே ஓராண்டுக்குக் குறைவில்லாமல் பணியில் இருக்கிறவர்களை நிரந்தரமாக்க வேண்டும், அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தேர்வாணைக் குழு என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஓரமைப்பு. மாநிலத்திலே நியமனங்கள் செய்யப்படுகிறபோது, அதன் மூலம் நிர்வாகத்திலே தவறு செய்துவிடாமல் பாதுகாக்கிற நிலையில் அந்த அமைப்பு இருக்கிறது. தகுதியின் அடிப் படையில் குறிப்பிட்ட அலுவலர்களை நியமிக்கும் அமைப்பு அது. இந்த நிலையில் "200-க்கும் மேற்பட்ட உதவிப் பொறியாளர்களை ஏன் நியமிக்கிறீர்கள் ? தேர்வாணைக் குழுவிலிருந்து பட்டியல் வாங்கி ஏன் நியமிக்கவில்லை ?" என்பதைக் கேட்பதுபோல் இருக்கிறது. முன்கூட்டியே பட்டியல் வாங்கி நியமிக்காமல், 10 (ஏ) (1) விதியின் கீழ் நியமித்திருக்கிறார்கள். கல்வித் துறையிலே 'ஏ', 'பி' பிரிவுகள் சேர்த்ததால், விதியைத் தளர்த்திக் கொடுத்தார்கள். அந்த விதத்திலே தளர்த்த மாட்டோம் என்று சொல்ல

தால், அவர்கள் விதியை அமுல் நடத்துவதில் உறுதி கொண்டிருப்பதை உணர்ந்து, இப்படி 10 (ஏ) (1) விதியின் கீழ் நியமனங்கள் செய்யாமல், தேர்வாணைக் குழுவிலிருந்து பட்டியல் வாங்கி நியமனம் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** 200 இடங்களையும் நாம் பூர்த்தி செய்தது சமீப காலங்களிலே அல்ல. 4 முதல் 8 ஆண்டுகள் வரை இருக்கிறது. பல்வேறு கட்சிகள் பொறுப்பிலே இருந்திருக்கின்றன. இவைகளையெல்லாம் தேர்வாணைக் குழு ஏற்றுக்கொள்ளுமென்ற கருத்திலேதான் செய்யப்பட்டது. வேறு எந்த நோக்கத்திலும் செய்யப்படவில்லை. இனிமேல் தேர்வாணைக் குழுவிடம் முதலிலேயே கேட்டுக்கொண்டு, அதற்குப் பிறகு இப்படிப்பட்ட பணியிடங்களைப் பூர்த்தி செய்வது நல்லதென்று கருதுகிறோம்.

## மதிய உணவு.

* 124 வினா.—**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில், மதிய உணவிற்காக ஒரு நாளைக்காகும் செலவு எவ்வளவு ?

(இ) அச்செலவினை சென்னை மாநகராட்சி மட்டுமே ஏற்கின்றதா?

(உ) இல்லை எனில், எந்தெந்த வகைகளில் அச்செலவு ஏற்கப்படுகின்றது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ரூ. 7,607.

(இ) ஆம்.

(உ) கத்தோலிக் நற்பணி மன்றம் இலவசமாக பலபார் கோதுமை, சாலட் எண்ணெய் மற்றும் பால்பவுடர் வழங்குகிறது. இதற்கு, சென்னை மாநகராட்சி, நிர்வாகச் செலவிற்கு ரூ. 10,000 உதவித் தொகையாக ஒவ்வொரு வருடமும் அம்மன்றத்திற்கு அளிக்கின்றது

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவரவர்களே, எந்தவிதமான உணவு மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பலபார் (பால் ஆஹார்) கோதுமை, சாலட் எண்ணெய் சேர்த்து கொடுக்கப்படுகிறது.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் தனியார் பள்ளிகளுக்கும் மாநகராட்சியே மதிய உணவுக்குரிய மானியத்தை 5 காசுகள் விதம் வழங்க வேண்டுமென்ற ஆணை இருக்கிறது. அதையும் சேர்த்து இதுவா ? அல்லது அது வழங்கப்படவில்லையா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** சென்னை மாநகராட்சியால் நடத்தப்படுகிற பள்ளிகளுக்கு மட்டுமே இவை கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக 60,000 பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டதாகவும், அதற்கு தினமும் 7,067 ரூபாய் செலவழிக்கப்பட்டதாகவும் கணக்கு கொடுத்திருக்கிறார்கள்.

**செல்வி ஆ. லீலாவதி :** அளிக்கப்படும் உணவு, மாணவர்கள் சாப்பிடுவதற்கு ஏற்றதாக இல்லை என்ற குறை இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் அது நிவர்த்தி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அப்படிப்பட்ட குறை இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள், அப்படிப்பட்ட குறை இருந்தால், கேள்வியிலேயே கேட்டிருக்கலாம். அதற்குரிய பதிலைப் பெற்றிருக்க முடியும். அப்படியிருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** நமது மாநிலத்திலே உள்ளாட்சித் துறை பள்ளிகளிலெல்லாம் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கு 5 காசுகள் விதம் 1—6—1981-க்குப் பிறகு, அரசு அந்தப் பள்ளிகளை எடுத்த பிறகு, கொடுக்கிறார்களா? சில இடங்களில் அது நடைமுறைப்படுத்தப்படாமல், மதிய உணவு அளிக்காமல் இருப்பது அமைச்சரவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. மூலக் கேள்வி சென்னை மாநகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்து இருக்கிறது. உறுப்பினரவர்கள் ஒன்றியப் பள்ளிகள் பொறுத்துக் கேட்கிறார்கள். அவர்களுக்கும் 5 காசு . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எப்படியோ, சாப்பாடு பற்றிய கேள்வி.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** கொடுத்து வருகிறோம். எங்கெங்கே கொடுக்கப்படவில்லை, மதிய உணவு வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

## Occupation of area in front of shops.

*125 Q.—Thiru K. RAMAMOORTHY (on behalf of Thiru A. R. DAMODARAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Tiruchirappalli Municipal Authorities have given licences to shop-owners to occupy certain portion of the area in front of the existing shops, on payment of necessary licence fee; and

(b) whether it is also a fact that, in spite of such licence fee having been paid and permission granted for the use of such space, the Municipal authorities, in co-operation with the police, have forcibly evicted the shop-owners from possession of such sites on the 14th and 15th March 1981?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) லைசென்ஸ்கள் என்று எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் தடைகள் இல்லாத நிலையிலான தற்காலிக நிழல் தட்டிகள், படிகள் அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) கடைக்காரர்கள் எவரும் அந்த இடத்திலிருந்து காலி செய்யப் படவில்லை, என்றாலும் அங்கு நிலவி வந்த தடுமாற்றங்களை உணர்ந்து அவர்கள் அவைகளைத் தாங்களாகவே விலக்கிக் கொண்டார்கள்.

## திருச்சிராப்பள்ளி மாவட்டம், கடாலூர் ரோட்டின் குறுக்கே கட்டப்பட்ட பாலம்.

*126 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், கடாலூர் ரோட்டின் குறுக்கே கட்டப்பட்ட பாலம், கட்டி ஒரு வருடம் முடிவதற்குள் பழுதுபட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது ?

(உ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.



(முற்பகல் 10-00)

**திரு. ம. சங்கரலிங்கம் :** கடாலூர் ரோட்டின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் பழுதுபட்டிருப்பது குறித்து சுட்டிக்காட்டி பத்திரிகைகளில் செய்தி வந்தது. இந்தச் சாலை வழியாகப் போக வேண்டிய பேருந்துகளைக் கூட மாற்று வழியில் விட்டதாகவும், இரண்டு மாதங்களுக்குப் பிறகு பாதையை ஒழுங்கு படுத்தியதாகவும் பத்திரிகைகளில் செய்தி வந்தது. அதையொட்டித்தான் நான் கேள்வி கேட்டேன். இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து ஆகிய பத்திரிகைகளில் செய்தி வந்தது. இந்நிலையில் அமைச்சருக்கு வந்த தகவல் சரிதானா ? அப்படி இல்லையென்றால் அதற்கான காரணங்களை ஆராய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பல்வேறு குறிப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மொத்த மதிப்பீடு 24 ஆயிரம் ரூபாய். 18 ஆயிரம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டது. 15—3—1980-ல் ஆரம்பித்த வேலை 27—3—1981 அன்று முடிக்கப்பட்டது. கான்கிரீட் போட்டவுடன் அந்த வழியாக வாகனங்கள் போகக்கூடாது என்று தடை போடப்பட்டதாகவும், ஆனால் அதற்குப் பிறகும் வாகனங்கள் போய்க் கொண்டிருந்ததால் பாலம் பழுது பட்டதாகவும், பிறகு ஒப்பந்தக்காரராலேயே பழுது பார்க்கப்பட்டு இப்போது அது சரியாக இருக்கிறது என்றும் குறிப்பு தந்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பாலங்களில் வேலை நடக்கும்போது, அந்த வழியாக வண்டிகள் போகாமலிருக்கும் வகையில் மண்ணால் தடுப்புச் சுவர் அமைப்பார்கள். இந்த வேலையைப் பொறுத்தவரையில், அந்த ஒப்பந்தக்காரர் அப்படிக் கட்டவில்லை. அவர் அப்படி கட்டவில்லையென்றால், அவருடைய வேலையின் தரத்திற்கு ஏற்ப செய்திருக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். அதில் தவறு நடந்திருந்தால், அதுபற்றி மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பரிசீலனை செய்வதற்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. கான்கிரீட் தளத்தை ஒப்பந்தக்காரர் தன்னுடைய சொந்தச் செலவில் அமைத்து அவரே தான் பிரிக்கவும் செய்தார். அரசுக்கு எந்தவிதமான செலவும் இல்லை. ஆனால் இப்போது மறுபடியும் பழுது பட்டிருக்கிறது என்று சொன்னால், உடனடியாக பரிசீலனை செய்யலாம்.

## இடையன்குடி-இடைச்சிவளை சாலை.

* 127 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், இடையன்குடி-இடைச்சிவளை சாலை பழுதுபட்டிருப்பதால், அவ்வழியே ஓடிக்கொண்டிருந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனால் பொதுமக்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் எனவே அப்பாதையினை விரைவில் செப்பனிட்டுத் தரவேண்டுமென்றும், பொதுமக்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 10—4—1980-லிருந்து 9—6—1981 வரை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து சாலை பழுதுபட்ட காரணத்தால் நிறுத்தப்பட்டது.

(இ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் முறையீடு ஒன்றை இடைச்சிவிளைப் பொது மக்களிடமிருந்து பெற்றது.

(உ) சாலை பழுது பார்க்கப்பட்டு 10—6—1981 முதல் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டு பேருந்துகள் இடைச்சி விளை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : நாங்குநேரி வட்டம் இடையன்குடி-இடைச்சிவளை வரை செல்லும் சாலை 6 மாதமாகப் பழுதுபட்டிருந்தது. போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. போக்குவரத்துத் துறையைச் சார்ந்த வாகனங்கள் போகிற இடங்களில் சாலைகள் பழுதுபட்டால், உடனே நெடுஞ்சாலைத் துறையுடன் அல்லது சம்பந்தப்பட்ட துறையுடன் தொடர்புகொண்டு முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்து, கார் அல்லது பஸ் போன்றவற்றை நிறுத்தாமல் இருக்கும் வகையில் பழுது பார்ப்பதற்குரிய ஒரு முயற்சியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, அதிகாரிகள் கண்காணிக்கத் தான் செய்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் சிக்கல் இருந்தால், இம்மாதிரி ஆகிவிடுகிறது. தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வந்ததால், முடிக்க முடியாமல் காலதாமதம் ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் இம்மாதிரி ஏற்படாமல் வலி புறுத்தி நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Electrification of Madras Central—Arakkonam Railway line.*

* 128. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether the Government have represented to the Central Government, regarding the electrification of the Madras Central-Arakkonam Railway line; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) சென்னை-திருவள்ளூர் பகுதி இரயில்வே புறநகர் பாதை முன்னமேயே மின்மயமாக்கப்பட்டுவிட்டது. திருவள்ளூரிலிருந்து அரக்கோணம் வரையில் மின்மயமாக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : சமீபத்தில் அறிவிக்கப்பட்ட மத்திய அரசின் ரயில்வே பட்ஜெட்டில் தமிழகத்திற்கு 90 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் வேலைகள் நடைபெறுவதில் மெத்தனம் ஏற்படும் என்ற அச்சம் இருக்கிறது. தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இத்தகைய அச்சம் இருக்கிறது. எனவே ரயில்வே தொடர்பான பணிகளை விரைவுபடுத்துகின்ற அளவில், ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசு வேகமாக நடவடிக்கை எடுக்குமா ? ஏற்கெனவே அப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இதைச் சேர்த்திருக்கிறார்கள். இப்போது இந்த வேலையைத் துவக்கியிருக்கிறார்கள். 1982-83-ல் இந்த வேலை முடிந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு பணம் போதுமா போதாதா என்பதைப் பார்க்க வேண்டும். பணம் போதாது என்று சொல்லக்கூடிய நிலை இருந்தால் கூட, இதை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிற உரிமை நமக்கு இருக்கிறது. அதைக் கேட்போம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தமிழகத்தினுடைய உரிமையை வலியுறுத்தும் வகையில், அரக்கோணம் வரையில் மின்மயமாக்குதலால், சென்னையின் வியாபாரம் பெருகும் வாய்ப்பு இருப்பதால், இந்தத் திட்டத்தை வேகப்படுத்த வேண்டும். அதற்கேற்ற வகையில் தமிழகத்திலுள்ள அத்தனை நாடாளு மன்ற உறுப்பினர்களும் இதனை மத்திய அரசிடத்தில் தெளிவாக்க வேண்டும். அதோடு அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்று இதை வேகமாக முடிக்க வேண்டுமென்ற, தமிழகத்தின் உணர்வை வெளிப்படுத்த வேண்டும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஏற்கெனவே இதுகுறித்து இரண்டு மூன்று முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். நேரில் சென்றபோது கூட, விவாதமாகச் சொல்லாவிட்டாலும் கூட, இதைச் செய்ய இருப்பதற்கு நன்றி தெரிவித்துவிட்டு, அதேநேரத்தில் வேகப்படுத்த வேண்டுமென்றும் சொல்லி வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்வதை நடைமுறைப் படுத்துவதிலும் எந்த சிரமமும் ௰.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** திண்டுக்கல் வழியாக கரூருக்கு ரெயில் பாதை அமைக்கும் திட்டத்தையும் விரைவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சென்னை சென்ட்ரல்-அரக்கோணம் இருப்புப்பாதையை மின்மயமாக்குதல் என்கிற மூலக் கேள்விக்கும் இதற்கும் பொருத்தமில்லை.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** 6 திட்டங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். ஒவ்வொரு முறையும் 6 திட்டங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தான் கடிதம் எழுதுகிறோம். அப்படி எழுதும்போது, விரைவாகச் செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் எழுதுகிறோம். திண்டுக்கல்-கரூர் ரெயில் பாதையும் இதில் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அரக்கோணத்தில் அடிக்கடி எக்ஸ்பிரஸ் ரெயிலில் பயணிகள் ஏறுகிறார்கள். இதன் காரணமாக தகராறு அடிக்கடி ஏற்படுகிறது. இதன் அவசியத்தை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்துவார்களா ? நம்முடைய அரசின் வலியுறுத்தல் காரண மாகத்தான் இத்திட்டம் வந்துள்ளதா ? மேலும் இதுபோன்று ஏதாவது இந்த அரசு திட்டங்களை வலியுறுத்தி உள்ளதா ?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வழியாக வரக்கூடியவர். அவரே கூட இதுகுறித்து மத்திய அரசுக்கு எழுதினால், எங்களுக்கு உறுதுணை செய்வதாக இருக்கும். அவர்கள் சொல்லிய அடிப்படையில், நாங்கள் நிச்சயமாக வலியுறுத்திக்கொண்டிருக் கிறோம். ஏற்கெனவே வலியுறுத்தியும் இருக்கிறோம். இம்மாதிரி வேறு என்னென்ன விஷயங்கள் வலியுறுத்தப்படுகின்றன என்று இங்கே கேட்டார்கள்.

1. திண்டுக்கல் வழியாக கரூருக்கும் மதுரைக்கும் இடையே ஒரு புதிய அகல இருப்புப்பாதை அமைத்தல் மற்றும் மதுரை—தூத்துக்குடி, மணி யாச்சி—திருநெல்வேலி பிரிவினை அகல இருப்புப்பாதையாக மாற்றுதல்.

2. திண்டுக்கல்லில் இருந்தோ அல்லது கொடைக்கானல் சாலையில் இருந்தோ கம்பத்திற்கு ஒரு புதிய இரயில்பாதை அமைத்தல்.

3. சென்னை—விழுப்புரம், சிதம்பரம்—தஞ்சாவூர்—திருச்சி—மதுரை இடையே உள்ள மீட்டர் கேஜ் இருப்புப்பாதையினை அகல இருப்புப்பாதை யாக மாற்றுதல்.

4. திருவண்ணாமலை, செங்கம், கிருட்டிணகிரி, ஓசூர் வழியாக பாண்டிச்சேரி மற்றும் பெங்களூருக்கு இடையே ஒரு புதிய இருப்புப்பாதை அமைத்தல்.

5. சென்னை—அரக்கோணம் இருப்புப்பாதையை மின்னகப்படுத்துதல் (எலக்ட்ரிபிக்கேசன்).

6. விழுப்புரம் வழியாக சென்னைக்கும் திருச்சிக்கும் இடையே உள்ள இருப்புப்பாதையை மின்னகப்படுத்துதல்.

ஆகிய 6 திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக் கிறது. இதில் நான் குறிப்பிட்ட திட்டம் மட்டும் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. தீர்த்தராமன் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தாக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் க. இராமமூர்த்தி, வி. வி. வி. ஆனந்தம், க. மீனாட்சிசுந்தரம், ம. சங்கரலிங்கம் ஆகியோர் "சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் தாக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வருகிறது என்பதை உறுப்பினர்கள் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, காங்கிரசில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்த திரு. தீர்த்தராமன் என்கிற சட்டமன்றப் பேரவை உறுப்பினர் சட்டமன்ற விடுதிக்குள்ளேயே சிலரால் தாக்கப்பட்டிருக்கின்றார். இந்த நிகழ்ச்சி சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடைபெற்றிருக்கிறது. அந்தப் பகுதியிலே அமைதியைக் காக்க, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் தங்களுடைய கடமையைச் செயல்படுத்த வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(முற்பகல் 10-10)

இத்தனைக்கும் இடையிலே ஓர் உறுப்பினர் தன்னுடைய கருத்துக்களை மாற்றிக் கொள்வது என்பதையோ அல்லது ஒரு கட்சியிலேயிருந்து இன்னொரு கட்சிக்கு மாறுவது என்பதையோ, எவ்வளவோதான் நாம் பேசினாலும்கூட, கடந்த காலத்திலே இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாம் பார்த்திருக்கிறோம். அப்படி கட்சி மாறுகிறபோது, அவர்கள் ஏற்கெனவே சார்ந்திருந்த கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சில நடவடிக்கைகளை எடுப்பதையும் பார்த்திருக்கிறோம். ஆனால் இப்பொழுது என்ன நடந்தது என்று சொன்னால், சட்ட மன்ற ஆளுகைக்கு உட்பட்ட உறுப்பினர்களுடைய விடுதியிலேயே, அது விடுதியிலேயா மேலேயா அல்லது கீழேயா என்பதல்ல பிரச்சினை, அந்த எல்லைக்குள்ளேயே சட்ட மன்ற உறுப்பினர் ஒருவரை அடித்திருக்கிறார்கள், தாக்கியிருக்கிறார்கள் என்பது சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளை ஆற்ற முடியாமல் இருக்கிறார்கள் என்ற நிலையைக் காட்டுகிறது என்பதோடு மட்டுமல்ல, சென்னையிலே யாராவது சிலர் ஆட்களை வைத்துக் கொண்டு, ரௌடிகளை வைத்துக்கொண்டு, காசை வைத்துக்கொண்டு, எந்த





இடத்திலேயும் எதையும் செய்யலாம் என்ற ஆணவத்திலும், திமிரிலும் இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. ஒரு பக்கம் இந்த நிலைமைகள் இருக்க, இன்னொரு பக்கம் ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கும் அளவுக்கு சட்டம் அங்கே செயல்படுத்தப்படுகிறதோ என்ற அளவிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியின் உள்ளேயே நுழைந்து அடிக்கிறார்கள். இந்தக் காரியங்கள் நடைபெற்றிருக்கும் நிலையிலே அங்கே காவல் துறையினர் இல்லாமல் இல்லை. அவர்கள் இதுசம்பந்தமாக இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அதுபற்றி போலீசுக்குப் புகார் கொடுக்கிறார் அல்லது இன்னொருவர் புகார் கொடுக்கிறார் என்பதல்ல பிரச்சினை. இது போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றபோது கூட, அதுபற்றிய ஒரு எச்சரிக்கை கொடுக்கிறபோது கூட, முன்பெல்லாம் போலீசார் எச்சரிக்கையாக இருப்பார்கள். ஆனால் இங்கே போலீசார் பிடித்துக் கொடுக்கப்பட்டவரையே விட்டிருக்கிறார்கள். அவர்மீது போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டமன்ற விடுதி என்பது எப்படிப்பட்ட, எவ்வளவு பெரிய இடம் என்பது உங்களுக்குத் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி 3 இடங்களிலே பரவியிருக்கிறது. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு யாரும் ஓடிவிட முடியாது. அப்படியிருக்க, இந்த நிலைமை நடந்ததென்றால் போலீசாரின் கண்காணிப்பு முறையாக இல்லையா ? அல்லது இந்தப் பணத் திமிர் தான் அந்தப் போலீசாரையும் அடக்கி வைத்திருக்கிறதா என்று தெரியவில்லை. கூலிக்கு ஆட்களைப் பிடித்து வைத்துக்கொண்டு, இன்றைக்குச் சட்ட மன்ற உறுப்பினர்களை மிரட்டுகின்ற ஆணவம், திமிர் சமுதாயத்திலே பலருக்கு வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இனிமேல் ஜனநாயகம் இப்படித்தான் போகுமோ என்ற அச்சம் வந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே இந்த நிகழ்ச்சி நடந்திருப்பது, காங்கிரஸ் கட்சியிலே சேருகிறேன் என்று தன் கருத்தைத் தெரிவித்ததன் காரணத்திற்காக இது நடந்திருப்பது எவ்வளவு அநாகரீகமான செயல் என்பது மட்டுமல்ல, எந்த அளவுக்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய காரியம் என்பதை நான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடு மட்டுமல்ல, இதை எப்படிப்பட்ட சூழ்நிலையில் செய்திருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். வேறொரு சூழ்நிலையில் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் கூட புரிந்துகொள்ள முடியும். 5 வருஷம் காத்திருக்கலாமா, 3 வருஷம் காத்திருக்கலாமா, அல்லது அடுத்த தேர்தலுக்கு வரலாமா என்ற வகையிலே வக்கிரம் பேசி இடையிலே லாபம் தேடிப்போகிறவர்கள் இப்படியெல்லாம் ஆள்பிடித்து காரியங்கள் செய்திருப்பதைப் பார்க்கிறோம். சட்ட

மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகளை முறையாகச் செய்ய முடியாத அளவுக்கு வெளியிலே காசுக்கு ஆட்களைப் பிடித்து, குண்டர்களை, ரௌடிகளை வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகின்றார்கள் என்பதால், இந்த அவையை ஒத்தி வைத்து இந்த நிலைமையைச் சீர்படுத்தினாலொழிய சட்டமன்ற உறுப்பினர்கள் செம்மையாகச் செயலாற்ற, பணியாற்ற முடியாத சூழ்நிலை ஏற்படும். இங்கே பேசினால்கூட, வெளியே என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கும் இத்தருணத்தில் இங்கே பேச்சும் விவாதமும் குறைந்து போகும் என்ற நிலையையும் இருக்கிறது. ஆகையால் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதனை விவாதிக்க போதிய காரணங்கள் இருப்பதால், இதற்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி.வி. வி. ஆனந்தம் :** தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்ன கருத்தை விட்டுவிட்டு புதிதாக வேறு ஏதாவது கருத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**ஒரு மாண்புமிகு உறுப்பினர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேரும் ஒரேமாதிரியான கருத்துக்களைச் சொல்லமாட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேரும் ஒரேமாதிரியான கருத்துக்களைச் சொல்லமாட்டார்கள் என்று நான் சொல்ல முடியுமா ?

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** 26—2—1982ஆம் நாளன்று சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. நவநீதகிருஷ்ணன், திரு. எஸ். என். இராட்சாமி அவர்களிடம் ஆலோசனைக்காக, எங்களுடைய கட்சியின் செயலாளர் திரு. பூமிநாதன் அவர்களும் மற்றும் இருவரும் அங்கு வந்து அவர்களைச் சந்தித்துவிட்டு, சட்ட மன்ற உறுப்பினர் விடுதியின் வெளியே வரும்போது, அங்கே வெளியிலே இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் எங்கள் கட்சியின் செயலாளர் அவர்களையும் மற்ற இருவரையும் ' நீங்கள் தானே குமரி அனந்தனைத் தூக்கிப் பிடித்து நிறுத்துபவர்கள் என்று கேலி பேசி வம்புக்கு இழுத்து, சண்டையிட்டு, காயப்படுத்தி, தாக்கி அனுப்பியிருக்கிறார்கள் எங்கள் கட்சியின் செயலாளர் திரு. பூமிநாதன் அவர்கள் தாக்கப்பட்டிருக்



கிறார்கள். பின்னர் திரு. பூமிநாதன் அவர்கள் போலீசில் புகார் செய்தார்கள். ஆனால் போலீசார் புகார் செய்த திரு. பூமிநாதன் அவர்களைக் கைது செய்து, இப்போது ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். அவரை அடித்த திரு. தீர்த்தராமன் அவர்களை எதுவும் செய்யாமல் விட்டிருக்கிறார்கள். மேலும், கடத்தல் அரசியலும், சர்வாதிகார அரசியலும் செய்பவர்கள் தான், திமிரான போக்கைக் கடைபிடித்திருக்கிறார்கள் என்பது நாம் எல்லாம் அறிந்ததுதான்.

**திரு. க. இராமமூர்த்தி :** சர்வாதிகார அரசியல் அல்ல ; கலப்பட அரசியல் செய்பவர்களின் செயல் இது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு எல்லா முறையும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆனந்தம் அவர்களுக்கும் சொல்கிறேன். இங்கே விஷயம் விவாதத்திற்கு எடுக்கப்படவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதென்றால், அப்புறம் விதியென்று என்ன இருக்கிறது ? ஆகவே, விதியைக் கடைப்பிடித்து, என் விதியைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (பலத்த சிரிப்பு.)

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், மற்றவர்களும், எங்கள் கட்சியின் செயலாளர் அவர்களை வந்து கண்டு பேச முடியாத அளவுக்கு பாதுகாப்பற்ற நிலைமைகள் இருப்பதால், அதுபற்றி விவாதிக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இந்த சம்பவத்திற்கு உள்ளே போக விரும்பவில்லை. அரசியல் கட்சியிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த கதி என்று சொன்னால், என்னைப்போல் சுயேச்சையாக இருப்பவர்களுக்கு எப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் என்ற அச்சம் இருக்கிறது. இந்த நிலைமைகள் இருக்கும்போது, நாங்கள் எப்படி பணியாற்றுவது ? இந்தச் சம்பவம் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே நடைபெற்றிருக்கிறது. நான் ஆளுநர் அவர்களின் உரையில் பேசும்போது கூட, " இங்கே பேசிவிட்டு வெளியே சென்றால் என்னை மிரட்டுகிற தோரணையில், "நீங்கள் இப்படிப் பேசலாமா ? " என்று சிலர் கேட்கிறார்கள் என்று சொன்னேன். எனக்கு அச்ச உணர்வு உண்டு. பேசுவதற்கே சட்டப்படி இருக்கும் ஜனநாயக உரிமை பறிக்கப்படும் நிலைமை இருக்கிறது. இந்தச் சம்பவம்

சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதியிலேயே நடந்திருக்கிறது. அப்போது
நான் அங்கே இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை யார்
தாக்கினார்களோ அப்படித் தாக்கியவர்களைப் பிடித்து ஒப்படைக்கும்போது
மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் கூட இருந்தார்கள்.
அப்போது அங்கே இருந்த சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் நாங்கள் தாக்கிய
வரை ஒப்படைத்தபோது, அவரை விட்டுவிட்டு, "ஏன் எங்களிடத்திலே
ஒப்படைக்கிறீர்கள்?" என்று கேட்டார். அவரிடத்திலே ஒப்படைக்காமல்
வேறு யாரிடத்திலே ஒப்படைப்பது ? இவர் இந்தத் தாக்குதலைச் செய்தார்
என்று போலீசிடம் ஒப்படைத்தால், "எங்களிடத்திலே ஏன் ஒப்படைக்
கிறீர்கள் ?" என்று கேட்டு அவரை அனுப்புகிறார் என்று சொன்னால்,
வேறு யாரிடத்திலே நாங்கள் ஒப்படைப்பது ? அப்போது அங்கே இருந்த
மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்,
'அப்படியென்றால் அவர்களை எடுத்து நாங்கள் பாக்கெட்டிலே போட்டுக்
கொள்வதா?" என்று கிண்டலாகக் கேட்டார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள்
காவல் துறையினருடைய ஒத்துழைப்போடுதான் நடக்கிறதோ என்ற
ஐயப்பாடும் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் சொல்ல வேண்டும். சட்டமன்ற உறுப்
பினர்கள் விடுதியிலே 'போன்' இருக்கிறது. இந்த நிலைமைகள் ஏற்பட்ட
தும் எங்களுக்கு பீதி ஏற்பட்டது. இங்கே இருக்கும் காவலர்கள் அவர்
களுக்கு உதவியாக இருப்பது போல் தோன்றுகிறது, 100க்குப் 'போன்'
செய்யுங்கள் என்று சொல்ல அப்பணியாளர் போன் எடுத்தால், அந்த போனும்
வேலை செய்யவில்லை. அவுட் ஆஃப் ஆர்டர் ஆக இருந்தது. இது திட்டமிட்டு
செய்யப்பட்ட சதியா என்று எங்களுக்குப் புரியவில்லை. கஷ்டப்பட்டு,
100க்குப் போன் செய்கிறோம், ஆனால் அங்கே எடுப்பதற்கு ஆள் இல்லை.
அவசர உதவிக்கு என்று இருக்கும் போன் 100. ஆனால் 15 நிமிடமாக
'போன்' செய்கிறோம், அங்கே எடுப்பதற்கு ஆள் இல்லை. ஆகவே, இது
எல்லோரும் சேர்ந்து செய்த சதியா அல்லது இப்படித்தான் சட்ட மன்ற
விடுதியிலே இருக்கும் என்ற நிலையா ? நான் அதிகமாகப் போக . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது விதிகளின் கீழ் எப்படி வருகிறது என்று சொல்ல வேண்டும் ; பக்கம் பக்கமாகக் குறிப்புக்களை வைத்துக் கொண்டு சொல்லும் நிலைமை இருக்கக்கூடாது.





திரு. க. மீனாட்சிசுந்தரம் : மறந்து போய் வேறு ஏதாவது உளறி விடக்கூடாதே என்றுதான் குறிப்பை வைத்திருக்கிறேன். தலைவர் அவர்களே, எங்களைக் காப்பாற்றுங்கள், எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை, நாங்கள் சுதந்திரமாகச் செயல்பட வழி செய்யுங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் காவலை அதிகப்படுத்துங்கள், அங்கிருக்கும் தொலை பேசியை சரிவரச் செயல்படச் செய்யுங்கள், குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுங்கள். இவ்வேண்டுகோளை எல்லாம் எவ்வாறு நிறைவேற்றலாம் என்று பேசி முடிவெடுக்க வாய்ப்பாக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதனை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செயல்படும் நிலை இல்லை என்றால், சட்டமன்றங்கள் கூடியும் பயனில்லை, ஜனநாயகம் என்று நாம் பேசுவதிலும் பயனில்லை. குறிப்பிட்ட இந்தச் சம்பவம், எந்தக் காரணத்திற்காக, எந்தச் சூழ்நிலையில் நடைபெற்றிருந்தாலும், அது மன்னிக்க முடியாத ஒன்று. அதுமட்டுமல்ல, தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. மேலும், அரசு அதில் செயல்படாமல் இருந்திருந்தால், அரசும் தன் கடமையிலிருந்து தவறி பது என்பது உண்மையாகிவிடும்.

கடந்த 26 ஆம் தேதி இரவு 8 அல்லது 8½ மணியளவில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஒருவர், சட்டமன்ற விடுதி வளாகத்திலேயே தாக்கப் பட்டிருக்கிறார். அதில் யாருக்கும் இரண்டு விதமான கருத்துக்களில்லை. அந்தச் சம்பவத்தைப் பார்த்தவர்கள், இந்த அவையிலேயே 3, 4 உறுப்பினர் கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள், "தன்னோடு இரண்டு பேர் ஓடி வந்திருந்தால், தாக்கியவர்களைப் பிடித் திருக்கலாம்" என்று குறிப்பிட்டார். அந்த அளவுக்கு அவருக்கே ஒரு உணர்வு ஏற்படும் வகையில் இது நடைபெற்றிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களும் பார்த்திருக்கிறார்கள். பேரவை உறுப்பினர்கள் பலரும் கூட இதைப் பார்த்திருக்கிறார்கள். அந்த அளவுக்குத் தாக்குதல் ஏற்பட்ட பிறகு, சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்து, போலீசிடம் ஒப்படைத்தால், அவர்கள் "எங்களிடம் ஏன் ஒப்படைக்கிறீர்கள் ?" என்று கேட்கிற நிலை ஏற்பட்டது என்றால், இவையெல்லாம் முன்னாலேயே திட்டம் தீட்டப்பட்டு, காவல் துறைக்கும் தகவல் கொடுக்கப்பட்டு நடந்துவிட்டதோ என்று ஐயப் படுகிற சூழ்நிலை உருவானால், அதைத் தவறு என்று சொல்ல முடியாது.

இந்தச் சூழ்நிலை காரணமாக, சட்டமன்ற உறுப்பினர்களான நாங்கள் அனைவருமே—கட்சி வேறுபாடில்லாமல் சொல்லுகிறேன்—அஞ்சுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் செயல்படும் சட்டமன்ற வளாகத்திற்குள்ளாகவே, அந்தப் பகுதிகளிலேயே இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்றால், அங்கே எங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்றுதான் பொருள்படும். எங்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டிய இடத்திலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. வேறு ஒருவர்கூட தாக்கப்பட்டதாகச் சொல்லலாம் என்றாலும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். இந்த அவையைப் பொறுத்தவரையில், இத்தகைய சம்பவத்தைக் குறித்து விவாதிப்பதைவிட வேறு வேலை இருக்க முடியாது. நாங்கள் இங்கே கூடி சட்டத்தை உருவாக்கலாம். ஆனால் அவை நடைபெறுகிற நாட்களிலேயே இந்த அவையின் உறுப்பினர்களுக்கு ஆபத்து ஏற்படுகிறது என்றால், அவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றால், அதைப்பற்றி விவாதிக்கவில்லை என்றால், இந்த அவை விவாதிப்பதற்கு என்று வேறு எதுவும் இருக்க முடியாது. எனவே மாண்புமிகு தலைவர் அவர்கள் இதனை, மற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் போல் கருதாமல், இந்த அவை உறுப்பினர்கள் முறையாகச் செயல்படுவதற்கு ஏற்ற வகையில், நடைபெற்ற இந்தச் சம்பவத்தைக் குறித்து அவையில் விவாதிப்பதன் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முறையான பாதுகாப்பை வழங்கவும், சட்டமன்றத்திற்குப் பெருமையையும் நாட்டிற்குப் பெருமையையும் ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படையில், விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியிலிருந்து சமீபத்தில் விலகிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. தீர்த்தராமன் 26—2—1982 அன்று இரவு 10 மணியளவில் முகையூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரமூர்த்தி அவர்களுடன் உணவு உட்கொள்ள, புதிய சட்டமன்ற விடுதியிலிருந்து புறப்பட்டு வெளியே சென்று கொண்டிருந்தபோது, காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. பூமிநாதன் மற்றும் 10 பேருடன், தாம் கட்சியிலிருந்து விலகியதற்காக தரக் குறைவாகப் பேசி, வன்மையாகத் தாக்கிக் காயங்கள் ஏற்படுத்தியதாக டி-1 திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்தார். அன்றையதினம் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர், திரு. குமரி அனந்தன் சில நபர்களுடன் சட்டமன்ற விடுதியிலுள்ள தம் அறைக்கு முன்னால் நடமாடி, தம்மை அவர்களுக்கு அடையாளம் காட்டிவிட்டுச் சென்றதாகவும், திரு. குமரி அனந்தன்



அவர்களின் தூண்டுதல் பேரில் தம்மைக் கொல்ல முயற்சி நடந்ததாகத் தாம் கருதுவதாகவும் கூறினார். அவர் அளித்த புகாரின் பேரில், திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் குற்ற எண் 470/82-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 147, 341, 323 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

26—2—1982 அன்று சுமார் இரவு 11 மணிக்கு, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. பி. கே. பூமிநாதன் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் சட்டமன்ற விடுதியில் உள்ள மேற்படி கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. நவநீதகிருஷ்ண பாண்டியன் மற்றும் எஸ். என். இராமசாமி ஆகியோரைச் சந்தித்துப் பேசிவிட்டு வரும்போது, திரு. தீர்த்தராமன், எம்.எல்.ஏ., அவர்கள் தம்மையும், தம்முடன் இருந்த செல்வத்தையும் தகாத வார்த்தைகளால் பேசி, சட்டையைப் பிடித்து இழுத்து வம்பு செய்து அடித்து, காயங்களை உண்டாக்கியதாகவும் புகார் ஒன்றை அளித்தார். அதன்படி திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் குற்ற எண் 471/82-ல் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 147, 341 மற்றும் 323-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. திரு. தீர்த்தராமன், திரு. பி. கே. பூமிநாதன், திரு. செல்வம் ஆகியோருக்கு அரசாங்கப் பொது மருத்துவ மனையில் புறநோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஏற்பட்டுள்ள காயங்கள் சொற்பமானவை என்று மருத்துவ அறிக்கை குறிப்பிடுகிறது. இரு வழக்குகளும் புலன் விசாரணையில் உள்ளன

திரு. பூமிநாதனும் திரு. காசிநாதனும் 27—2—1982 அன்று கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சியின் தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. எனவே இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு அவசியமில்லை என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

## சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. தீர்த்தராமன் சட்ட மன்ற உறுப்பினர் விடுதியில் தாக்கப்பட்டது குறித்து



**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பை ஏற்கிற அதே நேரத்தில், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை யொட்டி, சட்டமன்ற விடுதியில் நடைபெற்ற சம்பவத்தைப் பல சட்டமன்ற உறுப்பினர்கள் நேரில் பார்த்திருந்தும், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான ஒரு சரியான பதில் அரசுத் தரப்பிலிருந்து தரப்படாத காரணத்தால், அதற்கு எங்கள் வருத்தத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கும் வகையில் நானும் எனது கட்சியினரும் இந்த அவையிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டிருக்கிறோம், நாங்கள் அவை கட்சியினரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களும் அவர் கட்சியினரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

### 3. கவன ஈர்ப்பு.

**(1) 19—11—1980 முதல் சென்னையிலுள்ள தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்—

"19—11—1980 அன்று முதல் சென்னையிலுள்ள தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து."

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன் இது குறித்து ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1,732 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்லப்பட்டு அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சாதாரணமாக இந்த அரசில், தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது, அல்லது

---

@ 260-262 ஆம் பக்கங்களில் இணைப்புII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



போராட்டத்தில் ஈடுபடும்போது, அவர்களுடைய பதவிகளில் வேறு ஆட்களை உடனே நியமிப்பது என்பது வழக்கமில்லை. ஆனால் பால்வள நிறுவன ஊழியர்கள் அரசிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வந்திருக்கின்றனர். இங்கே அறிக்கையில் "அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மை அதுவல்ல. மதுரையில் ஒருவர் மாறுதல் செய்யப்பட்டதை எதிர்த்து, அங்கே அவர்கள் ஒரு போராட்டத்தைத் துவக்கினார்கள். அதற்கு ஆதரவு தருகிற வகையில்தான் இங்கேயும் போராட்டம் தொடங்கியது. சங்கத்தின் செயலாளர் மூலம் வேலைக்கு வருகிறோம் என்று தெரிவித்த பிறகும் கூட, அது அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்ல. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, அவர்களுக்குப் பொங்கல் போனஸ் என்ற வகையில் ரூ. 132 வழங்கப் பட்டிருக்கிறது. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்களின் அறிக்கைக்கு எதிர் அறிக்கை போல் விவரங்களைச் சொல்லிக் கொண்டேயிருப்பது சரியல்ல. விளக்கம் ஏதேனும் தேவை என்றால், அதைமட்டும்தான் கேட்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அதைத்தான் கேட்க விரும்புகிறேன். தற்போது பொங்கல் போனஸ் என்ற முறையில் ரூ. 132 வழங்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் அவர்கள் இன்னும் வேலையில் இருக்கிறார்கள் என்றுதான் பொருள்படும். ஆனால் திடீரென்று 2 நாட்களுக்கு முன்னால் அவர்களுக்கெல்லாம் "டெர்மினேஷன் ஆர்டர்" அனுப்பப்பட்டிருக்கிறது. அதாவது 20—11—1980 ஆம் தேதியிட்ட இந்த உத்தரவுகள் இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே இது பழி வாங்கும் நோக்கத்தோடுதான் செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரையில்கூட, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களேதான் அங்கே

நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் தீர ஆராய்ந்து பார்த்து, வேலை இழந்த ஊழியர்களுக்கு எப்படியாவது மீண்டும் வேலை வாய்ப்பை வழங்கிட நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பொங்கல் போனஸ் அளிக்கப்பட்டது என்றும், அதுவே அவர்கள் இன்றைக்கும் பணியில் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்றாகும் என்றும் இங்கே பேசினார்கள். பால்வள ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு முன்பாகப் பணியாற்றியதற்காக அவர்களுக்கு அளிக்கப்பட்டதே தவிர, வேலை நிறுத்த காலத்தில் அவர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை என்பதையும், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்பாக அவர்களுக்குச் சேர வேண்டிய பணத்தை, நியாயமாகக் கொடுக்க வேண்டும் என்ற நல் உணர்ச்சியோடு இந்த அரசு அளித்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் மற்றொன்றையும் குறிப்பிட்டேன். இரண்டு நாட்களுக்கு முன்னதாக வேலை நீக்கம் செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அதுவும் 20—11—1980 தேதியிட்டு வழங்கப்பட்டிருக்கிறது. அது முறைதானா? அவர்கள் இது நாள்வரை வேலை நீக்கம் செய்யப்படவில்லை. ஆகவே அவர்களில் சிலருக்காவது வருங்காலத்திலாவது வேலை வாய்ப்பு கொடுக்க அரசு கருணை உள்ளத்தோடு முன்வருமா? அதுபற்றிப் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** 16 மாதங்களாக தொய்வின்றி, தங்கு தடையின்றி புதிய நபர்களால் அது நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, வேலையிலிருந்து நீக்கப்படவில்லை. ஏற்கெனவே நான் அறிக்கையிலே தெரிவித்ததைப்போல, அவர்களாகவே விடுவித்துக் கொண்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**(2) சென்னையிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் கொசுத் தொல்லை காரணமாக பல வியாதிகள் ஏற்பட்டு, மக்களுக்கு மிகுந்த துன்பத்தை விளைவிப்பது குறித்து.**

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்:

"சென்னையில் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சமீபத்தில் கொசுத் தொல்லை மிக அதிகமாக இருப்பதால் பல வியாதிகள் ஏற்பட்டு மக்களுக்கு மிகுந்த துன்பத்தை விளைவிக்கிறது என்பது குறித்து".

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில், பரளி போன்ற கிராமங்களில் சாக்கடை நீர், கழிவுகள் சரியாக அகற்றப்படாததால் கொசு உற்பத்தியாகி யானைக்கால் வியாதி வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மற்றும் விருதுநகரில் சாக்கடை நீரையும், குப்பைகளையும் சரியாக அகற்றாததால், கொசுக்கள் உற்பத்தியாகி வியாதிகள் பரவுகின்றன. இதைத் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான்கு நாட்களுக்கு முன்பாக நான் முகவை மாவட்டத்திற்குச் சென்றிருந்த நேரத்தில், பல்வேறு இடங்களில் நேரிடையாகப் பார்த்து, டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசரை அழைத்து, அதை விளக்கமாகச் சொல்லி, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறேன். ஆகவே குறிப்பிட்ட சில பகுதிகளில் இப்படி நடைபெறுவது தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 263-264 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை சட்ட முன்வடிவின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக பத்திரிகைகளின் சுதந்திரம் நசுக்கப்படுகின்றது என்ற எண்ணத்தை நான் வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும் ஒரு தொழிற்சங்கத் தலைவன். மேலும் ஓர் ஏட்டினை நடத்திக் கொண்டிருப்பவன். ஏடு நடத்துவதில் உள்ள சிக்கல் எனக்குத் தெரியும். அந்த வகையிலே நான் சொல்லுகிறேன், இந்தச் சட்டத் திருத்தம் "தரக் குறைவான செய்திகள்", "கீழ்த்தரமான செய்திகள்" அல்லது "அச்சுறுத்திப் பணம் பறிக்கும் நோக்கத்துடன் செய்தியை அச்சிடுதல்" ஆகியவற்றைத் தடை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "தரக் குறைவு" என்றால், அதற்கு அளவுகோல் என்னவென்று புரியவில்லை. தரக் குறைவு என்றால், எது தரக் குறைவு? சிலருக்கு தரக் குறைவாகப் படுவது சிலருக்கு தரக்குறைவற்றதாகப் படும். கீழ்த்தரமான

---

@ 265-266 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது



செய்தி என்றால், அளவுகோல் என்ன? அச்சுறுத்தும் செய்தி என்றால், அதற்கு அளவுகோல் என்ன? ஆளும் தரப்பில் உள்ள அதிகார வர்க்கத்தினர் ஆங்காங்கே தவறுகளைச் செய்யும்போது, இன்ன அதிகாரி இன்ன தவறு செய்தார் என்று எழுதினால், அந்த அதிகாரிகள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே தவறாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கும் ஒரு சட்டமாக இது இருக்கிறது என்பதற்காக நான் இதை எதிர்க்க விழைகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவிலே, இத்தகைய குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றமாகக் கருதப்பட்டு, ஜாமீனில் வெளியில் விட முடியாத குற்றமாகக் கருதப்படுகிறது. கொலைக் குற்றத்தை விட இது கடுமையான குற்றமாகக் கருதப்படுகிறது. இதை இவ்வளவு மிகக் கடுமையான குற்றமாகக் கருதுவதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை.

பாதிக்கப்படுபவர்கள் அரசுத் தரப்பிலே மட்டுமல்லாமல், எங்களைப் போன்று இருந்தால், இன்னுமொரு பத்திரிகையிலே என்னைப் பற்றி எழுதியிருந்தால், நான் வழக்குத் தொடர்ந்தால், இந்தச் சட்டம் அதன்மீது பாயுமா என்ற விளக்கம் இல்லை. அதிகார வர்க்கத்தினரின் பாதுகாப்பிற்காக மட்டும், இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறதா? ஆளும் கட்சியின் சார்பிலே நடத்துகின்ற ஏடுகளில் எதிர்க் கட்சியினரைச் சாடுகிறார்கள் என்றால், அவர்கள் மீது இந்தச் சட்டம் பாயுமா? தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்களை மற்ற தொழிற் சங்கத்தினர் சாடுகிறபோது, அவர்களைத் தடுக்குமா? அவர்கள் மீது இந்தச் சட்டம் பாயுமா? இதைத் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இளைஞர்களுக்கு ஆபாசமான பொருட்களை விற்றல் என்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆபாசமான பொருட்களை விற்பது தவறுதான். ஆனால் ஆபாசமான பொருள்கள் என்பதற்கு என்ன இலக்கணம்? அதற்கு இதிலே என்ன விளக்கம் தரப்பட்டிருக்கிறது? அதற்கான அளவுகோல் என்ன? இளைஞர்களுக்கு விற்காமல் முதியவர்களுக்கு விற்கலாமா? அப்படி விற்பது தண்டனைக்குரியதல்லவா? இளைஞர் என்றால் எத்தனை வயது? முதியவர் என்றால் எத்தனை வயது? இதற்கெல்லாம் விளக்கம் காண முடியவில்லை. ஆகவே எதிர்த் தரப்பு வாதமே ஏற்படாத வகையிலே, எதிர்த் தரப்பினர்

ஜனநாயக முறைப்படி தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதைத் தடுக்கும் வகையில், ஒடுக்கும் வகையில் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது தேவையில்லாத ஒரு சட்ட முன்வடிவு. ஜனநாயக நாட்டிற்கு ஏற்ற சட்டம் அல்ல. சர்வாதிகார ஆட்சிக்கு இந்த ஆட்சி மாறிக் கொண்டிருக்கிறதோ என்று எண்ணக்கூடிய அளவிற்கு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து, அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வருகின்ற எழுத்துக்களில் நாகரீகம் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தை இந்தச் சட்ட முன்வடிவு கொண்டிருந்தாலும், நடப்பிலே உண்மையிலேயே அது ஒரு தப்பான முறையில் செயல்படக்கூடிய அபாயம் இருக்கிறது. தரக் குறைவான எழுத்துக்கள், பொறுப்பற்ற எழுத்துக்கள், ஆதாரமற்ற செய்திகள் பத்திரிகைகளில் வருவதற்குரிய காரண காரியங்கள், சூழ்நிலைகள் பல இருக்கும்போது, இதை சட்டத்தின் மூலம் மட்டுமே கட்டுப்படுத்தி விடலாம், தண்டனை கொடுக்கலாம் என்று எண்ணுவது சமுதாய வளர்ச்சிப் போக்கினை, சீர்கேடுகளை, குறுகிய கண் கொண்டு பார்ப்பதாக அமையும். நடப்பிலே இந்தச் சட்ட முன்வடிவு ஒரு தரப்பிலே பாயக்கூடிய அபாயம் இருக்கிறது. பல நல்ல சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம் என்றாலும், நோக்கம் நல்லதாக இருந்தபோதிலும், நடப்பிலே சமுதாயத் திற்கு விரோதமாக, அரசியல் ரீதியாக சிலபேரைப் பழி வாங்கக்கூடிய அபாயம் ஏற்படலாம். சில நிர்வாகங்கள், நிறுவனங்கள் அரைகுறையாக உண்மையை வெளியிட்டால், அவர்களுக்கு எச்சரிக்கை தரலாம். இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் கடும் தண்டனை அளிக்க வாய்ப்பு அளிக்கப்பட் டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு தவறு செய்கின்றவர்களைத் தடுப்ப தற்குப் பதிலாக, தப்பைத் திறமையாகச் செய்யும் ஊழலுக்கு இடம் தரக் கூடிய அளவிற்கு ஆபத்தில் முடியும் என்பதால், இந்தச் சட்டத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

**திரு. த. சந்தோஷம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்ன கருத்தை ஆதரித்த போதிலும், அவர் அந்தக் கருத்தின் காரணமாக இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்தார்—நான் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரிக்கிறேன்.





ஆபாசமான லிடரேச்சர் வழங்குவது போன்ற குற்றங்களுக்காக கடுமை யான தண்டனை வழங்க இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக் கிறது. நான் குற்றவியல் வழக்கறிஞராகப் பணியாற்றுவதால், இப்படிப் பட்ட புத்தகங்கள் வெளியிட்டதற்காக நீதிமன்றத்தில் வழக்காடியிருக்கிறேன். அப்படி வழக்காடும்போது, கீழ் நீதி மன்றங்களில் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அபராதம் போட்டு விட்டுவிடுகிறார்கள்.

(முற்பகல் 10-40)

அதுமாதிரி தொழிலில் ஈடுபடுகிறார்கள் அதற்கு மேல், மேல் முறையீடு செய்து அதிலே விடுதலையாகிவிடுகிறார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவிலே உள்ள ஒரு குறைபாட்டைச் சொல்கிறேன். என்னுடைய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு சொல்கிறேன். இந்திய குற்றவியல் சட்டத்திலே 'அப்சீனிட்டி' என்று சொல்லப்படாத வரையிலே, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதன் மூலம் பலன் ஏற்படும் என்று சொல்ல முடியாது. சில புத்தகங்கள் ஆபாசமாக இருக் கின்றன. கீழ்க்கோர்ட்டிலே, நடுவர் மன்றத்திலே, ஆபாசம் என்றார்கள் அதை வைத்துத் தண்டனை கொடுத்தார்கள். ஆனால் உயர்நீதி மன்றத் திலே, அப்சீனிட்டி என்பது இதையெல்லாம் குறிக்காது என்று சொல்லப்படு கிறது. உயர்நீதி மன்றத் தீர்ப்பிலே அப்படிச் சொல்லப்படுகிறது. அவர்கள் கலையின் அடிப்படையிலே வெளியிடப்பட்டது என்கிறார்கள். ஆண்கள், பெண்கள் நிர்வாணப் படங்களைப் போடுகிறார்கள் அது பார்ப்பவர்களைக் கெடுப்பதாக இருக்கின்றது. அவைகள் 'அப்சீன்' ஆக இருக்கின்றன என்றும் தீர்ப்புகள் எவ்வளவோ வந்திருக்கின்றன. நடுவர் மன்றங்களிலே தீர்ப்பு வருகிறது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேல் முறையீட் டிலே விடுதலை வாங்கிவிடுகிறார்கள். நான் அப்படி வாங்கிக் கொடுத்திருக் கிறேன். எனக்கும் மனச்சாட்சி இருக்கிறது. அதை நான் ஒரு வழக் கறிஞன் என்ற நிலைமையிலே, கடமை என்ற அளவில் செய்தது. இதற்கு ஒரே வழி 'அப்சீனிடி' என்பதைத் தடுக்க வேண்டுமென்றால், இங்கே அதற்குத் தகுந்த 'டெபனிஷன்' கொடுக்க வேண்டும். உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை மொத்தமாகப் பார்த்தால், எதுவுமே 'அப்சீன்' இல்லை என்று சொல்கிற நிலைமைதான் இருக்கிறது என்று சொல்ல எனக்கு வெட்கமாக இருக்கிறது. அப்படிப்பட்ட அசிங்கமான புத்தகங்களைக் கூட "இதை 'அப்சீன்' என்று கருத முடியாது, காம சாஸ்திரம், இதனால் அறிவு வளரும்"

என்று உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறார். அப்படிப்பட்ட தீர்ப்புகளையெல்லாம் வைத்துக்கொண்டு, 'அப்சீனிட்டி' என்ற வார்த்தைக்கு விளக்கம் கொடுக்காமல், இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது சரியல்ல. நோக்கம் நல்ல நோக்கம்தான். அதற்கு தண்டனையைக் கடுமையாக்க வேண்டியதுதான். ஆனால் இதை மாத்திரம் செய்தால், பலன் இருக்காது. இந்தச் சட்ட முன்வடிவில், 'அப்சீனிட்டி' என்ற பதத்திற்கு ஒரு விளக்கத்தையும் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக் கொண்டு அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு, இதனுடைய வாசகங்கள் எதுவாக இருந்தபோதிலும், இது எதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற நோக்கத்தைப் பார்க்கிற போது, அந்த நோக்கத்திற்காகவே இந்தச் சட்ட முன்வடிவை எதிர்க்க வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். இதிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"It has been brought to the notice of the Government that, of late, publication in newspapers, periodicals, circulars, pictures, containing grossly indecent or scurrilous matters which is an offence under section 292-A of the Indian Penal Code (Central Act XLV of 1860) and which affect greatly the morale of public servants in the discharge of their duties, is on the increase."

இது எதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றால், அரசு ஊழியர்கள் தங்களுடைய பணிகளை ஆற்றுகின்றபோது, இதுபோன்ற எழுத்துக்கள் 'ஸ்கரிலஸ் அண்ட் இன்டீசன்ட் ரைட்டிங்' அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் சரிவரச் செய்யவிடாமல் தடுக்கிறது என்ற காரணத்திற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள். தலைவர் அவர்களே, தங்களுக்கே தெரியும். காலையிலே நடந்த ஒத்திவைப்புத் தீர்மானம்பற்றி. அங்கே அரசு ஊழியர் களின் ஒரு பகுதியான காவல் துறை பொறுப்பு ஏற்று இருப்பவர்கள் முறை யாக நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதுதான் இந்த அவையிலே சாட்டப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுக்கள். இது சட்டமன்றம் செயல் படாத நேரத்திலே பத்திரிகையிலே வந்தாக வேண்டும். பத்திரிகைகளிலே வரவில்லையென்றால், இதுபோன்ற சம்பவங்களுக்கு யார் பாதுகாப்பு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி வருகிறபோது, அது அதிகாரிகளுடைய உணர்வுகளைப் புண்படுத்திவிடும், அவர்கள் முறையாகச்





செயல்படாமல் செய்துவிடும் என்ற அடிப்படையிலே இந்தச் சட்டம் குறுக்கே பாயுமானால், எந்தப் பத்திரிகை எந்தச் செய்தியை வெளியிடும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். எந்த அதிகாரிகள் காப்பாற்றுகிறார்கள்? எந்த அதிகாரிகளைப்பற்றி, இதுபோன்று 'ஸ்க்ரில்லஸ ரைட்டிங்' வருகிறது? எல்லா அதிகாரிகளையும் நான் சொல்லவில்லை. எல்லா அதிகாரிகளும் பத்திரிகைகளின் விமர்சனத்திற்கு ஆளாவதில்லை. எந்தக் கட்சி ஆளும் கட்சியாக மாறுகிறது என்று காத்திருந்து ஆட்சி அதிகாரியாக இல்லாமல் கட்சிக்குப் பியூன்களாக இருந்து யார் நடந்துகொள்ள முயல்கிறார்களோ அப்படிப்பட்ட அதிகாரிகள் விமர்சனத்திற்கு ஆளாகிறார்கள். அதற்காக நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை மட்டும் குற்றம் சாட்ட வில்லை. அதற்கு நான் தயாராக இல்லை. அதற்கு என்று ஒரு ஜாதி இருக் கிறது. அரசியல்வாதிகளிலே இருப்பதுபோல அரசு ஊழியர்களிலும் அப்படி ஒரு ஜாதி இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் எதையும் செய்வார்கள். உங்க ளுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடையாறிலே இரண்டு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அதில் ஒன்று கொலை. அதைப்பற்றி பத்திரிகைக்கு யார் செய்தி கொடுத்தது? அரசியல் வாதிகள் இதிலே கலந் திருந்தார்கள், நீதிபதிகள் கலந்திருக்கிறார்கள் என்ற செய்தியை யார் கொடுத்தது? அதற்குப் பிறகு இன்றளவுக்கும் வழக்கு வரவில்லை என்றால், இந்த அதிகாரிகள் யாரை மிரட்டுகிறார்கள்? சட்டத்தை வைத்துக்கொண்டு பொது வாழ்க்கையிலே இருப்பவர்களையா? இப்படிப்பட்டவர்களுக்கு எதிராக ஏதாவது செய்தி தருவது என்றால் அல்லது அதை மறுப்பது என்றால், அதுவும் 'ஸ்கரில்லஸ் ரைட்டிங்' என்றுதான் வரும். அப்படிப் பட்ட அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு தருவதற்கு இந்த அரசு சட்டம் கொண்டு வருகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கே நடைபெற்றது. விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் என்னுடைய கார் மறிக்கப்பட்டது. அதனுடைய விவரத்திற் குள்ளே நான் போக விரும்பவில்லை. இன்றளவுக்கும் வழக்கு நீதிமன்றத் திற்கு வரவில்லை. அந்த விவரங்களுக்கும் நான் போக விரும்பவில்லை. ஆனால் அதிகாரிகள் தங்களுக்குள் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பத்திரிகைகளை மிரட்டி ஒரு செய்தியைப் போடச் சொல்லவில்லையா? மாற்றி மாற்றி போட்டிருக்கிறார்களே. முன்னுக்குப் பின் முரணாகப் போட் டிருக்கிறார்களே. முந்தைய நாள் ஒரு செய்தி. அடுத்த நாள் இன்னொரு செய்தி. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். அதிகாரத்தினுடைய உச்ச தொம்பிலே இருக்கக்கூடியவர்கள் அதைச்

செய்தார்கள். அமைச்சர் அவர்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளச் சொன்னால், இந்தச் சபை முடிந்த உடனே அதுபற்றிய தகவலை முழுமையாக தரத் தயாராக இருக்கிறேன். அதற்குப் பிறகு என்ன நடக்கிறது? எப்படிப் பட்ட அதிகாரிகள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறதோ அந்த கடலூர் வழக்குமன்ற நீதிபதி (Magistrate). 'கன்பெஷன் ஸ்டேட்மெண்ட்' வாங்குகிறார். சட்டப்படி அப்படி 'கன்பெஷன் ஸ்டேட்மெண்ட்' வாங்கக்கூடாது. அதையும் மீறி நான் சம்பந்தப்பட்ட, விக்கிரவாண்டி சம்பவத்திலே, ஒரு 'கன்பெஷன் ஸ்டேட்மெண்ட்' வாங்கினார்கள். அது முறைகேடானது. அதைப்பற்றி விவரமாகப் பேச முடியும். வழக்கை விசாரிக்கின்ற நீதிபதியே சட்டத்திற்கு விரோதமாக ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அந்த 'கன்பெஷன் ஸ்டேட் மெண்ட்' ரகசியமானது. அது வெளியே தெரிய முடியாது. ஆனால் அது வெளியே வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிலிருந்து, எஸ்.பி.யிலிருந்து அனைவருக்கும் தெரிகிறது. அன்றைக்கே அதைப் பத்திரிகையிலே போட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். பத்திரிகையிலே அன்றைக்கே வருகிறது. அதற்குப் பிறகு எனக்குத் தகவல் தெரிகிறது. பிறகு, அந்தப் பத்திரிகைகளை அந்த அதிகாரிகளே வாங்கி வெளியே மக்களுக்குப் போகாமல் கொளுத்தினார்கள். எங்களுடைய மாவட்டத்திலே கொளுத்திவிடுகிறார்கள். ஆனால் இங்கே சென்னையில் வெளியே வந்துவிடுகிறது. இதற்காக யார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இதிலே காவல் துறை சம்பந்தம் இல்லை என்றால், அதிலே ஆட்சித் தலைவர் சம்பந்தமில்லை என்றால், இப்படி செய்தி வெளியிட்ட அந்தப் பத்திரிகைகள் மீது எடுத்த நடவடிக்கை என்ன? அரசாங்க சார்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மற்ற வர்கள் மீது அவதூறு என்றால் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லையா? இப்படிச் செய்திகளை வெளியிடுகின்ற நிலைமை துணிவு எப்படி ஏற்பட்டது? அது 'ஸ்கரிலஸ் ரைட்டிங்' அல்லவா? சிலருடைய மன உணர்வுகளைப் புண்படுத்த அல்லது மிரட்ட, அவர்களை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஆளாக்கிட அவர்கள் தைரியமாக செயல்பட முடியாத நிலை யைத் தடுக்க இப்படித்தான் செயல்படுவோம் என்பதுதான் சரியா? இன்றைக்கு பல்வேறு அதிகாரிகள் இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட்டிருப்ப தால்தான், இந்த நிலை ஏற்படுகிறது. ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. கடலூரில் ஒரு சம்பவம் ஏற்படுகிறது. முதலமைச்சர் அவர்களுக்குப் பாது காப்பாகச் சென்ற ஜீப் கவிழ்கிறது. அந்த ஜீப்பிலே இருக்கின்ற காவல்





துறையினர் அடிபடுகிறார்கள். அதிலே ஒரு பெண்மணி இருந்தார் என்ற செய்தி வருகிறது. நான் அதன் விவரங்களுக்குள்ளே நுழையவில்லை. அதன் உள்ளே போக விரும்பவில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை.)

(முற்பகல் 10-50)

ஆனால் எப்படி அந்தப் பெண்மணி அந்த ஜீப்பில் போனார் என்று பத்திரிகையில் எழுதாமல் இருந்தால், இனிமேல் ஒரு பெண்மணி போக மாட்டார், பல பெண்மணிகள் போவார்கள். முதலமைச்சரின் பாதுகாப் புக்குச் செல்லும் ஜீப்பிலே, இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று சொல்லும்போது, அதை எப்படி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும்? முடிந்தால் கடிதம் எழுதுகிறோம், அமைச்சர் களுக்குத் தெரிவிக்கிறோம். முடியாத காலத்தில் . . . பத்திரிகைகள்தான் அதைத் தெரிவிக்க வேண்டும். இன்றையதினம் முறை தவறி நடக்கும் அதிகாரிகள் அதிகமாக இருக்கும் நிலையில், அவர்களிடம் இந்த அதிகாரத் தைக் கொடுப்பதால், அது ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிப்பதாக இராதா? இந்த அரசுக்கு அவமானம் என்றால், எங்களுக்கும் அவமானம் தான்; இந்த அரசுக்குச் சங்கடம் என்றால், எங்களுக்கும் சங்கடம்தான், ஆனால் அதனைத் தெரிவிக்க இதுவா வழி?

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே நக்சல்பாரிகளைப் பற்றி, திருப் புத்தூர் சம்பவங்கள்பற்றி அகில இந்தியாவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 2 பக்கங்கள் ஒரு கட்டுரையே வந்தது. அதிலே, சிற்சில சம்பவங்களிலே எனக்கு மாறுபாடு இருக்கலாம். ஆனால் அடிப்படையான சம்பவங்களிலே மாறுபாடு கிடையாது. அங்கு என்ன நடைபெற்றது? அந்தப் பகுதிக்குச் சென்ற பத்திரிகை நிருபர்கள் தாக்கப்பட்டார்கள். அரசின் கவனத்திற்கு அது வந்தது. அது குறித்து காவல் துறை எடுத்த நடவடிக்கை என்ன? நடவடிக்கை எடுக்கவில்லை என்னும்போது, பத்திரிகையிலே ஊரிலே நடை பெறுகிற சம்பவங்களே வரக்கூடாதென்ற எண்ணத்தோடு செயல்படும் அதிகாரிகளை வைத்துக்கொண்டுள்ளபோது, இதுபோன்ற அதிகாரங்களை அவர்களிடம் கொடுத்தால், என்ன நடக்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நக்சல்பாரிகள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்க

ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருக்கு, ஆளுங் கட்சிக்கு ஆதரவானவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இது குறித்து அரசுக்கு எழுதுகிறேன், ஐ.ஜி.க்கு எழுதுகிறேன் எனக்கு பதில்கூட வரவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு சம்பவத்தின் இரண்டு பக்கங்களையும் ஆராய வேண்டாமா ? ஒரு பக்கம் அரசு நடத்தும் கட்சியைச் சார்ந்தவர்களிடமிருந்து, அவர்களுடைய ஆதாவாளர்களிடமிருந்து வருகிறது. இன்னொரு பக்கம்—மறு பக்கம் பார்க்க வேண்டாமா? மறு பக்கத்தைப் பார்க்கவில்லை என்றால், ஜனநாயகம் நிலைப்படுமா? இன்னொன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு வேறு வழி இல்லையா? வகை இல்லையா? எதற்காக இப்படி ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'எதிரொலி' பத்திரிகையில் சம்பவங்கள் வந்திருக்கின்றன, செய்திகள் வந்திருக்கின்றன, நியாயமா என்று முதலமைச்சரவர்கள் கேட்டபோது, எனக்குக்கூட சங்கடமாக இருந்தது. நான் குறுக்கிடாமல் உட்கார்ந்துகொண்டிருந்தேன். எவ்வளவெல்லாம் எங்களைப்பற்றி ஆளுங் கட்சிக்கு ஆதரவளிக்கும் பத்திரிகைகள், ஆளுங் கட்சிப் பத்திரிகைகள் எழுதின. நாங்கள் தாங்கிக்கொள்ளவில்லையா ? தாங்கிக் கொள்வாமலா இருந்தோம் ? வேக வேகமாக ஒரு பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுத்தீர்கள். வாதத்திற்கு ஒப்புக்கொள்கிறேன். எடுத்தது நியாயம். அதிலேயுள்ள சட்ட நிலைமைகள் என்ன என்பது வேறு. அதை வாதத்திற்காக ஒப்புக்கொள்ளத் தயார். அதே நேரத்திலே ஆளும் கட்சி தரப்பிலே நடத்தப்படும் பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அப்சினிட்டிக்காக பல பத்திரிகைகளில் வருவதுபோல, ஆளுங் கட்சி தொடர்புள்ள பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? ஸ்கரில்லைட்டிங்-க்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? எவ்வளவு கேவலமாக எழுதியிருக்கிறார்கள் ? நீங்கள் படித்தது இல்லையா ? அமைச்சரவர்கள் பார்த்தது இல்லையா ? ஆனால் இத்தனைக்கும் பிறகு காவல் துறையிடம் இந்த அதிகாரத்தைத் தந்தால், இப்படிப்பட்ட அதிகாரிகளிடம் இந்த அதிகாரத்தைத் தந்தால், அவர்கள் தங்கள் விருப்பப்படி நடவடிக்கை எடுக்கத் துணையாக அமையும். அதற்கும் மேலாகச் சொல்ல விரும்புகிறேன், யாரெல்லாம் தங்களுடைய எண்ணங்களைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுகிறார்களோ, அந்த அரசியல் வாதிகளை, அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களை, பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்களை வேண்டுமென்றே அவமானப்படுத்துவதற்காக அதிகாரிகள்



இந்த அதிகாரத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு செயல்படுத்தும் சட்டமாக இது அமையும். அதைப்போல் தங்களுக்கு விரோதமான பத்திரிகைகள் இருக்கக்கூடாது என்ற அளவிற்கு இதன்மூலம் நடவடிக்கைகள் வந்துவிடும். கம்யூனிச நாடுகளிலேகூட பத்திரிகைச் சுதந்திரம்—இருக்கிற நிலைமைகள் வெளியே தெரியும் அளவிற்கு—செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அங்கேயெல்லாம் இல்லாத அளவிற்கு ஜனநாயகத்தின் பெயரால் இந்தச் சட்டத் திருத்தம் மூலமாக, ஜனநாயகத்தினுடைய மிகப் பெரிய காவலாளியாக விளங்கும் பத்திரிகைச் சுதந்திரத்தை அரசு நசுக்குகிறது ; எப்படி சர்வாதிகார உணர்வோடு செயல்படுத்துகிறோம் என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்படுவதைக் காண்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டம் கொண்டு வருகிறபோது, அவருடைய உள்நோக்கத்தைக் குறை சொல்லவில்லை; விமர்சிக்கத் தயாராக இல்லை. என்னுடைய நோக்கமும் அதுவல்ல. உள் நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறார் என்று குற்றம் சொல்ல விரும்பவில்லை. இந்த நிலைமைகளைப் பரிசீலிக்க வேண்டும். இப்படிச் செயல்படுவதிலிருந்து எப்படி மற்றவர்களைக் காக்கப் போகிறார்கள்? பத்திரிகைகளைக் காக்கப் போகிறார்கள் ? சம்பவம் நடைபெறுகிறபோது, சம்பவத்தின் பல்வேறு பகுதிகள் அரசுக்கு வந்தாக வேண்டும். சில சூழ்நிலைகள் தான் அரசுக்கு வரும். மற்றவை அரசுக்கு வராது. அதை யார் எழுதுவது? நேற்று ஒரு விளையாட்டு அரங்கில் பெரும் கலவரம் நடக்கிறது. கிரிக்கெட் போட்டியிலே. அதுபற்றிப் பத்திரிகையிலே எழுதுகிற நடவடிக்கை இருந்தாலன்றி, எப்படி அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் ? இனிமேலாவது எச்சரிக்கையாக இருப்பார்கள். இது வேண்டாமா? அப்படி எழுதுகின்றபோது, ஏன் அங்கே காவல் துறை இன்னமும் சிறப்பாகச் செயல்பட்டிருக்கக்கூடாது; இதைத் தவிர்த்திருக்கக்கூடாதா, தவிர்த்திருக்க முடியுமே. இப்படியெல்லாம் சம்பவங்கள் நடந்திருக்கிறதா என்றால், என்னவாவது? அதையெல்லாம் எழுதாமல் விட்டால் என்னவாவது? வண்ணாரப் பேட்டையில் எப்போதோ பிடித்தார்கள் பாமாலின் ஆயில்: என்ன நடைபெற்றது ? பத்திரிகையில் எழுதித்தான் எங்களுக்குச் செய்தி தெரிகிறது. பணம் எல்லாவற்றையும் பாதுகாக்கும். வெளியே வாாமல் தடுக்கும். மிகுந்த காலதாமதத்திற்குப் பிறகுதான் அரசாங்கம் அதுபற்றிய விவரங்களை இங்கே தருகிறது. இப்படி பாமாலின் ஆயில் எல்லாம் தப்பித்துக் கொண்டு போகாமலிருக்க பத்திரிகை சுதந்திரம் வேண்டாமா? ஊரிலே பல பேர்கள் கலப்படம் செய்கிறார்கள். இது, எப்படி நடைபெறுகிறது, எப்படிக்

கண்டுபிடித்தார்கள் என்ற தகவல்களும் பத்திரிகையிலேதான் வருகின்றன. இல்லையென்றால் அரசாங்கமே பத்திரிகை நடத்தட்டும். ஊரிலே நடப்பதை வெளியே சொல்லுங்கள். உங்களுக்கு எதிரானதைச் சொல்லுங்கள். நீங்கள் சொல்வதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், ஊரில் கலப்படம்தான் ஓங்கும். இதைத் தடுப்பது எப்படி? வெறும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, இது பல பேர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற சட்டமாக அமையும். சமூக விரோத சக்திகளை அடக்கும் சட்டம் என்பதற்குப் பதிலாக சமூக விரோத சக்திகளாக அதிகாரத்திலே பணத்தோடு விளையாடிக் கொண்டிருக்கிறவர்களுக்குப் பாதுகாப்பான சட்டமாக அமைகிறதென்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். ஒருவேளை இது அவசரச் சட்டமாக வந்த காரணத்தாலேயே, இதற்கான திருத்தங்களை ஏற்க முடியாதென்ற சிக்கலான, நெருக்கடியான நிலையில் அமைச்சர் இருந்தால், அருள்கூர்ந்து செலக்ட் கமிட்டிக்கு இதை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவு இப்போதைக்குத் தேவை யற்றது என்பதோடு மட்டுமல்ல, ஜனநாயக உணர்வுகளுக்கு, மரபுகளுக்கு, தேவைகளுக்கு எதிரானது, பத்திரிகைகளை நசுக்குகின்ற செயல் ஒன்று. அரசாங்கமே, முழுமையான தகவல்கள் இல்லாத நிலையில் தவறான நடவடிக்கைகளின் ஆலாத்தி எடுக்க ஆளாகப் போகின்ற நிலையிலே இருந்து தங்களைத் தடுத்துக்கொள்ள இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் பின் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

(முற்பகல் 11-00)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை திருத்த சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் என்னென்னவோ காரணங்களைச் சொன்னார்கள். அந்தக் காரணங்களாலேயேதான் இந்தச் சட்ட முன்வடிவு இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. "எங்களைப் பற்றி இதில் சொல்லியுள்ளதா இல்லையா?" என்று வேகமாக இங்கு கேட்டார்கள். அந்த உணர்வோடுதான் நானும் சொல்கிறேன். பத்திரிகைகளால் பலரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எல்லோருக்கும் நல்லது என்ற முறையில்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.





கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நாட்டு மக்களுடைய நெஞ்சத்தில் இருந்தவர்கள். அதுபோல் நாட்டு மக்கள் நெஞ்சத்தில் இருந்தவர்தான் தியாகராஜ பாகவதர். இப்படிப்பட்டவர்களைப் பற்றியெல்லாம் எப்படி எப்படி எல்லாம் எழுதினார்கள், எப்படி எல்லாம் அவர்களுடைய மனது புண்படுத்தப்பட்டது என்பதெல்லாம் அனைவருக்கும் தெரியும். ஒரு இந்துநேசனால் எப்படி மக்களுடைய உள்ளங்கள் எல்லாம் நொந்தன. இப்போது அதுபோல் புதுப் புது இந்துநேசன்கள் வந்து மக்கள் உள்ளங்களை நோக வைக்காமல் இருப்பதற்குத்தான், மக்களைப் பாதுகாக்கத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. நிருபர்கள் எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்கிற நிலைமையை மாற்றி, பத்திரிகை உரிமையாளர்களுக்கு ஒரு பாதுகாப்பாக இருக்க, உறுதுணையாக இருக்க இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** நிர்வாகிகளுக்கு அல்லது உரிமையாளர்களுக்கு துணைபுரிய இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார். பத்திரிகைகளில் ரிப்போர்ட்டர்கள் கொடுப்பது எல்லாம் அப்படியே வருவதில்லை. அவர்கள் அப்படி எழுதவும் முடியாது ரிப்போர்ட்டர்கள் கொடுப்பது எடிட்டோரியலுக்குப் போகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கண்ணோட்டத்தில் இதைக் கொண்டு வர வேண்டாம். நிருபர்கள் எதை வேண்டுமானாலும் எழுத முடியாது. பரிசீலனைக்குப் பிறகு தான் பத்திரிகைகளில் செய்தி வருகிறது. பத்திரிகைகளை நடத்துபவர்கள் ரிப்போர்ட்டர்கள் அல்ல.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** எந்தப் பத்திரிகையை மனதில் வைத்து உறுப்பினர் சொல்கிறார்?

**திரு. க. இராமமூர்த்தி:** உறுப்பினர் அவர்கள் எதை மனதிலே கொண்டு சொல்கிறார்களோ அவற்றுக்கு எல்லாம் இது பொருந்தும். (சிரிப்பு)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "என்று தெரிய வருகிறது, என்று சொல்லப்படுகிறது" என்றெல்லாம் செய்திகளைப் போட்டு தப்பித்துக்கொள்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதே சமயத்தில் துணை ஆசிரியர்களையும் பத்திரிகை அதிபர்களையும் ஆபத்துக்குத் தள்ளுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்பது நல்லதல்ல. அவர்கள் 4 அடி பாய்ந்தால் இவர்கள் 8 அடி பாய்வதும், கேள்வி பதில் என்று

சொல்லி பல்வேறு கட்டங்களில் போய், கடைசியில் அதையும் தாண்டிப் போய் எங்கே போய் நிற்பார்களோ என்கிற எண்ணத்தில், அவர்களுடைய நன்மையையும் கருதி இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அரசியல் வாதிகளைக் கேவலப்படுத்துகின்ற ஒரு கட்டத்திற்கு இந்தப் போக்கு வந்திருக்கிறது. ஒரு அரசியல் கட்சி என்றால், அதன் தலைவருக்காகத் தியாகம் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள். உயிரையே தருவதற்கும் தயாராகத் தொண்டர்கள் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட தலைவர்களை மிகவும் தாக்குறைவாக, நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் கேவலப்படுத்தி எழுதுவது நல்லதுதானா ? இப்படியே போனால், ஒரு கலவரம் வந்தால், பத்திரிகையாளர்களை யார் காப்பாற்ற முடியும்? அந்த வகையில் அவர்களின் பாதுகாப்பு கருதி இது கொண்டுவரப்பட்டிருப்பதால், இதை நான் பாராட்டுகிறேன். ரவீந்திரநாத்தாகூர் ஒன்றைக் குறிப்பிட்டார். ' அச்சிலே வருவதை எல்லாம் உண்மை என்று இளமைக்காலத்திலே நம்பிக்கொண்டிருந்தேன், வயதான பிறகு அச்சிலே எதுவும் வரும் என்று ஏற்றுக்கொண்டேன்" என்று சொன்னார்கள். அதுபோல நாட்டு மக்கள், குறிப்பாக பாமர மக்கள் அச்சிலே வருவதை ஏற்றுக்கொண்டு அதிலே உண்மை இருக்கிறது என்று கருதுகிறார்கள். " அச்சிலே எதுவும் வரும்" என்று தெரிந்து கொண்டால், அதற்குரிய அறிவு வளர்ந்துவிட்டால், அது உள்ளத்திலே தங்கிவிட்டால் பிரச்சினையே இல்லை. அமெரிக்காவில் எதையும் எழுதுகிறார்கள். ஆபத்து இல்லை. லண்டன் தெருவிலே ஆபாசம் விற்கப்படுகிறது. அதனால் ஆபத்து இல்லை. ஆனால் இங்கே பாமர மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசிடம் இருப்பதால், இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் செய்திகளைப் போட இது தடையாக இருக்குமோ என்று சிலர் அஞ்சுகிறார்கள். போலீசார் கைது செய்வார்கள் என்று அச்சப்படுகிறார்கள். நாட்டிலே குற்றம் நடைபெற்றால், தாராளமாக எழுத வாய்ப்பு இருக்கிறது. திருட்டைப் பற்றி எழுதட்டும். கற்பழிப்பு சம்பவத்தைப்பற்றி எழுதட்டும். ஆனால் அவதூறாக, அதிகாரிகளை அச்சுறுத்தும் வகையில் செய்திகளை எழுதுவது நல்லதல்ல. வசைவாளர்களை விட்டு வைத்திருக்கிறார்களே என்று அண்ணாவைக் கேட்டார்கள். அதற்கு அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "ஒருவர் என்னை இடது கால் சரியில்லை என்று சொன்னால், அதற்கு ஆதாரமாக இதோ என்னுடைய இடது கால் என்று சொன்னால், உடனே இல்லை



யில்லை, வலது கால் சரியில்லை என்று சொல்பவர்களைக் கேட்கிறேன், காலைக் காட்டவா நான் கட்சி வைத்திருக்கிறேன்?" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதிகாரிகள் தங்களுடைய எண்ணங்களைச் சொல்வதற்கு எங்கே மேடை இருக்கிறது? சட்டத்திற்கு மாறாக யாராவது செயல்படுவார்களேயானால், நிச்சயம் அவர்களுக்குப் பாதுகாப்புக்கான வசதியும் வாய்ப்பும் இருக்கிறது. ஜனநாயகமும், சுதந்திரமும் எதையும் செய்ய அல்ல. கட்டுப்பாடான ஜனநாயகமும், சுதந்திரமும் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மரியாதையைத் தேடித் தரும் என்ற அடிப்படையில், இதை வரவேற்கிறேன். அறிவு கூட காமத்தை வளர்க்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். காமம் அறிவை வளர்க்குமே தவிர, வேண்டிய அறிவை வளர்க்காது என்று தெரிவித்து, அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை குற்றவியல நடைமுறை விதிக் கோவை திருத்த சட்ட முன்வடிவிலே காணக்கூடிய சில அச்சம் மிகுந்த அம்சங்களைப்பற்றி நான் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதன் மூலம் ஒரு நல்ல சட்ட முன்வடிவைக் கொண்டுவர அவர்களுக்கு உதவி செய்தவனாவேன் என்கிற முறையில் இதைக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு ஜனநாயகத்தில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு அபாயகரமான நிலைமையை என்னுடைய பொது வாழ்வை அடிப்படையாக வைத்து இந்த அவைக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், சில கட்டுப்பாடுகளை உருவாக்குவது என்பது நல்ல நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட முயற்சி என்று அரசு கூறுகிறது. ஆனால் நடைமுறையைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு சட்டத்தை அமுல்படுத்துகின்ற 'எக்ஸிகியூட்டிவ் அதாரிட்டீஸ்' எவ்வாறு சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதையும் நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிகாரத்தில் இருக்கக்கூடியவர்கள் செய்யும் தவறுகளை எதிர்த்து பத்திரிகைகளில் எழுதினால் அல்லது வெளியீடுகள் வெளிட்டால் அவர்களை எந்தவித காரணமும் சொல்லாமல் போலீசார் கைது செய்யக் கூடிய அளவுக்கு ஒரு அம்சம் இந்தச் சட்டத்திலே இருக்கிறது. அதே சமயத்தில் அவர்கள் ஜாமீனில் வர முடியாத ஒரு நிலைமையும் இருக்கிறது.

[திரு. செ. முத்துசாமி] [1982 மார்ச் 1

இப்படி ஒரு அம்சம் இருப்பது எங்கே சென்று முடியும் என்று தொழிற் சங்கம் என்ற முறையில், ஆசிரியர் சங்கம் வைத்துக்கொண்டிருக்கிறவன் என்கிற முறையில், என்னுடைய அச்சத்தை வெளியிட விரும்புகிறேன். தவறு செய்கின்றவர்களைச் சுட்டிக்காட்டி எழுதினால், அப்படிப்பட்டவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்று காவல் துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. நானே ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் இந்த நாட்டிலே நடக்கக்கூடிய சில அநியாயங்களை வெளிக் கொணர முயற்சிக்கிறேன். அப்படி நான் பிரச்சினைகளை வெளியிடும்போது, அதிகாரிகள் திடீரென்று தங்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்பு என்கிற பெயரில் "ஒரு ரிப்போர்ட்"ஐக் கொடுத்து கைது செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், நாட்டிலே நடக்கக்கூடிய அநியாயங்களை பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவன், தொடர்பு வைத்திருப்பவன் என்கிற முறையில் எப்படித் தடுக்க முடியும்? இந்த நாட்டிலே நடக்கக்கூடிய அநியாயங்களை நாட்டு மக்களுக்குச் சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும்? இந்தமாதிரி அம்சங்களில்தான் இந்திய அரசியல் சட்டம் பத்திரிகைகளுக்கு ஏற்கெனவே சில சலுகைகளை வழங்கியிருக்கிறது. பேப்பர்களைக் கொடுப்பதுடன் போஸ்டேஜ் கட்டணத்திலும் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. இப்படி உரிமைகள் வழங்கப்பட்டிருக்கும் நிலையில் திடீரென்று சாதாரண போலீசாருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்திருப்பது சரியா? ஒரு கோர்ட்டுக்குச் சென்று ஜாமீனில் கூட வர முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதிலே என்ன குற்றம் இருக்க முடியும்? அவதூறாக எழுதினால் அவர்கள் மீது வழக்குப் போட 'புரவிஷன்' வைத்திருக்கிறார்கள். அப்படியானால் எங்களைப்போல சங்கங்களை வைத்து நடத்துகிறவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? எங்களுக்கு ஆபத்து வராது என்று சொல்லக் கூடிய உத்தரவாதம் ஏதாவது இதிலே இருக்கிறதா? இதை அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும்.

இரண்டாவதாக, அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். இந்த நிர்வாக இயந்திரம் என்பது பல லட்சக்கணக்கான ஊழியர்களை வைத்து நடத்தக்கூடியது. எல்லாருமே உத்தமபுத்திரர்களாகப் பயிற்சி பெற்று வரக்கூடியவர்கள் அல்ல. சாமியார்களாகப்



1982 மார்ச் 1] (திரு. செ. முத்துசாமி)

பயிற்சி பெற்று வரக்கூடியவர்கள் கூட வாழ்க்கையில் தவறி விட்டதாக பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளதை நாம் அண்மையில் பார்த்திருக்கிறோம். அப்படி ஒன்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் வருவதில்லை. பிழைப்புக்காக உத்தியோகத்தைத் தேடி வரக்கூடியவர்கள் தவறு செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. "எல்லோரும் தப்பு செய்கிறார்கள். நாமும் தப்பு செய்தால் என்ன." என்கிற எண்ணம் எழாமல் இருக்க முடியாது. நாட்டிலே, சமுதாயத்திலுள்ள அமைப்பினுடைய அடிப்படைச் சட்டத்திலுள்ள கோளாறுகளிலுள்ள உண்மை நிலைமைகளைப் பிரத்தியட்ச உணர்வோடு நான் சொல்கிறேன். அது தவறு என்று யாரும் இன்றையதினம் சொல்ல முடியாது. அதுபோல் அப்படி இல்லையென்றும் யாரும் சொல்ல முடியாது.

(முற்பகல் 11-10)

அப்படி இருக்கும் சூழ்நிலையிலே, மனிதர்களை வைத்து, அந்த மனிதர்களிலே பலஹீனமானவர்களை வைத்து, கீழ் மட்டத்திலேயிருப்பவர்களை வைத்து இந்த அரசு இச்சட்டத்தை அமுல் நடத்தும்போது அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு எந்த நிலையிலே சிலர் மீது நடவடிக்கை எடுத்து மிரட்டுவார்கள், அதற்கு இது எந்த அளவுக்கு வழி வகுக்கும் என்பதையும் பார்க்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட பேசும்போது மிகவும் பெருந்தன்மையோடு, 'நாங்கள் ஆட்சி இயந்திரத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால், அதை அமுல் படுத்தியிருக்கிறோமா? பிரயோகித்திருக்கிறோமோ?' என்று சொன்னார்கள் இந்த அரசு பிரயோகித்திருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. ஆனால் போலீஸ் அதிகாரிகளிடம் பிரயோகிக்க அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, அவர்கள்பிரயோகிப்பதை எப்படித் தடுக்கப் போகிறார்கள் இதுதான் இப்போது இருக்கும் நிலை. பெரிய பத்திரிகையிலேயிருந்து, சாதாரண பத்திரிகை வரை நிர்வாகத்திலே இருக்கும் கோளாறுகளை எடுத்துக்காட்டும் முயற்சிகளுக்குப் போடப்பட்டிருக்கும் ஒரு பெரிய சவாலாகவும், அந்த முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி, அச்சுறுத்தி, நிர்வாகத்திலே இருக்கும் கோளாறுகளை வெளியிட முடியாமல் இருக்கும் சூழ்நிலையை உருவாக்கும் நிலைமை இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாகக் கொண்டுவரப் படுகிறது. அதற்கான வழிவகைகள் இந்தச் சட்டத்தின் பிரிவிலே இருக்கின்றன. இதனைக் கொண்டு வருவதற்கான நியாயங்களை இந்த அரசு எந்த வகையிலே சொன்னாலும், அரசு சொல்லும் இந்த நிலைமைகளுக்கு அப்பாற்பட்டு காரியங்கள் நடக்காது என்பதற்கு என்ன பாதுகாப்பு?

(திரு. செ. முத்துசாமி) [1982 மார்ச் 1

விசாரணையின்றி, திடீரென்று பிடித்து உள்ளே வைத்தால் இந்தச் சட்ட முன்வடிவின் தன்மை எங்கே போய் முடியும்? அப்படி என்ன கொலை பாதகம் செய்கிறார்கள்? இந்த நாட்டிலே கொலை பாதகம் செய்பவனேகூட ஜாமீனிலே வெளியே வரும் நிலைமை இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இந்த விஷயங்களில் அப்படிப்பட்ட கடுமையான சட்டம் கொண்டு வருவதற்கு என்ன தேவை? ஒரு பத்திரிகை தவறாக ஒன்றைச் சொல்லிவிட்டாலும்கூட, அல்லது எழுதிவிட்டாலும் கூட, சட்டத்தின் மூலமாக நோட்டீஸ் கொடுத்து, கோர்ட்டுக்கு வரச்சொல்லி, அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம் அல்லவா? அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, இந்தப் புதிய உத்தி ஏன்? இந்தச் சட்டத்தில் இருக்கும் வேறு அம்சங்களுக்குள்ளே நான் போகவில்லை. நான் பொது வாழ்க்கையிலே இருக்கிறேன், ஒரு பத்திரிகை நடத்துகிறேன் என்றால், அந்தப் பத்திரிகையின் மூலமாக கல்வித் துறையிலே அல்லது மற்ற துறைகளிலே இருக்கும் அதிகாரிகள் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது, எங்களுக்கு வரும் ஆபத்தை எப்படி தடுக்க முடியும்? சாராயம் காய்ச்சுபவர்கள், இந்த சமுதாயத்திலே பண்பாடற்ற செயல்களை மொத்த முதலீடாக கான்ட்ராக்ட் எடுத்துச் செய்யும் சண்டாளர்கள் மீதெல்லாம் வழக்குப் போடுவதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் இந்த அம்சங்களைப் போடுவது என்பது, கருத்துக்களை வெளியிடு வதைத் தடுப்பது என்ற முறையிலே கொண்டு வந்திருக்கும் ஒரு நடவடிக்கையாகும். அப்படி தடுத்து நிறுத்தப்படும் ஒரு அபாய நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவை ஏன் கொண்டு வந்தார்கள்? அதற்கு இப்போது என்ன தேவை ஏற்பட்டது? இந்த நிலைமைகளையெல்லாம் விளக்கிச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லும் அந்த நிலைமை விளக்கத்திலே எங்களுக்குப் பாதுகாப்பு என்ன? இப்போது 7½ லட்சம் அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றியெல்லாம் நாங்கள் எழுதுகிறோம். இந்த அரசு அவர்களுக்காக சட்டங்களை நிறைவேற்றி அதிகாரங்களைக் கொடுக்கிறது. அவர்கள் சட்டங்களின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கும்போது அவற்றிலே பல கோளாறுகள் வருகின்றன, அந்தக் கோளாறுகளுக்கு பல காரணங்கள் இருக்கின்றன என்ற நிலைமைகள் வரும்போது, அதை எப்படி வெளியிடாமல் இருப்பது? பல விஷயங்களை அவர்கள் செய்துவிட்டு கடைசியாக, அரசியல்வாதிகளையும் சேர்த்து இந்த அதிகாரிகள் சொல்கிறார்கள். பல தவறுகள் இப்போது நடக்கின்றன. இந்தத் தவறுகளிலேயிருந்து எங்களை நாங்கள் எப்படி காப்பாற்றிக்கொள்ள முடியும்? நடந்துவிட்ட பிறகு, நாங்கள் ஜாமீனிலே



1982 மார்ச் 1] (திரு. செ. முத்துசாமி)

வெளியே வர முடியாத நிலைமையில் நாங்கள் என்ன செய்வது? எல்லா கேஸ்களுக்கும் ஹைக்கோர்ட்டுக்கு வர முடியுமா? ஆகவே, இந்தப் 'பிரொவிஷன்'பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். பத்திரிகை விஷயத்திலாவது அரசு இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்த மேல் சபையிலே மட்டும் சொல்வதற்காக எப்படிப் பண்ணுவது என்ற ஒரு கௌரவப் பிரச்சினையாக இதைப் பார்க்கக்கூடாது. விஷயங்கள் நியாயமாக இருந்தால், சொல்பவர்கள் யார் என்று பார்க்க வேண்டாம். இந்த நியாயத்தை இந்த இடத்திலே சொல்வதனாலேயே செய்ய வேண்டுமா என்று நினைக்கக்கூடாது. இதிலே இருக்கும் அபாயத்தைச் சொல்கிறோம். அதை உணர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அந்த விதியை மட்டும் நீக்க வேண்டும். அதன் மூலமாக பத்திரிகைச் சுதந்திரத்திற்கு வழி வகுக்க வேண்டும். நான் சின்ன பத்திரிகை தான் நடத்துகிறேன். ஆகவே சின்ன பத்திரிகை நடத்துபவர்கள் சார்பாக என்றல்ல, பெரிய பத்திரிகையில் இருந்து சின்ன பத்திரிகை வரைக்கும் சொல்கிறேன். என்ன பிரச்சினையானாலும் அதை வெளியே கொண்டு வருகிறோம். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சி முறையிலே, இப்படி போலீஸ் நடவடிக்கை என்பது, திடீரென்று போலீசார் கைது செய்யலாம் என்ற வகையிலே சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கும் இந்தப் போக்கு நல்லதல்ல. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எதையும் தெளிவாகப் படித்து பதில் சொல்லுபவர். ரொம்ப நாளாக இந்தத் துறையிலே இருப்பவர். வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு இந்த அரசுக்கு அப்படி என்ன ஆபத்து ஏற்பட்டுவிட்டது? என்ன நிலவரம் கெட்டுப்போய்விட்டது? இதையெல்லாம் திரும்பவும் யோசனை செய்ய வேண்டும் என்று சொல்கிறேன். நல்லது இருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள்; நல்லது இருந்தாலும் அது நல்லதல்ல என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்தால், என்ன செய்வது? எங்களுக்கு இருக்கும் அச்ச உணர்வை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இந்த அரசு கொண்டிருக்கும் நினைவுகளுக்கும், உணர்வுகளுக்கும் தக்கபடி பரிகாரம் இல்லாமல், எங்களுடைய நினைவுகளுக்கும், உணர்வுகளுக்கும் தக்கவாறு பரிகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'இதை ஒரு கௌரவப் பிரச்சினையாகப் பார்க்க வேண்டாம், மனச்சாட்சியின் அடிப்படையிலே நியாயத்தை வழங்க வேண்டும்' என்று கேட்டுக்கொள்கிறேன். அசெம்பிளியிலே நிறைவேற்றியாகிவிட்டது, ஆகவே இங்கேயும் நிறைவேற்ற வேண்டும் என்று கருதாமல், மெஜாரிட்டி மைனாரிட்டி என்று பார்க்காமல், இந்த ஒரு

ப்ரொவிஷனுக்கு மட்டும் தக்கவாறு மாற்று வழி செய்து, ஜனநாயகத்தில் மக்கள் உணர்வுகளை மதித்து, மக்கள் உணர்வுகளுக்கு ஏற்றவாறு சொல்லப் பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொண்ட நிலையிலே அவைகளைச் செய்திருக்கி றோம் என்று சரித்திரத்திலே இடம் பெறும் அளவுக்கு இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவரவர்களே, இந்திய தண்டனைச் சட்டம் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை ஆகியவற்றின் இணைப்புகள், தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன்வடிவு மீது சில கருத்துக்களைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய நாட்டின் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டபோது, பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்து, அதன் மூலம் இந்திய நாட்டில் நடைபெற்ற அநியாயங்களையும், அக்கிரமங் களையும் நாட்டுக்குத் தெரியாமல் செய்து, பின்னர் பதவியிழந்து, பிறகு பொதுமக்களிடத்திலே பகிரங்கமாக மன்னிப்பு கேட்டார்கள். பின்னர் இன் றைக்கு இந்த நாட்டின் பிரதமராக வந்த ஒரு மாதத்திற்குப் பின்னால், பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்கும் அளவுக்கு நடவடிக்கையை எந்த மாநில அரசும் எடுக்கக்கூடாது என்று சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கும் இந்தச் சூழ்நிலையிலேதான், நம்முடைய மாநிலத்திலே இப்படிப்பட்ட சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, மத்திய அரசை இந்த அரசு எந்த அளவுக்கு மதிக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. தரக்குறைவாக அல்லது கீழ்த்தரமான அல்லது அச்சுறுத்தி பணம் பறிக்கும் எழுத்து, படம், ஆவணங்கள் போன்ற எதையும் செய்தித்தாள் வெளியிடக்கூடாது என்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனக்கு இருக்கும் வருத்தம் எல்லாம் தரத்தைப்பற்றி இந்த அரசாங்கம் கவலைப்படுவது குறித்துதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிறைச்சாலையிலே இருந்த போது, அவர் ஒரு பூனை வளர்த்தார் என்பதைக் குற்றஞ்சாட்டி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிறையிலே பூனை வளர்த்து அது சினையாகியிருக்கிறது என்று பேசிய அமைச்சர்கள் எல்லாம் இருக்கும் மந்திரி சபையில் தரத்தைப் பற்றிக் கவலைப்படுகிறார்களே என்று நினைக்கும்போது, எனக்கு மகிழ்ச்சி யாகவும் இருக்கிறது. அதே நேரத்தில் இந்தச் சட்ட முன்வடிவை எதற்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது, ஜனநாயகத்தினுடைய ஆணிவேராக இருக்கும் பத்திரிகை சுதந்திரத்தைக் குழிதோண்டி





புதைப்பதற்காக இதை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆளும் கட்சியிலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் 'இந்துநேசன்' போன்று புற்றீசல்களாக இன்றையதினம் பத்திரிகைகள் புறப்பட்டுவிட்டன என்று சொன்னார்கள். ஒருவேளை ஆளும் கட்சியைச் சார்ந்த பத்திரிகைகளை அவர்கள் சொல்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. எதிர்க்கட்சிப் பத்திரிகை, ஆபாசமாக ஏதாவது ஒரு பத்திரிகை எழுதுகிறது என்று ஏதாவது ஒரு பத்திரிகையின் பெயரைச் சொன்னால், அதற்கு என்ன தண்டனை கொடுத்தாலும், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் ஜனநாயகத்திலே அமைச்சர்கள் லஞ்சம் வாங்குவார்கள், ஊழல் செய்வார்கள், ஆளும் கட்சிக்காரர்கள் கொள்ளையடிப்பார்கள், ஆனால் இவைகளையெல்லாம் எழுதக்கூடாது என்று தடுக்க ஒரு சட்டம் வந்தால் அதைப் பார்த்து எதிர்க் கட்சிக்காரர்களும், பத்திரிகையாளர்களும் பயப்படும் நிலையில் இல்லை. இதுபோன்ற சட்டங்களை நாடு பார்க்காத நிலையில் இல்லை. ஆனால் உலகத்திலே இப்படிப்பட்ட சட்டங்கள் போட்டவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று அவர்களைப் பற்றிய வரலாறே இல்லாதபோது, அரசு இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறதே என்று எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் யாரும் அச்சப்படவில்லை. நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மஹாராஷ்ட்டிரா மாநிலத்திலே திரு. அருண்ஷௌரி என்பவர் 'இந்து' பத்திரிகையிலே அரசாங்கத்தின் ஊழலைப்பற்றி எழுதாமல் இருந்திருப்பாரே யானால், இந்த அரசு நினைப்பதைப்போல ஒரு அரசாங்கம் அங்கே இருந்திருக்கக்கூடும், ஒரு முதலமைச்சர் தன்னுடைய பதவியை இழந்துவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழ் நாட்டிலேயும் வந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அப்படி எழுதக்கூடிய ஆற்றல் பெற்றவர்களை, எழுத்தாளர்களை, பத்திரிகைகளை எழுத விடாமல் செய்யலாம், அடக்கிவிடலாம் என்ற எண்ணத்தின் காரணமாகத்தான் இந்த அரசு இதைக் கொண்டு வந்திருக்கிறதே தவிர வேறு எந்த நோக்கத்திலும் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அதுமட்டுமல்ல. இந்த அரசாங்கம் எப்படி பத்திரிகைகளை அணுகுகிறது என்பதை நான் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறேன். சில பத்திரிகைகளை விளம்பரம் என்ற பெயரால் கோடிக் கணக்கில், லட்சக் கணக்கில் பணம் கொடுத்து, சரிக்கட்டப் பார்க்கிறார்கள். இன்னும் சிலர்

பத்திரிகைகளை விலை கொடுத்து வாங்குகிறார்கள். விலை கொடுத்து வாங்க முடியாத பத்திரிகைகளை என்ன செய்வது என்று எண்ணிப் பார்த்துத்தான் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதன் மூலமாக அவைகளை அச்சுறுத்திவிடலாம் என்று ஆட்சியாளர்கள் எண்ணுவார்களானால், அது முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே ஒரு பத்திரிகையைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். அந்தப் பத்திரிகையைப் பற்றி நான் விளக்கமாகப் பேசப் போவதில்லை. ஏனென்றால் நானே ஒரு பத்திரிகையின் மேனேஜிங் டைரெக்டராக இருக்கிறேன். அதற்கு விளம்பரம் தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுமானால், அது மக்கள் மத்தியில் படிக்காத பத்திரிகை என்ற கருத்தில் இருக்கலாம். அல்லது அதிகமான சர்க்குலேஷன் இல்லாத பத்திரிகை என்று எண்ணலாம். ஆனால், அவருக்கும் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சி நடத்தும் 'அண்ணா' பத்திரிகையைவிட இரண்டு மடங்கு 'சர்க்குலேஷன்' உள்ள ஒரு பத்திரிகையின் மேனேஜிங் டைரெக்டராக நான் இருக்கிறேன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் அந்தப் பத்திரிகையில் வந்த செய்திகளெல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்று வாதிடுவார்களானால், அந்தப் பத்திரிகையில் வந்த செய்திகள் எல்லாம் எந்த அளவுக்கு உண்மையாக இருந்தன என்பதை விளக்கமாக எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களேகூட இவ்வளவு விருப்பத்தோடு கொண்டு வந்திருப்பார் என்று நினைக்கவில்லை. ஆனால், சட்டம் தெரியாதவர்கள் சொல்லும்போது, அவரால் தவிர்க்க முடியவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். சட்டத்தை அடிப்படையாக வைத்து எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால், நான் எனக்குத் தெரிந்தவரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுவரை ஒரு பத்திரிகை, தவறாகவோ அல்லது அவதூறாகவோ எழுதினால்—அது 'ஸ்கரிலஸ் ரைட்டிங்' ஆக இருந்தாலும் சரி—அதனுடைய ஆசிரியரையும், அச்சிடுகிறவரையும், அதை வெளியிடுகிறவரையும் ஆக, மூவரை மட்டுமேதான் கைது செய்ய, பத்திரிகைச் சட்டத்தில் இடமிருக்கிறது. ஆனால் இங்கே இருப்பவர்களின் விருப்பம், அவைகளுக்கு அப்பால் இருப்பவர்களையும், அதாவது எதிர்க் கட்சியில் இருந்துகொண்டு இந்த அரசாங்கத்தைக் கண்டிக்கக் கூடிய ஒரு



நிருவாகத்தின் மேனேஜிங் டைரெக்டராக இருக்கக் கூடிய ஒருவரையும், அந்த நிர்வாகத்தின் இயக்குநர்களையும் கைது செய்து, தங்களின் ஆசையைத் திருப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்த ஆட்சியில் எத்தனை எத்தனையோ இன்னல்களையும் இடுக்கண்களையும் ஏற்றுக்கொண்டுதான் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களையெல்லாம் கைது செய்து இரண்டாண்டுக் காலம் சிறையில் வைக்கலாம். அப்படி மேலும் எழுதுவதன் மூலம் இன்னும் ஒரு 5 ஆண்டுக் காலம் எங்களையெல்லாம் சிறையில் வைக்கலாம் என்று நம்புவார்களானால், நாங்களெல்லாம் அப்படி சிறையில் இருக்கும்போது, இவர்கள் ஆட்சியில் இருக்கப் போவதில்லை என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இப்படிப்பட்ட சட்டத்தைப் போடுகிற இவர்களாவது இந்தச் சட்டத்தை மதிக்கின்றார்களா என்றால், மதிப்பதில்லை. உதாரணத்திற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட நான் ஒரு வழக்குப் போட்டுவிட்டேன் என்றார். எதிர்க் கட்சிக்காரர்கள் மீது வழக்குப் போட்டுவிட்டு 4 ஆண்டுகளாகியும்கூட, வழக்கு மன்றத்திற்கு வழக்கு வருகிறபோது, இவர் நீதிமன்றத்திற்கு வந்து தான் குற்றவாளியல்ல என்று நிரூபிக்க வருகிறாரா என்றால், வருவதில்லை. கண்டிப்பாக 27 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிமன்றத்திற்கு வருவார் என்று அரசாங்க வக்கீலே 25 ஆம் தேதி வந்து சொல்கிறார். ஆனால் தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, 27 ஆம் தேதியன்று வழக்கு இருக்கும்போது, திடீரென்று கலெக்டர்கள் மாநாடு என்று சொல்லி 26 ஆம் தேதியே கலெக்டர்களுக்கு டெலிபோனில் தகவல் சொல்லி 27 ஆம் தேதி கலெக்டர்கள் மாநாடு நடத்தி அதற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லி, கோர்ட்டுக்கு வராமல் இருக்க வழி கண்டுபிடிக்கிறார். எப்போது வழக்குப் போட்டார்களோ அப்போதே அவர்கள் நீதிமன்றத்திற்கு வந்து தான் குற்றவாளியல்ல என்று நிரூபித்துக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அப்படித் தயாராக இருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. இதைப் பார்த்து நீதிபதிகளே சிரிக்கிறார்கள், வழக்கறிஞர்கள் சிரிக்கிறார்கள். வேடிக்கை பார்க்க வருகிற பார்வையாளர்கள் சிரிக்கிறார்கள். இந்த அரசாங்கம் எதிர்க் கட்சியினர் மீது எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதைப் பார்த்து அத்தனை பேருமே சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1982 மார்ச் 1

அது மட்டுமல்ல. ஒரு பக்கத்திலே சட்டம் கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே பேசும்போது இது முழுக்க முழுக்க எதிர்க் கட்சிக்காரர்களை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்படுகிற சட்டம் என்று குறிப்பிட்டார்கள். இப்படி இவர்கள் கொண்டு வருகிற சட்டத்தை இவர்களே மதிக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. இதை நான் விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றாலும், உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்ட அமைச்சர் அவர்கள் நமக்கு அச்சிட்டுக் கொடுத்திருக்கிற இந்தச் சட்டத்திற்கான விளக்கத்தில்—விளக்கம் 2-ல் சொல்கிறார் :

“மொத்தத்தில், தரக் குறைவான, அல்லது கீழ்த்தரமான அல்லது மோசடி செய்யும் நோக்கத்துக்கான, எனக் குற்றஞ்சாட்டப்பட்ட செய்திகள் , ,”

மோசடி என்ற வார்த்தைக்கு எனக்கும் மற்றவர்களுக்கும் ஒருவேளை பொருள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் நன்றாகப் பொருள் தெரிந்தவர். எதிர்க் கட்சியினர் ஏதாவது ஒரு செய்தி போட்டால், அதுவும் ஆளும் கட்சிக்கு அல்லது அரசாங்கத்திற்கு எதிராக ஒரு செய்தி போட்டால், அது அவதூறானது என்று சொல்லி, யாரை வேண்டுமானாலும் நாம் கைது செய்கிறோம். ஆனால் ஆளும் கட்சியால் நடத்தப்படுகிற “அண்ணா” பத்திரிகை ஒரு செய்தி வெளியிடுகிறது. இந்த அரசாங்கம் எப்படிப்பட்ட அரசாங்கம் என்று நான் விளக்கத் தேவையில்லை. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அவர்களே இதைச் சொல்லியிருக்கிறார். அதாவது இது ஒரு மோசடி சர்க்கார். இது ஒரு வெட்கப்பட வேண்டிய சர்க்கார் என்று ஒரு வழக்கிலேயே தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் அப்படிப்பட்ட தீர்ப்பு ஏதும் சொல்லப்படவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன். தமிழகத்தைச் சுட்டிக்காட்டி உச்ச நீதிமன்றம் அப்படி எப்போதும் தெரிவிக்கவில்லை. ஒரு சில மாநிலங்கள் என்ற அடிப்படையில்தான் சொல்லப்பட்டிருக்கின்றது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே இப்படி ஒரு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இல்லாமல் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 1]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளிப்பதை நான் இங்கே அவையிலேயே ஏற்கெனவே படித்துக் காட்டியிருக்கிறேன். அவைக் குறிப்பில் அது இருக்கிறது. மீண்டும் படிக்க வேண்டுமென்றால். . .

**திரு. எஸ். ஆர். இராதா :** தமிழ்நாடு சர்க்கார் மோசடி சர்க்கார் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்வது எப்படி சரி என்று கேட்க விரும்புகிறேன். சர்க்கார் மீது அப்படிச் சொல்லியிருந்தால், எத்தகைய நடவடிக்கை வரும் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். ஏதோ ஒரு வழக்கில் சொல்லப்பட்டதை எடுத்துக்கொண்டு அரசின் மீது உறுப்பினர் இப்படிச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தமிழ் நாடு சர்க்கார் பற்றிய வழக்கில் தான் அத்தகைய தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தங்களை மோசடிக்காரர்கள் அல்ல என்று சொல்லிக்கொண்டாலும், இவர்களின் செயல்கள், செயல்முறைகள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்பதை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபோது, ஆளும் கட்சியின் பத்திரிகையான “அண்ணா” பத்திரிகையில் எப்படிப்பட்ட செய்தி வெளியிடப்பட்டது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது ஒரு போஸ்டர். (உறுப்பினர் ஒரு போஸ்டரை எடுத்துக் காட்டினார்) அதில் என்ன போட்டிருக்கிறது என்றால் .

“அரசு அளிக்கும் சலுகைகள். வரிகள் இல்லாத புரட்சி பட்ஜெட் ”

நான் கேட்கிறேன், நீங்கள் மோசடி செய்கிறீர்கள் என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும் என்கிறீர்கள் ? தனி மனிதனை மோசடி செய்வதைக்கூட இந்த நாடு தாங்கிக்கொள்ளும். ஆனால் இவர்களோ 5 கோடி மக்களையல்லவா மோசடி செய்கிறார்கள். வரிகளே இல்லாத பட்ஜெட்டா இது ? வரிகளே இல்லாத புரட்சி பட்ஜெட் என்று போஸ்டர் போடுகிறார்களே, கொஞ்சமாவது வெட்கம் வேண்டாமா ? நானே கூட நினைத்தேன். சரி, இது போஸ்டர் தானே ? போஸ்டர் என்பது பொதுவாக விற்பனையை அதிகரிக்கவும் பொது மக்களை

'அட்ராக்ட்' செய்யவும் போடப்படுவதுதானே. செய்தியில் சரியாகப் போட்டிருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் செய்தியைப் போடும் போது எப்படிப் போடுகிறார்கள் என்பதைப் படிக்க விரும்புகிறேன்.

"நிதியமைச்சர் நாவலர் தாக்கல் செய்த புது வரியில்லாத புரட்சி பட்ஜெட்"

என்று போட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். நீங்கள் புது வரி போடவே இல்லையா? இந்த அரசு புதிதாக ஒரு வரி கூட போடாமலேயா பட்ஜெட் தாக்கல் செய்திருக்கிறது? ஆனால் எவ்வளவு தெளிவாக மக்களை மோசடி செய்யக்கூடிய அளவுக்கு இவர்கள் செய்திகளை வெளியிடுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட செய்திகளைத்தான் 'அண்ணா' பத்திரிகையில் வெளியிடுகிறார்கள். இப்படி மோசடியான செய்தியை வெளியிட்டார்கள் என்று எதிர்க் கட்சியைச் சார்ந்த நாங்கள் புகார் கொடுத்தால் 292-எ சட்டப்படி இந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா? இப்படி ஒரு பத்திரிகை மோசடி செய்திருக்கிறது என்று சொன்னால், அதன் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயார்தானா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** புது வரி இல்லாத பட்ஜெட் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு கருத்தோடு படிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். There is no new tentation tax increase has been effected in respect of certain iteams

புதிதாக வரிகள் போடப்படவில்லை,
ஏற்கெனவே இருந்த வரி விதிப்புகளின் விகிதம் அதிகமாகியிருக்கிறது. இது தான் உண்மை. ஏற்கெனவே இருந்த ஐயிட்டங்கள் சிலவற்றின் மீது வரி சிறிது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது அல்லது கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. எனவே புதிய வரி விதிப்பு என்பதற்கும், வரிகள் கூடுதலாக்கப்படுவதற்கும் இடையே இருக்கிற மாறுபாட்டை நான் எடுத்துச்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சட்ட அமைச்சர் அவர்களுக்குக் கூட வரி போட்டது மறந்து போய்விட்டதே என்பதை நினைத்து நான் வருத்தப்படுகிறேன். 4 சதவிதமாக இருந்ததை 5 சதவிதமாக ஆக்கியதைப் பற்றியோ அல்லது 25 சதவிதமாக இருந்ததை 50 சதவிதமாக ஆக்கியதைப் பற்றியோ நான் குறிப்பிடவில்லை. புதிதாக ஜரிகைக்கு 5 சதவிதம் வரி போட்டிருக்கிறார்கள். பிஸ்கட்டுக்கும், சாக்லேட்டுக்கும் வரி போட்டு விட்டு எங்கே வரி போட்டோம் என்று கேட்கிறார்கள் என்றால், என்ன



செய்வது? இப்படிப் புதிதாக வரிகளைப் போட்டுவிட்டு "அண்ணா" பத்திரிகையில் என்ன தலைப்பு போடப்படுகிறது என்றால் "வரிகள் இல்லாத புரட்சி பட்ஜெட்". இனிமேல் இதற்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஊர் ஊராகச் சென்று "அண்ணா" பத்திரிகையில் இப்படிப் போட்டிருக்கிறார்கள், அதற்கு விளக்கம் என்ன தெரியுமா என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். நான் கேட்கிறேன், அண்ணா பத்திரிகையைப் படிக்கிற மக்களுக்கு எப்படிப்பட்ட எண்ணம் வரும்?

எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அப்படிச் செய்தால், அதற்கு ஒரு சட்டம். நான் இதைச் சொல்வதன் காரணமாக உடனே உங்களைப் போய் அவசரப்பட்டு "அண்ணா" பத்திரிகையின் ஆசிரியரைக் கைது செய்யுங்கள் என்றோ, அதன் நிர்வாகிகளைக் கைது செய்யுங்கள் என்றோ, சொல்லுகிற அவல புத்தி எங்களுக்கு இருக்கிறது என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். எனவே, சட்டத்தின் மூலம் எதிர்க் கட்சிகளை ஒடுக்கிவிட முடியும் அல்லது எதிர்க் கட்சியின் பத்திரிகைகளை ஒடுக்கிவிட முடியும் என்று நினைப்பார்களானால், அது பகல் கனவாகத்தான் இருக்கும்.

இதைவிட கொடுமையான சட்டங்களைக் கொண்டுவந்தாலும்கூட, இந்த நாட்டு மக்களுக்கு இந்த அரசாங்கம் செய்கிற அநீதிகளை, அமைச்சர்கள் செய்கிற மோசடிகளை, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் வாங்குகிற லஞ்சங்களைப் பற்றி எடுத்து எழுதிக் கொண்டுதான் இருப்போமே தவிர, இதற்காக அஞ்சி நடுங்கி, இந்தச் சட்டம் வந்துவிட்டது என்பதற்காக இந்த நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்வதிலிருந்து விலகிக் கொண்டுவிட மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை எப்படியும் அரசினர் நிறைவேற்றப் போகிறார்களானால் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது, இந்தச் சட்டத்தையும், இந்த அரசாங்கத்தையும் சந்திக்க வேண்டிய இடத்தில் நாங்கள் சந்திக்க இருக்கிறோம் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவு மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்

(முற்பகல் 11-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு 'உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது, 292-ஏ என்ற ஒரு புதிய பிரிவு இந்தியன் பீனல் கோடில் சேர்க்கப் பட்டிருக்கிறது என்றும், அது பத்திரிகை சுதந்திரத்திற்கு மாறாகக் கொண்டு வரப்பட்ட ஒரு பிரிவு என்றும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய எண்ணம் சரியானது அல்ல என்பதை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் காழ்ப்புணர்வோடு அரசுக்கு ஆகாத பத்திரிகைகளின் மீது நடவடிக்கையினை அரசு எடுக்கும் என்ற எண்ணம் யாருக்கும் இருக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த பத்திரிகையாக இருந்தாலும், ஆளும் கட்சி செய்கின்ற குறைகளை, தவறுகளைச் சுட்டிக்காட்டுகிற பத்திரிகை யாருக்குச் சொந்தமாக இருந்தாலும், அந்தப் பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு கிஞ்சித்தும் இல்லை. ஆளுகின்ற ஓர் ஆட்சியில் நடைமுறையில் இருக்கின்ற குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் உண்டு. அதை இந்த அரசு என்றும் வரவேற்கிறது. அதற்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் எந்தக் காலத்திலும் இந்த அரசு எடுக்காது என்பதை முதற்கண் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரைக்கும் ஏதோ தற்போதுதான் நடைமுறைக்கு முதன் முதலாக வந்தது என்பது போன்ற எண்ணம் ஏற்படுகிற அளவிற்குச் சொன்னார்கள். அது உண்மையல்ல. 1960 ஆம் ஆண்டிலேயே இந்தப் பிரிவு இந்தியன் பீனல் கோடில் இருந்தது. புதிதாக இதில் எந்த ஒரு வார்த்தையும் நாம் சேர்க்கவில்லை. இதிலே scurrilans என்பதற்கு என்ன பொருள், grossly indecent என்பதற்கு என்ன பொருள், intention to make blackmail என்பதற்கு என்ன பொருள் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. புதிதாக இந்தச் சட்ட முன்வடிவிலே எந்த ஒரு பொருள் விளக்கத்தையும் இந்த அரசு கொண்டுவரவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். பிரிவுகள் 499



மற்றும் 500, ஐ. பி. சி. யில் இது குறித்து ஏற்கெனவே இருந்தபோதிலும் கூட, 'இப்படிப்பட்ட ஒரு பிரிவும் தேவை என்பதை 1960 ஆம் ஆண்டிலேயே உணர்ந்த காரணத்தால்தான், அப்போதே நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.

பிரிவு 499-ஐப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெளிவாகத் தெரியும், அவைக்கும் புரியும். தனிப்பட்ட நபர் ஒருவர் தாக்கப்படுகிறபோது, அவருடைய உணர்வுகள் பாதிக்கப்படுகிறபோது— "reputation tnd feelings" injure ஆகும்போது 499-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்கிறோம்.

அதே நேரத்தில் grossly indecent publication மூலமாக சமுதாயம் பாதிக்கப்படும்போது பிரிவு 499-ல் நடவடிக்கை எடுக்க முடியாது என்பதால், அத்தகைய நடவடிக்கை 292 மற்றும் 293 read with section 95 of the Criminal Procedure Code -ன்படி எடுக்க ஏற்கெனவே உரிமைகள் இருந்தாலும்கூட, அதை மிகச் சற்று கடுமையாக ஆக்க வேண்டுமென்று 1960 ஆம் ஆண்டிலேயே கருதப்பட்ட காரணத்தாலே, 1960-ல் இந்தப் . புதிய வாசகத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி 1960-ல் கொண்டு வருகிறபோது, ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்" என்பதில் சொல்லியிருக்கிறார்கள் . . .

"There is at present no law effectively to deal with such writings, scurrilous writings and writings which are grossly indecent or obscene or intended for blackmail unless they amount to defamation of the President, Vice-President, Governor, Ministers or public servants. This has enabled "Yellow press" to indulge in such writings directed against persons of status and standing in society, with impunity. The victims are usually reluctant to take legal action against the publishers, lest it should give undue publicity to these infamour writings. If the growth of such writings is not put down effectively, it is possible that the public might gather an impression that anybody could write anything about persons of high status and get away with it. Such a situation would be highly deplorable and it is felt that the Government would be failing in their duty if they do not take adequate steps to forest all such elements and put them down

firmly when necessary. The Government have also observed that publishers of "yellow" newspapers and news sheets in this State who have had a number of convictions under section 292, I.P.C. continue to publish matters which border on obscenity undeterred by the punishments they receive

பல காரணங்களை அப்போது சொல்லியிருக்கிறார்கள். ஆக 1960 ஆம் ஆண்டிலேயே கொண்டுவரப்பட்டிருக்கிறது அந்தப் பிரிவு.

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்து காட்டிய சட்டத்தில் பப்ளிஷர்மீது நடவடிக்கை எடுக்க விதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மேனேஜிங் டைரக்டர் மேலே நடவடிக்கை எடுக்க எங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்சை அப்படிப் போட்டுவிட்டு அப்போதே பிரிவு 292-ஏ-வைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகை நிர்வாகம் பிரைவேட் லிமிட்டெட் கம்பெனியாக பதிவு செய்துவிட்டு எந்தச் செய்தியை வேண்டுமென்றாலும் வெளியிட்டால், அப்போது தனிப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை, இல்லையென்று வருகிறது. 499 பிரிவின் பிரகாரம் பத்திரிகையில் எழுதுகிற ஆசிரியரை சிறைக்குள்ளே தள்ளலாம், எடிட்டர் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் கம்பெனி என்ற உருவிலே வந்த பிறகு, கம்பெனி பப்ளிஷராக இருக்கும்போது, அந்தக் கம்பெனியின் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியாது, வேண்டுமானால் அபராதம் போடலாம். கம்பெனியை எப்படி சிறைக்குள் தள்ளுவது ? இதை எண்ணித்தான் 1960 ஆம் ஆண்டு, கம்பெனியின் சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில்...

The intention behind the legislation in 1960 for bringing in Section 292-A is also to include the Company.

அப்படி 'இன்டென்ஷன்' இருந்த காரணத்தினாலே, அப்போதே, 1960 ஆம் ஆண்டிலேயே, 292-ஏ பிரிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 292-ஏ பிரிவு என்பது தற்போது குறிப்பிட்ட சில பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது என்று சொல்லுவது முற்றிலும் தவறு என்பதற்காக இதனைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இதைக் குறிப்பிட்டுச் சொல்வதால், அதற்கு ஒரு விளக்கம் கேட்கிறேன். சில கம்பெனிகள் பப்ளிஷராக இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, கம்பெனிக்குப் பொறுப்பானவர்களைக் கைது செய்யலாம் என்று விதி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். குறிப்பிட்ட "எதிரொலி" பத்திரிகை கம்பெனியல்ல. பப்ளிஷர்—குமார். கம்பெனி வேறு. அவர் கம்பெனி சார்பிலே 'பப்ளிஷ்' செய்கிறார். அவரைக் கைது செய்திருக்கிறார்கள். அப்படி நிர்வாகக் கம்பெனியைக் கைது செய்ய என்ன விதி இருக்கிறது !

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையை நடத்துகிறபோது, பத்திரிகையினுடைய "எடிட்டோரியல்" என்பது தனி. அதிலே பத்திரிகை நடத்த பணம் போட்டவர்கள் தலையிடுவதில்லை. பல பத்திரிகைகள் அந்த நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு சில பத்திரிகைகளில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பல்வேறு துறைகளில் இருப்பவர்கள் முதலீட்டைச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய கட்சிக்கு எதிரான கருத்துக்கள் கூட அதிலே வருவதுண்டு. 'எடிட்டோரியல் போர்ட்' என்பது இண்டிபென்டென்ட்டானது. அதற்கும் உரிமையாளர்களுக்கும் சம்பந்தமில்லை. ஆகவே பத்திரிகை பாலிசி என்பது தனி அமைப்பு. பத்திரிகைக்கான நிர்வாகம், பணம், மற்ற பொறுப்பு ஏற்பது என்பது தனி அமைப்பு என்ற வகையிலே இன்றைக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ள பல பத்திரிகைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த அடிப்படையிலே அரசு இதைப் பரிசீலித்ததா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 292-ஏ பிரிவைப் பொறுத்த வரையில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்தின் அடிப்படையில், இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், இவர்கள் வேண்டாதவர்கள், இத்தகையவர்கள் பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறார்கள், ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இதைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்படவில்லை என்பதை அரசின் சார்பிலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. சி. பொன்னையன்) [1982 மார்ச் 1

(முற்பகல் 11-40)

காரணம் 1960-லேயே இருந்த பிரிவு 292-ஏ. 1960-லேயிருந்து 1973-ல் இந்திய கிரிமினல் புரோசிஜர் கோட் நிறைவேற்றப் படுகின்ற வரையில் இருந்தது. அதுவரை இருந்த பிரிவு ஏன் போய் விட்டது என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் கேட்கலாம். 1973-ல் பாராளுமன்றம் புதிய சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தபோது, 1960-லே மாநில அரசால் கொண்டுவரப்பட இருந்த அந்தத் திருத்தத்தை, அமெண்ட்மெண்டை பாராளுமன்றத்திற்கு அதைச் சேர்த்துக்கொள்ள அதிகாரம் இல்லை என்ற காரணத்தினால் விட்டுவிட்டார்கள். 1973 வரை அது இருந்தது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுகூட, அந்த 292-ஏ பிரிவு நடைமுறையில் இருந்தது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதே நேரத்தில் தற்போதுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்தியச் சட்டத்தில் இந்த 292-ஏ பிரிவு 1960 ஆம் ஆண்டு தான் தமிழ் நாட்டிலே சேர்த்து சட்டமாக்கப்பட்டது. இந்திய பீனல் கோட்டில் உள்ள 292-ஏ பிரிவினை நிரந்தரமான ஒரு பிரிவாக ஆக்கி, அனைத்து மாநிலத்திற்கும் பொதுவான ஒரு பிரிவாக அவர்கள் கொண்டு வந்து, பிறகு ராஜ்ய சபாவில் கொண்டு வந்தார்கள். தற்போதுகூட லோக் சபாவிலே இதைக் கொண்டுவர ஒரு வரைவு இருப்பதாக மாநில அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் இதைச் சொல்லக் காரணம் 1960-லே கொண்டுவரப்பட்ட இந்தப் பிரிவை மத்திய அரசு அங்கே கொண்டு வந்து சட்டமாக்க வேண்டுமென்று அண்மையிலே ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களுக்கும் இந்த அவைக்கும் கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, முதல் தண்டனை இரு ஆண்டுகள் சிறை என்று சொன்னார்கள். ஒருவேளை பேச்சுவாக்கில் அப்படி தவறி கூறியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்படி இல்லை என்பதால்தான் அங்கத்தினர் அவர்களுக்கு இப்போது சொல்கிறேன்.



1982 மார்ச் 1]

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதாக முடிவு செய்திருப்பதால் இதை இங்கு கொண்டு வருகிறார்களா? இப்போது எழுப்பப்படுகின்ற பிரச்சினை, மனிதாபிமான அடிப்படையிலே, சட்ட ரீதியாக, ஜனநாயக ரீதியாக, இந்தப் பிரிவு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இங்கே கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. மத்திய அரசு முடிவு செய்திருப்பதால்தான், இதைக் கொண்டு வருவதாக வாதமா என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே இருக்கக்கூடிய நியாயங்களுக்கு வாதமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மத்திய அரசுச் சட்டம் என்று சொல்வதால், நானும் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கும் அது வசதியாக இருக்கும். மத்திய அரசு 292-ஏ பிரிவைக் கொண்டுவர முயற்சி எடுப்பதாகச் சொன்னார்கள். இதே மாதிரி 'நான்-பெயிலபில் அஃபென்ஸ்' என்ற செக்ஷன் வைத்து, 2 ஆண்டுகள் 3 ஆண்டுகள் சிறை என்று விதியை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரிவோடு வரவேண்டுமென்று கூட அவர்கள் இருக்கிறார்கள். இதுபற்றி நம்முடைய மாநில அரசு சார்பில் பிரதிநிதிகள் சென்றபோது, அவர்கள் கருத்து தெரிந்தது. அதுவும் அவர்களுடைய கருத்திலே இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முக்கியமான ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றபோது, அந்தச் சட்டத்தில் ஒரு சில திருத்தங்கள் உண்டா என்றார்கள். உண்டு, இல்லை என்று சொல்லவில்லை. இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே 1960-லே இருந்த 292-ஏ ஐப் பொறுத்தவரைக்கும், அது ஒரு 'காக்னிசபில் அஃபென்ஸ்' தான். முன்பே 'காக்னைசிபல் அஃபென்ஸ்' தற்போதும் அதுதான். The case can come before any Magistrate. முன்பே குறைந்த பட்ச தண்டனைதான். முதல் தவறுக்கு தண்டனை கிடையாது. 1960-லே சட்டம் கொண்டுவரப்பட்டபோது, தவறு செய்யும்போது, தவறான பிரசுரத்தைச் செய்துவிட்டார்கள் என்று நீதிமன்றத்தினால் முடிவு செய்யப்பட்டுவிட்டால், அவர்களுக்குக் கட்டாய தண்டனை கிடையாது. மினிமம் பனிஷ்மெண்ட், மாவிட்டரி

பனிஷ்மெண்ட் என்று கிடையாது. இரண்டாவதாக அல்லது முறையாகத் தொடர்ந்து, சப்சிகுவெண்ட்-ஆக இருந்தால் தான், அப்படிச் செய்கின்றபோதுதான் அவர்களுக்குக் கட்டாய தண்டனை என்று ஏற்கெனவே உள்ள விதியில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நாம் மாற்றவில்லை. ஆனால் உச்சகட்ட தண்டனை என்ற பிரிவு வருவதைப் பொறுத்தவரைக்கும், 2 ஆண்டுகள் என்பதை 5 ஆண்டுகள் என்று மாற்றி வருகிறது. அதுவும் தொடர்ந்து செய்கிற போது அப்படி வருகிறது. Printing, etc. of grossly indecent or scurrilous matter or matter intended for blackmail. அப்போதுதான் அந்தப் பிரிவு 'அட்ராக்ட்' செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1960 லேயே அது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அப்படியேதான் தற்போது கொண்டு வரப்படுகிறதே தவிர, புதியதாக ஒரு பிரிவு கொண்டுவந்து சேர்க்கப்படவில்லை. ஆனால் ஒன்றே ஒன்று மாத்திரம் வருகிறது. முன்பு 'பெயிலபில்' என்று இருந்தது. இப்போது அதுவே 'நான்-பெயிலபில்' என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர்கள் அதிகாரிகளைப்பற்றிக் குறை சொன்னார்கள். காவல் துறையைப் பற்றிக் குறை சொன்னார்கள். காவல் துறையில் இருப்பவர்கள் அப்படி 'பெயிலபில்' என்று இருந்தால், மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள், கொலைகாரர்களைக் கூட போலீஸ் ஸ்டேஷனில் பெயிலில் விட்டுவிடுவார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது இருந்தால், சொன்னால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி காவல் துறையை நம்பவில்லை என்றாலும், நாம் நீதித் துறையை நம்பியாக வேண்டும். அந்தப் பொறுப்பு இப்போது நீதிமன்றத்திலே இருக்கிறது. Just because it is mentioned 'non-bailable', it does not mean that one can never be released on bail. நீதி மன்றத்திற்கே அந்த வழக்கு சென்றவுடன், நீதி மன்றத்திலே அவர்கள் விடுதலை ஆகி வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே விடுதலையாகி வரலாம். அதற்கு மேலே செஷன்ஸ் கோர்ட்டிலே விடுதலை ஆகி வரலாம். உயர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுதலையாகி வரலாம். அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்பட்டாலும், நாம் நீதித் துறையை நம்ப வேண்டும். அங்கே விடுதலை பெற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, அதனாலேதான் நான் குறிப்பிட்ட அந்த உதாரணத்தைச் சொன்னேன். மாஜிஸ்ட்ரேட் அளவிலே எப்படி அதிகாரிகள், காவல் துறையினர் நிச்சயமாக மிரட்ட முடிகிறது என்பது தான் எனது கருத்து. என்னுடைய விக்கிரவாண்டி சம்பவத்திலே நடந்ததைச் சொன்னேன். நீதிமன்றத்தில் வழக்கை விசாரிக்கின்ற நீதிபதியே 'கன்பெஷன் ஸ்டேட்மெண்ட்' வாங்குகிறார்கள். அதை எப்படி மற்றவர்களிடம் கொடுத்தார்கள்? அது பத்திரிகையிலே வந்ததே. what is the action taken? காவல் துறை எப்படி நீதிபதியை மிரட்டுகிறது என்பதற்கு இதைவிட உதாரணம் தேவையில்லை. அவர்களிடத்திலே அதிகாரத்தைக் கொடுத்தால், என்னவாகும்? இப்பொழுதே அந்த நிலைமைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொல்கின்ற கருத்தோடு ஒட்டித்தான் நானும் பேசுகிறேன். காரணம் அத்தகைய காவல் துறை இருக்கிறது என்று கருதப்பட சொல்கின்றபோது, நீதிமன்றத்திற்குப் போகலாம். The bail power has been given to Court and the Court has discretion to release them on bail. காவல் துறை ஏற்கெனவே பெயிலில் விடலாம் என்று இருந்தது. தற்போது கொண்டு வந்துள்ள மாற்றத்தைப் பொறுத்தவரைக்கும், காவல் துறையிலே பெயில் கேட்டால், அவர்கள் முடியாது என்று சொல்லி தடுப்பதற்கு வழியில்லை. உடனடியாக நீதிமன்றத்திற்குச் சென்று கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

THIRU K. RAMAMOORTHY: The magistrate is himself the hand-maid of the police.

THE HON. THIRU C. PONNAIYAN: Anyhow, it is a slur on the judiciary. We are all having the opinion that the judiciary is above board.

THIRU K. RAMAMOORTHY: It is a fact that cannot be denied. The confession statement has come out. It is put in the press. How is it that the police have not taken any action?

THE HON. THIRU C. PONNAIYAN : I do not know the facts. We have to see whether it is a confession statement or whether it is a statement recorded under section 164, Cr. P.C. by the Magistrate.

அது நமக்கு முழுத் தகவலாக இல்லாமல் இருப்பதால் அதைப்பற்றிப் பேச வேண்டாம் என்று கருதுகிறேன்.

THIRU K. RAMAMOORTHY : I have given the entire details to the Home Secretary. The statement has appeared in the Press.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபோதும், 292(ஏ) பிரிவிலே எப்படி டைரக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று கேட்டார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் அப்படிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அங்கத்தினர் அவர்கள் சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த 292(ஏ) பிரிவிலே 1960 லேயிருந்து இருக்கின்ற பிரிவிலேயே அதற்கு வழி வகை இருக்கிறது.

Whoever prints or causes to be printed in any newspaper, periodical . . . . 'causes to be printed'

Owner of the publication can cause it to be printed

என்ற அடிப்படையிலே ஒரு 'இண்டர்பிரட்டேஷன்' வருகிறது. அது மட்டுமல்ல. இந்த 292(ஏ) பிரிவு இப்போது கொண்டு வரப்படவில்லை. 1960-லேயே கொண்டுவரப்பட்டது 'எதிரொலி' மீது நடவடிக்கை எடுப்பதற்குக் கொண்டுவந்தது அல்ல. 1960-லேயே இப்படி ஒரு 'எதிரொலி' பத்திரிகை வரும் என்று எண்ணத்தோடு கொண்டுவரவில்லை. ஏற்கெனவே இருந்த பிரிவுதான் இந்தப் பிரிவு 292ஏ(டி)யில் இருக்கிறது.



292-A (d) Whoever takes part in, or receives profits from any business in the course of which he knows or has reason to believe that any such newspaper, periodical, circular . . . is printed . . . .

A Managing Director should be considered to be a person taking part or receiving profits from the business

என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அப்படிப் பார்த்தால்கூட எதிரொலி நஷ்டத்தில்தான் நடக்கிறது. அதைக்கூட விட்டுவிடுவோம் 'profits from the business' என்று சொல்லும்போது, Profit என்பதற்கு டெபினிஷன் வேண்டும். பிராபிட் என்றாலே மானிட்டரி பிராபிட் என்பது மட்டுமல்ல. இந்த அமைச்சரே படிக்கிறார். அப்படிப் படிப்பதால் சில தகவல்கள் அவருக்குக் கிடைக்கின்றன. அதுகூட பெனிபிட் தான். அப்படிப் பார்த்தால், அமைச்சரைக்கூட கைது செய்வதாகத்தான் வரும். முதலமைச்சர் அவர்கள்கூட தினம் தினம் படிக்கிறார்கள். பாவம் அவரை போலீஸ் கைது செய்ய முடியுமா? இங்கே பிராபிட் என்பதற்கு மானிட்டரி பிராபிட் என்று டெபனிஷன் இல்லை. அப்படியே சொன்னால் . . அமைச்சர் அவர்கள் சொன்ன பத்திரிகை பிராபிட்டில் ஓடவில்லை. அதனால் எங்களைக் கைது பண்ணுவதுபற்றி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. எந்தவிதமான பத்திரிகை படிப்பவருக்கும் சில நேரத்திலே

(முற்பகல் 11-50)

பெரிய வளரும் நிலைமைகளும் இருக்கின்றன. அதை ஒருவன் விற்கிறான் என்றால், அவனுக்கு அதன்மூலம் பிராபிட் கிடைக்கிறது. அவனைக் கைது செய்யலாம். அதைப்போல யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்று டெபினிஷன் கொடுத்தால், அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்லவில்லை. நானும் விளக்கம் பெறவில்லை. 1960-ல் Act 392-ஏ (ம) section 25/1950)-ல் இருப்பதைப் படித்துக் காட்டினேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல், ப்ராபிட் என்று சொல்லும்போது, அதிலேகூடப் பெறலாம். அடுத்து, அதிலே போடப்பட்டிருப்பதைச் சொல்கிறேன். Receives profit from any business என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் சொல்கிறேன். வியாபாரத்தால்

அறிவைப் பெறுகிறோமென்பதல்ல If he suffers loss, definitely he will also be included ஒரு சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், சட்டத்திலே பூரா விளக்கங்களையும் போட முடியாது. அது 'கன்சைஸ்' ஆகத்தான் இருக்கும். விளக்கங்கள் என்பது நீதி மன்றத்திலே பெற வேண்டிய ஒன்று. மற்றொன்று Whoever takes part in any busine என்று இருக்கிறது. இப்படி விதிகள் இருப்பதால், ஒரு வேளை போடப்பட்டிருக்கலாமென்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பின ரவர்கள் எம். டி. யாக இருக்கிறாரா அல்லது வேறு என்ன பதவியில் இருக் கிறார் என்பது தெரியாது. அவர்களே சொன்னார்கள். அந்த அடிப்படையிலே சொல்கிறேன்.

அடுத்து, பத்திரிக்கைக்காரர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல் லியிருக்கிறார்கள். அப்படியில்லை. இதைப் பொறுத்தவரையில். 499 500 292(ஏ)ல் எக்ஸ்செப்ஷன் ஆன் குட் பெயித் (exception in good faith) என்று தரப்பட்டிருக்கிறதே, அது நடைமுறையிலே இருக்கிறது. அதை நீக்கிவிடவில்லை.

'For the purposes of this section, the word "scurrilous" shall be deemed to include any matter which is likely to be injurious to morality or is calculated to injure any person' என்று போட்டுவிட்டு, ப்ரொவிசோவில் சொல்லுகிறார்கள்

'Provided that it is not scurrilous to express in good faith anything whatever respecting the conduct of—

(i) a public servant in the discharge of his public functions or respecting his character so far as his character appears to that conduct and no further: or

(ii) any person touching any Public question and respecting his character, so far as his character appears in that conduct and no further :

பொது வாழ்விலே ஈடுபட்டவர்கள், அமைச்சர்களாக இருந்தாலும் சரி, அதி காரிகளாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்கள், அரசுப் பணி ஆற்றும்போது, அவர்கள்மீது குற்றச்சாட்டுகள், குறைபாடுகள், ஊழல் கள் இருந்தால் அவைகளைப் பத்திரிகைகள் வெளியிடலாம். 'குட் பெயித்' உண்மையின் அடிப்படையிலே, ஆதாரத்தின் அடிப்படையிலே இருக்க வேண்டும். ஒரு பத்திரிகை ஒரு செய்தியை வெளியிடும்போது, அந்தச்



செய்தியில், சற்று ஆதாரம் இருக்கிறதா என்று ஆய்ந்துதான் வெளியிடும். மக்கள் நலன் கருதி செய்திகளை வெளியிடுகிறபோது அந்தச் செய்தியில் உண்மை இருக்கிறதா என்பதை ஆராய்ந்துதான் வெளியிடுவார்கள். அப்படி ஆராய்ந்து வெளியிடும்போது, 'குட் பெயித்' என்ற ப்ரோவிசோவில் அவர் களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் காக்கப்படுகிறார்கள்' எனவே அவர்கள் உரிமை பறிக்கப்படவில்லை. அரசியல் சட்டத்திலேயே ஜீவாதார உரிமைகளைத் தந்துவிட்டு, 'ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன்ஸ்' என்று சில கட்டுப் பாடுகளை விதிக்கிறார்கள். இங்கே சில கட்டுப்பாடுகளை விதித்து, 'குட் பெயித்' என்று உரிமைகள் சிலவற்றைத் தந்திருக்கிறார்கள். அதை மீறி, எந்தப் பத்திரிக்கையின்மீதும் ஒரு அரசு வேண்டுமென்றே செய்தி வெளியிட் டார்கள் என்ற காழ்ப்புணர்வோடு நடவடிக்கை எடுத்துவிட முடியாது. அந்த அளவிற்கு இந்தச் சட்டம் பத்திரிகைகளுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. முழுக்க முழுக்க உண்மைக்கு மாறான செய்திகளை, பொய் யையே பரப்பி, அதை உண்மையாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்திகளை வெளியிடுபவர்கள் அல்லது 'கிராஸ்லி இன்டீசன்ட்' என்ற அளவிற்குக் கேவலமான, அசிங்கமான செய்திகளை வெளியிடுகின்ற வர்கள் நாட்டுக்கு நன்மை செய்தவர்கள் ஆகமாட்டார்கள். 'குட் பெயித்' என்று பல தீர்ப்புகள் சொல்லியிருக்கிறார்கள். அதில் அவர்கள் 'கவர்' ஆகாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு சந்தோஷம் அவர்கள் சொன்னது போல, நீதிமன்றங்களின் பல தீர்ப்புகளை படித்துப்பார்த்தால், கிராஸ்லி இன்டீசன்ட் & அப்சினிட்டி பொறுத்தவரைக்கும், கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் எதையெதை தமிழர் பண்பாட்டுக்கு ஏற்ப கேவலம், அசிங்கம் என்று எண்ணு கிறோமோ அதையெல்லாம்கூட காமசூத்திரத்தைக் காட்டி, அசிங்கமான தல்ல, கேவலமானதல்ல என்று எடுத்துக் காட்டியுள்ளன. அதன் காரண மாக 'குட் பெயித்' எந்த அளவிற்கு அவர்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றுகிற தென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டத்திலே நேரடியாக விதிகளைப் பார்க்கும்போது, பாதுகாப்பு இல்லை யென்றாலும், குட் பெயித் என்ற பெயரிலே அளவுக்கு மீறிய பாதுகாப்பு தரப் பட்டிருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்புகளை சட்டங்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவையும் மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவார்கள்.

திரு. செ. முத்துசாமி : அமைச்சரவர்கள், குட் பெயித் என்ற வார்த்தைக்கு விளக்கம் தந்தார்கள். நம்முடைய அமைச்சரவர்கள் வழக்கறிஞர். நீதி மன்றங்களுக்குச் சென்று, குட் பெயித்தானா அல்லது அதற்கு எதிரானதா என்று நிரூபிக்கப்பட்ட பிறகு வரவேண்டிய தீர்ப்பு பற்றிச் சொன்னார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்படும் அச்சமே, சுற்றறிக்கை விட்டால்கூட, ஜாமீனிலே வெளியே வர முடியாமல், போலீஸ் உள்ளே பிடித்துப் போட்டு விடுவார்களே என்பதுதான். ‘ அதிகாரிகள் மனது புண்படும்படியாக ’ என்ற வாசகங்கள் வருகின்றன. ஒரு சின்னப் பத்திரிகை, 15 நாட்களுக்கு அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு தடவை வரும் பத்திரிகையில் நிர்வாகத்தில் இருக்கும் குறைபாடுகளைச் சொல்லும்போது, அவர்கள் போலீசுக்குச் சொல்லுவார்கள். அப்போது நீதிமன்றத்திற்குப் போய்தான் வெளியே வர வேண்டும். அப்போது எங்களால் காசு செலவழித்து வர முடியுமா? அதற்குப் பாதுகாப்பு என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அதற்குப் பாதுகாப்பு நீதிமன்றங்கள்தான். காரணம், தவறான தகவல்களை வைத்துக்கொண்டு காழ்ப்புணர்வோடு ஒருவர்மீது நடவடிக்கை எடுத்தால்,

he is definitely subject to structures to be passed by the judiciary.

அவர் அதிலிருந்து தப்பிக்க முடியாது. குட் பெயித் என்ற பிரிவின்கீழ் பத்திரிகைக்காரர்கள் தப்பித்துக்கொள்ளும்போது, நியாயமான முறையில் பிரசாரம் செய்து அதற்கு நீதி மன்றத்தில் பாதுகாப்பு கொடுக்கும்போதும், தவறான முறையில் நடவடிக்கை எடுத்தார்கள் அதிகாரிகள் என்று அவர்களைச் சுட்டிக்காட்டுகிறபோதும், அதிகாரிகள் பாதகத்திற்கு உள்ளாவார்கள் என்பதை நடைமுறையில் உள்ள தீர்ப்புகளின் அடிப்படையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரிவைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மத்திய அரசை, மாநில அரசு மதிக்காமல் கொண்டு வந்து உள்ளது என்று சொன்னார்கள். இல்லை. மத்திய அரசு ஒப்புதல் பெற்றுத்தான் கொண்டு வந்திருக்கிறோம். மத்திய அரசு ஒப்புதல் பெறாமல் கொண்டு வரவில்லை. பிரதம அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களை மதிக்காமல் கொண்டுவரவில்லை. ராஜ்ய சபாவில் ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட மசோதா, லோக் சபையில் வருமளவிற்கு நடவடிக்கை



எடுத்து வருகிறார்கள். 1960 ஆம் ஆண்டு, நமது ஆட்சியில்லை. நாமெல்லாம் ஒன்றாக இருந்தபோது கூட இல்லை. காங்கிரஸ் ஆட்சியின்போது கொண்டுவரப்பட்டதென்று கூறி, எந்தப் பத்திரிகைக்கும் எதிராக இந்தப் பிரிவு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்தச் சட்டத்திற்கு அங்கீகாரம் எங்கே பெற்றீர்கள் என்று நான் குறிப்பிடவில்லை. இந்த நாட்டின் பிரதமர் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்னாலேதான் எல்லா மாநில அரசுகளுக்கும், பத்திரிகைகளின் உரிமைகளை ஒடுக்கக்கூடாது என்று சுற்றறிக்கை அனுப்பி, அது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அப்படியுள்ள சூழ்நிலையில் அதை இந்த அரசு மதிக்கவில்லை என்றுதான் சொன்னேன். இதற்கு அங்கீகாரம் பெறவில்லை, ஒப்புதல் பெறவில்லை என்று குறிப்பிடவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சரவர்களிடம் ஒரேயொரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ‘ஸ்கரிலஸ் ரைட்டிங்’ குறித்து நடவடிக்கை எடுக்கும்போது, அதிகாரிகளே இதுதான் ஸ்கரிலஸ் ரைட்டிங் என்று முடிவு கூறுவார்களா அல்லது பத்திரிகைகளுக்கு ஒரு வாய்ப்பு தரப்படுமா? எந்த ஆதாரத்தின் அடிப்படையில் செய்திகள் வெளியிட்டிருக்கிறீர்கள் என்று கேட்டு, அதற்குப் பிறகு கைது செய்வது, ரிமான்ட் செய்வது போன்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ? எப்படி இதைச் செயல்படுத்தப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பத்திரிகையிடம் விளக்கம் கேட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது இதில் இல்லை. தேவையும் இல்லை என்று கருதுகிறேன். ஆனாலும் குறிப்பிட்ட செய்தி ஸ்கரிலஸ் ஆக இருக்கிறதா என்பதற்கு

Normally the provision is being invoked on receipt of a Complaint from the affected parties.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது, ஆளும் கட்சியினர் அவர்களுக்கு ஆகாத செய்தி வரும்போது நடவடிக்கை எடுக்க காவல் துறையைப் பயன்படுத்துவார்கள் என்று சொன்னார்கள். அப்படியல்ல. ஆளும் கட்சிக்குச் சொந்தமான ஐ.பி.சி.தான் எதிர்க் கட்சிக்காரர்களுக்குச் சொந்தம், அமைச்சர்களுக்குச் சொந்தமான ஐ.பி.சி. தான் பொது மக்களுக்கும் சொந்தம். யார் வேண்டுமானாலும் கம்ப்ளெயின்ட் கொடுத்து, பாதிக்கப்பட்டவர்கள்

**(நண்பகல் 12-00)**

If one gives a compiaint to the Pclice, the Police is bcund tc take cognizance of it. அந்த நடவடிக்கையை எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லும்போது மத்திய அரசு, பிரதமர் அவர்கள் ஒரு சர்குலரை அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். அது பத்திரிகைகளைப் பாதுகாப்ப தற்காக அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. அதே பிரதமர் அவர்களுடைய அரசிலிருந்துதான் இதற்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால் யார் மீதும் காழ்ப்புணர்வோடு இச்சட்டம் அமுல்படுத்தப்படாது என்று சொல்லி, இந்த மேலவை இச்சட்டமுன்வடிவை ஏற்க வேண்டுமென்று கேட்டு, அமை கிறேன்

**திரு. ம. சங்கரலிங்கம்** : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தின் போது, இதைப் பின்வலிப்பார்கள் என்று நான் நம்பிக்கொண்டிருந்தேன். இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லா உறுப்பினர்களும் இதனுடைய அம்சங்களை, ஜனநாயகத்தை இது எந்த அளவுக்கு பாதிக்கிறது என்பதையும், பத்திரிகை சுதந்திரத்தை எந்த அளவுக்கு அடக்குகிறது என்பதையும், ஜனநாயகத்தைக் குழி தோண்டி புதைப்பதற்கு முன்மாதிரியாக அமைகிற ஒன்று இது என்பதையும் அழுத்தமாக எடுத்துச்சொல்லியும் கூட, அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி, சட்டமுன்வடிவை நிறைவேற்ற இருப்பதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. சங்கரலிங்கம், திரு. ஆற்காடு நா. வீராசாமி ஆகியோர் வெளிநடப்பு செய்தனர்.)

**திரு. க. இராமமூர்த்தி** : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய பதில் மிகுந்த அளவில் வாதத் திறமையோடு அமைந்திருந்தாலும் கூட, சில நுணுக்கமான பாதுகாப்புகள் எதிர்க் கட்சியினருக்கு இல்லாது போகிறது என்கிற காரணத்தாலும், பத்திரிகைகளுக்குப் பெருமளவுக்கு ஒரு மிரட்டலே இதன் மூலம் ஏற்படுகிறது என்கிற காரணத்தாலும், அமைச்சர் அவர்களுடைய பதில் பாதுகாப்பாக இல்லை என்கிற வருத்தத்தைத் தெரிவித்து எங்களுடைய கட்சி வெளிநடப்பு செய்கிறது.

(திரு க. இராமமூர்த்தி வெளிநடப்பு செய்தார்.)





THIRU J. M. MIAKHAN: On behalf of the Indian Union Muslim League, I also join the walk-out. This Bill deprives the freedom of the Press and also the freedom of the people. I consider that the explanation given by the Hon. Minister is not sufficient. Therefore, I also join the walk-out.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களும் எழுப்பிய அச்சத்துக்கு, அதைப் போக்குகின்ற வகையிலே அமைச்சருடைய பதில் அமையாத காரணத்தாலே நானும் வெளிநடப்பு செய்கிறேன்

**(மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்பு செய்தார்.)**

**திரு. செ. முத்துசாமி** : அமைச்சரிடத்திலிருந்து ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். தயவுசெய்து அனுமதிக்க வேண்டுகிறேன்.

(மாண்புமிகு துணைத் தலைவர் மணி அடித்தார்)

ஒரே ஒரு விளக்கம் தான். அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று நீதியைப் பெற இதிலே வழிவகை இருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஒப்புக்கொண்டுதான் சொல்கிறேன். 'பெயில்' பெற ஒரு மனிதன் நீதிமன்றத்திற்கு எவ்வளவு நாட்கள் நடக்க வேண்டி வரும்? எத்தனை வழக்கறிஞர்களை சென்று அவன் பார்க்க வேண்டியிருக்கும். சங்கம் நடத்திக்கொண்டிருக்கிற என் போன்றவர்களை மனதிலே கொண்டுதான் சொன்னேன். **போலீசார் பிடித்துக்கொண்டு போனால்,** பின் எவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டி வரும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். சுற்றறிக்கை அனுப்பிய பிறகு ஏற்படக்கூடிய ஆபத்தைச் சொன்ன பிறகும். . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அமைச்சர் அவர்கள் கூடுமான வரை பரிமேலழகருக்கு மேல் அதிகமாக விளக்கம் சொல்லி விட்டார்கள். திரும்பத் திரும்ப (சிரிப்பு)

**திரு. செ. முத்துசாமி** : பரிமேலழகருடைய உரையே சாதாரண தமிழ் படித்த சிலருக்குப் புரியவில்லை.

## 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடை முறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982)



(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். தீர்மானத்தை துணைத் தலைவர் வாக்கெடுப்புக்கு விட்டபிறகு அமைச்சர்களையும் உறுப்பினர்களையும் அனுமதிக்க முடியாது.

அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1982 ஆம் ஆண்டு, இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, இந்திய தண்டனைச் சட்டக் கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சனை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1982 ஆம் ஆண்டு, இந்திய தண்டனைச் சட்ட கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1982) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





## (2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1982).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1982) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

**திரு. க. இராமமூர்த்தி.** தலைவரவர்களே, I raise a point of order இந்தச் சட்ட முன்வடிவை ரெட்ராஸ்பெக்டிவ் ஆகக் கொண்டு வந்திருக்கிறார்கள். 8-11982-லிருந்து இது அமுலுக்கு வருகிறது. பல்வேறு சம்பவங்கள் நடைபெற்று, அவை அரசின் கவனத்திற்கு வந்த காரணத்தால், அந்த அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்-ஐ அறிய சட்ட முன்வடிவிலே அதை இணைத்திருக்கிறார்கள்.

---

@ 267-276 ஆம் பக்கங்களில் இணைப் V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

" Whereas having regard to the resources and influence of the persons by whom, the large scale in which and the manner in which the dangerous activities are being clandestinely organised and carried on in violation of law.

ஆகவே தலைவரவர்களே, பணம் படைத்தவர்களால், செல்வாக்கு மிக்கவர்களால் அவர்களுடைய தூண்டுதலால் சில சம்பவங்கள் நடைபெற்றது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிற காரணத்தால், இது அவசியமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிற காரணத்தால், இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன, எப்படி நடைபெற்றிருக்கின்றன என்பதை இந்த அவையின் கவனத்திற்குத் தெரிவித்து விட்டால், இதைப்பற்றி விவாதிக்க வாய்ப்பாக இருக்கும். இதைப்பற்றி ஒரு பின்னணியே இருப்பதால், இந்தப் பிரச்சினை சம்பந்தமான செல்வாக்கு படைத்தவர்கள் யார் என்பதைப்பற்றித் தெரிவித்த பிறகு தான், விவாதத்தைத் துவங்க முடியும். அமைச்சர் அவர்கள் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்-ல் இதையும் சேர்த்துக் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதையும் கொடுத்த பிறகு, இன்னொரு நாள் இதைப்பற்றி விவாதத்தை அமைச்சர் அவர்கள் துவங்கலாம். அப்படி இல்லையென்றால், அமைச்சர் அவர்கள் முன்னுரையாவது தர வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, என்னென்ன காரணத்திற்காக, என்னென்ன குற்றங்களுக்காக இது கொண்டுவரப்படுகின்றது, நோக்கம் என்ன என்பது பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஐ.பி.சி. போன்ற சட்டத்தின்கீழ், குற்றங்கள் நடந்தும் கூட, குற்றவாளிகள் அவர்கள், மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருக்கிறது. 'ஆர்டினன்ஸ்' போட்டது கூட 'பிராஸ்பெக்டிவ்' தான். கடந்த காலத்தில் என்ன நடந்திருக்கிறது என்பதை நான் சொல்லப்போனால், பல பக்கங்கள் வந்துவிடும். என்னுடைய விளக்கத்தில் இதைப்பற்றிச் சொல்கிறேன்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு



பற்றி சிலவற்றைச் சொல்ல முற்படுகிறேன். எல்லாவற்றையும்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலே ஆட்சேபம் இல்லை. ஆனால் 'குண்டர்கள்' என்கிற வார்த்தை இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. குண்டர்கள் யார் என்பதற்கான தெளிவான வரையறை இல்லை, விளக்கம் இல்லை. அப்படி இல்லாததால் குண்டர்கள் என்று கூறி, வேண்டாதவர்களை ஒடுக்குகின்ற, அடக்குகின்ற நடவடிக்கையில் ஈடுபட முடியும். "தாமாகவோ அல்லது கூட்டத்தில் ஒருவராகவோ அல்லது தலைவராகவோ" இருப்பவர் என்று குண்டர் என்பதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அப்படி குறிப்பிடும்போது ஒன்றை நான் குறிப்பிட வேண்டும். சாதாரணமாக எங்களைப்போல் இருப்பவர்கள், சங்கம் வைத்து நடத்துகிறவர்கள், அந்தச் சங்கத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுடைய நன்மையைக் கருதி, சில போராட்டங்களைச் சொல்லி, திட்டங்களை வகுத்து, அதிலே ஈடுபட முனைகின்றபோது, அவர்களை அழைத்து வைத்து பேச்சு வார்த்தை நடத்தும்போது, அதிகார வர்க்கத்தினர் அவர்கள் மீது இச்சட்டத்தைப் பயன்படுத்தி வழக்குத் தொடர வாய்ப்பு இருக்குமோ என்கிற அச்சம், ஐயப்பாடு என்னைப் போன்றவர்களுக்குத் தோன்றுகிறது. அப்படி இல்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும். ஆகவே, இப்படி ஈடுபடுவதை ஆபத்த நடவடிக்கை என்று

(பிற்பகல் 12-10)

குறிப்பிடுகிறார்கள். ஈடுபட்டால் கூட பரவாயில்லை, ஆனால் ஆபத்த நடவடிக்கை என்று சொல்லும்போது, நான்கு பேரை அழைத்து வைத்துப் பேசினால் கூட, அவர்கள் மீது இந்தச் சட்டம் பாயும் என்ற அச்சத்தைச் ஏற்படுத்துகிறது.

'பொது அமைதியைப் பாதிப்பதாகத் தோன்றினால்' என்று இருக்கிறது. அந்த 'தோன்றினால்' என்ற வார்த்தையை எடுத்துக்கொண்டால், அது அவர்களுடைய மனநிலையைப் பொறுத்துதான். 'தோன்றியது' என்ற வார்த்தையை நீக்கிவிடவேண்டும். சாதாரணமான விஷயங்களிலே கூட 'தோன்றுகிறது' என்று சொல்லி வேண்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க

கூடிய, வேண்டாத சங்கங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய,வேண்டாத அரசியல் கட்சிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போதைப் பொருள் விற்பனை என்ற தலைப்பிலே வரும்போது, பயணம் செய்பவர்கள் பஸ்களிலும் பயணம் செய்கிறார்கள், இரயிலிலும் பயணம் செய்கிறார்கள். அப்படி பயணம் செய்யும்போது, சிலர் தூங்கிக் கொண்டு செல்கிறார்கள். அப்படி அவர்கள் தூங்கிக்கொண்டு செல்லும்போது, அவர்கள் அறியாமலே கூட அவர்களுடைய பாக்கெட்டிலேயே பைகளிலேயே சில பொருள் களைப் போட்டுவிட்டு, அவர்களைத் திட்டமிட்டு கைது செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். அப்படியொரு நிலைமை ஏற்பட்டால், பிறகு அதைத் தடுக்க எந்த விதமான சூழ்நிலையும் இருக்காது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, 'உடந்தையாக இருப்பவர்கள்' என்றெல்லாம் இதிலே இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். ஒரு மோட்டார் சைக்கிளிலே போய் கொள்ளை யடித்தார்கள்; அது "இந்தியன் 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகை நிருபருடைய மோட்டார் சைக்கிள்; அதிலே போய் கொள்ளையடித்தார்கள் என்று சொன்னார்கள். அபபடிச சொல்லி அத்தோடு நிறுத்திவிட்டு மறுநாள் அதற்கு விளக்கம் தந்தார்கள். அதற்கிடையிலே 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை ஒருசிலர் ஸ்கூட்டர் அல்லது கார் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் ஒருசிலர் ஸ்கூட்டர் அல்லது கார் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவருடைய நண்பர் இரவல் கேட்பார்; அப்புறம் ஏதாவது நடந்துவிட்டால், அவற்றுக்கெல்லாம் பொறுப்பு அந்த ஸ்கூட்டர் யாருடையதோ அவர் தான் என்று சொன்னால், அதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

நன்கொடை வசூலிக்கும்போது, பிறர் நிலத்திலே கட்டிடம் கட்டுபவர் களுக்கு நிதி உதவி செய்வதே தவறு என்று இருக்கிறது. அப்படி கட்டிடம் கட்டுபவர்களுக்கு நிதியுதவி செய்வது தவறு என்று போடப்பட்டிருக்கிறது சமூக நலத்தின் அடிப்படையிலே, பொது நோக்கோடு 'நாங்கள் கட்டிடம் கட்ட இருக்கிறோம், உதவி செய்யுங்கள்' என்று கேட்கும்போது கட்டிடம் கட்டுவதற்கு பணம் தருவது நன்கொடை தருவது தவறு என்று சொன்னால்



எப்படி? அவர்கள் எந்த நிலத்திலே கட்டப்போகிறார்கள், எங்கே கட்டப் போகிறார்கள் என்றெல்லாம் நாம் பார்த்துக் கொடுக்க முடியுமா? ஆகவே, இப்படி நிதி தருபவர்கள் அகப்படுவார்கள், தண்டிக்கப்படுவார்கள் என்று சொன்னால் கட்டிடம் கட்டுபவர்கள் செய்யும் இந்த ஆக்கிரமிப்புக்கு, அவர் களின் தவறுக்கு நிதி தருபவர்களை எப்படி கட்டுப்படுத்த முடியும்? இதையும் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, தடுப்புக் காவலில் கைது செய்தால் அதற்கான காரணத்தை ஐந்து தினங்களுக்குள்ளாக தரலாம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஐந்து தினங்கள் என்று சொன்னால் நான்கு தினங்கள் யாரை வேண்டுமானாலும் உள்ளே வைத்துவிட்டு, 5 ஆவது தினம் வெளியே விடலாம். இது நியாயம் தானா? எந்தக் குற்றமும் செய்யாத ஒருவனை நான்கு நாட்கள் உள்ளே வைக்கும் வாய்ப்பு இந்தச் சட்டத்தின் வாயிலாகக் கிடைக்கிறது. ஒருவரைக் கைது செய்தால், அதற்கான காரணத்தை அன்றே சொல்ல வேண்டும் என்ற அளவிலே அதற்குத் திருத்தம் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்முறையீடு மிகவும் விரைந்து செய்யப்படும் என்று இருக்கிறது. அதற்குக் காலக்கெடு இல்லை. அப்படி காலக்கெடு இல்லாததால், அதிகாரிகள் காலம் கடந்தது என்று சொல்லி அவர்களே தள்ளிவிடக்கூடும். பொதுநலனுக்கு உகந்ததாகது என்று கூறி காரணமே காட்ட வேண்டாம். என்று இருக்கிறது; இது அதிகாரிகள் உகந்ததாகாது என்று கூறி காரணமே காட்டவேண்டாம் என்று இருக்கிறது.தங்களுடைய இஷ்டப்படி அல்லது ஆட்சியிலே இருப்பவர் களின் இஷ்டப்படி சிலரை அடக்க பயன்படும். ஆகவே, இதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆலோசனைக் குழு என்ற ஒன்று இருக்கிறது. ஆனால், அதன் முன்னாலே வழக்கறிஞரை வைத்து வாதாடக் கூடாது என்று இருக்கிறது. அது எப்படி ஜனநாயகம் ஆகும்? ஆலோசனைக் குழுவிலே வழக்கறிஞரை வைத்து வாதாட வாய்ப்பில்லை என்று சொன்னால், அங்கே விவரங்களைத் தெரிவிக்க என்ன செய்வார்கள்? ஆகவே, நிரபராதிகள் தண்டனைக்கு ஆளாகும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதையும் பரிசீலனை செய்யவேண்டும்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம்) [1982 மார்ச் 1

மாநில அரசு ரத்து செய்யலாம் என்றும், அப்படிச் செய்தாலும் அதிகாரிகள் மீண்டும் பிடிக்கலாம் என்றும், மீண்டும் அரசு ரத்து செய்யலாம் என்றும் ஆனால் மீண்டும் அதிகாரிகள் பிடிக்கலாம் என்றெல்லாம் இருக்கிறது. இது எதற்கு வழிவகுக்கிறது என்று சொன்னால் பேரம் பேச, தன் கட்சிக்கு இழுக்க, சங்கங்களைத் தன் பிடியிலே வைத்துக்கொள்ள, 'உன்னைப் பிடிப்பேன், விடுவேன், நீ அந்தப் பக்கம் போனால் மீண்டும் பிடிப்பேன், மறுபடியும் விடுவேன்' என்று சொல்லி ஆளும் கட்சிக்கு ஆள் சேர்க்க உதவியாக இது இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தை நீக்க வேண்டும். இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் அரசின் மீதோ, அதிகாரிகள் மீதோ வழக்கு போடக்கூடாது என்று சொன்னால், இது ஜனநாயக நாடுதானா ? சர்வாதிகார நாட்டிலே போடும் சட்டத்தை ஜனநாயகத்தின் பெயரிலே இங்கே போடுகிறார்கள், ஆகவே, இதை எதிர்க்கிறேன், கண்டிக்கிறேன் என்று சொல்லி, தேசிய பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது, அது போதும் ; இதைத் திரும்பப் பெறுங்கள் என்று வேண்டி அமைகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

THIRU A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, Sir, I realise that this L.A. Bill No. 7/1982 has been brought with very good intentions by the Government. If I may remind the Government of an old saying, "the way to Hell is paved with good intentions". In my opinion, this Bill, although it has been brought with very good intentions, may result, not only may result, but will definitely result in certain misuse of powers by the officers of the Government.

I would like to invite the attention of the Hon. the Minister for Law and his colleagues in the Cabinet to the fact that the situation in our country today is such that lawlessness is on the increase and, at the same time, lawlessness amongst the law enforcement officers is also on the increase. It is exactly because of this mistrust of the law enforcement agencies that even good citizens like myself, who would normally welcome a law against



1982 மார்ச் 1] (Thiru A. R. Damodaran)

bootleggers, smugglers, immoral traffic offenders, slum grabbers and goondas have to express our doubts so that they may be borne in mind in the experience that the Government will gain in implementing this enactment.

Firstly, the wording of this Bill itself starts as follows: "Whereas public order is adversely affected every now and then by the dangerous activities of certain persons who are known as bootleggers, drug offenders, goondas, immoral traffic offenders and slum grabbers". Known to whom, Sir? Are they known to the Government, are they known to the Ministers, are they known to your legislators, are they known to your Police or are they known to your administrators? If they are so known, why is not the law being implemented by the Government's law enforcement agencies and why do they require a preventive detention Act against these so-called offenders? Sir, I am not entering a plea for these classes of offenders. Definitely, as a citizen who yearns for some degree of stability in our administration, I realise that there are classes of such people who are taking part and who are indulging in lawless acts. But, may I ask what are the Government's law enforcement agencies doing? Do they require a preventive detention law to prevent what happened in my hon. Friend's locality, in Chromepet, where in broad daylight, at 2.30 in the afternoon, 15 members of a drunken gang stabbed more than two or three persons in open daylight and could not be accosted by our law enforcement agency? Do you require a preventive detention law to prevent 10 people who had entered one of our suburban electric trains and snatched gold chins from defenceless women who were travelling in such trains? This enactment is a confession of the ineptitude and inefficiency of the Government's law enforcement agencies to prosecute offenders in a legal manner and it is only to give illegal powers to the law enforcement agencies to detain persons on grounds of suspicion. Sir, as a liberal person, I am opposed to all legislation which contemplates preventive detention. Preventive detention is a

(பிற்பகல் 12-20)

power that is given only in a Police State. The fact that the Government have brought forth L.A. Bill No. 3 of 1982 on which I did not speak and the present Bill L.A. Bill No. 7 of 1982, and so many other legislations that are being introduced at the present juncture amounts to a confession of the Government's failure to implement the laws that we have legislated in our Legislatures. The Government can detain a person for 12 months under this Ordinance. While I do not accuse the Government that they will use these powers against political parties, although that fear is being expressed by members of political parties, perhaps with reason, because there may be some instances of such use, I speak only on the ground that it is not right for a State to encourage its officers to detain persons on grounds of suspicion. 25 years ago, some of us would have welcomed such a measure without reservation. In 1982, even as a responsible member of the business community, I can tell you that there is so much abuse of power by executive authorities that I regretfully have to say that for such a measure, the Government will not have the support of those who believe in the due process of law. If these people are known to the Government, as the Government themselves have stated in the Bill, if the Government maintain a ledger where the Government have classified them according to their offences, what prevents them from taking action under the numerous laws that already exist in the country. If the Government had mentioned that they wanted to prosecute such persons and that the present laws were not sufficient to impose sentences, we would have whole heartedly welcomed this measure. But the giving of power to detain a person for a period of 12 months will, in my opinion, result in perhaps 10 innocent persons being detained, while the Government may be able to detain 90 guilty persons. On this point there is difference of opinion between the Treasury Benches and myself. I believe that under any enactment not even one innocent person should be detained. The Hon. Minister may say that it does not matter if 10 innocent persons are detained



because he is able to detain 90 guilty persons. This is the philosophy of all Governments. The Police are with the Government and the tendency to use the police for such purposes is deplorable and will result in the due process of law being eroded in various enactments being made by the legislature which will not stand the test of our Constitution. I do not want to go into the issue whether this legislation will stand that test. It may be declared constitutional but I just wanted to sound a note of caution because it is dangerous even for the Government to entrust such powers to the officers of the Government.

Another point I would like to mention and which my hon. Friend who preceded me has already mentioned is in regard to clause 8 of the Bill, namely, grounds of order of detention to be disclosed to persons affected by the order. The Bill states that within 5 days from the date of detention, the grounds under which a person has been detained shall be communicated to the person. But, in sub-clause (2) of clause 8, it is mentioned that "nothing in sub-section (1) shall require the authority to disclose facts which it considers to be against the public interest to disclose." When the Government detain a person under this provision, if he is not informed of the grounds of detention, how could he defend himself and that too, in the face of a prohibition that he cannot have a lawyer to defend himself? I am horrified that the Hon. the Minister for Law should contemplate prohibiting lawyers from appearing on behalf of a client. I could have understood another gentleman doing it but, being a lawyer himself, I do not know why he says that I cannot be represented by a lawyer when I can be detained for 12 months. There are some of us who are conversant with laws but we are unable to defend ourselves in Courts because there are many finer points of law which only a lawyer can understand. Why should the Hon. the Minister for Law prohibit lawyers from appearing for innocent persons who may be accused? The Hon. Minister should also realise that there may be innocent persons who may be brought under preventive detention. How is this person to defend himself if he is not given an opportunity? Therefore, I

would plead that this clause prohibiting lawyers from appearing on behalf of a detenu should be removed from this Bill.

Then, again, Sir, the law has been made applicable to the construction of unauthorised structures, particularly in urban areas. The Hon. Minister in charge of Housing and Slum Clearance knows how many persons are erecting those structures. But, is there a law which says that I can put up a hut or a house on Government land and is there no law to prevent the person from doing it ? The Hon. the Minister for Housing shakes his head I can tell him that half the unauthorised structures in Madras City are put up with the connivance of political parties, not merely political parties in the Opposition but also the political party in power. The Hon. Minister would realise the tremendous pressure that comes to him and I am sure my hon. Friend Thiru Jeppiyar must know of many such instances where he has brought to the notice of the Hon. Minister that very poor people are involved in such matters and that, therefore, the Government should take a lenient view. As a distinguished representative from Madras City, he must have made any number of representations and the Hon. Minister also must have very kindly permitted such unauthorised structures. But, my wonder is this. How do you require a fake Act to take action against the so-called unauthorised structures? It is happening under our very eyes, it is happening under the eyes of the officials of the Corporation of Madras and it is happening under the eyes of the officers of the MMDA, the Police authorities, the Slum Clearance Board and also the special squads that have been created to remove such unauthorised structures. That is why I said that the system of Government that exists today has paralysed all conceptions of integrity and morality in public administration. We have come to such a sorry pass that in spite of all these legislations we are not able to prevent such illegal acts. My point is that this is an entirely futile Bill and it is



not necessary at all. All that will happen is that you may apprehend a few persons before a Municipal Election or a Panchayat Election or a General Election and immobilise them from political activity. If that is your intention, then certainly it will not receive the support of responsible Members of the Legislature. I still feel, although the Hon. Minister will dismiss it and say that it is not out of political motivation, that innocent people are likely to be roped in under such Acts. The provision for preventive detention is a power that I would not lightly entrust to members of the bureaucracy in these days when there is a profound distrust of the powers that are being exercised. We have this in the Essential Commodities Act and we have this in other Acts also. In every Act, arbitrary powers are being given to Government officers and the amount of misuse is so horrifying that, ultimately, even where Members of the Legislature are not able to bring it to the notice of the Government, what happens is that it spills over into violent agitations in the streets and, then, we say that Law and Order has collapsed. I would plead with the Government not to introduce unnecessary, futile, totally unwarranted legislation when they have got enough powers in their hands. The only thing that is lacking is, as I mentioned on a previous occasion, the will to do things. If the will is not there, no law can be implemented and, unfortunately, the will of all our popularly elected Governments is sadly lacking in the enforcement of the due process of law in various enactments that have been made by the Legislature. I would plead with the Hon. Minister that, even though he may pass this Bill, like many other Acts, he need not implement it but may keep it in cold storage so that, if a necessity really arises, it could be used.

Thank you.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசவில்லை. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது,

என்னைப்பற்றிக் குறிப்பிட்டார். அதுவும் உதாரணத்திற்காகத்தான் எடுத்துச் சொன்னார்கள் என்பதும், வேறு நோக்கத்தில் அல்ல என்பதும் எனக்குத் தெரியும். என்றாலும் ஒரு விளக்கத்திற்காக இதைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்ற சம்பவங்கள் நடைபெறவில்லை, நடைபெறப் போவதுமில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைமையேற்றிருக்கிற தமிழ்நாடு பெட்ரோல் உரிமையாளர்கள் சங்கத்தினைச் சார்ந்தவர்கள் அரசுக்கும் மற்றும் ஹைவேசுக்கும் சொந்தமான பல்வேறு இடங்களை வளைத்துப் போட்டுக்கொண்டு அங்கே 'பெட்ரோல் பங்க்' வைத்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் வைத்துப் பேசுவது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, if any petroleum dealer has put up a petrol bunk on highways land unauthorisedly, the hon. Member may certainly bring it to the notice of the Government and the matter will be regularised. To my knowledge, no petrol bunk located on such land will be approved by the officers of the Company. Merely for replying to my point, the hon. Member has said something which has no credibility. What I mentioned was—I did not say that the hon. Member encourages the slum grabbers—that the hon. Member, particularly a very important member from Madras City would have had occasion to represent and perhaps the Hon. Minister might have considered such representations. There is no motivation against the hon. Member.

(பிற்பகல் 12-30)

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஏற்கெனவே அவசரச் சட்டமாக வந்து, இப்போது சட்ட முன்வடிவாக இந்த அவையின் முன் நிற்கிறது. தடுப்புக் காவல் அதிகாரத்தை இந்தச் சட்டம் தருகிறது. தடுப்புக் காவல் அதிகாரத்தை ஏற்று அதை நிறைவேற்றக் கூடியவர்கள் பெரும்பாலும் காவல் துறை அதிகாரிகள்தான். காவல் துறை அதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தைத் தருவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் யாரையாவது கைது செய்தால், ஐந்து நாட்களுக்குள் அதற்குரிய காரணத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் தர வேண்டும் என்பதற்குப் பதிலாக





அந்த விவரங்களைக் கொடுப்பதால், பொது மக்களுடைய நலனுக்குப் பாதகம் என்று கருதினால், அத்தகைய விவரங்களைத் தர வேண்டிய அவசியம் இல்லை என்ற முறையில் இச்சட்டம் உட்பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அம்சங்களைக் கொண்டிருப்பது, அபாயம் நிறைந்ததாகும். இதிலேதான் நோக்கங்கள் நுழைவதற்கு தாராளமாக இடமுண்டு. ஐந்து நாட்கள் அவகாசம் என்பதோடு மட்டுமல்லாமல், அந்த விவரங்களைத் தராமல் மறைத்துக் கொள்ளலாம் என்ற அளவிற்கு உரிமையை அவர்களுக்குத் தருவது என்பது சாதாரண இந்தியக் குடிமகனுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று பொருள். இப்படிப்பட்ட தடுப்புக் காவல் சட்டம் வருவது அபாயகரமானது. இதிலே ஐந்து பாதகங்களைச் செய்பவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சமா பாதகம் என்பது வேறு ஒன்றைக் குறிக்கும். நவீன காலத்தில் நம்முடைய அரசியல் சூழ்நிலையால், ஐந்து விதமான பாதகங்களைச் செய்யக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அதாவது ஒன்று 'பூட் லெக்கர்ஸ்'. இப்போதுள்ள அரசியல் அமைப்பிலே உள்ள ஜனநாயகக் கோளாறு காரணமாக இவர்கள் வாழ முடியும். இரண்டாவது "டிரக் அஃபெண்டர்ஸ்'—இவர்களும் அப்படித்தான் சமுதாயக் கோளாறு காரணமாக வாழ முடியும். மூன்றாவது குண்டர்கள். நான்காவது 'இம்மாரல் டிராஃபிக் அபெண்டர்ஸ்'. ஐந்தாவது 'ஸ்லம் கிராபேர்ஸ்'—இவர்களும் அப்படித்தான். சமுதாயக் கோளாறு காரணமாக வாழ முடியும். இந்த ஐந்துவிதமானவர்களும் ஜனநாயகத்தினுடைய பலகீனத்தால் உருவானவர்கள். இப்படி ஜனநாயக பலகீனத்தால் உருவானவர்களைப் போக்க எடுக்க வேண்டிய நடவடிக்கையை விட்டுவிட்டு, இதிலே உள்ள குறைபாட்டை உருவாக்கியவர்களே இப்படிப்பட்ட ஒரு கடுமையான தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டு வந்து தடுத்துவிடலாம், நீக்கிவிடலாம் என்று நினைப்பது, ஒரு கையைக் கொண்டு இன்னொரு கையை வெட்டும் முயற்சியாகும். எனவே இந்த முயற்சியே தவறான முயற்சி. இன்றைக்கு வந்திருக்கிற சட்ட முன்வடிவு அப்படித்தான் இருக்கிறது. உண்மையிலேயே இதற்குப் பலன் இருக்குமா என்றால், இல்லை. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நோக்கம் நல்ல நோக்கம் என்று குறிப்பிட்டார்கள். நல்ல நோக்கம் என்பது மட்டும் முக்கியமல்ல எப்படி நடக்கிறது என்பதுதான் முக்கியம். நடைமுறையிலே சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதுபற்றி

[திரு. ப. மாணிக்கம்] [1982 மார்ச் 1

உதாரணத்திற்கு ஒன்றைச் சொன்னார். குரோம்பேட்டை நிகழ்ச்சியைப பற்றிச் சொன்னார். அது நான் வாழும் ஊர். குற்றம் செய்தவரைப் பிடிக்க பல நாள் முயற்சி எடுத்து, பிறகு ஒருநாள் பிடித்தார்கள். அங்கே ஒரு வதந்தி உண்டு. அதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. குறிப்பிட்ட ஒரு பகுதியினருடைய ஆதரவினால்தான் அவர்கள் வாழ முடிகிறது. யாரால் அப்படி வாழ முடிகிறது? குற்றத்தைத் தடுக்க எந்தக் கருவியை அரசாங்கம் வைத்திருக்கிறதோ அந்தக் கருவியே பாழ்பட்டிருக்கிறது. ஐந்து பாதகமான குற்றத்தைக் களைய வைத்திருக்கக் கூடிய கருவிகளில் ஏற்பட்ட ஊனம்—வேறு வார்த்தை சொல்ல விரும்பவில்லை, சாதாரண மக்களுக்கும் தெரியும் அதிலே ஏற்பட்ட ஊழல்—தான் அந்த உயிர் வாழ்வதற்குக் காரணம். இந்தச் சட்டத்தின் மூலம் அதைப் போக்க முடியுமா என்றால், இல்லை. அவர்களால் தப்பிக்க முடிகிறது. ஒரு குறிப்பிட்ட நபர்தான் தப்பிக்க முடிகிறது கொடிய தப்பு செய்தவர் தான் தப்பித்து சிறிய குற்றம் செய்தவரை இந்தச் சட்டத்திலே மாட்டி வைக்க முடிகிறது. காரணம் அவருக்குள்ள செல்வாக்கு. இந்தச் சட்டத்திலேயே சொல்லப்படுகிறது. அவர்கள் அதிக சக்தி வாய்ந்தவர்கள், வசதி வாய்ப்பு உள்ளவர்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய காரியங்களைச் செய்துவிட்டு தப்பித்துக்கொள்ள முடிகிறது. அவர்கள் தங்களுக்காக ஏஜென்ட்டுகளை நியமித்துக்கொள்ள முடிகிறது. அவர்களால் எதையும் ஏற்பாடு செய்ய முடியும். அதனால்தான் இந்தச் சட்டம் பலனற்றதாக ஆகும் ஆபத்து இருக்கிறது. காரணம் எந்தக் கருவியைப் பயன்படுத்துகிறார்களோ அந்தக் கருவியையே பாழ்படுத்த முடிகிறது. அந்தக் கருவியைச் சீர்திருத்த வேண்டிய நடவடிக்கையை எடுக்காமல், பழுதுபட்ட அந்தக் கருவியை வைத்துக்கொண்டு, இந்த ஐந்து பாதகங்களைச் செய்தவர்களைப் பிடிக்க முயற்சித்தால், இந்தச் சட்டம் பலன் தராது. இப்படிப்பட்ட முறையிலே, மாநில அரசாக இருந்தாலும் சரி, மத்திய அரசாக இருந்தாலும் சரி நாட்டிற்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்படும்போது, தடுப்புக் காவல் அதிகாரத்தை வைத்துக்கொண்டால், எங்களால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் சாதாரண காலத்திலே இப்படிப்பட்ட தடுப்புக் காவல் அதிகாரத்தை



1982 மார்ச் 1]

அதிகாரிகளுக்கு அளித்தால்—ஒரு பழமொழி உண்டு— absolute power correcpts absolutely. —அதிகாரம் அதிகரிக்க அதிகரிக்க ஊழலும் அதிகரிக்கும். இந்த நாட்டிலே மட்டுமல்ல இந்த நிலை எங்கெல்லாம் அதிகாரம் தலை விரித்தாடுகிறதோ அங்கெல்லாம் அந்தச் சங்கடம் ஏற்படும். ஆகவே இப்படிப்பட்ட எல்லையற்ற அதிகாரத்தை மாநில அரசு ஏற்பது அதனுடைய நலனுக்கே உகந்ததல்ல என்று சொல்லுகிறேன். இப்படிப்பட்ட குற்றங்களைக் களைய எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இன்றைக்குள்ள சட்டத்தின் கீழே எடுக்கலாம். எந்தக் கருவியை அரசு பயன்படுத்தப் போகிறதோ, அது பாழ்பட்டு நிற்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் அது பாழ்பட்டதாக நான் கூறவில்லை. அது பாழ்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதைத் திருத்த பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் ஒன்றும் நிறைவேறாமல் போய்விட்டது. ஆகவே அவர்களைத் திருத்துவதற்கான முயற்சிகளை எடுக்காமல் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதன் மூலம் அந்த ஐந்து பாதகங்களையும் செய்பவர்களுக்குந்தான் இது பயன்படும் என்ற முறையில் இந்தச் சட்ட முன்வடிவை முழுவதுமாக நான் எதிர்த்து, அமைகிறேன்.

* திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையிலே நிறைவேற்றப்பட்டு, உங்களுடைய தலைமையில் இந்தச் சட்டமுன்வடிவு இந்த அவையில் நிறைவேற இருக்கிறது என்று எண்ணுகிறேன். நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டத்தை நிறைவேற்றி நாட்டிற்குத் தருவதற்கு முன்னால், இது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே கொண்டு வந்த சட்டம் என்று சொன்னார். ஏதேச்சாதிகாரத்தின் உச்சாணி கொப்புக்கு, ஆட்சித் தத்துவத்திலிருந்து மன்னர் ஆட்சித் தத்துவத்திற்கு இந்தச் சட்டம் முன் நின்றிருக்கிறது என்பதை தங்கள் மூலமாக இந்த அரசுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

குண்டர்கள் என்ற சொல் வட நாட்டு மொழிக்குச் சொந்தம் என்று கருதுகிறேன். ஆங்கிலத்திலே "ரௌடி" என்ற சொல் அதற்குப் பொருந்தும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அந்த அழகான சொல் தமிழில் இல்லாமல் போயிற்று.

**திரு. ஆர். டி. சீத்தாபதி** : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கும் ஒரு சொல்லைக் கண்டுபிடித்து தமிழகத்திற்குத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

ஆங்கிலத்திலே இருக்கின்ற சொற்றொடர்கள் அப்படி இருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : தீய சொற்கள் தமிழிலே வராமல் இருப்பது நல்லது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி** : இந்த ரௌடிகளைக் கண்டு அறிந்து பிடிப்பதற்கும், சர்க்காரின் நிலத்திலே குடிசை போடுகின்றவர்கள் அதுபோன்று தனியாருடைய நிலங்களிலே குடிசை போடுகின்றவர்களைத் தடுப்பதற்கும் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அது போன்று நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பிளாட்பாரத்திலே புதிதாகக் குடியேறிருக்கின்றவர்களையும் இதில் சேர்ந்திருந்தால், உள்ளபடியே இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்கு உள்பொருள் இல்லாமல் இருப்பதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். நடைபாதையிலே கடைகளைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ராஜாஜி சிலை அருகிலே இருக்கின்ற நடைபாதையிலேகூட மக்கள் நடக்கமுடியாத அளவுக்கு அவர்கள் கடை வைத்திருக்கிறார்கள் என்பதை நான் சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கள்ளச்சாராயம் விற்பதைத் தடுப்பது, குடிசைகள் போடுவதைத் தடுப்பது, விபசாரிகளைக் கைது செய்து ஓராண்டு காலம் சிறைச்சாலையிலே வைப்பது போன்றவை சம்பந்தப்பட்ட இந்த நான்கு குறைகளை நீக்க இந்த அரசு ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தின் கீழ் இதைச் செய்ய முடியுமா என்று கேட்டால், நிச்சயமாகச் செய்ய முடியும் என்பதுதான் என்னைச் சேர்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகும். ஆனால் அரசியல் உள்நோக்கம்





வைத்து தவறான விதிகளை இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாகக் கொண்டு வருகிறது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதைத் தெளிவாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சட்டமன்றத்திலே, மக்கள் மன்றத்திற்கு முன்னாலே எடுத்து வைத்த எண்ணத்தை நான் இப்போது மேலவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தான் பெற்றெடுத்த குழந்தைக்கு மார்பகத்திலே பால் தர முடியாமல் விபசாரம் செய்கின்றவர்கள் மீதும் இந்தச் சட்டம் பாய்கிறது. அதே நேரத்திலே நகைகள் வாங்குவதற்கு, இம்பாலா காரிலே போவதற்கு தன்னுடைய கற்பை விலை கூறுகின்றவர்கள் மீதும் இந்தச் சட்டம் பாய்கிறது. இந்த இரண்டு பேர்கள் மீதும் ஒரே சட்டம் தான் பாய்கிறது. மக்களில் நலிவுற்றவர்கள் மீது இந்தச் சட்டத்தைப் பாய்ச்சி இவைகளைத் தடுத்து நிறுத்த முடியும் என்று எந்த சர்க்கார் கருதினாலும், அது பயித்தியக்காரத்தனம் என்று நான் சொல்லவில்லை, நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன். அந்த நலிந்துள்ளவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு நம்மால் முடிந்த திட்டங்களைப் போட்டு அவைகளை நிறைவேற்ற ஈடுபட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். இந்திய பிரதமர் அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தபோது என்ன சொன்னார்கள்? நாட்டிலே இருக்கின்ற சமுதாய விரோதிகளை அடக்க வேண்டும் என்றுதான் கொண்டுவந்ததாகச் சொன்னார்கள். அரசியல்வாதிகள் மீது அந்தச் சட்டம் நிச்சயமாகப் பாயாது என்று ஒரு உறுதி மொழியையும் சொன்னார்கள். அன்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அதை பாராளுமன்றத்திலே அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கப்பட்ட நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அதை ஆதரித்தார்கள். காலப்போக்கில் அந்தச் சட்டம் யார் மீது பாய்ந்தது என்று சொன்னால், அது ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் மீது, திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் மீது, இங்கே இருக்கின்ற திரு நீல நாராயணன் மீது, திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மீது பாய்ந்தது. அதற்குப் பின்னால் அவர்கள், "நான் அதிகாரிகளை நம்பிவிட்டேன். அதிகாரிகள் தவறு செய்துவிட்டார்கள். அதற்காக நான் வருத்தம் தெரிவிக்கிறேன்" என்று நாட்டிற்கு அறிவித்தார்கள் என்பதை இந்த நேரத்திலே

தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு, ஒரு நேரத்தில் முதலமைச்சர் அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும் பதில் சொல்லக்கூடும். "அந்த அதிகாரிகள் தவறு செய்துவிட்டார்கள். அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிறோம்" என்று சொல்லிவிடக் கூடும். அதனால் ஏற்படுகின்ற இன்னல்களையும், கஷ்டங்களையும் அனுபவிப்பவர்கள் யார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். சில அதிகாரிகள் இருக்கிறார்கள். நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. ஒரு அழகான பெண், அபலைப் பெண் இருக்கின்றாள் என்றால், அவளிடம் சென்று ஒரு மணி நேரம் வருகிறாயா அல்லது ஒரு ஆண்டு உள்ளே இருக்கிறாயா என்று கேட்டு அவர்கள் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்பதில்லை. அது முடியும். அப்படி அவர்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்த சர்க்கார் செய்ய வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்திலே இந்தச் சட்டத்தைக் கொண்டு மனது வைத்தால் கைது செய்யலாம். இப்படிப்பட்ட நிலைமைகளிலே ஏதேனும் ஒரு முறையை வைத்து நீதிமன்றத்திலே விடுதலை பெற வாய்ப்பு வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்களைப் பழி வாங்க வேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், இதைச் செய்யலாம். இந்த சட்டத்தினால் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று எதிர்க் கட்சியிலே உள்ள நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். நாம் 18ஆம் நூற்றாண்டில் லூயி மன்னன் ஆட்சிக் காலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன், அவன் காலத்தில் பாஸ்டில் சிறையில் உள்ளே போய்விட்டால், வெளியே வர முடியாது. அந்த நிலைக்கு நாம் மீண்டும் போகக் கூடாது. நம்மை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் உணர்வுகளைத் தெரிந்துகொண்டு நாம் சட்டம் இயற்ற வேண்டும். இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை நான் வன்மையாகக் கண்டித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது நான் சில கருத்துக்களை சமுதாயக் கண்ணோட்டத்தில், ஒரு முற்போக்கான முறையில் வைக்க விரும்புகிறேன்.



சமுதாயக் கடமை என்ற அளவில் எனக்கும் பொறுப்பு உண்டு. அரசுக்கும் பொறுப்பு உண்டு. இன்றையதினம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறார்கள். 'நோய் நாடி, நோய் முதல் நாடி' என்று நம்முடைய மூதாதையர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த விஷயத்தை எல்லோரும் அறிவார்கள். அதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது நோய் நாடி, பின் அதைத் தீர்ப்பதற்காக முயற்சி எடுக்க வேண்டும். நோய் முதல் நாடி என்பார்கள். அதாவது அந்த நோயைத் தீர்ப்பதற்கான யோசனைக்கு வர வேண்டும். நான் குறுகிய காலத்தில் என் கருத்துக்களைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இன்றைக்கு கள்ளச் சாராயத்தினால் மக்கள் உடல்நலம் பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே அதற்கு ஒரு திட்டத்தை அரசு வகுத்து, அதைச் செய்துவருகிறது. அதை நான் ஏற்கெனவே வரவேற்றிருக்கிறேன். அந்த நேரத்திலேயே ஒரு கருத்தைச் சொன்னேன். சமுதாயத்தில், தெரிந்தோ தெரியாமலோ நெடுங்காலமாக கள்ளச்சாராயம் காய்ச்சுவது என்பது ஒரு குடிசைத் தொழிலாக, சாதாரண மக்களால், வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களால், வாழ வழியில்லாமல் இருப்பவர்களால், தமிழ்நாட்டில் 10 ஆயிரம், 20 ஆயிரம், 30 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்களால் இன்றைக்கும் செய்யப்பட்டு வருகிறது என்பது அரசுக்குத் தெரியாததல்ல. அரசுக்கு இருக்கின்ற சங்கடம் எல்லாம், லைசென்ஸ் இல்லாமல் செய்கிறார்கள் என்பது தான். நான் அரசாங்கத்தை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் காய்ச்சிக்கொண்டிருக்கிறார்களே என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அரசாங்கத்திற்கு என்ன சொல்கிறேன் என்று சொன்னால், கூட்டுறவு அமைச்சராக இருப்பவர் சட்ட அமைச்சராகவும் இருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற தொழிலுக்கு வந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு வாழ்வு கொடுத்தாக வேண்டும். அவர்களுக்கு ஏதாவது பண்ணியாக வேண்டும். சாராயம் காய்ச்சுவது தவிர வேறு தொழில் செய்யத் தெரியவில்லை. அதனாலேதான் அவர்கள் அப்படிப் பண்ணுகிறார்கள். தயவு செய்து அரசு அதைப்பற்றி நல்ல நோக்கத்தில் சிந்திக்க வேண்டும். அப்படி காய்ச்சுவதற்கு லைசென்ஸ்கூட கொடுத்துவிடலாம். இப்படிச் சொல்வதால் நான் குடிப்பதை 'அப்ரூவ்' பண்ணுகிறேன் என்று எண்ணக்கூடாது. அவர்கள் பானையிலே வடித்துக் காய்ச்சுவது

நல்ல சாராயமாக இருக்க என்ன செய்யலாம் என்று பயிற்சி கொடுக்கலாம். அதை நடைமுறையிலே கிராமங்களிலே அல்லது தாலுக்கா மட்டத்திலே செய்யலாம். அதனால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்க முடியும். 30 ஆயிரம், 40 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கலாம். அந்தக் கள்ளச் சாராயத்தை நல்ல சாராயம் ஆக்கிவிடுங்கள். அவர்களுக்கும் வாழ்வு கொடுங்கள். நோய் நாடி முதல் நாடி என்பது போல சட்டம் கொண்டுவருவதிலே ஆட்சேபணை இருக்க முடியாது. சட்டத்தை யார் கையில் கொடுத்தாலும், அப்படித்தான் இருக்கும். சில நேரங்களில் பாதகம் ஏற்பட்டுவிடுகிறது. அப்படி பாதகம் தலைதூக்கிய பிறகு, பாதகம் வந்துவிட்டது என்று சொல்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுபவம் உண்டு. கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற முறையில் கூட்டுறவு முறையில் கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-50)

அதனால் என்ன தப்பு இருக்க முடியும்? சாராயக் கடைகளுக்கு இப்போது கொடுக்க முடியவில்லை. இதற்குக் கொஞ்சமாக வரி போட்டுக் கொள்ளட்டும். பெரிய வடி சாலைகளுக்கு நிறைய வரி போடட்டும். வேடிக்கையாக இதை எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் வேதனையை வெளியிடுகிறேன். இதைப் புதிய கண்ணோட்டத்தில் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும். அவர்கள் சோற்றுக்கு இல்லாதவர்கள். சட்ட அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவமே. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் சொந்த அனுபவத்தைக் கூறுகிறாரா?

**திரு. செ. முத்துசாமி :** சொந்த அனுபவத்தைக் கூற பிரதிநிதியாக வர வேண்டியதில்லை. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'நமக்கு' என்று எல்லோரையும் சேர்த்துச் சொன்னார்கள். அதனால்தான் கேட்டேன்.



**திரு. செ. முத்துசாமி :** சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் சொல்கிறேன். ஆசிரியாக இருக்கிறவர்களுக்கு சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று அடிப்படையான உணர்வு இல்லையென்றால், அவர்கள் ஆசிரியர்களல்ல. சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள அடிப்படைக் கோளாறுகளைக் களைய வேண்டும். . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஆசிரியாக இருப்பவர் சாராயம் காய்ச்சுவதை நிறுத்துவதற்கு வழி சொல்ல வேண்டும். ஆனால் லைசன்ஸ் கொடுக்க வழி சொல்லுகிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** பெரிய முதலாளிக்கு லைசன்ஸ் கொடுக்கும்போது சந்தோஷமாக இருக்கிறதா? 'மேச் பாக்ஸ்' விம்கோ செய்கிறார்கள். நன்றாக இருக்கிறது. இருந்தாலும் சிறுதொழில்களை வளர்க்கிறோம். சிறு தொழில்களை என்கரேஜ் பண்ணுங்கள். நல்ல சாராயத்தை உற்பத்தி பண்ணுங்கள். கெட்ட சாராயம் உற்பத்தி பண்ணுங்கள் என்று சொல்லவில்லை. ப்யூரிபை பண்ணுங்கள். பானையிலே காய்ச்சினால் நன்றாக இருக்குமா என்று பாருங்கள். இல்லையென்றால் விஞ்ஞான ரீதியில் சிறிய சிறிய மெஷின்கள் மூலம் சாராயம் காய்ச்சுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். பல பேருக்கு வேலை கொடுக்க திட்டங்களைச் சொல்கிறேன். இவர்களைக் குண்டர்கள் என்று உள்ளே போட்டால், சமுதாயப் பிரச்சினை தீராது. பிரச்சினைகளைத் தீர்க்க வழி காண வேண்டும். புரட்சித் தலைவர் ஆட்சி என்று மக்களால் புகழப்படும் ஆட்சியில் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். பல்லாண்டுக்காலமாக இதில் ஈடுபட்டு, துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாகச் சொல்கிறேன். அவர்களுடைய பிள்ளைகள் சோற்றுக்கு இல்லாமல் இருக்கிறார்கள். மதிய உணவு இல்லாமல், அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் பார்த்து, சீர்கேட்டைப் பார்த்துச் சொல்கிறேன். இதை வேறுவிதமாக நோக்காதீர்கள். இவர்களுக்கும் சாராயம் காய்ச்ச லைசன்ஸ் கொடுங்கள். அதற்காக வரி வாங்கிக்கொள்ளுங்கள். இது ஏற்கப்படலாம், நிராகரிக்கப்படலாம். சமுதாயக் கண்ணோட்டத்தில் நான் சொல்லிவிட்டேன். ஏற்பதும், நிராகரிப்பதும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் சுதந்திரம். அவர்கள் நல்வாழ்விற்காக அரசின் கவனத்திற்கு இதை வைக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன். ஏற்குமென்று நம்புகிறேன். வணக்கம்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு என்ன காரணத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது இன்னமும் எனக்குத் தெளிவாகவில்லை என்பதைச் செய்தியாக சொல்ல விரும்புகிறேன். காரணம், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றம் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் போன்ற சிலரின் அபாயகரமான செயல்களால் அவ்வப் பொது அமைதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவதால், இத்தகைய செயல் களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்கு அல்லது அவர்களை விசாரணை இல்லாமல் சிறையில் வைப்பதற்கு இந்தச் சட்டமுன்வடிவை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே சம்பந்தப்பட்டவர்கள்மீது முறையாக நடவடிக்கை எடுக்க இன்றைக்கு சட்டமில்லையா அல்லது அவை பயன்படுத்தப்படவில்லையா அல்லது அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதில் என்ன குறை வந்தது ; அந்தக் குறையை அந்தச் சட்டத்திலேயே தீர்த்திருக்க முடியாதா என்று எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். அதற்கு அவசியமில்லாத சூழ் நிலையிலே, இப்படிப்பட்ட சட்டம் வந்திருக்கிறதென்பது மட்டுமல்ல, சட்டத்திலே வரன்முறை இருந்தாக வேண்டும். காரணம், அமல்படுத்துகிற அதிகாரிகள், இந்தச் சட்டத்திலுள்ள வார்த்தைகளின் அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுக்கின்றார்கள். ஆகவே அதிகாரிகளுக்கு வரையறுத்து, இதுதான் இந்தக் குற்றம் என்று சொல்ல வேண்டும். ஆனால் இந்தச் சட்டம் அதற்கு நேர் மாறாக உள்ளது. இந்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே ஆத்திகம் குற்றமாகுமென்பது தெளிவுபடுத்தவில்லை என்பதை மிகுந்த வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். இதிலே இந்தச் செயல்களால்—கள்ளச் சாராயம் காய்ச்சுவது போன்ற செயல்களால், பொது அமைதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். எனவே அவர்கள் செய்வது குற்றமா, இல்லையா என்பதல்ல. அது தொடர்பாக பொது அமைதி பாதிக்கப்பட்டதா என்பதுதான் பிரச்சினை. இதிலே என்ன ஏற்படுகிறது ? கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களாலே பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் நிலை ஏற்படுமானால், ஏற்படுமென்று நினைத்தால் நடவடிக்கை எடுக்கலாமென்றால், எப்படி 'லிங்க்' வருமென்பது தெரியவில்லை. காய்ச்சு



பவரைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது. 'இன்பொன்ஸ்' இருக்கிறது: யாரை வேண்டுமானாலும் 'ஆக்டோபஸ்' மாதிரி இழுக்கலாம். கள்ளச் சாராயத்தைப் பொறுத்த வரையில், ஒரு சங்கடத்தை உணராமல், அரசு இந்தப் பிரச்சினையை அணுகிக் கொண்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கள்ளச் சாராயம் நாட்டிலே கிடையாது. சேலத்தில் எங்கள் தாலுகாவிலே பல பகுதிகளுக்குப் போனேன். போய், சாராயக் கடை எங்கே இருக்கிறதென்று விசாரித்தால், எந்த சாராயக் கடையைக் கேட்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். எந்த சாராயக் கடை என்று சொல்ல முடியும் ? உங்கள் ஊர் சாராயக் கடை எங்கே இருக்கிறதென்று மீண்டும் கேட்டபோது, நல்ல கடையா, கவர்ன்மெண்ட் கடையா என்று கேட்கிறார்கள். நல்ல கடை இங்கே இருக்கிறது, கவர்ன்மெண்ட் கடை அங்கே இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். எப்படி நோக்குகிறார்கள் என்பதோடு மட்டுமல்ல, கவர்ன்மெண்ட் சாராயக்கடை நல்லதில்லை என்ற அளவிற்கு இருக்கிறது. அங்கே விலை அதிகம். இந்தியாவிலேயே இந்த மாநிலத்திலேதான் அதிக விலைக்கு சாராயம் விற்கப்படுகிறது. இந்த நிலையில் கள்ளச் சாராயம் காய்ச்சாமல் என்ன பண்ணுவார்கள்? கள்ளச் சாராயம் காய்ச்சுவதோடு மட்டுமல்ல, இங்கே ஓவர்-ஹெட் சார்ஜைப் பார்க்க வேண்டும். எரி சாராயத்தைக் குடிக்கிற சாராயமாக மாற்றுகிற மெக்கானிசம் பெரிதல்ல. தண்ணீர் கலக்க வேண்டுமென்பதுதான். அதற்கு ஒரு லிட்டருக்கு 15 ரூபாய், 20 ரூபாய் ஓவர்-ஹெட் சார்ஜஸ் ஆகிறது. அதன் விளைவாக அதிக விலையாகிறது. ஏழைகளுக்காகச் செய்தார்களா, அவர்களால் காசு கொடுத்து வாங்க முடியவில்லை. அவர்கள் வாங்க முடியாத அளவிற்கு விலையை உயர்த்தியதால், எங்கே போய் அவன் வாங்குவான் ? அடுத்து 'ஏரியா' வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சாராயக் கடைக்கு ஒரு ஏரியா இருக்கிறது. அந்த ஏரியாவில் இருந்து இன்னொரு சாராயக் கடை ஏரியாவிற்குச் செல்லும்போது, கிளாஷ் ஏற்பட்டு, எல்லைப் போராட்டம் வருகிறது. பணம் இல்லாதவர்கள் அதை நடத்த முடியுமா ? எங்கள் ஊரில் செல்வாக்கு படைத்த வட்டிக் கடை முதலாளி, இதை ஒரு தொழிலாக நடத்துகிறார். அவருக்கு அரசியல் செல்வாக்கு இருக்கிறது. செஞ்சி பஸ் ஸ்டான்ட் கடை உன்னுடையது, மெட்டாலா பஸ் ஸ்டான்ட் கடை என்னுடையது என்று சொல்லுகிறார்கள். தினமும்

ஆயிரம் பேர் மார்ச் போகிறார்கள். இரண்டு பேர் வீட்டுக்கும் போலீஸ் காரர்கள் போய் உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சு வதால் அமைதிக்கு பங்கம் ஏற்படலாமென்று, அமைதியின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கிறோம். நடவடிக்கை எடுக்க அதிகாரம் கொடுத்தாலும், அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள். அந்தப் பணம், அந்த அரசியல் செல் வாக்கு உள்ளவர்கள் நிச்சயமாகத் தப்பிவிடுவார்கள். ஏமாளியாக இருப் பவர்கள் ஒன்றிரண்டு பேர் இந்தச் சட்டத்தின்கீழ் வருவார்கள்.

அடுத்து, மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றம் செய்பவர்களைப் பொறுத்து, இப்போதே கடுமையான சட்டம் இருக்கிறது. எதனால் இந்த நிலைமை என்பது தெரியவில்லை. அடுத்து, குண்டர்கள்—மாண்புமிகு அமைச்சரவர்கள் எதை விடுகிறாரோ இல்லையோ, இதைக் கண்டிப்பாக நீக்க

(பிற்பகல் 1-00)

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே குண்டர்கள் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் விளக்கம் இருந் திருக்குமானால், இந்த நாட்டிலே நிச்சயமாக சமுதாய மாற்றம் நிகழ்ந்திருக் காது. இன்றைக்கு நாட்டிலே நிலம் வைத்திருக்கிறவர்களுடைய, பணம் வைத்திருக்கிறவர்களுடைய ஆதிக்கம் கொஞ்சநஞ்சமல்ல. 100 ஏக்கர், 200 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர் களுக்குக் கோபம் வந்தால் 'என் நிலத்தின் வழியாக வராதே' என்று சொல் கிறார்கள். வழியில் மந்தை மந்தையாக மாடுகளைக் கொண்டுவந்து நிறுத்து கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய ஆதிக்கத்தை எப்படித் தடுப்பது? 100 பேரைக் கூட்டிக் கொண்டு வந்து என்ன என்று கேட்டால்தான் நியாயம் கிடைக்கும். போலீசில் சொன்னால், அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா? 100 பேரைக் கூட்டிக்கொண்டு போனால்தான் காரியம் நடக்கும். இந்தமாதிரி நடக்கின்ற அநீதிகளை நாங்கள் தட்டிக் கேட்க குண்டர்கள் என்று யாரைச் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. கிராமப்புறங்களில் ஒரு பெரிய மறுமலர்ச்சியே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே குண்டர்கள் என்று யாரைச் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. ரௌடி எலிமெண்ட்ஸ்-ஐ அடக்குங்கள். அது வேறு: ஆனால் நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு ரிப்ரசன்டேசன் [illegible] வாய்ப்பு இருக்க வேண்டும்.



அதை எல்லோரும் 'ஆர்கனைஸ்' பண்ண முடியாது. குண்டர்கள் என்கிற வகையில் சாராயக் கடை வைத்துக் கொண்டிருப்பவன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அதே நேரத்தில் ஒருவன் பிசினஸ் பண்ணுகிறான் இன்னொருவனை அடி என்று தன்னிடம் வேலை செய்கிறவர்களிடம் சொல்கிறான். அப்படிப்பட்டவன் குண்டன். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். எதற்கும் 10 பேரைக் கூட்டிக் கொண்டு போனால் தானே காரியம் நடக்கிறது. இங்கே குண்டர்கள் என்பதற்கு எடுத்துச் சொல்லியிருக்கின்ற விளக்கம் மிக மிகத் தவறு. இது தவறாகப் பயன்படுத்தப்படக் கூடிய ஒன்று. தவறுக்கு மட்டுமே பயன்படக்கூடிய ஒன்று.

அடுத்து, விபசாரக் குற்றம் செய்பவர்கள் சம்பந்தமாக சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்வதானால் எஸ்.ஐ.டி.ஏ. அதாவது Suppression of Immoral Traffic Act என்று சொல்வார். கள். இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலே என்ன சங்கடம் வந்தது? "பிரிவென்டிவ் டிடென்ஷன்" கீழ் நடவடிக்கை எடுப்பார்கள் என்பது நான் கேள்விபடாத ஒன்று. What is the necessity ? ஏன் ஈடுபடுகிறார்கள், யார் ஈடுபடுகிறார்கள், என்ன செயலில் ஈடுபடுகிறார்கள் என்பதை எப்படி கண்டுபிடிப்பது ? நேற்று காலையில் ஒரு அம்மா பின்னால் இன்னார் போய்க் கொண்டிருந்தார் என்று சொல்லி பிடிப்பதா அல்லது அந்த அம்மா காரில் இருந்துகொண்டு இன்னாரை நோக்கி கை காட்டினாள் என்று சொல்லி பிடிப்பதா ? என்ன காரணம் சொல்லி பிடிப்பார்கள் ? அதைக் கண்டிக்க இப்போதே கடுமையான சட்டம் இருக்கிறது. அதில் ஏதாவது ஓட்டை இருந்தால், அதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் ஆனால் "ஆயத்தம் ஆகின்றவர்களைத் தடுப்போம்" என்று சொல்வதற்கு வரையறை இருக்கிறதா ? சொல்லிலா ? செயலிலா ? அல்லது ஜாடையிலா? எதை வைத்து கணக்கு வைத்திருக்கிறார்கள் ? அதையெல்லாம் சொல்லாமல் அதிகாரத்தை போலீசாரிடம் கொடுத்தால், இந்தச் சட்ட முன்வடிவின் அடிப்படையில் எப்படி நடவடிக்கை எடுப்பார்கள் ? யார் மீதும் கை நீளும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுத்தல் சட்டத்தைப் பொறுத்தவரையில், குடிசை போடுகின்றதைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நான் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன். சென்னையில் இது ஒரு தொழிலாகவே நடைபெறுகிறது. 30, 40, 50 வருடமாக தனியாருடைய நிலத்தில் குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல சூழ்நிலைகளில் அந்தமாதிரி இடங்களில் சாதாரணமாக அரசியலில் செல்வாக்கு மிக்கவர்கள் பெரும் பணத்தை வாங்கி விட்டார்கள். பேரமே பேசப்பட்டுள்ளது. அல்லது வேறு ஒன்றைச் சொல்லி ஒரே நாளில் எடுக்க வேண்டியதை எடுத்துவிட்டார்கள். அப்படிப் பட்டவர்கள் மீது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டும். வீடு இல்லாதவர்களுக்கு 'ஸ்லம் கிளியரன்ஸ் போர்ட்' மூலம் வீடு கட்டிக் கொடுத்தோம். எதற்காகக் கட்டிக்கொடுத்தோம்? குடிசை போடாமல் இருப்பதற்காகக் கட்டிக்கொடுத்தோம். தனிப்பட்டவர்களுக்கு இருக்கிற நிலத்தைத் தவிர மற்ற நிலம் எல்லாம் அரசுக்குச் சொந்தமானவை. குடிசையில் இருந்தவர்களையெல்லாம் மாடிவீடுகளில் வாழ வைத்தோம். குடிசைகளில் இருந்தவர்களை அங்கேயிருந்து நகர்த்தினோம். மாடி வீடுகள் கட்டி முடிக்காத வரையில் அவர்களை எப்படி நகர்த்த முடியும்? மாடி வீடு கொடுக்கவில்லையென்றால், எங்களது வீடு இருக்கிற இடத்தில் தாழ்வாரத்தில் வந்து இருக்கப் போகிறார்கள். அவர்கள் வேறு என்ன செய்வார்கள்" 'அர்பன் லேண்ட் ஆக்ட்'-ல் 5 கிரவுண்ட் வரை எக்ஸெம்ஷன் கொடுத்திருக்கிறோம். ஆகவே இன்னொரு 5 கிரவுண்ட் இருக்கிற இடத்தில் இன்னொரு 100 குடிசைகளைப் போடப் போகிறார்கள். இப்போது இந்தச் சட்டத்தின் கீழ் அவர்களைப் பிடிக்க, அடக்கப் பார்க்கிறார்கள். அப்படிச் செய்யும்போது, குடிசையில் இருப்பவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டாமா? புதிதாகக் குடிசைகள் போடாமலிருக்க நடவடிக்கை எடுத்துத் தடுக்க வேண்டும். எங்கே அவர்களைத் தள்ளிக் கொண்டு போனாலும், மனிதன் அங்கே இருந்துதான் ஆக வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதன் மூலம் யாருக்குப் பயன்படுமோ அவர்களுக்கு, யாருக்கெல்லாம் செல்வாக்கு



இருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் அமைச்சர் அவர்கள் விரும்புகிறபடி பயன்படும். ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் குற்றங்களைத் தவிர்க்கக்கூடிய அதிகாரம் இருக்கிறது. அதற்கு மாறாக இந்தமாதிரி சட்ட முன்வடிவு "இப்போது இருக்கின்ற அதிகாரத்தின் மூலம் அதிகாரிகள் சரியாக, முறையாகச் செயல்பட முடியவில்லை என்ற குற்றச்சாட்டு வந்தால்தான்" வரமுடியும். அந்த ஒரு உணர்வு இருந்தால்தான், இப்படி கொண்டுவர முடியும். அப்படி கொண்டுவருவது உள்ளபடியே இந்த ஆட்சிக்கு நல்லதல்ல. இதிலே கொடுத்திருக்கின்ற "பிரிவென்டிவ் டிடன்ஷன்" தவறானது. தவறுக்கு துணை நிற்கக் கூடியது. அரசியல் ரீதியாகப் பயன்படுத்த நிறைய வாய்ப்பு அளிக்கின்ற ஒரு சட்டமுன்வடிவு இது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுடைய காலத்தில் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டாமென்று மிகுந்த பணிவன்போடு கேட்டு, அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் இன்று விவாதிக்கப்பட்டிருக்கின்ற இரண்டு சட்ட முன்வடிவுகளுமே ஜனநாயகத்தின் குரல் வளையை முறிக்கக்கூடிய சட்ட முன்வடிவுகள். ஜனநாயகத்தை அழிக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவுகள் வந்திருப்பது துரதிருஷ்டவசமானது. இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இன்று விவாதிக்கின்றபோது, ஏற்கெனவே நடந்திருக்கக்கூடிய சம்பவங்களை நினைக்கின்றபோது, உலகத்தின் ஜனநாயக வளர்ச்சியின் வரலாற்றைப் படிக்கின்றவர்களுக்கு ஒன்று மிக நன்றாகத் தெரிந்திருக்கும். இத்தகைய சட்டங்கள் உண்மையிலேயே எந்த அநீதியையும் களைவதில்லை. அநீதியைக் களைய சட்டம் மட்டுமல்ல துணை புரிவது. ஆட்சிக்குப் பொறுப்பேற்றிருப்பவர்கள் இருக்கிற சட்டத்தை நேர்மையாகவும், திறமையாகவும் அமுல்படுத்த வேண்டுமென்ற துணிவோடு இருப்பவர்கள். இப்போது இருக்கிற சட்டங்கள் மட்டுமல்ல, இவைகள் இல்லாமல் கூட அவர்கள் இந்த நாட்டில் நீதியையும், நன்மையையும் நிலைநாட்ட முடியும். ஆட்சி இயந்திரம் முறையாக, நீதியாக, நேர்மையாக இருக்க வேண்டும். ஆளும் கட்சிக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதி என்று சொல்லக்கூடிய ஒரு நிலை இல்லாத எந்த ஒரு நாட்டிலும் ஆட்சியை நடத்துவதற்கு இப்படிப்பட்ட சட்டங்களே அதிகமாகத் தேவையில்லை. இருந்தபோதிலும் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தில்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1982 மார்ச் 1

ஐந்து பாதகங்களைத் தவிர்ப்பதற்கு அரசு இதைக் கொண்டுவந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறது. அந்தப் பாதகங்களைத் தடுக்க இப்போது இருக்கிற சட்டம் போதவில்லையா ? அல்லது ஆட்சி முறை சரியில்லையா ? இது ஒரு தடுப்புக் காவல் சட்டம் தான். காரணம் சொல்லாமல் ஒருவரைக் கைது செய்ய, அரசு ஆணை பிறப்பிக்க ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இது ஒரு ஜனநாயக நாட்டிலே வரக்கூடிய சட்ட

(பிற்பகல் 1-10)

முன்வடிவுதானா ? சட்டம் படித்தவர்கள் பிரேரேபிக்கும் சட்ட முன்வடிவு தானா ? ஒருவேளை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்குச் சட்ட தெரியாமல், இதைக் கொண்டு வந்திருந்தால், ' சட்டம் தெரியாத ஒரு இதைக்கொண்டு வந்தார் என்று சொல்லலாம். ஆனால் சட்டம் படித் பல்லாண்டு சிறப்பாகப் பணியாற்றியவர்கள், இந்தச் சட்டம் தான் இந் நாட்டிற்குத் தேவை என்று சொன்னால், இவர்கள் இந்த நாடு எப்ப இருக்கிறது என்று கணிக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. இந்த நாட்டில் இந்தச் சட்டம் இல்லாமல் இவைகளையெல்லாம் தடுக்க முடியாத அவல நிலையில் நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னால், வேறு இருக்கும் சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியவில்லையா என்று தான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுடைய காலத்தில் ஐந்து பாதகத்திலே முதல் பாதகம் கள்ளச் சாராயம். மதுவிலக்கைத் தளர்த்திக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தது என்னவென்று பார்த்தால், தலைவிரித்தாடிக்கொண்டிருந்த கள்ளச் சாராயம். சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு என்று இருக்கும் இயந்திரம் இதற்குத் துணையாக இருக்கிறது. ஆகவேதான் மதுவிலக்கைத் தளர்த்துகிறோம் என்று அப்போது சொன்னார் கள். கள்ளச் சாராயம் இருப்பதால்தான் சட்டத்தைத் தளர்த்தி சாராயத்தை விற்க கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது அரசாங்கச் சாராயம் விற்கவில்லை, கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது என் சொன்னால், கள்ளச் சாராயம் விற்பவர்களிடம் அரசாங்கம் குத்தகைக் விடலாமே ! " எங்களை மிஞ்சி இருக்கிறார்கள் அவர்கள், கள்ளச்சாராய இருக்கிறது, அதைத் தடுக்க முடியவில்லை, ஆகவே திறந்துவிடுகிறோம்



1982 மார்ச் 1] [திரு. ம. சங்கரலிங்கம்]

என்று அப்போது சொன்னார்கள். இன்றைக்குத் திறந்த பிறகும் தடுக்க முடியவில்லை என்று சொன்னால் எப்படி ? அநேக சாராய வியாபாரிகள் எங்களுக்குச் சாராயம் கிடைக்கவில்லை, இன்னின்ன இடங்களிலே சாராயம் காய்ச்சுகிறார்கள், அவர்களைப் பிடியுங்கள் என்று எழுதிக் கொடுக்கிறார்கள். அவர்கள் நீதி மன்றத்திற்குப் போகிறார்கள். ' நாங்கள் சாராயக் கடைகளை ஏலத்தில் பிடித்திருக்கிறோம், ஆனால் எங்களுக்கு எதிர் புறத்திலேயிருந்து சாராயம் விற்கிறார்கள், இன்னின்ன வீட்டிலே காய்ச்சுகிறார்கள், இன்னின்ன இடங்களிலே வைத்து விற்கிறார்கள், அவர்களைக் கைது செய்யுங்கள் ' என்று எழுதிக் கொடுத்தும், அரசு செயல்படவில்லை. ஆகவே, எங்களுக்கு நஷ்டஈடு தர வேண்டும் என்று சொல்லி, நீதிமன்றத்திற்குப் போய் நோட்டீஸ் வந்திருக்கிறது. இதற்குப் பிறகும் இந்தச் சட்ட முன்வடிவை வைத்துக் கொண்டு அவர்களைப் பிடிக்கப்போகிறோம் என்று சொல்வது இது யாரை ஏமாற்றுவதற்கு என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஒருவேளை, இன்னார் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார், இன்ன இன்ன அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் இதிலே இருக்கிறார்கள் என்று சொல்பவர்களைப் பிடிக்கத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறதோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. இதிலே மூன்றாவதாக இருப்பது குண்டர்களைப் பற்றியது. இப்படி குண்டர்கள் என்று சொல்வதற்கு என்ன விளக்கம் தருகிறார்கள் ? பத்து பேரை அழைத்துக்கொண்டுபோய் நியாயம் கேட்டால், அவன் குண்டன். தமிழ் மொழியிலே அதற்கு ஒரு சொல் இல்லாமல், அந்தச் சொல் தேவை இல்லாத ஒரு நாடு, அந்தச் சொல் தேவை இல்லாத ஒரு பண்பாடு, அதற்குத் தேவையில்லாத ஒரு பாரம்பரியத்தை வைத்திருக்கும் ஒரு நாடு தமிழ்நாடு. ஆனால் அந்தச் சொல் தேவைப்படும் சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தி யிருக்கிறது. தமிழ்நாட்டிலே குண்டர்கள் இல்லை. ' இருக்கிறார்கள் ' என்று இப்போது இந்த அரசு சொல்கிறது. அவர்கள் செல்வாக்கு, நீதிவாயில்கள் ஆகியவற்றைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் சொல்கிறது. இந்த இரண்டும் யாருக்கு வர முடியும் ? ஆளும் கட்சிக்காரர்களைத் தவிர வேறு யாருக்கு இந்த இரண்டும் வரும் ? எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால், எந்த போலீஸ் அதிகாரி கேட்கிறார் அல்லது எந்த பெரிய அதிகாரிகள் கேட்கிறார்கள் ? ' யாரும் கேட்பதில்லை. ' ஆளும் கட்சிக்காரர் களுக்குத்தான் இந்த இரண்டும் இருக்கிறது. அப்படி இருப்பவர்கள் ஆளும்

கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னால், அவர்களைக் கூப்பிட்டுச் சொல்ல முடியவில்லையா ? ஆகவே, இதை எதிர்க் கட்சிக்காரர்களை அடக்கத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் இப்போது லெவி விதிக்கவில்லை என்று சொல்கிறார்கள். எல்லா அறுவடை காலங்களிலேயும் விவசாயிகள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். வியாபாரிகளுக்கு 50 பர்சென்ட் லெவி. விவசாயிகள் வீட்டுக்கு, சொந்தத் தேவைக்கு, நெல்லைக் கொண்டு செல்லலாம் என்று சொல்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கும் விவசாயிகளில் பெரும்பகுதியினர் தங்களுடைய பிள்ளைகளை கல்லூரிக்கும், மற்றும் படிப்புக்கும் அனுப்பு வதற்கு வசதியாக நாகர்கோவிலிலே வீட்டை வைத்து, அங்கு தங்குகிறார்கள். குடும்பத் தலைவன் கிராமங்களிலே போய் இருக்கிறான். மனைவியும் மக்களும் நாகர்கோவிலிலே தங்கியிருக்கிறார்கள். அவன் அறுவடை முடிந்து இரண்டு வண்டி நெல்லைக் கொண்டுபோனால், அதைக் கொண்டுபோகக் கூடாது என்று தடுக்கிறார்கள். இப்போது நாகர்கோவிலுக்குப் பக்கத்திலே ஒழுகினாசேரியிலே ஒரு செக்போஸ்ட் இருக்கிறது. அங்கே ஒரு ரெவின்யூ அதிகாரி இருக்கிறார். நாகர்கோவிலுக்குத் தெற்குப் பகுதியிலே ஆசிரமம் பகுதியிலேயும் ஒரு செக் போஸ்ட் இருக்கிறது. புத்தேரி பக்கத்திலேயும் ஒரு செக் போஸ்ட் வைத்து, அங்கே ஒரு டெப்யூட்டி தாசில்தார், மற்றும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் எல்லாம் இருக்கிறார்கள். யார் வண்டி கொண்டு வந்தாலும் அதைத் தடுக்கிறார்கள். விட வேண்டும் என்று சொன்னால், 15, 25, 30, 40 ரூபாய் என்றெல்லாம் அவர்களுக்கு மாமூல் இருக்கிறது. மாமூல் கொடுத்தால் தான், போக அனுமதிக்கிறார்கள். இப்படியே அநீதி நடக்கிறது என்று சொல்லி, நான் 10 பேர்களை அழைத்துக்கொண்டு போனால், நான் குண்டன் ஆகிவிடுவேன். ஜனநாயக நாட்டிலே மக்களோடு திரண்டுபோவதென்றால்தான் பாதுகாப்பு. இந்த அரசின் சட்டமோ அல்லது நிர்வாகமோ பாதுகாப்பு அல்ல. சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே ஒருவரை அடித்தால் கூட, 10 பேர் வந்து ஐயோ அடிக்கிறார்கள் என்று சொன்னால்தான், பாதுகாப்பு. பத்து பேர் வந்துவிட்டால், அவர்களைக் குண்டர்கள் என்று சொன்னால், அது எப்படி நியாயமாகும் என்பதைப் பார்க்க வேண்டும்.



அடுத்தபடியாக, விபசாரச் சட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் செல்வாக்கு உள்ளவர்களைக் கொண்டு போவதற்கு என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டம் ஒரு கறுப்புச் சட்டம். ஏற்கெனவே இருக்கிற சட்டங்களை வைத்தே அநீதிகளை மிக வன்மையாகவும், சிறப்பாகவும் தடுக்க முடியும். கள்ளச் சாராயம் காய்ச்சும் நபர்களை எடுத்துக்கொண்டால், அரசாங்கம் தனது அதிகாரிகளுக்கு 1 ஆம் தேதி சம்பளம் கொடுக்கிறது, ஆனால் இவர்கள் 28 ஆம் தேதியே சம்பளம் கொடுக்கிறார்கள். அதை என்னால் நிரூபிக்கவும் முடியும். ஆகவே, இந்த அதிகாரிகள் அவர்களுக்கு மிகவும் லாயலாக இருப்பார்கள். ஆகவே, ஆளும் கட்சியோடு செல்வாக்கு வைத்திருப்பவர்கள், கள்ளச் சாராயப் பேர்வழிகள் அவர்கள் செய்யும் அநீதிகளைக் குறித்து அரசுக்குத் தகவல் கொடுப்பவர்களைத் தடுப்பதற்குத் தான் இந்தச் சட்ட முன்வடிவு இப்போது கொண்டுவரப்படுகிறது. இந்தச் சட்ட முன்வடிவு இப்போது தேவைதானா ? இந்தச் சட்டம் இல்லாமல் இந்த நாட்டிலே நீதியை நிலைநாட்ட முடியாதா ? இது இந்த அரசு கொண்டு வந்திருக்கும் ஒரு மினி மிசா. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் இதை மிக வன்மையாக, முழு சக்தியோடு, தங்களுக்கு இருக்கிற ஆற்றல் அத்தனையையும் ஒன்று சேர்த்து எதிர்க்க கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்லி, இதை எதிர்த்து, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட சட்ட முன்வடிவினைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் இது கொண்டுவரப்படவில்லை என்பதை நான் முதற்கண் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது, தடுப்புக் காவல் சட்டம், இதுபோன்ற குற்றங்களுக்குத் தேவைதானா, நடைமுறையில் பல்வேறு சட்டங்கள் ஏற்கெனவே இருக்கும்போதே தடுப்புக் காவல் சட்டத்தின் மூலம் இந்தக் குற்றங்களைக் களைய அரசு எத்தனிப்பது ஏன் என்று கேட்டார்கள். நான் முதற்கண் எதற்காக இது கொண்டுவரப்பட்டது என்பதனைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கள்ளச் சாராயம் காய்ச்சுவது, விபசாரத் தொழிலில் ஈடுபடுவது, பிறர் இடங்களை ஆக்கிரமித்து

[திரு. சி. பொன்னையன்] 1982 மார்ச் 1]

(பிற்பகல் 1-20)

குடிசை போடுவது, ஐ.பி.சி.-க்கு உட்பட்ட குற்றங்களைச் செய்வது, ரௌடித் தனங்களைச் செய்வது போன்ற தவறுகளைச் செய்வது என்று இப்படி நான்கு பிரிவில் வருகிற குற்றங்களுக்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது.

If there is an offence relating to human body or if there is an offence relating to property or if there is an offence relating to criminal intimidation.

இதற்குத் தனியான சட்டம் இருக்கிறது. விபசாரத்தில் ஈடுபடுவோர்களைத் தண்டிக்க என்று தனிச் சட்டம் இருக்கிறது. அதைப்போலவே 'கிரிமினல் டிரஸ்பஸ்' செய்கிறவர்களைத் தண்டிக்கவும், குண்டர்களைத் தண்டிக்கவும் தனித் தனிச் சட்டங்கள் இருக்கின்றன. கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர் களைத் தண்டிக்கத் தனியான 'புரொகிபிஷன்' சட்டம் இருக்கிறது. இவை களுக்குத் தனியாகச் சட்டமே இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் தடுப்புக் காவல் சட்டத்தைப் பொறுத்தவரையில், இதன் நிலைமையே வேறு.

நடைமுறையில் தற்போது இருக்கும் சட்டங்கள் அனைத்தும், மேற்சொன்ன குற்றங்கள் இழைக்கப்பட்டதற்குப் பிறகே நடவடிக்கை எடுக்க உதவும். action can be taken after an offence is committed.

ஆனால், தடுப்புக் காவல் சட்டம் என்பது,

It is a preventive action, not punitive as it is in the case of other Acts.

தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை என்ன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். ஏற்கெனவே இருக்கிற சட்டங்கள் வேறு, தடுப்புக் காவல் சட்டம் என்பது வேறு. காரணம், மேற்சொன்ன குற்றங்கள் எல்லாம் பொது அமைதிக்கும் பொது சுகாதாரத்திற்கும் பங்கம் விளைவிக்குமானால், அவை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

If an offence under the existing provisions is resulting in disturbance to public peace, public tranquillity or public health, then alone the Preventive Detention Act is being attracted.



1982 மார்ச் 1] [திரு. சி. பொன்னையன்]

கள்ளச் சாராயம் காய்ச்சுவதைப்பற்றிப் பேசும்போது, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள்மீது இந்தச் சட்டம் பாயுமா என்ற பொருள்பட பேசினார்கள் Prevention Detention Act cannot be used against them ஆனால், பொது சுகாதாரத்திற்கும், பொது அமைதிக்கும் பங்கம் ஏற்படுகிற நிலையை உருவாக்கினால், அது நிரூபிக்கப்படக் கூடிய அளவுக்கு ஆதாரங்களை உடையதாக இருக்குமானால், இதைப் பயன்படுத்த முடியும்.

1976 ஆம் ஆண்டு ஐயனாவரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி நம் அனைவருக்கும் தெரியும். கள்ளச் சாராயத்தைக் காய்ச்சினார்கள். கள்ளச் சாராயத்தை நல்ல சாராயத்தைவிட நல்லது என்று குடிக்கிறவர்கள் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களேகூட இங்கே குறிப்பிட்டார்கள். அது வேறு. கள்ளச் சாராயம் காய்ச்சியதன் காரணமாக எத்தனை உயிர்கள் ஐயனாவரம் நிகழ்ச்சியின்போது பலியாயின என்பதையும் நாம் அறிவோம். பம்பாயிலும், பெங்களூரிலும் கள்ளச் சாராயத்தைக் குடித்ததால் எத்தனை உயிர்கள்—நூற்றுக் கணக்கான உயிர்கள்—பலியாயின என்பதை இந்த அவை நன்கு அறியும். கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகிறவர்கள் அதில் எத்தகைய பொருள்களையெல்லாம் போடுகிறார்கள் என்பது பல்வேறு வழக்குகளின் மூலம் நீதிமன்றங்களில் நிரூபணமாகியிருக்கின்றன. கெமிக்கல் லேபரேட்டரி டெஸ்ட் மூலம் நீதி மன்றத்தில் அவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, போதைப் பொருள்களான குளோரைடு ஹைட்ரேட், மெத்தனால், அமோனியம் குளோரைடு மற்றும் ஊமத்தங்காய் போன்ற பொருள்கள் எல்லாம் உபயோகிக்கப்படுகின்றன. இந்த விஷப் பொருள்களின் காரணமாக பலரும் இறக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் அடிப்படையில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்தால், அது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு அவருக்குத் தண்டனை அளிப்பதற்குள் ஏறத்தாழ பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. காரணம் "existing process of law" அந்த வகையில் இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

இவ்வாறு அவர்கள் தண்டிக்கப்படுகிறவரை கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கத் தவறினால், மீண்டும் அமோனியம் குளோரைடு, குளோரைடு ஹைட்ரேட், மெத்தனால் போன்றவைகள் மூலம் எத்தனை எத்தனையோ உயிர்கள் பறிபோகும். நீதி மன்றங்களின் தீர்ப்பு வரும் வரை, எத்தனை எத்தனை உயிர்கள் பறிபோகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில்தான் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கட்டாயமாக நடவடிக்கை எடுக்கும் நிலை நமக்கு ஏற்படு கிறது.

அரசியல் ரீதியாகவும் சிலர் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றும் இங்கே சொல்லப்பட்டது. கண்டிப்பாக எடுக்க முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, ஏதோ தமிழ் நாட்டில் மட்டும்தான் முதன் முறையாக ' இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப் பட்டிருப்பதைப்போல பேசினார்கள். அது சரியான தகவல் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்தியாவின் மற்ற பாகங்களிலும் பல வடிவங்களில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது நான்கூட கொஞ்சம் ஆச்சர்யப்பட்டேன். காரணம் அவருடைய கட்சியைச் சார்ந்த அரசுகள் இருக்கும் பல மாநிலங்களில் இப்படிப்பட்ட சட்டம் இருக்கிறது.

இந்த வகையில் மைய அரசு மாநில அரசுகளுக்கு ஒரு தாக்கீது அனுப்பி யிருக்கிறது. அதை நான் இங்கே தெரிவிப்பது பயனுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். 16—9—1980-ல் மத்திய அரசிலிருந்து மாநில அரசு களுக்கு ஒரு தாக்கீது அனுப்பப்பட்டது. அதில்

"At a meeting recently held by the Home Secretary with senior officers of this Ministry, various measures were discussed with a view to improving the law and order situation in the country. To deal effectively with the anti-social elements, it was felt that some legal powers should be made available to the law enforcement agencies for externment of criminals, anti-social





elements and goondas. It was also felt that these powers, if effectively used, apart from having a good impact on the public mind, would also help in containing the activities of such characters.

In this regard, various Acts such as the Uttar Pradesh Control of Goondas Act of 1970, the Rajasthan Control of Goondas Act of 1975, the Punjab Prevention of Anti-social and Hazardous Activities Bill (subsequently made an Act), of 1976 and the Bihar Control of Crimes Ordinance of 1978 (subsequently made an Act) enacted by the Governments of Uttar Pradesh, Rajasthan, Punjab and Bihar were considered to be useful.

With a view to curbing the activities of anti-social elements in your State, I would request you to consider the possibility of having such an enactment in your State, if it does not already exist, and let us know the position at your earliest." என்று சொல்லப்பட்டிருக்கிறது.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சிலேயே நான் இதைத் தெளிவாகச் சொல்லி யிருக்கிறேன். குண்டர்கள் என்றால் யார் என்பது வரையறை செய்யப்பட வில்லை. "பொதுமக்களைப் பாதிக்கிற, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கிற அல்லது பாதிப்பதாகத் தோன்றக்கூடிய செயல்கள் எவற்றாலேனும்" என்று சொல்லப்படுகிறது. இப்படி 'தோன்றக்கூடிய' என்று சொல்வதால் இது அதிகப்படியான அதிகாரத்தைச் செயல்படுத்துகிற வர்களுக்குத் தந்துவிடும் என்பதைத்தான் சொன்னேன். It gives enormous powers to the executive authority who has no legal knowledge at all.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல், உத்தரப் பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும், மகாராட்டிரத்திலும் இந்த அடிப்படையில் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. மத்திய அரசிலே கூட புதிதாகச் சட்டம் கொண்டுவரலாமா என்று கருதிக் கொண்டிருக் கிறார்கள். எனவே நாங்கள் மைய அரசிலிருந்துதான் இதை எடுத்துக்

கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய அரசின் தாக்கிதின் அடிப்படையில் இது பல மாநிலங்களிலும் நடைமுறையில் இருக்கிறது.

அடுத்து, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள்மீது ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது என்றால், Due process law என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அவருக்குத் தண்டனை வழங்குவதற்குள் பல ஆண்டுகள் கழிந்து விடுகின்றன. அதற்குள் விஷப் பொருள்களைக் கலந்து பல உயிர்களைப் பலி கொண்டுவிடுகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் சமுதாயத்திற்கு எவ்வளவு இன்னல்களையும் துன்பங்களையும் இழைக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 1-30)

அவசரச் சட்டமாக வந்த பிறகு கூட, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதுகாறும் 47 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். என்.எஸ்.ஏ.வு-க்கும் இந்த பில்லுக்கும் உள்ள மாறுபாடு என்னவென்றால், என்.எஸ்.ஏ.-யில் "பப்ளிக் ஆர்டர்" என்றால் என்ன என்று 'டிஃபைன்' செய்யவில்லை. வேண்டுமென்றால் சற்று "டிஸ்கிரஷனரி எக்செர்சைஸ் ஆஃப் பவர்" வந்துவிடுமென்று சொல்லலாம். இந்தக் குறைபாடு இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் இதிலே "பப்ளிக் ஆர்டர்" என்றால் என்னவென்பதைத் தெளிவாக்கியிருக்கிறோம்.

The National Security Act, 1980 (Act No. 65/1980)—Section 2:

"The Central Government or the State Government may, if satisfied with respect to any person that with a view to preventing him from acting in any manner prejudicial to the security of the State or from acting in any manner prejudicial to the maintenance of public order . . . ."

என்று வெறுமனே போட்டிருக்கிறார்கள். "பப்ளிக் ஆர்டர்" என்றால் என்ன என்பதை அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும். நீதிமன்றங்கள் முடிவு செய்ய வேண்டும். இதில் முடிவு செய்வதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. நீதிமன்றங்களுக்குப் பல பிரச்சினைகள் சென்று நீதிமன்றங்கள் பல



தீர்ப்புக்களைத் தந்திருக்கின்றன. "பப்ளிக் ஆர்டர்" எப்போது 'அஃபெக்ட்' ஆகிறது என்பதற்கு துல்லியமாக தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பப்ளிக் ஆர்டர் என்றால் என்ன என்பதை 'டிஃபைன்' செய்ததோடு மேலும் 'கைட்லைன்ஸ்' என்ன என்பதையும் அதிகாரிகளுக்கு அரசு கொடுத்திருக்கிறது. உதாரணமாக "பப்ளிக் ஆர்டர்" என்பது "எக்ஸ்பிளனேஷனில்" தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

"*Explanation.*—For the purpose of this clause (*a*), public order shall be deemed to have been affected adversely or shall be deemed likely to be affected adversely, inter alia, if any of the activities of any of the persons referred to in this clause (*a*) directly or indirectly is causing or calculated to cause any harm, danger or alarm or a feeling of insecurity, among the general public or any section thereof or a grave or widespread danger to life or public health."

ஒரு புதிய தரப்பு இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றபோது, காய்ச்சுவது குறித்து நடவடிக்கை எடுக்க முடியாது இதன் பிரகாரம். கள்ளச் சாராயம் காய்ச்சுவதில் ஈடுபடும்போது பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிறது, பொதுச் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கிறது என்றால், நடவடிக்கை எடுக்கலாம். அமோனியம் குளோரைட், மெத்தனால், ஊமத்தங்காய் போன்ற விஷப் பொருள்களைச் சேர்த்துக் காய்ச்சுவதால், உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு நூற்றுக் கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கள்ளச் சாராயத்தைப் பிடித்து அதை கெமிக்கல் லெபாரட்டரி டெஸ்டுக்கு அனுப்பி, லெபாரட்டரி டெஸ்டில் விஷப் பொருள்கள் இருந்ததாக ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் 47. கள்ளச்சாராயம் காய்ச்சிய 47 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, இந்தச் சட்டம் விபசாரத்தில் ஈடுபடுகின்ற பெண்கள் மீது பாயுமா என்று கேட்டார்கள். திரு. ஆர். சு. சித்தாபதி அவர்கள் "குறிப்பாக பெண்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும். அதிகாரி ஒருவர் ஒரு பெண்ணைத் தவறான வழிக்கு இழுக்க விரும்பி இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அந்தப் பெண்ணை மிரட்டி கெடுத்துவிடலாம்"

என்ற பொருள்பட சொன்னார்கள். ஆனால் அப்படியல்ல. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், பெண்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 'சப்ரெஷன் ஆஃப் இம்மாரல் டிராஃபிக் ஆக்ட்'-டின் கீழ் நடவடிக்கை எடுக்க சில புரவிஷன்கள் இருக்கின்றன.

directly or indirectly is causing or calculated to cause any harm,

விபச்சாரத்தில் ஈடுபடுகிறவர்கள், விபசாரத்தை நடத்துகிறவர்கள், பெண்களை இதற்காக "கிட்நாப்", "அப்டக்ஷன்" செய்வதில் ஈடுபடுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாய நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்லுகிறேன்.

punishment for having on earnings of prostitutes, inducing or taking of women for the sake of prostitution detaining of woman or girl in premises where prostitution is carried on.

இது போன்று விபச்சாரத்தில் பெண்களை ஈடுபடுத்துகின்ற கொடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அத்தகைய கொடுமை இருக்கிறதா என்று அவையினருக்கு எண்ணம் ஏற்படலாம். அத்தகைய கொடுமை இருக்கிறது. பெண்கள் வறுமை காரணமாக விபசாரத்தில் ஈடுபடுவது என்பது வேறு. "it is most contemplated in the Preventive Detention Bill விபசாரத்தில் பெண்களை ஈடுபடுத்துகிற கொடிய செயலில் ஈடுபடுகிறவர்களைப் பற்றிய புள்ளிவிவரம் இருக்கிறது. பல ஆண்டுகளுக்கான புள்ளி விவரம் இருக்கிறது என்றாலும், குறிப்பாக கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளிவிவரத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 24,880 பெண்கள் கடத்தப்பட்டு விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் தானே விரும்பி, வறுமையின் காரணமாகச் செல்வது என்பது வேறு. ஆனால் ஒரு பெண்ணை வலுக் கட்டாயமாக "கிட்நாப்" செய்து, "அப்டக்ட்" செய்து அழைத்துச் சென்று விபசாரத்தில் ஈடுபடுத்துகிற கொடுமையை யார் செய்தாலும், அதை அரசியல் உணர்வுகளுக்கு அப்பால் நின்று கண்டிப்பாக தடுத்தாக வேண்டும், நடவடிக்கை எடுத்தாக வேண்டும். தாய்க் குலத்திற்கு தக்கதொரு பெருமையை, இறைமையை நடைமுறையில் கடைப்பிடித்து வருகிறபோது, சமுதாய விரோதிகள் பெண்களை "கிட்நாப்" செய்து, அவர்களுடைய



இச்சைக்கு மாறாக விபசாரத்தில் ஈடுபடுத்துகிறபோது, அதைக் கண்டிப்பாக நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். 24,880 பெண்களை கிட்டத்தட்ட இந்த ஆறு ஆண்டுக் காலமாகக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். 24,150 பேர் இந்த ஆறு ஆண்டுக் காலத்திலே இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. கிரிமினல் வழக்கு நடத்தும் வழக்கறிஞர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

It requires a final test with reference to the provisions of the Evidence Act.

எப்படி சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்றால், சொந்த பந்தம் மட்டுமல்லாமல், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதைப் போல, 0.1 சதவீதம் சந்தேகம் இருந்தால் போதும், மற்ற ஆதாரங்கள் எவ்வளவு இருந்தாலும், விடுதலை பெறும் நிலை இருக்கிறது.

Offence committed on sudden provocation is totally different from the offences of this cruel type which are committed in a calculated manner.

இதை நாம் மனதிலே கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே கிட்டத்தட்ட 24,880 பெண்களைக் கடத்திச் சென்ற 24,150 பேர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் பெண்களைக் கடத்திச் செல்கின்ற நிலை குறைந்துவிட்டதா, அறவே ஒழிந்துவிட்டதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அதைப்போலவேதான் 'டிரக் அஃபென்ஸ்'. இதைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர், இருக்கின்ற சட்டத்திலேயே நடவடிக்கை எடுக்கலாமே என்று சொன்னார். 1979 ஆம் ஆண்டில் 79 வழக்குகளும், 1980 ஆம் ஆண்டில் 127 வழக்குகளும், 1981 ஆம் ஆண்டில் 57 வழக்குகளும் 'டிரக் அஃபென்ஸ்' சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. கஞ்சா போன்ற பொருள்கள், அதைவிட கொடுமையான உயிரைக் கொல்லக் கூடிய, இதய நோய்களை ஏற்படுத்தக் கூடிய, மனநோய்களை ஏற்படுத்தக் கூடிய

பொருள்கள் போன்றவைகளையெல்லாம் கூட மிட்டாய்களில் கலந்து கொடுத்து விடுகிறார்கள். மதுரை மாநகரத்திலே போதை மிட்டாய் என்று சொல்லி விஷப் பொருள்களைக் கலந்து விற்றிருக்கிறார்கள். போதை தருகிற ஒரே காரணத்தாலே, இறுதியிலே இருக்கின்ற இடுக்கண் என்ன என்பதைப் பாராமல் இளைஞர்கள் உட்கொண்டு உயிரை முடித்துக்கொள்ளக் கூடிய அளவிற்கு இது போன்ற பொருள்கள் விற்கப்படுகின்றன. இது போன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்ட பிறகும், கஞ்சா பொருள்கள், போதைப் பொருள்கள், உயிரைக் குடிக்கின்ற பொருள்கள் ஆகியவற்றை மிட்டாய் போன்றவற்றில் கலந்து விற்கின்றபோது, கண்டிப்பாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, இந்தச் சட்டத்தை அரசு அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயல்படுத்தக்கூடிய ஒரு நிலை ஏற்படும் என்று சொன்னார்கள். அப்படி தன்னிச்சையாகப் பயன்படுத்த வேண்டு மென்று நினைத்தாலும், அதைச் செய்ய முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே சொன்னேன்.

There is a distinction between N.S.A. and this enactment.

18. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Prevention of Dangerous Activities of Bootleggers, Drug-Offenders, Goondas, **Immoral Traffic Offenders** and Slum-grabbers Ordinance, 1982 (Tamil Nadu Ordinance 1 of 1982) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any **action taken under the said** Ordinance, shall be deemed to have been done or taken under this Act.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

செவ்வாய்க் கிழமை, 1982 மார்ச் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளில் புகார் புத்தகங்கள்.

* 129. **வினா**—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து புகார் செய்ய, புகார் புத்தகங்கள் அக்கடைகளில் வைக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) நியாயவிலைக் கடைகளில் பார்வையாளர்கள் புத்தகம் வைக்கப்பட வேண்டும் என ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) மார்ச் 1980 முதல் அமுல்படுத்தப்பட வேண்டுமென்று உணவுப் பொருள் வழங்கு துறை அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, பார்வையாளர்களுக்கான புகார் புத்தகங்களிலே எழுதப்படுகின்ற புகார்கள் மீது அவ்வப்போது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா ? அதற்கு தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்கள் புகார் செய்ய விரும்பினால், அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

[1982 மார்ச் 2

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பார்வையாளர்களுக்கான புகார் புத்தகத்திலே பொதுமக்களுக்கு ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், எழுதலாம். அல்லது எந்தெந்த நிலைமைகளைச் சீர்படுத்த வேண்டுமென்று அவர்கள் விரும்பினால் , எழுதலாம். தணிக்கையாளர்கள் அதைப் பார்க்கின்றபோது, அதிகாரிகளைக் கலந்து அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கிறார்கள்... கடைகளை நிர்வகித்து வருகிறவர்கள் அதற்குப் பொறுப்பாக இருந்தால், அவர்களிடத்திலிருந்து விளக்கம் கேட்டு நடவடிக்கை எடுக்கிறார்கள். , மேல் நடவடிக்கைக்குரிய புகார் என்றால், அதையும் அறிவுறுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்களாக இருந்தால், அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் மூலம் புகார்களை எழுத வேண்டும். கடைகளை நிர்வகிப்பவர்களை வைத்து அப்படிப்பட்டவர்களுடைய புகார்களை எழுத வேண்டுமென்று சொல்கின்ற நிலைமைகள் அவ்வளவு பொருத்தமாக இராது. எப்படி இருந்தாலும், கொண்டு வரப்பட வேண்டிய கருத்துக்களை, கொண்டுவரப்பட வேண்டியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையில் இந்தப் புகார் புத்தகத்தில் எழுதலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தக் கடைகளின் மூலம் அதிகமாக பாதிக்கப்படக் கூடியவர்கள் பாமர மக்கள் தான். விவரம் தெரிந்தவர்கள் முறையீடுகள் அல்லது புகார் செய்துவிடுகிறார்கள். எழுத்தறிவில்லாத பாமர மக்கள் தங்களுக்கு இருக்கின்ற குறைபாடுகளைச் சொல்ல மேல் அதிகாரிகளை மாதத்திற்கு ஒரு முறை சந்திக்கும் வகையில் ஏற்பாடு செய்தால், அதற்குரிய முன்னறிவிப்பைக் கொடுத்தால், அவர்கள் வந்து சொல்ல ஏதுவாக இருக்கும் அல்லவா ? அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மேல் அதிகாரிகள், தணிக்கையாளர்கள் போன்றவர்களுடைய கவனத்திற்கு மக்களுடைய குறைபாடுகள் வருவதற்காகத்தான் இந்தப் புகார் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்கள் அல்லது மற்றவர்கள் புகார் கொடுக்க வேண்டுமென்று விரும்பினால், பார்வையாளர்களுடைய புகார் புத்தகத்தில்தான் எழுத வேண்டுமென்று இல்லை. அவர்கள் விண்ணப்பம் அல்லது முறையீடு மூலமாகக் கூட மேல் அதிகாரிகளுக்கு, குறிப்பாக உணவுப் பொருள் வழங்குந் துறை அல்லது வருவாய்த் துறை அதிகாரிகளிடத்தில் சொல்லலாம். அதன் மூலம் அவர்கள் குறைபாடுகள் நீங்க வழிவகை செய்யப்படும்.



1982 மார்ச் 2]

**திரு. ம. சங்கரலிங்கம் :** உணவுப் பொருள் வழங்கும் இடங்களில் தவறுகள் நடக்காமலிருக்க புகார் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு நடைபெறக்கூடிய தவறை புகார் புத்தகத்தில் எழுதிய உடனே அந்தப் புகாரை எழுதியவர் யார் என்று அந்தக் கடையில் வேலை பார்ப்பவர்களே அறியக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதன் காரணமாக அங்கு வேலை பார்ப்பவர்கள் புகார் எழுதியவரின் மீது, உணவுப் பொருள் வழங்கும்போது, பழி வாங்கக் கூடிய அல்லது விநியோகத்தில் பாரபட்சம் காட்டுகின்ற நிலை இருக்கிறது. அதற்குப் பதிலாக புகார் பெட்டி வைத்து அதை மாதத்திற்கு ஒருமுறை மேல் அதிகாரிகளே நேரில் வந்து திறந்து பார்த்து புகார் செய்திருப்பவருடைய பெயரைச் சொல்லாமல் அதிலுள்ள செய்தியை மட்டும் சம்பந்தப்பட்டவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி உரிய மேல் நடவடிக்கை எடுக்கும் முறை பின்பற்றப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதுவரை அப்படிப்பட்ட நிலைமை வரவில்லை. ஆனால் உள்ளபடியே புகார் புத்தகம் வைப்பதை விட மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்ற யோசனை நல்லது. புகார் எழுதும்போது யார் எழுதினார்கள் என்பதை கடையை நிர்வகிப்பவர்கள் கண்டுகொண்டு அப்புறம் எழுதியவர்கள் மீது கோபப்படக்கூடிய ஐயப்பாடு இருக்கிறது. அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சர்க்கரையை உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளின் மூலம் வழங்கும்போது, நபர் ஒருவருக்கு 450 கிராம் என்று அளப்பதற்குப் பதிலாக அரை கிலோ என்கிற அளவில் அரசு நிர்ணயிக்குமா ? அது வசதியாக இருக்கும் அல்லவா ? அதுபோல் கடைகளின் முன்னால் மக்கள் கியூவில் நிற்பதால், அவர்களுக்கு வசதியாக அங்கு கீற்றுப் பந்தல் போட ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மூலக் கேள்வி உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளில் புகார் புத்தகம் பற்றியது. உறுப்பினர் அவர்கள் ஏன் ' சுகரு 'க்குப் போகிறார்கள் ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகள் சம்பந்தமான வினா என்பதால் கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிச் செய்வது மேலும் மேலும் பெரும் செலவுக்கு நம்மை ஆளாக்கும் நிலைமைக்குக் கொண்டுபோய்

விடும். சர்க்கரையைப் பொறுத்தவரையில், இருக்கின்றதை அத்தனை கார்டு தாரர்களுக்கும் பங்கிட்டுத் தர வேண்டுமென்ற நிலைமையில் ஒவ்வொரு நபருக்கும் அந்த அளவுக்குத்தான் கொடுக்க வேண்டிய நிலைமை வருகிறது.

## *Shooting prices of eatables.*

* 130 *Q*.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Finance be pleased to state, whether there is any proposal with the Government to control the shooting prices of coffee, iddli, vadai and other eatables in Hotels?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். இட்லி, காபி, தேநீர் ஆகிய பொதுமக்கள் அதிகம் உண்ணும் உணவுப்பண்டங்களின் விலை உயர்வினை உணவு விடுதிகளில் தடுக்க அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** சாதாரண மக்கள் வாங்கி உண்ண முடியாத அளவுக்கு ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை உயர்ந்து விட்டது. அதனால் ஓட்டல் முதலாளிகளைக் கூப்பிட்டுப் பேசி, தரத்தைக் குறைக்காமல் அதே சமயம் விலையைக் குறைக்கின்ற அளவிற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா? அவர்களுக்கு சப்சிடி கொடுத்து மக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் நாடு எங்கும் ஆயிரக் கணக்கான உணவு விடுதிகள் இருக்கின்றன. ஐந்து நட்சத்திர ஓட்டல் முதல் சாதாரண ஓட்டல் வரை, டீ கடை வரை இருக்கின்றன. அவைகளில் உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயிக்கின்ற கேள்வி வரும்போது, எல்லாவற்றிலும் ஒரே மாதிரி விலை இருக்க வேண்டுமென்று நாம் சொல்ல முடியாது. அந்தந்த ஓட்டல் அமைப்பு முறை, அவற்றில் ஏற்படுகின்ற செலவு போன்றவற்றையும் கணக்கிட்டுப் பார்த்துத்தான் விலையை நிர்ணயிக்கிறார்கள். கூடுமானவரை ஏழையெளியவர்கள் உண்ணுகின்ற சாதாரண ஓட்டல்களில் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று அரசு அக்கறை கொண்டுள்ளது. அவ்வப்போது ஓட்டல் சங்கத்தினரைக் கூப்பிட்டுப் பேசுகிறோம். கூப்பிட்டுப் பேசியதில் அவர்களும் ஓரளவு ஓட்டல்களை ஏ, பி, சி என்று நாம் பிரித்து விலைகளை நிர்ணயிக்கலாம் என்கிற ஒரு முடிவுக்கு வந்தார்கள். இவ்வாறு சென்ற ஆண்டுக்கு முன்பு முடிவு செய்யப்பட்டது. கீழ்க்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது.



ஏ பிரிவு 2 இட்டிலி 35 காசு.

பி அண்டு சி பிரிவு 2 இட்டிலி 30 காசு என்றும்

ஏ பிரிவு 120 மில்லி லிட்டர் காபி 50 காசு.

பி பிரிவு 120 மில்லி லிட்டர் காபி 45 காசு.

சி பிரிவு 120 மில்லி லிட்டர் காபி 40 காசு என்றும்

ஏ பிரிவு தேனீர் 35 காசு

பி பிரிவு தேனீர் 30 காசு

சி பிரிவு தேனீர் 25 காசு என்றும் கட்டுப்பாடு கொண்டு வந்தோம். அதற்குப் பிறகு விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்லி மறுபடியும் விலையை உயர்த்த ஆரம்பித்து விட்டார்கள். மறுபடியும் அவர்களைக் கூப்பிட்டுப் பேசினோம். அரசாங்கமே கட்டுப்பாடான விலையில் உணவுப் பொருள்களைத் தந்தால், 5 அல்லது 10 காசு குறைக்கிறோம் என்றார்கள். அந்தப் பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. ரேஷன் கார்டுகளுக்கு நாம் தட்டுப்பாடு இல்லாமல் உணவுப் பொருள்களைத் தர வேண்டும். நமக்கே தட்டுப்பாடு இருக்கிற காரணத்தால், அவர்களுடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் நாம் இல்லை. ஆனால் சர்க்கரை, அரிசி, மைதா போன்றவைகளை கட்டுப்பாடான விலையில் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் எதை எதை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் சட்டத்தின் மூலம் விலையைக் கட்டுப்படுத்த முடியுமா என்பதையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஓட்டல்கள் நடத்துபவர்களை அணுகி, எல்லோரும் சேர்ந்து, சாதாரண ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உணவுப் பொருள் வழங்குத் துறையும் இன்றைய தினம் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இட்லி, காபி போன்றவைகளின் விலையைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இதே அவையில் முன்பு அமைச்சர் அவர்கள் பேசும்போது, இட்லி தயாரிப்பதைப் பொறுத்தவரையில், அந்தத் தொழிலை ஏழையெளிய விதவைகளின் பொறுப்பில் விட்டு, அரசே நிதி உதவி போன்ற உதவிகளைச் செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று

[1982 மார்ச் 2

குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டதா? இத்திட்டத்தை அமுல்படுத்தினால், ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்ற காரணத்தால், இது சம்பந்தமான விவரத்தை நான் அறியலாமா?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முன்பே சொன்னது போலவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது போலவும், விதவைத் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளித்தும், இடவசதி, குறைந்த வட்டி விதத்தில் கடனுதவி போன்றவை அளித்து, இட்லி, சட்னி, சாம்பார் போன்றவற்றை வழங்கச் செய்யலாமா என்று ஆராயச் சொல்லியிருக்கிறோம். அதுபற்றிய பரிசீலனை முடிந்த பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து 'ஏ' பிரிவு ஹோட்டல்களில் 2 இட்டிலி 35 பைசாவுக்குக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கடைசி நிலையில் இருக்கும் ஹோட்டல்களில் கூட இப்போது இரண்டு இட்டிலி 50 பைசா என்ற நிலையில் இருக்கிறது. மேலும், இப்போது இட்டிலியின் தரம் மிகவும் தாழ்ந்து இருக்கிறது. இட்டிலி, தோசை போன்ற இன்றியமையாத பொருள்களின் மீதாவது விலைகளைக் கட்டுப்படுத்தும் ஒரு நிலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? மற்ற சுவையான பொருள்களில் விலையேற்றினால் கூட, வேண்டியவர்கள் அவைகளைச் சாப்பிடட்டும். இதுபோன்ற இன்றியமையாத பொருள்களின் மீது இருக்கும் விலையைக் கட்டுப்படுத்தி குறைக்கும் வகையிலே நடவடிக்கை எடுக்கப் படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மிக இன்றியமையாத உணவுப் பண்டங்களாக இருக்கும் இட்டிலி, தோசை, காப்பி, டீ போன்றவை களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னால், சட்டம் வேண்டும். அவையின் தரம், அளவு போன்றவை நிர்ணயிக்கப்பட வேண்டும். இவைகளையெல்லாம் அமுல்படுத்துவதில் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. இருந்தாலும் இந்தத் துறை அதுபற்றி ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். எல்லாப் பண்டங்களுக்கென்று இல்லாவிட்டாலும், இந்த இன்றியமையாத பொருள்களுக்காவது செய்ய முடியுமா என்று பரிசீலிக்கிறோம். முடிந்தால் சட்டம் கொண்டு வரலாம்.



1982 மார்ச் 2]

**திரு. சி. இராமலிங்கம் :** இப்போது அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக ஹோட்டல்களில் இட்டிலி, தோசை போன்றவை களின் விலை மிகவும் அதிகமாக இருக்கின்றது. இப்போது நாம் எல்லா இடங்களிலும் ரேஷன் கடைகளை வைத்து பொது மக்களுக்குத் தேவைப்படும் எல்லா அத்தியாவசியமான பொருள்களையும் கொடுக்கிறோம். அதுபோல் கூட்டுறவு மூலமாகவோ, வேறு வகையிலோ ஆங்காங்கே ஆப்பக் கடைகளோ, நாஸ்தா கடைகளோ அமைத்து, இந்த இன்றியமையாத உணவுப் பொருளான தோசை, இட்டிலி போன்றவைகளை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசு இந்த முயற்சியை மேற்கொண்டால், அதிகமான எஸ்டாபிளிஷ்மென்ட் சார்ஜ் ஆகும். அப்படி வரும்போது பண்டங்களின் விலை இன்னும் அதிகமாகும். அல்லது மானியம் தந்து நடத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். அப்படிப்பட்ட நிலை வரும் போது, அதற்கு ஏராளமான பணச் செலவாகும். தனியார் போட்டியிட்டு நடத்துவதுதான் நல்லது. இருந்தாலும், ஒரு கட்டுப்பாட்டின் அடிப்படை யிலே அவற்றை நிறைவேற்ற இயலுமா என்பதுபற்றி ஆலோசிக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அரசே நடத்தவில்லை என்று சொன்னாலும்கூட, படித்த இளைஞர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட அரசு தேவையான உதவிகளை அவர்களுக்குச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** படித்த இளைஞர்கள் இதற்கு வருவார்களா என்பது சந்தேகம். எவ்வளவோ வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தும்கூட, அந்த வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளாத நிலைதான் இப்போது இருக்கிறது. தொழில் துறையைப் பொறுத்தவரையில்கூட, அவர்களுக்குக் குறைந்த அளவு வட்டியில் கடன் போன்ற பல உதவிகள் செய்த பிறகும், அதிகமான அளவில் வராமல் இருக்கும் போது, இதற்கு வருவார்களா என்பது சந்தேகம்.

THIRUMATHI TARA CHERIAN: Sir, will the Hon. Minister consider our experience in some of the welfare organisations where we have opened manned by physically handicapped people, particularly deaf girls? In those kiosks, the food is hyeienic, cheaper and is also well served. If he can allow our experience to be made use of, I think we can open such kiosks in two or three places as a pilot project. Will the Hon. Minister consider this?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனை நல்ல யோசனைதான். அந்த முறையோடு அவர்கள் விண்ணப்பம் தந்தால், அதுபற்றி எந்த வகையிலே அவர்கள் கூறுகின்ற சங்கத்தினரைப் பயன்படுத்தி உணவுப் பண்டங்களை விநியோகிக்கலாம் என்று பரிசீலிக்கலாம். ஆகவே, அதைப் பற்றி ஒரு குறிப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி தாரா செரியன் :** அது 'டைம்-பவுண்ட்' ஆக இருந்தால், நன்றாக இருக்கும்.

Sir, this has to be done as a time-bounded programme. If the Government go on making a research on it, it will take a long time. We will make an offer to do it as a time-bound programme so that we may sort out the problem as early as possible. Will it be possible for the Hon. Minister to agree to it?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரங்களை எழுதித் தந்தால், அதைக் கவனித்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். அதன் மூலம் ஓரளவுக்கு உணவுப் பண்டங்களின் விலைகளை ஆங்காங்கே குறைக்க வசதியிருந்தால் நல்லதுதான்.

**செல்வி ஆ. லீலாவதி :** இப்போது 'அன்-எம்பிளாய்ட் யூத்ஸ்' வெளியே சாலையோரங்களில் சிறு சிறு கடைகளைப் போட்டு பிஸ்கெட், டீ போன்றவை களை விற்கிறார்கள். அந்த மாதிரி ஏழை மக்களுக்கும் உதவி செய்து அவர்கள் தோசை, இட்டிலி போன்றவைகளை விற்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசே ஏற்பாடு செய்வது என்பது கடினமானது. வாலன்டரி ஆர்கனைசேஷன்ஸ், இல்ட் ஆஃப் சர்வீஸ் போன்றவைகள், 'பிசிக்கலி ஹேன்டிக்கேப்ட்' போன்றவர்களை வைத்து நடத்தலாம் என்று முன்வந்தால், நாம் விதவைகளுக்குத் தரலாம் என்று சொன்ன அந்த அடிப்படையிலே, குறைந்த வட்டி விதத்தில் கடன், இட வசதி போன்ற உதவிகளை இவர்களுக்கும் செய்யலாம்.





### பிற்பட்டோர் நல வாரியம்.

*** 131. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பிற்பட்டோர் நலனுக்காக தனி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 1980-81 ஆண்டில் அரசு, தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை நிறுவ ஆணையிட்டுள்ளது.

(இ) இக்கழகம் ரூ. 10 கோடி மூலதனத்துடன் பிற்பட்டோர் மற்றும் குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோரின் நலனுக்காக செயல்பட உள்ளது. இக்கழகம் 16—11—1981-ல் கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி தனியார் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று பல சலுகைகள் அளிக்கப்பட்டும் கூட, அந்த சமூகத்தைச் சார்ந்த பல்வேறு பிரிவினர்கள் இன்னும் அந்த வாய்ப்புக்களையும், வசதிகளையும், சலுகைகளையும் பயன்படுத்திக்கொண்டு முன்னேறாமல் இருக்கும் நிலை இப்போது இருக்கிறது. அவர்களின் நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள இந்த வாரியம் எந்த முக்கியமான இலட்சியங்களின் அல்லது கொள்கைகளின் அடிப்படையில் செயல்படத் தொடங்கியிருக்கிறது? அதனுடைய தலையாய பணிகளாக எந்தெந்தப் பணிகள் அந்த வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது போன்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக குறைந்த வட்டி வீதத்தில் கடன் அளித்தல். தொழில் முயற்சிகளுக்காக 'மார்ஜின் மணி' அளித்தல், பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்காக வர்த்தகத் தொழில் ரீதியாக பல திட்டங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளுதல் போன்ற திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இக்கழகம் அரசின் நிதியுதவி பெறுவதுடன், வங்கிகள் இதர நிறுவன நிதியுதவிகளையும் பெற்று இயங்கும். இக்

கழகம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களில் பங்கேற்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பிற்பட்டோர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் எந்தெந்த சமூகத்தினர் இன்னும் முன்னேறவில்லை என்பதைப்பற்றி அரசே விவரஙகளைத் தயார் செய்து அதன் அடிப்படையில் அதற்கான உரிய திட்டம் தயாரித்து இந்த பிற்பட்ட சமூகத்திலே இன்னும் முன்னேறாமல் இருப்பவர்களுக்காக சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த வாரியம் முன்வருமா ? மத்திய அரசால் பிற்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட அந்த பிற்பட்டோர் நலக் கமிஷன் அறிக்கையை மத்திய அரசு பெற்றுக்கொண்டு விட்டதா ? அதுபற்றிய விவரங்கள் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டனவா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கிற கழகத்தில் சமூக நலத்துறையினுடைய செயலாளர் தலைவராக இருந்து அவருடன் மேலும் 45 உறுப்பினர்கள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அமைக்கும் விதிமுறைகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற தன்மைகள் இடம் பெறும். 250-க்கும் மேற்பட்ட வகுப்பினர் இதிலே இருக்கிறார்கள் என்றால், 39 வகுப்பினர் தான் 'மோஸ்ட் பேக்வர்ட்' என்ற வகையிலே இருக்கிறார்கள். மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு, வசதியற்ற நிலையில் இருப்பவர்களுக்குத்தான் இப்போது உதவிகள் தர முடியும். பிற்பட்டோர் என்ற காரணத்திற்காக அவர்களிலே வசதிபடைத்தவர்கள் இருந்தால், அவர்களுக்கு இல்லை. எல்லோருக்கும் கொடுக்க இந்தக் கழகத்தால் இயலாது. மிக மிக பிற்பட்ட நிலையில் கிடக்கிற மக்களை நாம் கணக்கில் கொண்டு அதற்கான விதிமுறைகளை இந்த வாரியம் அமைத்து, அந்த அடிப்படையிலே செயல்படும். மத்திய அரசின் அறிக்கையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது பற்றிய குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அந்த விவரங்களைத் தரலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** சமயத்தின் அடிப்படையில், பின்பற்றக்கூடிய சமய மார்க்கத்தின் அடிப்படையில் பார்த்தால், இப்போது பாரபட்சம் காட்டப்படுகிறது. பிற்பட்ட கிறிஸ்தவர்களுக்கு இப்போது சலுகை இல்லை. ஆகவே, இந்தப் பாரபட்சத்தைக் களைந்து அவர்களுக்கும் சலுகை அளிக்கும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 39 வகுப்புகளை மிகவும் பின்தங்கிய, 'மோஸ்ட் பேக்வர்ட் கம்யூனிட்டி' என்று வைத்திருக்கிறார்கள். பிற்பட்டோர் என்று வருகின்றபோது, கல்லூரிகளில் சேர்க்க, அல்லது வேலை வாய்ப்பு பெறுவது போன்றவற்றில் 50 சதவீதத்திற்கும் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இந்துக்களாக இருக்கும்போது எந்த நிலையில் இருந்து பின்னர் இந்த நிலைக்கு வருகிறார்களோ, ஏற்கெனவே எந்த நிலையில் இருந்தார்களோ அந்த நிலையில்தான் அவர்களைப் பார்க்க முடியும். அப்படிப் பார்க்கும்போது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்பட்டவர்கள் என்று தான் பார்க்க முடியும். வேறுவகையிலே பார்க்க முடியாது. நான் முதலிலே கூறியபடி, நலிந்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு இந்த உதவிகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.50)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பல ஆண்டுகளுக்கு முன்பு Most Backward என்று மிகவும் பிற்பட்டோர் சமூகங்களுக்கு என்று தனியான ஒதுக்கீடுகள் இருந்தன. ஆனால் பிறகு அந்த முறை ரத்து செய்யப்பட்டு விட்டது. இப்போது அந்த முறையைப் புதுப்பித்து, மிகவும் பிற்பட்டோர் சமூகத்தினருக்குத் தனியாக ஒதுக்கீட்டைச் சதவீத அடிப்படையில் செய்வதற்கு அரசு முன்வருமா ? இந்தக் கருத்தை அரசு ஏற்று செயல்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் குறிப்பிட்டபடி, குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்கள், மதுரை மாவட்டத்தில் இருப்பவர்களுக்கென்று தனியாகப் பொருளாதாரச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. முடிதிருத்துவோருக்கு இனாமாகப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. அதைப்போலவே சலவைத் தொழிலாளர்கள் மிகவும் பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்ற அடிப்படையில், பொருளாதார நிலையில், மானியம், கடன் சலுகைகள் என்று தனியாக வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பட்டியலில் இருப்பவர்களில் மிகவும் பிற்பட்டவர்களாக இருப்பவர்கள் முறையாகவும் சரியாகவும் சலுகைகளைப் பெற இயலவில்லை என்பதால், அவர்களைத் தனியாகப் பிரித்து, அவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்வதுதான் நல்லது என்று சட்டநாதன் குழு தன் அறிக்கையில்கூட குறிப்பிட்டிருக்கிறது. பிற்பட்டோர் பட்டியலில் உள்ளவர்களுக்காக ஒதுக்கப்படும் சலுகைகளை அதில் வளர்ந்த சமூகத்தினரே முழுவதுமாகப் பெற்றுவிடுகிறார்கள் என்றும், பிற்பட்டவர்களிலேயே இன்னும்

வளராத சமூகத்தினர் அவைகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள், இந்த நிலைமையை மாற்ற, அவர்களுக்கு என்று தனி ஒதுக்கீடு செய்தால்தான் நல்லது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதை எந்த அளவுக்குச் செய்ய முடியும் என்பதைத்தான் அந்தத் துறை இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் கேட்ட துணை வினாவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பதில் அளித்தார்களா இல்லையா அல்லது நான்தான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா என்ற ஐயப்பாடு எனக்கிருக்கிறது. எனவே உதாரணத்தோடு ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். விருதுநகர் போன்ற பெரிய வியாபார ஸ்தலங்களில் பெரிய பணக்காரர்கள் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அங்கேயே கிறிஸ்டியன் நாடார்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். பணக்கார இந்து நாடார்களுக்கு பிற்பட்டோர் சலுகைகள் கிடைக்கின்றன. ஏழை கிறிஸ்டியன் நாடார்களுக்குக் கிடைப்பதில்லை. கிறிஸ்டியன் என்ற பெயராலேயே சலுகை மறுக்கப்படுகிறது. எனவே இதை அரசு மாற்றுவதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இது எந்த நிலையில் நடை பெறுகிறது என்பதற்கான விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. தாழ்த்தப் பட்டவர்களாக இருப்பவர்கள் கிருத்துவர்களாக மாறினால், அவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கிறோம். பிற்படுத்தப்பட்டோராக இருப்ப வர்கள் கிருத்துவர்களாக மாறினால், அதை ஒரு புரமோஷனாக நினைக்க வேண்டியிருக்கிறது. எனவே அவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் வைப்பதில்லை. அந்த வகையில் சலுகைகளும் அளிக்கப்படுவதில்லை.

## வேலைவாய்ப்பில் முன்னுரிமை

* 132. வினா—திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் & திரு செ முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) அரசுத் துறையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் பணியிலிருக்கும் பொழுது இறந்து விட்டால், அவருடைய வாரிசுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் ஆணை நடைமுறையில் உள்ளதா ?





(இ) ஆம் எனில், அந்த ஆணையின் பயனை கல்வித் துறையில் பணியாற்றும் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் .** (அ) ஆம்.

(இ) இச்சலுகைகள் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் பணி புரியும் பணியாளர்கட்குப் பொருந்தும். அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றுபவர்களுக்குப் பொருந்தும் வண்ணம் இச்சலுகைகளை நீட்டிப்பதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கல்வித் துறையின் கீழுள்ள தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கும் இந்தச் சலுகையை விரிவுபடுத்துவதைக் குறித்து அரசு பரிசீலனை செய்வதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், ஒரு ஆசிரியர் அல்லது ஒரு அலுவலர் தம் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது அவருடைய குடும்பத்தில் உள்ள வாரிசுக்கு, அவர் பெற்றிருக்கிற கல்வித் தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கும் சலுகைகளை விரிவு படுத்துவதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட பரிசீலனை எதும் அரசிடம் இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** அரசு நிறுவனங்களில் பணியாற்றுவோருக்குக் கொடுக்கும் சலுகைகளைத் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோருக்குக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களைக் குறித்து அரசு என்ன நிலையை மேற்கொண்டிருக்கிறது ? குவாசி கவர்ண்மென்ட்டாக இருக்கும் இத்தகைய உள்ளாட்சி நிறுவனங்களில் இதை உடனடியாக அமுல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இக்கேள்வி கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைப் பொறுத்ததாகும். ஆகவேதான் அவைகளைப்பற்றி மட்டும் நான் தெரிவித்தேன். உள்ளாட்சித் துறை தொடர்பாக உள்ள கேள்வியை அதற்குரிய அமைச்சர் அவர்களிடம்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டும்.

[1982 மார்ச் 2

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சிலர் வாரிசுகள் இல்லாமலேயே இறந்து விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், சட்டத்தையே கொஞ்சம் தளர்த்தி அவர்களுக்குப் பக்கத்து உறவுக்காரர்கள் அல்லது தூரத்து உறவுக்காரர்களுக்குக் கருணையின் அடிப்படையில் இந்தச் சலுகையை வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** திடீரென்று ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்துவிட்டால், அதனால் அவருடைய குடும்பம் பாதிக்கப்படக்கூடாது, அவருடைய குடும்பத்திற்கு அரசு ஆதரவு தர வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. நல்லெண்ணத்தின் அடிப்படையில் வழங்கப்படும் இதுவே தவறான நிலைமைகளுக்கு இடம் தந்துவிடக் கூடாது என்ற அச்சம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டார் என்ற காரணத்திற்காக அதில் அதிகமான அளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற நிலை வருமானால் அரசு அதைப் பற்றி ஆராயும்.

**திரு. செ. முத்துசாமி :** இரண்டாவது வினாவில் "கல்வித் துறையில் பணியாற்றும் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்குவது குறித்து" என்று தெளிவாகக் கேட்கப்பட்டுள்ளது. தனியார் நிருவகிக்கும் கல்வி நிலையங்களானாலும் சரி, உள்ளாட்சி மன்றங்களினால் நிருவகிக்கப் படும் கல்வி நிலையங்களானாலும் சரி, அனைத்தும் மேனேஜ்மெண்ட்டின் கீழ்தான் செயல்படுகின்றன. இவ்வாறு தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு இந்தச் சலுகையை வழங்க முயற்சியை மேற்கொள்ளும் அரசு, உள்ளாட்சித் துறையின் கீழ் உள்ள, நகராட்சி, மாநகராட்சி மற்றும் ஊராட்சி மன்றங்களின் கீழ் உள்ள ஆசிரியப் பணியாளர்களுக்கும் இந்தச் சலுகையை விரிவுபடுத்த முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை, உள்ளாட்சி மன்றங்களில் உள்ள கல்வி நிறுவனங்களுக்குக் கொடுப்பதில் எந்தச் சங்கடமும் இல்லை. ஆனால் எந்த அடிப்படையில் தருவது என்பதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**செல்வி ஆ. லீலாவதி :** ஒரு குடும்பத்தின் தலைவராக உள்ளவர், பணியாற்றும்போது இறந்துவிட்டால், அவருடைய மனைவி வேலையில் இருந்தால், அவர்களின் மகனுக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று அரசு



1982 மார்ச் 2]

அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது. தகப்பன் இறந்ததன் காரணமாக அந்தக் குடும்பத்தின் வருவாய் குறைந்துவிடுகிறது. எனவே அந்த அரசு ஆணையை ரத்து செய்து மீண்டும் அப்படிப்பட்டவர்களின் குழந்தைகளுக்கும் வேலை வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இறந்தவரின் மகனுக்கு வேலை கொடுக்கவில்லை என்றாலும், அந்த வேலை, பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கும் இன்னொரு ஆசிரியருக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. அப்படி வேலை பெறும் அந்த ஆசிரியரேகூட அவருடைய குடும்பத்திலேயே வேலைக்கு வருகிற முதல் ஆளாகக்கூட இருக்கலாம். நாம் தருகிற சலுகைகள் என்பதை, வேலைக்கு வந்துவிட்டவர்களை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு வழங்குவது என்ற அடிப்படையில் அமைப்போமானால், அது நல்லதல்ல. ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்குச் சலுகைகளை அதிகரித்துக் கொண்டே போவதாகத்தான் அது இருக்கும். அதன் காரணமாக இதுவரை வேலைக்கே வராத குடும்பங்கள் வெகுவாகப் பாதிக்கப்படும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கூடுமானவரை சில நிபந்தனைகளை வைத்து நாம் இப்போது வேலை தந்து கொண்டிருக்கிறோம். எந்த வேலையாக இருந்தாலும், யாரோ ஒரு வேலையில்லாத ஒருவருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதனால் அந்தக் குடும்பமே பயன் அடையலாம். வேலையில் இருப்பவர்களின் குடும்பங்களுக்கு மட்டுமே சலுகை வழங்குவது என்று போனால், பிறகு அந்தக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் மட்டும்தான் வேலைக்கு வந்து கொண்டிருப்பார்கள். இந்த வேலைகள் எல்லாம் பிறகு குறிப்பிட்ட சில குடும்பங்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவைகளாகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு உறுப்பினர் எத்தனை துணை வினாக்களைக் கேட்பது என்று ஒரு முறை இருக்க வேண்டாமா ? ஒருவரே மூன்று துணை வினாக்கள் கேட்டால் எப்படி ?

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, எங்களை அனுமதித்து விட்டு, இப்படி கோபித்துக்கொண்டால் நாங்கள் எங்கே போவது ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரை நான் கூப்பிடவில்லை. பாரபட்சம் என்று பல நேரங்களில் பேசுகிறார்கள்.

உங்களோடு சேர்ந்து இன்னொருவரும் கேள்வி கேட்டிருக்கிறார். அவர் இரண்டுக்கு மேல் கேட்பது நியாயமில்லை என்று இருக்கிறார். உங்களை மட்டும் மூன்று முறை அனுமதித்தால் அவர் நான்காவது முறையாகக் கேள்வி கேட்க வருவார்.

திரு. செ. முத்துசாமி : நான் கேட்டேன் என்பதற்காக அவர் போட்டி போட்டுக்கொண்டு கேட்கமாட்டார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உங்களிடையே இருக்கிற போட்டி பற்றி எனக்கல்லவா தெரியும்? (சிரிப்பு)

திரு. செ. முத்துசாமி : கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, ஓய்வு பெறுகிற ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகளை விரிவுபடுத்துவது பற்றி பரிசிலனை இல்லை என்றார். அதிலிருக்கிற நன்மையை அவர் கருத்தில் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். 20 ஆண்டுக் காலம் பணியாற்றிய ஆசிரியர் ஒருவர் தன்னுடைய பெண் அல்லது பையனுடைய திருமணத்திற்காக தன்னுடைய பணியிலிருந்து தான் ஓய்வு பெற்றுக் கொண்டு, அந்த இடத்தில் அவருடைய வாரிசுக்கு இடம் தருவதன் மூலம் 'யங்க்ஸ்டர்'க்குக் குறைவான சம்பளம் தர வேண்டிய நிலையை உருவாக்குகிறார். அதிகமான சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த அவர் ரிடையர் ஆவதோடு குறைவான சம்பளத்தில் அந்தப் பணிக்கு அவருடைய வாரிசை அனுப்புகிறார் என்பதால், அரசு நல்லெண்ணத்தின் அடிப்படையில் இதைப் பரிசிலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொன்றிலும் நல்லதும் இருக்கிறது, நல்லது அல்லாததும் இருக்கிறது. இரண்டையும் வைத்துப் பார்த்துத்தான் முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பாரம்பரியம் உடையதாகப் போய்விடக் கூடாது. அப்படிப் போவது என்பது இப்போது இருக்கக்கூடிய அரசினுடைய அடிப்படைக் கொள்கைக்கு ஒத்துவாராத ஒன்றாக இருக்கிறது. ஆகவேதான் அதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கில்லை என்று சொன்னேன்.



## பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள்

* 133 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி ஆ வீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) அரசுப் பள்ளிகளில் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்ற பலருக்கு 21—8—1978 ஆம் நாள் வரை ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், இவர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதா?

(உ) இல்லை எனில், விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (இ) மற்றும் (உ) மாவட்ட பணிமூப்புப் பட்டியல் மற்றும் மாநில பணி மூப்புப் பட்டியல்படி 'பி' பிரிவில் அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்கள் 122 பேர். மாவட்ட பணிமூப்புப் பட்டியல்படி பதவி உயர்வு பெற்றவர்களில் 24 பேர் மாநில பணிமூப்புப் பட்டியல்படி பதவி உயர்வுக்கு உரிமை பெறாததால், அவர்களைத் தவிர்த்து மீதி 98 தலைமை ஆசிரியர்களுக்கு அடிப்படை விதி எண் 22-பியின்படி, ஊதிய நிர்ணயம் செய்து கொள்ள அரசு தக்க சான்றிதழ்கள் வழங்கியது. இவர்களில் 21—8—1978 வரை ஊதிய நிர்ணயம் செய்யப் பட்டவர்கள் 72 பேர். இந்தத் தேதிக்குப் பிறகு 16 தலைமையாசிரியர்களின் ஊதியமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 88 தலைமையாசிரியர்களின் ஊதியம் இதுவரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 பேர்களில் தமிழ் வளர்ச்சித் துறைக்கு மாற்றுப் பணியில் சென்றுள்ள ஒருவர், அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர் ஊதியத்தைக் காட்டிலும் அதிகமான ஊதியம் பெறுவதால் அன்னாரது ஊதியம் அடிப்படை விதி 22-பி-ன்படி நிர்ணயம் செய்யப்பட அவசியம் ஏற்படவில்லை. மற்ற 9 தலைமையாசிரியர்கள் 1—4—1978-க்குப் பின் பதவி உயர்வு பெற்றவர்களாதலாலும், இந்நாளுக்குப் பின் அரசிதழ் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத தலைமையாசிரியர்களின் ஊதியம் ஒன்றாக்கப்பட்டதாலும், அவர்களுடைய ஊதியமும் அடிப்படை விதி எண் 22-பி-ன்படி நிர்ணயம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாநில அளவிலே பணி மூப்பின் அடிப்படையில் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்ற ஒரு சிலருக்கு மட்டும் அவர்களுடைய முந்தைய பணிக்

காலத்தைக் கணக்கிலே சேர்த்துக்கொண்டு தேர்வு நிலை வழங்க ஒரு சிறப்பு ஆணை அண்மையில் வழங்கப்பட்டிருப்பது உண்மையா ? அப்படியென்றால் மற்ற மேல் நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் ஏன் வழங்கக்கூடாது என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நான் சொன்ன பதிலில் மாவட்ட பணி மூப்புப் பட்டியலில் உள்ளபடி, அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள் 122 பேர் இருந்தார்கள் என்று கூறியுள்ளேன். பிறகு மாநிலப் பணி மூப்புப் பட்டியல் போடுகிறபோது, 24 பேர் தகுதியில்லாமல் இருந்தார்கள். ஆகவே மற்றவர்களுக்கு 22-பி-யின்படி, அதாவது 88 பேருக்கு இதுவரை ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பத்து பேரில் ஒருவருக்குத் தேவையில்லாமல் இருக்கிறது. மீதி பேர் 1—4—1978-க்குப் பின் இந்த வித்தியாசம் இல்லாமல் ஒரே ஸ்கேலில் வந்துவிட்ட காரணத்தால் தேவையில்லை என்று வைக்கப்பட்டிருக்கிறது.

**செல்வி ஆ. லீலாவதி :** இது 1978 ஆம் ஆண்டில் நடைபெற வேண்டியது. இப்போது 1982 ஆம் ஆண்டிலே இது பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆசிரியர்களுடைய இது போன்ற பல கோப்புகள் இயக்குநர் அலுவலகத்திலே தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் அரசு முடிவு எடுத்துவிட்டது. அவர்களுக்குத் தர வேண்டிய அவசியம் இல்லையென்று முடிவு எடுத்திருக்கிறது.

## பள்ளியிறுதித் தேர்வுகள்.

*** 154 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) சென்ற சில வருடங்களாக அக்டோபர் மாதத்தில் பருவ மழை தீவிரமாக இருப்பதால், அம்மாதத்தில் நடைபெறும் பள்ளியிறுதித் தேர்வை வேறு மாதத்தில் நடத்துவது குறித்து அரசு பரிசிலித்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பொதுவாகவே இந்தப் பருவ மழை தீவிரமாகப் பெய்கின்ற காலத்திலே பள்ளிகளுடைய பணிகள் பாதிக்கப்படுகின்றன. பருவ மழை குறிப்பிட்ட காலங்களில் தான் பெய்கிறது. ஏற்கெனவே ஆங்கிலேயர்கள் வகுத்த விதிமுறையின்படி பள்ளிகளின் பணித் திட்டங்களை இன்னும் நாம் பின்பற்றி வருகிறோம். இப்போது மாறியுள்ள சூழ்நிலைக்கேற்ப, நம்முடைய தட்ப, வெப்ப நிலைக்கேற்ப பள்ளியின் பணி நாட்களை மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வெள்ளைக்காரன் காலத்திலே ஏற்பட்டாலும், இந்த நாட்டு தட்ப வெப்பத்திற்கேற்பத்தான் ஏற்படுத்தியிருக்கிறான். ஆகவே மாற்றுவதற்கான அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** வெள்ளைக்காரர்கள் தங்களுக்கேற்ற தட்ப வெப்பத்திற்கு ஏற்ற முறையிலே அமைத்தார்களே ஒழிய, இங்கே வாழ்கின்ற மண்ணின் மைந்தர்களுக்கேற்ப அமைக்கவில்லை. உதாரணமாக கோடை வெப்பம் அவர்களுக்குத் தாங்க முடியவில்லை. ஆகவே கோடைக் காலத்திலே நீண்ட காலத்திற்கு விடுமுறை விடப்பட்டது. ஆகவே இப்போது மழைக் காலங்களில், கூரை இல்லாமல், கட்டிடம் இல்லாமல் மரத்தடியில் நடத்தப்படும் பள்ளிகளில், பள்ளி நடைபெற முடியவில்லை. ஆகவே மழைக் காலத்தில் நீண்ட விடுமுறை விடுத்து கோடைக் காலத்திலே பள்ளியை நடத்த முடியும் என்ற வகையிலே இந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்வி தேர்வுகள் நடத்துவதைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது கேட்பது விடுமுறையைப் பற்றியதாக இருக்கிறது. ஆகவே தெளிவாகக் கேள்வியைக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி :** கோடைக் காலத்திலே அதிகமான வெயிலில் மாணவர்கள் தேர்வுகளை எழுத வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே டிசம்பர் மாதத்தில் தேர்வுகளை மாற்றியமைக்க அரசு ஏதாவது ஏற்பாடுகள் செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வருடத்திலே இரண்டு முறை தேர்வுகள் நடைபெறுகின்றன. கோடைக் காலத்திலே அல்லது மழைக்

காலத்திலே அல்லது குளிர் காலத்திலே என்று மாற்றி வைத்தாலும் இரண்டிலே ஒன்றிலேதான் வைக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் செய்து கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், தேர்வுகளை நடத்தி முடிவுகளை வெளியிடுவது என்பதைப் பொறுத்த வரையில், இந்தியாவில் பல மாநிலங்கள் இருக்கும்போது, நாம் மட்டும் ஒரு முடிவை எடுப்பது என்பது மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே அகில இந்திய ரீதியிலே செய்யப்பட வேண்டிய ஒன்றாக இருந்தால்தான், நல்லபடியாக இருக்கும். இல்லையென்றால் நாம் ஒரு மாதத்தில் தேர்வை நடத்தி முடிவைத் தாமதப் படுத்துவதால், மற்ற மாநிலங்களோடு போட்டி போடக் கூடிய நேரத்தில் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பது ஏற்கெனவே நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற பிரச்சினையாகும். ஆகவே அந்த அடிப்படையிலே ஒரு மாநிலத்தைச் சேர்ந்த நாம் திடீரென்று முடிவு எடுக்கக் கூடிய பிரச்சினை அல்ல இது.

திரு. செ. முத்துசாமி : கொல்லி மலை போன்ற பகுதியிலே மழை அதிகமாக இருப்பதால், அக்டோபர் மாதத்தில் கல்வித் துறையில் நீண்ட விடுமுறை விடுகிறார்கள். அப்படி எந்தெந்த இடத்திலே கடுமையான மழை இருக்கிறது என்பதைக் கணித்து அதற்கான மாற்றத்தைச் செய்வதில் அரசுக்கு எந்தவிதச் சங்கடமும் இருக்காது. அப்படிப்பட்ட பகுதிகளுக்காவது அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த மூலக் கேள்வி தேர்வு களைப் பற்றியது. இப்போது விடுமுறையைப் பற்றியே கேட்கிறார்கள். பள்ளியை 200 நாட்கள் நடத்த வேண்டியிருக்கிறது. வேண்டுமானால் 200 நாள் நடத்தினால் போதும் என்ற சுதந்திரத்தைத் தந்து விடலாம். ஆனால் தேர்வுகளை நாம் சென்ட்ரலைஸ் பண்ணி மத்திய போர்டின் மூலம் நடத்திக் கொண்டிருப்பதால், அதை இஷ்டப்படி நடத்த முடியாது. மற்றபடி ஒரு பள்ளியை அட்டானமஸ் பாடியாக மாற்ற வேண்டும் என்ற கருத்து வந்தால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் அது பெரிய பிரச்சினையல்ல.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாணவர்கள் மழைக் காலத்திலே நல்ல சிந்தனையோட்டத்துடன் தேர்வு எழுதுவார்களா அல்லது வெயில் காலத்திலே நல்ல சிந்தனையோட்டத்துடன் எழுதுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : படிக்கின்ற மாணவனுக்கு வெய்யில், மழை ஒன்றும் தெரியாது.



### அடிப்படை விதி 22-பி-ன் கீழ் சம்பளம் நிர்ணயம் செய்தல்.

* 135 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடிப்படை விதி 22-பி-ன்படி கூடுதல் பணிக்கால அனுபவம் உடையவர்கள் தங்களைவிட குறைந்த பணிக்கால அனுபவம் உடையவர்கள் கூடுதல் சம்பளம் பெறுவதைச் சுட்டிக்காட்டி, தங்களுக்கும் அவர்களுக்கு ஒப்ப சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பம் செய்துள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(இ) விண்ணப்பங்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மொத்தம் 39 பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றது. மாவட்ட வாரியாக ஆசிரி யர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | சென்னை | இல்லை |
| 2. | காஞ்சிபுரம் | 1 |
| 3. | கடலூர் | 1 |
| 4. | தஞ்சாவூர் | 7 |
| 5. | புதுக்கோட்டை | இல்லை |
| 6. | திருச்சி | 4 |
| 7. | மதுரை | 7 |
| 8. | இராமநாதபுரம் | 3 |
| 9. | திருநெல்வேலி | இல்லை |
| 10. | நாகர்கோவில் | 1 |
| 11. | வேலூர் | 2 |
| 12. | தர்மபுரி | இல்லை |
| 13. | சேலம் | 13 |
| 14. | ஈரோடு | |
| 15. | கோவை | இல்லை |
| 16. | நீலகிரி | |
| | மொத்தம் | 39 |

(இ) அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து அவற்றில் 11-ன் மீது ஆணை வழங்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள 28 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, 39 விண்ணப்பங்களில் 28 விண்ணப்பங்கள் இன்னும் பரிசிலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் விண்ணப்பம் போட்டு எவ்வளவு நாட்கள் ஆகின்றன? எவ்வளவு நாட்களாகப் பரிசிலனையில் இருக்கின்றன? அவர்களுடைய விண்ணப்பத்திலும், இதற்கு முந்தைய விண்ணப்பங்களைப் போல உத்தரவு வழங்க என்ன தடை இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விண்ணப்பங்கள் எப்போது பெறப்பட்டன என்ற விவரம் தரப்படவில்லை. வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை தரப்பட்டிருக்கின்றது. 11 விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பரிசிலனையில் உள்ளது 28. கூடுதல் பணிக்கால அனுபவம் உடையவர்கள் தங்களைவிட குறைந்த பணிக்கால அனுபவம் உடையவர்கள் கூடுதல் சம்பளம் பெறுவதைச் சுட்டிக்காட்டி தங்களுக்கும் அவர்களுக்கு நிகராக அடிப்படை விதி 22-ன்படி சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் காரணத்தைப் பரிசீலிக்க நாட்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பரிசிலனையை விரைவுபடுத்த வேண்டும் என்று அரசு கேட்டுக்கொள்ளும்.

(முற்பகல் 10-10)

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இவர்கள் தங்களைவிட குறைந்த பணிக்கால அனுபவம் உடையவர்கள் கூடுதல் சம்பளம் பெறுவதைச் சுட்டிக்காட்டி கேட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்களுடைய சர்விஸ் ரிஜிஸ்ட்டரை வாங்குவதில் கால தாமதம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவரைவிட குறைந்த பணிக்காலம் உடையவர்கள் கூடுதல் சம்பளம் பெறுவதற்குக் காரணம் சர்வீஸ் ரிஜிஸ்ட்டர்கள் வராதது தான் என்கிறார்கள். ஆகவே அதைப் பெற ஒரு குறிப்பிட்ட கால வரம்பை வைக்க வேண்டும். குறைந்த அளவு விண்ணப்பம் கொடுத்த ஒரு வருடத்திற்குள்ளாவது உண்டு, இல்லை என்ற முடிவு சொல்கின்ற முறையிலாவது ஒரு ஏற்பாட்டை இந்தத் துறை ஏற்படுத்த வேண்டும். அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சர்வீஸ் ரிஜிஸ்ட்டர் கிடைப்பது என்பது அவ்வளவு சுலபமானதாகத் தெரியவில்லை. தனிப்பட்ட முறையிலே, சொந்த அனுபவத்திலே தெரிகிறது. சர்வீஸ் ரிஜிஸ்ட்டர் ஒரு அலுவலகத்திற்குப் போய்விட்டால், பிறகு மறுபடியும் பெறுவது என்பது கடினமான காரியமாக இருக்கிறது. அதற்கு நடவடிக்கை



எடுக்கிறோம். குறிப்பிட்ட காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். அது நிர்வாகத்திலே தீர்க்க வேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கல்வித் துறையின் மூலம் அமுல்படுத்த நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமல்லாமல், சிறப்பு நிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், இப்படி பல்வேறு நிலை ஆசிரியர்கள் எல்லாம் ஒரு காலத்திலே பணியிலே முன் பின் சேர்ந்தவர்கள், பணி மூப்பு அதிகம் உடையவர்கள் குறைந்த ஊதியம் வாங்குவதும், பணி மூப்பு குறைந்துள்ளவர்கள் அதிக ஊதியம் வாங்குவதும் என்று உள்ளது. இப்படி பல மாவட்டங்களிலும் இருக்கின்றது. அரசு அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க எல்லா நிலை ஆசிரியர்களிடையேயும் இப்படிப்பட்ட பாகுபாடு இல்லாத அளவுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து, அதற்கு ஆய்வு நடத்தி அந்தக் குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வியிலே பொதுவாக ஆசிரியர்கள் என்றுதான் கேட்டிருக்கிறார்கள். நான் சொன்ன பதிலிலே 39 பட்டதாரி ஆசிரியர்கள் என்று சொல்லியிருக்கிறேன். மீதமுள்ள ஆசிரியர்கள் விண்ணப்பம் செய்திருப்பதாக என்னிடம் விவரம் இல்லை. அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கும் என்றால், அந்த ஆசிரியர்கள் விண்ணப்பித்தால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அரசு நிர்வாகத்தின்கீழ் வந்து, ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதிலே ஏற்கெனவே ஜூனியர், சீனியர் என்ற பிரச்சினை வந்திருக்கிறது. யாரை எந்தச் சம்பளத்தில் நிர்ணயிப்பது என்ற பிரச்சினையும் வந்திருக்கிறது. இதில் தவறு நடந்துவிட்டால், அப்பீலுக்குப் போகிறபோது, அதற்கு அத்தாரிட்டி யார் என்று போடப்படாமல் இருக்கிறது. அதனால் இந்த ஜூனியர், சீனியர் பிரச்சினைகள் நிர்ணயிக்கப்படாமல் பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்றன. என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே ஆரம்பப் பள்ளியிலிருந்து உயர் நிலைப் பள்ளி வரையில் கவனத்தில் கொண்டு அரசு இதில் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு இது குறித்து பரிசீலிக்கும்.

## தகுதி பெற்ற உடற் பயிற்சி ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக நியமித்தல்.

* 106 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உடற்பயிற்சி ஆசிரியர்களில் பி. ஏ., பி. எட். தேர்வு பெற்று உயர்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்படத் தகுதி பெற்றுள்ளவர்கள் எத்தனை பேர் ?

(இ) அப்பள்ளிகளில் ஆசிரியர்களாக இவர்களை நியமிக்க வேண்டுமென்று அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இரண்டு பேர்.

(இ) மற்றும் (உ) இருவரில் ஒருவர் தமக்கு பட்டதாரி ஆசிரியர் பதவி கோரி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பித்துள்ளார். பதவி உயர்வு பாதில் முன்னுரிமைப்படி பரிசீலிக்கப்படும் என அவருக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் நாடு குடும்ப நல நிதித் திட்டம்.

@ * 79 வினா.—திரு. பா.ரா. தாமஸ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், அரசு மானியம் பெறும் தொழில் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளரைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு குடும்பநல நிதித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அதன்மீது அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

@ 16—2—1982 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) அரசின் பரிசீலனையில் உள்ளது

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே உதவி பெறும் அரசு நிறுவனங்களில், பல கல்விக்கூடங்களில் இந்த ஏற்பாடு இல்லாமல் இருக்கிறது. அரசால் நடத்தப்படும் ஐ.டி.ஐ.யில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அல்லாத அரசு ஊழியர்கள் இந்தக் குடும்ப நலத் திட்டத்திலே நன்மை பெறுகிறார்கள். தனியார் துறையிலே இந்த 75 பள்ளிகளிலே பணியாற்றுகின்ற 400 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ஆகவே இதில் எவ்வளவு விரைவிலே அமைச்சர் அவர்கள் ஆணையிட்டு குடும்ப நலத் திட்டத்தினால் அவர்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்க முன்வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டவுடன், அரசால் அது குறித்து ஆராயப்படும். இதனால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருப்பதுபோல, 400 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு பலனடைவார்கள். அரசுக்கு வரும் மொத்தச் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,600. ஆகவே இதனை உடனடியாக அமுல்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டம் என்பது பல ஊழியர்களுக்கு என்று சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே கொண்டு வரப்பட்ட திட்டம். இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். பொதுவாகவே இந்தப் பரிசீலனை என்ற வார்த்தைக்கு எவ்வளவு காலம் என்ற நிர்ணயம் எப்போதுமே இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது எனக்கு இருக்கக்கூடிய அனுபவத்தைச் சொல்கிறேன். திரு. என். ஆர். தியாகராசன் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, அவ்வளவு கமிட்டியில் இருந்த பிரச்சினைகள்கூட பரிசீலனையில் இருக்கின்றன என்ற நிலைமை இருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக இந்த நடைமுறை இருந்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தப் பரிசீலனையில் எவ்வளவு காலத்திற்குள் முடிவெடுத்து நடவடிக்கை எடுத்து செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது இருக்கக்கூடிய பிரச்சினையானது அரசின் அங்கீகாரம் பெற்று இயங்கக்கூடிய தனியார் தொழில் பள்ளிகளைப் பொறுத்து இருக்கிற காரணத்தினாலே, இந்தக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அரசு அதிலே இருக்கின்ற நியாயத் தன்மைகளை உணர்ந்து, விரைவாக அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, தனியார் துறையிலே உள்ள பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு, ஊழியர்களுக்கெல்லாம் இந்த குடும்பநலத் திட்டம் ஏற்கெனவே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொதுவாகவே ஏற்கெனவே அரசு ஊழியர்களுக்குள்ள சலுகைகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரிஜன நலத் துறையில், மற்ற துறைகளில் இருப்பவர்களுக்கு சலுகைகள் கிடைக்க, அது பற்றிய ஆணை தங்களுடைய இலாகாவிற்குக் கிடைக்கவில்லை என்று சொல்லியும், தனியே அவர்களுக்கு ஆணை குறித்த காலத்திலே கிடைக்க வேண்டும் என்றும், தனியாக ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் சொல்லி காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு பிறப்பிக்கின்ற எந்த ஆணையும் அதே நாளிலே ஏனைய துறைகளுக்கும் கொடுக்கப்படவும், அங்கிருந்து அதே நாளிலே பதில் ஆணைகள் பிறப்பிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் அரசு எடுக்குமா என்பதையும் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** தலைவர் அவர்களே, அதற்குரிய நடவடிக்கைகளை அரசு தற்போது எடுத்து வருகிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய குறைபாடு வருங்காலத்தில் ஏற்படாது.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்பநலத் திட்டமானது இந்தப் பிரிவினருக்கு அமுல் நடத்தப்படாமலிருப்பதற்குக் காரணம் அவர்கள் முழுமையான மானியம் பெறாமல் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதாவது 50 விழுக்காடு அளவுக்குத்தான் பெறுவது காரணமா? அப்படி இருந்தால் அந்த இடர்பாட்டை நீக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த சங்கத்தின் தலைவர் ஒருவர் இதுபோன்ற குறைகள் அடங்கிய மனு ஒன்றினை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்த 50 விழுக்காடு என்ற அளவிலிருந்து 100 விழுக்காடு என்று உயர்த்துவது குறித்தும் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை வழங்குவது ஆகியவற்றைப் பற்றியும் தெரிவித்திருக்கிறார்கள். அரசு அதைப்பற்றிய நடவடிக்கைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆராயப்பட்டு விரைவிலே அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும்.





## உதவி பெறும் தொழிற்பள்ளி ஆசிரியரல்லாத ஊழியருக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை.

@ * 80 வினா.—**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உதவி பெறும் தொழில் பள்ளிகளைச் சேர்ந்த, ஆசிரியரல்லாத ஏனைய பணியாளர் ஓய்வூதியம், பணிக்கொடை பெறுவதற்குத் தகுதியுடையவர்களல்ல என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவர்களுக்கும் இந்த உரிமைகளை நீட்டிக்க எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** (அ) ஆம்.

(இ) அரசு உதவி பெறும் தொழிற்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை திட்டத்தை விரிவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தும், இந்தப் பள்ளிகளிலே அந்தப் பரிந்துரைகளை முறையாக அமுலாக்கவில்லை. இந்த நிலைமைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதால், பல சலுகைகளை இந்தப் பிரிவினர் இழந்துகொண்டிருக்கிறார்கள். எவ்வளவு விரைவிலே செய்ய வேண்டுமோ அவ்வளவு விரைவில் செய்ய வேண்டும். 1—4—1978-ல் மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அனைத்துப் பிரிவிலும் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. அதுவே, தனியார் துறையிலே உள்ள பள்ளிகளில் 1—6—1931 அன்றுதான் வந்திருக்கிறது. எனவே, எவ்வளவு விரைவிலே இதை அமுலுக்குக் கொண்டு வருவார்கள் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

---

@ 16—2—1982 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

[1982 மார்ச் 2

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடைச் சலுகைகள் வழங்கப்பட்ட பிறகு, அவர்கள் பணிகளுக்குரிய கல்வித் தகுதி, வயது வரம்பு போன்றவைகள் வகுக்கப்பட்டு அவர்களது பணி நியமனம் ஒப்புதல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறிப்பிடப்படும் கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பு ஆகியவைகள் பூர்த்தி செய்யப்படாது தற்போது பணியில் இல்லாத பணியாளர்களுக்கு தேர்வுநிலை விலக்கு அளிக்கும் வகை பற்றியும் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அதைக் கருத்திலே கொண்டு, அரசு விரைவாக இதற்கான முயற்சிகளை எடுக்கும். இதனால் சுமார் 200 பணியாளர்கள் பயன் அடைவார்கள். இதனால் அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60,300 ஆகும். இதனை முனைந்து அரசு செயல்படுத்தும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10-20)

2. கவன ஈர்ப்பு.

(1) ஆலந்தூரில் அரிசி மொத்த வியாபாரிகள் கடையடைப்பு செய்தது குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

“லெவி கொள்முதல் செய்வதில் உணவு வழங்கு துறை அதிகாரிகள் அத்துமீறி கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி ஆலந்தூரிலுள்ள அரிசி மொத்த வியாபாரிகள் கடையடைப்பு செய்தது குறித்து”.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ 360—361 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1982 மார்ச் 2]

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, விவர அறிக்கையில் மொத்த வியாபாரிகள் கணக்கு காண்பிப்பதை ஏன் தவிர்க்க வேண்டுமென்பதும், அதை எதிர்த்து ஏன் கடைகளை மூட வேண்டும் என்பதும் புரியவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது அறுவடைக் காலம். விவசாயிகள் அறுவடையான நெல்லை வியாபாரிகளிடம் கொடுத்து, அதற்கான பணத்தைப் பெற்று, தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத பொருட்களை வாங்க வேண்டிய கால கட்டத்தில், மொத்த வியாபாரிகள் கடைகளை அடைத்திருக்கிறார்கள். அவர்களிடத்தில்தான் விவசாயிகள் நெல்லைக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. காரணம் நியாய விலைச் சந்தையில் சிறிய வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கக் கூடாது. மொத்த வியாபாரிகளிடத்தில்தான் அவர்கள் நெல்லைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. எனவே மொத்த வியாபாரிகள் கடைகளை மூடி வைத்திருப்பது குறித்து தக்க நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்குத் துன்பம் வராமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவரவர்களே, விவர அறிக்கையிலே என்ன காரணத்திற்காக லெவி கொள்முதல் விகிதாச்சாரம் 40-லிருந்து 50 ஆக ஆக்கியிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம். இதுவும் பொதுமக்களுடைய நன்மையைக் கருதித்தான் செய்கிறோம். இல்லையென்றால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆலந்தூரைப் பொறுத்தவரையில், பொதுவாக லெவி கொள்முதல் இல்லாத காலத்தில்கூட நாம் அவர்கள் கணக்கு வழக்குகளைப் பார்ப்பதில் தவறு ஒன்றுமில்லை. அவர்கள் கண்டிப்பாக கணக்கு வைத்திருக்கிறார்களா என்று பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதே அவையிலேகூட 5 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உணவு தானியங்கள் சரியான முறையில் கணக்கில் கொண்டுவராமல் கடத்திச் செல்லப்பட்டது, லாரிகள் காணாமல் போய்விட்டன என்று சொன்னபோது, அப்போதும்கூட பதில் சொல்லியிருக்கிறார்கள். தவறுகள் நடக்கக்கூடாது, விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் விவசாயிகள் விற்கும் அனைத்து நெல்லையும் அரசாங்கமே கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறது. அத்தகைய தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் வியாபாரிகள் அவர்களுடைய இடுக்கண்களை, துன்பங்களை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கூடுமானவரையில் அவர்களுக்கு அதிகமான தொல்லை தராத அளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறோம்.

[1982 மார்ச் 2

**திரு. ம. சங்கரலிங்கம் :** மொத்த வியாபாரிகளின் கணக்குகளை அரசு பரிசீலனை செய்வது நியாயமானது, தேவையானது. அதை எதிர்த்து மொத்த வியாபாரிகள் கடையடைப்பு செய்கிறபோது. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் நெல்லைக் கொண்டு வந்தால், அங்கு ஏலம் கேட்பதற்கு சிறு வியாபாரிகளுக்கும் உரிமையுண்டு என்று கொண்டுவர வேண்டும். இப்போது அப்படிப்பட்ட விதியில்லை, சிறிய வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஏலம் கேட்கக்கூடாது, பெரிய வியாபாரிகள்தான் கேட்க வேண்டுமென்று விதி இருக்கிறது. இந்த மானாபலி முறைதான் அவர்களுக்கு சக்தி கொடுத்திருக்கிறது. இந்த நிலையை அரசு மாற்றுமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறிய கருத்து நல்ல கருத்துதான். அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

**(2) நாமக்கல் அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரியைச் சேர்ந்த 300 மாணவர்களின் பெயர்கள் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, அவர்கள் படிப்பைத் தொடர முடியாத நிலை குறித்து.**

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

" the expulsion of 300 students belonging to Arignar Anna Government College, Namakkal with effect from 28—1—1982 on the ground that they had not remitted term fees consequent on cancellation of their scholarships without any notice on the ground that they have not achieved 90 per cent attendance and ac a consequence 300 students belonging to Scheduled Castes and Backword Communities are unable to pursue their studies at the end of the academic year and resultant difficulties and hardships caused to the stduents. "

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழிலேயே படித்திருக்கலாம். தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.



1982 மார்ச் 2]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தமிழில் கிடைக்கவில்லை. திடீரென்று படித்தேன். அதனால்தான் தடுமாறிப் படித்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'திடீர்' என்றால் ஆங்கிலம்தான் அகப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, தவறு செய்துவிட்டேன். கல்வி அமைச்சரவர்கள் அளித்த அறிக்கையில் உள்ளதைப் படித்துவிட்டேன்.

அறிக்கையிலே, 90 சதவிகிதம் வருகை இல்லாத காரணத்தால், பிற்பட்ட அரிசன மாணவர்களுக்கு இந்த ஆண்டு உதவித் தொகையை நிறுத்தி விடுவதென்ற நிலை இருக்கிறது. நாமக்கல் கல்லூரியைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு கல்லூரி நடைபெறுவதைப் பற்றி கல்வி அமைச்சரவர்களே பாராட்டியிருக்கிறார்கள். கல்லூரி மாணவர்களை அமைச்சரவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். 90 சதவிகிதம் வருகைப் பதிவு பெறவில்லை என்று இந்த ஆண்டு நீக்கியதால், அடுத்த ஆண்டும் இது 'கன்டினியூ' ஆகும் நிலை இருக்கிறது. நாமக்கல் கல்லூரியில் மட்டும் இந்த நிலை ஏன் வருகிறது ? மற்ற கல்லூரிகளில் மாணவர்கள் நீக்கப்படவில்லை. இங்கு மாத்திரம் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கான காரணம் என்ன ? பரீட்சை வரும் இந்த நேரத்தில், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆதி திராவிட மாணவர்கள், பிற்பட்ட மாணவர்கள், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோர்களுக்கு சலுகை தருவது என்பது வேறு ஒரு துறையைச் சேர்ந்தது. அவர்கள் வைத்திருக்கிற அந்த நிபந்தனைகளின்படி அவர்கள் சலுகைகள் தந்திருக்கிறார்கள். சலுகை பெறாதவர்கள் எக்சாமினேஷன் பீசும், டேர்ம் பீசும் கட்டித்தான் ஆக வேண்டும். அதைக் கட்டினால் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். அப்படிக் கட்டவில்லை என்றாலும், ஸ்காலர்ஷிப் வருவதாக இருந்தால், அனுமதிக்கப்படுவார்கள். ஸ்காலர்ஷிப் வரவில்லை என்றால், பணத்தை அவர்கள் கட்ட வேண்டும். இதைத்தான் முதல்வர் பார்க்க முடியும். இதுதான் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டது. அதை மீறி ஒன்றும் செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேறு கல்லூரிகளில்

---

@ 361 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சலுகைகள் செய்திருப்பதாக—அப்படி நீக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அப்படி ஏதாவது நிலைமைகள் இருந்தால், அதுகுறித்து அந்தக் கல்லூரி முதல்வருக்கு எடுத்துச் சொல்லப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** மாணவர்கள் மூலமாக நான் அறிந்ததைச் சொல்கிறேன். ஸ்காலர்ஷிப் வந்த பிறகும், அதைக் கொடுக்காமல், 'அட்ஜஸ்ட்' செய்யாமல், இருப்பதாகவும், அதை மாணவர்களுக்குக் கொடுக்க மறுப்பதாகவும் தகவல்களைச் சொன்னார்கள். எந்த அளவிற்கு அது உண்மை என்பதை அரசு ஆராயுமா? அந்தப் பணத்தைக் கொடுத்து, அவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஸ்காலர்ஷிப் வந்திருந்தால், நாம் அது குறித்து பரிசீலிக்கலாம். ஸ்காலர்ஷிப் என்பது, இவர்கள் 90 சதவிகிதம் வருகை வந்திருப்பார்கள் என்ற அடிப்படையிலே வந்து, அவர்கள் 90 சதவிகிதம் நாட்கள் வந்திருக்கிறார்கள் என்று கல்லூரி முதல்வர் சொல்லி, பணத்தைத் தர வேண்டிய நிலைமை இருந்தால், உண்மைக்கு மாறாக சர்ட்டிபிகேட் தர மாட்டார். பிறகு கல்லூரி முதல்வர் பணத்தைக் கட்ட வேண்டியதாக இருக்கும். எனவே அப்படிப்பட்ட பிரச்சினை இருந்தால், கல்லூரி முதல்வர் செய்தது சரியில்லை என்று சொல்ல முடியாது. மற்றபடி விதிகளுக்கு உட்பட்டு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய கல்லூரி முதல்வர் கோரப்படுவார்.

### 3. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.

*** திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தைத் தொடங்கி வைக்கின்ற வாய்ப்பினை ஜனநாயக மரபுப்படி எங்களுக்கு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை ஆரம்பிக்க முற்படுகிறேன். 135.44 கோடி ரூபாய் அளவிற்கு பற்றாக்குறையாக அமைந்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து, சில திட்டங்களையும் இங்கே சுட்டிக் காட்டி, அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு



(முற்பகல் 10-30)

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை.)

உதவாது என்பது பழமொழி. அதற்கு எடுத்துக்காட்டாக இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. அப்படி நான் சொன்னால் அது மிகையல்ல. எதிர்க் கட்சியிலே இருக்கின்ற காரணத்தாலே இப்படிப் பேசுகிறேன் என்று தயவுசெய்து எடுத்துக்கொள்ள வேண்டாமென்று எதிரில் உள்ளவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நடுநிலையோடு நின்று பார்த்தால் கூட—இதை விமர்சித்தால் கூட—நான் சொல்லுகின்ற கருத்துக்கு ஒத்துத் தான் யாரும் வர முடியும். மாறுபட்ட கருத்தைக் கூறுவதற்கு யாரும் இல்லை என்பதை நான் தெளிவாக உணர்த்த கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையை இதே அவையிலே நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்தபோது, பத்திரிகைகள் எல்லாம் வெகுவாகப் பாராட்டின. எப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் பத்திரிகைகள் பாராட்டியிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஆசை வார்த்தைகளை அள்ளி அள்ளி வீசியிருக்கிறார்கள். வாக்குறுதிகளை வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் படிக்கப் படிக்க இனிமையாகத்தான் இருந்தன. கேட்கக் கேட்க புளகாங்கிதமாகத்தான் இருந்தன. ஆனால் சர்க்கரை என்று எழுதினால் மட்டும் இனித்து விடாது. அதுபோல் வெறுமனே திட்டங்களைப் படிப்பதால் மட்டும் பயனில்லை. அவை செயல் உருவம் பெற வேண்டும். நாட்டிலே அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்கள் அதனுடைய பயனைத் துய்க்க வேண்டும். அதற்குரிய வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அப்படியானால் தான் உண்மையிலே திட்டங்களை அறிவிப்பதனால் பலன் உண்டு. பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதி நிலை அறிக்கையைப் பற்றி ஒரு இலக்கணமே நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கை என்று சொல்கின்றபோது, சென்ற ஆண்டு என்னென்ன திட்டங்களை நாம் சொன்னோம், அவைகளில் எதை எதை நாம் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம், இன்னும் எது எது நிறைவேற்றத் தக்க அளவிலே இத்தனை சதவிகித வேலை பாக்கியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அதற்குப் பின்னாலே இன்னின்ன திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நாங்கள் தயார் நிலையிலே வைத்திருக்கிறோம் என்று சுட்டிக் காட்டுவதுதான் ஒரு ஆரோக்கியமான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற அரசு தருகின்ற நிதி நிலை அறிக்கையாக இருக்க முடியும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குக் கற்றுத் தந்தது இங்கு நினைவு கூரத்தக்கது. அதன் அடிப்படை

யில் நின்று பார்க்கின்றபோது, கடந்த ஆண்டு இதே மன்றத்திலே சொல்லப் பட்ட நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்ட கருத்துக்கள், திட்டங்கள் என்னென்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் அலசி ஆராய வேண்டுமென்று நான் கருதவில்லை. உதாரணத்திற்கு ஒன்றிரண்டை மட்டும் நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படிச் சொல்கின்றபோது நீலநாராயணன், செஞ்சோற்றுக் கடனை ஆற்றுகின்ற தன்மையிலே தான் பேசுவார் என்று ஆளும் கட்சி வரிசையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிவிடக் கூடாது. பேசக் கூடாது என்று இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே தாலிக்குத் தங்கம் என்கிற திட்டத்தைப்பற்றி அறிவித்தார்கள். அதற்காக 10 லட்சம் ரூபாய் கூட ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அந்தத் திட்டம் இப்போது எந்த அளவிலே இருந்துகொண்டிருக்கிறது, எத்தனை பேர் பயன் பெற்றார்கள் என்பதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இருந்தாலும் அதைப்பற்றி வேறு குறிப்புகளாவது கொடுக்கப்படும் என்று எதிர்பார்த்தேன். வெறும் தகவலாக, இறந்து பிறந்த குழந்தையைப் போல் அதுவும் ஏட்டிலேயே இருக்கிறது. நடைமுறையிலே அது நடைபெறுகின்றதா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது.

மற்றொரு அருமையான திட்டத்தை கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு ஒரு இனிப்புச் செய்தியாக 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே சுட்டிக் காட்டினார்கள். வேளாண்மை விரிவாக்கத்திற்காக நவீன பண்ணை ஒன்றை நாங்கள் உருவாக்கப்போகிறோம் என்று அன்றையதினம் சுட்டிக் காட்டினார்கள். அது இப்போது எந்நிலையில் இருந்துகொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதற்காக இந்த அரசு என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது, அல்லது எடுத்தது என்பது பற்றிய விவரம் இல்லை. அதைப்போல மற்றொரு அற்புதமான திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த மாநிலத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, வெளி மாநிலத்திலுள்ளவர்கள் கூட இதைப் பாராட்டினார்கள். அது பாம் ஆயில் உற்பத்தி செய்வதாகும். பாம் ஆயில் இறக்குமதி செய்வது என்பது மிகவும் கஷ்டமான காரியம். அதை உள்நாட்டில் உற்பத்தி செய்ய புதிதாக பனை மரங்களை உருவாக்கி 'பாம் ஆயில்' உற்பத்தி செய்ய அதற்கான திட்டங்களை வகுத்திருக்கிறோம் என்று சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருந்தார்கள். இதே நிதியமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே இதைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தப் பனை மரங்கள் என்ன ஆயிற்று? தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டுகின்ற அளவிற்கு, அந்நியச் செலாவணி



இழப்பிலிருந்து மீட்டுத் தருகின்ற அளவிற்கு 'பாம் ஆயில்' உற்பத்தி செய்யப் போகிறார்கள் என்று வெளி மாநிலத்தவர்கள் எல்லாம் நம்பி, பாராட்டினார்களே, அதற்குரிய அருகதையைப் பெற்றவர்கள் தான் நாங்கள் என்பதை நிரூபிக்கின்ற வகையில் அதையாவது செய்துகாட்டியிருக்கிறார்களா என்றால், இல்லை. இவைகள் எல்லாம் ஏட்டிலே அன்றையதினம் எப்படி இருந்தனவோ அப்படியே தான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கின்றன. எந்தவகையிலும் இவையெல்லாம் நடைமுறைக்கு வரவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. திட்டங்களை அறிவிப்பதும், தீட்டுவதும், பாராட்டுவதும் பெரிதல்ல. யார் யார் அந்தத் திட்டங்களால் பயன்பெறப் போகிறார்கள். எந்த ஏழையெளிய மக்கள் எந்தெந்த வகையில் வாய்ப்பும் வசதியும் பெறப் போகிறார்கள் என்கிற புள்ளிவிவரத்தைச் சொல்ல வேண்டாமா? அப்படிப்பட்ட புள்ளிவிவரம் ஏதாவது இதில் இருக்கிறதா? அப்படி ஒன்றும் இல்லாதபோது, நாங்கள் இதைப்பற்றிச் சொல்ல மாட்டோமா? வெறும் வாய் சவடாலுக்காக, வெறுமனே விளம்பரத்திற்காக, சம்பிரதாயத்திற்காக இந்த அரசு இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டுகிறதே தவிர, நாட்டிலுள்ள ஏழையெளிய மக்கள் மீது அக்கறை கொண்டு திட்டங்கள் தீட்டவில்லை என்றால், நாங்கள் இதைப்பற்றிக் கேட்க மாட்டோமா? சொன்னால், உடனே அவர் எதிர்க் கட்சிக்காரர், கட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு சொல்லிக் கொண்டிருக்கிறார் என்று சொல்வது தவறு. இந்த ஜனநாயக நாட்டில் ஆரோக்கியமான அரசியலை அமைக்க ஆட்சியாளர்கள் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இத்தனை நிலைமைகளுக்குப் பிறகும் இந்த அரசு இன்னும் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், இந்த நாட்டு மக்களுடைய மறதி என்னும் கொள்முதலை ஆதாரமாகக் கொண்டு இந்த அரசு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இதை எதிர்த்து கிளர்ந்து எழுந்தால்—எழத்தான் போகிறார்கள்—எழ இருக்கிறார்கள்—இதனுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை நம்மாலே நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. கடந்த கால வரலாறு இதை நமக்கு சூசகமாகச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறது. அதையும் நினைவு படுத்துகிறேன். அரசால் அறிவிக்கப்பட்டு இதுவரை செயல்படுத்தப்படாத திட்டங்களை, ஏட்டிலே அறிவிக்கப்பட்டு அப்படியே ஏட்டிலே இருப்பதைப் பற்றி நான் இதுவரை சுட்டிக்காட்டினேன்.

(முற்பகல் 10.40)

அடுத்து, சில திட்டங்களைப் பொறுத்து எந்தெந்த நிலைமையிலே முன்னுக்குப் பின் முரணாக, எந்தெந்த நிலைமையிலே புள்ளிவிவரங்களைத் தப்பும் தவறுமாக எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையில்

சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே தென்னை வளர்ப்பு மும்முரத் திட்டம் காரணமாக காய்க்கும் திறன் அதிகமாகி அதன்மூலம் இம்மாநிலத்தின் மொத்த உற்பத்தி 40 கோடி தேங்காய் என உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று போடப்பட்டிருக்கிறது. மும்முரத் தென்னை உற்பத்தித் திட்டத்தை இங்கே எடுத்து வைத்து 40 கோடி தேங்காய்கள் அதிகமாக உற்பத்தியாகும் என்று இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது வரவேற்க வேண்டியதுதான். ஆனால், 1981-82லே இதே திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தும்போது, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது இந்த மாநிலத்திலே 103 கோடி தேங்காய் உற்பத்தியாகிறது. இதனை ஐந்தாண்டு கால அளவிலே 154 கோடி தேங்காய்களாக உயர்த்த திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறோம். 1981-82-ல் இந்த நாட்டினுடைய மொத்த தேங்காய் உற்பத்தி 103 கோடி. அதே நேரத்திலே இந்த அரசு தேங்காயின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்கு ஒரு திட்டத்தைப் போட்டு அதன் பலனாக ஓராண்டுக்கு அப்பால் இப்போது சுட்டிக்காட்டப்படுகிற புள்ளிவிவரம் 40 கோடி அளவுக்குத்தான் இருக்கிறது. 103 கோடிக்கு மேலே 40 கோடி என்று சொல்லவில்லை. ஆனால், மொத்த உற்பத்தி என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது எப்படி ஏற்பட்டது? இது யார் கொடுத்த புள்ளிவிவரம்? இது சரியானது தானா? நாம் கேட்டால் அதிகாரிகளைக் கைகாட்டி விடுகிறார்கள். ஆனால் இங்கே, "புள்ளி விவரங்களை வைத்துப் பேசுங்கள், ஆதாரங்களை வைத்துப் பேசுங்கள்" என்று சொல்கிறார்கள். இருக்கின்ற நிலைமைகள், நீங்கள் கொடுக்கின்ற புள்ளிவிவரங்கள் இப்படி தாறுமாறாக இருக்கின்றனவே, குழப்பமாக இருக்கின்றனவே, குளறுபடியாக இருக்கின்றனவே? எந்தப் புள்ளிவிவரத்தை எடுத்துச் சொல்ல? 103 என்று இருப்பதை 153 என்று ஆக்குவதா அல்லது மொத்தம் 40 என்று இருக்கிறதே அதை எடுத்துக் கொள்ளவா மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. அவர் இருந்தால், எப்படி இது வந்தது என்று சுட்டிக்காட்டியிருக்க முடியும். ஆனால் அவருக்குத் தெரியுமோ தெரியாதோ; இந்த நிலைமைகள் இப்படி இருக்கின்றன. அடிப்படையில் இந்த அரசின் நோக்கம் என்ன? தேங்காய் உற்பத்தியை அதிகப்படுத்துவது என்பது மட்டுமல்ல, சென்ற தடவை அதன் அடிப்படையிலே வேறொன்றையும் சுட்டிக்காட்டினார்கள். சமையல் எண்ணெய் பற்றாக்குறையாக இருக்கிறது, அதை நிவர்த்தி பண்ணுவதற்கு பரிகாரம் காண்பதற்காக நாங்கள் இந்த மும்முரமான தென்னை வளர்ப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம் என்று



அன்றையதினம் கூறப்பட்டது. இப்போது அந்தத் திட்டம் எப்படி இருக்கிறது? இதை நினைக்கின்றபோது, காளமேகப்புலவர் நாகப்பட்டிணம் சத்திரத்தைப் பற்றிப் பாடினது தான் என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது.

'கத்துக் கடல் சூழ் நாகை
காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும்போது அரிசி வரும்
குத்தி உலையிலிட ஊர் அடங்கும்,
ஓர் அகப்பை அன்னம் இலையிலிட
வெள்ளியெழும்.'

என்று கவி காளமேகம், திறமையின்மையை நிர்வாகத் திறமையின்மையை, நிர்வாகக் குறையை, ஆமை வேகத்தை, மந்தப் போக்கைச் சுட்டிக்காட்ட இந்தக் கவிதையைப் பாடினான். இன்றையதினம் சமையல் எண்ணெய் கிடைப்பதில் இருக்கும் தட்டுப்பாட்டை அகற்ற என்று போடப்பட்டிருக்கும் இந்தத் திட்டத்திற்கு, அதில் ஏற்பட்டிருக்கும் மந்தப் போக்கிற்கு இந்தக் கவிதை எந்த அளவிற்கு ஒத்து வருகிறது என்பதை ஒப்பிட்டுப் பாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்வதிலே தவறு இருந்தால் என்னைத் திருத்தலாம்.

அதுமட்டுமல்ல, வேளாண்மைப் பணி கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு சங்கத்தை இந்த அரசு சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தியது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயும் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், என்ன கூறியிருக்கிறார்கள் என்று சொன்னால், 11 மற்றும் 12வது பக்கங்களிலே, 'ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 1 லட்சம் குடும்பங்களிலிருந்து குடும்பத்திற்கு ஒருவர் விதம், வேளாண்மைப் பணி கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகி சங்கத்தின் பலனைப் பெறும் வகையில் அமைந்துள்ள திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது'. இது போன ஆண்டு போட்ட திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் அடுத்த நிதியாண்டில் 20 ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று சொல்லப்பட்டது. இந்தத் திட்டம் போன ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த ஆண்டில் அந்தத் திட்டத்தின் நிலவரம் என்ன? யாரையும் சேர்த்துக்கொள்வதற்கு நிதிஒதுக்கீடு கிடையாது, அதற்குரிய திட்டம் கிடையாது. அதை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் ஏமாந்து போகவேண்டியது தானா? 1981-82 லே இந்தத் திட்டத்தை அறிமுகப்

[திரு. நீலநாராயணன்] [1982 மார்ச் 2

படுத்தும்போது என்ன குறிப்பிட்டுள்ளார்கள்—' இந்தச் சங்கத்தின் வாயிலாக ஆதி திராவிட குடும்பங்களிலிருந்து 40 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் ; அவர்களுக்கு உதவி நிதியாக 100 ரூபாய் கொடுக்கப் படும் என்று 1981-82 அறிக்கையிலே சுட்டிக்காட்டினார்கள். சென்ற ஆண்டு 40 ஆயிரம்; இந்த ஆண்டு பூஜ்யம்; அடுத்த் ஆண்டு 20 ஆயிரம். அந்த 100 ரூபாய் என்ன ஆயிற்று? அது கொடுக்கப்படுமா அல்லது கொடுக்கப்படாதா ? அதுபற்றிய விவரங்கள் எதுவும் இல்லை. ஏற்கெனவே 40 ஆயிரம் என்று சொன்னது 20 ஆயிரம் ஆயிற்று, அந்த 100 ரூபாய் இப்போது காணவே காணோம். இவைகளையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, முன்பு மீன்பிடித் துறைமுகத் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருந்தார்கள். அப்போது அதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள சின்னமுட்டத்திலேயும், இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள வாலிநோக்கத்திலும் மீன்பிடித் துறைமுகம் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது ; இது ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது நிதிநிலை அறிக்கையிலே 13-வது பக்கத்திலே உள்ள பாரா, கேட்கப்பட்டிருக்கிறது, அனுமதி மத்திய சர்க்காரால் வழங்கப்பட்டிருக்கிறது, அது ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது.

ஊக்கம் மட்டுமல்ல, இது நமக்கெல்லாம் உற்சாகம் அளிக்கும் விஷயமும்கூட. ஆனால் எனக்கு இருக்கிற குறையெல்லாம், இதே அரசு இதே திட்டத்தைப் பற்றி 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக் கிறது என்னவென்றால், அடுத்த ஆண்டில் சின்னமுட்டத்தில் மீன் பிடித் துறைமுகம் கட்டப்படும் என்று சொல்லியிருந்தார்கள். நாம் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். வாலிநோக்கத்தில் சிறிய அளவிலே தோணித் துறை அமைக்கப்படும் என்று, சென்ற ஆண்டு இந்தத் திட்டத்தை அறிவிக்கும்போது திட்டவட்டமாக, 1982-ல் இது கட்டப்படும், இது அமைக்கப்படும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டது. அதுபற்றி நாமெல்லாம் மகிழ்ச்சியடைந்தோம். கன்னியாகுமரியிலே இருப்பவர்களும், இராமநாதபுரத்திலே இருப்பவர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். வரவேற்றார்கள். ஆனால் இன்றையதினம் என்ன சொல்கிறார்கள், அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அது நம்மை எல்லாம் ஊக்கப்படுத்துவதாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், புத்திசாலிகளாக இருக்கும் இந்த அரசாங்கத்தைக் கேட்கிறேன். "அசகாய புத்திசாலிகளாக இருக்கும் நீங்கள் சென்ற தடவை திட்டவட்டமாக அறிவிப்பு செய்தீர்களே, இந்தத் தடவை ' அனுமதி கிடைத்திருக்கிறது'



1982 மார்ச் 2] [திரு. நீலநாராயணன்]

என்றுதானே சொல்லியிருக்கிறீர்கள் ; அப்படியானால் அனுமதி வாங்காமலேயே போன ஆண்டு அறிவிப்பு செய்த புத்திசாலிகளே ; நான் கேட்கிறேன், மனம் திறந்து சொல்லுங்கள், இந்த நாட்டு மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதன் அடிப்படையில் சொல்லுங்கள், இந்த ஆண்டு கட்டுவதற்கு முயற்சி எடுக்கிறோம் என்று ஒரு வார்த்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்களா ? அதற்காக 'டோக்கனாக' இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று அதற்கென்று ஒரு நிதி ஒதுக்கீடு உண்டா ? எதுவுமில்லாமல் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறீர்களே, நாங்கள் கேட்கமாட்டோமா ? இந்த நாட்டிலே இருக்கும் மக்கள் கேட்கமாட்டார்களா ?" அதற்காகத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

(முற்பகல் 10-50)

மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற உண்மையான எண்ணம் இந்த அரசுக்கு இருந்தால், "இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம், இதற்கான அனுமதி கிடைத்துவிட்டது, ஆகவே நிறைவேற்றப் போகிறோம்" என்று சொல்லியிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, "ஊக்க மளிப்பதாக இருக்கிறது" என்பதோடு உங்களின் பிரச்சினையை முடித்துக் கொள்கிறீர்கள் என்றால், நீங்கள் உங்களுடைய பொறுப்பிலிருந்து நழுவிக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல நீங்கள் பொறுப்போடு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க வில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இனியாவது இந்த அவையில் நீங்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது சிந்தித்துச் செயல்படுங்கள். "செயல்படுத்தக் கூடியதை மட்டும் சொல்லுங்கள்", "சொன்னதைச் செயல்படுத்துங்கள்" என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல்தான் இறால் வளர்ப்புபற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. "காயல் பகுதிகளில் 300 ஹெக்டேர் பரப்பில் இறால் பண்ணைகளை 3 ஆண்டுகளில் தொடங்கி முடிக்கும் திட்டம் வகுக்கப்பட்டு அனுமதி பெறும் பொருட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது" என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அவையில் தமிழ் கற்றறிந்த சான்றோர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன். "அனுப்பி வைக்கப்படுகிறது" என்று சுட்டிக்காட்டுகிறார்களே இதன் அர்த்தம் என்ன ? பொருள் என்ன ? நிலை

என்ன ? உங்களிடமிருந்து நான் இதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். "அனுப்பி வைக்கப்படுகிறது" என்றால், இதுவரை அனுப்பவில்லை என்பது தானே தெளிவாகிறது. இனிமேல் அனுப்பப் போகிறார்களா இல்லையா, அது வேறு விஷயம். அது தொக்கி நிற்கிறது. ஆனால் வெறுமனே "சொற்சிலம்பம்" ஆடியிருக்கிறார்கள். "அனுப்பி வைக்கப்படுகிறது" என்று இப்போது சொல்லப்படுவதன் பொருளை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. காரணம், 1981-82ல் இது சம்பந்தப்பட்ட ஒரு திட்டத்தை அன்றைய நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது என்ன சொல்லப்பட்டது என்றால், "இறால் வளர்ப்பில் கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்." பின்னாலே இறால் பண்ணை வரப்போகிறது. அதற்கு அனுமதி பின்னாலேதான் கேட்கப் போகிறார்கள். ஆனால் அதற்கு முன்னாலே கிராம இளைஞர்களுக்கு இறால் வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. "பயிற்சி நிலையங்களில் 1000 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்"—இது 1981-82 நிதிநிலை அறிக்கையில் உள்ள வாசகம். 1000 பேருக்கு கடந்த ஆண்டு இறால் வளர்ச்சியில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். அப்படி நம்பித்தான் நான் பேசுகிறேன். அவ்வாறு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்த அவையில் அறிவித்த பிறகு, 1000 கிராம இளைஞர்களுக்குக் கண்டிப்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் நான் இங்கே பேசுகிறேன். இந்த ஆண்டுதான் மத்திய அரசுக்கு ஒரு திட்டத்தை அனுப்பி வைத்து அனுமதி கேட்கிறார்கள். விண்ணப்பமே இந்த ஆண்டுதான் அனுப்பப்படுகிறது. ஆனால் 1981-82 நிதிநிலை அறிக்கையிலே சொல்கிறார்கள், இறால் வளர்ப்புப் பயிற்சிக்காக 1000 கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதை எப்படி எடுத்துக்கொள்வது என்றே எனக்குப் புரியவில்லை.

1982-83ல் திருமணத்திற்கான நிச்சயதார்த்த தேதி கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்களைத் தலைமை தாங்கத் திருமணத்திற்கு தேதி கேட்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதே சமயத்தில் 1981 ஆம் ஆண்டிலேயே அந்தத் தம்பதிகளுக்குக் குழந்தை பிறந்து அந்தக் குழந்தைக்கு இன்ன பெயர் வைக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது என்றால், இது எப்படிப் புரியாத புதிராக இருக்குமோ அதைப் போல்தான் இதுவும் புரியாத புதிராக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் நல்லதொரு உதாரணத்தைத் தந்தார்கள். அவருடைய கட்சியில் நான் இருக்கும்போது, அவருக்கும் எனக்கும் தெரிந்த நண்பர் திருமணத்திற்கான தேதி கேட்டு வந்தார். பெரும் தலைவர் ஒருவர்—திரு. காமராஜர் அவர்களை அல்ல—அந்தத் திருமணத்திற்குத் தலைமை வகித்தார். திருமணம் நடந்த மூன்றாம் மாதத்திலேயே அவர்களுக்குக் குழந்தை பிறந்தது என்பதை அவரும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பார் என்று நம்புகிறேன். அப்போது திட்டமே இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். "ஆப்டர் இஷ்யு," என்றுகூட ஒருமுறை இருக்கிறது என்பதை அவர் தெரிந்து வைத்திருப்பார் என்று நம்புகிறேன். என்னைத் தலைமை வகிக்க அழைத்ததற்காகத்தான் நான் இப்போது பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் விமானத்தைப் பிடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. நீலநாராயணன் :** விமானத்தைப் பிடிக்க வேண்டும் என்று சொன்னவுடனே வேறுவிதமாகப் பொருள் கொள்ள வேண்டாம். என்னுடைய நண்பர் ஒருவர் விமானத்தில் வருகிறார். அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றி பின்னால் சொல்கிறேன் என்பதால், அப்போது தெளிவாகப் பதில் கிடைக்கும் என்று நம்புகிறேன். நானும் அதைப்பற்றி பிறகு விமர்சிக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, மின் உற்பத்தியைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 135.44 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைச் சொல்லிவிட்டு இதற்குரிய காரணத்தைச் சுட்டிக்காட்டுகிற வகையில் மின் வாரியத்திற்கு இந்த அரசு 271 கோடி ரூபாய் நட்ட ஈடாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்றும் அதன் காரணமாகவே இந்தப் பற்றாக்குறை தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது என்றும் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் நான் பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பிட்டேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், நிர்வாகச் சீர்கேட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டாக ஒரு இலாக்கா உண்டென்றால்

அது மின்வாரியம்தான் என்று அப்போது சுட்டிக்காட்டினேன். அதில் ஏற்பட்டுள்ள நட்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ஆண்டு தோறும் பல கோடி ரூபாய்களை அது விழுங்கிக் கொண்டிருக்கிறது. அரசின் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால், யானையைக் கட்டி தீனி போடுவது போல் அரசு ஆண்டுதோறும் அதற்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லி, இதைத் தவிர்ப்பதற்கு அவர்கள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். அந்த முடிவைத்தான் நான் ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டினேன். அதாவது மின் உற்பத்தியை யாராவது லாபகரமாக நடத்துவதற்கு முன்வருவார்களானால் தனியாருக்கேகூட மின் உற்பத்தியை விட்டுவிடுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்று கூறியதை அப்போது சுட்டிக்காட்டினேன். அது மட்டுமல்ல. அப்போதே நான் இன்னொன்றையும் குறிப்பிட்டேன். இதை நீங்கள் தனியாருக்கு விடக்கூடாது. அது பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கும் என்று எடுத்துச் சொன்னேன். இது தேவையற்ற முடிவு என்று நான் அன்றைக்கே எடுத்துச் சொன்னேன். இன்றைக்கு அதே நிலவரத்தைத்தான் இங்கே நிதிநிலை அறிக்கை மூலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மின் கட்டணத்தைத் திருத்தி அமைப்பதற்காக ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மின்கட்டணத்தைத் திருத்தி அமைப்பதற்கு முன்னால் அதற்கு ஒரு கமிட்டியைப் போடுவதற்கு முன்னால் இன்னொன்றையும் அரசு செய்ய வேண்டும். அதை ஒரு பக்கம் செய்தாலும், அதைத் தொடர்ந்து இன்னொன்றையும் செய்ய வேண்டும். அதைத் தடை செய்ய வேண்டும் என்றுகூட சொல்லவில்லை. மின்வாரியத்தில் ஆண்டுக்காண்டு நட்டம் ஏற்படுகிறதே அது எதனால் ஏற்படுகிறது, அதை எப்படித் தவிர்க்கலாம் என்பதைக் கண்டறிந்து சொல்வதற்கு ஒரு நிபுணர் குழுவை ஏன் அமைக்கக்கூடாது ? அப்படி ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு சொல்லும் அறிக்கையின் அடிப்படையில் அதன் காரண காரியங்களை ஆராய்ந்து அது இலாபம் தராது, என்றைக்கும் நட்டத்தில்தான் நடைபெறும் என்ற முடிவுக்கு வருவீர்களானால், அதற்கு அப்பால்தான் இதைத் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டுமா வேண்டாமா என்று யோசிக்க வேண்டும். ஆனால் எதை முதலில் முடிவு செய்தார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. தனியாரிடம் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டு, நட்டத்தைப்பற்றிய பல்லவிக்கு வந்திருக்கிறார்களா அல்லது நட்டம் ஏற்பட்டுவிட்டதே என்பதற்காக அதைப்



[திரு. நீலநாராயணன்]

போக்க வேறு மார்க்கமே தெரியவில்லையே, இந்த அரசின் பணம் எப்போதும் பாழாகிக் கொண்டிருக்கிறதே என்று அதன் காரணமாகத் தனியாரிடம் விடலாம் என்ற எண்ணத்திற்கு வந்தார்களா என்று எங்களுக்குப் புரியவில்லை. எதை முதலில் முடிவு செய்தார்கள் என்று எனக்கும் புரியவில்லை. ஆனால்

(முற்பகல் 11-00)

ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலேயே நிதியமைச்சர் ஒன்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மின் உற்பத்தி இந்த நாட்டிற்கு எவ்வளவு தேவையான ஒன்று என்பதை தொழில் வளர்ச்சி பற்றிய தலைப்பின்கீழ் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே நிதியமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 17-வது பக்கத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். " ஒரு மாநிலம் வேளாண்மையிலாகட்டும், தொழில் துறையிலாகட்டும், முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்பது, அம்மாநிலத்தின் மின் விசை மேம்பாடு எவ்வாறுள்ளது என்பதை வைத்தே நிர்ணயிக்கப்படுகிறது "— இது நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. உழவும், தொழிலும் நாட்டினுடைய இரு கண்கள். இதை யாரும் மறுக்கமாட்டார்கள். அந்தக் கண்களைப் பழுதுபடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், அந்தக் கண்களுக்கு ஒளி கூட்ட வேண்டிய பொறுப்பும் மின்சார வாரியத்தினுடையது. மின்சார உற்பத்தியை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுடைய பொறுப்பு இது என்பதை இதிலே திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவ்வளவு பெரிய பொறுப்புள்ள ஒரு இலாக்காவை இப்போது தனி நபர் கையிலே கொடுக்கலாம் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்தால் இதை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறார்களா ? அவருடைய கல்லறை இவர்களை சும்மா விட்டு விடும் என்று கருதுகிறார்களா? கோட்டையிலிருந்து வரும்போதும் போகும் போதும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கல்லறையைப் பார்த்துவிட்டுத் தானே செல்கிறார்கள். கல்லறையைச் சந்தித்துவிட்டுத்தானே செல்லுகிறார்கள் ? அண்ணாவின் சமாதியை கோட்டைக்குப் பக்கத்திலே ஏன் வைத்திருக்கிறார்கள் என்பது இப்போது புரிகிறது. டாக்டர் கலைஞர் இதை ஏன் இங்கே வைத்தார்கள், அதற்கான முயற்சியை எடுத்தார்கள் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. "கோட்டைக்குச் செல்லுகிற தம்பிகள் அண்ணாவின் கொள்கையை காற்றிலே பறக்கவிட்டுவிடக் கூடாது, கொள்கையை நிறைவேற்றுகிற தம்பிகளாக கோட்டைக்குச் செல்லுங்கள், கொள்கையை காற்றிலே பறக்கவிடுகிற கோமாளிகளாக கோட்டைக்குச் செல்லாதீர்கள் " என்று நினைவுபடுத்துவதற்காகத்தான் இங்கே வருகின்ற

பாதையிலே அண்ணாவின் சமாதியை வைத்திருக்கிறார்களோ என்று நான் கருதுகிறேன். அந்தக் கருத்தை நீங்கள் மனதிலே வைத்துக்கொண்டு அண்ணாவினுடைய கொள்கைக்குப் புறம்பாக நீங்கள் எந்தக் காலத்திலும் போகக் கூடாது. அப்படிப் போனால் இந்த நாடு கொதித்து எழும். அந்தக் கொதிப்பின் முன்னால் உங்களால் நிற்க முடியாது, அதற்குப் பதில் சொல்ல முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கோமாளிகள் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. நீலநாராயணன் :** அண்ணாவினுடைய கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றத் தவறிவிட்டது என்பதை மக்கள் மத்தியிலே சொல்லித்தான் ஓட்டு வாங்கி வந்தார்கள். ஆனால் அந்தக் கொள்கையிலிருந்து பிறழ்ந்து செல்கிறார்கள், தாண்டிச் செல்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். வேறு ஒன்றுமல்ல. யாரையோ கோமாளிகள் என்று சொல்லி புண்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை.

இன்னுமொன்று, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சென்று தொழில் வளர்ச்சிக்காக பல திட்டங்களைக் கொண்டு வருவதற்காக சுற்றுப் பயணம் நடத்தினார்கள். அதனுடைய விளைவாக தமிழகத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்து பல தொழிலதிபர்கள், பணத் திமிங்கலங்கள், பண முதலைகள், முதலீடு போட்டு தொழில் ஆரம்பிக்க வரவிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். யார் வருவார்கள் ? எப்படிப்பட்டவர்கள் வருவார்கள் ? பணம் படைத்தவர்கள், டாட்டா, பிர்லா, போன்ற பண முதலைகள் இங்கே வருவார்கள். டாட்டா, பிர்லாவைப் போன்றவர்கள் என்று சொல்லுகிறேன். அவர்களுடைய கையிலே நாம் தொழிலைக் கொடுக்கிறோம் என்றால், நம்முடைய நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு அவர்கள் மூலம் கிடைக்குமா ?

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிசந்தன்) :** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்திருக்கிறது. இன்னும் ஓரிரு நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.



**திரு. நீலநாராயணன் :** நான்தான் விவாதத்தை ஆரம்பித்து வைக்கிறேன். தயவு செய்து நான் முடிக்கிற வரையில் நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகமாக நான் பேசப் போவதில்லை. மேலும் கால் மணி நேரம் அல்லது 20 நிமிடங்கள்தான் பேசப் போகிறேன். அதற்குப் பின்னாலே நேரம் கொடுத்தால்கூட எனக்கு சமயம் கிடையாது. வேலை வாய்ப்பு தரக்கூடிய தொழில்கள் பெருக வேண்டும் இல்லையென்று நான் சொல்லவில்லை. கிண்டல், கேலியாக நான் சொல்லவில்லை. தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். நம்முடைய நாட்டில் இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அதை ஒழிக்க அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். ஆனால் அந்த முயற்சி பலன் அளிக்க வேண்டுமா, வேண்டாமா ? புதிய தொழில் கொள்கை, புதிய தொழிலை நிர்ணயிக்கிறார்கள். வெளி மாநிலங்களிலிருந்து தொழிலதிபர்கள் இங்கே வரவிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய தோழர்களுக்கு, தமிழர்களுக்கு, தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, நாம் இந்த அனுமதியை அவர்களுக்கு வழங்குகிறோம். மண்ணின் மைந்தர்கள் என்று பேசிக் கொண்டிருக்கிறோமே, அதைச் சட்ட பூர்வமாகச் செயல்படுத்த முடியுமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் நாம் நினைத்தால், நம்முடைய கையிலே சில முக்கியமான அதிகாரங்களை வைத்துக்கொண்டால், அதைக் கட்டுப்படுத்த முடியும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன்:** வேறு ஒன்றுமில்லை, "மண்ணின் மைந்தர்கள் என்று பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார். யார், யார் அப்படிக் குறிப்பிடுகிறார்கள் என்று சொல்லவில்லை. இந்த அரசையும், எங்கள் கட்சியையும் பொறுத்தவரையில் அப்படிப் பேசவில்லை.

**திரு. நீலநாராயணன் :** மண்ணின் மைந்தர்கள் என்று பேசவில்லை என்றால் எனக்கு அதைப்பற்றி அக்கறை இல்லை. நம்முடைய தமிழ் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதிலே அவர்களுக்கு அக்கறை இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன். என்னுடைய கருத்து வேறு ஒன்றுமல்ல. தொழிலுக்கு இன்றியமையாதது மின் உற்பத்தி என்று இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தொழிலை அமைக்க தொழிலதிபர்கள், பெரியவர்கள், பண முதலைகள் வெளி மாநிலங்களிலிருந்து இங்கே வரவிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை

[திரு. நீலநாராயணன்] 2 மார்ச் 1982]

யில் மின் உற்பத்தியை சர்க்கார் வைத்திருந்தால்தான், அதை ஓரளவிற்கு நம்மால் சரிக்கட்ட முடியும். அதை தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்து விட்டால், அந்த இரண்டு பேரும் சேர்ந்து கொண்டால் நம்முடைய வேலை வாய்ப்பு என்னவாகும் என்பதை எண்ணிப் பார்த்தால் போதும். எனக்குப் பதில் சொல்ல வேண்டாம். ஆகவே தனியார் துறைக்குக் கொடுப்பது என்பது எவ்வளவு ஆபத்தான ஒன்று என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டுகிறேனே தவிர, வேறு ஒன்றுமல்ல.

அடுத்து அரசுத் துறையில் மூன்றாவது சிமிட்டி ஆலையை நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் அளிக்குமாறு மத்திய அரசுக்குத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் விடுத்துள்ள வேண்டுகோளை மத்திய அரசு இன்னும் ஏற்கவில்லை என்று 22 ஆம் பக்கத்திலே கூறப்பட்டிருக்கிறது. இதைப் போலவே 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். "மதுரை மாவட்டத்தில் அரசுத் துறையில் மூன்றாவது சிமிட்டி ஆலையை நிறுவ இசைவுக் கடிதம் அனுப்புமாறு கேட்டுள்ளோம். இந்த ஆலைக்கு 32 கோடி ரூபாய் செலவாகும். அதனால் ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள்" என்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே என்ன காண்கிறோம்? "இன்னும் மத்திய அரசு அந்த வேண்டுகோளை ஏற்கவில்லை" என்ற நிலைமையைத்தான் உங்களாலே சொல்ல முடிந்திருக்கிறது. இது ஒரு திட்டமல்ல, இது ஒரு செய்தி. இந்தச் செய்தியைச் சொல்லுவதற்குப் போரா நிதிநிலை அறிக்கை? இதற்குத்தானா ஓர் அரசு இருக்கிறது? இந்த அரசின் சார்பிலே டில்லியிலே உள்ள பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்? சிமிட்டி இல்லாமலே வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யலாமா என்று மத்திய அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து சிமிட்டி ஆலையை நிறுவுகிறோம், அனுமதி கொடு என்று கேட்கிறோம். அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. என்ன காரணம்? அதை விளக்கியிருக்க வேண்டாமா? காரணம் தெரிந்தால்தானே மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி முடிவு எடுக்க முடியும்? எந்த முடிவும், எந்தத் திட்டமும் குறித்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தாத சூழ்நிலையில்தான் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், இன்னுமொன்றையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நாள் ஒன்றுக்கு 1,256 டன் கரும்பு பிழியும் சர்க்கரை ஆலை ஒன்றை 1981-82-ல் தொடங்குவதற்காக ரூ. 1.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்



1982 மார்ச் 2] [திரு. நீலநாராயணன்]

டுள்ளது என்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே "திருத்தணியில் அன்றாடம் 1,250 டன் கரும்பு பிழியும் திறனுள்ள சர்க்கரை ஆலை ஒன்றைத் தொடங்குவதற்கு உரிமம் வழங்குமாறு மத்திய அரசை இம்மாநில அரசு வேண்டியுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 11—10)

சென்ற தடவை நிதி ஒதுக்கி அதற்காக வேலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்று திட்டவட்டமான அறிவிப்பு செய்தார்கள். இப்போது மத்திய அரசினிடம் வேண்டியுள்ளது என்ற நிலவரத்தைச் சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு வேண்டுதலில் இருக்கிறது, என்ன முடிவு என்று இன்னும் தெரியவில்லை. அதுபோலவேதான் புதுக்கோட்டை, தருமபுரி, தேனி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு கூட்டுறவு நூற்பாலை விதம் மூன்று புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின்படி அண்மையில் ரிஜிஸ்டர்தான் பண்ணியிருக்கிறார்கள். 1981—82ல் கூட்டுறவுத் துறையில் மேற்கொண்டு 3 நூற்பாலைகளை அரசு தொடங்கும் என்று சொன்னார்கள். இப்போது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது எல்லாம் திட்டங்கள். இப்போது செய்திகளாகத் தெரிகிறது. அன்று தொடங்கப்பட்டு இன்றைக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதா இல்லையா? அதற்கு என்ன என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் முதலாகப் பேசுகிறபோது சுட்டிக்காட்டினேன். 74, 84 விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு தொழில் நடத்தக்கோரி தமிழகத்திலேயிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன என்று முதல் அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டது. அதிலே எத்தனை தொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது? எத்தனை தொழில்களுக்கு வழங்கப்படவில்லை? அப்படி இல்லை என்றால், அதற்குக் காரணம் என்ன என்று கேட்டறிந்தார்களா என்று பலமுறைகள் இந்த மன்றத்திலேயே கேட்டிருக்கிறேன். அதற்குப் பதில் இல்லை. இன்றைக்கும் அதைப் பற்றி நான் கேட்கிறேன். இன்னும் அதற்குப் பதில் கிடைக்கவில்லை. அதற்கும் இன்னும் மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை, வேண்டிக்கொண்டிருக்கிறோம், கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்ற செய்திகளைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே இன்றையதினம் நாம் சந்திக்க வேண்டியிருக்கிறதே தவிர்த்து, திட்டவட்டமான ஒன்றைக் காண முடியவில்லை. இதை எண்ணிப்

பார்க்கும்போது, இது தமிழகம் தானா என்ற சந்தேகம் தான் வருகிறது. கர்ம வீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் இவர்கள் எல்லாம் ஆண்ட தமிழகம்தானா என்று எண்ணவேண்டிய சந்தேகத்திற்கு என்னை இந்த நிதிநிலை அறிக்கை அழைத்துக்கொண்டு செல்கிறது. சேலம் இரும்பாலை வேண்டுமென்று கேட்டோம். 'இதோ உத்திரவு என்று கொடுக்கப் பட்டது. டால்மியாபுரம் என்ற பெயர் மாற்றப்பட வேண்டுமென்று சொன் னோம். இதோ கல்லக்குடி, மாற்றிக் கொள் என்று அனுமதி கொடுக்கப் பட்டது. அது போலவேதான் ஆகஸ்ட் 15 சுதந்திர நாளன்று மாநில முதல மைச்சர்கள் கொடியேற்றுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும், அதற்கு உத்திர விட வேண்டும் என்று கேட்கப்பட்டது. அனுமதி அளிக்கப்பட்டது. அதுவும் இதே தமிழகத்தில்தான் நடைபெற்றது. அந்தத் தமிழகத்தை எண்ணிப் பார்க்கிறேன். இன்றைய தமிழகத்தையும் எண்ணிப் பார்க்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்கெனவே ஒருமுறை சொன்னார்களே, "ஏ, தாழ்ந்த தமிழகமே" என்று. அந்த வேதனைக் குரல்தான் இன்றைய தினம் என் நெஞ்சத்திலே நினைவாடிக்கொண்டிருக்கிறது. இந்த சமயத்திலே இதைச் சொல்வதைத் தவிர்த்து நான் என்ன சொல்ல இருக்கிறது?

தொழில் துறைபற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட ஒன்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆலைகளை நூற் பாலைகளை தனியாருக்கு விடுவதற்கு நாங்கள் தயாராக இருந்துகொண் டிருக்கிறோம் என்ற கொள்கை முடிவு எடுத்திருப்பதாகவே இங்கே சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதோடு விடவில்லை. 66-ஆம் பக்கத்திலே, ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பஸ் கட்டணங்களை உயர்த்தியிருக்கி றார்கள். போக்குவரத்து வாரியம் நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள். அந்த நஷ்ட ஈட்டை அரசே கொடுக்க வேண்டி யுள்ளது என்று ஒரு முகாரி பாடியிருக்கிறார்கள். என்ன அர்த்தம்? இப்போது அத்தோடு நிறுத்தி விட்டார்கள். நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக் கிறது. அரசு அந்த நஷ்ட ஈட்டைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்று இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையேதான் மின்சார வாரி யத்திற்கும் சொன்னார்கள். இப்போது தனியாரிடம் ஒப்படைக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது பஸ் போக்குவரத்துபற்றிச் சொல்லியிருக் கிறார்கள். நாளைக்கு என்ன ஆகுமோ? அண்ணாவே, நீ தான் இந்த ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும். படிப்படியாக இந்த அரசு தனியார் துறைக்குப் போகிறது என்பதை வன்மையாகக் குற்றம் சாட்டிச் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிலைமை இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் பன்னி பன்னிப் பேசுகிறேன். வேறு அல்ல.



அடுத்து, இங்கே போடப்பட்டிருக்கின்ற வரிகள் ரொம்ப முக்கியமானது. அதிகமாகப் போடவில்லை. ரூ. 38 கோடிக்குத்தான் போட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்தவுடனே, 3-வது பக்கத்திலே, "தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே, பாமர மக்கள், ஏழை எளியவர்கள், ஆகியோரின் நிலையை உயர்த்துவதில் இவ்வரசு மிகுந்த நாட்டம் கொண் டுள்ளது. அதற்காக நாங்கள் திட்டங்களைத் தீட்டுகிறோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்து, 38 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டிருக்கிறார்கள். வரியைப் போட்டுவிட்டு 75-ம் பக்கத்திலே, 'வசதி படைத்தோரிடமிருந்து தட்டி எடு. ஏழைகளைத் தட்டிக் கொடு" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தைத் துணைக்கு அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா சொன்ன கருத்திலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. ஆனால் போட்டிருக்கின்ற அந்த வரி ஏழைகளைத் தட்டிக் கொடுப்ப தாக, வசதி படைத்தவர்களிடமிருந்து தட்டிப் பறிப்பதாக, தட்டி எடுப்பதாக அமைந்திருக்கிறதா? அதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டுத் துணிக்கு 5 சதவிகிதம் விற்பனை வரி. இப்படிப் புதிதாக ஒரு வரியைப் போட்டிருக்கிறார்கள். நம்முடைய பட்டின் விலை ஏறியது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்களுக்குக்கூட தெரியும். ஒருவேளை பேசும்போது அதுபற்றிச் சொல்ல லாம். அவர் இந்த வரியைப் பற்றி என்ன கருதுகிறாரோ தெரியவில்லை. செஞ்சோற்றுதக் கடன் என்று விட்டாலும் விட்டு விடலாம். இதிலே நான் சுட்டிக் காட்ட விரும்புவது எல்லாம், நூல் கிடைக்காத காரணத்தாலே விலை ஏறியது என்று சொன்னார்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** நான் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஆரம்பத்திலேயும் செஞ்சோற்றுக் கடன் என்று சொன்னார்கள். இப்போது என்னைப் பொறுத்த செஞ்சோற்றுக் கடன் என்று சொல்கிறார். நானாவது சாப்பிட்டதற்கு நன்றியறிதலோடு இருக்கிறேன். ஆனால் பணத்தையும் பதவியையும் பெற்றுக்கொண்டு, மக்க ளுக்குத் திருமணம் எல்லாம் நடத்தியவர்கள் எல்லாம்கூட நன்றி கெட்டிருக் கிறார்கள். நான் நன்றியோடு இருக்கிறேன். அதுதான் செஞ்சோற்றுக் கடன் என்று சொல்கிறேன்.

**திரு. நீலநாராயணன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒத்துக் கொண்டதற்கு நன்றி சொல்கிறேன். சென்ற ஆண்டு கடைகளிலே தீபாவளி யின்போது பட்டுத் துணியின் விலை எந்த அளவுக்கு ஏறிவிட்டது என்பதை

[திரு. நீலநாராயணன்] [1982 மார்ச் 2

நாம் அறிவோம். கைத்தறிப் பட்டு என்பது பெரிய பணக்காரர்கள்தான் அணியக்கூடிய ஒன்று என்று சொல்ல முடியாது. இன்றைய தினம் நடுத்தர மக்கள்கூட, சாதாரண பட்டை உடுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் சென்ற தடவை பட்டு விலை ஏறியதற்குக் காரணம் நூலுக்கு விலை ஏறியது என்று சொன்னார்கள். அதைக் குறைக்க வேண்டும். அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமலிங்கம் அவர்கள்கூட டெல்லிக்குச் சென்று வாதாடிவிட்டு வந்தார்கள். அதுவும் நமக்குத் தெரியும். பத்திரிகையிலேகூட செய்தி வந்தது. அதைப் பாராட்டினோம். ஆனால் இன்றைக்கு அதே பட்டினுடைய விலை ஏறும் அளவிற்கு அதற்கும் வரி போட்டிருக்கிறார்கள். ஐந்து சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். அதனாலே விலை உயராதா? அது பட்டு கட்டுகிறவர்களை மட்டும் பாதிக்கக்கூடிய சமாசாரம் அல்ல. உற்பத்தி செய்கின்றார்களே, அந்த ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ஏழை நெசவாளிகள், அவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய வேலைகள் தேக்கம் அடையும். தறிகள் தூங்கப் போகின்றன. இது ஏழைகளைப் பாதிக்காது என்று சொல்ல முடியுமா? நேற்றைய தினம்கூட ஒரு சுவையான நிகழ்ச்சி நடைபெற்றது. புதிய வரிகளே போடப்படாத பட்ஜெட் என்று நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "அப்படி இல்லை, இல்லை, புதிய வரிகள் போட்டிருக்கிறார்கள்" என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் இந்த பட்டுத் துணி வரி போட்டிருக்கின்றதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். வரி போடுகின்றபோது, சாதாரணமாக கேபினட் மீட்டிங் போட்டு எல்லாம் பேசி, பிறகுதான் வரி போடுவார்கள். அந்த முறையைத்தான் இதுவரையிலும் கையாளுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் சட்ட அமைச்சர் அவர்கள் புது வரிகளே போடவில்லை என்று சொல்கிறார்கள். 'அண்ணா' பத்திரிகையிலே 'வரிகளே போடாத பட்ஜெட்' என்று பறைசாற்றிய காரணத்தினாலே தான், அதைப் படித்துவிட்டு வந்து இங்கே அப்படி அமைச்சர் அவர்கள் பேசிவிட்டார்களோ என்னவோ, நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால் புதிய வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மின்சாரப் பொருள்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். வெளிநாட்டு மது, கள்ளச் சாராய சாம்ராஜ்யத்தைப்போல, கடத்தல் சாம்ராஜ்யம் உருவாகச் செய்வதற்கு உதவிகரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு திட்டமாக இருக்கிறது என்றுதான் பல பேர்கள் பேசுகிறார்கள். ஏனென்றால் இந்த மது இருக்கிறதே அது இப்போது காட்டாறு போல கரை புரண்டு ஓடுகிறது.



1982 மார்ச் 2] [திரு. நீலநாராயணன்]

நாம் போட்ட வரியால் அதன் விலையும் ஏறிவிட்டது. அந்தவிதமான மதுக்களுக்கு பாண்டிச்சேரியில், பெங்களூரில், ஆந்திரத்தில் விலை கம்மியாக இருக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆனால் அதன் விலைகள் தமிழ்நாட்டில் மட்டும் அதிகமாக இருக்கின்றன என்றால் ஆங்காங்கேயுள்ள வியாபாரிகள் எல்லாம் லாரியிலே கடத்திக்கொண்டு வந்து விற்கத்தான் முற்படுவார்கள். இந்தக் குறைகளை நீக்குவதற்கு புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இடம் அளிக்காத வகையிலே அரசு தக்க முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மோட்டார் வாகனங்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். விற்பனை வரியிலே ஒரு பர்சென்ட் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இதனாலே எல்லோருடைய தலையிலேயும் கை வைக்கிறார்கள். தமிழகத்திலே விற்பனை வரிக்கு ஆளாகாதவர்கள் யார் இருக்கிறார்கள்? ஆகவே விற்பனை வரியைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். அடுத்து, குழந்தைகள் உபயோகிக்கின்ற, சாப்பிடுகின்ற சாக்லேட், மிட்டாய், பிஸ்கெட் இவைகளுக்கு வரி போட்டிருக்கிறார்கள். குழந்தைகளுக்கு என்று 100 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, இந்தக் குழந்தைகளுக்கு உரிய பொருள்களுக்கு, சாக்லெட்டுகளுக்கு, மிட்டாய்களுக்கு போடும் வரியை விட்டுவிடக் கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்):** மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசத் தொடங்கி 50 நிமிடங்கள் ஆகிவிட்டதென்பதையும், விமானத்திலிருந்து வந்திறங்கிய நண்பரின் வருத்தத்திற்கு அவர் ஆளாகக் கூடாதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன்:** அடுத்து, நகரங்களில் நில வரியை உயர்த்த வழி செய்யப்பட்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு விலையினுடைய அடிப்படையில் நில வரியை உயர்த்தப் போகிறோம் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இது யாரைப் பாதிக்கும்? வீட்டுச் சொந்தக்காரனைப் பாதிக்கும் என்று ஒரு வகையிலே சொல்லிவிடக் கூடும். நான் கூறுகிறேன், நகரத்திலே பெரும்பான்மையானவர்கள் ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். அவனுக்கு வேறு வருவாயோ சொத்தோ கிடையாது. அந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, பின்னாலே ஒரு குடிசை போட்டு வாழ்ந்துகொண்டிருப்பான். வரும் வாடகையை வைத்து வாழ்க்கை நடத்திக்

[திரு. நீலநாராயணன்] [1982 மார்ச் 2

கொண்டிருப்பான். சென்னையிலே, கோவையிலே, பல நகரங்களிலே நடக்கும்
வாழ்க்கை இது. இதிலே போய் கை வைத்திருக்கிறோம். இந்த வரியை
உயர்த்திய உடனே அவன் என்ன செய்யப் போகிறான்? வாடகையை
உயர்த்தப் போகிறான். அங்கே ஏழை நடுத்தர மக்கள்தான் குடியிருக்கிறார்
கள். வாடகையை ஏற்றியவுடன், யார் மீது அது சுமத்தப்படுகிறது?

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி ஏழைகளைப் பாதிக்கக்கூடிய வரிகளைப் போட்டுவிட்டு, இறுதியாக
ஏழை எளிய மக்கள் பெரும்பாலும் பயன்படுத்துகிற மண்ணெண்ணெய்க்கு
மட்டும் 4 சதவிகிதமாக வரியைக் குறைத்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன்.
ஆனால் என்ன சொல்லிப் பாராட்டுவது? பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு
முறை ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். வரி விதிப்பு முறைகள் பற்றிக் குறிப்
பிடும்போது, எல்லா வரிகளையும் விதித்துவிட்டு, ஒரேயொரு வரியை நீக்கி
விடுவதுபற்றிக் குறிப்பிடும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒட்டகத்தின்
மேல் அளவுக்கு மிஞ்சிய பாரத்தைத் தூக்கி வைத்துவிட்டு, ஒட்டகம் இழுக்க
முடியாமல் திணறுகிறபோது, சில அநியாய புத்திசாலிகள் அந்த ஒட்டகத்தின்
மேலேயிருக்கும் பொதிகளுள் ஒரு பொதியைக் கீழே தள்ளி விடுவார்கள்.
ஒட்டகம் பாரத்தை இறக்கி விட்டார்கள்; நாம் நடக்கலாம் என்று நினைத்து
நடக்கும். அதைப்போலத்தான் இது அமைந்திருக்கிறது என்று பாராட்ட
வேண்டும். வேறு வகையிலே பாராட்டுவதற்கு என்ன இருக்கிறது என்பது
புரியவில்லை. இவ்வளவும் செய்துவிட்டு, அவர்கள் குறிப்பிடுகின்ற
காரணத்தைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். என்ன சொல்லுகிறார்கள்?
39 கோடி ரூபாய் எதற்காக வரி போட்டிருக்கிறோம் தெரியுமா? இந்த
நாட்டில் சில திட்டங்களுக்குச் செலவு செய்ய அல்ல; என்ன சொல்லியிருக்
கிறார்கள்—ஏழைக் குழந்தைகளுக்கு, வறுமைக் கோட்டுக்கு கீழே 2 வயது
முதல் 11 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு பகல் உணவு கொடுப்பதற்கு
100 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்
கள். நல்ல திட்டம். வரவேற்க வேண்டிய திட்டம். பாராட்ட வேண்டிய
திட்டம். போற்றுகிறேன், புகழ்கிறேன். இந்த 100 கோடி ரூபாய்க்காக
38 கோடி ரூபாய் வரி போட்டிருக்கிறோமென்று சொல்லுகிறார்கள். அரசு
போட்டிருப்பது 100 கோடி ரூபாய் திட்டம். ஆனால் கிடைக்கக்கூடியது 38
கோடி ரூபாய்தான். 38 கோடி ரூபாயிலும் 7 கோடி ரூபாய் முதியோர்களுடைய
பென்ஷன், ஓய்வூதியம், மற்ற உதவி நிதிகளுக்குப் போய்விடுகிறது. எஞ்சி
நிற்கக்கூடியது வெறும் 31 கோடி ரூபாய்தான். 31 கோடி ரூபாயை 100 கோடி



1982 மார்ச் 2] [திரு. நீலநாராயணன்]

ரூபாய் திட்டத்தில் சேர்த்துவிட்டார்கள். எஞ்சியுள்ள 69 கோடிக்கு என்ன
செய்யப் போகிறார்கள்? நாங்கள் நன்கொடை பெறப் போகிறோம், வள்ளல்
களிடம் போகிறோம், அவர்கள் மடியைத் தடவப் போகிறோம் என்று கூறு
கிறார்கள். ஒரு பக்கம் ஏழைகளின் தலையைத் தடவப் போகிறார்கள். இன்
னொரு பக்கம் பணக்காரர்கள் மடியைத் தடவப் போகிறார்கள். ஏன் இந்த
இரட்டை வேடம்? இங்கே நம்முடைய நிதியமைச்சரவர்கள் இல்லை. அவர்
கள் அழகாகக் குறிப்பிடுவார்கள். அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்
தின்போது ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். அகில இந்தியப் பொது
மொழியாக இந்தி இருக்கட்டும், அகில உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் இருக்
கட்டும் என்று சொன்ன வாதத்திற்கு ஒரு உதாரணம் மூலமாக இன்றைய
நிதியமைச்சரவர்கள் அன்றைய தினம் பதில் அளித்தார்கள். ஒரு அறையிலே
ஒருவன் ஒரு பூனையை வளர்த்தான். அந்தப் பூனை வெளியே போய் வர
ஒரு ஓட்டை போட்டான். கொஞ்ச நாளில் அந்தப் பூனை ஒரு குட்டி
போட்டது. எனவே அந்த ஓட்டையை ஒட்டி பக்கத்தில் ஒரு சின்ன ஓட்டை
போட்டான். வந்தவன் கேட்டான், என்னடா, இரண்டு ஓட்டைகள் போட்டிருக்
கிறாயே, எதற்கு என்று. பெரிய பூனை போவதற்கு பெரிய ஓட்டை, சின்ன
பூனை போவதற்கு சின்ன ஓட்டை என்று இவன் பதில் கூறினானாம்.
"வந்தவன் கேட்டான். பெரிய பூனை போகும் பெரிய ஓட்டையிலேயே குட்டி
பூனையும் போகலாமே" என்று கேலியும் கிண்டலுமாக அவருக்கே உரிய
பாணியில் எடுத்துக் கூறினார்கள். அதைப்போல இந்த அரசு நன்கொடை
திரட்டப் போகிறது ரூ. 69 கோடிக்கு. அதோடு ரூபாய் 31 கோடியையும்
சேர்த்துக் கொள்ளக் கூடாதா? அதற்குப் பெரிய துவாரம். இதற்கு சின்ன
துவாரமா? மக்கள் தலையில் கை வைக்க வேண்டுமா? எல்லாவற்றையும்
டொனேஷனாகக் கேளுங்கள். அதை விட்டு ஏன் வரி போட வேண்டும்? வரி
போடாமல் இருந்திருந்தால், நாட்டு மக்கள் வரியில்லை என்று பாராட்டு
வார்கள். அடுத்து, நன்கொடை பெறுவது எந்த அளவிற்குப் போய் முடியு
மென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வேறு எதற்கோ அச்சாரம் போடுவது
போல் இப்போதே பேசுகிறார்கள். அதற்குள்ளே நான் போகவில்லை. இப்படி
இரண்டு முறை தேவையில்லை. இதற்கு வாருங்கள், இல்லையென்றால்
அதற்கு வாருங்கள். ரூபாய் 69 கோடியை ரூபாய் 100 கோடியாக்குங்கள்.
31 கோடி ரூபாய்க்கான வரியை எடுத்து விடுங்கள் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மகாத்மா காந்தி அவர்கள் ஒரு முறை பேசும்போது, ஒன்றைச் சுட்டிக்
காட்டினார்கள். இந்தியா எங்கே இருக்கிறதென்று அவரைக் கேட்டார்கள்.
இந்தியாவிலே இருக்கின்ற 4 லட்சம் கிராமங்களிலேதான் இந்தியா இருக்கிற
தென்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தின்

அடிப்படையிலேதான் அன்றையதினம் கிராமத்திற்குப் போங்கள் என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இன்றையதினம் நம்முடைய அமைச்சர்கள் கிராமங்களுக்குப் போகிறார்கள். கிராமங்களில் உள்ள சுகாதாரக் கேடுகளைக் களைய அப்படிப் போகிறார்கள் என்று கருதாதீர்கள். 'கிராமங்களிலே பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரைக் கொடுக்க என்று கருதாதீர்கள். கிராமங்களிலே தீண்டாமை ஒழிக்கப் போகிறார்கள் என்று கருதிக் கொண்டிருக்காதீர்கள். அவர்கள் எதற்குப் போகிறார்கள் தெரியுமா? பல்பொடி வழங்கப் போகிறார்கள். இதிலே கூறப்பட்டிருக்கிறது. நான் கற்பனையாகப் பேசவில்லை. ஒரு திட்டமாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. கிராம மக்களுக்கு இலவசமாகப் பல்பொடி வழங்குகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏழைகளுக்குப் பல்பொடி வழங்குகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்கள் பற்றித் தெரியாதா? ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி—அவ்வை மொழி. ஆனால் கிராம மக்களுக்கு இது அனுபவ மொழி.

மாண்புமிகு **திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அதிக நேரமாகக் குறுக்கிடக் கூடாது என்றுதான் இருந்தேன். அவருடைய நகைச்சுவையான அனுபவத்தை அவர் சொல்லி, அதை ரசிக்கலாமென்றுதான் இருந்தேன். அவர்கள் 2, 3 உதாரணங்களைச் சொன்னார்கள். ஒன்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே, டீத் பிரஷ் என்ற பல் தேய்க்கக் கொடுக்கும் பணியை ஆங்காங்கே கிராமங்களிலே அறிமுகப்படுத்த ஆரம்பித்தார்கள். நான் ஒரு இடத்திற்குச் சென்றபோது, பல் வைத்தியர் பரிசோதித்து, பற்களை செங்கல், கரித் தூள், மண் கொண்டு தேய்க்கும் குழந்தைகளினுடைய வாழ்க்கை எவ்வளவு பாழ் ஆகிறது என்பதைப் பார்த்து, அதற்குச் சிகிச்சை செய்ததை நேரில் பார்த்த போதுதான், இது மிகப் பெரிய ஆபத்தானது என்பதை உணர்ந்தேன். ஓரே ஒரு நாள் ஏதோ கம்பெனி விளம்பரத்திற்காக ஒரு டீத் பிரஷ், பேஸ்ட் கொடுப்பது மட்டும் அந்த கிராம மக்களுக்கு உதவி செய்வதாகாது இங்கே அவர் சொன்னதே . . . மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு என்னைவிட அதிக வயது இராதென்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-30)

நிச்சயமாக இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதிலே எனக்குப் பெருமை. எனக்கும் அந்தப் பழமொழியிலே கொஞ்சம் நினைவு உண்டு. பழக்கம் உண்டு. நான் நேரில் எந்த அளவிற்கு பல தாய்மார்கள், பல குழந்தைகளுடைய பற்கள் காப்பாற்றப்படாததால் அவர்கள் வாயில், தொண்டையில் நோய் ஏற்பட்டிருக்கிறது என்பதை அங்கே சென்று பார்த்த



பிறகுதான் இத்திட்டத்தை அமுல்படுத்துகிறோம். 'டீத் பிரஷ்' வாங்கி ஏதோ இனாம் கொடுப்பதுபோல் விளம்பரப்படுத்தி தொடர்ந்து அங்கே வழங்க முடியாது என்பதைச் சொல்வதுடன், பல் வைத்தியர்களுடைய யோசனையின் பேரில் நான் இப்படி பற்கள் கெடாத அளவிற்கு பாதுகாப்பு கொடுக்க, வழங்க முன் வந்தோமே தவிர, கேலி பேசுவதால் மட்டும் ஒரு உண்மை பொய் ஆகி விடாது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தத் தாய்மார்களுடைய குழந்தைகளுடைய பற்கள், ஈறுகள், நாக்குகள், தொண்டைகள் இவைகள் எல்லாம் எவ்வளவு மோசமாக இருக்கின்றன என்பதை அங்கே சென்று பார்த்தால் தான் புரியும் என்பதை எனது அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன்** : நான் கேலி பேச வேண்டும், கிண்டல் பண்ண வேண்டும் என்பதற்காக இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவில்லை. நல்ல எண்ணத்தோடு கொடுப்பதாக இருந்தால், கொடுக்கலாம். ஆட்சேபமில்லை. ஆகவே அந்தப் பிரச்சினையை இதோடு விட்டு விட்டு இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், சட்டம் ஒழுங்கைப் பற்றி பின்னால் பேசுகிறவர்கள் பேசுவார்கள். எனக்கும் மேற்கொண்டு பேச டைம் இல்லை. ஒன்றே ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டி முடித்து விடுகிறேன். ஏற்கெனவே என்னுடைய உரையின் ஆரம்பத்திலே ஒன்றைச் சுட்டிக் காட்டினேன். இது எழுத்து அளவிலே தான் இருந்து கொண்டிருக்கிறது. திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத அளவில் இருந்து கொண்டிருக்கிறது. ஏட்டுச் சுரக்காயாக இருந்து கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டினேன்.

"Water, water every where, but not a drops to drink". என்று காலரிட்ஜ் அவர்கள் சுட்டிக்காட்டிய கவிதையைப் போல் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. ஆங்கிலத்தில் நான் சொன்ன உடனே எனது கெழுமிய எனதருமை மாண்புமிகு ஆளும் வரிசையிலே இருக்கிற உறுப்பினர்கள் சிரிக்கிறார்கள். அவர்களுக்குப் புரிகின்ற அளவிலே தமிழிலேயும் என்னால் சொல்ல முடியும். தலைப்பிலே நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்களே, திருக்குறளை துணைக்கு அழைத்துக் கூறியிருக்கிறார்களே, அதே குறள் வழி சொல்கிறேன். இந்த பட்ஜெட்

'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று'

என்கிற குறளுக்கு ஒப்ப அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி என் உரையை முடித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. ஜேப்பியார் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு உரையாற்ற எனக்கு சந்தர்ப்பம் கொடுத்தற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு முன்னால் ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டு பேசினார். ஆனால் கடைசியாக இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னார். இப்படிச் சொல்வதற்கு ஒரு மணி நேரம் தேவையா என்றுகூட, என்னைப் பொறுத்தவரையில், எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. காலத்தையும் ஒதுக்கப்பட்ட காலத்திற்கு அதிகமாக எடுத்து கடைசியில் இது நன்றாக இல்லை என்று சொல்வதற்கா இவ்வளவு நேரம் எடுத்தார்கள் என்று நான் உண்மையிலேயே வியப்பு அடையவில்லை. ஆனால் அவர் எந்த அளவுக்கு இங்கே இருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் ஒவ்வொரு வாசகத்தையும் உன்னிப்பாகப் படித்திருக்கிறார், எவ்வளவு கண்ணும் கருத்துமாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கவனத்தைச் செலுத்தியிருக்கிறார் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன். எவ்வளவு நல்ல நிதிநிலை அறிக்கையாக இது அமைந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு தான் எப்படி இதைப் பாராட்டுவது, பாராட்டி விட்டால் ஒருவேளை அவர் சொன்னாரே "செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்காக" என்று, அதுபோல் அவரோ அல்லது சிலரோ தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அவர் பாராட்டவில்லை என்று கருதுகிறேன். செஞ்சோற்றுக் கடன் என்கிற வார்த்தையை உறுப்பினர் அடிக்கடி பயன்படுத்துகிறார். அது முடிந்து போன கதை. மகா பாரதத்திலே தோன்றி அத்தோடு அது முடிந்து போய்விட்டது. மகாபாரத காலத்திலே அவர் வாழ்வதாக நினைத்துக்கொண்டு அந்த வார்த்தையை அடிக்கடி உறுப்பினர் அவர்கள் பேசும்போது கையாண்டு வருகிறார்கள். அந்த உதாரணத்தைச் சொன்னதற்காக உண்மையிலே அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அதைப்பற்றி அவர் சார்ந்திருக்கிற இயக்கமோ, அல்லது அவர் கடைப்பிடித்துக்கொண்டு வருகிற கொள்கையோதான் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஒரு வார்த்தையை அவர் சொன்னார். அது குறித்து உண்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன். அதற்கு முன்பு இருந்த சில திட்டங்களைச் சொல்லி "நீங்கள் இப்படிச் செய்யலாமா, நாங்கள் இதைச் செய்து மாட்டிக் கொண்டோமே, நாங்கள் இதைச் செய்ததால் மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். அண்ணாவின் சமாதி வழியாக வருகிறபோது, நாங்கள் அண்ணாவைப்பற்றி நினைக்காத காரணத்தால், எங்களை மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள்", என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் சரியாக ஆட்சி செய்த காரணத்தால் தான், நாங்கள் அண்ணாவைப்பற்றி நினைத்த



காரணத்தால்தான், மறுபடியும் ஆட்சிக்கு வர முடிந்தது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அண்ணா சமாதியைப் பார்த்து வாருங்கள், அண்ணா சமாதியைப் பார்த்து வாருங்கள் என்று அடிக்கடி உறுப்பினர் சொல்கிறார். அதை நாங்கள் பார்த்து வருவதால் தான், அவருடைய கருத்துக்களை நடைமுறைப்படுத்தி வருவதால்தான், அவருடைய எண்ணங்களை நாட்டு மக்களிடத்தில் நடைமுறைப்படுத்தி வருவதால்தான் இந்த நாடும், நாட்டு மக்களும் எங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறது —ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை தொடர்ந்து இருக்கிறது. அண்ணா அவர்களை நீங்கள் இப்போதாவது நினைவு கூர்வதற்கு நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். அண்ணாவை மறந்திருந்தீர்கள். உங்களால் அண்ணா மறக்கப்பட்டிருக்கிறார். அண்ணா என்ற நாமத்தை சொல்வதையே சர்ச்சைக்குரியதாக ஆக்கும் அளவுக்கு, உங்களை ஆளாக்கிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் இன்றைக்கு அண்ணாவை எண்ணுகின்ற அளவிற்கு, அண்ணாவே சாட்சிக்கு வாருங்கள், அண்ணாவே எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லும் அளவுக்கு எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் உங்களைக் கொண்டு வந்திருக்கிறார் என்பதையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது. பல விஷயங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னார். குறிப்பாக எல்லோருக்கும் பிடிக்காத ஒன்றைச் சொன்னார். "நாட்டு மக்கள் மறதியாக இருக்கிறார்கள்" என்று சொன்னார். மக்களைப் பார்த்து மறதியாக இருக்கிறீர்கள், உங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்லலாமா!" மக்கள் இல்லாததால்தான் இந்த இடத்திலேயிருந்து கொண்டு மக்கள் மறதியாக இருக்கிறார்கள் என்ற கடுமையான வார்த்தையைச் சொல்லுகிறார்கள். மக்கள் கேட்க முடியாத இடத்திலே இருந்துகொண்டு மக்கள் மறதியாக இருக்கிறார்கள் என்று சொன்னால், மக்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணிப் பார்க்காமல், இப்படிப்பட்ட கடுமையான சொல்லை உபயோகப்படுத்தினார்கள். தமிழக மக்கள் மறதியிலே வாழ்கிறார்கள், அரசியல் தெரியாது, ஒன்றுமே புரியாது என்ற பொருள்படும்படி மக்கள் மறதியிலே இருக்கிறார்கள், மக்கள் மறந்திருக்கிறார்கள் என்று உங்களையே மறந்த நிலையில் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அதே நேரத்தில் நீங்கள் பதவியிலே இருந்தீர்கள். பிறகு மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று உங்களையே தூக்கி எறிந்தார்கள் என்பதையும் மறந்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆக, யார் மறதியில் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். நீங்கள் ஆட்சியில் இருக்கிறபோது, எல்லாம் நல்லதாக இருக்க வேண்டுமென்று கனவு காண்கிறீர்கள். நாங்கள் நினைத்தோம், 'கோட்டையிலே கொடி ஏற்றவில்லையா, சேலத்தில் இரும்பு ஆலையைக் கொண்டு வரவில்லையா" என்றெல்லாம் சொல்கிறார்கள்.

'நாங்கள் ஆட்சி செய்தபோது நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட திட்டங்களில் எவ்வளவு மோசடி செய்தோம், எவ்வளவு தவறு நடந்தது" போன்ற விஷயங்களைச் சொல்லியிருந்தால், அது பெருந்தன்மையைக் காட்டுவதாக அமைந்திருக்கும். சமயபுரத்திலே மின் உற்பத்தி செய்ய நினைத்தோம். அதிலே பல கோடியை மோசடி செய்தோம் என்று சொல்லியிருந்தால், அதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. கோட்டையிலே கொடி ஏற்ற வேண்டுமென்று முனைந்தீர்கள். ஏற்றினோம். எங்களை வெளியேற்றிய பிறகு, மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழகத்தின் முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில்—மக்களால் தூக்கி எறியப்பட்டு விலாசங்களை இழந்த பிறகு அவர்களைப் புகழ்கின்ற அளவிற்கு—உங்களைப் பற்றிச் சொன்னதை எண்ணிப் பார்க்க வேண்டும். கொடி ஏற்ற காரணமாக இருந்தவர் என்று சொல்லிவிட்டு பிறகு அவருடைய பெயரைச் சொல்கிறார், பிறகு அவருடைய தகுதியைச் சொல்கிறார்.

(முற்பகல் 11-40)

இதைக் கட்ட உறுதுணையாக இருந்த அவரைப் பாராட்டுகிறேன், என்று சொன்னாரே அதற்கு நன்றி சொன்னது உண்டா? அவர் கட்ட எடுத்த நோக்கம் நல்ல நோக்கம் என்று சொன்னாரே அந்த நோக்கத்தைப் புரிந்து கொள்ள திறமை இருந்ததா? இந்த வகை தெரியாதவர்கள், வக்கு தெரியாதவர்கள் என்ன செய்தார்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நான் பெருமைப்படுகிறேன். வள்ளுவர் கோட்டம் கட்டப்பட்டிருக்கும் இடம் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவுக்கு குப்பை மேடாக இருந்த இடம். அதிலே இப்போது கீறல் விழுகிறதா, அதற்கென்று போடப்பட்ட எஸ்டிமேட்படி செலவு செய்யப்பட்டதா, அல்லது அதிலேயிருந்து கையாடல் செய்யப்பட்டதா, கையூட்டு பெறப்பட்டதா என்பது போன்ற விவரங்கள் எல்லாம் இந்த நாட்டுக்கு நன்கு தெரியும். ஆனால்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்ன சொன்னார், 'எவ்வளவு பெரிய நோக்கம், வள்ளுவனுக்கு இவ்வளவு பெரிய கூடமா! இதைக் கட்டியவரை நான் பாராட்டுகிறேன், அவரை நான் உண்மையிலேயே மதிக்கிறேன் என்று மனம் திறந்து, நாட்டு மக்கள் மறந்துவிட்ட நிலையிலே கூட, அவர் இனிமேல் இந்த நாட்டுக்கு தேவையில்லை, இந்த நாட்டு மக்களுக்குத் தேவையில்லை, அவருடைய பணி இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்று நாட்டு மக்களால் ஒதுக்கப்பட்ட நிலையிலும்—அப்படி ஒதுக்கப்பட்டவரை மீண்டும் குறிப்பிட்டு, இவர் கட்டினார், நான் பெருமைபடுகிறேன்' என்று சொன்னாரே, அந்தப் பெரிய உள்ளம்



எவ்வளவு உயர்ந்தது, என்ன பண்பாட்டை உடையது என்று பார்க்க வேண்டும். அவரைப்போல் வேறு யாராவது சொன்னார்களா? இது அரசியல் நாகரிகம், இதைப் பின்பற்ற வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இப்படிப் பட்ட நோக்கங்களையெல்லாம் விட்டுவிட்டு, இந்தக் கொள்கைகளையெல்லாம் விட்டு விட்டு வேறொரு ஆங்கிளிலே பேசினார்கள். இதையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி சுட்டிக் காட்டினார்கள். நீங்கள் திட்டமிட்டுச் சொன்னபோது, திட்டமிட்டு கிண்டல் செய்தபோது, அவர்கள் "இந்த இயக்கம் வேறு எங்கோ போகிறது, இது திராவிட இயக்கம் இல்லை, அந்த நோக்கத்திற்கும் அப்பால் வேறு திசையில் போகிறது" என்று சொன்னார்கள். இன்றைக்கும் நாங்கள்தான் திராவிடர்கள், தமிழர்கள் என்றெல்லாம் சொல்லும் நண்பர்களை நான் கேட்கிறேன், உங்களுடைய பிரதிநிதிகளாக மாநிலங்களவையிலும், மக்களவையிலும் இருக்கும் உறுப்பினர்கள் இன்றைய தினம் கோடிக்கணக்கான வரிகளைப் போட்டுக் கொண்டு வந்திருக்கும் அந்த மத்திய படஜெட்டைப்பற்றி ஒரு வரி சொல்லியிருக்கிறார்களா? உலகத் தமிழ் மக்களுக்கெல்லாம் நான் தான் தலைவன் என்று சொல்லிக் கொள்பவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்திய அரசால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கை பற்றி இன்னும் வாய் திறக்கவில்லையே? இந்தியத் துணைக் கண்டத்திலே விதிக்கப்பட்ட, இந்திய துணைக் கண்டத்தில் மக்கள் மீது சுமத்தப்பட்ட வரிகளைப்பற்றி இன்னும் பேசவில்லையே, ஏன்? இது நியாயமான வரியா அல்லது அநியாயமான வரியா, இதனால் ஏழை மக்கள் பாதிக்கப் படுகிறார்களே என்று ஏன் இன்னும் சொல்லவில்லை? அப்படிப்பட்ட நிலையிலேதான் உலகத் தலைவராக இன்றைய தினம் இருக்கிறார்கள். அநீதி நடக்கும்போது நீதி கேட்க வேண்டும். ஆனால் தமிழக அரசுக்கு மத்திய அரசிடமிருந்து நியாயமாக வரக்கூடியவைகள் வராமல் அதிலே காலதாமதம் ஏற்பட்டபோது, அதைப்பற்றிச் சுட்டிக் காட்டியது உண்டா? மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அணு ஆயுத சோதனையை நிறுத்துங்கள் என்று சொல்வதற்காக அமெரிக்காவுக்குச் சென்றார்கள். அப்போது அங்கே அவரை வரவேற்றார்கள். ஆனால், அதே மனிதர் அந்த தள்ளாத வயதிலே இன்னொருவரிடம் இன்னொரு விஷயமாகச் சென்றார், அன்றைய தினம் அது மறுக்கப்பட்டது. ஏன் மறுக்கப்பட்டது? ஏன் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை? அன்றைய தினம் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சென்றதைப்போல, நீங்கள் [illegible] அமெரிக்காவுக்குச் [illegible] செல்ல வேண்டாம், விமானத்தில் செல்லுங்கள். நடந்தால் அது தேவையில்லை என்று சொல்வார்கள் என்று சொன்னால் அல்லது நீங்கள் நினைத்தால், விமானத்தில் செல்லுங்கள், அல்லது விமானத்தில் போவது என்பது மிகவும் படாடோபமான வாழ்க்கையைக் குறிக்கும் என்று நினைத்தால், இரயிலிலே

செல்லுங்கள், அப்படிச் சென்றால், ஒவ்வொரு இடத்திலும் மாலை போடுவார்கள், அதை அப்படியே படம் எடுத்து பத்திரிகைகளில் போடலாம். அப்படி டெல்லிக்குப் போங்கள். அங்கே சென்று கங்கை, கிருஷ்ணா போன்ற நதிகளின் தண்ணீரையெல்லாம் தமிழகத்திற்கும் தாருங்கள் என்று கேளுங்கள் நீங்கள் மிகவும் நல்ல முறையில் பேசி பழக்கப்பட்டவர்கள். மாநில ஆட்சிக்கு சுயாட்சி வேண்டும் என்று கேட்டவர்கள் நீங்கள், அதற்கான தீர்மானத்தை முன்மொழிந்தவர்கள் நீங்கள், அந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொன்னால், போக வேண்டிய இடத்திற்குப் போக வேண்டும். அப்படிப் போகவேண்டிய இடத்திற்குப் போகாமல் வேறு எங்கோ போனால் எப்படி? தமிழக மக்களால் செல்லாக் காசாக ஆக்கப்பட்டவர்கள் நீங்கள், மீண்டும் தமிழக மக்கள் உங்களை நினைக்க வேண்டும் என்று சொன்னால், கிருஷ்ணா, கோதாவரி, கங்கை, யமுனை போன்ற நதிகளின் தண்ணீரை தமிழகத்திற்கும் தரவேண்டும் என்று கேட்டு போக வேண்டியது தானே ! டெல்லிக்குப் போங்கள், அல்லது காசிக்குப் போங்கள். காசிக்குப் போக வேண்டும் என்று சொன்னால் ஒருவேளை அது உங்களுடைய கொள்கைக்குப் பாதகம். காசிக்கு போனால் ஒருவேளை நீங்கள் பிரார்த்தனைக்குத்தான் போகிறீர்கள் என்று மக்கள் நினைப்பார்கள். அப்படி என்று சொன்னால் தலைப்பை மாற்றுங்கள், டெல்லிக்குச் செல்கிறோம் என்று சொல்லுங்கள். அப்படி நீங்கள் டெல்லிக்குப் போய் கேட்டால், இழந்து விட்ட மதிப்பை, செல்லுபடியாகாமல் போய்விட்ட மதிப்பை, திரும்பப் பெறவும் மக்கள் உங்களை மறந்திருக்கும் நிலைமையைப் போக்கவும் அது பயன்படும். நீதி கேட்கும் இடம் கோட்டை, நீதிமன்றம் இருக்கும் இடம் சென்னை. நீதிமன்றமும், கோட்டையும் இல்லாத இடத்திலே போய் நீதி வேண்டும் என்று கேட்கும்போது, ஜனநாயகத்திலே உங்களுக்கு நம்பிக்கை இல்லையோ என்ற சந்தேகம் இருக்கிறது. நீதியை இங்கேயே கேட்கலாம். ஆனால் நீதி கிடைக்காத இடத்திற்கு நெடும் பயணம் செல்கிறீர்கள். நீதி கிடைக்காத இடத்திலே, வந்தவர்களை வரவேற்காத இடத்திலே சென்று நேரத்தை விணாக்கிவிட்டீர்கள். தயவு செய்து டெல்லிக்குச் செல்லுங்கள். நான் மாலையிடுகிறேன். நடந்துகூட போக வேண்டாம். ஏனென்றால் நீங்கள் நெடுநாட்கள் வாழ வேண்டியவர்கள், டெல்லிக்குச் சென்று தண்ணீரை கொண்டுவர முயற்சி செய்யுங்கள். எங்களுடைய மாண்புமிகு தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒருமுறை கர்நாடகாவுக்குச் சென்று, கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களைப் பார்த்து தமிழகத்திற்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டபோது, அன்றைய தினம் கிண்டல் செய்யப்பட்டது. 'இவர் யார் போய் கேட்பதற்கு?' என்று கேட்டார்கள். அந்த அளவுக்கு நாங்கள் கேட்க மாட்டோம். டெல்லிக்குச் செல்லுங்கள். நடந்துதான் போவோம் என்று சொன்னால்,



அதற்கும் ஏற்பாடு செய்து ஆரம்பித்து வைக்கிறோம். நடந்து செல்லும் போது, காலிலே கொப்புளங்கள் வந்தால்கூட, நானே அந்தக் கொப்புளங்களுக்கு மருந்து போட ஏற்பாடு செய்கிறேன். தமிழ் நாட்டிலே இருக்கிற மக்களுக்கு, வருங்கால சந்ததிகளுக்கு தேவையான இந்த நல்ல காரியத்தைச் செய்யுங்கள்.' திராவிடத்தைப்பற்றிப் பேசும் நீங்கள், பிற்காலத்திலே மாநில சுயாட்சி கேட்டீர்கள். நாமெல்லாம் தான் கேட்டோம். தனியாக ஒரு கொடி எங்களுக்கு வேண்டும் என்று கேட்டீர்கள். மாநிலத்திலே ஐ. ஜி.க்களுக்குத் தனியாக ஒரு கொடி இருப்பதைப்போல, எங்களுக்கும் தனியாக ஒரு கொடி வேண்டும் என்று கேட்டீர்களே, அது கிடைத்ததா ? அதற்காகப் போராடுங்கள். ஓடாத இரயிலுக்கு முன்னாலே, நின்றுகொண்டிருந்த இரயிலுக்கு முன்னாலே தலை வைத்துப் படுத்து அந்த ஊரின் பெயரை மாற்றச் சொல்லவில்லையா ? வீரர்கள் இந்த நாட்டிலே தோன்றினார்கள். ஓடுகிற இரயிலுக்கு முன்னாலே படுத்து, அல்லது நடக்கின்ற சபையிலே வெடிகுண்டைத் தூக்கிப் போடுவேன் என்று அன்றைய தினம் பகத்சிங் சொன்னார், அவன் வீரன் ஆவான். ஆனால் ஓடாத இரயிலுக்கு முன்னாலே தலைவைத்துப் படுத்து தளநாயகனாக மாறி அதிலே சரித்திரம் படைப்பவனாகச் சொல்லி, நாட்டு மக்களை ஏமாற்றவில்லையா ? தண்டவாளத்திலே தலை வைத்துப் படுக்க எனக்குத் தகுதியில்லையா என்று கேட்பவர்களை நான் கேட்கிறேன், உங்களுக்குக் கொடி கிடைத்ததா ? இன்றைக்கு நாட்டிலே இருக்கும் நிலைமை என்ன? இங்கே இருக்கும் ரோட்டுக்கு அண்ணா சாலை என்று பெயர் சூட்டப்பட்டது. அண்ணாவைப் பற்றி அடிக்கடி நினைக்கிற உங்களுக்குச் சொல்கிறேன், நாங்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினால், 'பார், பார், இவர்களால் முடியவில்லை' என்று எங்களுக்கு நீங்கள் களங்கம் கற்பிக்கலாம். நீங்கள் ஆண்ட காலத்திலே, நாமெல்லாம் ஒன்றாக இருந்த போது மௌன்ட் ரோட்டிலே ஒரு பகுதியைப் பிரித்து இது இவ்வளவு அண்ணா சாலை என்று பெயர் சூட்டப்பட்டது. பின்னர் அண்ணா சாலையில் பல்வேறு நிறுவனங்களின் சார்பில் நிறுவனங்களையும் கடைகளையும் வைத்துக் கொண்டிருப்பவர்கள் 'அண்ணா சாலை' என்று போர்ட் வைத்திருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. அண்ணாவின் மீது புதிதாக உங்களுக்கு பக்தி வந்திருக்கிறது. அந்தப் பக்தியை இதற்காகப் பயன்படுத்துங்கள் என்று நான் உங்களைக் கேட்கிறேன். அண்ணாவை உண்மையாகவே நினைக்கும் எண்ணம் உங்களுக்கு இருக்குமானால், இதை உதாரணமாக எடுத்துக்கொண்டு, செயல்படுத்துங்கள். உங்களை நான் கேட்கிறேன், அண்ணா சாலையில், அண்ணா சாலை என்று பெயர் பலகைகளில் போடாத கடைகள் இருக்கக்கூடாது என்ற வேகம் ஏன் உங்களுக்கு வரவில்லை ?

[திரு. ஜேப்பியார்] [1982 மார்ச் 2

(முற்பகல் 11-50)

மண்ணின் மைந்தர்கள் என்று பேசுகிறவர்கள், இனி "அண்ணா சாலை" என்று பெயர் போடாத எந்த நிறுவனமும் இங்கே இருக்கக்கூடாது என்று போராட்டத்தைத் துவங்குவதுதானே !

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாவட்டக் கழகத்தைப்பற்றி இங்கே பேசப்பட்டதால், அதைக் கேட்டுக் கொண்டு நான் சும்மா இருக்கக் கூடாதென்பதற்காக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அரசுக்கும், சென்னை நகரில் அண்ணா சாலையில் உள்ள அங்காடிகளுக்கும் நான் தனிப்பட்ட முறையிலும், கடிதமே எழுதியிருக்கிறேன். அண்ணா சாலை என்ற பெயரைப் பயன்படுத்த வேண்டுமென்றும் இதைக் கடைப்பிடிக்காவிடில், "தினமணி" பத்திரிகை அலுவலகத்திற்கு முன்னால்கூட மறியல் செய்வேன் என்றும் அறிவித்திருக்கிறேன். பொது மக்களுக்கு இது தெரியும் என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஜேப்பியார்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசும்போது, தங்கத்தைப்பற்றிப் பேசினார்கள். உண்மையிலேயே மறக்க முடியாத செயல் அது. "போன ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தாலிக்குத் தங்கம் வழங்குவதற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்குவதாகச் சொன்னார்கள். அது என்னவாயிற்று? இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் ?" என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் கேட்டார்கள். நான்கூட ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். சொன்னால் உங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கும். மிகப் பெரிய அளவில் ஒரு விளம்பரம் செய்தார்கள். தாலிக்குத் தங்கம் தருகிறோம் என்று தாங்கள் அதிகாரம் செலுத்தக்கூடிய, தாங்களே முன் நின்று நடத்தக்கூடிய அரசின் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன். எல்லோருக்கும் தங்கம் தருகிறார்கள் என்று விளம்பரம் வந்தது. அந்த விளம்பரத்தைப் பார்த்து, எது இவர்கள் நம்மைவிட மிஞ்சிவிட்டார்களே என்று நானேகூட ஆச்சரியப்பட்டேன். அந்த அளவுக்கு தாலிக்குத் தங்கம் என்று விளம்பரம் செய்தார்கள். கேட்டால் தங்கள் வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கிற 10 பேரை அழைத்து தங்கம் வழங்கினார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: "இது எங்கள் தங்கமா", உங்கள் தங்கமா ?

திரு. ஜேப்பியார்: எங்கள் தங்கம் நம்முடைய தங்கம்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: "எங்கள் தங்கம்" தாங்கள் விரும்பி எடுத்த படம்.



1982 மார்ச் 2]

திரு. ஜேப்பியார்: "எங்கள் தங்கம்' வந்ததால்தான் நீங்கள் தங்கமாக மாறினீர்கள். ஆக நான் ஒரு வருஷம் அத்தகைய அறிவிப்பைப் பார்த்தேன். தமிழ்நாட்டிலிருந்து ஒரு பெரிய தலைவர் வருகிறார். ஏழை எளிய மக்களுக்கெல்லாம் தாலிக்குத் தங்கம் தருகிறார்கள். ஓடோடி வாருங்கள் என்று பெரிய விளம்பரம் போடப்பட்டது. நான் விசாரித்துப் பார்த்தேன். சிலர் சொன்னார்கள். 'உங்களுக்கு வேறு வேலை இல்லையா ? அவர் வீட்டில் வேலை செய்கிறவர்களையும், பக்கத்தில் வேலை செய்கிறவர்களையும் கூப்பிட்டு வரச் சொல்லி, தாங்களாகவே ஒரு விழாவை நடத்திவிட்டு முடித்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அதைப்பற்றிப் பேசவில்லை" என்றார்கள்.

1980 ஆம் ஆண்டு தங்கமும் வெங்காயமும்தான் மூலப் பொருள்கள். அது தான் சொத்து. தாலிக்குத் தங்கம் இல்லை. தாளிக்க வெங்காயம் இல்லை—மிக அழகான டயலாக், இன்றைக்கு தாளிக்க வெங்காயம் டெல்லிப் பட்டணத்திலேயே கிடைக்கவில்லை. என்ன சொன்னீர்கள், சொன்னதைச் செய்தீர்களா? சொன்னதைச் செய்யவில்லையே என்று வருத்தப்படுகிறபோது, சொன்னதைச் செய்ய வேண்டிய இடத்தில் இருக்கிறவர்கள் செய்தீர்களா ? தங்கத்திற்கு விலையைத்தான் குறைக்க முடியவில்லை, சரி. வெங்காயத்தின் நிலை என்ன? டெல்லியில் நிறைய பேர் சொல்கிறார்கள். பத்திரிகைகளில்கூட படிக்கிறோம். அங்கே தாளிக்க வெங்காயம் இல்லை. யாரைப் பார்க்கப் போனாலும் அங்கே பூமாலை வாங்கிக் கொண்டுபோய் மாலை போடுவதில்லையாம். ஒரு கிலோ வெங்காயத்தை மாலையாகச் செய்து அதைத்தான் கொண்டுபோய் போடுகிறார்களாம். அந்த அளவுக்கு அங்கே வெங்காயத்திற்கு மதிப்பு வந்திருக்கிறது. வெங்காயத்தால் மாலை போட்டால் அங்கே இருப்பவர்கள் பூரிப்படைகிறார்களாம். அந்த அளவுக்கு நீங்கள் இருக்கிற இடத்தில், நீங்கள் ஐக்கியமாகி இருக்கிற இடத்தில், இந்தியாவை ஆளுகிற இடத்தில் வெங்காயத்திற்கு மதிப்பும் பெயரும் ஏற்பட்டிருக்கிறதாம்.

தாளிக்க வெங்காயம் இல்லை என்று பட்டிதொட்டிகளிலெல்லாம் பேசிவிட்டு இன்றைக்கு அதன் விலையையும் மதிப்பையும் உயர்த்தியிருக்கிறீர்கள். அது ஒன்றும் வெளிநாட்டிலேயிருந்து கொண்டு வரப்பட வேண்டிய பொருள் அல்ல. தங்கத்தைப் போல் அல்ல. தங்கத்தைப்பற்றி நீங்கள் என்னவெல்லாம் சொன்னீர்கள்? உலக மார்க்கெட்டில் நிர்ணயிக்கப்படும் விலையில்தான் இங்கேயும் தங்கத்தின் விலை இருக்கும் என்று எல்லா நாட்டவர்களுக்கும் தெரிந்திருக்கும் உண்மை நம் மக்களுக்குத் தெரியாத காலத்தில் நீங்கள் மக்களை ஏமாற்றினீர்கள். சரி, இவர்கள் ஆட்சிக்கு வந்தால், உடனே தங்கத்தின் விலையைக் குறைப்பார்கள் என்று மக்கள் நம்பினார்கள், உலக சந்தையில்.

[திரு. ஜேப்பியார்] [1982 மார்ச் 2

நிர்ணயிக்கும் விலைதான் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் என்ற உண்மை மக்களுக்கு இப்போது தெரிய ஆரம்பித்துவிட்டது. எந்த அளவுக்கு மக்களை நீங்கள் ஏமாற்றியிருக்கிறீர்கள் என்று அவர்கள் உணர்ந்துகொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அதுதான் போகட்டும், தாளிப்பதற்கு வெங்காயம் இல்லை என்றீர்களே, அதைக் கொண்டு வருவதற்கு எப்போதாவது போர்க் கொடி உயர்த்தியதுண்டா? எந்த நேரத்திலாவது அதைப்பற்றிப் பேசியதுண்டா ?

எவ்வளவு வேகமாகப் பேசினீர்கள்? டெல்லியைத் தட்டிக் கேட்போம், விட மாட்டோம் என்றீர்களே, என்னவாயிற்று உங்கள் பேச்சு ?

இந்த அரசு கொண்டு வரும் திட்டங்களை நல்ல திட்டங்கள் என்று நீங்கள் ஏற்றுகொள்வீர்களானால், ஒரே ஒரு வார்த்தை சொல்ல வேண்டாமா ? டெல்லியில் 16 பேர் இருக்கிறீர்கள். முன்னால் எல்லாம் நம்முடைய எம்.பி.-க்கள் டெல்லியில் இப்படிப் பேசினார்கள் என்றும், இத்தகைய கருத்துக்களைச் சொன்னார்கள் என்றும் பல செய்திகள் வரும். அதன் காரணமாக தமிழ் நாட்டினுடைய மதிப்பே உயர்ந்தது. தமிழகத்திலிருந்து வரும் எம்.பி.-க்களைப் பற்றி டெல்லியில் உயர்ந்த எண்ணம் இருந்தது. ஆனால் இன்றைக்கு என்ன பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதையே எண்ணிப் பார்க்காமல், சரிந்து கொண்டிருக்கிறீர்கள். அதை தயவுசெய்து நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

100 கோடி ரூபாய் செலவில் தமிழ் நாட்டில் இருக்கிற 2 முதல் 10 வயதுக் குட்பட்ட உண்மையிலேயே உணவே கிடைக்காத ஏழை எளிய குழந்தைகளுக்கு வாழ்வளிக்கிற வகையில் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். திட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்றால், நிச்சயமாக அதை நிறைவேற்று வோம். இது ஒன்றும் ஜீபூம்பா வேலை அல்ல. 1975 ஆம் ஆண்டு சென்னை நகரில் பெரிய பூகம்பமே கிளப்பி இதோ வருகிறது, செயற்கை மழை, வானத்திலே விமானத்தை விட்டு அதன் மூலம் பவுடரைத் தூவிவிட்டால், தேவையான இடத்தில் தேவையான அளவுக்கு மழை பொழியும் என்று உலகத்திலே வேறு எந்த விஞ்ஞானியும் கண்டுபிடிக்காத, வேறு எந்த நாட்டிலும் செய்து பார்த்திராத பெருமை, உங்களைத் தவிர வேறு யாருக்கும் இருக்காது . . . .

திரு. ஆர். டி. சீத்தாபதி: அதை அறிவித்த அமைச்சர் அவர்கள் இப்போது உங்களோடுதான் இருக்கிறார். மின்துறை அமைச்சராக இருக் கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார்: அவர் அங்கே இருக்கிறார் அல்லது இங்கே இருக்கிறார் என்பதல்ல பிரச்சினை. எண்ணம் உங்களுடையது. எண்ணம் மூலவருடையது.



1982 மார்ச் 2]

திரு. ஆர். டி. சீத்தாபதி: அமைச்சரவையில் அவர் மட்டும் எடுத்த முடிவு. அவர் அதை அமைச்சரவையில் தெரிவித்து அமைச்சரவையும் அதை ஏற்றுக் கொண்டது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பு இல்லாமல் சுயேச்சையாகச் செயல்பட்டு முடிவெடுத்ததைப் போல் சொல்லிக் கொண்டிருக்கிறார். அமைச்சர்களுக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. அதற்கு மாறாகச் சொல்வதன் மூலம் அவர் கழகத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டாம். யார் மீதோ இருக்கிற கோபத்தில் கட்சியை அவமானப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: யார் மீதோ இருக்கிற கோபத்தில் கட்சியை அவமானப்படுத்த வேண்டாம் என்று சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒரு அமைச்சர் வெளிநாடு சென்று திரும்பியபோது அதைப்பற்றிச் சொன்னார். அமைச்சரவையில் அது ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஆக அதை முதலில் அறிவித்தவர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் தான் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, if I may interrupt, I would like to inform the hon. Members of this House that the silver iodide experiment cannot be attributed to Thiru S. Ramachandran either in his capacity as D.M.K. Minister or as A.I.A.D.M.K. Minister. The credit for this goes to certain international organisation which wanted to conduct experiment for producing rain. I would request both the hon. Members not to waste the time of the House in this needless controversy .

திரு. ஜேப்பியார்: அன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு அந்த அளவு விளம்பரம் தரப்பட்டது. எவ்வளவு பெரிய விழாக்கள் கொண்டாடப்பட்டன!

அதுமட்டுமல்ல. மின்வாரியத்தைப்பற்றி இங்கே பேசினார்கள். மின் வாரியம் யாரால் கெடுக்கப்பட்டது ? வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலம் அல்லாமல் தன்னிச்சையாகத் தனக்கு வேண்டியவர்களுக்கெல்லாம்—இதை நான் சொன்னால் ஏதோ அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகச் சொல்லு கிறேன் என்றுகூட எண்ணலாம்—வேலை தரப்பட்டது. வேண்டியவர்கள் என்றுகூட நான் சொல்ல விரும்பவில்லை, வேலை இல்லாதவர்களுக்கு வேலை தர வேண்டும் என்ற எண்ணத்தோடு, வேலையே இல்லாத இடத்தில்

[திரு. ஜேப்பியார்] [1982 மார்ச் 2

4,000-க்கும் மேற்பட்டவர்களைத் தினக் கூலிகளாக நீங்கள் நியமித்தீர்கள். நிர்வாகம் எப்படி கெடாமல் இருக்கும் ? வேலையே அங்கே இல்லை. ஆனால் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கிறோம் என்று சொல்லி மின்வாரியத்தில் மட்டும் 4,000-க்கும் மேற்பட்டவர்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களுக்கெல்லாம் என். எம். ஆர். என்ற பெயரை சூட்டிவிட்டீர்கள். இந்த 4,000 பேரும் தேவையில்லை என்று நாங்கள் முடிவெடுத்து அவர்களை வெளியேற்றுவது என்று முயன்றபோது, எவ்வளவு பெரிய போர்க்குரல் எழுப்பினீர்கள்.? எங்கள் ஆட்சியில் இவ்வளவு பேருக்கு வேலை அளித்தோம், இந்த ஆட்சியில் அவர்களை வீட்டுக்குப் போ என்கிறீர்களே என்று பாரெல்லாம் போய்ச் சொன்னீர்கள். நீங்கள் வைத்தது தவறு. அவர்களை வேலையிலிருந்து எடுப்பது என்று முடிவு செய்தால், அதைத் தவறு என்கிறீர்கள். பிறகு நிர்வாகம் எப்படி சீர்கெடாமல் இருக்கும்? அப்படித்தான் ஒவ்வொரு துறையை எடுத்துக் கொண்டாலும், நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த ஆட்சி வந்த பிறகுதான் மண் வெட்டுவதற்கும் மரம் நடுவதற்கும்கூட வேலை வாய்ப்பு நிலையத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறவர்களுக்குத்தான் வேலை என்று செய்திருக்கிறோம். தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்காமல், சமுதாயத்தில் இருக்கிற அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் சம உரிமை தருகிறோம். வேண்டியவர்களுக்கு மட்டும்தான் வேலை கிடைக்கிறது என்ற நிலையை மாற்றி வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம்தான் யாருக்கும் வேலை என்று உண்டாக்கியிருக்கிறோம்.

(நண்பகல் 12-00)

எத்தனை அட்டானமஸ் பாடிகளை உங்களால் தோற்றுவிக்க முடிந்தது ? வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் அவைகள் எல்லாம் தனித்தனியாக இயங்குகின்றனவே. ஆனால் இன்றைக்கு இப்படி முடிகிறதா? மாநகராட்சியை நினைத்துப் பாருங்கள். வேலைக்குப் போகாமல் போனதாக கணக்குக் காட்டி சம்பளம் பெற்று அதன் மூலம் இந்த நாட்டு நிதிநிலையைப் பாழ்படுத்தியிருக்கிறீர்கள். அப்படிச் செய்துவிட்டு வேலை தந்திருக்கிறோம் எங்கள் ஆட்சியிலே என்று சொல்லி புள்ளி விவரங்களைத் தந்து, புகைப்படம் போட்டு விளம்பரம் செய்துவிட்டு, இன்றைக்குச் சொல்லுகிறீர்கள் "நிர்வாகம் கெட்டுவிட்டது", "ஸ்தம்பித்துவிட்டது" என்று. மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல. தெரிந்ததால்தான் சிரித்துக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சிரித்ததன் பயன்தான் இப்போது நீங்கள் அனுபவித்துக் கொண்டிருப்பது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை நல்ல நிதிநிலை அறிக்கை என்று நான் சொல்லும்போது, நீங்கள் இல்லையென்று சொல்லக்கூடும். என்றாலும் இது நல்ல நிதிநிலை



1982 மார்ச் 2] [திரு. ஜேப்பியார்]

அறிக்கை, நாட்டிற்குத் தேவையான அறிக்கை என்று சொல்லி, இருக்கின்ற வருமானத்தைக் கொண்டு மக்களுக்குப் பயன்படுகிற அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தனை நேரம் நடந்த உஷ்ணமான விவாதத்திற்குப் பிறகு அமைதியாக சில கருத்துக்களைச் சொல்ல வேண்டிய துர்பாக்கியமான நிலையில் நான் இருக்கிறேன். ஏனென்றால், உஷ்ணமாகப் பேசுவதைத்தான் ஓரளவு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். நான் அப்படிப்பட்ட ஒரு நிலையில் இல்லை. அதற்காக நான் சொல்லும் கருத்துக்களில் நியாயம் இருந்தால், அதைத் தள்ளிவிடக் கூடாது என்பதை மாத்திரம் கேட்டுக்கொள்கிறேன்.

நான் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருப்பார்கள் என்று நினைத்தேன். அவர்கள் வந்திருந்தார்கள். இப்போது போய்விட்டார்கள். அவர் இருந்தபோது சொல்ல நினைத்த ஒருசில கருத்துக்களை இப்போது சொல்கிறேன். இங்கே இருக்கின்ற அமைச்சர்கள் முதலமைச்சருக்கு அதைத் தெரிவித்து ஒருசில பரிகாரங்களையாவது தேடிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலாவதாக, சமீப காலத்திலே இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக பலர் பாதிக்கப்பட்டு, வேதனை அடைந்து, மனம் புண்பட்டவர்களாக என்னிடத்திலே வந்து, "எங்களுடைய உணர்ச்சிகளை நீங்கள் சட்டமன்ற மேலவையிலே கூற வேண்டும். அதை அரசாங்கம் தெரிந்துகொண்டு ஓரளவு துயர் துடைக்க முன் வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படிப்பட்ட காரியங்களை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன்.

நான் சென்னைக்கு வந்தவுடன் மத குருவான, தலைவரான அருட்பெருந்தகை சுந்தர் கிளார்க் என்ற பேராயரைப் பார்த்தேன். அவர் மிகவும் உருக்கமாக, மிகவும் உணர்ச்சியோடு சொன்னார். "நம்முடைய கிறித்துவ சமய வரலாற்றிலேயே மிக முக்கியமான பேராலயம் கத்தீடரல்தான். அது வெறும் ஆலயம் மட்டுமல்ல. கத்தீடரல் என்றால் புனிதமான பீடம் என்று அதற்கு அர்த்தம். அப்படிப்பட்ட புனிதமான பெயரை மாற்றிவிட்டு டி.டி.கே. பெயரை வைத்திருக்கிறார்கள். டி.டி.கே. பெயரை வைக்க நாங்கள் எதிர்ப்பு

தெரிவிக்கவில்லை. இந்தப் புனிதமான பெயரை எடுத்துவிட வேண்டுமா என்றுதான் வருந்துகிறோம்" என்று சொல்லி ஞாயிற்றுக்கிழமை கிறித்துவர்கள் பொதுக் கூட்டம் போட்டிருக்கிறோம், நீங்களும் வர வேண்டும் என்று என்னையும் அழைத்தார்கள். நான் போனேன். கொளுத்தும் வெயிலில், சுமார் இரண்டரை மணி வெய்யிலில் பல்லாயிரக்கணக்கான கிறித்துவ மக்கள் மிகுந்த மன வேதனையுடன் அங்கே கூடியிருந்தார்கள். அவர்கள் "கண்டனக் கூட்டம்" என்று அதற்குப் பெயர் சூட்டவில்லை. அவர்கள் அதை ஒரு "ஜபக் கூட்டம்" "பிரார்த்தனைக் கூட்டம்" என்றுதான் சொன்னார்கள். தெரியாமல் செய்த தவறை உணர்ந்து அரசாங்கம் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கூட்டப்பட்டிருக்கிற பிரார்த்தனைக் கூட்டம் என்று சொல்லி அதை நடத்தினார்கள். அந்தக் கூட்டத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அப்போது நான், "முதலமைச்சர் அவர்கள் நல்ல பரந்த எண்ணம் உள்ளவர்கள். கிறித்துவர்களுக்கு பல நியாயங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக இதை ஏதோ அவசரப்பட்டுச் செய்திருப்பார்கள். நாம் நியாயமான காரணங்களை ஆதாரத்தோடு எடுத்துச் சொன்னால், இந்தத் தவறைத் திருத்திக்கொள்வார்கள்" என்று உறுதிமொழி அளித்தேன்.

டி.டி.கே. அவர்கள் தமிழ்நாட்டிலே பிறந்து பெரிய புகழ் பெற்று, மத்திய அரசிலே நிதியமைச்சராக இருந்து ஒரு சாதனையைச் செய்தவர் என்பதிலே சந்தேகம் இல்லை. அவர் பெயரை ஒரு சாலைக்கு வைத்து பெருமையை உண்டாக்குவது மிகவும் பொருத்தமானதாகும். ஆனால் கிறித்துவ மக்களுடைய உள்ளங்களைப் புண்படுத்தித்தான் அவருக்கு அந்தப் பெருமையைக் கொடுக்க வேண்டுமா? பக்கத்திலேயே "மௌபரீஸ் ரோடு", "கிரீம்ஸ் ரோடு" என்றும், "ஹாடோஸ் ரோடு" என்றும் வெள்ளைக்காரர்கள் பெயரைத் தாங்கி பல சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகளுக்கு அவருடைய பெயரைக் கொடுத்து பெருமை செய்திருக்கக் கூடாதா? அப்படி மாற்றியிருந்தால், யாரும் அதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை. அது மிகப் பொருத்தமாகவும் அமையும். கத்திட்ரல் ஆலயம் 1815 ஆம் ஆண்டிலே கட்டப்பட்டது. அதிலிருந்து இது வரை பல பெரிய பேராயர்கள் செயலாற்றி வந்திருக்கிறார்கள். கிறித்துவ சமய வரலாற்றிலே முக்கியமான புனிதமான மைல் கல் என்று சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஆலயத்தின் பெயரை மாற்றிவிட்டார்கள் என்று வருத்தப்பட்டார்கள். அப்போது மீண்டும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கிறித்துவர்களைப் பெரிதும் மதிக்கிறவர்கள். அதற்கு முன்னதாக திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த சமயத்தில் கூட, கிறித்துவ அமைச்சர்கள் கிடையாது. திரு. குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்தபோது திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள்."





**திரு. ஜேப்பியார் :** திருமதி லூர்தம்மாள் சைமன் திரு. காமராஜர் காலத்திலேதான் இருந்தார்.

**திரு. த. சந்தோஷம் :** கிறித்துவ அமைச்சர் அவர்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். மதுரை சங்கம் தீர்மானம் கூடப் போட்டது என்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதன் பிறகு கிறித்துவர்களுக்கு இடம் இல்லை. ஆனால் இன்றைய முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்றவுடன் இரண்டு கிறித்துவர்களுக்கு அமைச்சர் பதவியைக் கொடுத்தார்கள். ஒருவர் திரு. எட்மண்ட்—அவர் கத்தோலிக்கர். இன்னொருவர் செல்வி பி. டி. சரஸ்வதி—அவர் இப்போது என்ன ஆனார் என்பது வேறு விஷயம். முதலமைச்சர் அவர்கள் கிறித்துவர்களிடம் தனக்கு மதிப்பு இருக்கிறது என்பதை வெளிப்படுத்தியவர்கள். இந்த அமைச்சரவையிலேயும் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்கள்—ஒரு கத்தோலிக்கர், பேரவைத் துணைத் தலைவராக இருக்கின்ற திரு. பி. எச். பாண்டியன்—அவர் ஒரு புராடெஸ்டெண்ட்—ஆகிய இரு கிறித்துவர்களுக்குப் பதவி கொடுத்து நியமித்திருக்கிறார்கள். ஆகவே நாமும் நியாயமாக அணுகிக் கேட்டுக் கொள்வோம் என்று சொன்னேன். அவர்களுடைய உணர்ச்சியை இங்கே வைக்கிறேன். இங்கே இருக்கின்ற அமைச்சர்கள், தயவுசெய்து, முதலமைச்சரிடம் இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டும். கிறித்துவ மக்கள் எப்போதும் பொது மக்களுக்கு நல்ல சேவையைச் செய்கிறவர்கள். பல மருத்துவ மனைகளை, பல கல்லூரிகளை நடத்தி பொது மக்கள் எல்லோருக்கும் சாதி மத பாகுபாடு இன்றி, சேவை செய்யும் மக்கள், ஆளும் கட்சித் தேர்தலில்கூட வேலை செய்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய மனம் புண்படும்படி டி.டி.கே. சாலை என்று மாற்றுவது சரியல்ல. வேறு எத்தனையோ சாலைகள் இருக்கின்றன. "காலேஜ் ரோடு" என்று இருக்கிறது. அப்படியுள்ள ஏதாவது ஒரு சாலைக்கு அவர் பெயரை வைத்து அவருடைய பெயருக்குப் பெருமையைத் தேடுங்கள், இந்தச் சாலையை விட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் பெரிய நன்றிக் கூட்டம் கூட நடத்துவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இருந்தால், இப்போதே ஓர் அறிக்கையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருப்பேன். ஆனால் இங்கேயுள்ள அமைச்சர்கள் அப்படிப்பட்ட முயற்சியில் இறங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. சந்தோஷம்] [1982 மார்ச் 2

இரண்டாவதாக, அரசாங்கம் சமீபத்திலே எடுத்துக்கொண்ட நடவடிக்கை ஜனநாயக அடிப்படைக் கொள்கைக்கே விரோதமாகச் சென்றிருக்கிறது ஜனநாயக அடிப்படைக் கொள்கையில் ஒன்று, நீதித் துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் தொடர்பு இருக்கக் கூடாது. நீதித்துறை தனித்துச் செயல்பட வேண்டும். அதற்கு புனிதமாகச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பது எல்லா ஜனநாயக நாடுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்,

(பிற்பகல் 12-10)

அமெரிக்கா போன்ற எழுத்து மூலம் அரசியல் அமைப்புச் சட்டங்கள் உள்ள நாடுகளிலேகூட அது இடம் பெற்றிருக்கிறது. இங்கிலாந்து போன்ற 'அன் ரிட்டன் கான்ஸ்ட்டிடியூஷன்' இருக்கக்கூடிய ஜனநாயக நாட்டிலேயே 1615 ஆம் ஆண்டிலேயே 'மாக்ன கார்ட்டா' என்ற மக்கள் உரிமை சாசனத்திலேகூட கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். நிர்வாகந் துறையிலே இருப்பவர்கள் நீதித் துறையிலே தலையிடக்கூடாது என்ற அளவில் செய்திருக்கிறார்கள். 'டிரையல் பை ஜூரி' என்று 'மாக்ன கார்ட்டா' உரிமை சாசனத்திலேயும் எழுதி வாங்கியிருக்கிறார்கள். அதிலிருந்து இன்று வரை, இங்கிலாந்திலே நீதித் துறையில் தனி சுதந்திரம் கொடுத்து பெரிதும் ஆர்வத்தோடு காப்பாற்றி வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வெள்ளையர்கள், இந்தியாவுக்கு அவர்கள் வந்த உடனே, அதை மறந்துவிட்டார்கள். இந்தியாவுக்கு வந்த உடனே அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், தங்களுடைய நிர்வாகத் துறையிலே குமாஸ்தாக்களாகப் பணியாற்றியவர்களை கொஞ்சம் அனுபவம் பெற்றவர்களை, கிரிமினல் ஜூடிஷியல் டெஸ்ட் தேர்வு பெற்ற உடனே, நீதித் துறையிலே மூன்றாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாக நியமித்தார்கள் ஒரு ஆறு மாத காலம் கழித்து அவர்களை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாக நியமித்தார்கள். அதற்குப் பிறகு டெபுடி கலெக்டர்களாகப் போட்டு, முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படியாக கீழ் மட்டத்திலே நடுவர்; நீதிபதிகளாக கொண்டுவந்திருக்கிறார்கள். இப்படி நிர்வாகத் துறையிலே இருப்பவர்களைக் கொண்டு வந்து போட்டு ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு ஐ.சி.எஸ். படித்தவர்களை ஒரு மாதம் கலெக்டர்களாகப் போட்டிருக்கிறார்கள். பிறகு மாவட்ட நீதிபதியாக மாற்றிப் போடுவார்கள். அதற்குப் பிறகு ஒரு ஆறு மாத காலம் கழித்து உயர்நீதி மன்றத்திலே நீதிபதியாகி விடுவார்கள். பின்பு நம் நாட்டிலே இந்த நீதித் துறையும், நிர்வாகத் துறையும் பிரிந்து இருக்க வேண்டும் என்ற அளவில் அவர்கள் செய்திருக்கிறார்கள். இறுதியில் 1946 ஆம் ஆண்டிலேகூட நீதித் துறையையும், நிர்வாகத் துறையையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும்



1982 மார்ச் 2] [திரு. த. சந்தோஷம்]

என்பதை ஏற்றுக்கொண்டு ஒரு கமிட்டி அமைத்து, அதன் பரிந்துரைகளை ஜஸ்டிஸ் ராஜகோபால் உதவியுடன் நிறைவேற்றி அந்த இரண்டு பிரிவுகளையும் தனித்தனியாகப் பிரித்துவிட்டார்கள். ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட் என்பவருக்கு கட்டாயம் வக்கில் தொழிலில் அனுபவம் இருக்க வேண்டும். நீதிமன்றத்திலே 2 ஆண்டுகளாவது அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும் என்றும் அவர்களைத்தான் நீதிபதியாக, நடுவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படித்தான் சொல்லப்பட்டு வந்தது. சமீப காலத்திலே என்ன காரணமோ தெரியவில்லை. மீண்டும் நிர்வாகத் துறையிலே உள்ள எழுத்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏதோ கரஸ்பாண்டன்ஸ் கோர்சில் படித்துவிட்டு, தேர்வுக்கு உட்கார்ந்துவிட்டு, வேறு ஏதாவது பெனாரஸ் யூனிவர்சிடி அல்லது பெல்காம் யூனிவர்சிடி காரஸ்பாண்டெண்ட்ஸ் கோர்ஸ் மூலமாக பி.எல். படித்துவிட்டு வந்துவிடுகிறார்கள். அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். நீதிமன்றத்தையே பார்த்திராதவர்கள் ஜூடிஷியல் நடுவராக நியமிக்கப்படுகிறார்கள். அது மிகவும் கண்டிக்கத்தக்கது. இது ஜனநாயகக் கொள்கைக்கு முரணானது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் 50-வது பிரிவிலே டிரைக்டிவ் பிரின்சிபில்ஸ்-லே சொல்லப்பட்டிருக்கிறது.

"The state shall take steps to separate the Judiciary from the Executive in the public services of the state."

என்று அங்கே போடப்பட்டிருக்கிறது. அப்படி 'டிரெக்டிவ் பிரின்சிபில்ஸ்'ல் சொல்லப்பட்டிருக்கிறதை மதித்து நடப்பதாக இருந்தால், இவர்கள் இந்த நடவடிக்கையை நிச்சயமாக மாற்றிக்கொண்டு, ஏதோ தவறு நடந்துவிட்டது, இனிமேலாவது நீதித் துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதபடி, நீதித் துறைக்கு நியமிக்கும்போது, வக்கில்கள், நீதிமன்றத்திலே பணியாற்றி அனுபவம் பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். சென்ற பத்து ஆண்டுகளாக நிர்வாகத்திலே எழுத்தர்களாக இருப்பவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், 52 பேர்களை ரெகுலரைஸ் பண்ணப்போவதாக இந்த அரசாங்கம் முடிவு எடுத்து அறிவித்திருக்கிறது. அதை எதிர்த்து வழக்கறிஞர்கள் சங்கம் உயர்நீதிமன்றத்திலே ஒரு ரிட் மனு தாக்கல் செய்து, அப்படிச் செய்வது தவறு என்று தற்காலிகத் தடை உத்தரவு வாங்கியிருக்கிறது. அப்படி தற்காலிகத் தடை 1981 நவம்பர் மாதத்தில் வாங்கியிருக்கிறது. ஆனால் இப்போது 1982-வது ஆண்டிலேகூட மீண்டும் எழுத்தர்களாக இருந்தவர்களை, நீதிமன்றம் பார்த்திராத பலரை, 30 பேர்கள் இருக்கும் என்று நினைக்கிறேன், அந்த 30 பேர்களை டெம்பரவரியாக ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமித்திருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கது. இதை வழக்கறிஞர் சமுதாயம்

நிச்சயமாக ஒட்டுமொத்தமாக எதிர்க்கிறார்கள். இப்படிச் செய்தது, அரசியல் அமைப்பின் ஜனநாயகக் கொள்கைக்கு விரோதமான ஒரு செய்கையில் ஈடுபட்டதாகத்தான் ஆகும். தயவுசெய்து இந்தத் தவறான போக்கை மாற்றிக் கொண்டு மீண்டும் நீதித் துறையையும் நிர்வாகத் துறையையும் பிரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, மதுரை வழக்கறிஞர்கள் சங்கத்தைப் பொறுத்தது. நாங்கள் பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். 12 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மதுரையிலே ஒரு உயர்நீதி மன்றப் பிரிவை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். காரணம் நீதிமன்றங்கள் பரவலாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் வைத்திருக்கிறது. அப்படி ஒரு கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட உடனே நாங்கள் சொன்னோம், 500 மைல்களுக்கு அப்பால் உள்ள உயர்நீதிமன்றத்திற்கு மக்கள் வருவதற்கு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த உயர்நீதி மன்றத்தைப் பிரித்து, தென் மாவட்ட மக்களுக்கு என்று பிரித்துத் தாருங்கள் என்று கேட்டோம். அதையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இது வரைக்கும் அரசாங்கம் அதற்காக எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக மதுரையிலேயிருந்து ஒரு சப்-கோர்ட்டை, அதாவது இராமநாதபுரம் அடிஷனல் சப்-கோர்ட்டை ஸ்ரீவில்லிப் புத்தூருக்கு மாற்றியிருக்கிறார்கள். மதுரையிலேயிருந்து ஒரு அடிஷனல் சப்-கோர்ட்டை பெரியகுளத்திற்கு மாற்றுகிறார்கள். மதுரையிலேயிருந்து ஒரு அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை திண்டுக்கல்லுக்கு மாற்றியிருக்கிறார்கள். இப்படியாக 3 கோர்ட்டுகளை மாற்றியிருக்கிறார்கள். இது நியாயம்தான். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நாங்கள் என்ன எதிர்பார்த்தோம் என்றால், இந்த மதுரையிலே உள்ள வழக்கறிஞர்களுக்கும் நீதி வழங்கவேண்டும். இந்த நீதிமன்றங்களை மதுரையிலேயிருந்து வெளியே கொண்டு போகின்ற அதே சமயத்தில் உயர்நீதிமன்றத்தின் பிரிவு மதுரையிலே அமைக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அதைப்பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்காது இந்த 3 நீதிமன்றங்களை மதுரையிலேயிருந்து வெளியே கொண்டுபோயிருக்கிறார்கள். அதன் காரணமாக மதுரையிலே உள்ள வழக்கறிஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தனிப்பட்டவர்களுடைய பிரச்சினை அல்ல. இது பொதுவான வழக்கறிஞர் சங்கத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி என்பதைச் சுட்டிக்காட்டி, வெகு சீக்கிரத்தில் மதுரையில் உயர்நீதி மன்றப் பிரிவை வைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தர்மராஜ் சந்தோஷம் அவர்கள் மதுரையிலிருந்து சில பிரிவுகளை திண்டுக்கல், பெரியகுளம் போன்ற இடங்களுக்கு மாற்றியது வழக்கறிஞர் சங்கத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி என்று சொல்கிறார்கள். அந்தந்தப் பகுதியில் உள்ள வழக்கறிஞர்களுக்கு அதுவே வரப்பிரசாதமாக இருக்கிறது. ஏழையெளிய மக்களின் செலவுகள் தவிர்க்கப்பட்டு, நியாயங்கள் உடனடியாகக் கிடைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது, இது வழக்கறிஞர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக அங்கத்தினர் அவர்கள் எப்படிக் கருதுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு. த. சந்தோஷம்:** நீதிமன்றங்களைப் பரவலாக ஆக்க வேண்டுமென்ற கொள்கையை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். இப்போது அரசு செய்திருப்பதை நாங்கள் நிச்சயமாக எதிர்க்கவில்லை. ஆனால் அதே சமயத்திலே ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்போது, அது மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் இருக்க வேண்டும். some changes without teara என்ற அளவில் இருக்க வேண்டும். கொஞ்சம் முன் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதுதான் முறை. அப்படி 'change without teara' என்ற அடிப்படையிலே சொல்கிறேன். நீதிமன்றங்களை இடம் மாற்றுவது எல்லாம் நியாயம்தான். ஆனால் அதே சமயத்திலே இங்கே இருக்கின்றவர்களுக்கு ஒரு கஷ்டத்தை உண்டாக்கிவிட்டு, மற்றவர்களுக்கு நன்மை செய்கிறோம் என்பதைத் தவிர்த்து எல்லோருக்கும் நன்மையைக் காணுகின்ற முறையிலே செய்ய வேண்டும். மதுரையிலே உயர்நீதி மன்றப் பிரிவை வைத்து, இந்த நீதிமன்றங்களைக் கொண்டு போயிருந்தால், பாராட்டியிருப்போம், வரவேற்றிருப்போம். அதைச் செய்யாது இதைச் செய்தது ஒருதலைப்பட்சமான நடவடிக்கை என்று சொல்லிக்கொண்டு, மதுரையிலே வெகு சீக்கிரத்தில் உயர்நீதிமன்றப் பிரிவு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது இதை It is like the Curate's egg; good in parts........... ஒரு முட்டையிலே பாதி நன்றாக இருக்கிறது, ஒரு பாதி அழுகலாக இருக்கிறது என்று சொல்வதுபோல இருக்கிறது. இதிலே பாராட்டுவதற்குரிய அம்சங்கள் பல இருக்கின்றன. அதே சமயத்திலே குறைபாடுகள் உள்ள, குற்றம் சொல்லக்கூடிய சில அம்சங்களும் இருக்கின்றன. முதலாவது பாராட்டுவதற்குரிய அம்சங்களை நான் வரவேற்று, அதிலே சில மாறுதல்கள் செய்ய வேண்டியவற்றை மாத்திரம் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நான் சுமார் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், மதுரையிலிருந்து கார் மூலமாக பெங்களூர் சென்று, அங்கிருந்து மைசூர் சென்று, அந்த மாநிலத்திற்குச் சென்றிருக்கிறேன். அந்தக் கர்நாடக மாநிலத்திலே சாலைக்கு இரண்டு பக்கத்திலேயும் புதிய புதிய தொழிற்சாலைகள் கட்டப் பட்டிருந்ததைப் பார்த்தேன். ஏற்கெனவே கட்டப்பட்ட பழைய தொழிற் சாலைகளும் சாலைகளின் இரண்டு பக்கத்திலும் கட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். போகின்ற வழியிலேயே இருந்தது. அதை நான் பார்த்தேன.

(பிற்பகல் 12-20)

ஆனால் தமிழ் நாட்டுக்குள்ளே வந்து பார்த்தபோது, இங்கே அப்படி ஒரு நிலை இல்லை. தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி மிகவும் மந்தமாக இருந்தது. அதே சமயத்திலே மதுரையிலேயிருந்து சென்னைக்கு ரயில் மூலமாக வந்துகொண்டிருந்தேன். முதல் வகுப்புப் பெட்டியில் என்னுடன் பயணம் செய்தவர், ஒரு ஸ்தாபனத்தில் உயர்ந்த அதிகாரி. அவரிடம் எங்கே போகிறீர்கள் என்று கேட்டேன். அவரும் என்னை, எங்கே போகிறீர்கள் என்று கேட்டார். நான் சொன்னேன். அவரும், " நான் ஆந்திர மாநிலத் திற்குப் போகிறேன், எங்கள் தொழில் நிறுவனத்தில் பெரிய தொழிற்சாலை ஒன்றைக் கட்ட விரும்புகிறேன், அதற்கு தமிழ் நாட்டில் எந்தவிதமான ஆதரவும் இல்லை, ஆந்திர மாநிலத்தில் அதற்கு ஆதரவு இருக்கிறது, பல சலுகைகள் கொடுக்கிறார்கள், அதற்காக அங்கே போய் அதிகாரிகளைச் சந்திக்கப் போகிறேன் " என்று சொன்னார்கள். அதற்காக வருந்தினேன். அதே சமயத்திலே பத்திரிகைகளிலும் படித்தேன். தமிழ் நாடு தொழில் துறையிலே அகில இந்தியாவிலே 3 ஆம் இடத்திலிருந்து 14–வது இடத்திற்குத் தள்ளப்பட்டதென்று படித்தேன். இந்தச் சூழ்நிலையிலேதான் இந்த அமைச் சரவை பதவி ஏற்றது. இதற்கு முன்னால் இருந்த அரசாங்கங்களிலும், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது நான் சுட்டிக்காட்டி, தொழில் வளர்ச்சியை சீக்கிரம் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி யிருக்கிறேன். இந்த அமைச்சரவை பதவி ஏற்ற காலத்தில், சுறுசுறுப்பான வாலிபரை தொழிலமைச்சராகப் போடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். எதிர்பார்த்ததைவிட நல்ல முறையிலே அவர் செய்துவிட்டார். நான் காரிலே செல்லும்போது, தமிழ் நாட்டின் பல இடங்களிலே பார்க்கிறேன், பல தொழிற் சாலைகள் சாலைகளின் இரண்டு பக்கங்களிலும் இருக்கின்றன. கர்நாட கத்தில் உள்ளதைவிட அதிகமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எந்தத் தொழிலதிபர் ஆந்திர மாநிலத்திற்குப் போய் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறேன் என்று சொன்னாரோ, அவரே, அந்தத் தொழில் நிறுவனமே அருப்புக்கோட்டைக்குப் பக்கத்தில் ' போல்ட்ஸ் & நட்ஸ் ' உற்பத்தி செய்யும்





தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார்கள். பெரிய தொழிற்சாலையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஓராண்டுக்குள் முடிந்து, தொழில் உற்பத்தி யைத் தொடங்கிவிடும் என்று நினைக்கிறேன். அதே தொழில் ஸ்தாபனம் இன்னும் பெரிதான நிலத்தை வாங்கி, மோட்டார் பகுதிகளை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்கப்போவதாகக் கேள்விப்படு கிறேன். இதெல்லாம் பாராட்டக்கூடிய அம்சங்கள். இந்த அரசாங்கத்திற்கு, நன்றியோடு என் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றை வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். போன நிதிநிலை அறிக்கையிலே மதுரையிலே சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படு மென்று சொல்லப்பட்டது. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாரா யணன் அவர்களும் தெரிவித்தார்கள். பல முறை நான் வற்புறுத்தியிருக் கிறேன். மதுரையிலே சிமென்ட் தொழிற்சாலை வருமென்று உறுதியளித் திருந்தார்கள். இன்னமும் அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதைக் கேட்டு மனம் வருந்துகிறேன். நான் இந்த நேரத்தில் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். சுதந்திரம் பெற்ற பிறகு, தென் மாவட்டங்களாகிய மதுரை, இராமநாதபுரம், குமரி மாவட்டங்களில் ஏதாவது பெரிய தொழிற் சாலை ஏற்பட்டிருக்கிறதா, அரசாங்கத் தொடர்புகொண்ட பெரிய தொழிற் சாலை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். தூத்துக்குடியில் புதிய துறைமுகத்தோடு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது நெல்லை மாவட்டம். மதுரை, குமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒன்றும் ஏற்படுத்தவில்லை. குமரி மாவட்டத்தில் ரப்பர் உற்பத்தி செய்கி றார்கள். ' ரா-ரப்பர் ' கேரளாவிற்கு அனுப்புகிறார்கள். குமரி மாவட்டத் திலே ரப்பர் தொழிற்சாலை அமைத்து பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கலாம். அதற்காக எதுவும் செய்யவில்லை. இதைப் பெரிய குறை யாகக் கருதுகிறேன். இந்த அரசு நல்ல சாதனைகளைச் செய்தாலும், தென் மாவட்டங்களில் அரசாங்க உதவியுடன் பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக் காதது வருந்தத்தக்கதாகும்.

நம்முடைய தொழிலமைச்சரவர்கள் சமீபத்திலே சென்னையிலே பேசும் போது, ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். இண்டஸ்டிரியல் டெவலப்மென்ட் கன்சல்டேடிவ் கமிட்டி என்று ஆலோசனைக் குழு அமைக்கப்படுமென்று அறிவித்தார்கள். அதை வரவேற்கிறேன். இந்த நேரத்தில் ஒரு வேண்டு கோள் விடுக்க விரும்புகிறேன். தயவுசெய்து கட்சி அடிப்படையிலே அந்தக் கமிட்டிக்கு உறுப்பினர்களை நியமிக்காதீர்கள். உண்மையிலேயே அனுபவமும், சிந்தனா சக்தியும், கற்பனை சக்தியும், திறமையும் உள்ள தொழில் அதிபர்களைக் கொண்டு கமிட்டியை அமைத்தால், நம்முடைய தமிழ்

நாட்டுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆளும் கட்சிக்காரர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அமைத்தால், அது நன்மையாக முடிவதற்குப் பதிலாக கெடுதலாக முடியுமென்று தெரிவித்துக கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சக்தி பற்றி பல பேர்கள் குறிப்பிட்டார்கள். அநேக திட்டங்களை இதிலே சொல்லியிருக்கிறார்கள். பக்கம் 18-லே இருக்கிறது. திரும்பவும் சொன்னால் நேரமாகிவிடும். இங்கே செய்திருக்கின்ற அநேக முயற்சிகள் நீண்ட காலத் திட்டங்களாகத்தான் இருக்கின்றன. அவற்றி லிருந்து பலன் கிடைக்க வேண்டுமென்றால், 1985 இறுதியில்தான் கிடைக்கும். அதுவரை, 2½ ஆண்டுகளுக்கு என்ன செய்வது? நான் ஏற்கெனவே சொன்னது போன்று புதிய தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. இன்னமும் தொழிற் சாலைகளை ஆரம்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு மின் சக்தி கொடுக்க வேண்டாமா ? இங்கே சொல்லப்பட்டது, ‘ நிறைய அள்ளிக் கொடுக்கி றார்கள் ’ என்று. எவ்வளவு செலவு செய்தாலும் பரவாயில்லை, கேரளாவிட மிருந்து அதிகப் பணம் கொடுத்து வாங்கி, 2½ ஆண்டுகளுக்கு மின்சாரம் கொடுத்து, தொழிற்சாலைகளைக் காப்பாற்றுங்கள். எப்படியாவது அவர் களுக்கு மின்சக்தி கொடுக்க வேண்டும். ஹோமி பாபாவின் பொன்மொழியை எத்தனை முறை சொன்னாலும் பன்னளிக்கக்கூடியதுதான். ‘No power is more costly than no power’ அந்தப் பொன் வாக்கை மீண்டும் வற்புறுத்துகிறேன். மின் உற்பத்திக்குச் செலவாகிவிடுமென்று நினைக்க வேண்டாம்.

சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை கழற்றிக்கொண்டு போய்விட் டார்கள். ஆனால் அங்கே பரந்த நிலப்பரப்பு இருக்கிறது. புதிதாக வேறொரு இடத்தில் நில ஆர்ஜிதம் செய்தால் செலவு அதிகமாகும். மின் வாரியத்திற்குச் சொந்தமான நிலமிருக்கிறது. அங்கே கட்டிடம் இருக் கிறது. அந்தக் கட்டிடத்தை, இப்போதுள்ள விலைவாசியில் கட்டுவதாக இருந்தால், 5 லட்சம், 10 லட்சம் ரூபாயாகும். கட்டிடம் இருக்கிறது. பெரிய சிமெண்ட் தொட்டிகள் இருக்கின்றன. பெரிய குழாய்கள் இருக்கின்றன. ரயில் பாதைகூட இருக்கிறது. இவ்வளவு வசதிகள் இருக்கும்போது, அதை ஏன் பயன்படுத்தக்கூடாது? இதை மின் சக்தி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சொன்னேன். எலக்ட்ரிசிட்டி போர்ட் கன்சல்டேடிவ் கமிட்டிக் கூட்டத்தில் சொன்னேன். ஆனால், எக்ஸ்பர்ட் இதை ஏற்றுக்கொள்ள வில்லை. மிகுந்த செலவாகுமென்று சொல்லுகிறார்கள். எப்போதுமே நிபுணர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது. பொதுமக்களின் ‘காமன்



சென்ஸ் பாயின்ட் ஆஃப் வியூ’ அதிக அளவிற்குப் பயன் தரக்கூடியதாக இருக்கும். கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு, நெய்யுக்கு அலைவது போல, கையிலே பெரிய வசதிகளை வைத்துக்கொண்டு, வேறு இடங்களில் அனல் மின் நிலையங்களை அமைப்பதைக் காட்டிலும் இருக்கின்ற சாதனங் களை வைத்து, பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உலகத்தில் எங்கும் இல்லாத ஒரு திட்டமாக 2 முதல் 10 வயதுவரையிலான குழந்தைகளுக்கு உணவு இலவசமாகக் கொடுக்கப் போகிறோமென்று சொல்லி யிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். நடைமுறையில் எளிதான காரியமல்ல. அது கஷ்டமான காரியம். எப்படி கணக்கு எடுக்கப் போகி றீர்கள்? ரேஷன் கார்டில், 3 பேர்கள் இருக்கும் குடும்பத்தில் 12 பேர்கள் இருப்பதாகச் சொல்லி, பொய் கணக்கு கொடுக்கிறார்கள். 12 வயதானவர் களுக்கும் 10 வயதுதான் ஆகிறதென்று சொல்லுவார்கள். இப்படி கஷ்டங்கள் இருக்கின்றன. கஷ்டம் இருக்கிறதென்பதற்காக இதைக் கைவிட்டுவிட வேண்டாம். குளத்திலே தைரியமாகக் குதித்தால்தான் நீச்சல் கற்றுக் கொள்ள முடியும். அதைப்போல துணிகரமாக இதைச் செய்யுங்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கும்வரை, அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படு கிறது

(பிற்பகல் 12-30)

**திரு. த. சந்தோஷம்:** நன்றி, வணக்கம். இலவசமாக பல்பொடி கிராமங் களில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு விளக்கினார்கள். என்னால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் அறிந்தவரையில், அப்படி வாங்கிய ஒரு குடும்பமும் இல்லை. கிராமப்புறங்களிலுள்ள மக்கள் வேப்பங்குச்சி, ஆலமர விழுது, நாயுருவி வேர் போன்றவற்றைப் பயன்படுத்து கிறார்கள். நகரத்தில் இருக்கிற நாம்தான் பல் வியாதியால் கஷ்டப்படு கிறோம். கிராமத்திலுள்ளவர்களுக்குப் பல் வியாதி வருவதில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கிராமங்களில் செங்கல்பொடியால் பல் துலக்குவதால் பல் வியாதி வருகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பல் வியாதிகள் வருவதற்குக் காரணம் பல் வியாதி (சிரிப்பு).

**திரு. த. சந்தோஷம்:** நான் அறிந்தவரையில், கிராமங்களில் அதிகமாகச் செங்கல் பொடியைப் பயன்படுத்துவதில்லை. நான் மேலே சொல்லியவாறு ஏதாவது ஒரு குச்சியைத்தான் பயன்படுத்துகிறார்கள். கிராமங்களில் உள்ள மக்களுடைய பற்கள் சுகாதாரமானவை என்பது மறுக்க முடியாதது. நகரங்களில் வாழ்பவர்களுடைய பற்கள்தான் வியாதியுடைய பற்களாக இருக்கின்றன. இதற்காக என்று அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்து . . .

**திரு. எஸ். ஆர். இராதா:** அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொல்வது அரசாங்கத்தைக் கேள்விக் குறி கேட்பதாக ஆகிறது. உறுப்பினர் அவர்கள் திறமையான ஒரு வழக்கறிஞர். சாதாரண ஏழையெளிய கிராமப்புற மக்கள் எவ்வளவு பேர் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான கணக்கு ஆஸ்பத்திரிகளில் இருக்கிறது. ஆனால் கிராமத்தில் இருக்கிற ஏழையெளியவர்களுடைய பற்கள் எல்லாம் நன்றாக இருக்கிறது, நகரத்தில் இருப்பவர்களுடைய பற்கள் வியாதியுடையதாக இருக்கிறது என்றெல்லாம் உறுப்பினர் அவர்கள் வாதாடக்கூடாது.

**திரு. த. சந்தோஷம்:** நான் போய் ஆஸ்பத்திரியில் பார்க்கவில்லை. அப்படி வாதாடக்கூடாது என்று உறுப்பினர் சொன்னார். நகரத்து மக்களுடைய பற்களில்தான் வியாதி இருக்கிறது. கிராமத்து மக்களுக்குப் பல் வியாதி வந்ததாக நான் அறிந்தவரையில் தெரியவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** பல் வியாதி வருகிறதோ இல்லையோ சில குடும்பங்களில் 14 வயதுக்குள் எல்லா பல்லையும் இழந்து விடுகிறார்கள். அதற்கு என்ன விமோசனம்?

**திரு. த. சந்தோஷம்:** அவர்களுக்கும் இதைக் கொடுப்பார்களோ என்னவோ? இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு என்று ஊழியர்கள், அதிகாரிகள், காண்டிராக்டர்கள் எல்லாம் போட வேண்டியிருக்கும். அதிலே எவ்வளவோ மோசடி, ஊழல் எல்லாம் வரலாம். இது அநாவசியமான முயற்சி. கல்வியைப்பற்றி இதிலே 70–77 பத்திகளில் வருகிறது. எவ்வளவு தான் ஆசிரியர்களைப் பற்றிச் சொல்லியும்கூட, ஆசிரியர்களைப் பற்றி ஒரு வார்த்தைகூட வரவில்லை. ஆசிரியர்களை நல்ல முறையில் சிறப்பிப்பதாக இருந்தால்தான், கல்வியின் தரம் உயரும். அவர்கள் எத்தனையோ கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கூட்டம் போடுகிறார்கள், போராட்டம் நடத்துகிறார்கள், கோரிக்கைகளை வைக்கிறார்கள், அமைச்சர்களிடம் கேட்கிறார்கள். இருந்தும்கூட அவர்களைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஒன்றிரண்டு கோரிக்கைகளையாவது ஏற்றிருக்கலாம்,





பட்டதாரி ஆசிரியர்களுடைய சம்பளத்தை 450 ரூபாயிலிருந்து 525 ஆக மாற்ற வேண்டுமென்றும், பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு இரண்டு சிறப்பு ஊதிய உயர்வு (இன்கிரிமெண்ட்) கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுக்க வேண்டும். இதையாவது அரசு ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆசிரியர்கள்பால் இந்த அரசுக்கு அனுதாபம் இருக்கிறது என்று காட்ட உதவியாக அது இருந்திருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, ஒரே ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறேன். என்ஜினியரிங் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த 2 மாணவர்கள் கொலை பற்றியது. அந்த வழக்கை நான் நடத்திக்கொண்டிருக்கிறேன். அது நீதிமன்றத்தில் இருப்பதால், அதற்குள் நான் போகவில்லை. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி நடந்துகொண்டிருக்கும்போதே, ஒருவர் அரிவாளுடன் மாணவர்களை வெட்ட நுழைந்திருக்கிறார், அதைத் தடுத்த ஆசிரியரை வெட்ட முயற்சி செய்திருக்கிறார். மதுரை சட்டக் கல்லூரியிலே கலவரம் நடந்திருக்கிறது. சென்னை சட்டக் கல்லூரியிலும் தகராறு நடந்திருக்கிறது. இதெல்லாம் நடக்க முக்கிய காரணம் யூனியன் எலெக்ஷன் நடப்பதுதான். யூனியன் எலெக்ஷன் தேவையே இல்லை என்கிற ஒரு முடிவை அரசு எடுக்கலாம். அதற்குப் பதிலாக கிளாஸ் ரெப்ரசென்டேட்டிவ்ஸ்—பர்ஸ்ட் இயர் பி.ஏ. (எக்கனாமிக்ஸ்), அதுபோல் சயன்ஸ் சப்ஜெக்ட், இப்படி எந்த சப்ஜெக்டில் யார் அதிகமான மதிப்பெண்கள் பெறுகிறார்களோ அவர்களை பிரதிநிதிகளாகப் போடலாம். இந்த முறையில் தலைவர் மற்றும் செயலாளர் போன்றவர்களைத் தேர்ந்தெடுத்தால், மாணவர்களின் கல்வியும் கெடாது, கலவரமும் வராது. நிச்சயமாக ஆரம்பத்தில் மாணவர்களிடையே இதற்கு எதிர்ப்பு இருக்கும். வேலை நிறுத்தம்கூட செய்வார்கள். போகப்போக சரியாகப் போய்விடும். அதைச் செய்வது கல்விக்கு நல்லது செய்ததாகவும் மாணவர்களுக்கு நல்லது செய்ததாகவும் இருக்கும். அதை மன உறுதியோடு செயல்படுத்த வேண்டும்.

இறுதியாக சட்டக் கல்வி பற்றி ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். அதை நான் சொல்லவில்லையெனில், என்னுடைய கடமையிலிருந்து நான் தவறியவனாவேன். இப்போது கல்லூரிகளில் சட்டப் படிப்பு அதிகமாக நடப்பதில்லை. ஆசிரியர் வந்தால் மாணவர்கள் வருவதில்லை. மாணவர்கள் வந்தால் ஆசிரியர் வருவதில்லை. நாங்கள் படிக்கும்போது சென்னையில் மட்டும் ஒரே ஒரு சட்டக் கல்லூரி இருந்தது. கேரளா, கர்நாடகம், ஆந்திரா போன்ற எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே ஒரு சட்டக் கல்லூரி இருந்தது.

[திரு. த. சந்தோஷம்] [1982 மார்ச் 2

இப்போது தமிழ் நாட்டுக்கும் பாண்டிச்சேரிக்கும் சேர்த்து 6 சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கானவர்கள் இப்போது தேறி வருகிறார்கள். அவர்களுக்கு தேர்ச்சி பெற்ற உடனே வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. இத்தகையவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறேன். சட்டக் கல்வி படித்தவர்கள் விஷயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும். சட்டக் கல்லூரிகளும் அசட்டையாக இருந்தால், சமூக விரோதிகளை உருவாக்கும் கூடமாக சட்டக் கல்லூரிகள் மாறிவிடும். சட்டக் கல்வி படித்தவர்களை மாஜிஸ்ட்ரேட்களாக, டெப்யூட்டி ரெஜிஸ்டிரார் ஆப் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிஸ், தாசில்தார் போன்ற பதவிகளில் நியமிக்கலாம். சில தாசில்தார்கள், டெப்யூட்டி கலெக்டர்ஸ் போன்றவர்கள் எக்சிகியூட்டிவ் மேஜிஸ்டிரேட்களாக இருக்கிறார்கள். அங்கெல்லாம் சட்டம் படித்தவர்கள் இருக்கலாம் என்று அரசு சொல்லலாம். அதுபோல் லேபர் கன்சிலியேசன் ஆபீசர்ஸ் போன்ற பதவிக்கு சட்டம் படித்தவர்களைப் போடலாம். அவர்களுக்கு இப்படி வாய்ப்பு கொடுத்தால், நன்றாக இருக்கும். 50 ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு மேல் பத்திரங்களைப் பதிவு செய்வதாக இருந்தால், இன்கம் டாக்ஸ் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வேண்டுமென்று சொல்கிறோம். அதுபோல் ஒரு லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள பத்திரங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றால், வழக்கறிஞருடைய சான்று இருக்க வேண்டுமென்று வழிவகை செய்தால் கூட, நல்லது. அவர்கள் சட்ட நுணுக்கம் படித்தவர்களாக இருப்பதால், இப்பொழுது ஏற்பட்டுக்கொண்டிருக்கிற பல வியாக்கியானங்கள் வராது. ஏழையெளியவர்கள் எல்லாம் ஆலமரத்தின் அடியிலிருந்துகொண்டு எழுதுகின்றவர்களை நம்பி எழுதுவதால், பின்னால் அதில் பிழை ஏற்பட்டு ஆயிரக்கணக்கில் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று செலவிட வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ததாகும் என்பதோடு மட்டுமல்லாமல் சட்டம் படித்தவர்கள் சமுதாயத்திற்கு உபயோககரமான வேலைகளைச் செய்தார்கள் என்கிற பெருமைக்கும் ஆளாவார்கள்.

அடுத்து, சட்டம் ஒழுங்குபற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றை நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய மாநிலம் நன்றாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொல்வது திருப்தி அளிக்கக்கூடிய அணுகுமுறை அல்ல. தமிழ் நாட்டில் இதற்கு முன்பு சட்டம் ஒழுங்கு எப்படி இருந்தது, இப்போது எப்படி இருக்கிறது என்று ஒப்பிட்டுப் பார்த்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். மற்ற வட மாநிலங்களில் குறிப்பாக டெல்லி, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் நடை-



1982 மார்ச் 2] [திரு. த. சந்தோஷம்]

பெறுகிற பஞ்சமா பாவங்களை, பயங்கரமான பாதகங்களை எல்லாம் பார்த்து, அதோடு நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஒப்பிடுவது, அந்த வகையில் திருப்தி அடைவது சரியில்லை. இப்போது மாண்புமிகு செய்தி-சுற்றுலா-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சுற்றுலாத் துறை விளம்பரப்படுத்தும்போது "டிரான்குயில் தமிழ் நாடு" என்று விளம்பரப்படுத்துகிறார்கள். தமிழ் நாடு அமைதிக்கும் சட்டம் ஒழுங்கிற்கும் பெயர் பெற்ற நாடு என்று சொல்கிறார்கள். ஆனால் இன்றையதினம் அப்படிப்பட்ட ஒரு அமைதி இருக்கிறதா? நேற்று கூட தர்மபுரியில் ஒரு பயங்கர கொள்ளை நடந்திருக்கிறது. அதுபோல் தூத்துக்குடியில் ஒரு கொள்ளை நடந்திருக்கிறது. "ஆர்கனைஸ்ட் கேங்ஸ்டரிசம்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதிலே அரசு மற்ற மாநிலங்களைப் பார்த்து, திருப்தி அடைந்து விடாமல் காவல் துறையை முடுக்கிவிட்டு நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு தந்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-40)

### 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

100. Notification issued with G.O. Ms. No. 1490, Housing and Urban Development, dated the 14th November 1980 regarding approval of the detailed Development plan for C.I.T. Nagar Colony area Map No. 4. [Laid on the table of the House under Section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

101. Notification issued with G.O. Ms. 1423, Commercial Taxes and Religious Endowments, dated the 29th December 1981 regarding an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II(1)|CTRE|239(*b*)|81, dated the 29th April 1981 published at pages 1—2 of Part II—Section I of the Tamil Nadu Government Gazette, Extraordinary, dated the 29th April 1981. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)|].

102. Notification issued with G.O. Ps. No. 1030, Commercial Taxes and Religious Endowments, dated the 16th September 1981 regarding an amendment to the Revenue Department Notification II-i No. 2437 of 1962, dated the 22nd May 1962, published at pages 982—983 of Part II—Section I of the Tamil Nadu Government Gazette, dated the 30th May 1962. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).|]

103. Notification issued with G.O. P. No. 1241, Commercial Taxes and Religious Endowments, dated the 6th November 1981 in regard to exemption in respect of the tax payable by any dealer on the sales of medicines to the free clinic run by the Periyar Self-Respect Propaganda Institution. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)|].

104. Notification issued with G.O.P. No. 1216, Commercial Taxes and Religious Endowments, dated the 30th October 1981 regarding an amendment to the Revenue Department Notification SRO No. A. 3240 of 1960, dated the 22nd April 1960, published (at page 797) of Part I of the Tamil Nadu Government Gazette,



dated the 11th May 1960. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)|].

105. Fifteenth Annual Report of the Tamil Nadu Small Industries Corporation Limited (TANSI) for 1979—80 with the Audit Report and supplementary comments of the Comptroller and Auditor General of India (Tamil and English): [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

B. *Reports, Notifications and Other Papers.*

Nil

## இணைப்பு I.

(304 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கடந்த ஆண்டு மாநிலத்தின் பெரும் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டு பொது விநியோக முறையின் கீழ் மக்கள் வாங்கும் அரிசியின் அளவு அதிகரித்தது. நாம் மத்திய தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீடு பெற்ற போதும், இரயில்வே வேகன்கள் சரிவர கிடைக்காத காரணத்தால், அந்த அரிசியை இந்திய உணவுக் கழகத்தால் முழுமையாக கொடுக்க முடியவில்லை. எனவே பொது வினியோக முறையில் விற்பனை செய்வதற்கான அரிசியைப் பெற மாநிலத்தில் கொள்முதலை தீவிரப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேலும் மத்திய அரசும் வர்த்தகர் லெவியையும், ஆலை அதிபர்கள் லெவியையும் விதிக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தது. எனவே 20—1—1981 முதல் தமிழ் நாட்டில் மொத்த வர்த்தகர்கள் முதல் முதலில் நெல்/அரிசி வாங்கும்போது 40 சதவிகிதம் அரசுக்கு லெவியாக தரவேண்டும் என ஆணையிடப்பட்டது. பின்னர் 1—10—1981 முதல் இந்த லெவி 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

பல மொத்த வணிகர்கள் சரிவர கணக்கு காட்டாமல் லெவி ஏய்ப்பு செய்வதாக புகார்கள் வந்ததால் மொத்த வணிகர்களின் கணக்குகள் தீவிரமாக ஆய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு தீவிரமாக ஆய்வு செய்வதை மொத்த வர்த்தகர்கள் பலர் எதிர்க்கின்றனர். மொத்த வர்த்தகர்கள் தங்கள் கணக்குகளை சரியாக வைத்துக்கொண்டு அரசுக்கு சேரவேண்டிய லெவியை ஒழுங்காக செலுத்தியிருந்தால் கணக்கு காட்டுவதற்கு அச்சப்படத் தேவையில்லை. அவர்கள் வைத்திருக்கும் நெல்/அரிசிக்கு ஏற்கனவே லெவி கொடுக்கப்பட்டு விட்டது என்பதை நிரூபித்தாலும், வெளி மாநிலங்களிலிருந்து வந்தது என்பதை நிரூபித்தாலும் அவற்றிற்கு லெவியினின்றும் விலக்கு உண்டு.

மொத்த வியாபாரிகளின் கணக்குகளை லெவி அமுலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆய்வு செய்வது அதிகாரிகளின் கடமையாகும். லெவி அமுலில் இருக்கும்போது இக்கடமை இன்னும் முக்கியமாகிறது. இந்த



நிலையில் மொத்த வர்த்தகர்கள் கணக்கு காண்பிப்பதை ஏன் தவிர்க்க வேண்டும் என்பதும், அதை எதிர்த்து ஏன் கடைகளை மூடவேண்டும் என்பதும் புரியவில்லை. வர்த்தகர்கள் கடையடைப்பு செய்வதில் நியாயம் ஏதும் இல்லை. மக்கள் பதட்டம் அடையவும் தேவை இல்லை.

மேலும் லெவி கொள்கையால் விவசாயிகள் பாதிக்கப்பட வாய்ப்பு இல்லை. விவசாயிகள் தனியாருக்கு விற்பனை செய்வதை தடுப்பதில்லை. வியாபாரிகள் தான் லெவி தரவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகள் விற்க முன்வரும் நெல் முழுவதையும் வாங்க அரசு தயாராக உள்ளது.

லெவி தராமல் ஏமாற்றப் பார்க்கும் வியாபாரிகளின் கணக்குகள் கவனமாக சோதிக்கப்படுவதையும், சட்டத்திற்குப் புறம்பாக நெல் அல்லது அரிசி கடத்திச் செல்லும் லாரிகளை சோதனை செய்வதையும் விரும்பாத சிலர்தான் விவசாயிகள் பாதிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.

## இணைப்பு II.

0 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்'றிப்பைக் காண்க).

கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம் இவற்றை செலுத்தாமைக்காக 29—1—1982 அன்று 296 மாணவர்களைக் கல்லூரிப் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கியதாகவும் இவர்களுள் ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்புப் பிள்ளைகளும் அடங்குவர் எனவும் நாமக்கல் அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். இந்த ஆதி திராவிட, பிற்பட்டோர் வகுப்புப் பிள்ளைகள் விதிகளின்படி பெற்றிருக்க வேண்டிய 90 விழுக்காடு வருகைப் பதிவு பெறாதவர்களாதலால் கட்டணச் சலுகை மற்றும் உதவித் தொகை பெறும் தகுதியற்றவர்களாகியுள்ளனர், கல்லூரி முதல்வரின் 9—2—1982 நாளைய அறிக்கையின்படி 135 மாணவர்கள் கட்டணம் செலுத்தி விட்டனர் எனவும், 27 மாணவர்களுக்கு முழுக் கட்டணச் சலுகை அனுமதிக்கப்பட்டுவிட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 134 மாணவர்களும் தாங்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை விரைவில் செலுத்திவிடுவார்கள் என நம்புவதாய் நாமக்கல் கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1982 மார்ச் 3.

மாசி 19, துன்மதி, திருவள்ளுவராண்டு 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில், மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### தமிழில் அர்ச்சனை.

* 137 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழகத்தில் இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்தின்கீழ் உள்ள கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் கோயில்கள் எத்தனை?

(இ) அனைத்துக் கோவில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய அரசு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர விடை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, ஆண்டவன் ஒருவன் இருப்பது உண்மையானால், ஆண்டவனுக்கு அனைத்து மொழிகளும் தெரிந் திருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்வது உண்மையானால், தமிழிலே அர்ச்சனை செய்வதிலே தடை இருக்காது. இப்போது எட்டு கோயில்களில் அர்ச்சனை செய்ய அனுமதித்திருப்பதாக இந்த அறிக்கையில் விவரம் இருக்கிறது. அதிலே கூட, தமிழிலே அர்ச்சனை செய்யப்படுவது சம்பந்தமாக, 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்று அறிவிப்புப் பலகை இருப்பதை 'தமிழிலே தான் அர்ச்சனை செய்யப்படும்' என்று வைத்து, விரும்பினால் 'வடமொழியிலேயும் அர்ச்சனை செய்யலாம்' என்று மாற்றி, அனைத்துக் கோயில்களிலும் தமிழிலே தான் அர்ச்சனை செய்யும் நிலைமையை இந்த அரசு உருவாக்குமா?

---

@ 455 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது

[1982 மார்ச் 3

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : எட்டு கோயில்களில் மாத்திரம் என்ற அளவில் ஆணையிடப்படவில்லை. குறிப்பாக பெரிய ஆலயங்கள் என்ற நிலையிலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரும் ஆலயங்களில் இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் இந்தப் பட்டியல் தரப்பட்டிருக்கிறது. பொதுவாக எல்லா ஆலயங்களிலும் தமிழிலேயும் அர்ச்சனை செய்யப்படும் என்ற விளம்பரப் பலகை வைக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. தமிழிலே அர்ச்சனைகளைச் செய்யும் வகையில் அர்ச்சகர்களுக்கு அர்ச்சனை நூல்களை வழங்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, ' தமிழிலே மட்டும் தான் அர்ச்சனை செய்யப்படும் ' என்று 1974 ஆம் ஆண்டு ஒரு சுற்றறிக்கை அனுப்பியதன் விளைவாகத்தான் இப்போது இந்த முயற்சிக்கே ஒரு பெரிய தடையை உச்ச நீதிமன்றம் ஏற்படுத்தி விட்டது. 1961 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த முறை கொண்டுவரப்பட்டது. அப்போதிருந்தே தமிழில் அர்ச்சனை செய்யப்படலாம் என்ற முறை வந்தது. அதற்கான முறையான நடவடிக்கைகள் நடந்துகொண்டு வரும்போது, 1974 ஆம் ஆண்டு மதுரை துணை ஆணையர் அவர்கள் தமிழில் தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பியதன் விளைவாக உச்ச நீதிமன்றத்திற்கு பக்தர்கள் தான் சென்றார்கள். அவர்கள் சென்றதன் விளைவாக உச்ச நீதிமன்றம் அத்தகைய ஆணையைத் திரும்பப்பெற வேண்டும், அப்படி ஆணையிடக் கூடாது, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில் இதுவரை எந்த முறைகளில் அர்ச்சனை நடைபெற்றுவருகிறதோ அந்த முறையிலே தான் நடைபெற வேண்டும், அந்த முறைகளைத் தான் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லி, அந்த வழக்கு இப்போது நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்கின் முடிவு இன்னும் தெரியவில்லை. இருந்தாலும் பக்தர்கள் எங்களுக்குத் தமிழில் தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று கேட்டால், அவர்களுக்கு தமிழிலேதான் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று அதற்கான முறைகள் பழக்கத்திலே இப்போது அமுல் படுத்தப்பட்டு வருகின்றன. பக்தர்கள், வணங்கப் போகிறவர்கள் தான் தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டும் என்று தங்களின் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். ஆனால், மற்றவர்கள் அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு வாதாட வருகின்றபோது தான், நாம் விரும்பாத தேவைப்படாத சில பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, அறநிலையத் துறையிலிருந்து அல்லது மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் பக்தர்களுக்கு இந்த அறிவுரைகளை வழங்கி, அர்ச்சனை செய்யப் போகிறவர்களை தமிழிலே அர்ச்சனை செய்யுங்கள் என்று கேட்கச் சொல்லி, அப்படிக் கேட்கும் அந்த உணர்வை வளர்த்தால் நல்லது.



1982 மார்ச் 3]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 1974-லேயிருந்து எட்டு ஆண்டுகளாக வழக்கு மன்றத்திலே இந்த வழக்கு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வழக்கு விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்ற வகையிலே அரசு முனைப்பான நடவடிக்கை ஏதேனும் எடுத்திருக்கிறதா ? மேலும், தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கேட்டால், அதற்குரிய முன்னேற்பாடுகள் அனைத்துக் கோயில்களிலும் இப்போது செய்யப்பட்டிருக் கின்றனவா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நான் முதலிலேயே சொன்னேன். எல்லாக் கோயில்களிலும் தமிழிலே அர்ச்சனை செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கான பயிற்சி அர்ச்சகர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற வகையிலே ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு தமிழிலே அர்ச்சனைக்குரிய நூல்களைத் தரும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது சம்பந்தமாக வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இப்போது இருக்கிறது. அரசின் சார்பில் 1975 ஆம் ஆண்டு முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. ஏன் இவ்வளவு ஆண்டுகள் தேங்கிக் கிடக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு அங்கே எத்தனை வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்ற விவரம் வந்திருக்கிறது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 22 ஆயிரம் வழக்குகள்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : 22 ஆயிரம் வழக்குகள் தேங்கியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அந்த வழக்குகளில் இதுவும் ஒன்று. ஆகவே, அது எப்போது எப்படி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை எப்படிச் சொல்ல முடியும் ?

திரு. ம. சங்கரலிங்கம் : ஆலயங்களுக்கு மத நம்பிக்கை உள்ளவர்கள் தான் செல்கிறார்கள். அவர்கள் வழிபாடு செய்கிறபோது, அவர்களின் உள்ளம் நெகிழும் வகையிலே அவர்களுடைய தாய் மொழிகளில் வழிபாடுகள் நடந்தால் தான், பக்தர்களின் பக்தி வளரும். ஆலயங்களில் பொதுவாக இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று பொதுவாக குறிப்பிட்ட காலங்களில் முறையாகச் செய்யும் அர்ச்சனை. அதில் எல்லோரும் வந்து கலந்து கொள்கிறார்கள். இன்னொன்று தனியாக வழிபாடு நடத்துவது. அப்படித் தனியாக நடத்துவதிலே பக்தர்களின் விருப்பத்தைத் தெரிவிக்கலாம். அப்படி நடத்தப்படும் வழிபாடுகளை, அவர்கள் கேட்டால், தாய் மொழியிலே நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதற்கேற்ற வழியில் அர்ச்சனை செய்பவர் களுக்கு தக்க பயிற்சி அளித்து, அவர்கள் பாடுகின்ற பாட்டுகளில் அங்கே கூடியிருப்பவர்கள் உள்ளம் நெகிழும் வகையில், அந்த அர்ச்சகர்கள் பக்திப் பாடல்களை உச்சரிக்கத் தக்க வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பொது அர்ச்சனை செய்யப்படும்போதோ, தனியாக விசேஷக் கட்டணத்தைச் செலுத்தி செய்யப்படும் அர்ச்சனையின்போதோ, அவைகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தனியாகப் பிரிக்க முடியாது. ஆலய வழிபாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் ஒன்று. அந்த முறையை கோடிக்கணக்கான பக்தர்கள் ஏற்றுக்கொண்டு தான் ஆலயங்களுக்குச் செல்கிறார்கள். தமிழ் வளர வேண்டும், தமிழ் எல்லாத் துறைகளிலும் வளர வேண்டும் என்று விரும்புகின்றபோது, நாம் வணங்குகின்ற ஆண்டவன் முன்னாலே தமிழ் மதிக்கப்பட வேண்டாமா என்று கருதுகிற அந்தக் கருத்து மிகவும் முக்கியமானது தான். ஆனால் இந்த உணர்வு யாருக்கு வரவேண்டும் என்று சொன்னால், ஆண்டவனை வழிபடச் செல்பவர்களுக்குத் தான் வரவேண்டும். அவர்கள் இதை எழுப்பினால், அங்கே அர்ச்சகர்களிடத்திலே தனியாகப் பணம் கொடுத்து அர்ச்சனை செய்பவர்கள் கூட தமிழிலே செய்யுங்கள் என்று கேட்கும் நிலை இப்போது பரவலாக இல்லை. அப்படிக் கேட்கும் அந்த உணர்வு வர வேண்டும். அது இல்லாத சூழ்நிலையிலேதான் நீதிமன்றம் இப்போது தடை விதித்திருக்கிறது. இதுவரை இருக்கும் நிலைமைகளை மாற்றும் வகையிலே அரசு ஆணை பிறப்பிக்கக்கூடாது என்ற வகையிலே சட்டப்படி நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :-** பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் ஆகிய நாலும் கொடுத்து சங்கத் தமிழ் மூன்றையும் தா என்று கேட்டார்கள். ஆகவே, தமிழின் பெருமையை உணர்ந்து தமிழ் எம்.ஏ. படித்தவர்களை அர்ச்சகர்களாக நியமித்து, தமிழில் அர்ச்சனையை ஊக்குவிக்க அரசு முயற்சி எடுக்குமா ?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தமிழில் அர்ச்சனை செய்யும் பழக்கம் முழுமையாக வருகிற சூழ்நிலையில், தமிழ் எம்.ஏ. படித்தவர்கள் இயற்கையாகவே அந்த வேலைக்கு அல்லது அந்தத் தகுதிக்கு வந்து விடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** அர்ச்சகர்களே இல்லாமல் வழிபாட்டிற்காகப் போகும் பக்தர்களே நேரிடையாக வழிபாடு செய்து கொள்வதற்கான ஏற்பாட்டை அரசு செய்து தருவதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்து மதத்தில்தான் இப்படிப்பட்ட பல்வேறு விதமான வழிபாட்டு முறைகள் இருக்கின்றன. வடக்கே இருக்கும் புகழ்பெற்ற காசிக்குப் போகிற பக்தர்கள் கருவறைக்குள்ளே போய் தொட்டு





வணங்கும் பழக்கம் இருக்கிறது. பல இடங்களில், அதிலும் குறிப்பாகத் தமிழகத்திலும், தென்னகத்திலும் பக்தர்கள் ஓரளவுக்குத்தான் போகலாம் என்ற வரையறை விதிக்கப்பட்டு, அத்தகைய முறைகள் அனைவராலும் பின்பற்றப்படுகின்றன. வேலூருக்குப் பக்கத்தில் அமைந்துள்ள இரத்தினகிரி ஆலயத்தில் புகழ்பெற்று வருகிற சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பாலமுருகன் அடிமை அவர்களால் கோயிலுக்கு வருகிற பக்தர்கள், கர்ப்பகிருகத்திற்குள் சென்று சிலையைத் தொட்டு வணங்கும் முறை உருவாக்கப்பட்டு அது பின்பற்றப்படுகிறது. அதிலே பெரிய வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் நீண்டகாலமாகப் பழக்கத்திலிருந்து வருகிற சில உணர்வுகளின் அடிப்படையில் இருக்கிற பழக்கங்களை நாம் மாற்றுகிறபோது அல்லது மாற்ற முயற்சிக்கிறபோது, மிகுந்த எச்சரிக்கையோடு இவைகளைக் கவனத்தில் கொண்டு ஈடுபட வேண்டியிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தமிழில் அர்ச்சனை செய்வதற்கு ஏற்ற வகையில், முறையான பயிற்சிமுறை ஏதேனும் இருக்கிறதா ? அத்தகைய பயிற்சி முறையின் அடிப்படையில் தமிழில் அர்ச்சனை செய்பவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அரசு அல்லது அறநிலையத் துறை ஏதேனும் ஏற்பாடு செய்திருக்கிறதா ? ஆலயங்களைச் சுற்றியிருக்கும் சுற்றுப்புறங்களில் ஒலி பெருக்கி மூலம் அந்தந்த ஆலயங்களின் மதநம்பிக்கைக்கு ஏற்ப இசை வழங்குவது அல்லது மத நூல்களிலிருந்து பாடல்களை எடுத்து இசையோடு இசைப்பது என்ற பழக்கம் இருக்கிறது. அதுபோன்ற நிலைமைகளை முழுமையாகத் தமிழிலேயே கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தமிழில் அர்ச்சனை வேண்டும் என்கிற உணர்வு தோன்றியவுடனே, திருமுறை அர்ச்சனை என்கிற பெயரில் தேவாரப் பாடல்கள், குறிப்பாகத் திருக்கைலாயப் பதிகம், மற்றும் திருத்தாண்டகம் போன்ற பல பாடல்கள் மூலம் அர்ச்சனை செய்யப்பட்டு வருகின்றது. அவைகள் அனைத்தும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லா அர்ச்சகர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வைணவத்திற்கு இருக்கும் மிகப் பெரிய சிறப்பை நான் தெரிவிக்க விரும்புகிறேன். சைவத்தை விட வைணவத்தில்தான் தமிழுக்கு மிகப் பெரிய முன்னுரிமை தரப்பட்டிருக்கிறது. பாசுரங்கள் எல்லாம் சிறந்த தமிழ் மொழியில்தான் பாடப்பட்டிருக்கின்றன. நாம் கேட்டாலும், கேட்காவிட்டாலும் அங்கே முதலில் தமிழில்தான் பாடல்களைப் பாடுகிறார்கள். ஆகவே, அந்த உணர்வை வளர்ப்பதற்கு, அந்த ஆலயத்திற்குப் போகாதவர்கள் எடுக்கிற

முயற்சிகளைவிட, ஆண்டவன் இருக்கிறானா இல்லையா என்ற சந்தேகத்தைத் தோற்றுவிப்பவர்களைவிட, சந்தேகத்தை எழுப்புகிறவர்களைவிட, ஆண்டவன் இருந்தால், அவனுக்கு மொழி தெரியுமா தெரியாதா என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறவர்களைவிட, ஆண்டவன் இருக்கிறான், அவனை நம்ப வேண்டும், ஆண்டவனை நம்பி வணங்கினால்தான் நமக்கு நல்லது கிடைக்கும் என்று நம்பிப் போகிற கோடிக்கணக்கான பக்தர்கள் அத்தகைய உணர்வைப் பெற வேண்டும். அவர்கள் அந்த உணர்வைப் பெறுவதற்கு வெளியில் இருப்பவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இதில் முழுமையான, பலன் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி :** தமிழர்களின் திருமணத்திலும் தமிழிலேயே மந்திரங்கள் ஓதப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இது ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படுவது குறித்த கேள்வியாகும். திருமணங்களில் மந்திரம் ஓதுவது என்பது தனிப்பட்ட விவகாரமாகும். திருமணத்திற்காக ஐயர் அல்லது புரோகிதரை அழைக்கும்போது, தமிழில் மந்திரம் தெரிந்தவராகப் பார்த்து அழைக்கலாம். அப்படித் தெரியாது என்று அவர்கள் சொன்னால், தமிழில் தெரிந்தவர்களைக் கொண்டு நடத்தலாம். எனவே திருமணங்களைப் பொறுத்த வரையில் அங்கே அரசாங்கமும் நுழைய முடியாது, அறநிலையத் துறையும் நுழைய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மகாகவி சுப்ரமணிய பாரதியார்

* 138 **வினா —திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மகாகவி சுப்ரமணிய பாரதியார் குடும்பத்தினர் யாருக்காவது அரசு பண உதவி அளித்துள்ளதா ?

(இ) இல்லை எனில், வேறு எந்த வகையிலாவது அவரது குடும்பத்தினரை அரசு கௌரவித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) இல்லை.

(இ) மகாகவி பாரதியாரின் சகோதரர் திரு. சி. விசுவநாதன், அவரது பேத்தி திருமதி லலிதா பாரதி ஆகியோர் பாரதியார் நூற்றாண்டு விழா தொடக்க விழாவின்போது கௌரவிக்கப்பட்டனர். நூற்றாண்டு விழா தொடர்பான குழுக்களில், மேற்சொன்ன இருவரும் உறுப்பினர்களாகப் பணியாற்றுகிறார்கள்.





**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** பாரதியாரின் வம்சாவளியில் நெருங்கிய உறவினர்கள் என்ற முறையில் இப்போது யார் யார் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை இருந்தாலும் அந்தக் குடும்பத்தோடு தொடர்பு கொண்டவர்களெல்லாம் இந்த நூற்றாண்டு விழாவில் பங்கேற்றிருக்கிறார்கள். சிலர் வர முடியவில்லை, பின்னாலே வந்து பங்கேற்கிறோம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். முழுமையான விவரம் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பாரதியாரைப்பற்றி, அவருடைய வாழ்க்கையில் உள்ள சில சில சம்பவங்களை மட்டுமே இப்போது சில சில சினிமாப் படங்களில் காட்டுகிறார்கள். பாரதியாரின் வாழ்க்கை முழுவதையுமே மக்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளுவதற்கு உதவியாக அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அதை ஒரு செய்திப் படமாக எடுத்து வெளியிட முன்வருவாரா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த வினா பாரதியாரின் குடும்பத்தாரைப்பற்றியதாகும். பாரதியார் என்பதற்காகவே "உலாவ" ஆரம்பித்தால் நேரம் அதிகமாகிவிடும் . . .

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பாரதியாரின் நூற்றாண்டு விழாவைப் பற்றி ஏதேனும் கேள்வி கேட்கப்படுமானால், அதன் தொடர்பாக முழு விவரத்தையும் சேகரித்து நான் இந்த அவைக்கு அளிக்க முடியும். பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுவின் தலைவராக மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்கள்தான் இருக்கிறார்கள். அந்த நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரைகளில் ஒன்று பாரதியாரின் வாழ்க்கையை ஒரு முழு நீளத் திரைப்படமாக எடுக்க வேண்டும் என்பதாகும். அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "முடிந்தால் அதை நானே இயக்குவேன்" என்றும் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொல்வதைப்போல், செய்திப்படமாக எடுத்தால், அது சுவைக்காது. எல்லோரும் அதைப் பார்க்க மாட்டார்கள். செய்திப் படம் என்பது சாதாரணமாக 1,000 அல்லது 2,000 அடிக்கு மேல் இருக்க முடியாது. ஆனால், பாரதியாரின் வாழ்க்கை ஒரு திரைப்படமாக ஆக்குவதற்குரிய அத்தனை சுவைகளையும் கொண்டதாக உள்ள ஒரு அற்புதமான வாழ்க்கையாகும். 39 வயதுக்குள் அவர் வாழ்க்கை முடிந்திருந்தாலும், மிக நீண்டகால வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வரலாற்றைப் போன்றதாகும் அவர் வாழ்க்கை. அவருடைய வாழ்க்கையில் அவை

அனைத்தும் அடங்கி இருக்கின்றன. அவருடைய வாழ்க்கை இந்த நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாறாக அமைந்திருக்கிறது. சமுதாயச் சீர்திருத்தப் புரட்சி வரலாறாகவும் அது அமைந்திருக்கிறது. மொழி வரலாறாகவும் அமைந்திருக்கிறது. ஆகவே எல்லாச் சிறப்புகளும் அவருடைய வாழ்க்கையில் அமைந்திருக்கிற காரணத்தால், அவருடைய வாழ்க்கை ஒரு முழு நீளத் திரைப்படமாக எடுப்பதற்குத் தகுதியுடையது. இந்த அடிப்படையில்தான் நூற்றாண்டு விழாக் குழுவும் பரிந்துரை செய்திருக்கிறது. வேறு சில தனிப் பட்டவர்களும் தாங்களும் எடுக்கப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். எப்படியோ பாரதியின் வாழ்க்கையை விளக்கும் திரைப்படம் எதிர்காலத்தில் வரப் போகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பாரதியாரின் உடன் பிறந்த தம்பியும், அவருடைய பேத்தியான திருமதி லலிதா பாரதியும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாரதியாரின் தேசத் தொண்டு, சமுதாயத் தொண்டு, சமூகத் தொண்டு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அந்தக் குடும்பத்தில் இப்போது இருப்பவர்களில் அவருக்கு மிகவும் நெருங்கிய உறவினர் என்று கருதப்படுகிறவருக்கு "வீர மான்யம்" கொடுத்து சிறப்பு செய்திட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பாரதியாரின் குடும்பத்தைச் சேர்ந்த கொள்ளுப் பேரன் திரு. ராஜ்குமார் அவர்கள் அந்த விழாவில் கலந்துகொண்டு மிகச் சிறந்த இசை நிகழ்ச்சியை வழங்கினார். அதைப்போலவே மற்ற பேத்தி பேரன்களான திருமதி சரோஜினி பாரதி, திரு. ரவிச்சந்திர பாரதி ஆகியோர் அந்த விழாவில் கலந்துகொள்ள இயலாத நிலைமையைத் தெரிவித்திருக் கிறார்கள். மாவட்டங்களில் நடைபெறுகிற வருகிற விழாக்களில் அவர் களெல்லாம் பாராட்டப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமெரிக்காவிலிருந்தும்கூட அவருடைய உறவினர் ஒருவர் பாராட்டு தெரிவித்திருக்கிறார்.

அவர்களுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் ஏதும் இதுவரை வரவில்லை. அப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்து, அரசு அவசியம் எனக் கருதினால், நூற்றாண்டு விழாக் குழுவின் பரிந்துரைக்கும் ஆலோசனைக்கும் அரசு அதை வைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல், அவர்களுக்குப் பட்டயம் வழங்கப்பட வேண்டும் என்பதைப் பொறுத்த வரையில், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களின் தலைமையில் உள்ள நூற்றாண்டு விழாக் குழு இந்தக் கருத்தையும் பரிசீலித்து முடிவெடுக்கு மானால், நூற்றாண்டு விழாவின் இறுதியில் நிறைவு விழாவின்போது அரசு அதையும் மேற்கொண்டு நடத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## சேது சமுத்திரத் திட்டம்.

*** 139 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து மாநில அரசு, மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறதா ?

(இ) மத்திய அரசு பதில் ஏதும் அனுப்பியிருக்கிறதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) மத்திய அரசு, ஐந்து உறுப்பினர் அடங்கிய உயர் மட்டக் குழு ஒன்றினை திரு எச். ஆர். லட்சுமி நாராயணன் தலைமையில் சேது சமுத்திரத் திட்டத்தின் பொருளாதார சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டி அமைத்துள்ளது. மேற்கொண்டு மத்திய அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-50)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நீண்ட காலமாகவே இந்தத் திட்டத்தைக் குறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளும்போதெல்லாம் இது ஆய்வில் இருக்கிறது என்ற பதில்தான் வந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத் தின் முக்கியத்துவத்தை மத்திய அரசு உணரவில்லையா ? அல்லது உணர் கின்ற வகையிலே மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வில்லையா ? தமிழ் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே இருக்கிறார்கள். ஒரு மாநிலத்தினுடைய சில முக்கியமான திட்டங்கள் அங்கே வரும்போது, கட்சி வேறுபாடுகளை அகற்றிவிட்டு, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து மாநிலத்தின் நன்மைக்காக அங்கே போராடுகிறார்கள். அந்த வகையிலே நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பி, அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து நடப்பு ஆண்டிலேயே அத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கை களை தமிழக அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பல முறை நாம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். 1968ஆம் ஆண்டிலிருந்து இது வரை இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, மாநில அரசு வற் புறுத்திக்கொண்டு வருகிறது. முதலில் ஏறத்தாழ 37 கோடி ரூபாய் செலவு

ஆகும் என்று நமக்குக் குறிப்பு கொடுத்தது இன்றைய தினம் 106 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது. இன்னும் ஐந்தாறு ஆண்டுக் காலம் இப்படியே விடுவார்களேயானால், 200 கோடி ரூபாய் ஆகுமோ என்ற அச்சம் இருக்கிறது. இந்தக் கால்வாயை அமைத்தால், ஏறத்தாழ 232 இலட்சம் ரூபாய் நமக்கு வருமானமாகக் கிடைக்கும் என்றும் அதிலே நம்முடைய மின்சார வாரியத்திற்கு மட்டும் ஒரு கோடியே 36 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரும் என்ற கணக்கையும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், ஏறத்தாழ 350 கடல் மைல்கள் மீதமாகும். எனவே இதன் மூலம் எரிபொருள்களை மிச்சப்படுத்தலாம். அதனால் இந்த நாட்டிற்கு நன்மையாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறோம். இப்படி என்னென்ன சாத்தியக்கூறுகளை எடுத்துச் சொல்ல முடியுமோ அத்தனை சாத்தியக்கூறுகளையும் எடுத்துச் சொல்லி, மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும் செய்து தருகிறோம் என்ற வகையிலே நடவடிக்கை எடுப்பதாக நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்தே இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பது தெரிய வருகிறது. அதோடு சேர்ந்து மற்றொரு அபாயமும் ஏற்பட்டு வருகிறது. தமிழ் மாநிலத்தில் வணிகப் போக்குவரத்திற்கு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத்திலே இறக்குமதி, ஏற்றுமதி ஆகின்ற பொருள்களைக் கொண்டு செல்ல அகல இரயில் பாதை இல்லாமல் இருப்பதால் வணிகப் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தை, அவர்கள் பல காரணங்களைச் சொல்லி ஒத்திப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றாலும், வலியுறுத்துவதற்காக அரசாங்கம் ஏதாவது தனி அதிகாரியை நியமித்து அவர் அதையே பொறுப்பாக ஏற்றுக்கொண்டு டில்லியிலேயே தங்கியிருந்து ஓர் உத்தரவு பெறும் வரை அங்கேயே இருக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?... பொதுவாக அரசாங்கத்தின் சார்பில் இப்படி நடத்துவதில்லை. இருந்தாலும் இது போன்ற முக்கியமான திட்டத்திற்காக சில நடவடிக்கைகளை எடுக்கும் அரசு இதற்கு அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அதற்காக ஒரு தனி அதிகாரியைப் போடுவதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. அவர் ஓய்வு பெறும் வரை அதையே செய்து கொண்டிருப்பாரா அல்லது கொண்டு வந்துவிடுவாரா என்ற அச்சம் இருக்கிறது. காரணம், அவ்வளவு பெரிய திட்டமாக இருக்கிறது இது. மத்திய அரசு தங்களுக்குரிய சில சிரமங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்



திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்லியதைப் போல, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கே இருந்தாலும் அவர்களையும், மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லக் கூடிய அளவிற்கு நெருக்கமாக இருக்கக் கூடிய மேலவை உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அனுப்புவதற்கு அரசாங்கம் ஒரு நடவடிக்கையை எடுப்பதற்கு, அதுபற்றி பரிசீலிப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, மதிப்பீடு 37 கோடி ரூபாயாக இருந்தது இப்போது 106 கோடி ரூபாய் என்ற அளவிலே வந்திருக்கிறது என்று சொன்னார்கள். இதிலே மத்திய அரசு தொடர்பான நடவடிக்கை எடுப்பதிலே என்ன சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்களா? ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய உயர்மட்டக் குழுவிற்குத் துணையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், வேறு விவரங்கள் வேண்டுமென்றால் அதைத் தெரிவிப்பதற்கும், அவர்கள் என்ன சங்கடத்தை உணர்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்கும் மாநில அரசினுடைய உயர் அதிகாரி ஒருவரை, அந்தக் குழுவின் துணை புரிகின்ற அலுவலராக (கோவாப்டெட் மெம்பராக) நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** திரு கோயில் பிள்ளை என்ற ஓய்வு பெற்ற அதிகாரி இதிலே பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போதைக்கப்போது சந்தித்து விளக்கங்களைக் கேட்டு மாநில அரசுக்காக வாதாட வேண்டும் என்று சொல்லியிருந்தோம். அவர் சமீப காலத்திலே இயற்கையெய்திவிட்டார்கள். அவருடைய இடத்திலே வேறு ஒரு நபரை நியமிக்க வேண்டும் என்று வரும்போது நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவரை, பணியாற்றிக் கொண்டிருப்பவரையோ அல்லது ஓய்வு பெற்றவரையோ நியமிக்க வேண்டும் என்று கருத்தைத் தெரிவிக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஒரு குழு அமைக்கப்பட்டது குறித்து அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தக் குழு குறிப்பிட்ட கால வரையறைக்குள் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று மத்திய அரசு முடிவு எடுத்திருக்கிறதா? அப்படி வரையறை நிர்ணயிக்கப்படாமல் இருந்தால், மாநில அரசு ஒரு குறிப்பிட்ட காலவரையறை நிர்ணயித்து அதற்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்க மாநில அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இது பெரிய திட்டம். குறிப்பிட்ட காலத்தைச் சுருக்கமாகச் சொல்லி அதற்குள்ளாக அறிக்கை தர வேண்டுமென்று சொல்லும் சாத்தியக்கூறுகள் இல்லை. இருந்தாலும் கூட ஏறத்

தாழ ரூபாய் 37 கோடி ஆகுமென்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்வதற்கு முன்னால் விலையேற்றங்களால் மீண்டும் அதிகமாகச் செலவாகும் என்ற நிலை வரும்போது, அதைப்பற்றி ஆராய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்றைய தினம் ரூ. 106 கோடியாக உயர்ந்திருக்கிறது. ஆகவே, இப்போது அறிக்கையை விரைவாகக் கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அறிக்கை வந்தவுடன், மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால், வேறு பிரச்சினைகளுக்கு வாய்ப்பில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சேதுசமுத்திரத் திட்டத்தால் வருகின்ற இலாபத்தைப்பற்றிச் சொன்னார்கள். இலாபம் மட்டுமல்லாமல், ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா அரசாங்கம் திரிகோணமலை துறைமுகத்தை அமெரிக்க கம்பெனியிடம் தந்ததுபற்றி நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்தியாவின் பாதுகாப்பு குறித்தும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று தெரிவிக்குமா ? அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு. சிவலிங்கம் அவர்களை அந்தக் குழுவில் நியமித்திருப்பது இந்தப் பணி தொடங்குவதற்குரிய அடையாளமா ?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** மாண்புமிகு உறுப்பினர் இப்போது தான் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் சேர்த்து எழுதி நியாயம் இருக்கிறதா என்பதைப்பற்றி அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலிக்கும். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவரை அக்குழுவில் நியமித்திருப்பதிலிருந்தே அதிகமான அக்கறையை நாம் காட்டுகிறோம் என்பது சொல்லாமலே புரிகிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** இந்தக் கால்வாய் திட்டமானது 1908 ஆம் ஆண்டிலேயிருந்து சிந்திக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. 1968ஆம் ஆண்டில் கூட நம்முடைய மாநில அரசு ஆய்வு நடத்தியதாகத் தெரிகிறது. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டால் இரண்டாயிரம் கப்பல்கள் போகுமென்று சொல்கிறார்கள். இதனால் அதிகமான வருவாய் வரும். அதிகமான வருவாய் வருவதால், நம்முடைய மாநிலமும் முதலீடு செய்யலாம். அந்த அடிப்படையிலே மத்திய அரசோடு கூட்டாகச் சேர்ந்து நம்முடைய அரசு முனைந்து செயல்பட, பொறுப்பேற்று, மானியம் பெறும் கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசிக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** தற்போதே நம்முடைய மாநிலத்தில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன. புதிய திட்டங்களை அறிவிக்கும்போது, இப்போதே மூன்றாண்டுக் காலத்திலே ஏன்



எடுக்கவில்லையென்று கேட்கிறார்கள். நிதிநிலைமை காரணமாக, பொறுப்பு ஏற்றுக்கொண்டால், நடைமுறைப்படுத்துவது மிகச் சிக்கலாக இருக்கும். மத்திய அரசாங்கம் இதைச் செய்தேயாக வேண்டும். நாம் கேட்டுக்கொண்டேயிருப்போம். நிச்சயமாகச் செய்யும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது, உங்களுடைய உறுதுணை இருப்பதால்.

*Motor Vehicles Tax Collection Centres.*

* 140 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the Motor Vehicles Tax Collection Centres in Madurai, as in the City of Madras; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆட்டோமொபைல் அசோசியேஷன் ஆஃப் சவுத் இந்தியா என்ற நிறுவனத்தில் நாங்கள் உறுப்பினர்களாக இருந்து, குவார்டர்லி டாக்சைக் கட்டுவதற்காக கொடுத்தனுப்பினால், வரியைக் கட்டிவிட்டு ரசீதை எங்களுக்கு அனுப்புவதற்கு சுமார் 15, 20 நாட்களுக்கு மேலாக ஆகின்றன. ஆனால் 9 ஆம் தேதியிலிருந்தே காவல் துறையினர் கார்களை நிறுத்தி வரி கட்டியாகி விட்டதா என்று சோதனை செய்கிறார்கள். இதற்குக் காரணம் ஒரே ஒரு கஜானாவில்தான் பணம் வாங்குகிறார்கள். அதிகப்படியாகக் கட்டினாலும், 25, 30 பேர்களுக்குத்தான் கட்ட முடிகிறது. கோயம்புத்தூரில் இரண்டு இடங்கள் இருக்கின்றன இந்தப் பணத்தை வாங்க. அதைப் போலவே மதுரையிலும் ஏன் வைக்கக் கூடாது ? மதுரையில் தெற்கு கஜானா ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஏன் இந்தப் பணத்தை வாங்க ஏற்பாடு செய்யக் கூடாது ?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** கருவூலத்திலும், துணைக் கருவூலத்திலும் இப்போது வாங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிளை 8-லும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியன் வங்கி கிளை 11-லும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை இடங்களில் வாங்கும்போது இந்தப் பிரச்சினைகள் வர நியாயம் இல்லை. ஒருவேளை எல்லோரும் ஒரே இடத்திலே கட்ட முயற்சி எடுக்கும்போது, இந்தப்

பிரச்சினை வருகிறதோ என்னவோ தெரியவில்லை. இருந்தாலும் அதிகாரிகளோடு கலந்து எந்த வகையில் தீர்வு காண முடியுமோ அந்த வகையிலே தீர்வு காணப்படும்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் "மினி பஸ்கள்"

* 141 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் "மினி பஸ்" விடப்பட்டுள்ள வழித் தடங்கள் எத்தனை ?

(இ) அவற்றில் தற்போது "மினி பஸ்" ஓடாமல் நிறுத்தப்பட்ட வழித் தடங்கள் எவையேனும் உள்ளனவா ?

(உ) ஆம் எனில், அவை யாவை ?

(எ) மீண்டும் நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் மினி பஸ்களை ஓடவிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ), (இ), (உ) & (எ) தஞ்சாவூர் மாவட்டத்தில் நான்கு வழித்தடங்களில் மினி பஸ்கள் விடப்பட்டுள்ளன. பட்டுக்கோட்டை-அத்திவெட்டி வடக்கு வழித்தடத்தில் மினி பஸ் ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்ட போக்குவரத்து அலுவலர் இந்த வழித்தடத்தில் மீண்டும் மினி பஸ் விட நடவடிக்கை எடுத்து வருகிறார்.

(முற்பகல் 10-00)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த விவரத்திலே, இப்போது பட்டுக்கோட்டை-அத்திவெட்டி வடக்கு வழித்தடத்தில் மினி பஸ் ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திருத்துறைப்பூண்டி-தலைஞாயிறு வழித்தடத்தைப்பற்றி அதிலே சொல்லப் படவில்லை. அப்படி என்றால், அந்தத் தகவல் அமைச்சர் அவர்களுக்கு வரவில்லை என்று நினைக்கிறேன். அது ஆண்டுக்கணக்கில் இருக்கிறது. அந்த வழித்தடத்தில், சித்தாயமூர், புத்தூர், ஆலங்குடி வழியாக இந்த பஸ்-ஐ மீண்டும் ஓட்ட அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அந்த வழித்தடத்திலே பேருந்து ஓடிக் கொண்டிருப்பதாக குறிப்பு வந்திருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வது நிச்சயமாக உண்மையாக இருக்கும். அவர்கள் சொல்கின்ற



தகவலை அடிப்படையாகக் கொண்டு, அங்கு ஓடாமல் இருக்கும் பஸ்-ஐ ஓட்டுவோம். இங்கே சரியான விளக்கம் கொடுக்காததற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஊர் தலைஞாயிறு. என்னுடைய ஊருக்கு வருகின்ற பஸ்-ஐப் பற்றித்தான் சொல்கிறேன். அந்த பஸ் அந்த வழித்தடத்தில் சாலைகள் சரியாக இல்லாததால் நிறுத்தப்பட்டது என்று டி.டி.சி. கூட்டத்தில் என்னிடத்திலே சொல்லப்பட்டது. ஆறு மாதத்தில் சரிப்படுத்துவதாகச் சொன்னார்கள். இப்போது ஒரு ஆண்டுக்காலம் ஆகியும் சரிப்படுத்தவில்லை. இதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நான் சொல்லியது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னது நிச்சயமாக சரியாகத்தான் இருக்கும் என்பது. இப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு சந்தேகம் வந்து மீண்டும் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு சந்தேகம் இல்லை. நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன்.

(டாக்டர் இரா. சனார்த்தனம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்களும் தலைஞாயிறு பகுதி பற்றி கேட்கப்போகிறார்களா ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நான் மினி பஸ் பற்றிக் கேட்க விரும்புகிறேன். மினி பஸ் என்பது பாதி பஸ் அளவு இருக்கிறது. மலேசியாவில் இதைவிட சிறிய பஸ் இருக்கிறது. அதுபோல இங்கேயும் மினி மினி பஸ் விடுகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மினி பஸ்-எ இப்போது சில இடங்களில் சரியாக இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லிவருகிறார்கள். மினி மினி பஸ் விடுவது பற்றி பின்னால் யோசிப்போம்.

### சமூக சேவைக்காக செலவழித்த தொகை.

* 142 வினா.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமூக சேவைக்காக, கிருத்துவ, இஸ்லாமிய மற்றும் ஜைன அறநிலையங்கள் மற்றும் ஆலயங்கள் ஆகியவற்றிடமிருந்து அரசு ஏதேனும் நிதி பெற்று செலவழிக்கின்றதா ?

(இ) ஆம் எனில், ஒரு ஆண்டில் எவ்வளவு தொகை செலவழிக்கப் படுகிறது ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறையிலேயிருந்து லட்சக்கணக்கான ரூபாய்களை பல்வேறு ஆதரவற்றோர் நிறுவனங்களுக்கு, அரசு அல்லது அறநிலையத் துறை செலவிட்டு சமூகத் தொண்டினை, பொதுக் காரியங்களைச் செய்து வருகிறது. அதுபோலவே, கிறிஸ்துவ, முஸ்லீம் மற்றும் ஜைன மதங்களைச் சார்ந்த பல நிறுவனங்களிலே பலர் செய்திருந்தாலும், அரசுத் தரப்பிலே, செய்யப்பட்டு வருகின்ற பல்வேறு சமூக நலப் பணிகளுக்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்று அரசு அவர்களிடம் கோரியிருக்கிறதா ? அதற்கு அரசு முயற்சி எடுக்குமா ? அந்த எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கிருத்துவ, இஸ்லாமிய மற்றும் ஜைன மத அறநிலையங்கள் தானாகவே ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று முன் வந்தால், அதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தாங்களாகவே அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் ஏற்கெனவே அப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்து அறநிலையங்களும் செய்துகொண்டிருக்கின்றன. அது தவிர அரசாங்கமே தங்களுடைய துறையிலேயிருந்து, தங்கள் கண்காணிப்பிலே இருக்கும் சில நிறுவனங்கள் மூலமாக பொதுப் பணிகளை, காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. இந்து அறநிலையத் துறையிலே நிதி ஒதுக்கீடு செய்து, ஆலயங்களுடைய வருவாயிலிருந்து எடுத்து இந்தச் செலவினைச் செய்கிறது. அதுபோல், கிறிஸ்துவ, முஸ்லீம், ஜைன மதத்தின் அறநிலையங்களிலிருந்து நிதி பெற்று சமூக நலப் பணிகளை ஆற்ற அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, அதைத் நான் நான் முன்பே குறிப்பிட்டேன். சமூக நலத் துறையின் வாயிலாக நாங்கள் பல நிறுவனங்களுக்கு நிதி உதவி கொடுத்து வந்து, அதன் மூலமாக உதவிகள் செய்துகொண்டிருக்கிறோம். அதைப்போலவே அறநிலையத் துறையிலே கொடுத்தால், அதையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு, உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கிருத்துவ மதத்தைப்பற்றி நான் சொல்ல முடியும். அங்கே அறநிலையம் என்று ஒன்று கிடையாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சமூக நல சேவைக்காக





என்று ஒரு எண்டோமெண்ட் பண்ட் இருக்கும். மருத்துவமனை என்றால் அதற்கு என்று ஒரு எண்டோமெண்ட் பண்ட் இருக்கும். அனாதை இல்லங்கள் என்றால், அதற்கு என்று ஒரு எண்டோமெண்ட் பண்ட் இருக்கும். அப்படி வைத்திருக்கிறார்களே தவிர பொதுவாக அறநிலையத் துறைக்கு என்று கிடையாது. இதில் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். கிருத்துவ மதத்தவர் முயற்சி எடுத்து சில நல்ல சமூக நலத் தொண்டு செய்கிறார்கள். பசுமலைக்குப் பக்கத்திலே அருளகம் என்று இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்கிறேன். ஆதரவற்ற பெண்களுக்காக நல்ல காரியங்கள் செய்கிறது. வற்புறுத்தி விபசாரத்தில் ஈடுபடுத்திய பெண்களை நீதிமன்றத்திலேயிருந்து அழைத்து வந்து அவர்களுக்காக ஒரு ஹாஸ்டல் போல் நடத்தி, அவர்களுக்குத் தொழில் கற்றுக்கொடுக்கிறார்கள். அவர்களைக் கணவன்மார்களிடம் ஒப்படைக்கிறார்கள் அல்லது கல்யாணம் செய்து வைக்கிறார்கள். அப்படி எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு சோசியல் வெல்பேர் போர்ட் நிதி உதவி செய்கிறது. ஒரு ஆயிரம் ரூபாய் உதவி செய்துகொண்டிருந்தது. இப்போது ஐந்து ஆயிரம் ரூபாய் என்று ஆகியிருக்கிறது. அந்த நிறுவனங்கள் இப்போது லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறார்கள் ஒரு ஆண்டுக்கு. அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு இந்தத் துறை தாராளமாக நிதி உதவி செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஒரு தனிப்பட்ட நபராக இருந்து, அவர் ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும், அநாதைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கம் இருந்தால், நாங்கள் அவர்களுக்கு மத்திய அரசிடம் எழுதிக் கேட்டு, அதன் மூலமாக அவர்களுக்கு நிதி உதவி செய்துகொண்டு வருகிறோம். இப்படி அநாதை இல்லங்கள் மற்றவற்றிற்குச் செய்ய இருக்கும் உதவிகளைப்பற்றிக் குறிப்பிட்டு எங்களுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டால், அதைப்பற்றிப் பரிசிலனை செய்ய இந்த அரசு முன்வரும்.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Chairman, as far as the State Social Welfare Board is concerned, which is integrated with the Central Social Welfare Board, irrespective of community or religion, it is carrying on good work. I can quote the names of Christian institutions where socio-economic programmes like giving vocational training are being attended to. Therefore, there is no discrimination, because a Christian, a Catholic, a Hindu are all equal.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் வினா எழுப்பினார்களா அல்லது அவருடைய கருத்தைச் சொல்கின்றார்களா? அவருடைய அபிப்பிராயத்தைச் சொன்னார்களா?

THIRU K. RAMAMOORTHY : Mr. Chairman, this is unfair. It is not fair on the part of an hon. Member to try to reply on behalf of the Government or on behalf of the Hon. Minister concerned. What I intended was different from what the hon. Member has interpreted it to be. What I said was this. Funds are taken from the Hindu religious institutions for social work. There are also other religious institutions doing such work on behalf of other religions. I wanted to know whether the Government or the Governments or any wing of the Government machinery are taking funds of other institutions belonging to Non-Hindu religions. That was my question. I never meant to cast any aspersion on any religion. It is unfair for a Member of the Social Welfare Board, who is also a Member of this House, to cast an aspersion of this kind. I am sorry. She cannot play the role of a Minister.

THIRUMATHI TARA CHERIAN : Hon. Chairman, I have every right to express my view.

THIRU K. RAMAMOORTHY : That cannot be allowed. The hon. Member cannot use the question-hour to express her views on the subject.

THIRUMATHI TARA CHERIAN : I have answered the question raised by the hon. Member Thiru Santosham.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பேசிய குறிப்பிட்ட பகுதியை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : இல்லை, இல்லை. அதிலே ஒன்றும் இல்லை. அங்கத்தினர் அவர்கள் கேள்வியாகக் கேட்கவில்லை, என்பதுதான் குறை. அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்பதற்குப் பதிலாக அரசாங்கத்தின் சார்பில் பதிலளிப்பதுபோல பேசுகிறார்களே என்றுதான் இங்கே சொன்னார்கள். வேறு ஒன்றும் இல்லை. ஆகவே அதை நீக்க வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



### வணிகவியல் கல்லூரிகளில் மாணவிகளுக்கு இட ஒதுக்கீடு

* 143 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம்** : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், 1979-ல் சமூகநலத்துறை மூலமாக 30 மாணவிகளுக்குப் பயிற்சியளிக்க உத்திரவு வழங்கியதையொட்டி, மாணவிகளை வணிகவியல் கல்லூரிகளுக்கு ஒதுக்கீடு செய்வதில் கடைப் பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் கடைப் பிடிக்கப்படவில்லை என்றும் சிபாரிசு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1979 ஆம் ஆண்டில் 30 ஏழைப் பெண்களுக்கு தட்டெழுத்துப் பயிற்சி அளிக்க சமூகநல இயக்குநர் உத்தரவு பிறப்பித்துள்ளார். இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மூன்று ஆண்டுகளுக்கு மேல் நடத்தப்பட்டு வரும் மற்றும் அதிக அளவுக்கு மாணவிகளுக்கு வெற்றி வாய்ப்பினை ஏற்படுத்தித்தரும் மூன்று பயிற்சி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்தத் தேர்வில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்று சமூகநல இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையிலிருந்து இந்தத் திட்டத்தின் கீழ் 30 ஏழைப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிப்பதற்கு ஒதுக்கீடு செய்வதில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். இதிலே உள்ள நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று அரசுக்கு, பார்வேர்ட் இன்ஸ்ட்டிடியூட், நாகர்கோயில்; பிரின்சிபல், மாடர்ன் இன்ஸ்ட்டிடியூட், நாகர்கோயில்; பிரின்சிபல், ஓரியண்ட் இன்ஸ்ட்டிடியூட், நாகர்கோயில்; பிரின்சிபல், பட்டேல் இன்ஸ்ட்டிடியூட், நாகர்கோயில் ஆகியவர்களிடமிருந்து மனு வந்திருக்கிறது. அதனுடைய நகல் எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இவர்கள் அத்தனை பேர்களும் சேர்ந்து 3—9—1979, 20—9—1979, 31—1—1980, 2—2—1980, 4—2—1980, 26—2—1980, 15—12—1980 ஆகிய தேதிகளில் முறையீடுகள் அனுப்பி அந்த முறையீடுகள் கவனிக்கப்படவில்லை என்றும் ஒரு தனிப்பட்ட, அரசாங்கத்தோடு தொடர்புடைய ஒருவருடைய இன்ஸ்ட்டிடியூட்டுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது என்ற

புள்ளிவிவரம் சுட்டிக்காட்டியும் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையீடு எங்களுக்கும் வந்திருக்கிறது. அரசாங்கத்துக்கு வந்திருக்கின்ற முறையீட்டின் நகல் இது. இதை தலைவர் அவர்கள் மூலமாகக் கொடுக்கிறேன். அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்ததா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நகலைக் கொடுத்தார்கள்)

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** முறைகேடுபற்றி எந்தத் தகவலும் எங்களுக்கு வரவில்லை. ஆனால் தேர்வில் எந்தக் கல்லூரி அதிக மதிப்பெண்கள் எடுத்திருக்கிறதோ, அந்தக் கல்லூரிகளுக்கு முதலிடம் கொடுத்து, ஒரு கல்லூரிக்கு 10 மாணவிகள் வீதம் 30 மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நாகர்கோவிலில் இருக்கக்கூடிய தலைசிறந்த தட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளிகளில், நான்கு பள்ளிகளிலிருந்துதான் இந்தப் புகார் வந்திருக்கிறது. அந்தப் புகார் அரசுக்கும் வந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் திரு. உமாநாத், மற்றும் எனக்கும், எல்லோருக்கும் நகல் வந்திருக்கிறது. அந்த நகலை, தலைவரவர்கள் மூலமாக, அமைச்சரவர்களிடம் கொடுக்கிறேன். இதையொட்டி 'அரசு பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அப்படி எனக்கு ஒன்றும் தகவல் வரவில்லை, முறைகேடு நடந்ததாக வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது உண்மையானால், அதை நான் விசாரித்து, எப்படி நடவடிக்கை எடுக்க முடியுமோ அப்படி நடவடிக்கை எடுக்கிறேன்.

**உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித்தொகை**

*** 144 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்வி கற்கும் உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதில் குறைந்தபட்ச வயது நிர்ணயம் செய்யப்படுகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை ?

(உ) உடல் ஊனமுற்ற கல்வி கற்கும் எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் உதவித்தொகை வழங்க அரசு ஏதும் பரிசீலனை செய்து வருகிறதா ?



**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** அவர்களுக்கும் வருமான அடிப்படையில் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

**2. உரிமைப் பிரச்சினை.**

1—3—1982 அன்று 'அண்ணா' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 1—3—1982 அன்று 'அண்ணா' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி குறித்து, 'அண்ணா' பத்திரிகையின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஓர் உரிமை மீறல் பிரச்சினைக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதிகளின்கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்குமாறு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த மன்றத்தில் இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டம் 292-எ சட்டத் திருத்த மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்தில் நான் பங்கேற்றுப் பேசியபோது, நான் சொன்ன கருத்துக்களை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1—3—1982 அன்று இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் 292-எ சட்டத் திருத்த மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தின்மீது நான் பேசிய கருத்துக்களுக்கு மாறாக வேண்டுமென்றே திட்டமிட்டு சென்னை 1—3—1982 மாலை 'அண்ணா' பத்திரிகையில் 'புது வரிக்கும் கூடுதல் வரிக்கும் வித்தியாசம் தெரியாத தி.மு.க. எம்.எல்.சி.க்கு பொன்னையன் விளக்கம்' என்ற தலைப்பிட்டுள்ளது. "மேலவையில் இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டம் 292-எ சட்டத் திருத்த மசோதா விவாதத்திற்கு வந்தது. அதன்மீது பேசிய தி.மு.க. உறுப்பினர் ஆற்காடு வீராசாமி பேசும்போது, 'அண்ணா பத்திரிகைப் போஸ்டரில் அரசு புதிய சலுகைகள்—புதுவரி இல்லாத புரட்சி பட்ஜெட் எனப் போட்டுள்ளார்கள். இது மோசடியல்லவா ?

பத்திரிகை விற்பனையை அதிகரிப்பதற்காக, போஸ்டர்கள் கவர்ச்சியாகப் போடுவது உண்டு.

1982 மார்ச் 3]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) & (இ) ஆம். ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் பயிலும் மாணவர்களுக்கு மத்திய அரசு வழங்கும் உதவித்தொகைக்கு குறைந்தபட்ச வயது 14 என்று நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. ஐந்து வயதில் முதல் வகுப்பில் சேரும் மாணவன் 9-ம் வகுப்பு வரும்போது 14 வயதடைகிறான். ஆகவேதான் இந்த குறைந்தபட்ச வயது மைய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என தெரிகிறது.

(உ) மத்திய அரசு 9-ம் வகுப்பும் அதற்கு மேலும் கல்வி பயிலும் உடல் ஊனமுற்றவர்களுக்கு மட்டும் உதவித்தொகை வழங்கி வருகிறது. 1-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை பயிலும் ஒவ்வொரு உடல் ஊனமுற்ற மாணவருக்கும் புத்தகம் மற்றும் நோட்டு புத்தகங்கள் வாங்க தலா ரூ. 25 உதவித்தொகையாக வழங்க, தமிழக அரசு 11—6—1981-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, உடல் ஊனமுற்ற குழந்தை களுக்கு உதவி செய்கிறபோது, தமிழகத்திலே எஸ்.எஸ்.எல்.சி. வரை இலவசக் கல்வி இருப்பதால், அது தேவையில்லை என்று கருதுகிறார்கள். மற்ற மாநிலங்களில் 9 ஆம் வகுப்பிலிருந்து அவர்கள் கட்டணம் கட்டிப் படிக்க வேண்டும். அதனால்தான் 14 வயது என்று வைத்திருக்கிறார்கள். அந்தக் கட்டணச் சலுகையைக்கூட சொல்லவில்லை. மற்ற மாநிலங்களில் கொடுக்கும் உதவியைவிட, புத்தகம் போன்றவற்றுக்குக் கொடுக்கும் உதவியை விட, சிறந்த முறையில் அவர்களைக் கவனிக்கும் வகையில், 5 ஆம் வகுப்பி லிருந்து நல்ல உணவு கொடுக்கவும், உயர்வான முறையில் புத்தகங்கள் வழங்கவும் தக்க ஏற்பாட்டினைச் செய்ய அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** அவர்கள் 9 ஆம் வகுப்பி லிருந்து 14 வயது என்று கணக்கிட்டு, அந்த அடிப்படையிலே மத்திய அரசு நிதி உதவி அளித்துக்கொண்டிருக்கிறது. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உணவு, புத்தகம் போன்றவைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, மத்திய அரசுக்கு எழுதிக் கேட்கலாமென்று நினைக்கிறோம். அவர்களிட மிருந்து ஆதரவு கிடைத்தால், கண்டிப்பாக அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இப்போது மாணவர்களுக்குப் புத்தகங்களைக் கொடுக்கிறோம். அது பெற்றோர்களுடைய வருமான வரம்பைக் கணக்கிட்டுக் கொடுக்கிறோம். அதிலிருந்து உடல் ஊனமுற்றவர்களுக்கு விதி விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?



1982 மார்ச் 3] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

ஆனால், பத்திரிகையிலேயே அன்று புதுவரி இல்லாத புரட்சி பட்ஜெட் என்று போட்டிருக்கிறார்கள். இது மக்களை ஏமாற்றுவது, மோசடி செய்வதுபோல் அல்லவா ?' என்று கூறினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் பொன்னையன் 'புது வரி இல்லா பட்ஜெட் என்றிருப்பதை உறுப்பினர் வேறு கருத்தோடு படிக்கிறார் எனக் கருதுகிறேன். இதுவரை வரி போடப்படாத பொருளுக்குப் புதிதாக வரி எதும் போடவில்லை. கூடுதல் வரிக்கும் புதிய வரிக்கும் வித்தியாசம் இருப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்' என்று தெளிவுபடுத்தினார்." இப்படிச் செய்தி வெளியிட்டிருக் கிறது. ஆனால், அமைச்சர் பொன்னையன் அவர்கள் குறுக்கிட்டதும், நான் உடனடியாக, 'அமைச்சர் குழம்பிப் போயிருக்கிறார், விற்பனை வரி 4 சதவிகி தத்திலிருந்து 5 சதவிகிதமாகக் கூட்டியதையோ, மது பாட்டில்களுக்கு 25 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்திய வரியைப் பற்றியோ குறிப் பிடவில்லை. ஆனால் புதிதாகக் கைத்தறிப் பட்டுத் துணிக்குப் போட் டிருக்கிற புதிய வரிகளைத்தான் குறிப்பிடுகிறேன்' என்று சொன்னதும், அமைச்சர் பொன்னையன் அமைதியாக உட்கார்ந்து விட்டார். உண்மை இப்படி இருக்க, 'புது வரிக்கும் கூடுதல் வரிக்கும் வித்தியாசம் தெரியாத தி.மு.க. எம்.எல்.சி.க்கு பொன்னையன் விளக்கம்' என்று வேண்டுமென்றே திட்டமிட்டு இப்படி 'அண்ணா' பத்திரிகையில் குறிப்பிட்டிருப்பது இந்த அவையின் உரிமை மீறல் பிரச்சினையாகும். எனவே இதை உரிமைக் குழு விற்கு அனுப்ப வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இது குறித்து 'அண்ணா' பத்திரிகை ஆசிரியரிடமிருந்து விளக்கம் பெற்று, என்னுடைய தீர்ப்பை அளிக்க விரும்பு கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு சமயப் பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டு, போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்கர லிங்கம், திரு. த. சந்தோஷம், திரு. பா. ரா. தாமல், திரு. க. இராமமூர்த்தி, திரு. க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு சமயப் பிரிவினரிடையே மோதல் குறித்தும், அதன் தொடர்பாக போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறித்தும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளுக்குள் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு சமயம் பிரிவினரிடையே மோதல் ஏற்பாடு, போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறித்து.

[1982 மார்ச் 3

திரு. ம. சங்கரலிங்கம் ; மாண்புமிகு தலைவரவர்களே, மார்ச் மாதம் 1-ம் தேதி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு என்று புகழ்பெற்ற இடத்தில், பகவதி அம்மன் விழாக் காலத்தில், அதனை ஒட்டிய ஒரு பகுதி கிராமம் என்று சொல்லுமளவிற்கு—கிராமம் கூட அல்ல—மண்டைக்காட்டை ஒட்டிய பகுதியில், துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டு 6 பேர்கள் இறந்தார்கள், பலர் காயமுற்று மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி நம்மையெல்லாம் உண்மையிலேயே அதிர்ச்சி அடையச் செய்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம், கல்வி கற்றவர்களை மிகுதியாகக் கொண்டு, அமைதியான மாவட்டமாக இருந்த நிலை மாறி, கடந்த சில மாதங்களாக அங்கே சமயப் பூசல்கள் ஏற்படுகிற ஒரு அவல நிலை ஏற்பட்டிருப்பது உண்மையிலேயே எல்லோருடைய மனதையும் கலக்குகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறதென்பதை மறந்துவிடுவதற்கில்லை. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில், பிற பகுதிகளில் இல்லாததுபோல், எல்லா மதங்களையும் சேர்ந்தவர்கள் மிகுந்த ஒற்றுமை உணர்வோடு எல்லாக் கோவில்களுக்கும் சென்று வழிபடுவார்கள். இந்துக்கள் கிருத்துவக் கோவிலுக்குச் செல்லுவார்கள் ; கிருத்துவர்கள் இந்துக் கோவிலுக்குச் செல்லுவார்கள். அப்படி வழிபடுகிற முறை இருந்தது, அங்கு வாழ்கிற மக்களுடைய ஒற்றுமை உணர்வை உலகுக்கே எடுத்துக் காட்டும் நிலையைப் பார்த்தோம். மண்டைக்காடு அம்மன் கோவில் என்பது பகவதி அம்மன் கோவில். கேரளாவில் உள்ள பல லட்சக்கணக்கான மக்கள் அங்கே வருகிறார்கள். அவர்கள் கால்நடையாகவே வருகிறார்கள். வருகிறபோது, முஸ்லீம் பள்ளிகளுக்குச் சென்று காணிக்கை போடுகிறார்கள். கிருத்துவக் கோவில்களுக்குச் சென்று காணிக்கை போடுகிறார்கள். பிறகு இந்துக் கோவிலுக்கும் சென்று வணங்கிவிட்டு, கடற்கரைக் கோவிலுக்குச் சென்று காணிக்கை போட்டுச் செல்லுவார்கள். இப்படி ஒற்றுமையாக வாழும் மக்கள் இன்று சண்டை போடுகிறார்கள். அதன் காரணமாக துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டு, உயிர் இழக்கும் அவல நிலை கழிந்த சில மாதங்களாக ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவைகளையெல்லாம் இந்த அவையில் சொன்னால் அதிகரித்துவிடுமோ என்று அஞ்சி, பல சம்பவங்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை.

(முற்பகல் 10-20)

அகஸ்தீஸ்வரத்தில் 6 மாதத்திற்கு முன்பு ஒரு தாக்குதல் நடைபெற்றது. அதுபோல் மாடத்தட்டுவிளையில் தாக்குதல் நடைபெற்றது. அதுபோல் வழுக்கன்பாறையில் 3 மாதத்திற்கு முன்பு ஒரு தாக்குதல் நடைபெற்றது. அங்கு 30, 40 வீடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. அதுபோல் குலசேகரத்தில்



கலவரம் ஏற்பட்டது. அங்குள்ளவர்கள் இதைத் தடுக்க எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் வெற்றி பெறவில்லை என்பதைத்தான் இந்தச் சம்பவம் நமக்குக் காட்டியிருக்கிறது. அங்குள்ள பெரிய அரசு அதிகாரிகள் எல்லாம் இதுசம்பந்தமாக தக்க நடவடிக்கையை காலா காலத்தில் எடுக்காததால்தான் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்று சொல்வதில் தவறு இல்லையென்று நான் கருதுகிறேன். அரசு அதிகாரிகள் இதை உணர வேண்டும். அதுபோல் திங்கள் சந்தை என்ற இடத்தில் திருவிழா நடைபெற்றபோது, 22 ஆம் தேதி ஒரு சம்பவம் நடைபெற்றது. அதன் மூலம் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டது. அப்படி இருக்கும்போது, 1 ஆம் தேதி நடைபெற இருந்த திருவிழாவில் முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி இருக்கவில்லை. தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு வாழ்கிற எல்லா மக்களும் அன்போடும், பணிவோடும் அவர்கள் முன்பு வாழ்ந்ததுபோல் இப்போதும் சகோதரர்களாக வாழ வேண்டும். ஒரே வீட்டில் இந்துவும் கிறிஸ்தவரும் இருக்கக்கூடிய குடும்பங்களைக் கொண்டது கன்னியாகுமரி மாவட்டம். இங்கே சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருந்த பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு இந்து. அவருடைய நெருங்கிய உறவினர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள். அதுபோல் மார்சல் நேசமணி அவர்கள் கிறிஸ்தவர். அவருடைய நெருங்கிய உறவினர்கள் எல்லாம் இந்துக்கள். எந்த வகையிலும் ஒருவித வேறுபாடும் இல்லாமல் சடங்குகளில் எல்லாம் ஒற்றுமையாகக் கலந்துகொண்டு ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் சமீப காலமாக பலவித நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை இப்படியே மூடி வைத்திருந்தால் நல்லதல்ல. இத்தகைய சூழ்நிலையின் உண்மை நிலையைக் கண்டறியவும், இத்தகைய போக்கினைத் தடுக்க வழி கண்டறியவும், இப்போதுள்ள துப்பாக்கி சூடு சரியா, இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியா என்பதைக் கண்டறிய உயர்நீதிமன்ற நீதிபதி அளவில் ஒரு Sitting Judge உடைய விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவருடைய கருத்தை ஏற்று, அதற்குரிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து, நல்ல முறையில் தீர்வு காண வேண்டியிருப்பதால், இந்த அவசர பதட்ட நிலையினைப்பற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்கும் அதே நேரத்தில் மீண்டும் கன்னியாகுமரி மக்களுக்கு அன்புடனும் பணிவுடனும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் அங்குள்ளவர்கள் என்பதை உணர்ந்து என்றைக்கும்போல் இனிமேலும் அனைவரும் ஒற்றுமையாக சகோதரத்துவ உணர்வுடன் வாழ வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தனக்கே உரிய பாணியில் மிகவும் சிறப்பான முறையில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உண்மை நிலைமைகளைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னவைகளை நானும் ஏற்றுக்கொள்கிறேன் அவைகளையே நானும் மீண்டும் சொல்லி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சிகளுக்கு ஒரு பின்னணி இருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது எவ்வளவு பெரிய ஆபத்தான ஒரு சூழ்நிலை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இது எவ்வளவு பெரிய பிரச்சினை என்பதை நான் வெளிப்படுத்துகிறேன். என்னுடைய பட்டதாரி தொகுதியில் வருவது கன்னியாகுமரி மாவட்டம். நான் அடிக்கடி அங்கு சென்றிருக்கிறேன். இறுதியாக ஜனவரி 25 முதல் 28 வரை விடுமுறைக்காக அங்கு சென்றிருந்தேன். * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினருக்கு ஒன்று சொல்கிறேன். இப்படிப் பேசுவது கலவரத்தை அடக்கி நிலைமையை சகஜ நிலைக்குக் கொண்டு வருவதற்கு துணை புரியாது. இப்படிப் பேசுவது அவைக் குறிப்பில் வராது. இந்தமாதிரி நேரத்தில் விவகாரத்திற்குள் போக வேண்டாம்.

**திரு. த. சந்தோஷம் :** பின்னணியைத்தான் சொல்கிறேன். இது ஏன் நடைபெற்றது என்பதற்கான பின்னணியைப் பார்க்க வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்பு மண்டே மார்க்கெட் என்கிற இடத்தில் குழப்பம் ஏற்பட்டது. இப்படி குழப்பம் நடைபெற்றுக்கொண்டிருந்தால், பெரிய ஆபத்தான நிலைமைகள் உருவாகும் என்று 27 ஆம் தேதி கிறிஸ்தவ குருவானவரும், பிஷப்பும் கலெக்டருக்கும் எஸ்.பி.-க்கும் மனு கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டுமென்றும், பதட்ட நிலையால் நாங்கள் அஞ்சுகிறோம் என்றும் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்காததால் மோதல் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக எனக்கு இரண்டு தந்திகள் வந்திருக்கின்றன. பிஷப்பிடமிருந்தும் பங்கு குருவானவரிடமிருந்தும் தந்தி வந்திருக்கிறது. புதூர் ஷ்ரைன்-க்கு உள்ளே இருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது என்று அதில் சொல்லியிருக்கிறார்கள். நீதியை நிலைநாட்ட ஒரு பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்கான காரணங்களைப் பூராவாக அறிய வேண்டும்.

--- 

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



தலைவரவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவரவர்கள் தவறாக நினைக்க வேண்டாம். அவசரக் காலத்திலே, நெருக்கடி காலத்திலே ஒரு ஸ்தாபனத்திற்கு அது நாட்டின் ஒற்றுமையை பாதிக்கும் ஒன்று என்று சொல்லி மத்திய அரசு தடை செய்தது. அந்த ஸ்தாபனம் இதில் தலையிட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினருக்கு ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்தேன். மீண்டும் சொல்கிறேன். உறுப்பினர் அவர்களுடைய பேச்சு சமரச உணர்வோடு இருக்க வேண்டும், சமரச உணர்வுக்குத் துணை புரிய வேண்டும். யாரையும் காப்பாற்ற நான் இதைச் சொல்லவில்லை.

**திரு. த. சந்தோஷம் :** பின்னணி என்ன என்கிற விவரம் வெளியே தெரிய வேண்டாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மற்றவர்கள் வேறுவிதமாகச் சொல்ல முற்படலாம் அல்லவா ? ஆகவே சமரச உணர்வுக்குத் துணைபுரியும் வகையில் உறுப்பினர் அவர்கள் தம் உணர்வுகளை வெளிப்படுத்தலாம்.

**திரு. த. சந்தோஷம் :** முழுமையான அளவில் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உடனடியாக கன்னியாகுமரி மாவட்டம் பூராவும் பலத்த போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது முக்கியமான விஷயமாக இருப்பதால், உடனடியாகத் தீர்வு காண வேண்டிய பிரச்சினையாக இருப்பதால், இந்த அவசர பதட்ட நிலையினைப்பற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, அகில இந்திய அடிப்படையில் எடுத்துப் பார்த்தால் கூட, தமிழகத்தின் பாரம்பரியம், தமிழகத்தின் பண்பு, தமிழகத்தின் முன்மாதிரி ஒரு எடுத்துக்காட்டாக இருந்து வந்தது. இன்றைக்கு அம்மாதிரியான ஒரு அமைதி நிலைக்குக் களங்கம் ஏற்படக்கூடிய வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கலவரம் ஏற்பட்டு துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. இது நமக்கெல்லாம் வேதனையைத் தருகிறது. அனைத்துப் பிரிவினருக்கும் இந்த சம்பவம் வேதனையைக் கொடுக்கக் கூடியது. ஜாதி, இன வேறுபாடுகளா அல்லது சதி நடந்திருக்கிறதா என்பதையெல்லாம் ஆராயும் வகையில் முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் உண்மையிலே இதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுத்து

அவர்கள் தண்டனைக்கு உள்ளாக வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில், அகில இந்திய அடிப்படையில் பார்த்தால் கூட, சிறுபான்மை இனத்தவர்கள் மிகவும் பாதுகாப்பாக வாழக்கூடிய பாரம்பர்யம் மிகுந்தது தமிழகம். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருவேளை கிறிஸ்தவர்கள் அதிகமாக இருக்கலாம். மற்றபடி 10 விழுக்காடு இருப்பவர்கள் அமைதியாக வாழ்வதற்கு வழிவகை இருந்தால் தான், அவர்கள் நல்லமாதிரி வாழ முடியும் என்கிற நிலைமையில் சிறுபான்மையினருக்கு அச்சம் கொடுக்கக்கூடிய ஒரு நிலை எந்த சந்தர்ப்பத்திலும் வரக் கூடாது. இதற்குப் பொறுப்பானவர்களை தண்டிக்கும் வகையில் நீதி விசாரணை முழுமையாக நடைபெற வேண்டும். யார் யார் இதற்கு உடந்தை? தீ மூட்டி விட்டவர்கள் யார் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். அதற்கேற்ற முறையில் நீதி விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இது முக்கிய பிரச்சினையாக இருப்பதால், இதனுடைய அவசிய அவசரத்தை உணர்ந்து இந்த அவசரப் பதட்ட நிலையினைப்பற்றி விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சங்கரலிங்கம், சந்தோஷம், தாமஸ் ஆகியோர் வெளிப்படுத்திய அதே உணர்வுகளை நானும் பகிர்ந்துகொள்கிறேன். இந்த அவையினுடைய கவனத்திற்காக, இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கூடுதலாக ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றி மட்டும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர முற்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியதுபோல, அங்குள்ள மக்கள் ஒரே குடும்பத்திலேயே அண்ணன் ஒரு மதம், தம்பி ஒரு மதம் என்று வாழ்ந்தாலும் கூட, அனைவரும் இணைந்து ஒற்றுமையாக சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள். பரம்பரை பரம்பரையாக அப்படி வாழ்கின்ற மக்களைக் கொண்டது கன்னியாகுமரி மாவட்டம். அதுமட்டுமல்ல. திருநெல்வேலி மாவட்டமும் கூட அதையொத்த மாவட்டம்தான். ஆகவே, இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி இன்றையதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்திருப்பது துர்பாக்கியவசமானது. இதை மிகுந்த அனுதாபத்தோடு உடனடியாகப் பரிசீலித்து தீர்வு காண வேண்டும். அப்படி தீர்வு காணப்படவில்லையானால் இது வெளி இடங்களுக்கும் பரவக்கூடிய அபாயம் இருக்கிறது



(முற்பகல் 10-30)

இந்த நிகழ்ச்சி தொடர்பான விவரங்களுக்கு உள்ளே நான் போக விரும்பவில்லை. பொதுவாக மதச் சண்டைகளை ஏற்படுத்தும்போது, எப்படியோ யாரைத் தொட்டால் இந்த வேகம் அதிகமாகுமோ அதைச் செய்கின்ற காரியத்தை குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் என்று கூட சொல்ல மாட்டேன், மதத்தின் பெயரிலே சமூக விரோத சக்திகள் செயல்படுவதைக் கவனிக்கவேண்டும். அங்கே பெண்கள் சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைவிட வேறு தலைகுனிவான காரியம் என்ன இருக்கிறது? ஆலயங்களுக்கு பல மாநிலங்களிலேயிருந்து மக்கள் வரும்போது, பெண்களுக்கு இது போன்ற சித்திரவதை, மானக்குறைவு நடக்கும்போது அங்குள்ள மக்களின் உணர்வுகள் வெடித்தெழாதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். சமீபத்தில் தமிழகத்திலே நாம் ஒன்றைப் பார்க்கிறோம். மத அடிப்படையில் மதத்தினுடைய திரையிலே வேறுபல உணர்வுகளை உருவாக்கும் நிகழ்ச்சி ஒரு பக்கம் இருக்க, இன்னொரு பக்கம் தங்கள் மதத்திலே ஏற்படும் ஜாதிச் சண்டைகளை திசைதிருப்பும் வகையிலே இதுபோன்ற பிரச்சினைகளை உருவாக்கும் சதி நடக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள், எண்ண ஓட்டங்கள் மலிந்து விட்டதோ என்ற அச்சம் இப்போது ஏற்படுகிறது. இது போன்ற பல சம்பவங்கள் அந்தப் பகுதியில் ஏற்கெனவே நடந்திருக்கின்றன. அது தெளிவு. ஆகவே, இதுபற்றி முழுமையாக அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிலை இருப்பதால், இதிலே ஆழ்ந்த அக்கறை எடுத்து, தேவையானால் மேலவையின் இரகசியக் கூட்டத்தை நடத்தி அதிலே இதுபற்றித் தெளிவாக எல்லோரும் பேசி முடிவெடுப்பதன் மூலமாகத்தான் தமிழகத்தின் நல்ல பெயருக்குக் களங்கம் இல்லாமல், மேலும் ஜாதிச் சண்டைகள் மட்டுமல்ல, மதச் சண்டைகள் எதுவும் இல்லாமல் தடுக்க முடியும் என்பதால், இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க நியாயம் இருக்கிறது என்பதால் அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இப்பொருள் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிபற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எந்தக் கருத்தை இங்கே வலியுறுத்தினார்களோ அந்தக் கருத்துக்களை நான் அப்படியே வழிமொழிகிறேன். மண்டைக்காடு என்ற கிராமத்திற்கும் புதூர் என்ற கிராமத்திற்கும் இடையே, அங்கே இருக்கும் மதக்காரர்களுக்கிடையில், ஒலிபெருக்கி வைத்ததன் காரணமாக

எழுந்த கலவரமாக இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டாய மத மாற்றம் செய்ய முயற்சித்ததன் காரணமாகக்கூட இது இருக்கக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது. இதைப்பற்றியெல்லாம் மிகவும் ஆழ்ந்து சிந்தித்து இப்படிப்பட்ட நிலைமைகள் மேலும் பரவாமல் இருக்க, இதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்று ஆராய்ந்து அதுபற்றிய முடிவுக்கு வர வேண்டிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம் என்பதனாலே, இந்த நிகழ்ச்சி மேலும் பெரிய சண்டையாக வளராமல் இருக்க என்ன செய்யலாம் என்று முடிவெடுக்க இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மண்டைக்காடு என்ற கிராமத்திலே நடைபெற்ற இந்த நாட்டு மக்கள் அனைவருமே விரும்பாத, விரும்பத் தகாத நிகழ்ச்சியின் தொடர்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மற்றும் இதர கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்திவைப்புப் பிரேரணைகளின் மூலம் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எல்லோருடைய கருத்தும் இதுபோன்ற சம்பவம் நிகழாமல் தடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்துவதாகவே அமைந்திருக்கிறது என்பதை அரசும் உணர்ந்து அந்தக் கருத்தை மேலும் வலியுறுத்த விரும்புகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, கன்னியாகுமரி மாவட்டம் என்பது அதிகமான அளவிலே படித்தவர்கள் நிறைந்த மாவட்டம். அதனுடைய பழக்க வழக்கங்கள் கூட ஒரு தனியான சூழ்நிலையிலே உருவாக்கப்பட்ட மாவட்டம். அந்த அடிப்படையிலேதான் அங்கே மத விருப்பு வெறுப்பு இல்லாமல் பல்வேறு குடும்பத்தினரும், பல்வேறுதரப்பட்ட மக்களும் பழகிக் கொண்டு வருகிறார்கள், வந்தார்கள் என்பதையெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு தோழமையுடனும், சகோதர சூழ்நிலையிலும் வாழும் மக்களிடத்திலே யார் புகுந்து இப்படிப்பட்ட பிளவுகளை உருவாக்கி, இத்தகைய தேவையற்ற, கொடுமையான நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அந்தக் குறைகளைக் களைய வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது என்பதை அரசின் சார்பிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலேதான் தஞ்சை மாவட்டத்திலே உள்ள வேளாங்கண்ணி ஆலயத்திலும், நாகையிலே உள்ள தர்க்காவிலும் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களும், மற்றவர்களும் எந்த



விதமான மத விருப்பு வெறுப்புமின்றி போய் வழிபடுகிற, வணங்குகிற சூழ்நிலை நீண்டகாலமாக இருந்து வருகிறது. அதையொட்டித்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலும் அத்தகைய சகோதர உணர்வோடு மத விருப்பு வெறுப்புகளை மறந்துவிட்டு பழகிக்கொண்டு வரும் சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம், அங்குள்ள மக்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையைக் கெடுக்க வேண்டும் என்று திட்டமிட்டோ, உணர்ச்சி வசப்பட்டோ அதற்கான காரியங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே சமீப காலத்திலே சில மாதங்களாக ஆங்காங்கே தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது என்பதை அரசு மிகுந்த எச்சரிக்கையோடு கவனித்து நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திருவிழா நடைபெறுகிற மண்டைக்காடு என்ற கிராமத்திலே என்றுகூட அல்ல, இது அந்த மாவட்டத்திலேயே மிகப்பெரிய திருவிழாவாகும். இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற திருவிழாவாகும். இப்படிப்பட்ட காரியங்கள் வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலே முன்னேற்பாடாக சில பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. இது மேலும் தொடரக்கூடாது என்ற வகையிலே நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஆனால் யார் வைத்த கொள்ளியோ வீடு பற்றி எரிகிறது. விழுந்துவிட்டது என்பதைப் போல, வீடு இப்போது தீப் பற்றியிருக்கிறது. அதை அணைக்கின்ற முயற்சியிலே நாம் ஈடுபடவேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் அந்தக் கருத்தைத்தான் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி அங்கே இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற என்ன காரணம் என்பதைப்பற்றி அரசுக்கு வந்திருக்கிற தகவலை இந்த மன்றத்திலே வைக்க நான் விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு என்ற கிராமத்தில் உள்ள பகவதியம்மன் கோயிலில் மாசி திருவிழா கடந்த 28-2-1982 முதல் 10 நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த மண்டைக்காடு கிராமத்திற்குப் பக்கத்தில் உள்ள புதூர் என்ற சிறு கிராமத்தில் மீனவர்கள் வசித்து வருகிறார்கள். அங்கே திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் வழிபாட்டுக்கு முன்பு கடலிலும், ஏ. வி. எம். கால்வாயிலும் குளிப்பதை சடங்காகக் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்துக்கள் தங்கள் கிராமத்தின் வழியாக கடலில் குளிப்பதற்குச் செல்வதை கிறிஸ்தவர்கள் விரும்பவில்லை என்று தெரிகிறது. இந்துக்கள் ஒலிபெருக்கிகள் வைத்து ஒலிபரப்புவதையும் கிறிஸ்துவர்கள் விரும்பவில்லை என்று தெரிகிறது. 28-2-1982 அன்று பத்மநாபபுரம் சப்-கலெக்டர் அவர்கள் அந்தக் கிராமத்திற்குச் சென்று ஒலி பெருக்கிகளை கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியை நோக்கி வைக்காமல் திருப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதைப்போலவே, இந்துக்களின் மனம் புண்படும்

படி நடக்கவேண்டாம் என்று கிறிஸ்தவர்களையும் கேட்டுக் கொண்டார். ஆனால், எதிர்பாராமல் 1-3-1982 ஆம் நாளன்று இரவு சுமார் 8 மணியளவில் 2 ஆயிரம் பேர் கொண்ட ஒரு பெரிய கூட்டம் ஒன்று மண்டைக்காடு கிராமத்திற்குள் வந்து கடைகளுக்குச் சேதம் விளைவித்தும் மிகப்பெரிய இந்துக்கள் அடங்கிய கூட்டத்தைத் தாக்கியும் உள்ளன. கூட்டத்தைக் கலைந்து செல்ல வைப்பதற்காக காவல் துறையினர் தகுந்த எச்சரிக்கைக்குப் பின்னர் தடியடிப் பிரயோகம் செய்தனர். தடியடிப் பிரயோகம் பயனளிக்கவில்லை. காவல் துறையினர் சுமார் 25 பேர்கள் காயமடைந்தனர். காவல் துறையினரின் வாகனம் ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டது. நிலைமை மிகவும் மோசமாகவே தகுந்த எச்சரிக்கைக்குப் பின்னர் காவல் துறையினர் துப்பாக்கியால் சுட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. துப்பாக்கிச் சூட்டின் காரணமாக 4 பேர்கள் நாகர்கோவில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தனர். 2 பேர் மருத்துவமனையில் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கன்னியா

(முற்பகல் 10-40)

குமரி மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி சரக துணை போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் அமைதிக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. காவல் துறையின் தலைவரும் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு விரைந்துள்ளார். துப்பாக்கிச் சூடு சம்பவம்பற்றி விசாரணை செய்யுமாறு உடனடியாக பத்மநாபபுரம் சப்-கலெக்டருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நிலைமை மிகுந்த எச்சரிக்கையுடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் கடந்த சில மாதங்களாக இருக்கிற சூழ்நிலைகளை யொட்டி 165 பேர் கொண்ட மாவட்ட அளவிலான ஒரு அமைதிக் குழு அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அது முன்பே ஒருமுறை கூடி விவாதித்து சில முடிவுகளை அறிவித்திருக்கிறது. மேலும் அந்த அமைதிக் குழுவைத் தொடர்ந்து கூட்டி, இதுபோன்ற அசம்பாவிதங்கள், நாமெல்லாம் விரும்பத் தகாத சம்பவங்கள் நடைபெறாமல் அனைவரும் சகோதர உணர்வோடு, அந்த மக்கள் என்றென்றைக்கும் வாழ்ந்த தைப்போல இனிமேலும் வாழ்கிற ஒரு சூழ்நிலையை, எந்த தீய சக்திகளுடைய முயற்சிகளுக்கும் இரையாகாமல் அவர்கள் நடந்து கொள்ளுகிற முறையில் அமைதிக் குழு நடவடிக்கை எடுக்கும், செயல்படுத்தும் என்ற அரசின் கருத்தைக் கூறி, நிலைமை மிகுந்த எச்சரிக்கையுடன் கண்காணிக்கப்



படுகிறது என்பதையும் சொல்லி, எனவே இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக அவையின் ஏனைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை அரசின் சார்பாகவும் அமைதியை விரும்புகிற நம் அனைவரின் சார்பாகவும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஒரே ஒரு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன். அங்கே உள்ள சப்-கலெக்டர் 2 நாட்களுக்கு முன்னால் அங்கே போய்க் கேட்டிருக்கிறார். எனவே அவரை வைத்தே விசாரிப்பதற்குப் பதிலாக, அங்குள்ள அதிகாரிகள் தக்க நடவடிக்கையை தக்க நேரத்தில் எடுத்திருந்தால், இதைத் தவிர்த்திருக்க முடியுமோ என்றும் சிலர் எண்ணுகிற காரணத்தால், ஒரு நீதிபதியைக் கொண்டோ அல்லது குறைந்தபட்சம் ரெவின்யு போர்டு மெம்பர் ஒருவரைக் கொண்டோ அந்த விசாரணையை நடத்தினால் நன்றாக இருக்கும். எனவே இதை அரசு ஏற்று பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** உடனடியாக அதைப் பற்றிப் பரிசீலித்து அந்த நிகழ்ச்சியோடு தொடர்பு கொண்டு, முன்னால் பல காலமாகச் செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருக்கிற அந்த சப்-கலெக்டரை, இந்தத் துப்பாக்கி சூடு சம்பவம்பற்றி விசாரிக்க ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்தவுடன், தொடர்ந்து நிலைமைகளைக் கண்டறிந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுடைய கருத்துக்களையும் மற்ற உறுப்பினர்களின் கருத்துகளையும் அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. சந்தோஷம்:** இந்தச் சம்பவம்பற்றி அங்கேயிருக்கும் குரு ஒரு தகவல் அனுப்பியிருக்கிறார்.

"Christians offered prayers at Pudur Shrine in Mandaikkadu, Kanniyakumari district"

என்று அது இருக்கிறது. அப்படித்தான் நடந்திருக்கிறதா என்றும் விசாரிக்கப்பட வேண்டும். ஒரு சில கிருத்துவ வாலிபர்கள்கூட குடித்துவிட்டுப் போய் தவறாக அங்கே நடந்து கொண்டிருக்கலாம். ஆனால் அதற்காக, அவர்களைப் பின் தொடர்ந்து போய் ஆலயத்திற்குள் இருக்கும்போது சுட்டுத் தள்ளுவது சரிதானா என்று விசாரிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இந்த விசாரணையின் மூலம் அனைத்து விவரங்களும் நமக்குக் கிடைக்கும். ஒரு தரப்பு தகவல்களை மட்டும் வைத்துக்கொண்டு நாம் எந்த முடிவையும் எடுக்க முடியாது. ஆகவே இரு

தாப்பிலிருந்தும் விசாரணை செய்து முழுமையான தகவல்கள் நமக்குக் கிடைத்த பிறகு, அரசு இதில் தகுந்த நடவடிக்கை எடுக்கும். இது இந்த நாட்டில் அமைதியைக் காக்கிற 'பிரச்சினை என்ற அடிப்படையில் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூறியதைப் போல, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி நானே ஓரளவுக்கு அறிந்தவன். 10 ஆண்டுக் காலம் எல்லைப் போராட்டம் நடந்தபோது அங்கே உள்ள இந்து தமிழர்களும் கிறித்துவத் தமிழர்களும், கொஞ்சம்கூட வேற்றுமை இல்லாமல் இணைந்து நின்று ஒத்துழைத்த காரணத்தால்தான் நாம் ஒரு மாவட்டத்தையே பெற முடிந்தது. அண்மையில் சில நாட்களுக்கு முன்புதான் நான் அங்கே சென்றிருந்தேன். அப்போது அங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கூட என்னைச் சந்தித்து, " இங்கே மத அமைதி குலைந்து வருகிறது, எனவே தாங்கள்கூட தங்கள் பேச்சில் ஒரு வேண்டுகோள் விட்டாலும் நன்றாக இருக்கும் " என்று கேட்டதிலிருந்தே மிகுந்த எச்சரிக்கையோடு இருந்திருக்கிறார் என்றுதான் தெரிகிறது. ஆகவே அங்கே அமைதி நிலவ வேண்டும் என்பதில் அனைவரது உணர்வுகளோடும் நான் என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன்.

எனினும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி, இதற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

**(1) கருநாடக மாநிலத்தில் இடைநிலைப் பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கு தமிழ்நாட்டில் பணிஅளிக்க மறுப்பது, மற்றும் அவர்கள் பணியை நிரந்தரமாக்க மறுப்பது போன்ற பிரச்சினை குறித்து.**

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

" தமிழ்நாட்டில் பி.ஏ. முடித்து, கர்நாடக மாநிலத்தில் பி.எட். பயிற்சி ஆசிரியர்கட்கு, தமிழகப் பள்ளிகளில் பணியளிக்கப்படும் நிலையில், கர்நாடக மாநிலத்தில் இடைநிலைப் பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கு மட்டும்



பணி அளிக்க— தற்காலிகப் பணியை நிரந்தரமாக்கிட, அவர்களின் சான்றிதழ்களை மதிப்பீடு செய்ய மறுக்கப்படும் அரசாணையில் பலர் வேலையிழப்புக்கு இலக்காகி அல்லல்படும் நிலை குறித்து".

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் மாண்புமிகு தலைவர் அவர்களே, இது இதுகுறித்து அவையில் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : விவர அறிக்கையின் " இடைநிலை ஆசிரியர்கள் 15,000 பேர் வேலைவாய்ப்பு இல்லாமல் அல்லற்பட்டுக் கொண்டிருப்பதால், அதைத் தடுப்பதற்காகவும் ", இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் இடைநிலை ஆசிரியர்கள் யாரும் வேலை இல்லாமல் இல்லை என்பதைப்போலவும், அதற்கு ஆட்களே கிடைப்பதில்லை என்பதைப் போலவும் ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல. பிற மாநிலங்களில் பி.ஏ., பி.எட். பயிற்சி பெற்றவர்களை நாம் இங்கே அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். அதைப்போலவே கருநாடக மாநிலத்தில் பயின்று பட்டம் பெற்ற டாக்டர்கள், பொறியாளர்கள் போன்றவர்களுக்கெல்லாம் கூட இங்கே அனுமதி அளிக்கப்படுகிறது. தமிழகத்திலிருந்து கருநாடக மாநிலத்திற்குச் சென்று அங்கே பயிற்சி பெற்றிருந்தாலும்கூட, அவர்களும் தமிழர்கள் தான். நாம்தான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அதுமட்டுமல்ல, கருநாடகத்தில் பயிற்சி பெற்று வந்தால், அவர்களுக்கு இங்கே வேலைவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது என்ற முன்னறிவிப்பை இந்த அரசு எப்போதும் தரவில்லை. ஆனால் திடீரென்று இப்போது இந்த அறிவிப்பைச் செய்கிறது. ஆகவே இது நாள் வரை பயிற்சி பெற்று பணியில் சேர்ந்த அல்லது சேர இருக்கிறவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு அளித்து அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அதைச் செய்துவிட்டு, இனி ஒரு தேதியை நிர்ணயித்து அந்தத் தேதிக்குப் பிறகு, கருநாடகத்தில் பயிற்சி பெறுகிறவர்களை நாங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளமாட்டோம் என்று அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கருநாடக மாநிலத்தில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை தமிழ்நாட்டில் செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களோடு ஒரே மாதிரியாக வைத்து இணைத்துப்

---

@ 456-457 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பேசுவது என்பது சரியானதல்ல. தமிழகத்தில் இடைநிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்ற காரணத்தால்தான், ஓராண்டு விட்டு அடுத்த ஆண்டில்தான் பயிற்சிக்கே அனுமதி தந்திருக்கிறோம். அதோடு எண்ணிக்கையையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை தமிழ்நாட்டில் இருக்கிற நம்முடைய இளைஞர்களுக்கு நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு குறைந்தபட்சம் 50 மார்க் வாங்கியிருக்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். இப்படி சேருவதற்கும் ஒரு நிபந்தனை வைத்திருக்கிறோம். சேருகிறவர்களின் எண்ணிக்கையையும் குறைத்து இருக்கிறோம், ஓராண்டுவிட்டு அடுத்த ஆண்டுக்குத்தான் அனுமதி என்றும் செய்திருக்கிறோம். இந்தமாதிரி செய்வதற்குக் காரணம் தமிழ்நாட்டில் நிறைய பேர் பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பதால் அவர்களுக்கெல்லாம் விரைவில் வேலை கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அதன் காரணமாக நம்மீது நாமே விதித்துக் கொண்ட நிபந்தனைகள் இவை. ஆனால் இந்த நிபந்தனைகளை எல்லாம் ஏமாற்றிவிட்டு, தமிழ் நாட்டு அரசையும் ஏமாற்றிவிட்டு, கருநாடகத்திற்குப் போய் அங்கே பயிற்சி பெற்று அதற்கான சான்றிதழையும் பெற்று வந்து, அதன் மூலம் இங்கே வேலை வாய்ப்பைத் தேடுவது என்பது தமிழ்நாட்டில் இருக்கிற நாம் அனைவரும் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை சீர்குலைக்கும் நடவடிக்கையாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இதில் இருக்கிற மோசமான நிலைமை என்னவென்றால் கருநாடகத்தில் தமிழில் சொல்லித் தருகிற அல்லது பயிற்சி அளிக்கிற முறை இல்லை. இன்னொன்று: இவர்கள் அங்கே போய் படித்து விட்டுத்தான், பயிற்சி பெற்று விட்டுத்தான் இந்தச் சான்றிதழ்களை வாங்கி வருகிறார்களா என்பதே சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. மைனாரிட்டி இன்ஸ்டியூஷன் என்கிற உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் அங்கே தமிழ் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். சேர்க்கும்போது பணத்தையும் வாங்கிக்கொள்கிறார்கள். இவர்கள் அங்கே போகாமல் இங்கேயே இருக்கிறார்கள். அங்கே போவதே இல்லை. பரிட்சை வைக்கிறார்கள். அவர்கள் பரிட்சை எழுதக்கூடாது என்று கருநாடக மாநில அரசு அவர்களுக்குத் தடை விதித்து உத்தரவிட்டால், அவர்கள் கோர்ட்டுக்குப் போய் அத்தகைய உத்தரவிற்கே தடை வாங்கி வருகிறார்கள். பிறகு ரிசல்ட் போடுவதை மட்டும் நிறுத்தி வைக்க வேண்டும்



என்று கருநாடக மாநில அரசு தடை விதித்தால், கோர்ட்டுக்குப் போய் ரிசல்ட்டையும் வெளியிடலாம் என்று உத்தரவு பெற்று வருகிறார்கள். இப்படி தமிழ்நாட்டு அரசையும் தமிழ்நாட்டு மக்களையும் ஏமாற்றிக்கொண்டு, அங்கேயுள்ள கருநாடக அரசையும் ஏமாற்றிக் கொண்டு, வேறு வகையில் வாங்கிக்கொண்டு வருகிற சான்றிதழ்களை வைத்துக் கொண்டுதான், இன்றையதினம் இங்கே வேலைவாய்ப்பு கேட்கிறார்கள். நம்முடைய இளைஞர்களுக்கு நாம் முதலில் வேலைவாய்ப்பு தர வேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினருக்கும் அரசுக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அவர்களுக்கு வேலை தரவில்லை என்றாலும், படித்துப் பயிற்சி பெற்ற வேலையில்லாமல் இங்கே இருக்கிற வேறு யாருக்கோதான் நாம் வேலை கொடுக்கிறோம். ஆனால் இவர்கள் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிராக முதுகுப் புறத்தில் குத்துவதைப்போல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் ஆதரவு தரவேண்டுமா என்பதுதான் நாம் யோசிக்க வேண்டிய பிரச்சினையாகும். நாம் அவர்களுடைய தகுதிகளைப்பற்றியும் பயிற்சியைப்பற்றியுமே சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒழுங்காக அவர்கள் அங்கே போய் பயின்றார்களா என்பதே சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது.

பி.டி. ஆசிரியர்களைப்பற்றிச் சொன்னார்கள். பிராந்திய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு நாமே பணம் கொடுத்து நடத்துகிறோம். நான்கு மாநிலங்களுக்காகவும் நடத்தப்படுகிற அந்தக் கல்லூரியில் நமக்காக என்று ஒதுக்கப்படுகிற இடத்தில் படித்த மாணவர்களைத்தான் நாம் சேர்த்துக் கொள்கிறோம். ஆகவே அது வேறு, இது வேறு. இந்த இரண்டு அரசுகளையும் ஏமாற்றிக்கொண்டு வாங்கி வரும் சர்ட்டிபிகேட்டுகளை நாம் ஏற்க வேண்டுமா என்பதுதான் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியதாகும்.

(முற்பகல் 10-50)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்கும்போது, பி.டி. என்பது பல்கலைக் கழக நெறிமுறைகளின்படி உருவாக்கப்பட்டதொரு படிப்பு என்று சொன்னார்கள். ஆனால் இதே கர்நாடகா மாநிலத்தில், பல்கலைக் கழக நெறிமுறைகளின்படி படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்களைக்கூட பணியில் அமர்த்தியிருக்கிறார்கள். அப்படி பணியில் அமர்த்தப்பட்டவர்கள் இன்றைக்கு நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அப்படி பி. டி. பட்டத்தைப் பெற்றவர்களை

[1982 மார்ச் 3

பணியில் அமர்த்தக் கூடாது என்று அரசு எந்த ஆணையையும் பிறப்பித்திருப்பாகத் தெரியவில்லை. ஆகவே அவ்வாறு தடையில்லாமல் இருக்கும்போது, நியமிக்கப்பட்டவர்களை பணியிலிருந்து நீக்கிய அந்த நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடுத்து நிறுத்துவார்களா ?

வட ஆற்காடு மாவட்டத்தில் இவ்வாறு பல ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டு, சில மாதங்களுக்கு முன்பு வேண்டுமென்றே நீக்கப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து வட ஆற்காடு மாவட்டத்திலேயிருந்து விவரங்களைச் சேகரித்து அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழிலே சொல்லித் தரக்கூடிய பயிற்சியை அவர்கள் பெற்றிருக்கிறார்களா என்பது ஒன்று. இன்னொன்று முறையாகப் படித்திருக்கிறார்களா என்பது. நாம் சொல்லுகிற குறைந்த பட்சத் தகுதியைப் பெற்றிருக்கிறார்களா என்பது ஒன்று. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு மறுக்கிறோம். அது மட்டுமல்லாமல் நாம் இடங்களைக் குறைக்கிறபோது, அங்கே படித்தவர்களுக்கு இடம் தந்தால், கள்ள நாணயம் நல்ல நாணயத்தைத் துரத்துவது போல ஆகும். அந்த அபாயத்தையும் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**(2) தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியரல்லாத அலுவலர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது குறித்து. "

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ 458-459 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1982 மார்ச் 3]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், மற்றும் ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்கள் ஆகியவர்களுக்கிடையே இருக்கக் கூடிய ஊதிய விகித முரண்பாடுகளைப்பற்றி ஆராய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக புதிய பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறது. ஒரே சீரான ஊதிய விகிதத்தை, தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழக ஊழியர்களுக்குத் தர வேண்டும் என்று ஒரு நபர் குழு அறிக்கை தந்திருந்தால், இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலே, " ஊதிய விகிதத்தில் பத்து சதவீதம், ஐந்து சதவீதம் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்து பரிந்துரை செய்திருக்கிறது " என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவேதான் பிரச்சினை வந்திருக்கிறது.

இன்னுமொன்று. சென்னை பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு மருத்துவப்படியாக 50 ரூபாய் தரப்படுகிறது. அதைப் போலவே வேளாண்மைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் தர வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு குழுவை அமைப்பதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட துணை வேந்தர்கள், நிதிச் செயலாளர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து பேசினால், மிகச் சுலபமாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். அந்த வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் கல்வித் துறையும் மிக முக்கிய பங்கு வகிக்க வேண்டியதாக இருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் 5ஆம் தேதி துணை வேந்தர்களை அழைத்திருப்பதாகவும், அவர்களிடையே கலந்து பேசி எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் பொதுவான நியதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற வகையிலே கருத்து பரிமாற இருப்பதாகவும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்த முயற்சி ஒரு பக்கத்திலே மேற்கொள்ளப்படும். அது மட்டுமல்லாமல், நிதிச் செயலாளர் போன்றவர்களையும் அழைத்து நாங்கள் கூட்டாகப் பேசுவதற்கு முடிவு செய்திருக்கிறோம்.

### 5. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு நிதிநிலை அறிக்கையின் பக்கங்கள் அதிகப்படுத்திக் கொண்டே செல்லப்படுகின்றன. இந்த ஆண்டு 76 பக்கங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சார்பிலே கருத்துக்களைச் சொல்லுவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன, என்னென்ன விடப்பட்டிருக்கின்றன என்று பக்கம் பக்கமாகத் தேடிப் பார்த்தேன் மிகுந்த சிரமத்திற்கிடையே. ஏதேனும் பாராட்டாவிட்டால் இங்கே வழக்கமாக என் பேச்சில் குறுக்கிடக் கூடியவர்கள் பின்னால் குறுக்கிட்டு நல்லவற்றைப் பாராட்டக் கூடாதா என்று கேட்பார்கள் என்பதற்காக பாராட்டக்கூடிய அளவிலே ஏதேனும் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்து ஒரு சிலவற்றை இதிலேயிருந்து எடுத்தேன். இதிலே குறைந்த பட்சம் ஓய்வூதியம் ரூபாய் நூறிலிருந்து 125 ரூபாயாக உயர்த்தப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மராட்டிய மாநிலத்தில் ஓய்வு பெற்றவர்களின் நலனைக் கவனிக்க என்று ஒரு அமைச்சரையே ஏற்படுத்தியிருக்கிறார்கள், அமைச்சகத்தையே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை முன்மாதிரியாகக் கொண்டு நீங்களும் ஏன் செய்யக்கூடாது என்று ஆலோசனை சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஒரு கடைநிலை ஊழியருடைய ஊதியத்தை விட குறைந்திருக்கக்கூடாது என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை ரூபாய் 25-லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ரூபாய் ஐம்பதாக அதை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி, தினப்படி, நிலையான பயணப்படி ஆகியவை உயர்த்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளிவிடாமல் மார்ச் மாதத்திலிருந்து தருவதற்கு முயற்சித்தால் இன்னும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



மேலும் பாராட்ட வேண்டுமென்று சொன்னால், மண்ணெண்ணெயின் மீதான 8 சதவீத வரியை 4 சதவீதமாகக் குறைத்திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். பாராட்டுகிற அதே நேரத்தில், வரி குறைக்கப்பட்டதால், ஏற்கெனவே லாரிகளில் மண்ணெண்ணெயை ஊற்றி ஓட்டும் லாரிகள் மேலும் அதிகமாக மண்ணெண்ணெயை உபயோகிக்கும் நிலை ஏற்பட்டால், பஞ்சம் ஏற்படும். அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாராட்ட வேண்டுமே என்பதற்காக மிகுந்த சிரமத்திற்கிடையே இவைகளையெல்லாம் தேடிக் கண்டுபிடித்தேன்.

ஆனால் இந்த நாட்டிலே இருக்கக் கூடிய ஐந்து இலட்சம் அரசு ஊழியர்களையும், இரண்டரை இலட்சம் ஆசிரியப் பெருமக்களையும், ஆக மொத்தம் ஏழரை இலட்சம் அரசு ஊழியர்களை எந்த அளவிற்கு அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள், அரசாங்கத்தினுடைய இயந்திரத்தை இயக்குகின்ற சமுதாயத்தினரை எந்த அளவிற்குக் கேவலப்படுத்துகிற அளவிற்கு அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மெத்த வருத்தமாக இருக்கிறது.

வருவாயைப் பார்த்தால், இந்த ஆண்டு 1,569.44 கோடி ரூபாய். பற்றாக்குறை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், ரூபாய் 1,773.93 கோடி அளவிற்கு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிற இந்த நிலையில் கூட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியவர்களுக்கு எதுவும் செய்யவில்லையென்றால், வேறு எப்போது செய்யப் போகிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மைய அரசு அகவிலைப்படி உயர்வை வழங்குவதற்காக 350 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறது. மைய அரசு அகவிலைப்படியை உயர்த்துகிற ஒவ்வொரு நேரத்திலும் மாநில அரசும் உயர்த்தக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. நீங்கள் ஏன் தரவில்லை என்று நாங்கள் கேட்டால், அடுத்தமுறை நிதிநிலை உயர்ந்தால், அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி இந்தச் சமுதாயத்தினரை அதாவது ஆசிரியர், அரசு ஊழியர்கள் சமுதாயத்தினரை அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள். 200 கோடி ரூபாய் மதுவிலக்கு ரத்தினால் வந்திருக்கிறது. அரசினுடைய வார்த்தையிலே சொல்ல வேண்டுமென்றால், மதுவிலக்கைத் தளர்த்தியதால், 200 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வந்திருக்கிறது. இவ்வளவு வருமானம் வந்திருக்கக் கூடிய இந்த நேரத்தில் கூட அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் செய்யவில்லை என்றால், ரூபாய் 177 கோடி ரூபாய்க்கு நிதிநிலை தயாரித்துச் செயல்படுகிறபோது, அவர்களுடைய ஒரு கோரிக்கையைக் கூட அரசு பரிசீலிக்கவில்லை என்றால், அந்த அளவிற்கு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை அலட்சியப்

படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் மீது அரசுக்கு அந்த அளவிற்கு கோபம் இருக்கிறது என்று தெரிய வருகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலையில் இந்த சமுதாயத்தினரைப் பார்த்து ஒத்துழைப்புத் தாருங்கள் என்று அரசினர் கேட்கிறார்கள். இதெல்லாம் எப்படிக் கிடைக்கும்? நிதிநிலை அறிக்கை சென்ற ஆண்டு 56 பக்கம், இந்த ஆண்டு 76 பக்கம். இந்த நிதிநிலை அறிக்கை பலூன்போல் பெருத்திருக்கிறது. அதாவது காற்றடித்து ஊதப்பட்ட பலூன். இதில் ஊசி புகுந்தால் 'பட்' என்று வெடித்துவிடும். அது அரசுக்கே தெரியும்.

(முற்பகல் 11-00)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அரசியல் விமர்சகர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கத்தினர் அறிக்கைகளை விமர்சித்திருக்கிறார்கள். அந்த விமரிசனங்கள்தான். ஊசிகள். அந்த ஊசிகள் குத்தியதால் பஞ்சர் ஆன பலூனாக பட்ஜெட் ஆகியிருக்கிறது. இதிலே மிகப் பெரிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கெல்லாம் நாம் ஒருவேளை உணவுத் திட்டம் என்று கொண்டு வந்து உணவு அளிக்க இருக்கிறோம். அது சத்துணவுத் திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது என்ன புதிய திட்டம்? இது மிகப் பெரிய ஏமாற்று வேலை. அதற்குக் காரணம் சொல்கிறேன். 6 முதல் 14 வயது வரையில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு இப்போது இலவச மதிய உணவு அளிக்கப்படுகிறது. இந்த வகையில் மொத்த எண்ணிக்கை 21 இலட்சம் குழந்தைகள் வருகின்றனர். அடுத்து 2 முதல் 5 வயது வரையில் பாலவாடி பள்ளிகளில் சத்துணவு பெறும் குழந்தைகள் மொத்த எண்ணிக்கை 20 இலட்சம் என்று வருகிறது. அதற்கு அடுத்து மத்திய அரசு திட்டம் ஒன்று கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டத்திலே 1 முதல் 7 வயது வரையில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை சத்துணவுத் திட்டம் இருக்கிறது. சத்துணவு அளிக்கச் சேவை நிறுவனங்கள் முன்வந்தால், 90 விழுக்காடு மத்திய அரசு தருவதாகச் சொல்லி இருக்கிறது. அப்படி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இங்கே சொல்லி இருக்கின்றார்களே குழந்தைகளுக்கு இலவச உணவுத் திட்டம் என்று. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என சிலர் பாராட்டலாம். ஆனால் எத்தனை பேர்களுக்கு, எந்த அளவுக்கு என்று சொல்லியிருக்கிறார்களா? நிதிநிலை அறிக்கையிலே எங்கே புள்ளி விவரம்? எங்கே அதற்கான திட்டம்? எங்கே நிதி ஒதுக்கீடு. இதையெல்லாம் நான் இங்கே கேட்க விரும்புகிறேன். 'சோறு பிசைய வழியில்லாமல், கை பிசைந்து கொண்டிருப்பவர்களுக்கு நீங்கள் உணவளிப்பதாகக் கூறி சொல்லைத்தான் பிசைந்திருக்கிறீர்கள். நாங்கள் அதற்கான நிதி எங்கே இருக்கிறது என்று தேடித் தேடித்





தலையைப் பிசைந்து கொண்டிருக்கிறோம். ஒரு திட்டம்தான் வைத்திருக்கிறார்கள். அதற்கான நிதி எங்கே என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே திட்டம் அறிவித்திருக்கிறார்கள். வீட்டிற்கு ஒருவருக்கு வேலை அளிப்பதாகச் சொன்னார்கள். அது என்ன ஆயிற்று? அது போலத்தானா இந்தத் திட்டமும்? குழந்தைகளுக்கு இலவசக் கல்வி என்று தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் எல்லாம் கேட்டோமே, போராடினோமே. நீங்களும் ஒப்புக்கொண்டு அறிவிப்புத் தந்தீர்களே? இரண்டு ஆண்டுகள் ஆகியும் இதுவரை வழங்கப்படவில்லை. ஒருவருக்கும் தரவில்லையே அம்மாதிரித் திட்டம்தானா இந்தத் திட்டமும்? வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை என்று சொன்னார்களே. அப்படிச் சொல்லிவிட்டு இப்போது அத்தனைப் பட்டதாரிகள் எங்கே என்று தேடிக்கொண்டிருக்கிறார்களே, அது போலத்தானா இந்தத் திட்டமும். மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையிலே திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறதா? பெருந்தலைவர் காமராஜர் கல்விக்காகச் சோறு போட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர் அவர்கள் வோட்டு பெறுவதற்காக சோறு போடுகிறேன் என்று சொல்கிறார். அதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே திட்டம் இருக்கிறது. 100 கோடி ரூபாய்த் திட்டம், குழந்தைகளுக்குச் சோறு போடும் திட்டம். அதற்குரிய வருமானம் எங்கே? 38 கோடி ரூபாய் வரி போடுகிறோம் என்று சொல்கிறார்கள். அதிலேயும் ஓய்வூதியத்திற்கு 7 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். மீதம் இருப்பது 31 கோடி ரூபாய். ரூ. 100 கோடி எங்கே நிதி இருக்கிறது? நிதி இல்லை. அதைக்கூட என்ன சொல்வார்கள்? ஓய்வூதியம் என்று ரூ. 7 கோடி ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கியாகிவிட்டது என்று மக்களைப் பார்த்துச் சொல்வார்கள். "பாருங்கள், மக்களே உங்களுக்கும் செய்ய எண்ணினோம். ஆனால் இந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அவசியம் ஏற்படுத்தியதால் உங்களுக்குப் போட்ட திட்டம் பாழாகிவிட்டது" என்று எங்கள் தலைமேல் பழி போடவா இருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அங்கத்தினர் அவர்கள், "மாண்புமிகு முதல்வர் அவர்கள் வோட்டுக்காக சோறு போடுகிறேன் என்று சொன்னார்கள்" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லவில்லையே.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** என்னுடைய கருத்தைத்தான் சொல்கிறேன். குழந்தைகளுக்கு ஒருவேளை உணவு போட வேண்டாமா? "பிள்ளைப் பாச உணர்வை உங்கள் முன் நிறுத்துகிறேன், பாச உணர்வை உங்கள் முன் வைக்கிறேன், என்று சொல்கின்றீர்களே, எங்கள் வீடுகளிலும் பிள்ளைகள்

இருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகள் பாசத்திற்கு, நாங்கள் எங்கே போவது ? யாரைக் கேட்பது? அவர்களை எங்கே கொண்டு போய் நிறுத்துவது, யாரைப் போய் நாங்கள் பாச உணர்வை கேட்பது? இந்த பட்ஜெட்டிலே வரி போட்டிருக்கின்றீர்களே, இந்த வரிகள் யாரைப் பாதிக்கும் ? கைத்தறித் துணிக்கு 5 சதவிகிதம் வரி போட்டிருக்கிறீர்கள். இனி இந்த நாட்டிலே பாண்டிச்சேரியிலிருந்து மது இறக்குமதியாகிறது. கர்நாடகத்திலேயிருந்து பூட்டுத் துணி இறக்குமதி ஆகும். இந்த வரியால் துணி விலை உயராதா ? இப்போது இந்த நாட்டிலே உள்ள நெசவாளிகள் இந்த வரி உயர்வை எதிர்த்து கதவடைப்பு செய்கின்றார்கள். ஊர் பூராவும் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்களுக்காகவே வாழக்கூடிய நமது தலைவர் அவர்கள், எப்படி என்ன மனம் புழுங்கிக்கொண்டிருக்கிறார்களோ? அவர்களுக்காகக் கண்ணீர் விட்டவர்கள். அவர்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்ளோ வெளியே சொல்ல முடியாமல்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் புழுங்கிக்கொண்டிருப்பதெல்லாம், இப்போது அங்கத்தினர் அவர்கள் விரைவிலே முடிக்க வேண்டும் என்பதுதான்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் பேசும் போதுதான் அந்த எண்ணமே வரும். அது எனக்கு நன்றாகத் தெரியும். நான் அதைப் பற்றிப் பிறகு வருகிறேன். பொது விற்பனை வரியை 9 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். இது யாரைப் பாதிக்கும் ? என்.ஜி.ஓ.க்களைப் பாதிக்கும். ஆசிரியர்களைப் பாதிக்கும். விலைவாசிகள் மேலும் உயரும். பலமுனை வரியை 4 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதனால் விலைவாசி மேலும் உயரப் போகிறது. மோட்டார் வாகனங்களின் மீதான விற்பனை வரியை 10 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதனால் பஸ் கட்டணம் உயரும். இப்போதே ஆகாய அளவுக்கு உயர்ந்து இருக்கிறது. செவ்வாய் கிரகத்திற்கே கூட உயர்ந்து போய்விடும். நம்மாலேயே பிடிக்க முடியாது. அந்த அளவுக்குப் போய்விடும். இந்த வரிகள் எல்லாம் யாரைப் பாதிக்கின்றன என்றால், நடுத்தர வர்க்கத்தினரை பாதிக்கின்றன. வரி உயர்வு ஆசிரியர்களை, அரசு ஊழியர்களைப் பாதிக்கிறது. இப்படி பாதிக்கக்கூடிய வரிகளையெல்லாம் போட்டுவிட்டு, நாங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்கிறீர்கள் எப்படி ஒத்துழைப்பு தர முடியும்? என்.ஜி.ஓ.க்கள் எல்லாம் வருகிற 7 ஆம் தேதி மாநிலம் பூராவும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். போராட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். போராட்டத்தை அரசு உருவாக்குகின்றது. ஒன்றிரண்டை நிறைவேற்றச் சொல்லிவிட்டு, மற்றவற்றைப் பின்னர் கவனிக்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். ஒரு காலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'ஏமாற்றாதே, ஏமாற்றாதே' என்று பாடினார்கள் எனக்கு அது நன்றாக நினைவு இருக்கிறது. இப்போது குழந்தைகளுக்கு உணவு அளிக்கப் போவதாகத் திட்டத்தைச் சொல்லிவிட்டு குழந்தைகள் உண்ணும் பிஸ்கெட்டுகள், மிட்டாய்கள், சாக்லேட்டுகள் மீது வரி போட்டிருக்கிறீர்கள். இப்போது யாரை ஏமாற்றுகிறீர்கள் ? ஏமாற்றாதே என்ற அவர்கள் ஏமாற்றுகிறார்கள். முடிவில் அவரே ஏமாறப் போகிறார் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தனை வரிகள் போட்ட பிறகு, அகவிலைப்படியை உயர்த்த வேண்டுமென்று கேட்டால், அதற்கு என்று நிதி ஒதுக்கியிருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை. போனஸ் வேண்டுமென்று கேட்கிறோம். எக்ஸ்-கிரேஷியா தொகை என்ற அடிப்படையில் பிற மாநிலங்களில் தரப்படுகிறதே அதையாவது தர வேண்டும் என்று கேட்கிறார்கள். அதைத் தர முன்வந்திருக்கிறார்களா ? ஒரு வழிப்பயணச் செலவு என்பதை மாற்றி இரண்டு வழிப் பயணச் செலவு வேண்டும் என்று கேட்டார்கள். அதைத் தர முன்வந்தார்களா ? இதையெல்லாம் செய்ய மாட்டோம். ஆனால் பிள்ளைப் பாச உணர்வைக் காட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பிள்ளைப் பாச உணர்வு எங்களுக்கும் இருக்கிறது. நாங்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர் பணிக்கேற்ற அந்தஸ்த்திலே வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். நாங்கள் பிள்ளைப் பாச உணர்வை வேறு எங்கே போய் கேட்பது ? இங்கே அண்ணா அவர்கள் பொன்மொழியைச் சொன்னார்கள். எங்கே தட்டி எடு, எங்கே தட்டிக் கொடு என்று சொன்னார் சொன்னார்கள். எங்கே தட்டி எடு, எங்கே தட்டிக் கொடு என்று சொன்னார்கள்? வரி என்று சொல்லி ஏழைகள் தலையிலேயா தட்டச் சொன்னார்கள் ? ரூ. 100 கோடி திட்டம் என்று சொல்லிவிட்டு செல்வந்தர்களிடம் பிச்சை கேட்கிறார்கள். சமூக நல நிறுவனங்களிடம் பிச்சை எடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் அண்ணாவின் பொன்மொழியைத்தான் பின்பற்றுகிறோம். என்று சொல்கின்றார்கள். எங்கே தனவந்தர்களிடம் தட்டி எடுத்திருக்கிறோம்? ஏழைகளை, நடுத்தர வர்க்கத்தினரைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கினார் அண்ணா அவர்கள். ஆனால் இப்போது "தட்டிக் கொடு" என்பதற்குப் பதிலாக "தட்டிக் கெடுக்கிறார்கள்" என்றுதான் சொல்ல வேண்டும். அண்ணாவினுடைய பொன்மொழியைச் சுட்டிக்காட்டி விட்டால் போதுமா? அது எப்படி சரியாக வரும்? அண்ணாவினுடைய பொன்மொழியை யார் வேண்டுமானாலும் சுட்டிக் காட்டலாம் என்ற நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்குப் பட்டை நாமம் போட்டிருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை.

மீனாட்சிசுந்தரம் சொல்லவில்லை, என்னைச் சார்ந்த ஆசிரியர் மன்றம் சொல்லவில்லை, இந்த வார்த்தையை, நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள். அவர் களுடைய நிர்வாகத்தின் கீழ் இருக்கின்ற பொது மருத்துவமனையிலே ஒரு நோட்டீஸ் ஒட்டியிருக்கிறார்கள. அந்த நோட்டீசிலே பெரிய நாமம் போடப் பட்டுள்ளது. அந்த நாமத்திற்கு மேல் பகுதியில் 'தமிழக அரசு பட்ஜெட்டில் அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட மாபெரும் சலுகை' என்று போட்டி ருக்கிறார்கள். கீழே தமிழக அரசுக்கு நன்றி என்று எழுதியிருக்கிறார்கள். அந்த நோட்டீஸ ஒட்டப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. அரசாலே அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினர் சொல் கிறார்கள். நாங்கள் சொன்னால் எதிர்த் தரப்பில் சொல்கிறோம் என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நோட்டீஸ் எங்கே வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் ஒட்டி வைக்கலாம். ஆகவே நோட்டீஸ் ஒட்டுவதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அவருடைய கருத்தைப் பலப்படுத்த எடுத்துச் சொல்கிறார் என்று கருதுகிறேன். அது எனக்குத் தெரியவில்லை. நோட்டீஸ் ஒட்டுவது மிக எளிது. இங்கே அது பிரச்சினை அல்ல. ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்க ரூ. 100 கோடியில் ஒரு திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே பலபேர்கள் பயன் அடைகிறார்கள். அதற்காக பலபேர்கள் பாராட்டு கிறார்கள். எத்தனையோ பேர்கள் நன்மை அடைவதைப்பற்றி வாழ்த்திப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் "என்பதை நமது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூட மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்கள். இது வருங்காலத் திலே வோட்டு வாங்குவதற்காக என்று சொன்னார்கள். அவர் என்ன நினைக்கிறார்கள் ?, இப்படி செய்வதன் மூலமாக மக்கள் நமக்கு ஆதரவு தருகிறார்கள் என்று கருதுகிறார்களா என்பது எனக்குத் தெரியாது.

(முற்பகல் 11—10)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, நான் சொல்ல வந்தது, எதிர்த் தரப்பிலே இருக்கிறவர்கள்தான் இப்படிப்பட்ட கருத்தைக் கூறுகிறார்கள் என்று கருதிவிடாதீர்கள். அரசு ஊழியர்கள், நடுநிலைமை யாளர்கள், 'பட்டை நாமம்' போட்டு இதுதான் சலுகை என நோட்டீஸ் ஒட்டு கிறார்கள். உங்களால் அங்கீகரிக்கப்பட்ட சங்கம், உங்களால் செல்லப பிள்ளை என அழைக்கப்படும் சங்கம், அமைச்சரவர்களே செயலாளராக மாறி பணி புரியும் சங்கம், துறை அதிகாரிகள் செயலாளர்களாக மாறி ஊக்குவிக்கும் சங்கம், அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள் . .





**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அமைச்சரவர்கள் செயலாளராக இருக்கி றார் என்று எந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லு கிறார்கள் ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** செல்லுகின்ற இடங்களிலேயெல்லாம் இந்தச் சங்கத்திலே எல்லோரும் சேருங்கள் என்று அவரே சொல்லுவதால், சொல் கிறேன். அவர் வேண்டுமானால் மறுக்கட்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் அப்படி எந்த இடத்திலும் சொல்லவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சொன்னாரா, சொல்லவில்லையா என்பது உறுப்பினரவர்களுக்குத் தெரியாது. எனக்கும் அமைச்சருக்கும் தெரியும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அமைச்சருடைய கருத்து என்பது வேறு. அமைச்சர் அந்தச் சங்கத்தின் செயலாளரா என்றுதான் கேட்கிறார்கள். எந்த இடத்திலும் எந்த அமைச்சரும் ஒரு சங்கத்திற்குச் செயலாளராக இருக்க முடியாது. அமைச்சராக இல்லாத நேரத்தில், சங்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியிருக்கலாம். அமைச்சரே ஒரு சங்கத்தின் செயலாளராக இருப்பது என்பது முடியாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, 'செயலாளர் போல்' என்று மாற்றிக் கொள்ளுங்கள். அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற் கில்லை. அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினர் அளித்த அறிக்கையிலே, விலை வாசி உயர்வால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வாழ்க்கைத்தரம் பின் தங்கி யுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. எழுத்தளவிலான நன்றியும், நம்பிக்கையும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது என்று சொல்லியிருக்கிறார்கள். இவர் கள் யார் ? அவர்களுடைய செல்லப் பிள்ளைகள், இப்படி அறிக்கை தந்திருக் கிறார்கள் என். ஜி. ஓ. சங்கத்திலேயே, சி & டி பிரிவுக்கு சங்கம் ஏற்படுத்தி, அவர்களை உங்களுக்கு ஜால்ரா போட வைத்து, அவர்களை இயக்கி வருகி றீர்கள். அவர்கள் தந்த அறிக்கை . . .

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவரவர்களே, நண்பர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எதை வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். அது அவருக்குள்ள உரிமை. அவர் பேசும்போது நல்ல வார்த்தைகளைப் பேசினால்தான், அவர் சொல்லுகிற பிரச்சினைக்கு நிச்சயமாகப் பலன் கிடைக்கும். அவர்களும் அப்படிப் பேச ஆரம்பித்து, நானும் அதே வழிக்குப் போக ஆரம்பித்தால், அது நல்ல முறையில் அமையாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாற்றுத் தலைவரவர்களே, 'ஜால்ரா' என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், அது அரசு ஊழியர்களை அவமானப்படுத்தும் சொல்லாக இருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, நான் 11-05-க்குத் தான் பேச ஆரம்பித்தேன். அதற்குள் எப்படி முடிந்தது என்று தெரியவில்லை. இன்னும் 10 நிமிடங்களுக்குள் முடித்து விடுகிறேன்.

அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஓய்வு பெற்றால் 10,000 ரூபாய்; இறந்தால் 20,000 ரூபாய், நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப் படி ஆகியவற்றைத் திருத்தி அமைத்தல், கருணைத் தொகை கொடுத்தல் ஆகியவை பற்றி எந்த அறிவிப்பும் நிதிநிலை அறிக்கையில் இல்லாதது வருந்தத்தக்கது. அதை மாற்றி அமைக்க வேண்டும். இந்த அறிக்கையை அரசு அலுவலர் கழகத்தினர் தந்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் எல்லாத் தரப்பினரும், அரசுக்கு வேண்டியவர்கள் என்று சொல்லப்படுபவர்களும், அரசால், எதிர்க்கப்படக்கூடியவர்கள் என்று சொல்லப்படுபவர்களும், இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எதுவுமே இல்லை, அவர்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள், ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள், பெருத்த ஏமாற்றம் தரப்பட்டிருக்கிறது என்று சொல்லுமளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் பிரதிநிதியாக நான் இருக்கும்போது, இதைச் சுட்டிக் காட்டாமல் வேறு எதைச் சுட்டிக்காட்டுவது? எனவே அதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாவலர் அவர்கள், மிகச் சிறப்பாகத் தன்னுடைய எழுத்த வன்மையைக் காட்டும் வகையில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "வா பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்வான் செய்க வினை" என்ற குறளை எடுத்துச் சொல்லி, அதற்குப் பொருளும் சொல்லியிருக்கிறார்கள். பொரு ஈட்டும் வழி வகைகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளங்களை உருவாக் நாட்டில் ஏற்படும் இடையூறுகளை ஆராய்ந்தறிந்து, அவற்றை நீக்கு வல்லமை பெற்றவனே அரசவினையை ஆற்ற வேண்டும் என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். நான் அதிலே மாறுபட்டவனல்ல, ஆனால் நி





நிலை அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், 271 கோடி ரூபாய் மின் துறைக்கு ஒதுக்குகிறோம்; அப்படி ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது, அதிலே நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது, இருந்தாலும் ஒதுக்குகிறோம்; அதனால்தான் நிதிநிலை அறிக்கை பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கும்போது, அந்த மின்சாரத் துறையிலே ஏற்படும் ஊழல்களை, அதிலே ஏற்படும் நிர்வாக முறைகேடுகளைச் சுட்டிக் காட்டிய பிறகு, அதைத் தீர்க்க இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மேற்கொண்டு 5 நிமிடம் ஆகிவிட்டது. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால், அடுத்த முறை பேசலாம். 25 நிமிடங்கள் பேசிவிட்டார்கள். சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆகவே எப்போது அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது? அதிலுள்ள முறைகேடுகளை நீக்கினால், இது போன்ற பற்றாக்குறை வராதென்று குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் ஆளுநர் உரையிலே பதிலளிக்கும் போது ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டு விட்டதாக 1981ஆம் ஆண்டு சாதனை மலரில் வெளியிடப்பட்டுள்ளதே; தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதாக உண்மைக்கு மாறான தகவல்கள் வந்துள்ளனவே என்று கேட்டபோது, "வீட்டு வசதி வாரியம் பற்றி சற்று பொறுத்துக் கொள்ளுங்கள், சில நாட்கள் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்று அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதை என்ன கருதிக் கொண்டோம் என்றால், நிதிநிலை அறிக்கையில் அதை அறிவிக்கப் போகிறார்கள். ஆகவே, 'சில நாட்கள்' என்று சொல்கிறார்கள் என்று நினைத்து மகிழ்வோடு இருந்தோம். இப்போது நிதிநிலை அறிக்கையில் வந்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. வீட்டு வசதி வாரியம் ஆசிரியர்களுக்கு அமைக்கப்படுவதாகச் சொல்லவே இல்லை. முதல்வர் அவர்கள் நல்ல நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு, அந்த நம்பிக்கையை நிறைவேற்றாமல் இருப்பதைப் பார்த்து வருத்தம் தெரிவிப்பதைத் தவிர வேறு எதைச் செய்ய முடியும்? ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அரசு உருப்படியாக எதையும் செய்யவில்லை. அகவிலைப் படியை உயர்த்துங்கள் என்று பேசிக்கொண்டு, அதிலேயே நின்றுவிடுவோம் என்று கருதி மற்றவற்றைப் பற்றி எதுவும் எழுப்ப மாட்டோம் என்று கருதி, அதற்கு நிதி ஒதுக்காமல் விட்டிருக்கிறார்கள். ஒதுக்க வேண்டியது கடமை. அதைக்கூட ஒதுக்கவில்லை என்று

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1982 மார்ச் 3

கருதுகிறார்கள். நாங்கள் அதைப்பற்றிப் பேசியதற்குப் பின்னாலே, பதிலுரையில் அகவிலைப்படி உயர்வு ஒன்றிரண்டைச் சொல்லி அத்தோடு நிறுத்திக் கொள்ளலாமென்று நிதியமைச்சரவர்கள் நினைக்கலாம். நாங்கள் அதை மட்டும் சொல்லவில்லை. அகவிலைப் படி உயர்வு இன்றைய நிலைக்கு எவ்வளவு உயர்த்த வேண்டுமோ, அந்த அளவிற்கு உயர்த்தித் தந்து, அதை ஊதியத்தோடு இணைத்துத் தரவேண்டுமென்று கோரிக்கை தரக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை நிறைவேற்ற வேண்டும்.

ரூபாய் 10,000 தருவதுபற்றி ஆராய நிதி அமைச்சர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அவர்தான் நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறார். குழு நியமிக்கப்பட்டிருக்கிறது, அந்தக் குழு இன்னது செய்திருக்கிறது, இன்னது செய்யப் போகிறது, சில காலம் பொறுங்கள், இல்லையென்றால் கிடையாது என்ற அறிவிப்பையாவது நிதிநிலை அறிக்கையில் தந்திருந்தால், நிதியமைச்சர் அல்லது இந்த அரசு ஓரளவிற்காவது அரசு ஊழியர்களை, ஆசிரியர்களைப்பற்றி சிந்திக்கிறது; மதித்திருக்கிறது என்று பொருள். அவர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டு, அது ஆண்டுக்கணக்காகத் தூங்கிக் கொண்டிருக்கிறது. அதுபற்றி விளக்கிச் சொல்லும் நிலைமை இல்லை என்னும்போது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எப்படி அதைப் பாராட்ட முடியுமென்று எதிர்பார்க்கிறார்கள்?

அதுமட்டுமல்ல. நிதிநிலை அறிக்கை சம்பந்தமாகப் பேசும்போது, பத்திரிகையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையில் இன்னின்ன வர இருக்கின்றன என்று முன்கூட்டியே வெளியிடுகிறார்கள். அப்படி வெளியிடும்போது, அதுபற்றி அரசு உண்மையிலேயே அறிவிக்க இருந்தாலும், 'பட்ஜெட் சீக்ரசி' வெளியாகி விட்டதோ என்று கருதி அதை நீக்கிவிட்டு, நிதிநிலை அறிக்கையை வெளியிடும் நிலைமைகள் ஏற்படும். சில விஷயங்களை பால் கமிஷன் அறிக்கை பற்றி வெளியிட்டது என்பது வேறு, அது செய்ய வேண்டிய கடமை. அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டியவைகளைத் தடுக்கும் முறையில் செய்யக் கூடாது. மேலும் இரகசியம் வெளிப்படாமல் காக்கக்கூடிய நிலை யாருக்கு? அரசுக்கு. அரசு திறமையாகச் செயல்பட வேண்டுமல்லவா? செயல்படவில்லையே? அந்தக் காரணத்தால் சில அறிவிப்புகள் தவிர்க்கப்பட்டிருந்தால், அதைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இவற்றை மட்டுமே சொல்லிவிட்டு, அமர்ந்துவிடுகிறேன். இப்போது மிகமிக அதிகமான துணிச்சலோடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் விஷயத்திலே அரசு செயல்படுகிறது. துணிச்சலாகச் செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு, இதிலே எதுவும் தராமல், புத்திமதி கூறியுள்ளதுதான், உங்களுக்கெல்லாம் பிள்ளைப் பாச உணர்வு வேண்டுமென்று புத்திமதி சொல்லப்பட்டிருப்பதுதான். பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் ராஜாஜி, பெரியவர் பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலேயெல்லாம் ஏதேனும் சிலவற்றையாவது ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அறிவிப்பாகத் தந்து செய்து வந்தார்களே, அவர்களெல்லாம் துணிவு குறைந்தவர்களா? அந்த அளவிற்கு திறமையுள்ளவர்கள் இல்லையா? ஆசிரியர்கள், அரசு ஊழியர்களை அலட்சியப்படுத்தினார்களா? ஏன் இந்த மரபையே மாற்றி, எதுவுமே செய்யாமல் நிதிநிலை அறிக்கையை வெளியிட வேண்டும்?



1982 மார்ச் 3]

(முற்பகல் 11—20)

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

**திரு. சி. இராமலிங்கம் (மாற்றுத் தலைவர்):** 30 நிமிடம் பேசிவிட்டீர்கள், உட்கார வேண்டும். அடுத்து திருமதி தாரா செரியன் பேசலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, தலைவரவர்களே . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** கேட்டதற்கு இணங்க 10 நிமிடம் தந்து விட்டேன். உட்கார வேண்டும். திருமதி தாரா செரியன் பேசலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** சுயேச்சை உறுப்பினர்கள் இந்த அவையில் பேசத் தடை விதித்திருக்கின்ற முறையில், வாய்ப்பு அளிக்காத காரணத்தால், என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்து அவையிலிருந்து வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்பு செய்தார்)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** 20 நிமிடத்திற்கு பதிலாக 30 நிமிடம் பேசிவிட்டார்கள். மற்றவர்களும் பேச வாய்ப்பளிக்க வேண்டாமா?

THIRUMATHI TARA CHERIAN: Mr. Vice-Chairman, I thank you for giving me an opportunity to express my very own idea, my very own view on the Budget, my own criticism—it may be constructive or may not be—my own suggestion and not as a mouth-piece or as the spokesman of anybody else. I would like to say that I am not going to listen to anything and

whether it is just or right, I will give my explanation; and as long as it is within the parliamentary language, no one should object to it. If some people are misconstruing what I say, it is their own business.

Before I go on to the Budget, I would like to explain that there are a few misapprehensions or misunderstandings among the hon. Members as to the difference between the Directorate of Social Welfare under the Government and the Social Welfare Board under the Central Social Welfare Board in Delhi. If money comes forth, just as the hon. Member opposite mentioned, it may be financial help from the State Social Welfare Board. That is where I tried to explain the position. Therefore, from now on, if the Members would like to know more about it, I am willing to give an explanation. The Directorate of Social Welfare is different from the Social Welfare Board. This must be remembered by us in future.

Now, talking about the preamble, the Hon. Minister had given a paragraph of explanation before he started the Budget Speech. It was most exhilarating and it was refreshing to note and I feel that we, the Tamilians who belong to this part of the country, have always been a part of the whole India and we are a part and parcel of India. Somehow, when we hear the speeches in this House, it seems that we forget to talk about Mahatma Gandhi or about Pandit Nehru for all that they have done for the country but we only talk about local leaders. The role of national leaders will be forgotten, if we do not lay emphasis on the work done by national leaders like Gandhiji, Pandit Nehru and others. Therefore, I am happy to note that in page 2 of the Budget speech, the Hon. the Finance Minister has made it clear that Tamil Nadu is an integral part of India which shares the trials and tribulations, and at the same time, contributes to the strength of the country. He has also referred to the new 20 Point Programme which is certainly aimed at improving the conditions of the poorer and weaker sections of the people and he has also mentioned that the State Government who-heartedly supported this programme and would do its utmost to implement it successfully. Sir, at times, when reading newspapers and magazines from cover to cover I feel hurt and I get a feeling that, perhaps, the political leaders on either side are getting so provoked that they always



talk only about a few of the leaders. I am glad that I have had the privilege of knowing the late Thiru Anna even long before some of the hon. Members of this House were born. When my husband was in office, the late Thiru Anna used to visit us. So also, the Hon. Chairman, Dr. Ma. Po. Si. is known to me for a long time. Therefore, when we speak words of tribute about particular persons and when we try to bring the names of particular persons to the forefront, let us not forget about national integration, let us not lose the national feeling and let us remember that India is a whole. I am glad that, this time, the Hon. the Finance Minister has made a particular note of that.

Sir, I now come to a point which is in sequence. Recently, I saw a report stating that the standard of English-teaching had gone down and that the teachers were not able to impart knowledge of the English language in the way it should be done. We have adopted the two-language formula and that was the idea of our late Thiru Anna. Recently, when I visited some students' camps, my first impression was that the young students should not be denied the privilege of acquiring what is best in knowledge, which English can provide. Therefore, we should not pose a threat to this lingua franca by looking at it through dark glasses. No doubt, it is the responsibility of Government and that of all well-meaning people to preserve our own language and culture. But, the onus should not be placed only on our own language and we should be able to interpret and understand things mentioned in other languages also. Today, we cannot get away from the fact that English is the strongest unifying factor of our national life. Even, in international communication, its value is not to be under-estimated. In a multi-lingual nation such as ours, a common medium of communication is vital for social cohesion, for mutual understanding and for cementing goodwill. As we all know, English has a prestigious position in the matter of imparting professional knowledge, particularly in the field of science and technology. Therefore, our youth should not be deprived of the privilege of learning in English. In India, we have voluntarily adopted the policy of having a national language and also English as a cementing language. Even now, our Constitution is only in English. We have to remember that the trends of provincialism can never fall in line with the trends of civilisation and under-

nisation. If we want to be pragmatic, realistic and practical, we have to accept the importance of English. We should cultivate that language to our best advantage so that the people belonging to the younger generation of Tamil Nadu will not be the losers by finding themselves in a position in which they will not be able to take part in various efforts at the all-India level and at international levels. Therefore, I request that steps should be taken to see that the teachers of English language are given some refresher courses so that they may impart the knowledge of English language in a proper way.

Sir, in the Budget Speech of the Hon. the Finance Minister, both in the preamble and in the concluding paragraph, suggestions and recommendations of the Members have been invited. In the past, I have been sitting here, listening to several heated debates on the question of conversions. I have been pleading, from the time of my entry into this House, that concessions and privileges and reservation should be based on socio-economic backwardness and not on considerations of caste and community. The Hon. the Chief Minister once made a promulgation to that effect. The matter went before the High Court and the concept of socio-economic backwardness was fully supported by the High Court, though not by a Full Bench. I hope that the Hon. the Chief Minister will be able to revoke that order and see that all people, irrespective of caste and creed, as long as they are poor, get all the concessions that are there. Coming to the question of conversions, I have been a silent spectator of the discussions that have taken place in this House on the matter. What I feel is that the switch over to another religion does not happen solely for any one particular reason. It may be that sometimes such conversions take place owing to the convictions of the persons concerned. But, sometimes we also see that they are prompted by socio-economic considerations. The latter certainly appears to be the cause of mass conversions to Islam that took place in the southern parts of the State since the last year's Budget Session. It is but natural that it caused much anguish and resentment in the Hindu circles. But, there is no real evidence to show that any of the conversions took place owing to a lure of better material prospects. We do not have the real, stark naked truth before us. But, we cannot forget the fact that even the most subservient human being cannot possibly take more than what he



is taking already. Social injustice and economic deprivation have been the curse of the caste system in India. We have talked of secularism and of equality of all citizens. According to our Constitution, the rights of the so-called lower castes are protected by law and any violations are to be severely punished. Yet, all these are only in theory. All over the nation, members of Scheduled Castes, including our Adi Dravidars, are regarded as sub-human. Trey are forced to remove their foot-wear before walking through a public place. Their women are denied the right of taking water from the village tank. Though they are in the worst condition, they are not able to speak out their grievances.

(முற்பகல் 11-30)

The mass conversion in the south has resulted in kindling the conscience of the Hindus and that is a very good sign. There is one thing which we should subject to introspection. We must not consider that there is change of heart because of the expression of goodwill, as it might well be due to the fear that the members of a particular religion might diminish. The same kind of treatment should be afforded to those belonging to Christianity. Though there are inter-caste marriages and such other things, we should all see to it that the last Sudra is considered equal to the highest caste-born man. The social leaders should see that equal opportunity is given to the under privileged. The reservation helps them to get certain seats and jobs but if it is based upon the religion of the person, it will be very bad. They should be given proper education so that they may use their education to better their lives. Therefore, the time has come when we have to think about a new way of helping them rather than through reservation. Only because of social injustice, the people resort to change of religion and it will not be due to any inducement or monetary gain, because as human beings, they have also got some self-respect. Therefore, I hope all our members would be able to join together to root out the caste system which is the bane of society.

Coming to the Budget proposals, I want to give my brief review: though I am not very clever in doing it, I am able to understand that there are some good proposals in the budget

and if they are implemented in a time-bound scheme and if we fix a time-limit to achieve the target, I am sure that many of the promises can be fulfilled.

Now, coming to the proposal to provide one square meal a day, it has been my 24 hour problem. It is a stupendous problem because we have to provide one square meal a day to children of the age group of 2 to 10 years. But, Sir, with due respect to the persons concerned, I wish to say that the problem has not been tackled in right earnest. But I know during the drought last year, within 2½ months we were able to spend 2½ crores of rupees with the help of the Collector and also with the participation of the people. Therefore, I want to emphasize the necessity for people's participation. The village women came forward and helped in the distribution of food. The present scheme which is of great magnitude cannot be compared to drought relief measures. If we work conscientiously, we will be able to succeed. The money that is being allocated should go to the people for whom it is intended and voluntary organisations should be encouraged to participate in the programme. An I.A.S. Officer should also be posted at the development block level for three months in a year so that there are no intermediaries and the people can come forward to help implementation of the scheme. Sir, I can tell you that the implementation of this scheme has got its own problems. Sometimes, there may be drop-outs in the schools. The children may have their food and go away. There is no point in giving the children midday meals and then sending them away. There are so many ways in which the people can be brought into the picture while implementing the scheme. Now, the Government of India want to eradicate leprosy. There are several other schemes also. Instead of restricting the implementation of such schemes to the children at the school-level only, we should have schemes for the benefit of all the children. A five-year old at school may be having half-a-dozen younger brothers and sisters at home because the child's mother might have had triplets in a delivery. Therefore, if the scheme is to be a success, instead of thrusting the whole scheme on the villagers, and pushing the scheme down the throats of the villagers, we should get the co-operation of the women and also make use of the work of the voluntary organisations. There are hundreds of





voluntary organisations which are willing to come forward and participate in the scheme. Their services may be utilised and the scheme may be worked out properly.

Sir, in the present system, we are having many small schemes for the welfare of the Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes living in the villages. But, I wonder why there should be separate hostels for Harijan women alone. When the Government are encouraging inter-caste marriage between different castes, I do not know why they could not bring about an integration by making girl-students belonging to other communities also stay in the hostels which are now meant only for the Adi Dravida women. The same thing can be done in the case of Boys' hostels also. The Government must make use of the experience, knowledge and willingness of the voluntary organisations in the matter and bring about that integration. It is not being done now and I do not know whether there is any political reason for it or not.

Sir, another point which I want to stress is that we cannot successfully implement any scheme if we have agencies which function as water-tight compartments. Now, the site selected for putting up a colony for Adi Dravidas is generally a low-lying land. At the same time, we want to improve the irrigation facilities in the adjoining fields and encourage the sinking of tube-wells, etc. When the entire area comes under irrigation, what happens is that the area where the Adi Dravidas live gets water-logged. I do not know why we should set apart separate areas for people like the Adi Dravidas to live aloof. We have to realise that the time has come when we should have an integration and we should look at things from a different angle. So long as the perpetual segregation of different communities remains and as long as the trend of speaking in terms of North India and South India continues, our society will never be a united whole but will only be a conglomeration of small units each belonging to a different caste.

Sir, with these words, I conclude my speech.

திரு. ஆர். டி. சித்தாபதி : தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு சென்னை மாநகருக்காக 9 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னை மாநகர் ஏன் இந்த அளவுக்கு பின்தங்கிச் செல்கிறது என்பதனை எங்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அதற்கு ஏதாவது அரசியல் பின்னணி இருக்குமா என்ற அச்சமும் இருக்கிறது. ஒருவேளை சென்னை மாநகரமே ஆளும் கட்சிக்கு சாதகமாக இல்லை,. இங்கு இருக்கின்ற வாக்காளர்கள் ஆளும் கட்சிக்கு எதிராக இருக்கிறார்கள், ஆகவே, சென்னை மாநகரைக் கவனிக்காமல் விடவேண்டும் என்று தமிழகத்தின் முதலமைச்சர் விரும்புகிறார் என்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். காரணம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்னை இந்த அவைக்கு அனுப்பிய அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், வீராணம் திட்டத்தை இங்கே கொண்டு வந்து சென்னை மாநகர மக்களுக்கு 30 இலட்சம் மக்கள் வாழும் இந்த மாநகரத்திற்குக் குடிதண்ணீர் பிரச்சினை இருக்கக் கூடாது, அதைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், குறிப்பாக தமிழகத்தினுடைய முதலமைச்சரும் அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்கள். அதை நினைத்து இந்த நாடு இன்னும் நகைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, சென்னை மாநகரத்திற்கு இந்த அரசு கட்டளைக் கால்வாய் திட்டத்தைக் கொண்டு வந்தது. அது நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு அவைகளிலேயும் வாக்குறுதி தந்தார்கள். ஆனால் காலப்போக்கில் அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று சொன்னால், அந்தத் திட்டமும் கைவிடப்பட்டு இப்போது புதிதாக கிருஷ்ணா நதியிலிருந்து நீர் கொண்டு வரும் திட்டம் என்று ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டமாவது நிச்சயமாக நிறைவேற்றப்

(முற்பகல் 11.40)

படுமா அல்லது வட மாநிலங்களில் உள்ள நதிகளிலிருந்து தண்ணீர் கிடைத்தால்தான், சென்னைக்கு குடிநீர் என்று சொல்வீர்களா என்று கேட்க விரும்புகிறேன். உள்ளபடியே இங்கே உள்ள மக்களுக்காக, கட்சி வேறுபாடின்றி இந்த அரசு செயல்படுகிறதா என்றும் நான் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் நாம் தமிழ்நாடு என்ற அளவில் பேசினாலும்கூட. நான் சென்னை மாநகரிலேதான் பிறந்து வளர்ந்தவன் என்ற முறையிலும், என்னுடைய



முன்னோர்கள் மூன்று தலைமுறையாக சென்னையிலேயே வாழ்ந்தவர்கள் என்ற காரணத்தாலும், சென்னையைப்பற்றி சற்று அதிகமான அக்கறை காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** சென்னையில் பிறந்து இங்கே பூர்வீகமாகக் குடியிருப்பவர்கள் மட்டும்தான் சென்னையைப்பற்றிக் கவலைப் பட வேண்டும் என்பதில்லை. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள் இங்கே சென்னை நகரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், எல்லோரும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் கூட நிரம்ப அக்கறை கொண்டிருக்கிறார்கள். காரணம் அவர்களும் நாள்தோறும் இங்கே வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** சென்னையைப்பற்றி நான் அதிகமாக அக்கறை காட்ட வேண்டியதற்கான காரணத்தை மட்டும்தான் நான் இங்கே தெரிவித்தேன் என்பதை அவை முன்னவர் அவர்களுக்குத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை நகரைப் பொறுத்தவரை, எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் காப்பாற்ற வேண்டும் என்று அவை முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதிலிருக்கிற பின்னணியைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் "சென்னை நகரிலிருந்து தலைநகரத்தை மாற்ற வேண்டும்" என்று சொன்னதால்தானோ என்னவோ அதற்குப் பிறகு சென்னை நகரம் எல்லா வகையிலும் புறக்கணிக்கப்படுகிறது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் கலைஞர் அவர்கள் மீதும் நான் ஆணையிட்டுச் சொல்ல முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைநகரத்தை மாற்ற வேண்டும் என்ற அறிவிப்பைச் சொல்லிவிட்ட பிறகு, சென்னை மாநகரம் சரியாகக் கவனிக்கப்படவேயில்லை . . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைநகரை மாற்ற வேண்டும் என்று சொல்வது சென்னை மீது உள்ள கோபத்தால் அல்ல. சென்னைக்கு நல்லது செய்ய வேண்டும் என்றும், அதிகமான மக்கள் சென்னைக்கு வந்து சென்னையில் சிரமத்தைக் கூட்டிவிடக்கூடாது என்ற எண்ணத்திலும்தான் அந்தக் கருத்து சொல்லப்பட்டது.

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைநகரை மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பிறகு, திருச்சிக்கும் தஞ்சைக்கும் இடையே தலைநகரை மாற்றுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அதை ஒரு கருத்து என்ற முறையில்தான் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதையொட்டி உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அல்ல. சில பிரச்சினைகள் இருக்கிற காரணத்தால், அப்படிச் செய்தால், நலமாக இருக்கும் என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதில் எல்லாவற்றையும் பார்த்து ஆராய்ந்துதான் ஒரு முடிவு செய்யப்படும். எதிர்க் கட்சிகளும், மக்களும் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்துத்தான் முடிவு செய்யப்படும். இந்தக் காரணத்திற்காக சென்னை புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்வது தவறாகும். சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்கும், பல்வேறு இடங்களில் உள்ள சுகாதாரக் கேடுகளைக் களையவும், சாலைகளையும் மற்றவைகளையும் சரியாகப் பராமரிக்கவும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** ஏற்கெனவே தலைவர் அவர்கள் இரண்டு முறை மணி அடித்துவிட்டார்கள். இப்போது குறுக்கீடுகள் அதிகமாகிவிட்ட காரணத்தால் அப்படி மணி அடிக்கும் நிலையை எனக்கும் உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை மாநகரத்தை அழகுபடுத்த உலக வங்கியின் கடன் பெருமளவுக்கு எதிர்பார்க்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருகிறது. மொத்தத்தில் சென்னை நகருக்காக 9 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், விளக்குகள் சுத்தமாக எரிவதே இல்லை. இந்த நிலையைப் போக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சில நாட்களுக்கு முன்னால், ஆனந்த விகடன் பத்திரிகையில் ஒரு கார்ட்டூன் போடப்பட்டது. சென்னை மாநகரில் ஒருவன் நடந்து போக வேண்டுமென்றால், அவன் கூடவே ஒரு ஏணியைக் கொண்டு போக வேண்டும் என்ற அளவுக்கு ஒருவன் ஏணியைக் கொண்டு நடந்து போவதைப் போல் சித்தரித்திருந்தார்கள். எதிரே வருகிற ஒருவன் அவனைப் பார்த்து எதற்காக ஏணியைக் கொண்டு செல்கிறாய் என்று கேட்கிறான். அதற்கு பதில் சொல்லும்போது சென்னை மாநகரில் உள்ள சாலைகளில் நடக்கும்போது ஆங்காங்கே இருக்கிற பள்ளங்களில் விழுந்துவிட்டால் பள்ளத்திலிருந்து மேலே ஏறி வருவதற்கு இதைக் கொண்டு செல்கிறேன் என்று அவன் பதில் சொல்கிறான். இந்தக் கார்ட்டூனை ஏதோ மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகக் கருத வேண்டாம் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இது



நான் இன்றையதினம் சென்னையின் உண்மையான நிலைமை என்பதனைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர்கள் போகிற பாதைகள் மட்டுமே செப்பனிடப்படுகின்றன. அல்லது ஐ. ஏ. எஸ் அதிகாரிகள் போகிற பாதைகள் செப்பனிடப்படுகின்றன. அல்லது கார்ப்பரேஷனில் பணியாற்றும் மிக முக்கியமான அதிகாரிகள் இருக்கும் வீடுகளின் பக்கத்திலே உள்ள பாதைகள் செப்பனிடப்படுகின்றன. ஆனால் வட சென்னையில் இருக்கிற தாழ்வான பகுதிகளும் தென் சென்னையிலிருக்கும் தாழ்வான பகுதிகளும் அறவே கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அங்கே எந்தக் காரியங்களும் நடைபெறுவதில்லை என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து,சென்னை நகரில் குடி நீரும், சாக்கடை நீரும் ஒன்றாகக் கலந்து விட்டது என்பது உண்மை. இது எல்லாத் தரப்பிலும் சொல்லப்படுகிறது. சென்னையில் வழங்கப்படும் குடிநீரைக் குடித்தால் அதில் வாசனை அதிகமாக வருகிறது. அதை இந்த சர்க்கார் இதுவரை மறுத்ததா என்றால் இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இதை இந்த அரசு நேற்றைக்கு முன்தினம் பேரவையில்கூட மறுத்திருக்கிறது. இன்றையதினமும் நான் இங்கே மறுக்கிறேன். குடிநீரும் சாக்கடை நீரும் சென்னையில் எந்த இடத்திலும் கலக்கவில்லை என்பதைத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்த இடத்தில் கலக்கிறது என்று சொன்னால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யவும் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** நான் ஒரு எஞ்சினியர் அல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆங்கிலத்தில் சொல்வதானால் சென்னையில் தண்ணீரை உபயோகிக்கும் ஒரு 'சிட்டிசன்" என்ற முறையில் நான் இதைச் சொல்கிறேன். அவர் எஞ்சினியரை வைத்துச் சொல்கிறாரா என்று எனக்குத் தெரியாது. வேண்டுமானால் நான் காலையில் பிடித்த தண்ணீரைத் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குக் கொண்டு வந்து கொடுக்கிறேன். அதைச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டு அதற்குப் பிறகு சொல்லட்டும். அதை விட்டுவிட்டு ஒட்டுமொத்தமாகக் கலக்கவில்லை என்று வலியுறுத்திச் சொல்ல வேண்டாம் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னையை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளை சென்னையோடு சேர்த்து 9 புதிய வட்டங்களாகச் செய்திருக்கிறார்கள். இப்படி சென்னை நகரோடு சேர்க்கப்பட்ட புறநகர்ப் பகுதிகளிலும் சென்னை நகரில் உள்ளதைப் போலவே வரி வசூலிக்கப்படுகிறது. புதிதாகச் சேர்க்கப்பட்ட

இந்த 9 புறநகர்ப் பகுதிகளிலும் எல்லா வசதிகளையும் மாநகராட்சி செய்து
தந்துவிட்டு, அந்த மக்களிடமிருந்து சென்னையில் உள்ளதைப் போலவே வரி
வசூலித்தால் அது நியாயமானதாக இருக்கும். அதையெல்லாம் செய்யாமல்,
சென்னை மாநகரத்தோடு இந்தப் பகுதிகளெல்லாம் சேர்க்கப்பட்டுவிட்டன,
ஆகவே அங்கே தருகிற வரியை இங்கேயும் தரவேண்டும் என்று கேட்பது இந்த
அரசுக்கு எந்த வகையிலும் அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வசதிகளைப் பெருக்கிவிட்டுதான் வரி வசூலிக்க வேண்டுமே தவிர, வரி
களை மட்டும் வசூல் செய்துவிட்டு, வசதியைச் செய்யாமல் இருப்பது, உள்ள
படியே கண்டிக்கத் தக்கதாகும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சியில் நமது மாநிலம் இந்த ஆட்சியில் மிகவும்
பின் தங்கியிருக்கிறது என்பதை, தலைவர் அவர்களே, தங்கள் மூலம் அரசுக்கு
நான் தெரிவிக்க விரும்புகிறேன். 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை
யில் பக்கம் 18—பாரா 27-ல் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது
'பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்கு
வதற்கு இசைவுக் கடிதங்கள் உரிமங்கள் அளிப்பதற்காகத் தமிழக அரசு
பரிந்துரை செய்து மைய அரசிற்கு அனுப்பி வரும் விண்ணப்பங்களின்
எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. 1979 ஆம்
ஆண்டில் 49 விண்ணப்பங்களைத் தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது.
நடப்பு ஆண்டில் அதாவது சனவரித் திங்கள் முதல் சூன் திங்கள் வரை 47
விண்ணப்பங்களைத் தமிழக அரசு பரிந்துரை செய்து மைய அரசிற்கு
அனுப்பி வைத்துள்ளது. மொத்தம் .80 விண்ணப்பங்கள் மைய அரசின்
முடிவுக்காக நிலுவையில் இருக்கின்றன . . . ."

அப்படிப்பட்ட நிலைமை இந்த ஆண்டு உருவாக்கப்பட்டிருக்கிறதா
என்றால், இல்லை. அதற்கு என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரிய
வில்லை. அப்படி முன்னால் மைய அரசுக்கு அனுப்பிய விண்ணப்பங்களில்
எதையெதை மைய அரசு ஏற்றுக்கொண்டு அனுமதி அளித்தது, எதையெதை
மறுத்தது என்பதைப் போன்ற விவரங்களும் இந்த நிதிநிலை அறிக்கையிலே
குறிப்பிடப்படவில்லை.

தொழில் வளர்ச்சி பெருகினால்தான் இங்கே உள்ள தொழிலாளர்களின்
வாழ்க்கை வளம் பெறும், நாட்டின் நிலையும் உயரும். அந்த அடிப்படை
யில் இந்த அரசு செயல்படுகிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல
வேண்டியிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் புதிதாகச் சர்க்கரை ஆலை
களைத் துவக்குவதற்கு தனியாருக்கு அனுமதி அளிப்பதில் அக்கறை காட்டிக்





கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அப்படிப்
பட்ட கருத்துதான் சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்து, வேளாண்மை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். உணவு உற்பத்தி
நாட்டுக்கு எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதை நான் சொல்லித்
தான் இங்கே உள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை.
சென்ற நிதிநிலை அறிக்கையில் வேளாண்துறையைப் பற்றிக் குறிப்பிடும்
போது, பக்கம் 5-ல் குறிப்பிட்டதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். அதில் 'சென்ற ஆண்டு 62.29 இலட்சம் டன் அரிசி உற்பத்தியும்,
19.03 இலட்சம் டன் சிறுதானியங்கள் உற்பத்தியும், 2.60 இலட்சம் டன்
பயறு வகைகள் உற்பத்தியும், ஆக மொத்தம் 83.92 இலட்சம் டன் உணவு
உற்பத்தியாவதற்கான வசதிகள் உருவாக்கப்பட்டன" என்று அறிவிக்கப்
பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நெல் உற்பத்தி 68 இலட்சம்
டன், சிறு தானியங்கள் உற்பத்தி 23.50 இலட்சம் டன், பயறு வகைகள்
உற்பத்தி 4.80 இலட்சம் டன் அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது
என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கேதான் இந்த அரசு தனக்கே உள்ள
வித்தையைக் காட்டியிருக்கிறது—நம்பப்படுகிறது, சொல்லப்படுகிறது, கூறப்
படுகிறது, எதிர்பார்க்கப்படுகிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட
குறிப்பிட்டிருக்கிறது. மக்களுக்கு உணவு அளிக்கக் கூடிய இந்தப் பிரச்சினை
யில், 'இவ்வளவுதான் உற்பத்தி, இதற்குப் பின்னாலே உற்பத்தி இல்லை,
ஆகவே என்ன செய்யலாம்?" என்று அறிவிக்காமல் சொல்லப்படுகிறது, 'நம்பு
கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். உழவர்களுக்கு உள்ள கஷ்டங்களை
எப்படிப் போக்க வேண்டும் என்ற புள்ளி விவரங்களைத் தந்திருந்தால்,
இவ்வளவுதான் உற்பத்தி, அதைக் கொண்டு என்ன செய்யலாம் என்று
கேட்டிருந்தால், எதிர்க் கட்சியில் உள்ள நாங்கள் இந்த அரசுக்கு
ஆலோசனையைச் சொல்லக் கூடும். அதை விட்டுவிட்டு, 'நம்பப்படுகிறது,
சொல்லப்படுகிறது" என்று சொல்லுவதைத் தவிர்க்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு உழவன் தன்னுடைய நிலத்திலே 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்து
நெல் பயிரிட்டால், அவனுக்கு வருமானம் ரூபாய் இரண்டாயிரம்தான்
கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் நெல்
பயிரிடப் போவானா அல்லது பணப் பயிரைப் பயிரிடப் போவானா என்பதை
சிந்தித்துப் பார்க்க வேண்டும், உழுது, உழுது நிலத்தின் அடித்தளம் வரம்

இழந்துவிட்டது. வளர்ந்து வரும் இந்த நாட்டில், வளம் இழந்துவிட்ட நிலத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்று இந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்து புதிய விஞ்ஞான முறைகளைக் கண்டுபிடித்து, என்ன காரியம் செய்ய வேண்டும் என்பதை உழவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். உழவர்களின் நிலை உயர்ந்தால்தான், இந்த நாட்டின் நிலை உயரும் என்பதை நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. இல்லையென்றால், இந்த நாட்டில் பசி வந்தால் இந்த அரசு பஞ்சாகப் பறக்கும். ஏற்கெனவே இருந்த காங்கிரஸ் ஆட்சி அப்படித்தான் பறந்தது என்பதை நான் நினைவு கூற விரும்புகிறேன்.

அடுத்து, 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 36, பத்தி 60-ல் பட்டினிச் சாவு என்ற தலைப்பில் ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். ‘பட்டினிச் சாவு ஏற்படாமல் தடுக்கும் வகையில் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. ஏழை, எளியவர் வகை ஏதுமின்றி பட்டினியால் மிகவும் வாடும் நிலை ஏற்பட்டால், அத்தகையோர் கிராம வளர்ச்சி அலுவலரிடம் சென்று தம் நிலையை எடுத்துக்கூறி 100 ரூபாய் உதவித் தொகை பெற்றுக் கொள்ளலாம்” என்று அறிவித்தார்கள். எத்தனை பேர் பட்டினியால் வாடி இத்தகைய உதவித் தொகையைப் பெற்றிருக்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தால் எத்தனை பேர் பலன் அடைந்தார்கள் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்க வேண்டாமா? பத்திரிகைகளில் ஒரு நாள் விளம்பரத்திற்காக மட்டும் போட்டுவிட்டு, அதனால் பலன் பெற்றவர்களின் எண்ணிக்கையை இந்த அரசு ஏன் சுட்டிக் காட்டவில்லை என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ‘ நலிந்தோர் நலன் ” என்ற தலைப்பில்—பக்கம் 36, பத்தி 61-ல—ஏழ்மை நிலையில் உள்ள கருவுற்ற மகளிருக்கு ஏழாம் மாதம் முதல் குழந்தை பிறந்து நான்கு மாதம் முடியும் வரை சத்துணவு வழங்கப்படும். மாதந்தோறும் அவர்கள் உடல் நலம் பரிசோதிக்கப்பட்டு தக்க அடிப்படை மருந்துகளும் வழங்கப்படும். மகளிர் ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டு வசதிகளுக்குமாக 150 ரூபாய்க்குக் குறையாமல் செலவிடப்படும். முன்னோடித் திட்டமாக முதலில் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்காக சென்ற ஆண்டு ரூபாய் 2.13 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் எந்த அளவிற்குச் செயல்பட்டிருக்கிறது ? கொட்டாம்பட்டியில் இருக்கின்ற மகளிருக்காவது தந்திருக்-





கிறார்களா ? இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற்றவர்களின் புள்ளி விவரம் எங்கே? “சென்ற ஆண்டு அறிவித்த இந்தத் திட்டத்தை மேலும் சென்னை உட்பட எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப் போகிறோம்” என்று சொல்லியிருந்தால், உள்ளபடியே நான் இந்த அரசைப் பாராட்டியிருப்பேன். ஆனால் அந்தக் காரியத்தை இந்த அரசால் செய்ய முடிந்ததா என்றால், இல்லை. அப்படிச் செய்யாமல் அதற்கான காரண காரியங்களைச் சொல்லி ஏமாற்று வித்தை காட்டி, மோடி மஸ்தான் வேலையைச் செய்திருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அலாவுதீன் அற்புத விளக்கு மாதிரி அறிவித்துவிட்டு அதற்குப் பின்னாலே ‘பாலோ-அப் ஆக்‌ஷன்’ இல்லாமல் போகிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், “ எளியோர்க்கு இலவச உணவு ” திட்டத்தை அறிவித்தார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைகளுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும் என்னும் கொள்கையை நிறைவேற்றும் வகையில் முதியோர் உதவித் தொகை, கைம்பெண்கள் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை, கண்ணொளி அற்றோர் உதவித் தொகை, விவசாயத் தொழிலாளர் உதவித் தொகை ஆகியவற்றைப் பெறுபவர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக அளிக்க அரசு முடிவு செய்துள்ளது என்று அறிவித்திருக்கிறார்கள். இதற்காக “ தற்போதுள்ள உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை, அரிசியின் விலை இவற்றின் அடிப்படையில் இதனைச் செயல்படுத்த ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1.25 கோடி ரூபாய் செலவு ஆகும் ” என்று தெரிவித்திருக்கிறார்கள். இது செயல்படுத்தப்பட்டதா? உணவுப் பொருளாகவும், உடையாகவும், பணமாகவும், அரிசியாகவும் பெற்றவர்களின் எண்ணிக்கையைத் தெரிவித்திருக்கிறார்களா? எந்த அளவிற்கு இந்தத் திட்டம் பயன்பட்டிருக்கிறது, யார், யார் இந்தத் திட்டத்தினால் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிவித்திருக்க வேண்டாமா ? வெறும் அறிவிப்போடு நின்றால், அறிவிப்பு மன்னர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நமது முதலமைச்சர் அவர்கள் நாடோடி மன்னனாக நடித்தவர்கள். இப்போது அறிவிப்பு மன்னனாக மாறியிருக்கிறார்கள். ஆகவே அதில் சொன்ன நல்ல திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு இறுதியாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சிறுவர்களுக்கு உணவு வழங்க வேண்டுமென்பதற்காக 100 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்தத் திட்டத்திற்கு முன்னால் ‘ பல்பொடி ’ வழங்கப் போகிறோம் என்று மூர் மார்க்கெட்டில் சொல்லுவதைப் போல அறிவித்திருக்கிறார்கள். மூர் மார்க்கெட் என்று சொல்லுவதால் அதைக் கேவலப்படுத்துவது என்றல்ல. ஒன்றை இன்றைக்குச்

சொல்லுவார்கள். பிறகு நாளை போய்ப் பார்த்தால், அங்கே இருக்க மாட்டார்கள். அதுதான் உங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். பல்பொடி தருகிறேன் என்று சொல்லுகிறார்கள். தமிழகத்திலே கல் தோன்றிய காலத்திலேயிருந்து இதை யாரும் செய்யாததால் மிகப் பெரிய அற்புதமான செயல்தான் இது. பல்பொடியைக் கொடுத்து மக்களை ஏமாற்றலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசை நான் கேட்டுக்கொள்வ தெல்லாம், பல்பொடி வழங்குவதோடு நின்று விடாதீர்கள், பல்பொடி, சோப்பு, சீப்பு தாருங்கள். அதோடு நிற்க வேண்டாம், கண்ணாடியையும் தாருங் கள். அதோடு நிற்க வேண்டாம். துணி துவைக்கும் சோப்பையும் தந்தால், நீங்கள் சீப் பாப்புலாரிட்டியைப் பெற்றுக் கொள்ளலாம். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே கண்ணாடி தருகிறோம் என்று சொன்னபோது, அதிலே ஊழல் என்று நீங்கள் சொன்னதைப் போல, ஸ்கூட்டரில் செல்பவர்கள் தங்கள் உயிரைக் காக்க தலையில் ஹெல்மெட் போட வேண்டுமென்று சொன்னபோது, நீங்கள் ஊழல் என்று சொன்னதைப் போல், பல்பொடி வழங்குவதிலும், இலஞ்சம் வாங்கிவிட்டு அறிவிக்கிறீர்கள் என்று நான் சின்ன புத்தியோடு சொல்ல வரவில்லை. ஆனால் அப்படி யாராவது செய்வார்கள். அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அது யாரென்று உங்களுக்குத் தெரியாதது அல்ல. அத்தகைய காரியங்களில் ஈடு படுபவர்களை நிறுத்த வேண்டும்.

அடுத்து, 60 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச உணவு தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதிலே மந்திரி சபையிலேயே கருத்து வேறுபாடு இருக்கிறது. என்னுடைய பழைய நாளைய நண்பர், இன்றும் நண்பராக இருக்கின்ற, இந்த அமைச்சரவையில் மக்கள் நல்வாழ்வு அமைச்சர் அவர் கள் 26—2—1982 அன்று இராயபுரம் ஸ்டேன்லி மருத்துவ மனையில் பேசும் போது, குழந்தைகளுடைய எண்ணிக்கை 30 இலட்சம் என்று அறிவித்தார். ஆனால் முதலமைச்சர் அவர்கள் வேறு ஓர் இடத்திலே பேசும்போது 60 இலட்சம் என்று அறிவித்தார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அந்தக் கூட்டத்தில் நான் சராசரியைச் சொன்னேன். 100 கோடி ரூபாய் என்றால் 30 இலட்சம் ரூபாய் ஒரு நாளைக்கு வரும் என்று சொன்னேன். அதற்குப் பிறகு அந்தப் பகுதியில் கடிதம் எழுதியிருக்கிறேன். அந்த டிவிஷனில் 30 'லாக்ஸ் பெர் டே' என்பதுதான் கரெக்ட். ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிற கணக்கு அது என்று நான் சொல்லவில்லை. தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார் கள். நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அதனுடைய நகலையும் வைத்திருக் கிறேன். It is not a correct report.



**திரு. ஆர். டி. சீத்தாபதி :** அடுத்து, இந்த அரசு அறிவித்திருக்கிற திட்டங் களை அறிவிக்க விரும்புகிறேன். அதாவது அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் முதலாவதாக தபால் கார்ட் விலையைக் குறைப்பது, தபால் ஆபீசில் கடன் கொடுப்பது என்று திட்டம் அறிவிக்கப்பட்டது. இரண்டாவ தாக, பெண்களுக்குச் சம உரிமை தருவது என்று சொல்லிவிட்டு, இப்போது 15 சத விதம் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். மூன்றாவ தாக விட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் தருவது என்று அறிவித்தார் கள்.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தபால் கார்டு விலைகள் குறைப் பது, தபால் அலுவலகத்தில் கடன் கொடுப்பது பற்றி எதுவும் சொல்ல வில்லை.

**திரு. ஆர். டி சீத்தாபதி :** இன்றைக்கு இல்லை என்று சொல்கிறார்கள். ஆளும்கட்சியினர் தேர்தல் நேரத்திலே இப்படிப்பட்ட அறிவிப்புக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். தேர்தல் அறிக்கையிலே, கட்சியிலே பொறுப்பிலே இருந்தவர்கள் சொல்லியிருக்கிறார் கள் என்று சொல்லிக்கொள்கிறேன்

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** நாங்கள் அறிவித்த தேர்தல் அறிக்கையிலே இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** 1977 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற போது, ஆளும்கட்சியிலே இருப்பவர்கள் சொன்னார்கள். கட்சியின் அண்ணா பத்திரிகையிலேயே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கைகளில் சொல்லியிருக்கிறார்கள். தபால் கார்டுகள் விலை குறைக்கப்படும் என்றும், தபால் அலுவலகங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் அறிவிப்பு இருக்கிறது. அவர்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் என்ன என்ன திட்டங்கள் என்று இருந்தது. தபால் கார்டு விலை குறைப் பதுபற்றி நிச்சயமாகத் தேர்தல் அறிக்கையிலே இருந்தது. வேண்டுமானால் அண்ணா பத்திரிகையைப் பார்த்தால் தெரியும். அமைச்சர் அவர்களுக்கு அண்ணா பத்திரிகை கிடைக்கவில்லை என்றால், நான் அந்த அண்ணா பத்திரிகையைக் கொண்டு வந்து கொடுக்கிறேன்.

**திரு. ஆர். டி சீத்தாபதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரம் தெரியாமல் சொல்கின்றார்கள். அதை அறிவித்தது யார் என்று தெரியாமல் இருக்கிறார்கள். அவருக்குத் தெரியாததால், அப்படிச் சொல்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் படித்த பட்டதாரிகளுக்கு வீட்டிற்கு வீடு சென்று காய் கறிகள் விற்க மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்க திட்டம் வகுத்ததாகச் சொன்னார்கள். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதைப் பற்றிப் பேச வேண்டும் என்றால், முதலமைச்சர் அவர்கள் 3 மணி நேரம் பேசலாம். என்னால் அது முடியாது. அந்த அளவுக்குத் திட்டங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் அவைகள் நிறைவேற்றப்படுவதில்லை. காய் கறிகள் வாங்க பெண்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டம் செயல்படவில்லை. அதற்குப் பிறகு 14 ஆயிரம் நியாய விலைக் கடைகள் என்று சொன்னார்கள். அந்தக் கடைகள் திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இமாஜினரி கணக்கு எல்லாம் கூட போட்டு புள்ளிவிவரம் எல்லாம் தந்தார்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அங்கத்தினர் அவர்கள் இன்னும் 2 நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** இன்னும் நிறைய இருக்கிறது. ஐந்து நிமிடங்கள் வேண்டும். 14 ஆயிரம் கடைகள் திறக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குத் திட்டம் சொன்னார்கள். அது இன்னும் செயலாக்கப்படவில்லை. கடைசியாக, குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் காரணமாக ஆளும் கட்சியில் உள்ளவர்கள் வசதி பெறுகிறார்கள் என்று மக்கள் சொல்கிறார்கள். அதற்கு கமிஷன் பெறுகிறார்கள் என்று மக்களாலே பேசப்படுகிறது. அப்படி ஏதாவது இருந்தால், விஜிலென்ஸ் மூலம் அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே நான் சொல்ல விரும்புவது—காகிதப் பூ மணக்காது என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்—இந்த நிதிநிலை அறிக்கை மணக்காத காகிதம் மட்டுமல்ல, ஜனநாயகத்தைக் கொல்கின்ற விஷம் தூவுகின்ற ஒன்று என்று சொல்கிறேன். இந்த 100 கோடி ரூபாய்த் திட்டம் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் பயன்பெறும் திட்டம் என்று சொல்கிறேன். முன்பு தாய்க் குலத்தைக் காட்டிச் சொன்னார்கள். இப்போது குழந்தைகள் உணவுத் திட்டத்தைக் காட்டி ஏமாற்றுகிறார்கள். இதை வைத்துக் கொள்ளையடிக்கிறார்கள். மக்களை மேலும் ஏமாற்றுகிறார்கள். அதற்கு வந்த திட்டம் இது என்று சொல்கிறேன். வரி இல்லை என்று சொல்லிக் கொண்டே வரி போடும் திட்டம் இது என்று சொல்லிக்கொண்டு அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பத்திரிகைகளுக்குத் தலைப்பு கொடுக்கும் வார்த்தைகளா இவைகள் ?





**திரு. ஆர். டி. சீத்தாபதி :** பத்திரிகைகள் எழுதிக் கொடுத்ததைப் படிப்பவர்கள் உங்கள் கட்சியினர் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஈ. வெ. அ. வள்ளிமுத்து:** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் எனக்குப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பேசும்போது, நண்பர்களுடைய அரிய பெரிய கருத்துக்களை சில நாட்களாகவே தெளிவாகவே கேட்டுக்கொண்டிருக்கிறேன். நானும் என்னுடைய கருத்துக்களை ஓரளவுக்கு அதன்பேரில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். என்னவென்றால், இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரிப்பவர்களும், அதை மறுப்பவர்களும் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரிய பெரிய கருத்துக்களை எடுத்துக் கூறி அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணாவினுடைய அருமைத் தம்பி, நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் சமர்ப்பித்திருப்பதை, அதிலே அடங்கியிருக்கின்ற கருத்துக்களை, நம்மோடு அண்ணா அவர்கள் இருந்திருந்தால், இப்போது உளமார இதயங்கனிய பாராட்டியிருப்பார்கள் என்பதில் எனக்கு ஐயப்பாடு இல்லை. அண்ணாவின் பெயரைச் சொல்கின்றவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை மோசமானது, கள்ளம் கபடம் உள்ளது, மோசக்காரர்கள் வாழ்வதற்காகவே வழி வகுக்கப்பட்ட ஒன்று என்று சொல்கிறார்கள். இப்படி அண்ணாவின் பெயரைச் சொல்லி அமர்ந்த மாண்புமிகு நண்பர்கள் மிகுந்த தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். இதை நான் கேட்கின்றபோது, உண்மையிலேயே எனக்கே ஒன்றும் புரியவில்லை. நான் தந்தை பெரியார் மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தைத் தொடங்கிய முதல் நாளிலேயிருந்தே இரண்டறக் கலந்து கொண்டவனாக இருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்துக்களை, அரிய பெரிய கருத்துக்களைத் தெளிவாகவே தெரிந்தவன். அண்ணா அவர்கள் அந்தக் காலத்திலே சொல்வார்கள். 'சாட்சிக் கூண்டிலே இருக்க வேண்டியவர்கள் குற்றவாளிக் கூண்டிலே இருக்கிறார்கள். குற்றவாளிக் கூண்டிலே இருக்கவேண்டியவர்கள் சாட்சிக் கூண்டிலே இருக்கிறார்கள் " என்று சொல்வார்கள். " அவர்கள் விந்தியத்திற்கு அப்பாலே இமாசலத்திலே இருக்கிறார்கள், டெல்லியிலே இருக்கிறார்கள் ". இதை நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்வார்கள். அவர்கள் சொன்ன அந்த நினைவுதான் எனக்கு இப்போது ஏற்படுகிறது. ஏனென்றால் நாம் யார் என்பதைக்கூட புரிந்துகொள்ளாமல், திராவிட இயக்கத்தைப் பற்றிய உணர்வு இல்லாமல், மேல் நாட்டவர்களிடம் நம்மை அவமானப்படுத்தும்

அளவுக்கு சின்னமாக இருந்து கொண்டிருக்கின்றன மாஜி கட்சிகள். இப்படிப் பட்ட எதிர்க் கட்சிகள் தோன்றியிருக்கின்றன என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே என் மனம் குமுறுகிறது. ஏனென்றால் திராவிடர் இயக்கம் வளருவதற்காக நாங்கள் பல்முறை சிறை சென்றவர்கள். 14 முறைகள் சிறை சென்றவர்கள். தந்தை பெரியார் மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட. அந்த மாதிரியெல்லாம் கஷ்டப்பட்டு வளர்க்கப்பட்டதுதான் திராவிடர் இயக்கம். அதனுடைய பலனாக பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அருமைத் தம்பியான மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்று முதலமைச்சராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே இன்று பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அருமைத் தம்பி நாவலர் அவர்கள், நிதி அமைச்சராக இருந்து இந்த நாட்டு மக்களுக்கு உற்சாகத்தோடு இந்த நல்ல ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆட்சிக்கு இன்னல்களையும் தொல்லைகளையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கிறோம். நிதிநிலை அறிக்கையை மட்டுமல்ல அவர்கள் குறை சொல்வது. அவர்கள் நடத்துகின்ற ஒவ்வொரு போராட்டத்தையும் ஒவ்வொரு நடைமுறையையும் பார்க்கின்றபோது, எங்களுக்கு உண்மையிலே மனம் குமுறுகிறது. சமீப காலத்திலே நம்முடைய தமிழக முன்னாள் முதல்வர் அவர்கள், அருமைத் தம்பி கருணாநிதி அவர்கள் நெல்லை மாவட் டத்திற்கு, நெடும் பயணம் வந்திருக்கிறார்கள். தம்பி கருணாநிதி நீதி கேட்க வந்திருக்கிறார்கள். அவர்கள் நீதி கேட்பது சரிதானா என்று எண்ணிப் பார்க்கிறபோது, உண்மையிலேயே அருமைத் தம்பி திரு. கே. வி. கே. சாமி அவர்கள் நடுத் தெருவிலேயே பிணமாகக் கிடந்தார்களே, அந்தக் காலத்திலே அவர்கள் வந்து நீதி கேட்டிருக்க வேண்டும். அப்போது நீதி கேட்டு நெல்லை மாவட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். அப்போது வர வில்லை. அந்தக் காலத்திலே இந்தி எதிர்ப்பிற்கு எங்களோடு 1001 பேர் களுடன் தாழைக்குடி நடராசன் அவர்கள் வந்தார்கள். அவர்கள் இறந்தார் களே, அதற்குக் காரணம் யார் என்று நீதி கேட்டு நெடும்பயணம் வந்திருந் தால், அதை நாங்கள் வரவேற்றிருப்போம். அந்தக் காலத்திலே தம்பி கருணாநிதி அவர்கள் வரவில்லை. அது மட்டுமல்ல, நம்முடைய ஆசிரியர் களுக்காக பெரும் உழைப்பு உழைத்த உடையார்பாளையம் வேலாயுதம் அவர் கள் மரத்தடியிலே பிணமாகத் தொங்கினார்களே, அப்போது நீதி கேட்டு வந்திருந்தால், நாங்கள் வரவேற்றிருப்போம், பாராட்டியிருப்போம். அந்தக் காலத்திலே அதையெல்லாம் எண்ணிப் பார்க்க அவகாசம் இல்லை. தமிழக முன்னாள் முதல்வர், அருமைத் தம்பி கருணாநிதி அவர்கள் நீதி கேட்டு நெல்லை மாவட்டத்திற்கு அப்போது வரவில்லை. நெல்லையிலே தம்பி கருணாநிதி அவர்களுக்கு ஒரு இடம்கூட கிடைக்கவில்லை. 18 இடங்களிலே



17 இடங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்திருக் கின்றன. ஒரு இடம் வேறு ஒருவருக்குக் கிடைத்தது. வேறு கட்சி அதைக் கைப்பற்றியிருக்கிறது.

(பிற்பகல் 12-10)

அன்று காங்கிரஸ் கட்சித் தோழர்களும் இடம் பெறவில்லை, தம்பி கருணா நிதியின் கட்சியினருக்கும் இடம் கிடையாது. ஆகவே மக்களைச் சந்திக்க வேண்டும், அவர்களை எப்படி ஏமாற்றலாம் என்ற அடிப்படையிலே தான் நீதி கேட்டு நெடும்பயணம் சென்றார்கள். உண்மையிலேயே அவர்கள் கேட்பதிலே நீதி கிடையாது.

நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசிய தம்பிகள் எவ்வளவு கார சாரமாகப் பேசினார்கள். அவர்கள் இல்லாததும், பொல்லாததும் சொன் னார்கள். இதனால் மக்களை ஏமாற்றி அரசியலைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் புள்ளிவிவரங்களைக் கொடுத்துப் பேசும்போது, அந்தப் புள்ளிவிவரம் தவறு என்று சொன்னால் பரவாயில்லை. அதற்கு ஆதாரம் சொன்னால் பரவாயில்லை. அரசு கொடுத்த புள்ளி விவரங்களை வைத்துத்தான் பேசு கிறார்கள். இல்லாதது, பொல்லாதது பேசுகிறார்கள் என்றால், அது உறுப் பினர்கள் மீது களங்கம் கற்பிப்பதாகும். எனவே வயதான, மூத்த, அனுபவம் வாய்ந்த மாண்புமிகு உறுப்பினர், எந்தப் புள்ளிவிவரம் தவறாகச் சுட்டிக் காட்டப்பட்டது என்று சொன்னால், நாங்கள் அதற்குப் பதில் சொல்ல வசதி யாக இருக்கும்.

**திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து:** 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யைப்பற்றி நம்முடைய மாற்றுக் கட்சித் தோழர்கள், எதிர்க் கட்சித் தோழர் கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு நடந்த வறட்சி நிவாரணப் பணி எவ்வளவு வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்று நாம் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், ஏற்றுக்கொண்டாலும், நாட்டு மக்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு சரியான முறையில், சிறந்த முறையில் வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்து, வறட்சி நிலைமைகளைச் சமாளித்திருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. வறட்சி நிவாரணப் பணிகளில் சாலைகள் இல்லாத கிராமங்களில் சாலைகள், கார் எப்படி இருக்கும் என்று பார்த்திராத ஊர்களுக்குக் கார்கள் . கஷ்டப்படுகிற மக்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று கேட்டு, உடனே அவற்றை நிவர்த்தி செய்ய நல்ல திட்டங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள்

மூலமாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரிய அளவிற்குச் செய்திருக்கிறார்கள் என்பதை அருமைத் தம்பிகளுக்குத் தெளிவாகக் கூற ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது புரட்சித் தலைவரவர்களின் அரசு.

அதுமட்டுமல்ல, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கும், பற்றாக்குறை பட்ஜெட்டில் 38 கோடி ரூபாய் அளவிற்கு வரி போடப்பட்டிருக்கிறதென்று மாற்றுக் கட்சியைச் சேர்ந்த, எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். 100 கோடி ரூபாய் ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்க ஒதுக்கப்பட்டதன் பலனாக, கூடுதல் செலவு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக புது வரி போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளுக்கு மேலாகியும், ஏழைக் குழந்தைகளின் உணவிற்காக 100 கோடி ரூபாய் இப்போதுதான் ஒதுக்கப்படுகிறது . . . (மணி அடிக்கப்பட்டது). மாற்றுத் தலைவரவர்களே, அந்தக் காலத்துத் தகவல்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டும். நாங்கள் பட்ட பாட்டைச் சொல்ல வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது.

**திரு. ஈ. வே. அ. வள்ளிமுத்து:** தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே நான் இரண்டு, மூன்று தடவைதான் பேசியிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு அளிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ அரசியல் கட்சிகள் ஆட்சியில் இருந்திருக்கின்றன. காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்தது, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள். அதற்குப் பின்னால் தம்பி கருணாநிதி ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவர் இருக்கிறார்கள். இப்படி வரிசையாக ஆண்டுகொண்டு இருந்தாலும் ஏழைப் பிள்ளைகளுக்கு இப்போதுதான் மதிய உணவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கோவில்பட்டியில் ஏறத்தாழ 3,000 பிள்ளைகள், 85 ஆசிரியர்கள் கொண்ட பள்ளி நிர்வாகத்தில் மேனேஜிங் கரெஸ்பான்டென்டாக இருந்தேன். அப்போது இருந்த அரசு என்ன செய்தது? 30 பிள்ளைகளுக்குப் பகலுணவு அளித்தார்கள். 3,000 பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் 30 பிள்ளைகள் ஏழைகள் என்றால், மீதியுள்ள அவ்வளவு பேரும் பணக்காரர்களா என்று ஏளனம் செய்யும் நிலை ஏற்பட்டது. அத்தகைய நிலைமைகள் இல்லாமல், இன்றைக்கு 100 கோடி ரூபாய் ஏழைப் பிள்ளைகளின்



உணவிற்காக ஒதுக்கீடு செய்து, அதற்காகத் திட்டம் போட்டிருப்பதைக் குறை சொல்லும் அளவிற்கு மாற்றுக் கட்சி அன்பர்கள், எதிர்க் கட்சி அன்பர்கள் இருக்கிறார்கள் என்றால், அதைப்பற்றிச் சற்றுக் கூறாமல் இருக்க முடியாது. இந்த அளவிற்கு இந்த ஆட்சி 100 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதுபோல், எந்த ஆட்சி ஒதுக்கியிருக்கிறதென்று புள்ளி விவரம் கொடுத்து, இது உதவாக்கரை பட்ஜெட் என்று கூறியிருந்தால், உண்மையிலேயே அதை நேர்மையான உள்ளத்தோடு ஏற்றுக்கொண்டிருப்பேன். ஆனால் இருக்கின்ற நிலைமைகளை மறந்து கூறுகிறார்கள் என்று எண்ணும்போதுதான் வருத்தமாக இருக்கிறது. பேசுவது என்றால் இன்னும் 3 மணி நேரம் பேசலாம். அந்த அளவிற்குப் பேச வாய்ப்பு இல்லாததால், இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அண்மையிலே பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்த நாட்டு ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு 20 அம்சத் திட்டத்தை அளித்திருக்கிறார்கள். அதை இந்த அரசு முழுமையாக ஏற்று நடத்துமென்று உறுதி அளித்திருப்பதை வரவேற்கிறேன்.

நியாய விலைக் கடைகளுக்கான உணவுப் பங்கீட்டு குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில், வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு செய்து, புதிய அட்டைகளைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நியாய விலைக் கடைகளில், இன்றைக்கு நகரத்தில் பார்த்தாலும் சரி, கிராமத்தில் பார்த்தாலும் சரி, ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் அங்கே பொருள்களை வாங்குகிறார்கள். அந்தக் கடைகளிலே சரியான எடையில்லை. அங்கே போய் வாங்கி வருபவர்களெல்லாம் ஒரு கிலோவில் ஏறக்குறைய 10 கிராம், 15 கிராம் அளவிற்குக் குறைவாக இருப்பதாகப் புகார்கள் சொல்லுவதைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல, காலையிலே வீட்டிலே ஒரு வேலையும் செய்யாமல், அந்தக் கடைக்குச் செல்லும் நடுத்தர மக்கள் ஏறக்குறைய 5 மணி நேரம், 6 மணி நேரம் கியூவில் வெயிலிலும், மழையிலும் நிற்கும் அவல நிலையைப் பார்க்கிறோம். இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும் நிலையில் அங்கே ஆட்களை அதிகமாகப் போடலாம். வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் கொடுக்கிறோம். அதோடு இன்னொரு 50 ரூபாய் போட்டு, 100 ரூபாயாகக் கொடுத்து, இன்னும் அதிகமான ஆட்களை நியாய விலைக் கடைகளில் போட்டு, நல்ல முறையிலே மக்களுக்கு சேவை செய்ய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி கியூவில் குழந்தைகள் பணத்தோடு பல மணி நேரம் நிற்கும்போது, அந்தப் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு போகும் நிலையைப் பார்க்கி

[திரு. ஏ. ஜே. தாஸ்] [1982 மார்ச் 3

றோம். எங்கே அரிசி வாங்க வேண்டும், பலசரக்கு வாங்க வேண்டுமென்று சொல்லுகிறோமோ அங்கே சமூக விரோதிகள் சென்று, பல மணி நேரம் கியூவில் காத்திருப்பவர்களிடம் பணத்தைத் திருடிக்கொண்டு போகும் நிலையைப் பார்க்கிறோம். ஆகவே அந்தக் கடைகளிலே நடுத்தர மக்கள் வந்து, உடனே வாங்கிச் செல்லும் அளவிற்கு நிலைமைகளை உருவாக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அடுத்து, நெசவாளர் பிரச்சினைபற்றி ஒரு கருத்தைச் சொல்கிறேன். அவர்களுக்கு பல நன்மைகளைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த நெசவாளர்களின் நன்மைக்காக திட்டங்கள் போடுகிறோம் என்று சொல்கிறார்களோ அவர்கள் மத்தியிலே இன்னும் கஷ்டம் ஏற்படக்கூடிய வகையில் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஐந்து சதவிகித வரி பட்டு நூலுக்குப் போட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதன் மூலம் மேலும் மேலும் அவர்களுடைய பிரச்சினை உயருமே தவிர குறையாது.

அடுத்து, சிறு தொழில்பற்றி ஒரு வார்த்தை. பெரிய தொழில்களுக்கெல்லாம் சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். சிறு தொழில்களைப் பொறுத்த வரையில், அவர்கள் பல இன்னல்களை அடைகிறார்கள். முடிதிருத்தும் கடைக்குக் கூட லைசன்ஸ் வாங்க வேண்டும். அவர்கள் லைசன்ஸ் பெற 2 ரூபாய் கட்ட வேண்டுமென்று இருந்தாலும் கூட, நகராட்சிக்கு அவர்கள் அனுமதி வேண்டி மனு செய்தால், அது எம்.எம்.டி.ஏ. க்குச் செல்ல வேண்டும், பிளான் கொண்டுவர வேண்டுமென்றெல்லாம் சொல்கிறார்கள். சாதாரண மனிதன் ஒருவன் ஒரு சிறு கடை வைத்து எளிதான முறையில் வியாபாரம் செய்ய அதற்குரிய வாய்ப்பு இல்லாததால், சங்கடம் இருக்கிறது. வீட்டுக்காரரிடம் பிளானைக் கேட்டால், "வீடு வேண்டுமானால் தருகிறேன், பிளானைக் காண்பிக்க மாட்டேன்" என்கிறார். இப்படிப்பட்ட சங்கடம் எல்லாம் சிறு தொழில்களை நடத்துபவர்களுக்கு இருக்கிறது. இதைப் போக்க வேண்டும்.

அடுத்து, ஒருவர் நடத்தும் ஒரு சிறு தொழிலை இன்னொருவர் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டுமானால், அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இப்படி சிக்கல்கள் இருந்தால், அவர்கள் எப்படி வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும்? பல மாநிலங்களில் குறிப்பாக பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட சிக்கல்களை நிவர்த்தி செய்திருக்கிறார்கள். தமிழகத்திலும் சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், சிக்கல்களையெல்லாம் களைந்து சிறு தொழில் முன்னேற்றம் அடைய அரசு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 3]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** எம்.எம்.டி.ஏ. ஏற்பட்டது நாங்கள் வருவதற்கு முன்பு. எம்.எம்.டி.ஏ. என்று சொன்னால், சென்னை நகரம் வளர்வதற்கு எந்தெந்த வகையில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டுமோ அதற்கான வகையில் திட்டங்களை வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் செயல்படுகிறார்கள். 'சேஞ்ச் ஆப் சோன்' அதாவது 'ரெசிடென்ஸ்' ஆக இருப்பதை 'இன்டஸ்ட்ரி' ஆக மாற்ற வேண்டுமானால், அதன் காரணமாக அங்கு ஏற்கெனவே இருக்கின்ற மக்களுக்கு ஏதாவது பாதகம் வருமா என்பதையெல்லாம் பரிசீலிக்கின்ற ஓர் அமைப்பு அது. அந்த வகையில் அது நடவடிக்கை எடுத்து வருவதால், சென்னை நகரம் சீரான நகரமாக அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** நான் சொல்வது வேறு. சிறு தொழிலை 'சேஞ்ச் ஆப் கான்ஸ்ட்டிட்யூஷன்' பண்ணுவதுபற்றி நான் பேசுகிறேன். ஒருவர் பொறுப்பிலிருந்து இன்னொருவர் பெயருக்கு ஒரு சிறு தொழிலை மாற்றுவது சம்பந்தமாகப் பேசுகிறேன். ஒரு ஸ்தாபனத்தை ஒருவர் வாங்கியிருந்தால், அதை இன்னொருவர் பெயருக்கு மாற்றுவதுபற்றிப் பேசுகிறேன். அதில் தான் சிக்கல்கள் இருக்கின்றன.

அடுத்து, குடிசை மாற்று வாரியத்தின் பணியைப் பொறுத்தவரையில், அது செவ்விய முறையில் நடந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 35 கோடி ரூபாய் செலவில் 35 ஆயிரம் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு குடிசை மாற்று வாரியத்தின் பணிகளைப்பற்றி பல குறைகளை நான் சொல்ல முடியும். குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். ஒரு வீட்டில் இருந்தவர்களை அப்புறப்படுத்தி, வீட்டிலிருந்த 5 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களையெல்லாம் குடிசை மாற்று வாரிய அலுவலகத்திலே கொண்டு போய் போட்டுவிட்டார்கள். அவர்களுக்கு வீடு கிடைக்காமல் பல நாட்கள் குடிசை மாற்று வாரிய அலுவலகத்திற்கு நடந்தார்கள். அதற்குப் பிறகு வீடு ஒதுக்கப்பட்டு, பணமும் கட்டினார்கள். அதன்படி அவர்கள் குடியிருக்கப் போகும்போது, அந்த வீட்டில் வேறொருவர் குடியிருந்தார். அது வேறு ஒருவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு நானே நேரில் குடிசை மாற்று வாரிய அலுவலகத் தலைவரிடம் சென்று இரண்டு வீடுகள் ஒதுக்கப்பட்ட பிறகும், அதற்குரிய பணத்தைக் கட்டிய பிறகும், அவர்களுக்கு வீடு கிடைக்கவில்லை என்று சொன்னால், அவர்கள் எப்படி பயனடைய முடியும் என்று கேட்டேன். அதற்குப் பிறகு வேறு ஒரு வீட்டை ஒதுக்கீடு செய்தார்கள். அந்த வீட்டுக்குச் சென்ற பிறகும், அங்கு வேறொருவர் குடியிருந்திருக்கிறார். 1½ வருடங்கள் அவர்கள் இதற்காக அலைந்து காலம் விரயமானது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 5, 6 தினங்களுக்கு முன்பு நான் பேசும்போது கூட, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்களின் ஒத்துழைப்பை நான் கேட்டேன். ராமசாமி என்பவருக்காக ஒரு வீட்டை ஒதுக்கீடு செய்கிறோம். அப்படி ஒதுக்கிய பிறகு, அதற்கு பதிலாக கிருஷ்ணன் என்பவரிடமிருந்து 40 ரூபாய், 50 ரூபாய் வாங்கிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை வரும்போது, 'அன்ஆதரைஸ்ட்' ஆக இருப்பவர்களை, ஒதுக்கீடு இல்லாமலேயே உள்ளே இருப்பவர்களை நாம் வெளியேற்ற வேண்டிய நிலை வருகிறது. அப்படி வரும்போது அவர்களுடைய சாமான்களை வெளியேற்ற வேண்டிய நிலை வருகிறது. அதை சில பத்திரிகைகள் பார்த்து விட்டால்—அதற்காகவே அவர்கள் இருக்கிறார்கள்—உடனே பத்திரிகையில் போட்டோ பிடித்துப் போட்டு 'பார் பார் குடிசை வாழ் மக்கள் தெருவில் நிற்கிறார்கள்' என்று திட்டமிட்டு படம் போட்டு விளம்பரப்படுத்துகிறார்கள். ஆனால் உண்மை நிலை அவர்கள் போடுகிறமாதிரி அல்ல. யாருடைய வீட்டிலோ அவர்கள் குடியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை வெளியேற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைப்பு கொடுத்தால், உண்மையில் யாருக்கு அந்த வீடு கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு அது கிடைக்கும். ஆனால் ஏதாவது குறைபாடு இருந்தால், என்னிடத்திலே தயவுசெய்து சொல்லுங்கள், உடனடியாக அதைத் தீர்க்க முயற்சி செய்வேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதற்காக நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். வள்ளுவர் கோட்டம் அருகில் இருக்கின்ற புஷ்பா நகரில் இருக்கின்ற குடிசை மாற்று வாரியத்தில் 3 முறை லிஸ்டு போட்டு, 3 முறையும் அடித்து, நான்காவது முறையாக ஏகப்பட்ட பணம் வாங்கியதன்பேரில் பெரும் தகராறு ஏற்பட்டது. அதையும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** இம்மாதிரி குறைகளை அருள் கூர்ந்து என்னிடத்தில் கொடுத்தால், அவைகளைத் தீர்த்து வைக்கிறேன். குறைகளே இல்லை என்று சொல்லவில்லை. 'Man is, after all, fallible'. தவறு செய்யக்கூடியவர்கள் எங்காவது இருக்கத்தான் செய்வார்கள். எங்கு தவறு நிகழ்ந்தாலும், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** அது தொடர்பாகத்தான் அரசுக்குச் சொல்கிறேன். எனக்காக இதைச் சொல்லவில்லை. அதை நான் சொல்லித்தான் மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிய வேண்டும் என்றில்லை. சம்பந்தப்பட்டவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பதால், நான் அதைச் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் அத்தகைய காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இப்படிச் சொல்வது தவறான குற்றச்சாட்டு. அமைச்சர் சொல்லியதுபோல், குறை இருந்தால், சொன்னால், அமைச்சர் அவர்கள் தீர்வு காண்பார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** குறைகளைத்தான் சொல்கிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னதற்கு நன்றி.

அடுத்து, ஆதி ஆந்திர மக்கள் 100 வருடங்களுக்கு மேலாகச் சென்னையில் வாழ்கிறார்கள். அவர்கள் குடியிருக்கிற இடத்தை அரசாங்கம் கையகப்படுத்தி சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று அரசுக்கும் குடிசை மாற்று வாரியத்திற்கும் பல தடவை மனு அனுப்பியிருக்கிறார்கள். அந்த இடத்தைக் கையகப்படுத்தி அந்த மக்களுக்கு இதுவரை கொடுக்கவில்லை. நமக்காக அவர்கள் அசுத்தமான காரியங்களைச் செய்கிறார்கள். அந்த ஆதி ஆந்திர மக்கள் பலமுறை பலருக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அந்த நிலத்தைக் கையகப்படுத்தி அரசாங்கம் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு நான் இதைப்பற்றி மேலும் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒரு குடியிருப்புக்கு 3 ரூபாய் விதம் கொடுத்திருக்கிறார்கள். கோடம்பாக்கம், புஷ்பா நகர் போன்ற பகுதிகளிலே அவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியை அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்க 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாய் விதம் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. 10, 15 வருடங்களாக அவர்கள் குடிசைகளில் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதைச் சொந்தமாக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலைப் போக்குவரத்துபற்றி ஒரு வார்த்தை. சாலைகளை விரிவான முறையிலே அரசு நிர்வகித்துக் கொண்டு வருகிறது. ஆனால் ஒரு சிறிய சம்பவத்தை இங்கே சொல்கிறேன். 'கதீட்ரல் சர்ச்' என்ற பெயர் ஏறக்குறைய 165 வருடங்களுக்கு மேலாக வழங்கப்பட்டு வருகிறது. கிறிஸ்தவ ஆலயத்தினுடைய பெயர். அதையொட்டி இருக்கிற சாலையின் பெயர் 'கதீட்ரல் சாலை'. அந்தச் சாலையின் பெயரை இன்றைக்கு டி.டி.கே. சாலை என்று மாற்றியிருப்பதற்கு உள்ளபடியே நான் வேதனையோடு ஒன்றைச் சொல்கிறேன். மைனாரிட்டி மக்களான கிறிஸ்தவ மக்களுடைய மனதைப் புண்படுத்தும் அளவில் அது நடந்திருக்கிறது. டி.டி.கே. மீது

எனக்கு மதிப்பு உண்டு, நம்பிக்கையுண்டு. அவர் பெரியவர், நல்லவர். அவர் அந்த இடத்தில் குடியிருக்கவில்லை. தாம்பரத்தில்தான் குடியிருந்தார். தாம்பரத்தில் அவர் குடியிருந்த பகுதியிலுள்ள சாலைக்கு டி.டி.கே. சாலை என்று பெயர் வைக்கலாம். மைனாரிட்டி கிறிஸ்தவ மக்களுடைய மனம் புண்படும் வகையில் இந்த மாற்றத்தைச் செய்தால், ஏறக்குறைய 10 ஆயிரம் கிறிஸ்தவ மக்கள் மிகவும் வேதனையோடு மவுன ஊர்வலம் ஒன்றை சமீபத்தில் நடத்தினார்கள். அவர்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டு நம்முடைய அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்தக் காரியத்தில் கிறிஸ்தவ மக்களுக்கு வேதனை ஏற்படுத்தாமலிருக்க, அந்தப் பெயர் மாற்றத்தை ஏற்க வேண்டாமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** அவையின் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையில், காவல் துறையினருக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். அது நியாயம்தான். ஆனால், அவர்கள் திறம்பட வேலை செய்ய வேண்டும். இன்றைக்கு நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது, மிகவும் வேதனையாக இருக்கிறது. பெண்கள் மாலையிலே வெளியே போக அஞ்சும் நிலைமை இருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகையிலே கூட ஒரு செய்தி வந்தது. அதைச் சொல்கிறேன். கே.கே. நகரிலே, கணவனோடு ஸ்கூட்டரிலே செல்லும்போது, மனைவியினுடைய தாலியை அறுக்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சென்னை நகரிலே தினம் தினம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏதோ நடக்கிறது என்று அரசு பாராமுகமாக இருக்கக்கூடாது. அதிகாரிகள் சொல்வதை மட்டும் கேட்டுக்கொண்டிருந்தால் நல்லதல்ல. நேற்று என்னுடைய நண்பரும், அவருடைய மனைவியும் என் வீட்டிற்கு வந்தார்கள். பின்னர் நண்பர் அவர் மனைவியிடம் சொன்னார், 'நீ எலக்ட்ரிக் டிரெயினில், போய்விடு. நான் பின்னர் வந்துவிடுகிறேன்' என்று. அப்படிச் சொன்னவுடனே அந்த அம்மா 'ஐயோ, நான் எப்படி தனியாகப் போவேன், நேரம் ஆகிவிட்டதே' என்று சொன்னார். இப்படி இன்றைக்குப் பெண்கள் அஞ்சும் நிலை இருக்கிறது. ஆகவே, அரசு இதிலே மிக முக்கியமான கவனம் செலுத்த வேண்டும்.

போலீஸ் இலாக்காவை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு வேலியே பயிரை மேயும் நிலைதான் அங்கே இருக்கிறது. இன்றையதினம் போலீஸ் அதிகாரிகள் ஏறக்குறைய 6 கிலோ அளவு தங்கத்தை எடுத்துக்கொண்டு போய் பங்கு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்துல்லா என்பவர் அதுபற்றி மனு கொடுத்திருக்கிறார். அவர் வைத்திருக்கும் மெத்தைக் கடைக்கு வந்த மெத்தையிலே 6 கிலோ தங்கம் வந்துவிட்டது. அது அவருக்குத் தெரியாது. அதை அந்தக் கடையிலே வேலை செய்த பையன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். கடைக்காரர் விவரம் தெரிந்தவுடனே போலீசில் புகார் செய்தார். அதற்கென்று குறைந்தது 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் ரூபாய் வரை கூட பணச் செலவு செய்தார். இதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று முயற்சி எடுத்தார். பின்னர் போலீஸ் அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்தார்கள். பறிமுதல் செய்த பின்னர், அதுபற்றிய புகார் கொடுத்தவரிடம் இது யாருடைய பொருள் என்று கேட்டபோது, இந்தத் தங்கத்தையெல்லாம் யாரோ மெத்தையிலே வைத்திருந்தார்கள், அவர்கள் நாளை வந்து கேட்டால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னபோது, 'அட போடா நீ, இது உன்னுடையதும் இல்லை, என்னுடையதும் இல்லை, நாம் பங்கு போட்டுக்கொள்ளலாம்' என்று சொன்னார்கள். அதற்கு இவர் 'முடியாது' என்று சொன்னார். அதன் பின்னர் 'சரி, பத்து நாளைக்குப் பின் சொல்கிறோம்' என்று போலீசார் சொன்னார்கள். 'பத்து நாளைக்குப் பிறகு வா' என்று சொன்னார்கள். 10 நாளைக்குப் பிறகு இப்போது போலீசார் ஒரு நாடகம் நடத்தியிருக்கிறார்கள். என்னவென்றால், அதுபற்றிய கேசையே போலீசார் மாற்றிவிட்டார்கள். 'தங்கப் புதையல் சிக்கியது' 'ஆம்பூர் அருகே சிக்கியது, போலீசுக்குத் தெரியாமல் மறைத்தவர் கைது' என்ற அளவிலே செய்தியாக வந்திருக்கிறது. திருப்பத்தூர் உதவி போலீஸ் சூப்பிரண்டண்ட் திரு. ஷண்முகநாதன் என்பவரும், சப்-இன்ஸ்பெக்டர்கள் அசோக் குமார், மகேந்திரன் மற்றும் தலைமைக் காவலர் பொன்னுசாமி இவர்கள் இரவு ரோந்து வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ரோந்து வரும்போது ஒருவர் ரோட்டில் பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் முக்காடு போட்டுக்கொண்டிருந்தார், அவரைப் பிடித்து விசாரித்தபோது, புதையல் வைத்திருந்தார், அதில் தங்க நாணயங்கள் இருந்தன என்ற அளவிலே செய்தியாக இன்றைக்கு வந்திருக்கிறது. இன்றைக்குச் சிலைகள் கடத்தப்படுவதைப்பற்றி வந்திருக்கும் செய்தியிலும் அதிகாரியே தலைமை தாங்கியிருப்பதாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கென்று தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி விசாரணை செய்ய வேண்டும். இந்த 6 கிலோ தங்கம் அரசுக்குச் சொந்தமானது. ஆனால் அதை யாரோ ஒரு அதிகாரி எடுத்துக்கொண்டு போய் மதுரையிலே சினிமா தியேட்டர் வாங்கியிருக்கிறார். பல ஏக்கர் நிலங்களை வாங்கியிருக்கிறார். அதுபற்றி விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டால், நான் தருகிறேன். இந்த விவரங்களின் அடிப்படையில், விசாரணை நடத்தி அந்த அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்

பட்டது) இன்றைக்கு சென்னை நகரத்தைத் தூய்மைப் பகுதியாக மாற்ற வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதை வரவேற்கிறேன். அதே நேரத்திலே, தூய்மைப் பகுதி என்று ஒரு குறிப்பிட்ட இடத்தை அல்லது பகுதியை மட்டும் சொல்லாமல், நகரத்தின் எல்லாப் பகுதிகளையும் தூய்மைப் பகுதிகளாக ஆக்க வேண்டும். தூய்மையாக இருந்தால்தான், நகரம் நன்றாக இருக்கும் என்று சொல்லி அமைகிறேன்.

* **செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக முதற்கண் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் சில வரவேற்கத்தக்க திட்டங்கள் இருக்கின்றன. ஏழைக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு 100 கோடி ரூபாய் செலவில் அரசு அறிவித்திருக்கிறது. அதை நான் மிகவும் வரவேற்கிறேன். அரசு அலுவலகங்களிலும், அரசு சார்பான அலுவலகங்களிலும் பணிபுரிபவர்களிடமிருந்து ஒரு கோரிக்கை மூலமாக, அரசு வகுக்கும் திட்டங்களுக்கு, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று அரசு ஒரு பணிவான வேண்டுகோளைக் கொடுத்திருக்கிறது. இதுவும் மிகவும் வரவேற்கத் தக்கது. சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலே 60 ஆயிரம் பள்ளி மாணவ மாணவிகளுக்கு மதிய உணவுக்காக 7,607 ரூபாய் அளிக்கப்படுகிறது. அங்கே அளிக்கப்படும் மதிய உணவு மாணவர்களும், மாணவிகளும் சாப்பிடும் அளவுக்கு இல்லை என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகள் அமைச்சர்களுக்குத் தவறான கணக்கைக் கொடுக்கிறார்கள். நான் அந்தக் குழந்தைகள் எப்படிச் சாப்பிடுகிறார்கள் என்று சில நாட்களுக்கு முன்னால் சென்று பார்த்தேன். குழந்தைகளுக்கு வழங்கப்படும் 'பாலாஹார்' சாப்பிட ஏற்றதாக இல்லை. அதை குழந்தைகளுக்குக் கொடுத்தவுடன் அவர்கள் ஆவலோடு வாங்குகிறார்கள், ஆனால் அவர்களால் அதைச் சாப்பிட முடியவில்லை. ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தி குழந்தைகள் அதைச் சாப்பிட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அந்தப் பிள்ளைகள் அங்கே பள்ளம் தோண்டி அதைப் புதைத்து விடுகிறார்கள். ஆகவே, குழந்தைகள் சாப்பிடும் அளவுக்கு நல்ல உணவாக அவர்களுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். அதையும் அரசு அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்று அதைக் கவனித்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

அடுத்தபடியாக, 10 ஆயிரம் குழந்தைகளுக்கு, சாரணர் இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு சீருடை கொடுக்கப்போவதாக கல்வி இயக்குநர் அவர்கள் கூறியிருக்கிறார். அது மிகவும் வரவேற்கத் தக்கது. ஆனால், இதிலேயும்





ஊழல் வந்துவிடக்கூடாது. இதைப்பற்றி நான் ஒரு சிறு சம்பவத்தைச் சொல்கிறேன். என்னுடைய வீட்டிலே வேலை செய்யும் பையன் ஒருவன் இருந்தான். அவன் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு சீருடை கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. அவன் என்னுடைய வீட்டிலேயிருந்து ஒரு பழைய துணியை எடுத்துக் கொண்டுபோய் பள்ளியிலே கொடுத்து விட்டான். அதையே ஒரு நல்ல காகிதத்தில் Pack செய்து அவனுக்குத் திருப்பிக் கொடுத்தார்கள். அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் 500 குழந்தைகளுக்குச் சீருடை கொடுத்தோம் என்று சொன்னார்கள். ஆனால் அமைச்சர்களுக்கு அந்த ஊழல் தெரியாது. வீட்டிலேயே அந்தக் குழந்தைகள் போட்டுக் கொள்ளும் பழைய துணிகளை வாங்கி அதையே அதிகாரிகள் திரும்பவும் அவர்களுக்குக் கொடுத்து விளம்பரம் செய்தது போன்ற நிலைமைகள் இந்த விஷயத்திலே இல்லாமல் உண்மையிலேயே இந்தத் திட்டங்கள் மாணவர்களுக்கும், குழந்தைகளுக்கும் பயன்படும் அளவிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வரவேற்கத் தக்க நடவடிக்கை என்னவென்றால் இந்த அரசு மண்ணெண்ணெய் மீது எடுத்திருக்கின்ற நடவடிக்கை. மண்ணெண்ணெய் வரியைக் குறைத்தது அனைவருக்கும், குறிப்பாக ஏழைகளுக்கு மிகவும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. மண்ணெண்ணெய் இனி மார்க்கெட்டில் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்த அரசை ஆசிரியர்களின் சார்பிலே நான் பாராட்டுகிறேன். ஆனால் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பலனும் அளிக்காத அளவிலே இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. இதை ஆசிரியர்கள் மிகவும் மன வருத்தத்தோடு சொன்னார்கள். ஓய்வு பெறும்போது ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக இருக்கிறது. அது இந்த நிதிநிலை அறிக்கையில் வந்துவிடும் என்று மிகவும் எதிர்பார்த்திருந்து, அவர்கள் இப்போது ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். அதனையாவது அரசு அறிவிக்கும் என்று எதிர்பார்த்தேன். ஏனோ அரசு அதைச் செய்யவில்லை.

(பிற்பகல் 12-40)

ஆசிரியர்களுக்கு என்று தனியான ஊதியக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுத்திருக்கிறோம். அப்போதுதான் ஆசிரியர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை அரசு உணர முடியும். பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு 1970 ஆம் ஆண்டில் ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டது. அதாவது அவர்களுக்கு ரூ. 450 அடிப்

படை ஊதியமாக அப்போது நிர்ணயிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அதில் எந்தவிதமான மாற்றமுமில்லை. அன்று முதல் இன்று வரை அதே சம்பளம்தான் நீடிக்கிறது. ஆனால் இடைநிலை ஆசிரியர்களுக்கு அரசு ஊதிய உயர்வை அளித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன் என்றாலும், அதைப் போலவே பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் மொத்தப் பணிக்காலத்தையும் கருத்தில் கொண்டு சிறப்பு நிலை அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே பி.டி. ஆசிரியர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும், போஸ்ட் கிராஜுவேட் ஆசிரியர்களுக்கும் 1-6-1981 லிருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து ஆசிரியர்களுக்குமே 20 ஆண்டுக்காலப் பணிக்குப் பிறகு சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டும். தற்போது எலிமெண்ட்டரி கிரேடிலிருந்தவர்கள் போஸ்ட் கிராஜுவேட் நிலைக்கு வருகிற நிலை இருக்கிறது. ஆனால் எலிமெண்ட்டரி கிரேடு கேடர் வேறு, போஸ்ட் கிராஜுவேட் கேடர் வேறு என்று சொல்லிவிடுகிறார்கள். அநேக ஆசிரியர்கள் மொத்தம் 35 ஆண்டுக்காலம் பணி செய்துவிட்டு போஸ்ட் கிராஜுவேட் நிலைக்கு வருகிறபோது, அந்த நிலையில் 5 ஆண்டுக் காலம்தான் சர்வீஸ் இருக்கும். எனவே அவர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கப்படுவது மறுக்கப்படுகிறது. இதை மாற்றி அவர்கள் ஆசிரியராக இருந்த மொத்தப் பணிக்காலத்தையும் கணக்கில் கொண்டு 1—6—1981 முதல் அவர்களுக்குச் சிறப்பு நிலை அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப்பற்றி நான் பலமுறை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கூறி அங்கலாய்க்கிறார்கள். அதைக் கேட்கிற யாரும் மனம் நெகிழாமல் இருக்க முடியாது. தற்போது தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பளத்திற்காக "டீச்சிங் கிராண்ட்" என்ற அடிப்படையில் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. கற்பிக்கும் மான்யம் என்று கொடுப்பதற்கு பதில் ஆசிரியர்களின் சம்பளம் என்ற முறையிலேயே கொடுத்தால் நல்லது, இதனால் அரசாங்கத்திற்குப் புதிதாக பணச் செலவு ஏதுமில்லை. கற்பிக்கும் மான்யம் என்று சொல்வதால், பல சங்கடங்கள் ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றன. எனவே இதை நீக்க அரசு மான்யம் என்று இல்லாமல் ஆசிரியர்களுக்கான சம்பளம் என்ற வகையில் அரசு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் கொடுப்பதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். ஆனால் இதுநாள் வரை ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் எங்கே வேலை செய்தாலும், அவர்களுக்கு நகர ஈட்டுப் படி வழங்கப்பட வேண்டும். பல கிராமங்களில் ஆசிரியர்கள் முறையான வீட்டு வசதியில்லாமல் துன்புறுகிறார்கள். குறிப்பாகச் செங்கை மாவட்டத்தில் மோசமான வீடுகளுக்குக்கூட விலைவாசி ஏற்றத்தின் காரணமாக வாடகையை உயர்த்திவிட்டார்கள். எனவே இந்த நிலையில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பேருந்துகளில் பயணம் செய்பவர்களின் கட்டணம் அதிகமாகிவிட்டது என்பதை நாம் அறிவோம். பல ஆசிரியர்கள் பல்வேறு இடங்களிலிருந்து பள்ளிகளுக்கு வர வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனவே மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் ஆசிரியர்களுக்கும் டோக்கன் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல ஆசிரியர்கள் பல கிலோ மீட்டர் தொலைவிலிருந்து பள்ளிக்கு வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் சலுகை காட்டும் வகையில் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் உள்ளவர்களுக்காவது இந்தக் கட்டணச் சலுகையை அளித்தால், நன்றாக இருக்கும். இதை ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் நாள்தோறும் ரூ. 3 அல்லது 4 அதிகமாக பஸ் கட்டணமாகவே செலவாகிவிடுகிறது.

1970 ஆம் ஆண்டுக்கு முன்பு பணியிலிருந்து ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு பென்ஷன் தொகை ரூ. 100 லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. தற்போது விலைவாசி சூறாவளி போல் உயர்ந்திருக்கிறது. அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையை ரூ. 100 லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். தற்போதைய விலைவாசி உயர்வில் 100 ரூபாயை வைத்துக் கொண்டு யாரும் குடும்பம் நடத்த முடியாது என்ற காரணத்தைச் சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை 250 ரூபாயாக உயர்த்தினார்கள். இதே அளவுக்கு எல்லா பென்ஷன்தாரர்களுக்கும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பென்ஷன்தாரர்கள் இத்தகைய கோரிக்கையை ஏற்கெனவே இந்த அரசிடம் வைத்திருக்கிறார்கள். ஓய்வு பெற்றவர்களிடம் இந்த அரசு இரக்கம் காட்டி இதை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது ஓய்வு பெற்றவர்களிடம் யாரும் இரக்கம் காட்டுவதில்லை. ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்தை இந்த அளவுக்கு உயர்த்துவதன் மூலம் அரசுக்கு ரூ. 3

கோடிதான் தோராயமாகச் செலவாகும் என்று அவர்கள் சங்கத்தின் மூலமாக அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்குத் தொண்டு செய்துவிட்ட அந்த பென்ஷன்தாரர்களுக்கு மாதம் ரூ. 250 ஓய்வூதியம் வழங்கினால், அரசுக்கு ஒன்றும் குறைவு வந்துவிடாது. மிகவும் வயதான அந்தப் பென்ஷன்தாரர்கள் இன்னும் 4, 5 வருஷத்திற்குக்கூட வாழ மாட்டார்கள். அதற்குள்ளாகவே இயற்கை எய்திவிடுவார்கள். எனவே அவர்கள்மீது இரக்கம் காட்டி அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ. 250 என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்த வரையில், இந்த அரசு ஒரு ஓரவஞ்சனை யோடு செயல்படுகிறது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் மட்டும்தான் இந்த அரசின் பிள்ளைகள் என்பதில்லை. ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகிய அனைவருமே இந்த அரசின் பிள்ளைகள்தான். அதிலும் ஆசிரியர்கள் என்பவர்கள் சமுதாயத்தில் மிக முக்கியமான பணியைச் செய் கிறார்கள். எதிர்கால சமுதாயத்தையே உருவாக்கும் மிகப் பெரிய பணியைச் செய்கிறார்கள். அப்படி இருக்கும்போது, காவல் துறையினருக்கு மட்டும் இந்த அரசு வசதி செய்து கொடுப்பது எந்த வகையிலும் நியாயமில்லை. காவல் துறையினருக்கு வசதிகளைச் செய்வதை நான் குறைசொல்லவில்லை. அதைக் கண்டு நான் பொறாமைப்படவில்லை. ஆனால் அவர்களுக்குச் செய்வதைப் போலவே மற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் செய்ய வேண்டும் என்றுதான் கேட்கிறேன்.

காவல் துறையினருக்காக என்று தனியாக வீட்டுவசதி வாரியம் அமைக் கப்பட்டு, அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அதைப் போலவே ஆசிரியர்களுக்கும் தனியான வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தி, அவர்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரைத் தூய்மைப்படுத்துவதுபற்றி பல்வேறு உறுப்பினர்களும் இங்கே பேசினார்கள். 'ஓல்டு சிட்டி' என்று சொல்லப்படும் வடசென்னையில் நான் இருக்கிறேன். அங்கே எங்கு பார்த்தாலும் கழிவு நீர் துர்நாற்றம் இருக் கிறது. எந்த பஸ் ஸ்டாப்பில் நின்றாலும் இத்தகைய துர்நாற்றத்தை உணர முடியும். அதிலும் குறிப்பாக திருவொற்றியூர், வண்ணாரப்பேட்டை, தண்டை யார்பேட்டை போன்ற பகுதிகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. எப்படித் தான் அங்கெல்லாம் மக்கள் வாழ்கிறார்களோ என்று ஆச்சரியப்பட வேண்டி யிருக்கிறது. எனவே அங்கெல்லாம் பொது சுகாதாரத்தையும் துப்புரவுப் பணி களையும் முறையாகப் பேணிச் செய்திட வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். சீர்கெட்டிருக்கும் நிலைமையை மாற்றி அந்தப் பகுதிகளையெல்லாம் தூய்மைப்படுத்த வேண்டும்.



அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல், 'கத்தீட்ரல் சாலை' என்றிருப்பதை 'டி. டி. கே. சாலை' என்று மாற்றும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த செப்டம்பர் 8 ஆம் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்காக தமிழ்நாடு முழுவதும் அர்த்தால் செய்வதற்கு ஏற்பாடு செய்தபோது, அன்றையதினம் கிறிஸ்துவர்களுக்கு முக்கியமான நாள் அன்றைக்கு வேளாங்கண்ணியில் திருவிழா என்ற காரணத் திற்காகப் பேருந்துகளில் அதிகமாக மக்கள் பயணம் செய்வார்கள், ஆகவே இந்த அர்த்தாலை வேறு நாளைக்கு மாற்றி வைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டபோது, அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் நியாயமானது என்று ஏற்று வேறு தேதிக்கு அதை மாற்றினார்கள். எனவே நான் சென்ற வாரம் நடந்த கூட்டத்தில் இதைப்பற்றிக் குறிப்பிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய நியாயமான கோரிக்கைக்குக் கண்டிப்பாகச் செவி சாய்ப்பார் என்று சொல்லியிருந்தேன். எனவே கிறுத்து வர்களின் மனதைப் புண்படுத்தும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் கோரிக்கையை விடுத்து, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1982—83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக் களைக் கூற வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள் கிறேன்.

இந்தச் சமயத்தில் நான் ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஓராண்டுக் காலமாக நான் இந்த அவையில் அமைதியாக உட்கார்ந்து கொண்டு மேலவை நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டு வந்திருக்கிறேன். நான் ஒரு நியமன உறுப்பினர். இங்கே நியமன உறுப்பினர்கள் எல்லாம் ஏதோ ஒரு தனியான ஜாதியைச் சேர்ந்தவர்களைப் போல் நடத்தப்படுவது மனதைப் புண்படுத்துகிறது. இங்கு மரபு என்று சொல்லுகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

எப்போது பெயர் கொடுத்தாலும் 'நாமினேட்டெட் மெம்பர்' ஐ எல்லோரும் பசியோடு இருக்கும் சமயத்தில், எல்லோரும் போய்விட்ட பிறகு, பத்திரிகை நிருபர்கள் கூட போய்விட்ட பிறகு, எல்லோரும் போன பிறகு பேச அனுமதிக் கிறார்கள். சென்ற தடவையும் அப்படித்தான் செய்தார்கள். ஆகவே பேசு வதற்கு மனம் இல்லாமல் பேச வேண்டியிருக்கிறது. கருத்துக்களைச் சொல்லு வதற்காகத்தான் நாமினேஷன் வைத்திருக்கிறார்கள்.

[1982 மார்ச் 3

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினருக்கு ஆதரவாக 9 நாமினேட்டெட் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே தொடர்ந்து பேசலாம்.

**திரு. க. அருணாசலம் :** 9 பேர் நாமினேட்டெட் மெம்பர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் அனுபவம் உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். தேசிய நோக்கோடு, நாட்டின் நலன் கருதி, கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காகவே சிலரை நியமனம் செய்துள்ளார்கள். எனவே நாமினேட் பண்ணினவர்களை, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை விட சிறப்பாக வைத்து அவர்களுடைய பேச்சுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று கருதுகிறேன். அதை இதோடு விட்டுவிட்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்..

மக்களுக்கு நல்வாழ்வு நல்குவதற்காக பெரும் நோக்கோடு கூடிய இந்த அறிக்கையை நான் வரவேற்கிறேன். நல்வாழ்வு நல்குவதற்காக மூன்று பணிகளை, திருவள்ளுவருடைய உதவிகொண்டு, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலாவதாக, வருவாய் வரும் வழிகளை, வருவாய் வரும் பணிகளைப் பெருக்குதல். இரண்டாவதாக நாட்டின் நலன்களை, வளங்களை உருவாக்குதல். மூன்றாவதாக நாட்டின் வளங்களை உருவாக்கும் போது, எதிர்ப்படும் இடையூறுகளை நிவர்த்தி செய்தல். இப்படி மூன்று விஷயங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே இடையூறுகளை நீக்குவது என்பது மிகவும் முக்கியம். வருவாய் வருவதில் இடையூறுகள் இருக்கும், வளங்களை உருவாக்குவதிலேயும் இடையூறு இருக்கும். அவற்றை நீக்குவது மிக முக்கியமானது, அது இந்த நிதிநிலை அறிக்கையிலே காட்டப்பட்டிருக்கிறது. இடையூறுகளில் எல்லாம் பெரிய இடையூறாக இருப்பது. வறுமைதான். வறுமைக் கோட்டின் கீழே பல பேர் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இப்போது அந்த எண்ணிக்கை 30 சதவீதத்திற்குக் குறைந்திருக்கிறது என்று புள்ளிவிவரம் கூறுகிறது. 30 சதவீதம் பேர்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். மற்றவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே வந்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். பொதுவாக வறுமையைப் போக்க வேண்டுமென்றால், வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் பொதுவாக கிராமத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும், வறுமையில் இருக்கும் மக்களுக்குத்தான் கொடுக்கவேண்டும். அவர்களுடைய வறுமையைப் போக்குவதற்காக, கிராம மக்கள் கிராமத்திலேயே வேலை செய்ய வேண்டும் என்ற முறையில் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். தன்னிறைவுத் திட்டம் மாண்பு



1982 மார்ச் 3] [திரு. க. அருணாசலம்]

மிகு முதல்வர் அவர்களுடைய தூண்டுதலால் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். பல நல்ல வேலைகள் நடந்திருக்கின்றன. அதன் மூலம் வறுமை குறைந்துவிடுமா என்று பலருக்குச் சந்தேகம் இருக்கிறது. வறுமைக்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதைப் போக்க போதிய அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்று அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசாங்கம்தான் மாநில அரசுக்குப் பணம் கொடுக்கிறது. மேலும் தர வேண்டும் என்று கேட்பதில் அர்த்தம் இருக்கிறது. மத்திய அரசிடம் கேட்டு மாநில அரசு அதிகாரம் பெற வேண்டும். அதே சமயத்தில் இந்த அதிகாரங்கள் கீழ் நிலை வரையில் போகாமல் சென்னை நகரத்தோடு நின்று போய்விடக் கூடாது. மாவட்டங்களுக்கும், வேறு நிலைகளுக்கும் அதிகாரங்களைக் கொடுக்காததால் மக்கள் வாய்ப்பு இல்லாமல், பங்கு எடுத்துக்கொள்ள முடியாமல் போகிறது. அவர்கள் இப்போது நடைபெறும் திட்டங்களால் தன்னிறைவைப் பெறுகிறார்கள் என்றாலும் தன் சார்புடையவர்களாக ஆவதில்லை. 'செல்ஃப் சஃபிஷியன்ஸி' இருந்தாலும் 'செல்ஃப் ரெலையன்ஸ்' முக்கியம்.

அண்மையில் மகாராஷ்டிரம் சென்றிருந்தபோது, அங்கிருந்த அமைச்சர்களோடு நான் பேசியபோது ஒன்றைச் சொன்னார்கள். "எங்கள் மாநிலத்தில் கிராமச் சபைகளை ஏற்படுத்தி, மத்திய அரசு கொடுக்கிற பல திட்டங்களை 20 அம்சத் திட்டம் உட்பட, கிராமத்தினிடமே கொடுக்கிறோம். ஆனால் கிராமச் சபைகள்தான் இறுதி முடிவை எடுக்கிறார்கள். அதற்கு உதவியாக அதிகாரிகள் இருந்து உதவி செய்கிறார்கள்." என்று சொன்னார்கள். மக்களை பங்கு எடுக்க வைக்கிற திட்டம் நல்ல திட்டம். தமிழகத்திலே பல ஆண்டுகளுக்கு முன்னால் பஞ்சாயத்துச் சட்டம் கொண்டு வந்தபோது, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுத்தார்கள். புறம்போக்கு நிலம் கூட பஞ்சாயத்துக்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னால் அந்த அதிகாரத்தைத் திரும்பப் பெற்று விட்டார்கள்.

இப்போது வளங்களையெல்லாம் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக வளங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. மற்றவர்களோடு பங்கு போட்டுக்கொள்ள வசதியாக கிராம பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுத்தால், நமக்கும் மேலிருந்து இன்னும் அதிகமாகக் கிடைக்கும். மத்திய அரசிலிருந்து இம்மாதிரியான அவசியமான, மக்கள் நல்வாழ்விற்கான அதிகாரங்களையெல்லாம் மாநில அரசுகளுக்கும்,

மாநில அரசுகள் தங்கள் வரம்பிற்குக் கீழேயுள்ள கிராமங்களுக்கும், மாவட்டங்களுக்கும் அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்தால்தான், தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக வருகிற பலன்கள் மக்களுக்குப் போய்ச் சேரும்.

ஆனால் வேலை வாய்ப்பைத் தருவதால் மட்டும் வறுமையை ஒழித்துவிட முடியாது. வறுமையைப் போக்க எல்லோரும் சேர்ந்து வேறுபல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சுதந்திரம் பெற்ற பிறகு மக்கள் எத்தனையோ மடங்கு வளர்ந்திருக்கிறார்கள். ஆனால் மேலே போகப் போக இன்னும் பார்த்து ஆசை வளர்கின்றது. எனவே இன்னும் வறுமையிலேயே இருக்கிறோமோ என்ற சந்தேகம் வருகிறது. பொதுவாக பெருந் தொழில்களை ஆரம்பித்தால், வறுமை போய்விடும் என்று நினைக்கிறார்கள். பீகார், உத்திரப் பிரதேசம், மராட்டிய மாநிலம் ஆகிய மாநிலங்களில் எல்லாம் பெருந்தொழில்கள் சற்று வளர்ந்திருந்தாலும், அங்குள்ள கிராமங்களில் இன்னும் ஏழ்மை இருக்கிறது. இது உலகு எங்கும் நடப்பதுதான். பெருந்தொழில் பெருக்கத்தின் பயனாக கிராமத்தில் உள்ளவர்கள் பட்டிணத்திற்குக் கட்டாயம் வந்து விடுவார்கள். மேலை நாடுகளிலும் கூட நடந்துள்ளது இதுதான்.

பொருளாதாரத் துறையிலே மக்கள் உடையவர், இல்லாதவர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து திட்டம் போட்டுச் செயல்பட வேண்டும் என்ற எண்ணம், இக்காலத்தில் வலுத்து வருகிறது. நமது நாட்டில் ஒவ்வொருவரும் தங்களுடைய கோரிக்கைகளை வைத்த வண்ணம் இருக்கிறார்கள். அண்மையிலே முதலாளித்துவத்தில் முன்னணியில் இருக்கின்ற அமெரிக்காவில் கூட பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஃபோர்ட் கம்பெனி மேனேஜ்மெண்டாரும் கிரைஸ்லர் கம்பெனியாரும், தொழிலாளருக்கும் பங்கு கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். கிரைஸலர் கம்பெனியில் தொழிலாளர்களை டைரக்டர்களாகவும் நியமித்திருக்கிறார்கள். இப்படி முதலாளி, தொழிலாளி இருவருமாகச் சேர்ந்து பங்கு போட்டுக் கொள்கிறார்கள். இந்த எண்ணம் அங்கே வளர்ந்து வருகிறது. நம்முடைய நாட்டிலே கூட ஒவ்வொருவரும் தன்னைத் தானே மட்டும் பார்த்துக்கொள்ளாமல் எல்லோருக்குமாகச் சேர்ந்து ஒரு கூட்டாகச் செயல்பட வேண்டும். அப்படி இல்லையென்றால் திருட்டு, கொலை, கொள்ளை ஆகியவை அதிகமாகும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றால், உள்ளதைப் பங்கு போட்டுக்கொள்ளும் உள்ளம் பலருக்கு ஏற்பட வேண்டும். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" வேண்டும். இப்படி 'ஷேரிங் எக்கானமி' வாராமல் இருக்கும் வரையில், வளமான வாழ்க்கை வராது.





சிறு தொழில்கள் உள்ள பஞ்சாப் மாநிலத்தைப் பாருங்கள், வளமாக வாழ்கிறார்கள். ஒரு பெருந் தொழிலை வைத்து, அது அரசின் கையிலே இருந்தாலும் பரவாயில்லை, தனியார் இலாபம் என்று கருதி அதை வைத்திருக்கிறார்கள். அந்த இலாபம் சமுதாயத்திற்கு வர வேண்டியது. டாட்டா, பிர்லா போன்றவர்கள் கூட 100 கோடி ரூபாய் வைத்திருக்கிறார்கள் என்றால், பொது மக்கள் பணம் உள்ள வங்கிகளிலிருந்துதான் ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை வாங்கிப் போட்டு இலாபம் பெறுகிறார்கள். அவர்கள் இலாபம் பெற பொது வங்கிகள் வழி வகை செய்கின்றன. ஆகவே அதை மாற்றியமைக்க வேண்டும். ஆகவே இந்த நிலையில் அதிகாரம் அடிப்படையிலேயுள்ள மக்களிடத்திலே இருக்கின்ற மாதிரி ஏற்பாடு செய்ய அரசு முன் வரும் என்று நினைக்கிறேன். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத தன்னிறைவுத் திட்டத்தை நம் மாநிலத்தில் வைத்துக் கொண்டிருக்கிற இந்த அரசு அதையும் கவனித்து மக்களை எப்படி பங்கு எடுக்கச் செய்வது என்பதில் ஆர்வம் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசி உயர்வை யார் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசுதான் கட்டுப்படுத்த முடியும் என்று சிலர் நினைக்கிறார்கள். சிலர் மாநில அரசுதான் கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இரண்டுவித பொருளாதாரம் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. ஒன்று வேளாண்மைப் பொருளாதாரம். இன்னொன்று தொழில் பொருளாதாரம். இரண்டு பொருளாதாரத்திற்கும் இடையே நிறைய வேற்றுமைகள் இருக்கின்றன. திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் பிரீமியராக இருந்தபோது ஒரு யோசனையைச் சொன்னார். வேளாண்மைப் பொருளாதாரத்தையும், தொழில் பொருளாதாரத்தையும் சம வகையிலே கொண்டுவர வேண்டுமென்று சொன்னார். ஆனால் அது எடுபடவில்லை.

(பிற்பகல் 1-00)

பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வந்த பிறகும், ஏழைகள் ஏழைகளாகவே இருக்கிறார்கள், பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இதனைக் காணும் சில பொருளாதார நிபுணர்கள் இப்போது இதைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள். இரு பொருளாதாரங்களுக்கிடையே சமநிலை வேண்டுமென்று கருதுகிறார்கள். பொருளாதாரத்திலே அக்ரிகல்சரல் பிரைசஸ் கமிஷன் வேறு, இன்டஸ்டரியல் பிரைசஸ் கமிஷன் வேறு என்று இரு கமிஷன்கள் போட்டிருப்பதை மாற்றி, ஒரே பிரைசஸ் கமிஷன் வைக்கவேண்டும் என்று கருதுகிறார்கள். அதை நம் அரசும் ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி

ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்புதிய கருத்துக்குப் பலம் கொடுத்தால் நல்லது. மாண்புமிகு ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் டாக்டர் பி. நடராசன் அவர்கள் ஆலோசகராக இருந்தார்கள். விவசாயத்திற்கும், தொழிலுக்கும் ஒரு சமவிகித நிலை இருக்க வேண்டு மென்பதை வற்புறுத்தினார்கள். அவர் சொன்னதுபோல் செய்தால்தான், கிராமங்களிலே இருக்கின்ற தொழிலாளர்களும், நகரங்களிலே இருக்கின்ற தொழிலாளர்களும் ஒரே மாதிரியான நல்வாழ்வு வாழலாம். அப்போதுதான் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் வருவது குறையும். சென்ற நிதி நிலை அறிக்கையிலேகூட பார்த்தோம், கிராமங்களிலிருந்து வருபவர்கள் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. கிராமங்களில் இருப்பவர்கள் எண்ணிக்கை முன்பு இருந்தது 82 சதவிதம். இப்போது 79 ஆகக் குறைந்திருக்கிறது. இதனால் நகரங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன என்பது வெளிப்படை. அமெரிக்காவைப் போல, ஜெர்மனியைப் போல பெரிய நகரங்கள் வந்துவிட்டால், நம்முடைய பண்பாடு சிதைந்துவிடும். பழைய பண்பாட்டை நாம் நிலைநாட்ட வேண்டும். தமிழகத்திலே உள்ள பண்பாடு, இந்தியாவின் பண்பாடு நிலை நிறுத்தப்பட வேண்டும். அதற்காகவாவது இந்த சம எற்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் போற்றி வளர்க்க எத்தனையோ நல்ல காரியங்களை செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். நமக்குக் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரப்படி நம் நாட்டிலே 34.50 லட்சம் கலைப்பைகள் இருக்கின்றன. அந்த 34 லட்சம் கலைப்பைகளுக்கும் 75 லட்சம் மாடுகள் இருக்க வேண்டும். நம்மிடம் இருப்பதோ 40 லட்சம் மாடுகள். 35 லட்சம் காளை மாடுகள் குறைவாக இருக்கின்றன. இதை வைத்து விவசாயம் செய்ய முடியுமா? டிராக்டர் வைத்து இப்போது நம்மால் விவசாயம் செய்ய முடியுமா? இப்போதே மின்சாரம் போதிய அளவு கிடைக்கவில்லை. போதுமான அளவுக்குக் கிடைக்க வேண்டுமானால், இன்னும் 4, 5 ஐந்தாண்டுத் திட்டங்கள் போட வேண்டும். அப்போது வேண்டுமானால் போதுமான மின்சாரம் கிடைக்கலாம். இந்த நிலைமையில் கலைப்பையும் மாடுகளும் இருந்து கொண்டுதான் இருக்கும். அதனாலேதான் நமது பொருளாதாரம் ஒரு கலப்புப் பொருளாதாரமாகவே இருக்க வேண்டும் என்று முடிவு கட்டியுள்ளார்கள். அட்வான்ஸ்ட் டெக்னாலஜியும், டிரடிஷனல் டெக்னாலஜியும் இருக்கும். ஆகவேதான் நாம் மாடுகளைப் போற்றி வளர்க்கவேண்டியுள்ளது. இப்போது இருக்கின்ற மாடுகள் 45 லட்சம் தான். பசுக்களைக்கூட சில இடங்களில் உபயோகிக்கின்றார்கள். உழவுக்கு வேண்டிய மாடுகள் இன்னும் நமக்கு 35 லட்சம் மாடுகள் வேண்டும். இருந்தாலும் எப்படியோ விவசாயம் நடத்து கொண்டிருக்





கிறது. சிலர் உழவுக்காலங்களிலே உழாமல், காலம் கழிந்த பிறகு பருவம் தவறி உழுது, ஒன்றும் விளைச்சல் வராமல் ஏமாந்து போய்விடுகிறார்கள். மாடுகள் எண்ணிக்கை குறையாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் இவை நமது மாநிலத்தை விட்டு வெளியே போய்க்கொண்டிருக்கின்றன. இது எப்படி நடக்கிறது? அடிமாட்டுக்காக வாங்கிச் செல்கிறார்கள். வசதி படைத்த நாடுகளில் அவைகளை வாங்குகிறார்கள். அவர்கள் அவைகளை எந்த விலை கொடுத்தும் வாங்கத் தயாராக இருக்கிறார்கள். அதனால் விலைகள் மேலும் உயர்ந்துகொண்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்காக நம்முடைய நாட்டிலே அன்று இருந்த மாநில அரசு முன்பு ஒரு சட்ட முன்வடிவை இதற்காகக் கொண்டு வந்தார்கள். காலம் முடிவதற்குள்ளாக அவர்கள் வெளியேற்றப்பட்டதால், அந்தச் சட்ட முன்வடிவு சட்டமாகவில்லை. மறுபடியும் அதைக் கொண்டுவந்து சட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்று சொல்கிறேன். ரொம்ப முக்கியமானது. இரண்டு வயது முதல் 10 வயதுக் குழந்தைகளுக்கு உணவு கொடுக்க, நம்முடைய 100 கோடி ரூபாய் திட்டம். அது குழந்தைகளுக்காகச் செலவிடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன திட்டம்? எப்படி செலவழிக்கப் போகிறார்கள்? இனிமேல்தான் அதைப்பற்றி முடிவு செய்வார்கள் என்று கருதுகிறேன். இத்திட்டத்தை நான் வரவேற்கிறேன். நாம் வளங்களைப் பெருக்க வேண்டும். மனித வளங்களைப் பெருக்குவதும் முக்கியமானதே. குழந்தைகள் புரத சத்து இல்லாமல் இருப்பதால்தான், அவர்கள் திறமை குறைந்து இருக்கிறார்கள். அவர்களுக்குத் திறமை வளர வேண்டும் என்றால் பிறப்பிலேயிருந்தே அவர்களுக்குப் புரதசத்து நிறைந்த உணவு கொடுக்கவேண்டும். 2 வயது முதல் 10 வயது வரையாவது அவர்களுக்கு இந்த 100 கோடி ரூபாயைக் கொண்டு புரதசத்து நிறைந்த உணவு கொடுத்தால் மூளைவளர்ச்சி ஏற்பட்டு விழிப்புணர்வுடைய குடிகளாக வளருவார்கள். இதை நான் வரவேற்கிறேன். மக்கள் பலர் விழிப்புணர்ச்சி அற்றவர்களாக இருக்கிறார்கள். சிலர் விழிப்புணர்ச்சி உள்ளவர்களாக இருந்து, பலர் விழிப்புணர்ச்சி அற்றவர்களாக இருப்பதால்தான், ஒரு சாரார் மற்றொரு சாராரைச் சுரண்டும் நிலைமைகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால்தான், எல்லோரும் சமமாக வாழ வழி ஏற்பட வாய்ப்பு இருக்கும். இது ஒரு நல்ல திட்டம். வரவேற்கக்கூடிய திட்டம். இது கல்வியோடு இணைந்தால், மிகவும் பிரயோசனமாக இருக்கும். இராமலிங்க வள்ளலார் அவர்கள் எல்லோருக்கும் உணவு கொடுக்க வேண்டும் என்றார்கள். அது மட்டுமல்லாமல், ஒரு ஞான சாலையும் அமைத்தார்கள். உணவுடன் அவர்களுக்குக் கல்வி அறிவும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுபோல நாமும் உணவோடு

அறிவுக் கல்வி அறிவையும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சிறுவர்கள் 2 வயதிலேயே கூடி விளையாட வேண்டும். ஒரு மணி நேரம் விளையாடிய பிறகு வந்து உணவு பெறுகின்ற மாதிரி இருக்க வேண்டும். 7, 8, 9 வயதுள்ளவர்களுள் ஆடு மாடு மேய்ப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களையும் ஊக்குவிக்கின்ற அளவிற்கு இதனைச் செய்ய வேண்டும். அவர்கள் மாலை நேரத்தில் ஒரு மணி நேரம் படிக்கலாம். அதன் பிறகு அவர்களுக்கு உணவு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கெனவே நம் நாட்டில் கல்வி அறிவு இல்லாதவர்கள் எத்தனை பேர்கள் என்று பார்த்தால், கிட்டத்தட்ட 30 சதவிகிதம் முதல் 40 சதவிகிதம் பேர்கள் வரையில் தற்குறிகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் பள்ளியில் இடைக்காலத்திலேயே நின்றுவிட்டவர்கள். டிராப் அவுட்ஸ் என்று சொல்வார்கள். அவர்களுக்கும் சாப்பாடு போட்டு மாலையிலே வேலையிலிருந்து வந்த பிறகு, படிக்கச் செய்யலாம். அவர்கள் பகலிலே ஆடு மாடு மேய்க்கும்போதும், வேலை செய்யும்போதும் பகலில் கஞ்சி கொடுக்கிறார்கள். இரவிலே கல்விக்குப்பின் சாப்பாடு போட வழி செய்யலாம். அவர்களுக்கு நல்ல சத்துணவு கொடுத்துவிட்டால் பின்னர் வேலைத் திறனும் அறிவும் ஒருங்கே வளரும்.

அடுத்து, இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். அரசு வருவாய் பெருகுவதற்காகச் சில பல நல்ல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். ஆனால் மது விலக்கைத் தளர்த்தி அதன் மூலமாகத்தான் வருவாயை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமா? மது விலக்கைத் தளர்த்திய பிறகும் கள்ளச் சாராயம் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறது. தளர்த்தினால் குறையும் என்று சொல்லப்பட்டது. ஆனால் நம் மாநிலத்தில் கள்ளச் சாராயம் அதிகமாக இருக்கிறதே தவிர, குறைந்த பாடாக இல்லை. மது விலக்குக் கொள்கையைப் பற்றி அண்ணா பிறந்த நாள் அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசிய பேச்சை நான் படித்துப்பார்த்தேன். அதை நான் பாராட்டினேன். மறுபடியும் மதுவிலக்கை அமுல்படுத்துவார்கள் என்று கருதினேன். ஆனால் இந்த அறிக்கை ஏமாற்றமளிக்கிறது. அமுல்படுத்தினாலும் எங்காவது தவறு இருந்துகொண்டுதான் இருக்கும். இந்தியன் பீனல் கோட் என்று இருந்தாலும்கூட, தவறுகள் நடக்காமலா இருக்கின்றன? சமுதாயத்திலே இருந்தாலும்கூட, தவறுகள் நடக்காமலா இருக்கின்றன? சமுதாயத்திலே யாராவது இருந்துகொண்டுதான் இருப்பார்கள். ஏனென்றால் மனிதன் பரிணமித்துக்கொண்டிருக்கின்றான். எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சிலர் ராட்சச குணம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். சிலர் மிருகத்தனம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். எப்படியாவது பணம் சேர்க்க வேண்டுமென்று இந்தக் கள்ளச் சாராய வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்



களைக் கண்டுபிடித்துத் தக்கபடி திருத்த வேண்டும். அவர்கள் நல்வாழ்விற்கு ஏற்பாடு செய்யலாம். மதுவிலக்கைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருவாய் இல்லாமல், வரி போடாமல் எந்த அரசும் ஆட்சி நடத்த முடியாது. அது எல்லோரும் அறிந்ததே. வரி போடலாம். மாநில அரசு வரி போடலாம். கிராமத்தில் வரி போடலாம். மத்திய அரசில் வரி போடலாம். ஒவ்வொருவரும் கொடுத்து உதவிக்கொள்ளலாம். மத்திய அரசும் நாம் கேட்கிறபோது கொடுக்கிறார்கள். மத்திய அரசிலும் திட்டங்கள் தீட்டுகிறார்கள். அவர்கள் 20 அம்சத் திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அதுவும் ஏழைகள் பயன் பெறக்கூடிய அளவுக்கு இருக்கிறது. நம்முடைய மாநில அரசும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. நாம் எல்லாம் ஒற்றுமையோடு காரியங்களைச் செய்தால், சச்சரவு, விரோதம் இவைகள் இல்லாமல் அமைதியான முறையில் வாழலாம், நன்கு முன்னேறலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-09)

## இணைப்பு I

[363 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 137-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

(அ) தமிழகத்தில் இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்தின்கீழ் உள்ள பெரிய கோவில்களான கீழ்வரும் எட்டு திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படுகிறது :—

1. அருள்மிகு கள்ளழகர் கோவில், அழகர் கோவில்.
2. ,, மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மதுரை நகர், மதுரை மாவட்டம்.
3. ,, சுப்பிரமணியசுவாமி கோவில், திருத்தணி.
4. ,, இராமநாதசுவாமி கோவில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்.

5. அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில், மைலாப்பூர்.

6. „ சுப்பிரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர் நகர், திருநெல்வேலி மாவட்டம்.

7. „ தண்டாயுதபாணிசுவாமி கோயில், பழனி, மதுரை மாவட்டம்.

8. „ தேவி கருமாரியம்மன் கோயில், திருவேற்காடு.

மேலும், அனேகமாக எல்லா ஆலயங்களிலும் சேவார்த்திகள் விரும்பிக்கேட்டால் தமிழில் அர்ச்சனை செய்யப்படுகிறது.

(இ) தமிழில் அர்ச்சனை செய்யப்படுவது சம்பந்தமாக ‘ தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் ’ என்ற அறிவிப்புப் பலகை ஆலயங்களில் வைக்கப்படவேண்டும் என்றும் தமிழ் அர்ச்சனைப் பாடல்களை தெரிந்துகொள்ளுமாறு உதவ வேண்டும் என்றும் ஆலயங்களுக்கு வருபவர்களில் பலருக்கு வடமொழி தெரியாததனால் தமிழில் அர்ச்சனையை அதிகமாகச் செய்யலாம் என்றும் ஆலய நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இணைப்பு II

397 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ் நாட்டில் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு, இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்த ஏறத்தாழ 15,000 பேர் வேலை வாய்ப்பில்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு பணி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு அரசு, ஏற்கனவே இயங்கிவந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மூடியும், பயிற்சிப் பள்ளி பிரிவுகளை குறைத்தும், ஒரு வருடம் விட்டு மறு வருடம் மட்டுமே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களை அனுமதிக்கவும் ஆணையிட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்வதற்கு மாணவர்கள் 300-க்குக் குறையாமல் மதிப் பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்றும், இரண்டு ஆண்டு பயிற்சிப் பள்ளியில் தொடர்ந்து பயிற்சி பெற வேண்டும் என்றும், ஆசிரியர் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதற்கு குறைந்தது 50 சதவிகிதம் மதிப்பெண்கள் பெறவேண்டும் என்றும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டில், மாணவர்களுக்கு போதிக்கத் தமிழ் முறையில் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாமல்



அல்லலுறும் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டு, மேற்கண்டவாறு நிபந்தனைகள் பல ஏற்படுத்தி, வேலை வாய்ப்பில்லாமல் உள்ள நிலைமையைக் குறைக்க அரசு கொள்கையளவில் செயல்பட்டு வரும்போது, கர்நாடக மாநிலத்தில் உள்ள பயிற்சிப் பள்ளிகளில் நிபந்தனைகள் ஏதும் இன்றி ஆங்கிலத்தில் போதனாமுறைப் பயிற்சி பெற்று இடைநிலை ஆசிரியர் சான்றிதழ் பெற்ற பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இம்மாநிலப் பள்ளிகளில் (குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில்) பணிபுரியும் வாய்ப்பு வேகமாகப் பரவி வருவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனை அரசு கவனமாக ஆராய்ந்து தமிழ்நாட்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்து காத்திருக்கும் வேலை யற்றோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்வரை கர்நாடக மாநிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை தமிழ்நாட்டுப் பள்ளிகளில் பணியமர்த்துவதை நிறுத்த வேண்டும் என்ற கருத்தில் கர்நாடக மாநிலத்தில் இடைநிலைப் பயிற்சி பெற்ற வர்களின் சான்றிதழை, தமிழ்நாட்டுப் பயிற்சி சான்றிதழுக்கு ஈடாக மதிப்பீடு செய்வதை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு 5—8—81 நாளிட்ட கல்வித் துறை அரசாணை எண் 1667-ல் அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணையினை தொடர்ந்து, கர்நாடக மாநிலத்தில் ஆசிரியப் பயிற்சிப் பெற்றவர்களின் தற்காலிக ஆசிரிய நியமனங்கள் ஒப்புதல் (Approval ) செய்தல்கூடாது என பள்ளிக் கல்வி இயக்குநரால் 14—8—1981 மற்றும் 11—9—1982 நாளிட்ட அவருடைய செயல்முறைகளில் சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

2. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும், பாதிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர்களும் இது குறித்து அரசுக்கு முறையீடுகள் செய்துள்ளனர். இம்முறையீடுகளில், இதுகாறும் கர்நாடக மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களை தமிழக பள்ளிகளில் வேலையில் அமர்த்து வதற்கு தடை விதிக்கக்கூடாது எனக் கோரியுள்ளனர். இதற்கிடையில் சில ஆசிரியர்கள் பள்ளிக் கல்வி இயக்குநரின் மேற்கூறிய செயல்முறைகளை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதையொட்டி, அச்செயல்முறைகளுக்கு இடைக்கால தடை உத்தரவு உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வழக்கு குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தால் இறுதியாக நீதி வழங்கப்படும் வரை மேற்கூறிய அரசாணையில் மாற்றம் செய்வது குறித்து தற்போது எவ்வித முடிவும் எடுப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## இணைப்பு III

(38-ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியரல்லாத அலுவலர்கள் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகள் கீழ்வருமாறு :—

(1) சென்னை மற்றும் மதுரை பல்கலைக் கழகங்களுக்கு இணையாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியரல்லாத அலுவலர் ஊதிய விகிதத்தை மாற்றுவது.

(2) எல்லா ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கும் மாதத்துக்கு ரூபாய் 50 மருத்துவப்படி வழங்குவது.

(3) எல்லா வகையான ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கு குறிப்பிட்ட காலவரைக்குள் தானாகவே பதவி உயர்வு அளித்தல் போன்றவையாகும்.

சென்னை மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்களுக்கு இணையாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியரல்லாத ஊழியர்களின் ஊதிய விகிதத்தை மாற்றுவது குறித்து ஏற்கனவே ஒரு நபர் குழு பரிசீலித்து கோரிக்கையை மறுத்துள்ளது. எனினும் ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கு பல்கலைக் கழகப்படி வழங்கலாம் என ஒரு நபர் குழு பரிந்துரைத்தது. ஒரு நபர் குழுவின் இப்பரிந்துரையை முன்வைத்து அரசாணை எண் 574, வேளாண்மை, நாள் 17—3—1981ல் ரூபாய் 250—400 முதல் ரூபாய் 450-800 வரை சம்பள விகிதம் வாங்குபவர்களுக்கு அதிக பட்சம் மாதத்திற்கு ரூபாய் 50 ஆக அடிப்படை சம்பளத்தில் 10 சதவிகிதம் எனவும் மற்றும் ரூபாய் 525-925 முதல் ரூபாய் 750-1,350 வரை சம்பள விகிதம் வாங்குபவர்களுக்கு குறைந்த பட்சம் மாதத்துக்கு ரூபாய் 50 ஆக அடிப்படை சம்பளத்தில் 5 சதவிகிதம் என பல்கலைக் கழகப்படி, ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கு வழங்குவதென அரசாணை பிறப்பித்தது.

இதற்குப் பின்னும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக ஆசிரியரல்லாத ஊழியர்கள் தங்களின் ஊதிய விகிதத்தை மதுரை காமராஜ் பல்கலைக் கழக ஊழியர்களின் ஊதிய விகிதத்திற்கு இணையாக மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். இக்கோரிக்கை இப்போது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.



பல்கலைக் கழகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் மாதம் ரூபாய் 50 மருத்துவப்படியாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கல்வித்துறையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. கல்வித்துறை எடுக்கும் முடிவு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் பொருந்துமாறு அமையும்.

ஆசிரியரல்லாத ஊழியர்களை குறிப்பிட்ட காலத்திற்குள் பதவி உயர்வு கொடுத்து பதவியிலமர்த்த வேண்டுமென்னும் கோரிக்கையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக் குழுவின் முன் வைத்து அதன் முடிவு அறியப்படும் என்று ஏற்கனவே பல்கலைக் கழகத் துணை வேந்தர் அரசிடம் உறுதியளித்துள்ளார். எனவே இக்கோரிக்கையை அரசு பரிசீலித்து முடிவு செய்ய வேண்டியதில்லை.

மேற்கூறிய இக்கோரிக்கைகளின் மீது அரசு முடிவு எடுக்கும்முன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியரல்லாத அலுவலர்களின் நேரடி நடவடிக்கை உசிதமான ஒன்றாகக் கருதப்படவில்லை.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1982 மார்ச் 4.

(மாசி 20, துன்மதி—2013, திருவள்ளுவராண்டு)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### நகரத்தார் சமூகம்.

* 145 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) நகரத்தார் சமூகத்தை, பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று, அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இதர வகுப்பினர்களிடமிருந்தும் வந்துள்ள கோரிக்கைகளுடன் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, நகரத்தார் சமூகத்தில் ஒருசிலர் செல்வந்தர்களாகவும், வசதி உள்ளவர்களாகவும் இருப்பது உண்மையானாலும், அந்தச் சமூகத்தில் பெரும்பாலான மக்கள் வறுமையிலே வாழக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த சங்கத்திடமிருந்து அது பற்றிய கோரிக்கை வந்திருக்கிறது. அதைப்போல் பிற சமூகத்தினரிடமிருந்தும் கோரிக்கைகள் வந்திருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று எந்தெந்த சமூகத்தினரிடமிருந்து, சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன, அவற்றில் எவையெவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு வகுப்பினரும் தாங்கள் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டால், பிற்பட்டவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் தங்களுக்கும் எளிதில் கிடைக்கும் என்று நினைத்து, கேட்கிறார்கள். பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கின்றபோது, அவர்கள் சமுதாயத் துறையிலே புல்லாண்டுகளாகப் பின் தங்கியிருப்பது, பொருளாதாரத் துறையிலே பின் தங்கியிருப்பது, கல்வியிலே பின் தங்கியிருப்பது, ஆகிய நிலைமைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு, வெள்ளைக்காரர்கள் காலத்திலேயிருந்து பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் ஏழைகள் என்று கணக்கு எடுத்தால், எல்லாச் சமூகத்தினரும் இருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால், இந்த நாட்டில் இருக்கும் அவ்வளவு சமூகத்தினரையும் சேர்க்க வேண்டிய நிலைமை வரும். எனவே இவைகளிலே இருக்கும் தன்மைகளைப் பரிசீலித்து முடிவுகளை எடுக்கும்போது, பிற்பட்டோர் பட்டியல் நீளுகின்ற அளவிற்குப் போகும். பட்டியலில் இணைக்கப்படுகின்ற எண்ணிக்கை அதிகமாக அதிகமாக, யாருக்கு அந்தப் பயன்கள் போக வேண்டுமென்று கருதுகிறோமோ, அது அவர்களுக்குப் போக முடியாமல் போகிறது என்ற கருத்தை திரு. சட்டநாதன் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்னொரு கருத்தையும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஏற்கனவே பிற்பட்டோர் பட்டியலில், பிற்பட்டோர் என்று சேர்க்கப்பட்டவர்களிலே முற்போக்கு அடைந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். பலர் , பின் தங்கியவர்களும் இருக்கிறார்கள்; 10, 12 சமூகத்தினரை அந்தப் பட்டியலிலிருந்து எடுத்து விடலாமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னின்ன சமூகத்தினை எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி எடுத்தால்தான், மற்றவர்களுக்கு அந்தப் பயன் போய்ச் சேருமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படி எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டபோது, 27 வகுப்பினரைப் பற்றிக் கேட்டார்கள். அவர்கள், பிற்பட்டோர் பட்டியலில் தங்களைச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டிருக்கிறார்கள்.

தொண்டை மண்டல ஆதிசைவ வெள்ளாளர்கள்

ரோமன் கத்தோலிக் மலங்கரா சிரியோ மலபார் ரைட்ஸ்

லிங்காயத்துக்கள்

கம்மவார் நாயக்கர்/ரெட்டியார்

நாயர்கள்

சைவ செட்டியார்



சோகுல வெள்ளாளர்கள்

ஆரியர்

கொண்டா ரெட்டி (கொளத்தூர்)

வெள்ளாளர் (கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள்)

வெள்ளாளர் (இதர மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்)

புலவர் (கோயம்புத்தூர் மாவட்டம்)

பாண்டியா வெள்ளாளர்கள்

கொங்கு நாயக்கர்கள்

அரியூர் நகரத்தார்

கோட்டைப்புர செட்டியார்

ஒரு குண்டாரெட்டி

எழுத்தச்சர் (அனைத்து மாவட்டங்களுக்கும் நீடிக்க) மற்றும் காடுப் பட்டான் (மீண்டும் சேர்க்க).

மஞ்சபுதார் செட்டியார்

தேசிகர்

ஜெனோலா கால்வேஷன் சர்ச் மெம்பர்கள் (கன்னியாகுமரி மாவட்டம்)

வேலர்

அனைத்து மதம் மாறிய கிருத்துவர்கள்

கோன கொல்லர்கள் (சேலம் மாவட்டம்)

முப்பன்

நாட்டுக்கோட்டை நகரத்தார்

ராவுத்தர், மாக்காயர்—இத்தனை பேர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதுபற்றி 1981ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கை கணக்கீட்டையும், மற்றவைகளையும் வைத்துக்கொண்டு, உள்ளபடியே ஜாதிகளின் அடிப்படையிலே, கல்வி அடிப்படையிலே, பொருளாதார அடிப்படையிலே இந்த சமூகத்தினர் பின் தங்கியவர்களா என்று ஆராய்ந்து, அவர்களைச் சேர்க்க வேண்டும். ஒரு சிலர் ஏழ்மையில் இருக்கிறார்கள் என்ற காரணத்தை வைத்து, பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தால், எந்த நோக்கத்திற்காக இதைப் பயன்படுத்துகிறோமோ அந்த நோக்கம் தடைப்படும். இருந்தாலும் இவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு சில சமூகத்தினர், தங்களைப் பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் சேர்த்திருந்தாலும், அந்தச் சமுதாயம் இன்னமும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகச் சொல்லி, அந்தச் சமூகத்தினருக்குத் தனி ரிசர்வேஷன் கேட்டு வருகிறார்கள். அது சம்பந்தமாக அரசு ஏதாவது பரிசீலித்து வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. ஆ நல்லசிவன் : பிற்பட்டோர் பட்டியலில் அல்லாத மற்ற சமூகங்களில் இருக்கிறவர்களுக்கு இட ஒதுக்கீடு தராவிட்டாலும், பின் தங்கியோருக்குத் தரும் இதர சலுகைகளை அந்தச் சமூகங்களில் உள்ள ஏழைகளுக்குத் தர முடியுமா ? இட ஒதுக்கீடு இல்லையென்றாலும், பொருளாதார அடிப்படையிலே மற்ற சலுகைகளை அவர்களுக்குத் தர அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கு வருமான வரம்பு ஆகியவைகளை வைத்து, அதற்குக் கீழே உள்ளவர்களுக்கு சிலபல சலுகைகளைத் தருகிறோம். அது எல்லோருக்கும் பொருந்துவதாக இருக்கும். மெரிட் என்ற அடிப்படையிலே கொடுக்கும் சலுகைகளும் அத்தனை பேருக்கும் வரும். எனவே பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வரம்பு வைத்து, சிலபல சலுகைகளைத் தருகிறோம். தனியாகக் கேள்வி கேட்டால், அதனுடைய விவரங்களைச் சொல்ல முடியும்.

திரு. சி. இராமலிங்கம் : கைத்தறி நெசவுத் தொழில் செய்கின்றவர்கள், சோழியர் என்ற வகுப்பார், கன்னடச் சோழியர், சோழியச் செட்டியார் என்று 5, 6 பிரிவுகளாக இருக்கிறார்கள். அவர்களை ஒரே இனமாகச் சேர்க்கும் எண்ணம் அரசுக்குண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் அவர்களுடைய விருப்பம் என்ன என்பதை ஆராய வேண்டும். இதிலே கொண்டுவர முடியுமா என்று அதற்குப் பிறகு ஆராய வேண்டும். அரசே பார்த்து எல்லோரையும் ஒரே இனத்தில் சேர்த்துவிட்டால், அதற்குப் பிறகு கிளர்ச்சி ஏற்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பிற்பட்டோர் பட்டியலிலே உள்ள அச்சக்கரை வெள்ளாளர் என்ற பிரிவினர் தங்களை அந்தப் பட்டியலிலிருந்து நீக்கி, தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்களே, அதுபற்றி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் பட்டியலில் இருக்கிற எந்தச் சமூகத்தினராவது நாங்கள் முன்னேறிவிட்டோம், எங்களை முற்போக்குப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிக் கேட்கவில்லை. வசதிகள், கோரிக்கைகள் என்று வரும்போது, தங்களை பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லுகிறார்கள். உரிமைகள், அந்தஸ்துகள், மற்றவை கேட்கின்றபோது தாங்கள் உயர்ந்தவர்கள், நாட்டை ஆண்டவர்கள், வெற்றி கொண்டவர்கள், விருது பெற்றவர்கள் என்று சொல்லுகிறார்கள்.

### மாவட்டங்களைப் பிரித்தல்.

* 146. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) வட ஆற்காடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களும், நிர்வாகப் பரவல் கருதி, பிரிக்கப்பட அல்லது சீரமைக்கப்பட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) இது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசின் பரிசீலனையில் ள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அரசின் பரிசீலனையில் உள்ளதாக கடந்த ் ஆண்டுகளாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். துணை வட்டங்களை வட்டங்களாக ஆக்குதல் இன்னும் இதுபோன்ற பல நடவடிக்கைகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு சில நல்ல பணிகளைச் செய்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய இரண்டும் பெரிய மாவட்டங்கள். அவை பெரிய மாவட்டங்களாக இருப்பதால், நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்காக அவற்றையும் பிரிக்க வேண்டும். நிர்வாகச் சுமை அதிகமாக ஆகிவிட்டது. இந்த இரண்டு மாவட்டங்களையும் இரண்டாகப் பிரித்தால், அரசின் திட்டங்கள்

மக்களிடம் போய்ச் சேர தாமதம் ஆகாது. ஆகவே இந்த இரண்டு மாவட்டங்களையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை மீது அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ? அண்மையில் தமிழக அமைச்சர் ஒருவர் மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அந்தச் செய்தி உண்மையா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நாங்கள் அண்மைக் காலத்திலே இதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வருகிறோம் என்று சொல்வதை விட, கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது இங்குள்ள அனைவருக்கும் நன்றாகத் தெரியும். பெரியார் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் என இரண்டாகப் பிரித்திருக்கிறோம். அதுபோல மீண்டும் இவைகளைப் பிரிக்க நிர்வாகச் செலவுகள் போன்றவைகளுக்கு அதிகமாகச் செலவாகும் என்பதால், ஒன்றன் பின் ஒன்றாகச் செய்ய இருக்கிறோம். அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிக்க இருக்கிறோம். தொடர்ந்து மதுரை மாவட்டம் வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நான் சார்ந்திருக்கிற வட ஆற்காடு மாவட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை. இது குறித்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே சொல்லி வருகிறார்கள். இந்த மாவட்டம் மிகப் பெரிய அளவில் பரந்திருக்கின்ற காரணத்தாலும், பிரித்தால் நிர்வாகம் செம்மையாக நடைபெறும் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையிலும் மற்ற மாவட்டங்களைப் பிரிக்கும் போது, இதையும் பிரிக்க ஆவன செய்வார்களா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாவது இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் சார்ந்திருக்கிற மாவட்டம் என்ற குறுகிய இடத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வந்து விட்டார்கள். " யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற முறையில் உலகம் பூரா பார்க்காவிட்டாலும் கூட, தமிழ் நாடு என்ற கண்ணோட்டத்திலாவது பார்க்க வேண்டும். வட ஆற்காடு மாவட்டமும் அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது, ' திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலிருந்தே சொல்லி வருகிறார்கள் ' என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதையெல்லாம் நாங்கள் செய்ய வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா ?



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினரிடம் கேட்கிறாரா இல்லை, தலைவரைக் கேட்கிறாரா ? அமைச்சர் அப்படிச் சொல்லவில்லையே.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஒரு மாவட்டத்தைப் பிரிக்கும்போது ஏற்படுகின்ற தொடர் செலவு எவ்வளவு ? தொடராச் செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பெரியார் மாவட்டத்தை அமைக்கும்போது ஏற்பட்ட தொடர் செலவு ரூபாய் 37 லட்சம். தொடராச் செலவு ரூபாய் 366 லட்சம். ஒரு பெரிய மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க தொடர் செலவு ஏறக்குறைய ரூபாய் 40 லட்சம் என்றும் தொடராச் செலவு ஏறக்குறைய 400 லட்சம் ரூபாய் ஆகும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களைப் பிரிக்கிறபோது கட்டிடங்கள் கட்டுவது போன்ற நிலைமைகள் காரணமாக செலவுகள் கூடுதலாகும். கட்டிடங்கள் கட்டவில்லையென்றால், செலவு குறைவாக ஆகும்.

**திரு. சி. இராமலிங்கம் :** 1911 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தபோது சித்தூர் மாவட்டம் உருவானது. சித்தூர் மாவட்டம் தெலுங்கு பேசுகிறவர்களுக்குப் போனது. ஆகவே வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரிக்கும்போது, அங்கே தெலுங்கு மொழியின் ஆதிக்கம் வராமலிருக்க தக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** திராவிட மொழிகளில் தெலுங்கும் ஒன்று என்பதை உறுப்பினர் அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

### வட்டங்கள், வருவாய் கோட்டங்களை அமைத்தல்.

* 147. **வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அதிகாரத்தைப் பரவலாக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் மேலும் வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அரசினுடைய பரிசிலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தமிழ் நாட்டிலே இனி துணை வட்டங்கள் இருக்காது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்ததாக நான் பத்திரிகையில் பார்த்தேன். அப்படி என்றால், இருந்த துணை வட்டங்கள் எல்லாம் வட்டங்களாக மாற்றப்பட்டு விட்டனவா, அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மொத்தம் 133 வட்டங்களும் 33 துணை வட்டங்களும் இருந்தன. 33 துணை வட்டங்களும் இப்போது வட்டங்களாக மாற்றப்பட்டு விட்டன. இப்போது மொத்தம் 166 வட்டங்கள் தான் இருக்கின்றன. துணை வட்டங்கள் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இவ்வாறு மாவட்டங்களைப் பிரிக்கவோ, புதிய வட்டங்களை உருவாக்கவோ, புதிய வருவாய் கோட்டங்களை அமைக்கவோ செய்வதன் மிக மிக முக்கிய நோக்கம் அங்கு நிர்வாகப் பணி நல்லமுறையில் நடைபெற்று ஏழை—யெளியவர்களுக்கு உடனடியாகத் திட்டங்களின் பலன் போய்ச் சேர வேண்டும் என்பதுதான். அதற்கேற்றவாறு பெரிய மாவட்டங்களை அல்லது வட்டங்களைப் பிரிக்கிறபோது, அதற்குத் தேவையான அலுவலர்களையும் அளித்து, ஆள் பற்றாக்குறை இல்லாமல் இருக்கும் வகையில் ஒரு நிலையினைத் தோற்றுவித்தால் அலுவலகங்கள் செம்மையாக நடைபெறும். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** உறுப்பினருக்கு ஒன்று சொல்கிறேன். இதற்கு முன்னாலே வட்டங்களை, மாவட்டங்களைப் பிரித்தபோது அப்போதிருந்த அரசு போட்ட உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவையும் நாங்கள் போட்டுள்ள உத்தரவையும் உறுப்பினர் தயவுசெய்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால், அதுபற்றி நன்றாக விளங்கும். முன்பு தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் உத்தரவு போடுவார்கள். ஒரு தரம் ஜீப்புக்காக உத்தரவு போடுவார்கள். அப்புறம் டைப்பிஸ்டுக்காக உத்தரவு போடுவார்கள். அப்புறம் போன் வைக்கச் சொல்லி உத்தரவு போடுவார்கள். ஆனால் இப்போது போடப்படுகிற உத்தரவு காம்பிரிஹென்சிவ் ஆக அந்த வட்டத்திற்கு அல்லது மாவட்டத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒருங்கிணைத்து ஒரே உத்தரவாக வெளியிடப்படுகிறது. உறுப்பினர் இரண்டு ஆணைகளையும் பார்த்தால், வேறுபாடு விளங்கும். இப்போது ஒரே உத்தரவின் மூலம் 33 வட்டங்களாக ஆக்கி வேண்டிய அத்தனை வசதிகளையும் ஒருங்கிணைந்த முறையில் செய்திருக்கிறோம்.





**மாணவர்களிடம் கட்டாய நன்கொடை.**

* 148. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்ர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் கல்வி மாவட்டம், பாலக்றிச்சி புனித ஜேம்ஸ் மேல்நிலைப்பள்ளியில் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் பயரால் விடுதி மாணவர் ஒவ்வொருவரும் ரூ. 300-ம் மற்றும் வெளி மாணவர் வ்வொருவரும் ரூபாய் 50-ம் ஆண்டுதோறும் நன்கொடை தரவேண்டும் என ற்புறுத்தி, கட்டாயமாக வசூலிக்கப்படுவது பற்றியும், மற்றும் வேறு பல கையிலும் உரிய ரசீது தராமல், தொகை வசூலிக்கப்படுவது பற்றியும் ரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) இவ்விதமான நன்கொடை புகார்கள் குறித்து கரூர் மாவட்டக் கல்வி அலுவலர் சம்பந்தப்பட்ட பள்ளியினை 23—1—1980 அன்று பார்வையிட்டும், பள்ளியின் பெற்றோர்களை விசாரித்தும், கணக்குகளைப் பரிசீலித்தும் திருச்சி முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிக்கை அனுப்பி வைத்தார். இதன் மீது திருச்சி முதன்மைக் கல்வி அலுவலர், சிறப்புக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேலாக வசூலிக்கப்படக்கூடாது என்றும், எதிர்காலத்தில் இது போன்ற குறை நிகழாவண்ணம் நடந்துகொள்ள வேண்டுமென்றும் தலைமை ஆசிரியருக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பெற்றோர்—ஆசிரியர் கழகத்தின் பேரால் வசூல் செய்யப்பட்டது என்கிற புகார் சொல்லப்பட்டிருக்கிறது. தலைமை ஆசிரியருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தலைமையாசிரியர் என்பதல்ல. மற்றவர்கள் பள்ளியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கும்போது, அவர்களிடமிருந்து வசூலிக்கின்ற முயற்சி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இது எந்த வகையில் தடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பள்ளிகளை நடத்துகின்ற நிர்வாகம் பள்ளியில் சேர வருகின்ற மாணவர்களிடத்திலிருந்து நன்கொடை வசூலிக்கக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறோம். பெற்றோர்—ஆசிரியர் கழகம் என்பது ஜனநாயக முறைப்படி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று. கூடுமானவரை அவர்களேதான் பள்ளியின் நிர்வாகத்தையே ஏற்று நடத்த வேண்டுமென்று நாம் விரும்பி அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். பெற்றோர்—ஆசிரியர் கழகம் முன்பெல்லாம் எப்படியோ இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அதற்கு என்று தனி விதிகள்

தனியாகத் தேர்தல் நடத்தப்படும் முறை எல்லாம் இருக்கிறது. அது ஒரு ஜனநாயக அமைப்புபோல் இருந்துகொண்டிருக்கிறது. அதில் ஏதாவது குறைபாடு இருந்தால், சுட்டிக்காட்டினால், அதைத் திருத்தி சிறந்த முறையில் நடைமுறைக்குக் கொண்டு வரலாம். அவர்கள் மாணவர்களிடத்தில் மிகுந்த அக்கறை கொண்டு இருக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்த முறையில் அவர்கள் சில காரியங்களைச் செய்வது நல்லதுதான். அந்த அடிப்படையில்தான் 2—7—1978 அன்று பெற்றோர்—ஆசிரியர் கழகம் யாரையும் கட்டாயப்படுத்தி நன்கொடை வசூல் செய்யக் கூடாது என்ற முடிவுக்கு வந்தது. ரூபாய் 2,764 நன்கொடை வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் 148.65 ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள். அதற்கான கணக்கை வைத்திருக்கிறார்கள். மீதமுள்ள பணத்தையும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கட்டாயப்படுத்தி வசூல் செய்தால், அதுபற்றித் தெரிவித்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பெற்றோர்—ஆசிரியர் கழகமானாலும்கூட, அவர்கள் பள்ளிக்கு வருகிற மாணவர்களுடைய பெற்றோர்களிடத்திலிருந்து மறைமுகமாக வசூல் செய்கிறார்கள். இப்படிச் செய்வது அவர்களை வற்புறுத்துவதாக ஆகிறது. பள்ளிக்குத் தொடர்பு இல்லாதவர்களிடத்திலிருந்து, பெருந்தனக்காரர்களிடத்திலிருந்து, சம்பந்தப்படாதவர்களிடத்திலிருந்து வசூலிக்கலாம். ஆனால் பள்ளிக்கு வருகிற மாணவர்களுடைய பெற்றோர்களிடத்திலிருந்து அவர்கள் வசூலிப்பதாகக் கூறப்படுகிறது. அதுபற்றி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களைச் சேர்க்கிறபோது அவர்களிடத்திலிருந்து கட்டாயப்படுத்தி நன்கொடை வசூலிக்கக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறோம். நல்ல காரியங்களுக்காக, கட்டாயப்படுத்தாமல் இரண்டு நிபந்தனைகட்கு உட்பட்டு ஆசிரியர்—பெற்றோர் கழகம் வசூல் செய்வதை நாம் வரவேற்க வேண்டும். அதற்கு நாம் தடையாக இருக்கக்கூடாது.

### மேல் நிலைப் பள்ளிகளில் தேர்வு நிலை எழுத்தர் பதவி.

* 149. **வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல் நிலைப் பள்ளிகளில், ஒரு தேர்வு நிலை எழுத்தர் பதவியை, தனியாக உருவாக்க வேண்டுமென்று, அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.



(முற்பகல் 9-50)

**திரு. ம. சங்கரலிங்கம் :** தற்போது புகுமுக வகுப்பு மேல் நிலைப் பள்ளிகளிலே சேர்க்கப்பட்ட பிறகு கல்லூரிக் கல்வியின் ஒரு பகுதியை மேல் நிலைப் பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கும்போது, மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் படிப்பின் தர உயர்வு இவைகளையொட்டி வேலைப் பளு அதிகமாகிறது. ஒரு செலக்ஷன் கிரேடு எழுத்தரால்தான் அந்த வேலைகளைச் செய்ய முடியும் என்ற நிலைமை இருப்பதால் அரசு மீண்டும் இதனைப் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேல் நிலைப் பள்ளி இருக்கும் இடங்களில் கூடுதலாக ஒரு உதவியாளர் பணியிடம் ஏற்படுத்தலாம் என்ற செயற்குறிப்பு இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அப்படி நியமிக்கும்போது, 10 வருட அனுபவம் உள்ளவர்கள், சர்வீஸ் உள்ளவர்கள் தலைமை எழுத்தர்களாக வருவதற்கு ஏற்றவாறு அந்தப் பதவிகளை செலக்ஷன் கிரேட் நிலைக்கு உயர்த்தி வழங்க பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது இருக்கும் நிலைமையில் அப்படிப்பட்ட அவசியம் இல்லை என்று துறை கருதுகிறது.

### மேலவை உறுப்பினர்களின் முறையீடுகள்.

* 150. **வினா—செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கல்வி அதிகாரிகளுக்கு மேலவை உறுப்பினரே முறையீடு செய்தால்கூட, அதன்மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதோடு மட்டுமல்லாமல் பதில் கூட அனுப்பாமல் இருக்கும் நிலையை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பொது (பணியாளர்கள் ஏ) துறையின் 24—5—1969 ஆம் நாளிட்ட அரசாணை, நிலை எண். 976-ன் பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆசிரியர்களின் பிரச்சினைகள் பற்றி மேலவை உறுப்பினர்கள் முறையீடு செய்யும் போதெல்லாம் உடனுக்குடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களது முறையீடுகள் வரப் பெற்றதும் அதற்கான ஒப்புதல் அனுப்பப்பட்டு வருகிறது.

(இ) ஆணைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**செல்வி ஆ. லீலாவதி :** ஓராண்டு காலமாகவே பல பிரச்சினைகள் இயக்குநர் அலுவலகத்தில் அப்படியே இருக்கின்றன. நாளைக்கு தனியார் பள்ளி ஆசிரியர்கள் சங்கம் ஓராண்டு நினைவூட்டு தர்ணா என்ற அளவிலே ஒரு போராட்டம் நடத்த இருக்கிறார்கள். ஓராண்டு காலத்திற்கு மேற்பட்ட பிரச்சினைகளும் பல இருக்கின்றன. ஆகவே, இவைகளையெல்லாம் உடனடியாகத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கேள்வி கேட்கப்பட்டிருக்கின்ற அடிப்படையைப் பார்க்கும்போது—மற்றவர்கள் கோரிக்கைகளை வைக்கும் போது அரசு எந்த முறையிலே அதை அணுகுகிறதோ இல்லையோ—மேல் சபை உறுப்பினர்கள் என்ற வகையிலே கோரிக்கைகளைத் தரும்போது அவைகளை உடனடியாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நிலைதான் இருக்கிறது. மற்றபடி சங்கங்கள் என்று வரும்போது எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அப்படி அரசு எடுக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மூலமாக வரும்போது 'தாங்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கிறோம்' என்று பதில் அனுப்புகிறோம். மற்றபடி வரும் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், சாதாரணமாக ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுத்துக்கொள்ளும் கால அவகாசத்தை அரசு எடுத்துக்கொள்ளத்தான் செய்யும்.

**செல்வி ஆ. லீலாவதி :** ஒவ்வொரு தொகுதியிலிருந்து ஆசிரியர்களின் பிரதிநிதிகள் வெற்றி பெற்று வந்திருக்கிறோம். ஒவ்வொரு தொகுதியிலும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு தொகுதிக்கும் தனியாக, பிரதிநிதிகளையும் இயக்குநரையும் அழைத்து வைத்து 'பிரச்சினைகள் தீர்க்கும் நாள்' என்ற வகையிலே நடவடிக்கைகள் எடுத்து பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் சில பொதுவான பிரச்சினைகளும் இருக்கின்றன. தனியாக அவர்களுக்கென்றே இருக்கும் பிரச்சினைகளும் இருக்கின்றன. தனிப்பட்ட பிரச்சினைகள் நிமித்தம் அவர்கள் சென்னைக்கு வந்து இயக்குநரையோ, அல்லது அமைச்சரையோ சந்திக்கும் வழக்கம் தேவையில்லை, அவைகளை மாவட்ட அளவிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று கருதி, அதற்கென்று குழுக்கள் போட வேண்டும் என்று நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அப்படி வருகின்றபோது தனிப்பட்டவர்களின் பிரச்சினைகளை அங்கேயே தீர்த்துக் கொள்ளலாம். பொதுவான பிரச்சினைகள் என்று வரும்போது அவைகளை மாநில அளவிலே பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

**திரு. செ. முத்துசாமி :** பொதுவாகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, எனக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறிப்பிட்ட சில பிரச்சினைகளைப் பற்றிய கடிதங்கள் கொடுத்தால், அவைகளைப் பெற்றுக் கொண்டதற்கான இடைக்கால பதில் கூட கடந்த ஓராண்டு காலமாக வருவதில்லை. இங்கிருந்து எவ்வளவுதான் உத்திரவு போட்டாலும், எக்சிக்யூட்டிவ் அத்தாரிட்டியில் அந்த உத்தரவுகளைச் செயல்படுத்தாமல் இருக்கிறார்கள். இந்த அரசின் மேலாண்மையில் இருக்கும் அந்த அதிகாரிகளுக்கு, குறிப்பிட்ட பிரச்சினைகளைப் பற்றி நாங்கள் கடிதங்கள் கொடுக்கும்போது, அது சம்பந்தமான பதில் எங்களுக்கு அவ்வப்போது கொடுக்க வேண்டும் என்ற அளவிலே அவர்களுக்குக் குறிப்புரை வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எனக்குக் கொடுத்திருக்கிற விவரத்திலே, பதில் அனுப்பப்படுகிறது என்றுதான் இருக்கிறது. மேலும் ஏதாவது குறைபாடு இருந்தால், அவற்றை நிவர்த்திக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். அல்லது குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் பதில் வரவில்லையென்று சொன்னால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது குறித்து விசாரிக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்பது குறித்து நாங்கள் அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பும் போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் காட்டும் இந்த அக்கறையை அவர்கள் காட்டுவதில்லை. மாவட்டக் கல்வி அதிகாரிகள் கூட, எம்.எல்.சி.க்களின் கடிதங்களுக்கு பதில் எழுதுவதில்லை, உயர் மட்ட அதிகாரிகள் சிலர் எழுதுகிறார்கள். 26—9—1978 ஆம் நாளன்று நம்முடைய கல்வித் துறை ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 6 பிரதிநிதிகளுக்கும், கல்வித் துறை சம்பந்தமான மற்றும் ஆசிரியர்கள்

சம்பந்தமான ஆணைகள் வெளியிடப்படும்போது, அவைகளை அவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் என்று உத்திரவிட்டது. அந்த உத்திரவு இன்று வரை அமுல்படுத்தப்படவில்லை. இதையே சற்று மாற்றி, 1981-லே இதை ஒரு நிலை ஆணையாக மாற்றி, கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கும் 6 எம். எல். சிக்களுக்கும் கல்வித் துறை வெளியிடும் அந்த ஆணைகளை அனுப்பிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, முகவரிகளையும் கூட குறிப்பிட்டு தெரிவித்திருக்கிறதால். ஆனால் எங்களை மதித்து இன்றுவரை கல்வித் துறையிலிருந்து பிறப்பிக்கப்படும் அந்த ஆணைகள் அனுப்பப்படவில்லை. இதைத்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து அரசு விசாரிக்கும்.

### *Incentive Increments to Specialist Teachers.*

* 151 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Junior Assistants employed in Government Departments, when they acquire a degree, are eligible for an incentive increment of Rs. 15 ;

(b) if so, whether there is any proposal with the Government to extend this concession to Specialist Teachers also ; and

(c) if so, the stage at which the matter now stands ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) அரசுத் துறைகளில் இள நிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் ஆகிய பணிகளில் நியமனம் செய்யும்பொழுது அந்த நிலையில் பட்டப் படிப்பு தகுதியுடையவர்களுக்கு அடிப்படை ஊதியத்தைவிட மூன்று ஊதிய உயர்வுகள் கூடுதலாகக் கொடுத்து ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது. பதவியில் சேர்ந்த பிறகு பட்டப் படிப்பு தகுதி பெற்றால் மூன்று ஊதிய உயர்வுக்கு மிகாத அளவில் ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.





**திரு. பா. ரா. தாமஸ்** இவ்வாறு இளநிலை உதவியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகையை சிறப்புப் பாட ஆசிரியர்கள் பட்டப் படிப்பிலே தேறினால், அவர்களுக்கும் வழங்கலாம் அல்லவா, அது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 10—1—1969-ல் வெளியிட்ட அரசாணை எண் 42-ன்படி, 90—140 ரூபாய் என்ற அளவிலே ஊதிய விகிதம் பெற்று வந்த சிறப்பு ஆசிரியர்கள் பி.டி., பி'எட். அல்லது அதற்குச் சமமான பட்டம் பெற்றால், அவர்களுக்கும் 2 ஊக்க ஊதியம் வழங்கப்படும் நிலை இருக்கிறது. இள நிலை உதவியாளர்கள் தனிப் பணியைச் சேர்ந்தவர்களாகையால், ஆசிரியர்களுக்கு அளிக்கும் இந்த ஊதிய உயர்வை இவர்களுக்கு அளிக்கும் பிரச்சினை வராது. இருவரையும் ஒப்பிடும் நிலை இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** அரசாணை எண் 42 வெளியிட்டதற்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டு, இப்போது இந்த ஊக்க ஊதியம் வழங்குவதிலே பல சிக்கல்கள், முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே அந்த ஆணையை மறு பரிசீலனை செய்து புதியதாக இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ற முறையிலே திருத்தியமைத்து ஒரு புதிய ஆணையை அரசு வழங்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** என்னிடத்திலே இப்போது அது பற்றிய விவரம் இல்லை என்றாலும், என்னுடைய ஞாபகத்திலிருந்து சொல்கிறேன். ஊக்க ஊதியத்திற்குப் பதிலாக வேறொரு திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்று வேறொரு சந்தர்ப்பத்திலே நான் சொல்லியிருக்கிறேன். அதைப் பரிசீலிக்கும்போது இதையும் பரிசீலிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடும்போது, 90 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தவர்களுக்கு, பி.ஏ., பி.டி. பட்டம் பெற்றவர்களுக்குத் தரும் உத்தரவு நடைமுறையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப்போலவே பி.இடி. என்ற நிலையிலே லோயர், ஹையர் என்று இருப்பவர்களில் பி.பி.எட். என்ற பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு அத்தகைய எந்தவிதமான இன்சென்டிவ் ஊதியம்

இல்லை. பி.பி.எட். பட்டம் பெற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலித்து அவர்களுக்கும் அரசு கொடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள், பி.டி. அல்லது பி.எட்., அல்லது பி.பி.எட். அல்லது உடற்பயிற்சியில் டிப்ளமோ தேறினால், இரு ஊக்க ஊதியம் பெறத் தகுதியுடையவர்களாவார்கள். அவர்கள் எம்.பி,எட், தேறினால், மேலும் இரு ஊக்க ஊதியம் அளிக்கப்படும்.

*Physical Education Teachers in Higher Secondary Schools.*

* 152 *Q.*—THIRU P. R. THOMAS and THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Post-Graduate Degree holder in Physical Education are given a basic pay of Rs. 600 only, whereas other categories of teachers with such qualification, are given a basic pay of Rs. 675 in Higher Secondary Schools ; and

(*b*) if so, the reason therefor ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : (அ) மற்றும் (இ) மேல் நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு கற்பிக்கும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 675 அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால் இந்த வகுப்புகளுக்கு உடற்கல்வி போதிப்பவர்களுக்கு முதுகலைப்பயிற்சி பட்டம் (M.P.Ed.) பெற்றிருந்தால் ரூ. 600 அடிப்படைச் சம்பளம் வழங்கப் படுகிறது. மேலே குறிப்பிட்ட ஊதியங்கள், மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி அளிக்கப்பட்டு வருகின்றன.





(முற்பகல் 10.00)

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேல் நிலைக் கல்வி நிலையங்களில் முதுகலைப் பட்டம் பெற்ற இவ்விரு சாரார்களையும் ஒப்பிடும்போது, பாட போதனை செய்யும் ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 675 என்றும், உடற்கல்வி இயக்குநர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூபாய் 600 என்றும் அளிப்பது நியாயமற்றதாகவும், அநியாயமாகவும் இருக்கிறது. 1978 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் உடற்பயிற்சி இயக்குநர்கள் எம்.ஏ., எம்.பி எட் படித்திருந்தால், அவர்களுக்கும் அடிப்படை ஊதியமாக ரூ. 675 வழங்கலாம் என்றுதான் இருந்தது என்று நினைக்கிறேன். எனவே எம்.ஏ. எம் பி எட் படித்திருந்தால், மற்ற ஆசிரியர்களுக்கு வழங்குவதைப் போலவே ரூ. 675 அடிப்படை ஊதியம் வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்,

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மேலவையில் மின்வாரிய நிதிநிலை அறிக்கையை அளித்து, மின்வாரிய ஊழியர்களுக்குச் சலுகைகள் வழங்குவது குறித்து அறிவித்ததற்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினரின் எதிர்ப்பு குறித்து.**

**டாக்டர் இரா, சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதி நிலை மீதான விவாதம் நடைபெற்றபோது மாண்புமிகு மின்வாரியத் துறை அமைச்சர் அவர்கள் சில சலுகைகளை அறிவித்தார்கள். இம்மாதிரி சலுகைகளை சட்டமன்ற மேலவையில் அறிவித்தது தவறு என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இது இந்த அவையின் உரிமை மீறிய செயல் என்பதோடு, அரசியல் சட்டத்தின்படி இந்த அவைக்கு அளிக்கப்பட்டிருக்கும் உரிமையைப் பாதிப்பதாகவும், அவையின் கண்ணியத்தைக் குறைப்பதாகவும் இருக்கிறதென்பதை மாண்புமிகு தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்தில் இரு அவைகளுக்கும் சம உரிமை உண்டு. ஒரு குறிப்பிட்ட அவையில்தான் முதலில் விவாதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வரைமுறை இல்லை. மாண்புமிகு அமைச்சர்கள் இந்த அவையில் அறிவிக்கும் விளக்கங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது மரபுகளுக்கு உகந்தது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை சட்டமன்றப் பேரவையில் நடந்தது குறித்து உள்ளபடியால், நாம் அதைப் பற்றி விவாதிப்பது மரபுக்கு உகந்தது அல்ல. அரசியல் சட்டத்தில் கண்டுள்ள ஷரத்துக்களுக்கு உட்பட்டு இந்த அவைக்கு சம உரிமைகள் உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

**(1) கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுக்காவில், நெல் உற்பத்தி யாளர்கள், வண்டிகளில் எடுத்துச் செல்லும் நெல்லை, உணவுக் குழு அதிகாரிகள் பறிமுதல் செய்வது குறித்து.**

**திரு. ம. சங்கரலிங்கம்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :—

" கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுக்காவில் பல இடங்களில் நெல் உற்பத்தியாளர்கள் வண்டிகளில் எடுத்துச் செல்லும் நெல்லை, உணவுக் குழு (Food Cell) அதிகாரிகள் பறிமுதல் செய்து, விவசாயிகளுக்கு அளித்து வரும் தொல்லையினால் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து. "

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

---

@ 548 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



* **திரு. ம. சங்கரலிங்கம்** : தலைவரவர்களே, இதைக் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கும் விவர அறிக்கையில் " அவ்வாறு பறிமுதல் செய்யப்படவில்லை என்றும், வியாபாரிகள் அரசுக்கு லெவி அளிக்காமல் கொண்டு செல்லுகிற நெல்லை மட்டும்தான் பறிமுதல் செய்வதாகவும் " அதற்காக இரண்டு சம்பவங்களையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இப்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் அறுவடை நடைபெறுகிற நேரம். அந்த மாவட்டத்தின் தலைநகர் நாகர்கோயில். நாகர்கோயிலுக்குள் வருகிற எல்லாப் பகுதிகளிலுமாக 3 செக் போஸ்ட்களை வைத்துக்கொண்டு, ஊருக்குள் வருகிற எல்லா நெல் வண்டிகளையும் தடுத்து நிறுத்தி, அன்று அவர்கள் பணம் கொடுத்துவிட்டு நெல்லை எடுத்துக்கொண்டு போக வேண்டும் அல்லது அவர்களின் நெல் பறிமுதல் செய்யப்படும் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் இதுமாதிரி நடைபெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்த வரையில், தங்கள் நெல்லைக் கொண்டு போக வேண்டுமென்றால், அதற்காக பெர்மிட் வாங்கிக் கொண்டுதான் போக வேண்டும். அதற்காக என்று மூவ்மெண்ட் ரிஜிஸ்ட்ரேஷன் (Movement Registration) என்று அதிகாரிகளாலேயே சீல் போடப்பட்ட உத்தரவுகள் தரப்படுகின்றன. இத்தனை மணியிலிருந்து இத்தனை மணிக்குள்ளாக அத்தகைய நெல் வண்டிகளில் விவசாயிகள் நெல்லைக் கொண்டு போக வேண்டும் என்று தாலுக்கா சப்ளை ஆபீசர் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அவ்வாறு தாலுக்கா சப்ளை அதிகாரி கையெழுத்துப் போட்டுக் கொடுத்துள்ள உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தருகிறேன். (உறுப்பினர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அத்தாளைக் கொடுத்தார்.)

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை தாலுக்கா சிவில் சப்ளைஸ் அதிகாரி அவர்கள் கையெழுத்திட்டு இன்ன இடத்திலிருந்து இன்ன இடத்திற்கு இத்தனை மணிக்குள்ளாக கொண்டு போக வேண்டும் என்று விவசாயிகளுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார். அதைக் கொண்டுபோய் செக் போஸ்ட்டில் பதிவு செய்தாக வேண்டும். அப்படி பதிவு செய்து கொண்ட பிறகுதான் நெல்லைக் கொண்டுபோக வேண்டும் என்று இருக்கிறது. அந்த ஒரிஜனல் உத்தரவைத்தான் கொடுத்திருக்கிறேன். எனவே இதுகுறித்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** மாண்புமிகு தலைவர் அவர்களே, இவருடைய நெல் பறிமுதல் செய்யப்பட்டதா என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிக்கலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்** அங்கே பறிமுதல் செய்யப்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 4—2—1982 அன்று தேரூர் பரமேஸ்வரன் பிள்ளை அவர்கள் தமது நெல்லை வண்டியில் கொண்டு போகிறபோது, அது பறிமுதல் செய்யப்பட்டது. அதன் காரணமாக அவர் மாவட்ட சப்ளை அதிகாரி மற்றும் உள்ள அதிகாரிகளையும் சேர்த்து அவர்கள் அனைவரும் தமது நெல்லைக் கொள்ளை அடித்துவிட்டதாக ஒரு கிரிமினல் கேஸ் போட்டுவிட்டார். அதையடுத்து அதே அதிகாரிகளிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதாவது "உங்களுடைய நெல் தாலுக்கா சப்ளை அதிகாரி அலுவலகத்தில் இருக்கிறது, போய் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று 13—2—1982 அன்று அவருக்குத் தரப்பட்ட உத்தரவின் போட்டோ ஸ்டேட் காப்பியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** மாண்புமிகு மேலவைத் தலைவர் மூலமாகத் தருகிறேன் என்று சொல்ல வேண்டும். (சிரிப்பு)

**திரு. ம. சங்கரலிங்கம்** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். (அமைச்சரிடம் கொடுத்தார்). அதோடு மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக இன்னொரு கருத்தையும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்களுக்குத் தரப்படுகிற தகவல் வேறு, அங்கே நடைபெறும் நடைமுறை வேறு. இதைப்பற்றி ஆளும் கட்சி எம்.எல்.ஏ. ஆன திரு. முத்துகிருஷ்ணன் அவர்களும், திரு வின்சென்ட் எம்.எல்.ஏ. அவர்களும் கமிஷனர் அவர்களிடம் போய் முறையிட்டிருக்கிறார்கள். ஆனால் அப்போது அவர் முன்னிலையில் "கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 22,000 டன் லெவி போட்டிருக்கிறீர்கள். நாங்கள் அதை எப்படி அளப்பது? தடுத்துப் பறிமுதல் செய்தால், அந்த அளவுக்கு நெல்லை அளக்க முடியும்" என்று அதிகாரிகள் பதில் தெரிவித்தார்கள் என்று பலரும்



என்னிடம் சொன்னார்கள். எனவே அரசுக்குச் சொல்லப்பட்டிருப்பதற்கு மாறாகத்தான் அங்கே காரியங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே விவசாயிகளிடம் கெடுபிடி செய்வதை அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க இங்கேயிருந்து ஒரு உயர் அதிகாரியை அனுப்பி இப்படிப் பட்ட பறிமுதல்களைத் தடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** மொத்த வியாபாரிகளிடமிருந்து மட்டும்தான் லெவி நெல் வாங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. விவசாயிகளிடம் லெவி வாங்குகிற முறையை நாம் கையாளவில்லை. விவசாயிகள் தங்களுடைய உற்பத்தியான நெல்லை எடுத்துக் கொண்டு போவதற்கு அதிகாரிகளிடம் அனுமதி பெற்று எடுத்துச் செல்லலாம் அல்லது இங்கிருந்து இந்த இடத்திற்கு எடுத்துச் செல்கிறோம் என்று அறிவித்துவிட்டு எடுத்துச் செல்லலாம். ஆனால் அதில்தான் பல தகராறுகள் வருகின்றன. வியாபாரிகள், விவசாயிகள் என்ற போர்வையில் ஏமாற்றுகிற நிலை பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. எனவே இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படுகிறது. விவசாயிகளுடைய நெல் பறிமுதல் செய்யப்பட்டிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் நடைபெற்றிருந்தால் அதைப்பற்றி விசாரிக்கலாம்.

உள்ளபடியே தமிழகத்தில் 55 லட்சம் டன் நெல் உற்பத்தியானாலும்கூட, 2½ லட்சம் டன்தான் இதுவரை நமக்குக் கிடைத்திருக்கிறது. கிடைக்க வேண்டிய அளவுக்கு நெல் கிடைக்காமல் போகிறது என்பதை நாம் உணர வேண்டும். எப்படியும் லெவி மூலம் 6 லட்சம் டன் நெல்லைப் பெற்றாக வேண்டிய நிலை இருக்கிறது. எனவே சில இடங்களில் அத்துமீறி இருந்தால், அல்லது கெடுபிடி இருந்தால், அதுபற்றி விசாரிக்கப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புக்கான அட்மிஷன் குறித்து மாற்று ஏற்பாடு ஏதும் செய்யப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள் பட்டப் படிப்பு வகுப்புகளில் சேரமுடியாமல் அல்லல்படுவது குறித்து.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :—

" அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., பி.எஸ்ஸி. பி;காம்;, பி.எல். போன்ற பட்டப் படிப்புக்கான அட்மிஷன் எந்த மாற்று ஏற்பாடும் செய்யப்படாமல் நிறுத்தப்பட்டிருப்பதால் சிதம்பரத்திலும் அதன் சுற்றுப் புறத்திலும் சுமார் 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டப்படிப்பு வகுப்புகளில் சேரமுடியாமல் நடப்பாண்டில் அவர்களுடைய கல்வி பாதிக்கப் பட்டிருப்பது குறித்து. "

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் இது குறித்து அவையின் முன் ஓர் விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் " அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 20-க்கும் மேற்பட்ட துறைகளில் மேற்பட்டப் படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பட்டங்கள் வழங்கும். ஆராய்ச்சிக்கூடமாக விளங்குகிறது. ஆயின் மேற் பட்டப் படிப்பு மற்றும் ஆராய்ச்சியோடு முதற்பட்டப் படிப்பு வகுப்புகளையும் நடத்த வேண்டியிருப்பது பல்கலைக் க—கத்திற்கு ஒரு பெருஞ்சுமையாக உள்ளது " என்ற கருத்து விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஸ்டாச்சூட்ஸ் என்று சொல்லப் படுகிற சட்டத்தையொட்டி அங்குள்ள நிலையான விதிமுறைகளில் It is mainly a teaching institution. என்று சொல்லப் பட்டிருக்கிறது; ஆகவே, அப்படியே இதை ஒரு ஆராய்ச்சிக்கூடமாக மாற்ற வேண்டும் என்று துணை வேந்தர் முடிவு செய்திருந்தாலும், அதை முன் கூட்டியே மாணவர்களுக்கு அறிவித்துவிட்டு, அதற்குப் பிறகு மாற்று ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, பட்டப் படிப்புக்கான வகுப்புகளை மூடியிருந்தால், ஓரளவுக்கு இதை நியாயப்படுத்த முடியும். செப்டம்பர் 5 ஆம் தேதி இந்த அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது. ஆனால் செப்டம்பர் 5 ஆம் தேதிக்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கவில்லை என்று துணை

@ 549–550 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



வேந்தர் அவர்களே ஒரு அறிக்கையில் தெரிவித்தார் என்று செய்தித் தாள்களில் வந்தது. இதை நம்பி அங்கே 427 மாணவர்களும், 72 மாணவிகளும் வேறு கல்லூரிகளில் சேர இயலாமல் அல்லற்படுகிறார்கள். காரணம் வேறு கல்லூரி களில் சேருவதற்கான காலமும் முடிவடைந்துவிட்டது. எனவே இதைக் குறித்து விவர அறிக்கையில் ஏதும் சொல்லப்படவில்லை என்பதால், இதில் அரசின் கருத்தை நான் அறியலாமா ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பல்வேறு வகையான போராட்டங்கள் காரணமாகவும் அங்கே ஏற்பட்ட அமைதியின்மை காரணமாகவும் அந்தப் பல்கலைக் கழகம் சரியானபடி செயல்பட முடியவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒன்றாகும். அதே நேரத்தில் ஒரு பல்கலைக் கழகம் என்பது கற்பிக்கின்ற மையமாக இருக்காமல், ஆராய்ச்சி மையமாக இருக்க வேண்டும், அப்போதுதான் பல்கலைக் கழகமாக இருக்க முடியும் என்ற கருத்து வலுப் பெற்றுக் கொண்டிருக்கிற காலம் இது. இந்த இரண்டின் அடிப்படையிலும்தான் பட்ட முற்படிப்பு, முதற்கட்ட பட்டப் படிப்பு படிக்கின்ற வகுப்புகளை எடுத்துவிட வேண்டும் என்று பல்கலைக் கழக நிர்வாகம் தீர்மானித்து அவர்கள் அதை இந்த ஆண்டு நிறுத்தியிருக்கிறார்கள். அதனாலே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்பதற்காக அதன் பக்கத்திலே உள்ள கல்லூரிகளில் இடங்களை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதேபோல புதிய கல்லூரிகள் இரண்டை, ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று என்று இரண்டு கல்லூரிகளைத் துவங்க வேண்டும் என்ற முயற்சியை அங்கே இருக்கின்றவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும், அதற்கு அரசு நல்ல ஆதரவைத் தர வேண்டும் என்று சொல்லி, இப்போது தென்னாற்காடு மாவட்ட ஆட்சியாளர் மூலமாக அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஐந்து இலட்சம் ரூபாயை அரசுக்கு நன்கொடைக் கட்டணமாக (எண்டோமென்டாக) கொடுக்க வேண்டும்; புதிய கட்டிடம் கட்டும் வரையில் கல்லூரியை நடத்த இலவசமாக வாடகையின்றி கட்டிடம் தர வேண்டும் ; நாற்பது ஏக்கர்

நிலம் கொடுக்க வேண்டும் என்ற இந்த மூன்று நிபந்தனைகளையும் நிறைவேற்றித் தருவார்களேயானால், கல்லூரியைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்கும். அரசு நிலமாக இருந்தால், நாமே முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

அரசு புதிய கல்லூரிகளைத் திறப்பதற்குத் தடை வாங்க கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற வரைக்கும், என்னதான் முயற்சி செய்தாலும், உடனடியாக இந்தக் காரியங்களைச் செய்ய முடியாது. நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிலை ஒரு புறம், ரிட் மனுக்கள் ஒரு புறம்—இந்த இரண்டுக்கும் இடையிலேதான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

*** திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, பட்டப் படிப்பு வகுப்புகள் மூடப்பட்டதைக் குறித்து நான்கு ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. பல்கலைக் கழகம் கல்விக் குழுவைக் கலக்காமல் முடிவு எடுத்திருப்பதை மிக முக்கியமாக ஆட்சேபித்துத்தான் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் புதிய வசதிகளைச் செய்வதைப் பொறுத்து யாரும் ஆட்சேபனை செய்யவில்லை. தமிழக அரசு இந்த மாணவர்களுக்கு ஏற்படுத்தக்கூடிய எந்த வசதியையும் நாங்கள் எதிர்க்கவில்லை. அது குறித்து எந்தத் தடையும் இல்லை. எந்த விதமான நீதிமன்றத்தின் ஸ்டே ஆர்டரும் இல்லை. ஆகவே அரசு தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, சிதம்பரம் நகர எல்லையை யொட்டி திருப்புனந்தாள் மடத்திற்குச் சொந்தமான 40 ஏக்கருக்கு பேற்பட்ட இடம் இருக்கிறது. அங்கே அரசு கல்லூரியை ஏற்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஒரு குழுவை ஏற்படுத்தி, சொல்லப்பட்ட நிபந்தனைகளையும், இப்போது கூறப்பட்ட யோசனையையும் சேர்த்து கவனித்து ஒரு முழு யோசனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் கல்லூரியை ஆரம்பிப்பதிலே எந்தவிதமான சிரமமும் இல்லை.





4. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*** திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நீல நாராயணன் அவர்கள், "ஏட்டுச் சுரைக்காய் சுவைக்கு உதவாது" என்று சொன்னதைப் போலதான், இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறதே தவிர, நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறுவதற்கான, நல்ல முன்னேற்றத்தை அடைவதற்கான திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். சட்டமன்றப் பேரவையிலே மூன்று முறையும், இந்த மேலவையிலே ஒரு முறையும் பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றவன் நான், அப்போதெல்லாம் நிதிநிலை அறிக்கை மன்றத்தின் முன் வைக்கப்படும்போதெல்லாம், தமிழ் நாட்டிலே திட்டங்கள் உருவாக்கப்படுவதற்கான உறுதியான அறிவிப்புகளும், அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் அதிலே அமைந்திருக்கும். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற கருத்துக்களை கவனத்திலே கொண்டு, அதிலே இருக்கின்ற குறைபாடுகளைக் களைந்து திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு ஆட்சியிலே அமர்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்ட வரலாறுகளை நிரம்ப என் அனுபவத்தின் மூலமாக நான் அறிந்திருக்கிறேன். ஆனால் ஆட்சிப் பீடத்திலே இன்றைக்கு இருப்பவர்கள், எதிர் வரிசையிலே இருப்பவர்கள் என்ன குறைகளைச் சொன்னாலும், "செவிடன் காதிலே ஊதிய சங்கு போல" பேசாமல் இருந்து கொண்டு, நிர்வாகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நீதியை தவறாகப் பயன்படுத்தி விட்டதால் வெட்கி, வேதனைப்பட்டு மாண்டு போனான் நெடுஞ்செழியன். நம்முடைய நாவலர் டாக்டர் நெடுஞ்செழியன் அல்ல. மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன்தான் அப்படி மாண்டு போனான். இன்று நாட்டிலே நீதி இல்லை, நேர்மை இல்லை, மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. ஆகவே இந்த நாட்டு மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும் என்பதற்காக அந்த மதுரை மாநகரிலிருந்து திருச்செந்தூர் வரை கிட்டத்தட்ட 120 மைல்கள், கடந்த 15—2—1982 ஆம் நாளிலிருந்து 22 ஆம் நாள் வரை நீதி கேட்டு நெடிய பயணத்தை எங்களுடைய கழகத் தலைவர், பெரியாரின் வாரிசு, அண்ணாவின் அருமைத் தம்பி, கழகத்தின் விடி

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 மார்ச் 4

வெள்ளி, பகுத்தறிவு பகலவன், சுயமரியாதைச் சுடர், டாக்டர் கலைஞர் அவர்கள் மேற்கொண்டார்கள். இதைக்கூட கேலியும் கிண்டலுமாக, இன்றையதினம் நீதியைக் கொன்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருப்பவர்கள், சில கருத்துக்களைச் சொல்லுவதைப் பார்க்கிறபோது, இவர்கள் அண்ணாவின் கொள்கையில் அல்லது தந்தை பெரியாரின் கொள்கையில் எந்த அளவுக்கு நம்பிக்கை உடையவர்கள் என்பதும், தமிழ் மக்களுக்கு எந்த அளவிற்கு நல்வாழ்வைத் தேடித் தருவதில் நம்பிக்கையுடையவர்கள் என்பதும் தெரிகிறது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது வெட்கி, வேதனைப்படக் கூடிய நிலையிலேதான் இன்றைய தினம் நாம் இருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் சொன்னதைப்போல, "ஏட்டுச் சுரைக்காய் சுவைக்கு உதவாது" என்பதைப் போல இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. இன்றைக்கு இந்த ஆட்சியாளர்கள் நிதிநிலை அறிக்கை என்ற பெயரால் ஒரு நாடக அரங்கேற்றத்தை இங்கே செய்திருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த நிதிநிலை அறிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இதிலே எந்த அளவிற்குக் குளறுபடி இருக்கிறது என்பதும், முன்பு அறிவித்தவைகளை இப்போது மாற்றிக் கொண்டு எப்படி மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த நிதிநிலை அறிக்கையில், பெரிய, சிறிய தொழில்களுக்கான திட்டங்கள் உருவாக்கப்படும் என்றும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கான திட்டங்கள், மக்கள் பாதுகாப்புக்கான நல்வாழ்வை அமைத்துக்கொள்வதற்கான திட்டங்கள், காரியங்கள் இடம் பெறும் என்றும் எதிர்பார்த்து பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறோம். இன்னும் சுருக்கமாகச் சொல்லப் போனால், "காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா" என்று சொல்லும் அளவிற்கு 76 பக்கங்களைக் கொண்ட நிதிநிலை அறிக்கையாக இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வரி விதிப்பின் மூலம் 38 கோடி ரூபாயைப் பெற்றும் ரூ. 204.44 கோடி அளவிற்கு துண்டு விழக்கூடிய, பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக இந்த மன்றத்திலே இதை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட அறிவிப்புகளின் மூலமாக நாட்டிலே எதிர்காலத்திலே, வரும் நிதியாண்டிலே என்ன ஏற்படும் என்று பார்த்தால், விலைவாசிகள் உயரும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் என்ற சூழ்நிலைதான் ஏற்படுமே தவிர, இந்த நாட்டு மக்கள் எந்தவிதமான பயனையும் பெற முடியாது என்பதை இங்கே



1982 மார்ச் 4] [திரு சோ. ஆறுமுகம்]

சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாட்டை ஆள்வதற்கு இந்த அரசுக்குத் திறமையில்லை, நிர்வாகம் சீராகச் செயல்படவில்லை என்பதை சமீப காலத்திலே சென்னை உயர்நீதி மன்றமும், உச்சநீதி மன்றமும் தங்களின் தீர்ப்புகள் வாயிலாக கூறியிருக்கின்றன. இன்றைக்கு கனிப்பொருள்,

(முற்பகல் 10-20)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

தொழில் திட்டங்கள் உருவாக்கப்படுவதிலே இந்த அரசு கையாளுகின்ற முறையிலும், அதே நேரத்தில் சாராயம், உயர்தர மதுவகை பெர்மிட்டுகள் வழங்குவதிலும், உரிமங்கள் வழங்குவதிலும் ஊழல்கள், தவறுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இப்படியெல்லாம் ஒரு முறைகேடான நிர்வாகத்தை தமிழகத்திலே ஆட்சிப் பீடத்திலே இருப்பவர்கள் நடத்துகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இவர்கள் திருந்துவார்கள் என்ற நல்ல எண்ணத்துடன் நீதிமன்றம் அப்படிப்பட்ட தீர்ப்புகள் வழங்குகிறதோ என்ற ஐயப்பாடு இன்றைய தினம் எழும்புகிறது. "நீதிமன்றம், மக்கள் மன்றம் சொன்னாலும், எங்களுக்குப் பதவிதான் முக்கியம்" என்று இன்றைக்கு ஆட்சிப் பீடத்திலே இருப்பவர்கள் கருதுகிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சமீபத்திலேகூட உயர்நீதி மன்றம் கனிப்பொருள்களுக்கு மட்டுமல்லாமல், சாராய பெர்மிட், மது பெர்மிட், உரிமங்கள் வழங்குவதிலே தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டியது. அது மட்டுமல்ல, குற்றப்புலன் ஆய்வு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் ஒரு வழக்கிலே எப்.ஐ.ஆர். போட்டு, ஒரு அதிகாரியைத் தற்காலிகமாக நீக்கி வைத்து பல ஆண்டுகள் அது புலனாய்விலேயே இருக்கிறது. அது விசாரணையிலேயே இருக்கிறது. அதுபற்றி முடிவு செய்யாமல் 4, 5 ஆண்டு காலமாக இருக்கிறது. அந்த அதிகாரி தற்காலிக வேலை நீக்கத்திலேயே இருக்கவேண்டியதாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரேகூட இப்போது புலனாய்வுத் துறையைப் பார்த்துக் கேட்டாலும்கூட, இது புலன் ஆய்விலே இருக்கிறது என்று மட்டும் சொல்லிவிட்டு, மேற்கொண்டு அந்தக் கோப்புகள் முடிவுபடுத்தப்படாமல் இருப்பதெல்லாம் கூட சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி புலனாய்வுத் துறையிலே, லஞ்ச ஊழல் துறையிலே தவறுகள் நடக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ஆக இன்றைக்கு நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டுக்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. சோ. ஆறுமுகம்] [1982 மார்ச் 4

எங்கள் தலைவர் அவர்கள் மக்கள் மன்றத்திற்கு நீதி கேட்டுச் சென்றால், அதைக் குறை சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஆட்சிப் பீடத்திலே இருப்பவர்கள் அன்றைக்கு வாக்காளர்கள் பேரணி நடத்தியதை மறந்து விட்டார்களா? எதற்காக நடத்தினார்கள்? "ஊழல் இல்லாத ஆட்சி நடைபெற வேண்டும், சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும், இந்த நாட்டிலே எல்லோருக்கும் சம உரிமை, சம அந்தஸ்து வழங்க வேண்டும்" என்று பேரணி நடத்தினார்கள். அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்கள் அவைகளை நிறைவேற்றவில்லை என்பதற்காக வாக்காளர் பேரணியை அரசியல் நோக்கத்தோடு அன்றைக்கு நடத்தினார்கள். ஆனால் இன்றைக்கு லஞ்ச ஊழல் இல்லாத ஆட்சியா நடைபெறுகிறது? ஊழல் நடைபெறலாம். அது தவிர்க்க முடியாததுகூட. ஆனால் இன்றைக்கு ஊழலே ஆட்சியாக நடைபெறுகிறது. தமிழ் நாட்டிலே இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்பதற்காகத்தான் நீதி கேட்டு நெடிய பயணம் நடத்தினார்கள். இன்றைக்கு தமிழகத்தினுடைய தலைவராக, உலகெங்கும் பரவிக் கிடக்கின்ற தமிழரின் தலைவராக இருக்கின்றவர் நெடிய பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியாரின் கொள்கையை நிறைவேற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை உச்சரிக்கத் தகுதியில்லாதவர்கள் ஆட்சியில் இருப்பவர்கள், இந்த ஆட்சியாளர்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட சொல்லியிருக்கிறார்கள். சர்க்கரை ஆலைகளை தனியாருக்கு வழங்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். அதுபோலவேதான், மின்சாரத்தையும் உற்பத்தி செய்வதையும் தனியார் துறைக்கு வழங்கலாம் என்ற முடிவிலே இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அரசுக்கு சமதர்மக் கொள்கையிலே எந்த அளவுக்கு நாட்டம் இருக்கிறது என்பதை எங்களாலே புரிந்து கொள்ள முடிகிறது. தனியார் துறையிலே பெருந்தொழில்கள் ஆரம்பிக்க அனுமதித்து படிப்படியாக அறிவிப்பு கொண்டு வருவதைப் பார்த்தால், பெரும் முதலாளிகளிடத்திலே நீங்கள் அடிமை ஆகிவிட்டீர்கள் என்பதைத் தான் இது சுட்டிக்காட்டுகிறது. இதை இங்கே நான் சுட்டிக்காட்டவேண்டியவனாக இருக்கிறேன். இன்றைக்கு மின்சாரத்தினுடைய நிலைமை என்ன? மின் வெட்டு என்று அறிவிக்காமலேயே தமிழ்நாடு எங்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு ஊரிலும், நகரத்திலும் பகுதி பகுதியாக ஒரு மணி நேரம், 2 மணி நேரம் என்று மின்சாரத்தைத் தடை செய்கிறார்கள். இதனாலேயே விவசாயிகள் பெருமளவிலே பாதிக்கப்படுகிறார்கள். தொழில்



1982 மார்ச் 4] [திரு. சோ. ஆறுமுகம்]

செய்யக்கூடியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நேற்றைய தினம் சட்டப் பேரவையிலே மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் 3, 4 நாட்களாக மின்சாரம் வழங்கப்படவில்லையாதலால், விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். அங்கே பேரவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து, விவாதிக்க வேண்டிய சூழ்நிலை தான் இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. ஆகவே மின்சாரத் துறையிலே உற்பத்தியை அதிகரிப்பதற்கு நீங்கள் நாட்டம் காட்டவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்குபற்றி இந்த நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு நிலைமை சரியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு சரியாக இல்லை, இன்றைக்கு சீரழிந்து வருகிறது, சீரழிந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாவட்டந்தோறும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க லா அண்ட் ஆர்டரிலே எஸ்.பி. ஒருவரும், அது போல அடிஷனல் எஸ்.பி. என்றும் போட்டிருக்கிறார்கள். இப்போது ஒரு எஸ்.பி. மது விலக்குத் துறைக்கு போட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், எங்கு பார்த்தாலும் இன்றைக்கு வழிப்பறி, கொள்ளை, கொலை இதுபோன்ற சம்பவங்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. அது ஒரு தொடர் கதையாகப் போய்க் கொண்டிருக்கிறது. அவைகளைத் தடுக்க வேண்டும் என்றால், இரண்டு உயர்தர காவல் துறை அதிகாரிகளை நியமிக்கலாம். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்களைத் தடுக்க வேண்டும். அதை ஒழுங்குபடுத்தவேண்டியதாக இருக்கிறது.

காவல் துறையிலே 2,500 பேர்களுக்குப் புதிய வேலை வாய்ப்பு என்று அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே 12 ஆயிரம் பேர்களை நாங்கள் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்று சொன்னார்களே, தேர்வு நடத்தினார்களே, இந்த 12 ஆயிரம் காவலாளர்கள் நியமனம் என்ன ஆயிற்று? ஏன் செய்யவில்லை? அதற்குப் பதிலாக ஒரு 4, 5 மாதங்களுக்கு முன்பு மீண்டும் காவல் துறையில் உதவி ஆய்வாளர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொல்லி மாவட்டம்தோறும் ஆய்வு நடத்தி, அதற்கான போட்டிகளை

வைத்து தேர்வு நடத்தி, இறுதிப் பட்டியல் வந்த பிறகு, அவர்கள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாமல், இந்த ஆட்சியினர் நினைத்தவர்கள் தேர்வு பெறவில்லை என்பதற்காக இன்றையதினம் உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்படாமல் இருக்கிறார்கள். இன்றைய தினம் அதை கிடப்பிலே போட்டுவிட்டிருக்கிறார்கள். மீண்டும் இன்றைக்கு காவல் துறையிலே புதிதாகச் சேர்க்கப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள்.

காடு வளர்ப்பு செய்வதற்கு நிதி உதவி நிறுவனத்துடன் சேர்ந்து 10 ஆண்டுகளில் 108 கோடி ரூபாய்க்கு நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், 1982-83-ல் 8 கோடி ரூபாய் செலவு செய்யப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டிலே இருக்கின்ற காடுகளை யெல்லாம் சென்று பார்க்கட்டும். இன்றைக்கு காடு வளர்ச்சி அல்ல, காடு அழிப்புத்தான் நடந்துகொண்டிருக்கிறது. இதிலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் கான்ட்ராக்டர்களாக கூப்புகள் கான்ட்ராட் எடுத்திருக்கிறார்கள், ஏலம் எடுக்கின்ற இடம் இரண்டும் ஒன்றாக இருந்தால், ஏலம் எடுத்த இடத்திற்குப் பக்கத்திலே உள்ள மரங்களையெல்லாம் வெட்டி அவர்கள் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஆராய்ந்து பார்த்தால், சில உண்மைகள் விளங்கும் என்று சொன்னார்கள். அதைச் செய்ய முயல்கிறேன் என்பதை முதலிலே ஒத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். அவர்கள் அரசு சார்பு உடையவர் ஒருவருக்குக் கொடுத்து, அவர்கள் ஏலத்திற்கு எந்த இடங்களை ஒப்பந்தம் செய்துகொண்டார்களோ அது அல்லாமல் மற்ற இடங்களை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். முன்பு இருந்த ஆட்சியின்போது, கறுப்புக் கல் வெட்ட இடம் கேட்டு அதற்கு அப்பாலுள்ள வெவ்வேறு இடங்களில் வெட்டியதால், அரசு அவரை வெளியிலே அனுப்பியது. அதை நினைவில் வைத்துக்கொண்டு சொல்கின்றார்களோ என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. இருந்தாலும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். யார் அப்படிச் செய்கிறார்கள் என்பதை அவர் தயவு செய்து எழுதித் தருவார்களானால், யாராக இருந்தாலும், இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





(முற்பகல் 10-30)

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள், கறுப்புக் கல் வெட்டி எடுக்கும்போது, முன்பிருந்த ஆட்சி, வேண்டியவர்களுக்குச் சலுகை அளித்து கறுப்புக் கல் வெட்டியெடுத்ததாகச் சொன்னார்கள். கறுப்புக் கல் வெட்டி எடுத்த காலத்திலே, அப்போது இருந்த சர்க்கார் அதை லீசுக்குத் தந்தார்கள். லீசுக்கு எடுத்தவர்கள் இப்படிப்பட்ட நேரங்களில் பலவிதமான தவறுகள் செய்கின்றபோது, அவைகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நான் சொல்வதெல்லாம், காட்டிலே இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உறுதியாக நம்பி, என்னிடம் கேட்டால், அதற்கான ஆதாரத்தைத் தரத் தயாராக இருக்கிறேன் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, நான் இங்கே இருக்கின்ற உறுப்பினரை நம்பாமல் வேறு யாரை நம்புவது ? உங்களை நம்பித்தான் ஆட்சி செய்கிறோம். நீங்கள் உண்மை சொல்வீர்கள் என்ற அடிப்படையிலேதான் ஆள்கிறோம். அந்த நம்பிக்கை இருக்கிறது. முன்னால் இருந்த அரசு நடவடிக்கை எடுத்தது என்று சொன்னார்கள். இப்போது வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆட்சி வந்த பிறகு அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். 'என்னிடம் வந்தால், கேட்டால்' என்கிறார்கள். நான் கேட்கிறேன். அப்படி யாராவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், செய்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் இருந்தால், தயவு செய்து தாருங்கள். இந்த அரசு அதை எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : கறுப்புக் கல் வெட்டிய காலத்தில் அப்போதிருந்த கழக ஆட்சியில், தவறாக உரிய இடத்திற்கு மேலே கற்களை வெட்டி எடுத்தவர்களுக்குப் பெனால்டி போட்டு, வசூல் செய்ய நடவடிக்கை அப்போதும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றித் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். குளத்தூருக்குப் பக்கத்தில் கோவிந்தம்பாடி என்ற கிராமம் இருக்கிறது. அது சேலம் மாவட்டத்திலிருந்து கர்நாடக மாநிலத்திற்குச் செல்லும் பகுதி நான் கையிலே புகைப்படம்கூட வைத்திருக்கிறேன். 150, 200 அடிக்கு மேலே அகலமான பாதையாக இருக்கிறது. அங்கே இருக்கும் குடிசைகளை அப்புறப்படுத்தி, ஆளுங் கட்சியைச் சேர்ந்த ஒருவர்— பெயரைச் சொல்லவில்லை முதலமைச்சரவர்களுக்குத் தெரியும்—[illegible] பேரிலே. . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, எனக்குத் தெரியும், தெரியும் என்று சொல்லுவது நியாயமாகாது. என்னிடம் சொல்லியிருந்தால், தெரிந்திருக்கும். சொல்ல வில்லை. இப்போது சொல்லுவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சேலம் மாவட்டத்திற்கு வந்தபோது, கறுப்புக் கொடி காட்டுவேன் என்று அறிவித்து, காட்டினார்கள். அவருக்குத் தெரியும். ஏனென்று சொன்னால், நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம், சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவர் தலையிட்டு அந்தத் தொகுதியின் உறுப்பினர்—பெயரைச் சொல்லவில்லை—தலையிட்டு, அந்தக் குடிசைகளையெல்லாம் அப்புறப்படுத்தினார்கள். என்ன காரணமென்றால், அவர் காடுகளிலேயிருந்து வெட்டிக் கொண்டுவரும் மரங்களைப்பற்றிப் பொதுமக்கள் தகவல் தருகிறார்கள் என்பதால், அங்கேயுள்ள குடிசைகளையெல்லாம் காலி செய்தார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிலவற்றைச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில், எனக்குக் கறுப்புக் கொடி காட்டியவர்கள் விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். வேறு யாரும் கறுப்புக் கொடி காட்டியதாக நினைவில்லை. அவர்கள் விளக்கம் தாலாம். இதற்காக யாரும் கறுப்புக் கொடி காட்டவில்லை. வேண்டுமென்றால் அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள் காட்டியிருக்கலாம். அது எதற்காக என்பது தெரியாது. அதிகாரபூர்வமாக எனக்குத் தகவல்கள் இல்லை. இப்படி நல்ல நெருங்கிய நண்பர்களிடமிருந்தும் தகவல் இல்லை. ஆனால் ஒன்றை நான் இங்கே பணிவோடு சொல்ல விரும்புகிறேன். பத்திரிகையில் வர வேண்டுமென்பதற்காகப் பேசுவதைவிட, இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பினால், ஒருவர் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை என்று சொல்லிக்கொண்டு, திரும்பத் திரும்ப குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டிருப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்குமா என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று, மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



மூலமாக இருந்தவர்கள் பெனால்ட்டி போட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஒழுங்கு நடவடிக்கை சரியாக எடுத்திருந்தால், இன்றையதினம் கோடிக்கணக்கான ரூபாய் ஏமாற்றிவிட்டார்கள் என்ற வழக்கு வழக்குமன்றத்தில் இராது என்று அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். வழக்கு மன்றத்தில் இருப்பதால், நான் இங்கே என்ன வழக்கு என்று விவாதிக்க முடியவில்லை. இந்த நிலையில் திரும்பத் திரும்ப குற்றச்சாட்டுகளை எடுத்து வைப்பது நியாயம்தானா, சரிதானா? அல்லது பெயர்களைச் சொல்லட்டும். நான் விசாரித்து பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவரவர்களே, கொளத்தூர் ஒன்றியம் கோவிந்தம்பாடி என்ற கிராமம்—அந்தக் கிராமத்தில் பொதுப் பாதைக்கு 150 அடிக்கு அப்பாலே தள்ளி குடிசைகள் இருந்தன. அதை ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் திரு. நாச்சிமுத்து அவர்கள், வேண்டுமென்றே "காலி செய்தார்; அவர் செய்கின்ற தவறுகளை அவர்கள் மற்றவர்களுக்குத் தெரிவிக்கிறார்கள்" என்று அதிகாரிகளிடத்தில் சொல்லி, காலி செய்தார். மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரி, பொதுப் பணித் துறை அதிகாரி எல்லோரிடத்திலும் சென்று அணுகியபோது "நீங்கள் சொல்வது நியாயமானதுதான், போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லை, ஆனால் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதைக் காலி செய்தே தீர வேண்டுமென்று சொன்னதால், நாங்கள் காலி செய்தோம்" என்று சொன்னதால், இறுதியாக முதலமைச்சர் மேட்டூருக்கு சாரணர் நிகழ்ச்சிக்கு வரும்போது, கோவிந்தம்பாடியில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாகத்தான் கறுப்புக் கொடி காட்டுவதாக அறிவித்து அன்றையதினம் கறுப்புக்கொடி காட்டப்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே. நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி எனக்கு இதுவரை செய்தி இல்லை. இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இங்கே அதிகாரிகள் சொன்னார்கள் என்கிறார்கள். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் அப்படிச் சொன்னார் என்று சொல்கிறார்கள். இந்தப் பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை, இந்த அவையிலே நிரூபிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவரவர்களே, பொறுப்பு ஏற்றுக் கொண்டுதான் சொல்லுகிறேன். இந்த மன்றம் எந்த ஒரு விசாரணை நடத்தினாலும், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் இந்த ஆட்சியிலே தொழில் திட்டங்கள் எப்படி இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோதும் சரி, ஆட்சிப்பீடத்திலே இருந்தபோதும் சரி, தி. மு. க. ஆட்சியில் இருந்த நேரத்திலே சேலத்திலே இரும்பாலை வேண்டுமென்று பெரிய எழுச்சி நாள் கொண்டாடி, இரும்பாலையைக் கொண்டு வந்தோம். அப்படி இரும்பாலை ஆரம்பிக்கப்பட்டதா? திட்டப்படி அங்கே இரும்பாலை துவக்கப்பட்டதா? அங்கே அந்தத் தொழிற்சாலை நடைபெறுகிறதா? இன்றைய தினம் சேலத்திலே இரும்பாலை இல்லாமல், எவர்சில்வர் தகடு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக மாறிவிட்டது. நம்முடைய மாநில அரசு இப்படிப்பட்ட ஒரு பெரிய திட்டத்தை மத்திய அரசோடு வாதிட்டு, வற்புறுத்தி, அதிகமான நிதி உதவியைப் பெற்று, சேலம் இரும்பாலைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று வாதிட்டு, அதைப் பெறுகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் 2 முதல் 10 வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும், வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள குழந்தைகளுக்கு ஒரு வேளை மதிய உணவு வழங்க 100 கோடி ரூபாய் தேவைப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள். இது நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதா? கிராமங்களிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகள், கிராமங்களை ஒட்டி அமைந்துள்ள உயர் நிலைப்பள்ளிகள், இன்னும் சொல்லப் போனால் நகராட்சி, மாநகராட்சி நடத்தக்கூடிய ஆரம்பப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் படிப்பவர்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் 75 சதவிகிதத்தினராக இருக்கிறார்கள். இன்றைக்கு அந்தக் குழந்தைகளுக்கு ஒரு வேளை மதிய உணவாவது போட முடியுமா என்று சொன்னால், முடியாது. அமெரிக்காவில் உள்ள யுனிசெப் நிறுவனம் மூலம் கிடைக்கும் உதவியைக் கொண்டும், பஞ்சாயத்து, ஸ்தல ஸ்தாபனங்கள் நிதி உதவியைப் பெற்றும் இன்றைக்கு மதிய உணவு போடப்படுகிறது. அதுவும் வயிறார அல்ல, கோழிக்கு இரை போடுவதுபோலக் கொடுக்கிறார்கள். அதிலேகூட பல



தவறுகள் நடக்கின்றன. ஆனால் 100 கோடி ரூபாய் திட்டத்தினால தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் மதிய உணவு போடப் போகிறோமென்று சொல்லுவது விளம்பர அறிவிப்பே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10.40)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாற்றுத் தலைவரவர்களே, சற்றுமுன்பு சில செய்யப் படக்கூடும் [illegible] என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இது சாத்தியமாகக் கூடிய காரியமா என்று கேட்கிறார்கள். ஆனால் இது செய்ய வேண்டிய காரியம் அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாததில் எனக்கு மகிழ்ச்சி. இதுபோன்ற ஒரு காரியத்தைச் செய்து தர வேண்டுமென்ற நிலைமையில்—வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பவர்கள் 70 சதவிகிதத்துக்கு மேல் கிராமப்புறங்களில் தான் இருக்கிறார்கள் என்கிற நிலைமை இருக்கும்போது, அதை எண்ணிப் பார்க்க மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் மறந்துவிட்டார். மதிய உணவு கொடுக்க முடியுமா என்று இங்கே கேட்கிறார். எங்கெங்கு கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் கொடுக்க இருக்கிறோம். ஏற்கனவே பால்வாடி மூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஆங்காங்கே தாய்மார்கள் மூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போதும் அதுபோல் இத்திட்டத்தினை அனைவரின் ஒத்துழைப்புடனும் செய்ய இருக்கிறோம். இப்படி நான் சொல்லும்போது, ஒன்றை அவையின் கவனத்திற்குக் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். இடுப்பிலே குழந்தையை வைத்துக் கொண்டு அந்தக் குழந்தைக்கு உணவை அந்தத் தாய் கொடுக்க வேண்டும். அந்தத் தாய் சாப்பிட வேண்டுமானால், ஏதாவது வேலைக்குப் போயாக வேண்டும். குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு வேலை செய்ய இயலாத நிலையில் அப்படியே வேலைக்குப் போனாலும் சமயத்தில் குழந்தைக்கு உணவு தர முடியாத நிலையில் இருக்கிறாள். அப்படி இருக்கிற லட்சக்கணக்கான குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு தந்து தீர வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இருக்கிறது. இத்திட்டம் நிச்சயம் நிறைவேறும். இதுபோல் முன்பும் தன்னிறைவுத் திட்டம் கொண்டுவரப்பட்டபோது, சந்தேகப்பட்டார்கள். பிறகு சந்தேகத்தை விட்டு விட்டு குறைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். குறைகள் இல்லாத மனிதன் கிடையாது. எங்கேயாவது சில தவறுகள்—அதுவும் தெரியாத்தனத்தால்—அல்லது அரசுக்கு வேண்டுமென்றே கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்க—முன்பு இருந்தவர்களுக்கு நல்ல பெயர் வாங்கிக்

கொடுக்க சில அதிகாரிகளால் நடக்கலாம். ஆனால் தவறுகள் நடைபெறுவது மிக மிகக் குறைவு. இங்கே பல பேர் பேசியிருக்கிறார்கள். பேரவையிலும் பல பேர் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கட்சியினரும் பாராட்டியிருக்கிறார்கள். காங்கிரஸ் (ஐ) கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். வேறு பலரும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். தவறு எங்கே நடந்ததோ அதையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டிருக்கிறோம். ஆதலால் செய்ய வேண்டிய காரியங்கள் தான் செய்யப்படுகின்றன என்பதையும் உறுப்பினர் அவர்கள் செய்ய முடியுமா என்கிற சந்தேகம் கொள்ளத் தேவை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் சந்தேகக் கண்ணோட்டத்தோடு காரியங்களைச் செய்யவில்லை. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்துகிற நேரத்தில் எங்கேயாவது குறைகள் இருந்தால், தவறு நடந்தால், அதை அரசுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியது உறுப்பினர்களுடைய பொறுப்பு. அதை நிவர்த்திக்க வேண்டியது எங்களுடைய கடமை. இது நடக்கக் கூடியதா என்று சந்தேகப்படுகிறார்கள். நடக்க முடியாத ஒன்றை நாங்கள் விளம்பரத்திற்காகக் கொண்டு வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்வதோடு உறுப்பினர் அவர்கள் "இது செய்ய வேண்டிய காரியம் என்பதையாவது நம்புகிறார்களே என்பதற்காக" என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : நாங்கள் ஆட்சிக்கு வந்த உடன் தாலிக்குத் தங்கம் தருவோம் என்று சொன்னார்கள். எத்தனை பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்கிற கணக்கு இல்லை. அதைப்போலத்தான் இதுவும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : குறுக்கிடுவதற்காக மாற்றுக் தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும். எத்தனை பேருக்குக் கொடுக்கோம் என்பதை எங்கு சொல்ல வேண்டுமோ அங்கெல்லாம் புள்ளி விவரங்களுடன் சொல்லியிருக்கிறோம். சொல்லவும் இருக்கின்றோம். ஆனால் செய்யவே இல்லை என்று மட்டும் தயவுசெய்து சொல்ல வேண்டாம். செய்தது கொஞ்சம் போதாது என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் செய்யவே இல்லை என்று உண்மைக்குப் புறம்பாகச் சொல்ல வேண்டாம். மனச்சாட்சியோடு சொல்ல வேண்டும்.



திரு. சோ. ஆறுமுகம் : மனச்சாட்சியோடு தான் சொல்கிறேன். இத்திட்டத்தைக் கைவிட்டு விட்டதாக நான் பத்திரிகையில் பார்த்தேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அப்படி பத்திரிகையில் வந்தால், அது மேலவையை நான் அவமதிப்பதாக ஆகும். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, முன்னால் அறிவிக்கப்பட்ட ஒரு கொள்கையைக் கைவிட்டு விட்டதாக வெளியே சொல்வது இந்த சபைக்குச் சொல்ல வேண்டிய தகவலை வெளியே சொன்னதாக ஆகிறது. அப்படி இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்வார் என்று நம்புகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : தாலிக்குத் தங்கம் கொடுக்கிற திட்டத்தைக் கைவிட்டு விட்டு, விதவைத் தாய்மார்களின் பெண் குழந்தைகளின் திருமணத்திற்கு ரூபாய் ஆயிரம் கொடுப்பதாக செய்தித்தாளில் தகவல் வந்ததை நான் பார்த்தேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்தப் பிரச்சினையைப் பற்றி உறுப்பினர் சொல்லிக்கொண்டே போனால், மற்ற பிரச்சினைகள் பற்றிப் பேச நேரமில்லாமல் போய்விடும். "தாலி செய்ய அரசு எங்களுக்கு ஆயிரம் ரூபாய் தாருங்கள், நாங்கள் திருமணத்திற்கான இதர செலவுகளைச் செய்து திருமணத்தை நடத்துகிறோம்" என்று சம்பந்தப்பட்டவர்கள் சொல்லியதால், அதையும் நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : பணம் கேட்கிறார்கள், ஆகவே பணம் தருகிறோம் என்று முதலிலேயே சொல்லியிருந்தால், அதை ஏற்றுக் கொண்டிருப்பேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதிலேயே நேரம் போய்க் கொண்டிருக்கிறது. 'முதலிலேயே சொல்லியிருந்தால்' என்று சொன்னால், ஒரு திட்டத்தை நாங்கள் தீட்டிய பிறகுதான் அதுபற்றிச் சொல்ல முடியும். தங்கத்திற்கு விலை எவ்வளவு உயர்ந்து கொண்டிருக்கிறது என்பது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். குறிப்பாக இரண்டு ஆண்டுகளாக அதன் விலை எந்த அளவுக்கு உயர்ந்துவிட்டது என்பதும் எல்லோரும் அறிந்த ஒன்று. அதற்கு யார் காரணம் என்றெல்லாம் மேடையில் பேசியதை நாம் மறந்துவிடக் கூடாது. அதற்கு இந்தியாவில் இருப்பவர்கள் யாரும் காரணம்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 மார்ச் 4

அல்ல என்பதையும் புரிந்துகொண்டிருக்கிறோம். தங்கம் என்று சொல்லும்போது, தாலி செய்வதற்கு எவ்வளவு தங்கம் தேவைப்படும் என்பதையும் பார்க்க வேண்டும். அதற்கும் தங்கம் தேவை தான். ஆனால் அதே சமயத்தில் அதற்காக நாம் அதிகமாகப் பணம் செலவிடுவதை விட தாலி செய்வதற்கான பணத்தை எங்களிடத்தில் கொடுங்கள் என்று அவர்கள் சொன்னால்—மக்கள் கருத்துக்கு ஏற்ப அரசு செயல்பட்டிருக்கிறதேயல்லாமல் வேறல்ல. உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்கிறேன். நேற்றையதினம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். டி.டி.கே. சாலை என்று பெயர் வைப்பதாக அறிவித்திருந்ததைக் குறிப்பிட்டு இங்கே பேசினார்கள். அந்தப் பெயரை வேறு சாலைக்கு வையுங்கள், அந்தப் பெயர் "சர்ச்சை வைத்துத்தான்" வைக்கப்பட்டிருக்கிறது, ஆகவே அதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அதுபற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு அரசு வந்திருக்கிறது. அதை நான் சொல்லும்போது அரசு இன்றைக்கு ஒரு கொள்கையை மாற்றுகிறது என்பது பொருளல்ல. மக்களுடைய கருத்துக்கு அரசு மதிப்பு தருகிறது என்று தான் பொருள். எந்த ஜாதியாக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும், எல்லோரும் எங்களைப் பொறுத்தவரையில் சமமே. அனைவரும் ஒன்று தான். அதையும் நான் இங்கே சேர்த்துச் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். மௌபரீஸ் சாலைக்கு டி.டி.கே. சாலை என்று பெயர் வைத்து முன்பு இருந்தது போல் "கதீட்ரல் சாலை" என்ற பெயர் தொடர்ந்து இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மகிழ்ச்சி கரவொலி).

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அந்தத் திட்டம் கைவிடப்படவில்லை என்றும், அப்படி நான் வெளியே அறிவித்திருந்தால், அது இந்த அவையை அவமதிப்பதாக ஆகிவிடும் என்றும் சொன்னார்கள். அவை நடந்துகொண்டிருக்கும்போது அவ்வாறு வெளியே தகவல் கொடுப்பது உரிமை மீறலாக அமையும். பின்னால் சொல்லும்போது அந்தத் திட்டம் மாற்றப்பட்டிருக்கிறது என்று அவர்களே சொன்னார்கள். இரண்டுமே அவைக் குறிப்பில் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம்.



1982 மார்ச் 4]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: கொள்கையை மாற்றி விட்டதாகப் பொருளல்ல. தாலிக்குத் தங்கம் கொடுக்க நாங்கள் தயார். ஆனால் இப்படித் தாருங்கள் என்று அவர்கள் கேட்கும்போது, அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே தாலிக்குத் தங்கம் கொடுப்பதை நாங்கள் விட்டுவிடவில்லை. அவர்கள் விரும்பினால் தாலிக்குத் தங்கம் கொடுக்க இப்போதும் தயாராக இருக்கிறோம். ஆகவே இதில் பிரச்சினையே இல்லை.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவித்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். "கதீட்ரல் சாலை" யின் பெயரை மாற்றம் செய்து கிறிஸ்தவர்கள் மனம் புண்பட இருந்ததை முன்னிட்டு தக்க நேரத்தில் அதைத் தடுத்து நிறுத்தி மீண்டும் அதே பெயரை அந்த சாலைக்கு வைத்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதே சமயத்தில் தமிழகத்தில் தோன்றாற்றி, இந்திய நாட்டின் தலைசிறந்த அறிவாளிகளில் ஒருவராக வாழ்ந்த டி. டி. கே. அவர்களுடைய பெயரை "மௌபரீஸ் சாலை" என்கிற முக்கியமான சாலைக்குச் சூட்டியதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக, தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: என்னுடைய நன்றியையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் முதன் முதலாக மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டியில் தொடங்கப்படும் என்று செய்த அறிவிப்பு அறிவிப்பாகவே இருக்கிறது. 3 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் 150 ரூபாய் வழங்குகின்ற காரியம் நடைபெறவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நிதியமைச்சர் பதிலுரையைக் குறைக்க என்னுடைய பதில்கள் உதவும் என்ற கருத்தில் சொல்கிறேன். (சிரிப்பு) உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது உண்மைக்கு மாறானது. சரியாக நடைபெறவில்லை என்று சொல்லட்டும். இன்னும் விரிவாகச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லட்டும், அதை விட்டு விட்டு நடைபெறவில்லை, செய்யவில்லை என்று தயவுசெய்து சொல்ல வேண்டாம். அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** தமிழ்நாடு பூராவும் நடைமுறைப்படுத்தப் போவதாக சென்ற ஆண்டு அறிவித்தார்கள். ஏன் தமிழ்நாடு பூராவும் அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

அடுத்து, கைத்தறிப் பட்டு ஆடைக்கு 5 சதவிகித விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் ஒரு சமயம் கைத்தறித் துணித் தேக்கம் ஏற்பட்டு, நெசவாளர்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி ஆடையைத் தோளில் போட்டு சுமந்து தமிழகம் எங்கும் சென்று "கைத்தறி ஆடை வாங்குங்கள், கைத்தறி ஆடை உடுத்துங்கள்" என்று தெருத் தெருவாகச் சென்று பொதுமக்களைக் கேட்டார்கள். அத்தகைய ஒரு வரலாற்றைக் கொண்டது தான் திராவிட முன்னேற்றக் கழகம். அத்தகைய ஒரு பாரம்பரியம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

(முற்பகல் 10-50)

ஆனால் இன்றைக்கு 2 தறி, 3 தறி வைத்துக் கொண்டு வெளிமார்க்கெட்டிலே அதிகமான விலை கொடுத்து பட்டை வாங்கி உற்பத்தி செய்கின்ற துணிக்கு உற்பத்தி வரி 5 சதவீதம் என்று போடுவதனால் தமிழ்நாட்டிலே இந்தக் கைத்தறி நெசவாளர்கள் வேதனைப்படும் நிலை இருக்கிறது. அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ள வாய்ப்பில்லை. வேண்டுமானால் பீட்டெய்லிலே வியாபாரம் செய்பவர்களுக்கு அரசு வரி போட்டிருந்தால் கூட ஓரளவுக்கு எதிர்ப்பு இருந்திருக்காது. 2 தறி, 3 தறி, 5 தறி என்று வைத்து வெளி மார்க்கெட்டிலே பட்டை வாங்கி உற்பத்தி செய்து மற்றவர்களுக்குக் கொடுக்கிறபோது, அந்த உற்பத்தியாளர்கள் 5 சதவீதம் வரி கட்ட வேண்டுமென்று சொல்வது கைத்தறியை நசுக்குகின்ற, இன்னும் சொல்லப் போனால் சாதாரண நெசவாளர்களை பாதிக்கக்கூடிய வகையிலே இருக்கிறது. இது கண்டிக்கத் தக்கது. இதைக் கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** கொடுத்த நேரத்திற்கு மேலே அதிகமாகிவிட்டது.

**திரு. சோ. ஆறுமுகம் :** ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, புதைப் பொருள் பற்றி இந்த அரசு சொல்லியிருக்கிறது. அதுபற்றி ஆராய்ச்சி



நடத்திக் கொண்டிருப்பதாக ... (மாற்றுத் தலைவர் அவர்கள் பேசி முடிக்கும்படி சைகை காட்டினார்கள்). நான் இதோ முடித்துவிடுகிறேன். அதிகமாகப் பேசமாட்டேன். விஷயத்திற்கு அப்பாற்பட்டு போகமாட்டேன்,

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 40 நிமிடங்களுக்கு மேலாகப் பேசியிருக்கிறார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம் :** அப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் நடைபெறுவதைப் பற்றி நான் மகிழ்கிறேன், வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் 'பிளிட்ஸ்' என்ற ஏட்டில் ஒரு செய்தியைப் பார்த்தேன். தஞ்சாவூரிலே சரஸ்வதி மஹாலில் இருந்த பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள பழைய ஓலைச் சுவடிகள் களவு போயிருக்கின்றன. அப்படிப்பட்ட ஓலைச் சுவடிகள், ஓவியங்கள் களவு போகாமல் அவைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை எந்த அளவிலும் வரவேற்கத் தக்க வகையிலே அமையவில்லை, இதிலே எந்தவிதமான திட்டங்களும் இல்லை, இது பெரிய விளம்பரமாக இருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. அந்த விளம்பரமும் கூட நிரந்தரமான விளம்பரமாக, ஆளும் கட்சிக்குப் பாதுகாப்பு அளிக்கும் அளவிலே இருக்கும் விளம்பரமாக இல்லை. அடுத்த ஆண்டு வேறு விளம்பரம் வரும் என்ற அளவிலே இருக்கிறது என்று சொல்லி வேதனையோடு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** விளம்பரம் என்பதற்கு பல பொருள்கள் உண்டு. விளம்பு என்பது விளம்பரம் என்பதிலே தொக்கியிருக்கிறது. நாங்கள் விளம்பரத்திற்கு ஆசைப்பட்டு இதைச் செய்கிறோம் என்றல்ல, விளம்புதல் என்ற அளவிலே, கருத்துக்களை வெளியிடுதல் என்ற அளவிலேதான் வரும்.

* THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Vice-Chairman, Sir, it gives me great pleasure to speak on this Budget which is very illustrious, very purposeful, very hope-provoking and very constructive in its outlook.

While I went through the Budget documents, it struck me that there had been progressive development in all fields. Under Agriculture, it is quite heartening to note that every district will have a horticultural farm, that sericulture will be developed and that dairy development on the pattern of Anand

is going to be brought about in the very near future. As regards the self-sufficiency programme, which was very dear to our revered Gandhiji, it is seen that the programme has already been introduced in 69 Blocks out of the 378 Blocks. With the idea of having cent per cent coverage, this scheme was extended to another 150 Blocks during the current year and the remaining Blocks will have the scheme in the near future. Unless there is self-sufficiency in the foundation of our society, no programme can function. As such, this self-sufficiency programme is a real programme and I consider it as one of the tenets of the Twenty-point Programme to remove poverty.

Sir, mention has been made in the Budget Speech about various projects relating to industrial development which cover major industries, small scale industries and rural industries. I heard some hon. Members mentioning about the proposed tax on sweets and biscuits with brand-names. Some hon. Members also spoke in a lighter vein about the programme for distribution of tooth-powder. I feel that the production of these three commodities can be very gainfully entrusted to the rural industries sector. Cheap varieties of sweets and biscuits can be manufactured in the rural industrial units and, by that, many women can get employment. So also, the production of tooth-powder can be entrusted to the rural industrial units. I would like to draw the attention of the House to the fact that when Gandhiji introduced his famous basic education system, his first point was that when the child went to school, the health of the child should be looked after. He felt that the general surroundings of the school should first be looked into and then only the classes should begin. Therefore, the distribution of tooth-powder is a must in the case of primary schools which follow the system of basic education. In the school in my charge, we supply tooth-powder to the daystudents and we see that their teeth are properly looked after Some hon. Members mentioned that it would be very difficult to organise this scheme of distribution of tooth-powder and that special staff would be required for that. But, Gandhiji never had a staff and his programme was implemented only by the schools. I feel that, as a rural industry, the production of tooth-powder





will give gainful employment to women. In Tamil Nadu, we have Uthagamandalam and other hilly places where cloves are very easily available. In such places, rural industrial units for

(முற்பகல் 11.00)

the production of tooth-powder can be established. There are panchayats, panchayat unions, Block Development Offices, Schools and Public Health Centres for distributing tooth-powder. If the adults have to be given tooth-powder, the Public Health Centres themselves can do it and there is no need for any special machinery for it.

Going through the activities of the Tourist Department, I would like to compliment our Hon. the Minister for Tourism, I just want to mention about an article which I read some time back written by the great journalist Abu Abraham. He had gone to a place in Karnataka State and he found it impossible to visit all the places because of the most insanitary condition. He said, "Who will come to our place? Who will come to India to see our beautiful architecture, when the sanitary conveniences are not looked after properly? I had been to Mahabalipuram twice in recent months and I was impressed by the manner in which the sanitary conveniences had been provided and the place looked very clean. The reports are also encouraging because statistics alone could speak. If the number of visitors has gone up, naturally it is a credit to the Tourism Department. Only one thing I want to bring to the notice of the Hon. Minister through you, Sir. On two occasions I visited Mahabalipuram. On one occasion, I took one workshop group composed of nearly 30 to 40 people coming from all over India and also from Afghanistan and Port Blair. On the other occasion, I took a friend from Australia. All of them liked the place and the most attractive spot they liked was the Shore Temple. But the beauty of the temple is affected by the measures taken to prevent sea erosion. From the Shore Temple, we are not able to see the sea properly because the view is obstructed by the sand and other materials dumped for prevention of sea erosion. If Archaelogical Department people would take action not to obstruct the view from the Shore Temple in Mahabalipuram, it will be of great advantage to our tourists who come not only to see the Shore Temple but to see through the Shore Temple the vast expanse of our sea.

While going through other programmes, there is Education and if our hon. Members of the teaching community would permit me to speak on Education during the discussion on the Policy Note on Education, if they could give us some time amidst their demands for higher salaries, integration of A and B Wings and so many other things, I would not take much of the time of this august House now on Education. I would like to record my grateful thanks to our Hon. Chief Minister on my own behalf and on behalf of the women of Tamil Nadu for having readily accepted, my request in the same generous way as he has accepted the request from others not to change the name of Cathedral Road and in naming Mowbrays Road as 'T.T.K. Road' and allowing the continuance of the name 'Cathedral Road'. He very readily agreed to have the new Women University fully manned by women and I convey my thanks to him. Tamil Nadu is one of the most progressive States in the country in implementing educational programmes and I shall refer to other points on the subject of Education while speaking on the Policy Note on Education.

I would also like to congratulate the Hon. Minister in-charge of Police—the hon. Members know who it is—on having enabled Tamil Nadu to have the biggest contingent of women police. As one who is in-charge of women's institution, I find that the Women Police are very useful in protecting the girls who get stranded. Some girls come to Madras either to join the film-world or with some other hopes and sometimes they are waylaid. But, since the Women Police personnel are patrolling our Railway Stations and other places, those girls do not fall into wrong hands and they are either admitted in various institutions or restored to the care of their parents. Naturally, we should take pride in the fact that we have got the largest number of Women Police personnel in our State.

Sir, I would like to say a few words about the new programme, which is to be implemented at a cost of Rs. 100 crores, for providing midday meals to children belonging to the very low-income groups. I remember the criticism that came up when the late Thiru Kamaraj of our revered memory introduced the midday meals scheme and also the system of free education. At that time, some people said, "We are going to create a group of lazy people and lazy parents; this feeding programme is not going to be a success". But, later, from our own records we saw that the enrolment in our schools had increased spectacularly. Moreover, the system of free education brought about an increase in the enrolment in schools and it also raised the literacy rate among out boys and girls. The same thing happened when we started the plus 2 courses in our schools and introduced the vocational stream as a part of higher secondary education. At that time also there was criticism and all those points of criticism are still fresh in our minds. But, later, when other States started praising the vocational stream introduced by us and said that we had done wonderfully well, we got appreciation from our own people. Therefore, what I would like to tell the Doubting Thomases is this. Let us not, just in the beginning itself, decide how a scheme is going to be. I feel that this scheme would really be very successful. Sir, the term "Doubting Thomas" is part of a proverb and it is no reflection on any name.





THIRU P. R. THOMAS: Sir, I would like to say that even Doubting Thomases do have a firm conviction about the success of a programme. That term has to be attached to those who have faith in a programme.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Sir, as I understand it, the term refers to those people who always have doubts about a scheme even though they konw that the scheme is going to be a success. I feel that we have got the necessary machinery to carry out this programme. There are the schools, the Panchayats, the Blocks and also many other agencies which can take up this programme. When we are thinking in terms of "Garibi Hatao" and the Twenty-point Programme, nothing can be a better programme than this programme. Sir, I am very happy that, in this Budget Speech, mention has been made heard, on a number of occasions, mention being made in in two or three places of the voluntary organisations. I have this august House that the voluntary agencies are not doing good work. It used to make me very unhappy. But, in this particular Budget, reference has been made to the voluntary

[Thirumathi Mandakini Krishnamurthi] [1982 மார்ச் 4

agencies and the Hon. the Finance Minister has called upon the voluntary agencies to co-operate in the implementation of this programme. We feel happy that our part in the development of the country, in general, and in the development of

(முற்பகல் 11.10)

Tamil Nadu, in particular, has been recognised. I would like to assure the House that we will definitely make this programme a success.

Before concluding, I would like to say that so far as co-operative system is concerned, we have a fool-proof legislation before us which will be presented shortly before this Legislature and it will improve and give a pep and efficiency to the co-operative movement. For the Hon. the Law Minister, who is incharge of Co-operation and Courts, I would like to mention that we are having very many programmes and there are hundreds of able and efficient people who have been giving their time and energy and have been working as honorary magistrates. I was myself functioning as honorary Presidency Magistrate for about 12 years. As the saying goes, justice delayed is justice denied. If the system of having honorary Presidency Magistrates is again introduced, it would be good as minor cases can be tried by them. I know this is not in the hands of the State Government and the decision was taken by the Centre.

(The Vice-Chairman sounded the gong)

Sir, just two minutes more. Though such a decision was taken, some of the States are still having the Juvenile Magistrate system. Very recently I read that the Chief Justice of India—Shri Y. V. Chandrachud—was going to be in Tamil Nadu very shortly. I would like our Law Minister to place before him the need for introducing the system of honorary magistrates and also put forward the recommendation of this House to the Law Minister of the Government of India that this system is very useful, very purposeful and this may be introduced again so that stagnation of cases may be avoided. Thank you.



1982 மார்ச் 4]

* திரு. பா. ரா. தாமஸ் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு ஒன்றைக் கூற விரும்புகிறேன். சில நிமிடங்களுக்கு முன்னதாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவைக்கு வருகை தந்து, கிறித்துவர்கள் கொடுத்த கோரிக்கையை ஏற்று கதீட்ரல் சாலை என்ற பெயரை அப்படியே மீண்டும் அந்தச் சாலைக்கு இட்டு, மாற்றத்தைத் தவிர்த்து, இந்தியத் துணைக் கண்டத்திலே சிறந்த பெரிய அரசியல் வல்லுநராக இருந்த திரு. டி.டி.கே. பெயரை மௌபரீஸ் சாலைக்குச் சூட்டுவது என்று கொடுத்த அறிவிப்பிற்காக கிறித்துவ பெருமக்களின் சார்பிலே இந்த ஆட்சிக்கும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த அவையின் மூலமாகவும், தங்களின் மூலமாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அருட்பெருந்தகை சுந்தர் கிளார்க் என்ற பேராயரும், திரு. அருளப்பா என்ற பேராயரும் சென்னை மாநகரத்திலே உள்ள கிறித்துவர்களை அழைத்து தங்கள் உணர்வுகளைக் காட்டும் வகையிலே கூட்டம் நடத்தி, வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில் நடந்த இந்த மாற்றத்திற்கு நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துக்களைக் கூறும்போது, சில உண்மையான உணர்வுமிக்கச் சாதனைகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எடுத்த எடுப்பிலேயே 100 கோடி ரூபாய் செலவில், உணவு இல்லாதவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்தில் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கி நல்ல வழிகாட்டியாக அமையும் என்று நான் கருதுகிறேன். ஏற்கெனவே நம்முடைய மாநிலத்திலே மதிய உணவுத் திட்டம் வைத்திருக்கிறோம். மதிய உணவுத் திட்டத்தின் மூலம் 20.2 இலட்சம் மாணவர்களுக்கு, நடுநிலைப் பள்ளி அளவிலே உணவு கொடுத்து வருகிறோம். ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு உணவு கொடுத்து வருகிறோம். இந்தத் திட்டத்திற்காக மாநில அரசுகூட இப்போது ரூபாய் 5.55 கோடி பணத்தை ஒதுக்கீடு செய்து செலவிட்டு வருகிறது. மேலும் 200 நாட்களுக்கு உணவு கொடுக்க வேண்டுமென்றால். அதிலே 100 நாட்களுக்கு "கேர்" நிறுவனம் உணவு வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. நம்முடைய அரசு ஒரு மாணவனுக்கு பத்து காசுகள் என்றும், உள்ளாட்சித் துறை 5 காசுகள் என்றும் வழங்கக் கூடிய நிலையை ஏற்படுத்தி, தொடர்ந்து இதை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்திலே ஒரு சில இடங்களில்

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 மார்ச் 4

குறைபாடுகள் இருக்கின்றன. முழுவதுமாகக் குறைபாடு இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. பல மாணவர்கள் பள்ளிக்குத் தொடர்ந்து வந்து, "டிராப் அவுட்" இல்லாத நிலையை ஏற்படுத்தி, சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் மைய சமையல் கூடங்களை வைத்திருக்கிறோம். இராமநாதபுரம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் மைய சமையல் கூடங்களை அமைக்க சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அது இன்னும் முழுமையாகச் செயல்படாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே நடு நிலைப் பள்ளியில் உள்ள 20 இலட்சம் மாணவர்களையும், பாலவாடியில் உள்ள இரண்டரை வயது முதல் ஐந்து வயது வரை உள்ள மாணவர்களையும் இணைத்து—நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்தில் நாற்றங்கால் கல்வியை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்—அந்த நாற்றங்கால் பள்ளியில் படிக்கும் இரண்டரை வயது முதல் ஐந்து வயது வரை உள்ள மாணவர்களையும் ஆக இந்த மூன்று அமைப்புகளையும் ஒருங்கிணைத்து செயல்பட்டால், நிச்சயமாக ஐந்தாண்டுகளுக்குள் நம்முடைய மாநிலத்தில் இளைய பாரம்பரியத்தில் எழுத்தறிவு இல்லாதவர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்க முடியும். மதிய உணவுத் திட்டத்தைப் போல நினைத்து இதைச் செயல்படுத்த வேண்டும். பொதுவாக தனிப்பட்ட சாராருக்குக் கொடுத்து விடாமல் பலதரப்பட்ட மக்களுடைய பொறுப்பிலே இதை அமைக்க வேண்டும் என்ற கருத்தக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்வித் துறையிலே இது சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அதைப் போலவே பாலவாடி அமைப்பு இதிலே இணைந்திருக்க வேண்டும். சேவை சங்கங்களோடு இணைந்து செயல்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களும் ஆரம்ப சுகாதார நிலையங்களும் இதிலே பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இதிலே பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் கூட நாற்றங்கால் பள்ளியை நடத்துபவர்கள் பொறுப்பு ஏற்று இவர்கள் எல்லாம் மேற்பார்வை செய்தால், நிச்சயமாக இந்த 100 கோடி ரூபாய் திட்டம் சிறந்த முறையில் வெற்றி பெறுவதோடு, வருங்காலத்திலே எழுத்தறிவு இல்லாதவர்கள் இல்லாத நிலையை ஐந்தாண்டு காலத்திலே உருவாக்கி, முதியவர்களுக்கு எழுத்தறிவு புகட்ட வேண்டிய பளுவை நீக்கக் கூடிய நல்ல நிலையிலே இத்திட்டம் அமைந்திருக்கிறது என்பதால், நான் இதை வரவேற்கிறேன்.



1982 மார்ச் 4] [திரு. பா. ரா. தாமஸ்]

ஓய்வூதியம் வழங்குவதைப் பொறுத்தவரையில், வயது முதிர்ந்து வசதி இல்லாதவர்கள், 65 வயது தாண்டியவர்கள், 60 வயது பூர்த்தியாகிய விவசாயத் தொழிலாளர்கள், 40 வயது பூர்த்தியாகிய விதவைகள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியவர்களுக்காக வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 25-லிருந்து 35 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை ஒரு கிலோ அரிசியும், ஓராண்டில் இரண்டு முறை உடைகளும், வழங்கப்படுகின்றன. இருந்தாலும் விலைவாசி ஏறியிருக்கின்ற இந்த நாட்களில் அவை போதாது என்பதால், 35 ரூபாய் என்பதை 50 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே மாநிலத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை 100 ரூபாயிலிருந்து 125 ரூபாயாக உயர்த்தி அரசாணை வழங்கியிருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு செய்த அறிவிப்பைப் பார்க்கும்போது, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 100 ரூபாய் என்று இல்லாமல் குறைந்தபட்சம் 150 ரூபாய் பெற வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. குடும்ப ஓய்வூதியம் 140 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். கணவன், மனைவி ஆகிய இரண்டு பேரும் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு 150 ரூபாயும், அப்படி இல்லாவிட்டால் ஒருவருக்கு மட்டும் 140 ரூபாயும் என்று அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசும் இந்த முறையைப் பின்பற்றி ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக் குறைந்தபட்சம் 150 ரூபாயாவது கொடுக்க வேண்டும். குடும்ப ஓய்வூதியம் 140 ரூபாய் என்ற அளவிலே கொடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

அகவிலைப் படியைப் பொறுத்த வரையில் ஆகஸ்ட் 1, 1981, அக்டோபர் 1981, நவம்பர் 1981, சனவரி 1982 ஆகிய நான்கு தவணை அகவிலைப் படியை மத்திய அரசு வழங்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதே நேரத்தில் ரூபாயின் மதிப்பைப் பார்க்கும்போது, 1970-ல் ஒரு ரூபாயின் மதிப்பு 53.76 காசுகள், 1976-ல் 29.85 காசுகள், 1981 டிசம்பரில் 21.74 காசுகள் தான் என்று மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எவ்வளவு பெரிய மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறோம். மத்திய அரசிலே எவ்வப்போது அகவிலைப் படியை உயர்த்துகிறார்களோ அவ்வப்போது ஆட்டோமேட்டிக்காக மாநில அரசும் அகவிலைப் படியை உயர்த்துகிற நிலையை உருவாக்க வேண்டும்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 மார்ச் 4

ஆனால் ஊதிய விகிதங்களைப் பார்க்கும்போது கூட, மாநிலத்திற்கு மாநிலம் மாற்றம் இருக்கிறது. இவைகளையெல்லாம் போக்க வேண்டும் என்றால், தேசிய ஊதியக் குழு என்ற கொள்கையை வகுத்தால்தான் வேறுபாடு இல்லாமல் இருக்கும். மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடு இல்லாமல் ஊதியமும், அகவிலைப் படியும் வழங்க வேண்டும் என்றால், தேசிய ஊதியக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்பதிலே நம்முடைய மாநிலம் முன் நின்று செயல்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் தலைமை)

(முற்பகல் 11-20)

இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்பொடி வழங்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். கிராமப் பகுதிகளிலே உள்ள மக்களை நாம் பார்க்கிறோம். பொதுவாகவே அவர்கள் பலவிதமான குச்சிகளை வைத்துக் கொண்டு பல் தேய்க்கிறார்கள். சிலருக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. ஒரு மணி நேரம் கூட இந்தக் குச்சியை வைத்துக் கொண்டு தேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். போகும்போதும், வரும்போதும், வயலுக்குப் போகும்போதும் இந்தக் குச்சியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல் சுத்தமாக இல்லாத காரணத்தினால், பல் பாதுகாக்கப்படாத காரணத்தினால், புற்று நோய் கூட வருகிறது. அது ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் சரி, கிராமங்களிலே இந்தப் பழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. புகையிலையை வாயிலே போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் வாயில் பொடியையே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாயிலேயே போட்டுக்கொள்கிறார்கள். இந்தமாதிரி கெட்ட பழக்கங்களைத் தவிர்க்கக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு நாம் குறிப்புகளைக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், கரடுமுரடான பொருள்களை வைத்து பற்களைத் தேய்ப்பதன் காரணமாகவும், அதே சமயத்தில் சத்தில்லாத உணவுப் பொருள்களைச் சாப்பிடுவதாலும், அவர்கள் பற்கள் நிச்சயமாக மோசமாக இருக்கும். எவ்வளவுதான் பல்பொடியைக் கொடுத்தாலும், உணவுப் பொருள்களை சத்துள்ள பொருள்களாகக் கொடுக்காவிட்டால், அது நல்ல பலன் அளிக்காது. கர்ப்பிணிப் பெண்களுக்குச் சத்துணவு கொடுக்கப்படாவிட்டால்கூட, அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் சில நேரங்களில் 8 மாதம் முதல் 10 மாதம் வரையில்



1982 மார்ச் 4] [திரு. பா. ரா. தாமஸ்]

கூட பல் முளைக்காமல் இருக்கின்றன. ஆகவே பல்பொடி கொடுக்கும்போது சத்துணவும் வழங்க வேண்டும். புகையிலையை, பொடியை வாயிலே முடக்குவதனால், இந்தப் பற்கள் கெட்டுப்போய் புற்று நோய் வரக்கூடிய ஆபத்து உருவாகிறது என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

பயணப் படி, தினப் படி ஆகியவற்றைப் பொறுத்த அளவிலே, நம் மாநில அரசு 38 கோடி ரூபாய் வரி விதித்து, அதிலே ஒரு 7 கோடி ரூபாய் அளவுக்கு இதற்காக ஒதுக்கியிருக்கிறது. பயணப் படி, தினப் படி ஆகியவற்றை அதிகரிப்பதற்காக அப்படி வரி விதித்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அகவிலைப் படியைக் கூட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு இல்லை. ஒருவேளை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ஒரு 2, 3 தவணை அகவிலைப் படியைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போதே சொல்லாவிட்டால் அதிலே உற்சாகம் குறைந்துவிடும் என்று நாம் எல்லாம் சொன்ன பிறகு கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

பயணப் படி, தினப் படியைப் பொறுத்த வரையிலே, அந்தப் படி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் நடப்புக்கு ஏற்றபடி கொடுக்க வேண்டும். இப்போது உண்மையிலே அதற்காகும் செலவில் பாதி அளவுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதையும்விட குறைவாக இருக்கிறது என்றுகூட சொல்லலாம். அதை மாற்றியமைக்கும்போது, இன்றுள்ள நிலையில் ரூபாயின் மதிப்பு 21.74 காசுகள் என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. 1978 ஆம் ஆண்டிலே ஒரு ரூபாய்க்கு இருந்த மதிப்பைவிட இப்போது 8.11 காசுகள் வேறுபட்டிருக்கிறது. ரூ. 100 என்பது இப்போது 21 ரூபாய் அள்வுக்கு மதிப்பு குறைந்திருக்கிறது. இதைக் கருத்தில் வைத்துக் கொண்டு, மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அரசு நல்ல பல திட்டங்களைப் போட்டிருக்கிறது. நான் நிச்சயமாக எங்கள் கட்சி சார்பிலே, ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் அணி சார்பிலே அவற்றை வரவேற்கிறேன். இதில் நல்ல பல திட்டங்கள், மக்களுக்குப் பலனளிக்கக்கூடிய திட்டங்கள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டும். அவை நிறைவேற்றப்படுவது நன்கு கண்காணிக்கப்பட வேண்டும். நான் வரி விதிப்பைப் பொறுத்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மதுப் பொருளைப் பொறுத்த வரையில், 25 விழுக்காடு அதிகமான வரி விதிப்பு என்பதை வரவேற்கிறோம். இரண்டு பொருள்கள் மீது வரி விதிப்பு தவறானது, தவறான கொள்கை

என்று கருதுகிறேன். கைத்தறிப் பட்டைப் பொறுத்தவரையிலே, எல்லோருக்கும் எல்லாவிதமான பட்டுத் துணிகளுக்கும் 5 விழுக்காடு வரி என்று போட்டிருக்கிறார்கள். இந்தப் புதிதாக வரக்கூடிய வரி, அந்தத் தொழிலை, தொழிலாளர்களை பாதிக்கும். தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் வருவாயைப் பெற முடியாத அளவிலே ஸ்தம்பிக்கச் செய்துவிடும். அதைத் தவிர்க்க வேண்டுமென்றால், அந்த அதிகமான விலைக்கு விற்கக்கூடிய கைத்தறிப் பட்டு உற்பத்தித் துணிகளுக்கு மட்டும் அந்த 5 விழுக்காடு வைத்துக் கொண்டு, சாதாரண கைத்தறிப் பட்டுத் துணிகளுக்கு 5 விழுக்காடு என்பதை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளைப் பொறுத்த வரையிலே, பிஸ்கட்டுகள், மிட்டாய்கள், மற்றும் சாக்லேட்டுக்கு வரி விதித்திருக்கிறார்கள். இவை 2 வயது முதல் 10 வயது வரையில் உள்ள குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் பொருள்கள். இவை ஏழைக் குழந்தைகள், பணக்காரக் குழந்தைகள், நடுத்தரக் குழந்தைகள் எல்லாம் விரும்பிச் சாப்பிடும் பொருள்கள், இனிப்பான பொருள்கள்; ஒருவேளை அந்த இனிப்புப் பொருட்களை குழந்தைகள் சாப்பிடுவதால் பற்கள் கெடும் என்பதால், இப்படி வரி போட்டிருக்கிறார்களோ என்று கருதுகிறேன். அந்த இனிப்புப் பொருட்களை வயது முதிர்ந்தவர்களும், பெரியவர்களும் கூட விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அந்த அளவிலே இந்த இனிப்புப் பொருட்களுக்கு 2 விழுக்காடு அதிகமான வரி என்பதை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகள் எல்லாம் இந்த இனிப்புப் பொருட்களை விரும்பி ரசித்துச் சாப்பிடுகிறார்கள். ஆகவே இந்த 2 விழுக்காடு வரியை ரத்து செய்ய வேண்டுமென்று நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரூரல் இன்சென்டிவ் அலவன்ஸ் முறை முறையிலே கிராமப் புறத்திலே இருப்பவர்களுக்கு ரூ. 10 கொடுக்கிறார்கள். கிராம ஈட்டுப் படி என்ற அடிப்படையிலே அது கொடுக்கப்பட்டது. ஆனால் கிராம ஈட்டுப் படி கொடுக்கும்போது, அங்குள்ள அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி என்று வழங்கப்படுவதில்லை. ஆனால் நகரத்திலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் அல்லது அலுவலர்கள் அனைவருக்கும் நகர ஈட்டுப் படி என்று வழங்கப்பட்டிருக்கிறது. கிராமத்திலே உள்ள ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் இது கிடைக்காததால், பெருத்த தொல்லைக்



குள்ளாகின்ற நிலைமைகள் இருக்கின்றன. எவ்வாறு கிராம ஊக்கப் படி 10 ரூபாய் என்று வழங்கப்படுகிறதோ அதுபோலவே, இந்தத் தொகையை இணைத்து அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி என்று வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை இந்த அவையின் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

ஈட்டிய விடுப்பு என்ற முறையிலே அரசு ஊழியர்கள் எல்லாம் 365 நாட்கள் வேலை செய்வதாகவும், ஆசிரியர்கள் எல்லாம் 200 நாட்கள்தான் வேலை செய்வதாகவும் சொல்கிறார்கள். அதிலும் 20 நாட்கள் சிறு விடுமுறை நாட்கள் போய்விட்டால், அவர்கள் 180 நாட்கள் தான் வேலை செய்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். அது தவறானது. அப்படிப்பட்ட தவறான கருத்து நிலவுகிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். அந்தக் கருத்தை நான் மாற்றிக் கூற விரும்புகிறேன். ஆண்டில் 365 நாட்கள் இருக்கின்றன என்றால், அதிலே 52 நாட்கள் ஞாயிற்றுக்கிழமைகள். 12 இரண்டாவது சனிக்கிழமைகள் இருக்கின்றன. அத்தோடு 21 அரசு விடுமுறை நாட்கள் இருக்கின்றன. ஆக இது எல்லாம் சமமாக எல்லோராலும் அனுபவிக்கப்படுகிறது. அந்த வகையில் பார்க்கும்போது, 85 நாட்கள் போக 280 நாட்கள் எல்லோரும் சமமாக வேலை செய்கிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் அந்த ஆண்டிலேயே அவர்களுடைய பணியை முடித்துவிடுகிறார்கள். நான் அலுவலகத்திலே இருப்பவர்கள் வேலையைப்பற்றி குறைத்துச் சொல்லவில்லை. அவர்களுக்கு 280 நாட்கள் வேலை என்றால், 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்று வழங்கப்படுகிறது. இந்த ஆசிரியர்களுக்கு 200 நாட்கள் வேலை நாட்கள் என்பதைக் கணக்கிட்டு, 23 4/7 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்கள் அதையும் பணமாக்கிக்கொள்ளக்கூடிய வசதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற அந்த முறையிலேயே இவர்களுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையிலே வரும் என்று எதிர்பார்த்தோம். ஆகவே அனைத்து ஆசிரியர்களுக்கும், தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரி வரையில் உள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் இதை வெகு சீக்கிரத்திலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 280 நாட்கள் வேலை செய்கின்ற அரசு ஊழியர்களுக்கு 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்று கொடுப்பதுபோல, ஆசிரியர்களுக்கு 23 4/7 என்ற அளவிலே ஈட்டிய விடுப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1982 மார்ச் 4

இராமேஸ்வரம், மண்டபத்தைப் பொறுத்த வரையிலே, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அங்கே வாழக்கூடிய அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உயர் செலவினப் படி என்று கொடுத்திருந்தார்கள். அதை நிறுத்திவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்கூட சமீபத்திலே அங்கே வந்திருந்தபோதெல்லாம் ஆசிரியர்கள் அந்தக் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது isolated locality allowance என்பதைக் கேட்டிருக்கிறார்கள். அதை அங்குள்ள ஊதிய விகிதத்தோடு இணைத்துக் கொடுத்திருந்தார்கள். அந்தத் தொகையை 3-2-1981 லிருந்து நிறுத்திவிட்டார்கள். அதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால், இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரையிலே அங்கே போய் வருவதற்கு, சென்று வருவதற்கு எல்லா வசதிகளும் வந்துவிட்டன, ரோடு வசதிகள், வாகன வசதிகள் எல்லாம் முழுமையாக இருப்பதால், இது நிறுத்தப்படலாம் என்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இப்போது பெற்றுக் கொண்டிருப்பவர்கள் வரையில் இந்தச் சலுகைகள் வழங்கப்படலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவது ஊதியக் குழு அந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதன்படி 3—2—1981-லிருந்து அந்தப்படி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் படி வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அங்குள்ள இராமநாதபுரம் கூட்டுறவுச் சங்கத்தில் விலை அதிகமாக் ஆக்கியிருக்கிறார்கள். அங்கு மற்ற இடங்களிலுள்ள விலையைவிட அதிகமாக இருக்கிறது. அதுபோலவே இரயில் கட்டணம் இருக்கிறது. இரயில் போக்குவரத்து அதிகமாக இல்லை. காலையிலே ஒரு முறை, மாலையிலே ஒரு முறை என்றுதான் இருக்கிறது. இன்னும் பாம்பன் பாலம் கட்டி முடிக்கப்படவில்லை. இந்த நிலையிலே பார்த்தால், அங்கேயிருக்கின்ற மக்கள் உணவுப் பொருள்கள், காய்கறிகள் வாங்க போய் வருவதற்கு மிகவும் தொல்லைப்படுகிறார்கள். ஆகவே இந்த உயர் செலவினப் படியை 20 விழுக்காடு உயர்த்தித்தர வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அனைத்து நிர்வாகங்களில், பல நிர்வாகங்களிலே பணியாற்றுபவர்களைப்பற்றிச் சொல்கிறேன். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதுவரையில் அங்கத்தினர் அவர்கள் பேசிக்கொண்டிருப்பதும் ஆசிரியர்களைப் பற்றியது தானே,



(முற்பகல் 11-30)

**திரு. பா. ரா. தாமஸ் :** நேரடியாக ஊதியம் வழங்க வேண்டுமென்று பலகாலமாக ஆசிரியர்கள் கோரிக்கை . வைத்திருக்கிறார்கள். பல நிர்வாகங்கள் அந்தப் பணத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாக வழங்காமல், இடைத்தரகர்களாக இருந்துகொண்டு, ஒரு பகுதியை அதிலிருந்து எடுத்துக்கொள்ளும் அவலமான நிலைமை இருப்பதால், ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாக ஊதியம் வழங்க வேண்டும். பணிப் பாதுகாப்பு என்ற அடிப்படையிலே ஒன்று கூற விரும்புகிறேன். மாநில வரிப் பணத்திலிருந்து முழு ஊதியத்தையும், அகவிலைப்படியையும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கும்போது, இடையிலே உள்ள நிர்வாகங்கள் அகற்றப்பட வேண்டும் ; ஆசிரியர்களுக்கு முழுமையான பாதுகாப்புத் தர வேண்டுமென்றால், ஒரு அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டும். எந்த நிர்வாகமும் எந்த ஆசிரியரையும் வெளியேற்றக்கூடாது என்று ஆணையிட்டால்தான், அவர்கள் பாதுகாப்படைவார்கள் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

## 5. மேலவை விதி 82-ன் கீழ் மின்சக்தி வினியோகக் கட்டுப்பாடு குறித்து அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர்களே, தமிழ்நாட்டில் மின் சக்தியைப் பொறுத்தவரையில் எவ்விதப் பற்றாக்குறையும் இல்லை. மின் உச்சத் தேவையை சமாளிப்பதுதான் கடினமாக உள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே மின் உச்சத் தேவை 2,100 மெகாவாட்டை எட்டியுள்ளது. பொதுவாக மார்ச், ஏப்ரல் திங்களில் எல்லாப் பயனீட்டாளர்களும் ஒருசேர மின் சக்தியைப் பயன்படுத்துவதால் உச்சத் தேவை அதிகரிப்பது வழக்கம். சாதாரணமாக இம்மாதத்தில் மின் உச்சத் தேவை 2,400 மெகாவாட்டை எட்டும். ஆயினும் ஊரகப் பகுதிகளை இரண்டாகப் பிரித்து மின்சாரம் வழங்குவதாலும் நகர்ப்புறங்களில் நாள் ஒன்றுக்கு சில பகுதிகளில் 2½ மணி அளவும் சென்னை நகரில் சில பகுதிகளில் 1-1/2 மணி அளவும் முன்னேற்பாடான மின் நிறுத்தம் செய்வதாலும் இத் தேவை 1,800 மெகாவாட் அளவில் கொண்டு வரப்பட்டது. மார்ச் மாதம் முதல் மேட்டூர் அணையில் நீர் விடுவது நிறுத்தப்பட்டுள்ளதால் புனல் மின் உற்பத்தித் திறன் குறைந்துள்ளதாலும், அண்டை மாநிலமான கேரள மாநிலம் நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு அவ்வப்போது மின்சாரத்தைத் தர

இயலாததாலும், தமிழகத்திலுள்ள நெய்வேலி அனல் மின் நிலையம் உள்பட அனைத்து அனல் உற்பத்தி நிலையங்களும் ஒழுங்காக இயங்கினால்தான் மின் உச்சத் தேவையைச் சரிக் கட்ட இயலும். எண்ணூரிலோ, தூத்துக்குடியிலோ ஏதேனும் ஒரு பிரிவில் கோளாறு ஏற்பட்டாலும் மின் நிறுத்தம் செய்ய வேண்டியுள்ளது,

நடந்த பத்து நாட்களில் மூன்று நாட்களில் மின் நிறுத்தம் தேவைப்பட வில்லை. ஆனால் மற்ற நாட்களில் மின் நிறுத்தம் தேவைப்பட்டது. குறிப் பாக 25-2-1982-ல் தூத்துக்குடி இரண்டாவது பிரிவில் பழுது ஏற்பட்டது. 26-2-1982-ல் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் பழுது ஏற்பட்டது. மார்ச் 2, 3 தேதிகளில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மின் ஓட்ட மின் மாற்றி உடைந்ததின் காரணமாக மின் உற்பத்தி முழுமையும் பாதிக்கப்பட்டது. எனினும் தூத்துக்குடி இரண்டாவது பிரிவு 3-3-1982 மாலை உற்பத்தியைத் துவங்கியது. தூத்துக்குடி முதலாவது பிரிவு இன்று உற்பத்தியைத் துவங்கி யுள்ளது.

மின் உற்பத்திப் பிரிவுகளில் பழுது ஏற்படுமானால் மின் நிறுத்தம் அவசிய மாகிறது. ஏற்கெனவே 2 பிரிவுகளாக பிரித்து மின்சாரம் வழங்கப்படும் ஊரகப் பகுதிகளில் எக்காரணத்தைக் கொண்டும் மின் நிறுத்தம் செய்யக் கூடாது எனவும், மின் நிறுத்தம் தேவைப்பட்டால் மற்ற பகுதிகளிலேயே செய்யப்பட வேண்டும் எனவும் மின் வாரியத்திற்கு அரசு ஆலோசனை வழங்கி யுள்ளது.

மின் தேவையும், மின் உற்பத்தியும் சரிக்கு சரியாக இருப்பதால் ஏதேனும் ஒரு இயந்திரம் பழுதுபட்டாலும் மின் நிறுத்தம் தேவைப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு உயர் மின் அழுத்தத் தொழில்களுக்கு மின் உச்சத் தேவையை மேலும் குறைப்பதென அரசு தீர்மானித்து கீழ்க்கண்ட நடவடிக் கைகளை இன்று முதல் அமுல்படுத்த முடிவெடுத்துள்ளது.

1. மின் உற்பத்தி செய்யும் சாதனங்களை (டீசல் ஜெனரேட்டர்களை) பெரும்பாலும் பெற்றுள்ள உயர் அழுத்த நூற்பு நெசவாலைகளுக்கு அவர் களது மின் உச்சத் தேவையில் 45 சதவிகிதம் மின்வெட்டு அமுல்படுத்தப் படும்.

2. மற்ற உயர் அழுத்தத் தொழில்களைப் பொறுத்தவரையில் 2 எம்.வி.ஏ. திறனுக்கு மேற்பட்ட மின் தேவையுள்ள தொழில்களுக்கு அவர்களது மின் உச்சத் தேவையில் 25 சதவிகிதம் மின்வெட்டு அமுல் படுத்தப்படும்





வெட்டு கணக்கிடுவதில் அத்தொழில்கள் 1981 டிசம்பர் வரை

3. மின்வெட்டு கணக்கிடுவதில் அத்தொழில்கள் 1981 டிசம்பர் வரை யுள்ள ஒரு ஆண்டில் ஏதேனும் ஒரு மாதத்தில் உபயோகித்த உச்ச மின்தேவை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

4. மேற்குறிப்பிட்டுள்ள மின் உச்சத் தேவையில் விதிக்கப்பட்டுள்ள வெட்டு, ஊரகப் பகுதிகளில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட உயர் அழுத்தத் தொழில்களுக்குப் பொருந்தாது.

இதன்மூலம் மின் உச்சத் தேவை வெகுவாகக் குறைக்கப்பட்டு மின் நிறுத்தம் அறவே தவிர்க்கப்படும் என அரசு நம்புகிறது. தூத்துக்குடி அனல் மின்நிலையத்தின் 3-வது பிரிவு, ஏப்ரல் மாத இறுதியில் மின் உற்பத்தி யைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் எண்ணூர் மின் நிலையத்தின் 5 ஆம் பிரிவு பழுது பார்க்கப்பட்டு மின் உற்பத்தியை ஏப்ரல் மாதத்தில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சமயத்தில் மேலே அமுல்படுத்தப்பட்டுள்ள மின் தேவை மீதான வெட்டு மீண்டும் ஆய்வு செய்யப்படும்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** . மேலவை விதி 82-ன்கீழ் அமைச்ச ரவர்கள் அறிக்கையைப் படித்து விட்டார்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைப் பற்றி தலைவரின் இசைவைப் பெற்று அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிடலாம். ஆனால் அந்த அறிக்கையின் மீது எந்த வித வினாவும் எழுப்பப்படலாகாது என்ற விதி இருக்கிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்ல ஒத்துக்கொண்டால், எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி** : தலைவரவர்களே, இது பொதுப் பிரச்சனையாக இருக்கிறது . . ,

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அனுமதிக்கக்கூடாது என்ற விதி இருக்கிறது. விதிவிலக்காக உறுப்பினர் அவர்களுக்கு அனுமதி தர வேண்டு மென்றால், அதை விவாதத்திற்குள்ளாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு தலைவரவர்களே, விதி விலக்காக அனுமதிக்கலாம். பிறகு யாரும் இதை முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

[1982 மார்ச் 4

**திரு, ஆற்காடு நா. வீராசாமி.:** தலைவரவர்களே, இது பொதுப்
பிரச்சினை. ஒப்புதல் அளித்ததற்கு தங்களுக்கும், அமைச்சரவர்களுக்கும்
நன்றி. முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் எழுப்புகிறேன். மாண்புமிகு
மின்துறை அமைச்சரவர்கள் நாட்டின் நிலைமையைக் கருதி இங்கே அறிக்
கையை வைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஒரு பகுதியாக உள்ள
வட ஆற்காடு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக முழுமையாக மின்சாரம்
இல்லாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, நெற் பயிர்கள் பாதித்த
நிலையில் இருக்கின்றன. அந்த நிலையைப் போக்கக்கூடிய அளவிற்கு,
மின்சார வெட்டு அறிவித்திருக்கிற அடிப்படையிலே வட ஆற்காடு மாவட்ட
விவசாயிகள் பாதிக்கப்படாத அளவிற்கு மின்சாரம் ஒதுக்கி, அவர்களுக்குப்
பாதுகாப்பு அளிப்பார்களா என்பதற்கு அமைச்சரவர்களிடமிருந்து விளக்கம்
பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அதே அடிப்படையிலேதான்
இந்த நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினரவர்கள் திருப்தியடையலாம்.

## 4. 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் —— தொடர்ச்சி

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,
1982—83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது காந்தி காமராஜ் தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி
தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சென்ற ஆண்டு
போலவே, இந்த ஆண்டிலும் பற்றாக்குறை பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்
கிறார்கள். மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாகக் கிடைத்த வருமானம்
காரணமாகவும், விலைவாசி கூடியதால் கூடுதலாக வந்த விற்பனை வரி
காரணமாகவும் கணிசமாக இந்த ஆண்டு பற்றாக்குறை குறைந்திருக்கிறது.
1982—83ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டிலே 135.44 கோடி ரூபாய் பற்றாக்
குறை ஏற்படுமென்று அறிவித்திருக்கிறார்கள். பொதுவாக பற்றாக்குறை
பட்ஜெட்டால் பணவீக்கம் ஏற்பட்டு, விலைவாசிகள் கூடுவதற்கு அது காரண
மாக அமையுமென பொருளாதார நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால்
தொடர்ந்து நமது மாநில, மத்திய அரசுகள் பற்றாக்குறை பட்ஜெட்டுகளை
அறிவித்து வருகிறார்கள். பற்றாக்குறைக்கு முக்கியக் காரணமாக மின்
வாரியத்திற்குப் பெருமளவில் நிதி உதவி செய்ய வேண்டியிருக்கிறது என்று



1982 மார்ச் 4] [திரு. வி. வி. வி. ஆனந்தம்]

சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் தமிழ் நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகத்தின் இழப்பிற்கு ஈடு செய்வதற்கும், அரிசி விற்பனை
யில் மட்டும் 35 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுமென்றும், அதை ஈடு செய்ய
வேண்டியிருக்கிறதென்றும் சொல்லியிருக்கிறார்கள். பேருந்துக் கழகங்களுக்கு
நிதி உதவி அளிப்பதால் நிதி இழப்பு ஏற்படுகிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்
கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதம்
31 ஆம் நாள் வரையிலான வட்டியைக் கட்டவில்லை என்று சொல்லுகிறார்கள்.
தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நேர்மையாக, சீராக,
சிக்கனமாக நடைபெறுகிறதா என்பதை ஒரு தனிக் குழு வைத்துப்
பரிசீலித்து, அதனுடைய இழப்புக்குத் தகுந்த காரணம் காட்டு
மாறு கேட்க வேண்டுமென்று கருதுகிறேன். 1,569.49 கோடி ரூபாய்
வரவு வருகிறதென்ற அளவில் நிதிநிலை அறிக்கையில் வருவாய்க்
கணக்கில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இத்தனை கோடி ரூபாயில்
எத்தனை சதவிகிதம் மக்களுக்குப் பயன்படுகிறது என்பதை நாம் கவனிக்க
வேண்டும். பெரிய அளவில் அந்த வருவாய் மக்களுக்குப் பயன்படவில்லை
என்பது என்னுடைய கருத்து.

மக்களுக்காக நல்ல திட்டங்களை—குறிப்பாக இந்த ஆண்டு 2 முதல் 10
வயது வரையிலான சிறார்களுக்குச் சத்துணவு அளிக்க வேண்டுமென்ற நல்
லெண்ணத்தில் ஏற்பட்ட திட்டங்களை எல்லாம் வரவேற்கிறேன்.

(முற்பகல் 11—40)

ஆனால் அதே சமயத்தில் இந்த நல்ல திட்டங்களை அமுல்படுத்தும்போது,
அதன் பலன் மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால், 20 சதவிகிதம், 10
சதவிகிதம் கூட அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது என் கருத்து.
மக்களுக்கு நல்ல முறையில் திட்டங்களின் பலன் போய்ச் சேரும் வகையில்
நிர்வாகத்தில் நல்ல சீர்திருத்தம் செய்ய வேண்டும். நடைமுறையில் காரியம்
நல்ல முறையில் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகளையும் உருவாக்க
வேண்டும்.

அடுத்து, உழவும் தொழிலும் தமிழகத்தில் இப்போது மிகவும் பாதிக்கப்
பட்டிருக்கிறது. குறிப்பாக உழவுத் தொழிலைப் பொறுத்தவரையில், விவசா
யிகள் உற்பத்தி செய்யக் கூடிய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை இல்லை.
கரும்பு, நெல் இவற்றுக்கெல்லாம் குறிப்பாக நல்ல விலை இல்லை.
4, 5 ஏக்கர் இருக்கிற விவசாயிக்குக் கூட அரசு அலுவலகத்தில் வேலை பார்க்கிற
ஒரு பெரிய அதிகாரிக்குக் கிடைக்கிற சம்பளம் அல்லது எல்.ஐ.சி, போன்ற

நிறுவனங்களிலே வேலை பார்க்கிற ஒரு கிளார்க்குக்குக் கிடைக்கக்கூடிய சம்பளம் அளவுக்குக் கூட வருமானம் இல்லை. இன்றைய தினம் இதன் காரணமாக விவசாயிகள் உற்பத்திப் பண்டங்களை உற்பத்தி செய்ய உற்சாகம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதோடுகூட அரசு 50 சதவிகிதம் என்கிற அளவில் லெவியை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு மேலும் உறுதியான விலை கிடைப்பது பாதிக்கப்பட்டிருக்கிறது, லெவி கொடுமையைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இன்று எடுத்துரைத்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சில குறைபாடுகளைச் சொன்னார்கள். ஆனால் இந்தக் குறைபாடு பரவலாக எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. லெவி கொடுமைகள் அதிகாரிகளால் இழைக்கப்படுகின்றன, காரணம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு லெவி என்கிற டார்ககட்-ஐ நிர்ணயித்திருக்கிறார்கள், இந்த முறையில் அவர்கள் கொள்முதல் செய்ய முற்படும்போது, அதிகாரிகள் அத்துமீறி செயல்படுகிறார்கள். லெவி கொள்முதல் என்பது வியாபாரிகள் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு என்றுதான் இருக்கிறது. என்றாலுங்கூட விவசாயிகள் நகரங்களுக்கு அனுப்புகிற நெல்லைக்கூட வற்புறுத்தி, லெவி கொள்முதல் செய்கிறார்கள். இதனால் அவர்களுக்கு இன்னும் அதிகமாக இழப்பு ஏற்படுகிறது. அதுபோல் வியாபாரிகளுக்கு மூவ்மென்ட் பர்மிட்டைக் கொடுக்காமல் முடக்கி வைத்திருக்கிறார்கள். மூவ்மென்ட் பர்மிட்டை தாராளமாக வழங்கினால், இன்னும் லெவி கொள்முதல் அதிகமான அளவில் நடைபெறும். ஆந்திரா, பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களிலிருந்து பெருமளவில் நமது மாநிலத்திற்கு உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்ய இயலும். இப்போது இருக்கும் கொள்கையின் காரணமாக மற்ற மாநிலங்களிலிருந்து நாம் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. பிற மாநிலங்களிலிருந்து வருகிற நெல்லுக்கு லெவி கொள்முதல் இல்லையென்று சொன்னாலும் கூட, அதற்கும் லெவி கொடுத்தால் தான் மூவ்மென்ட் பேர்மிட் கொடுக்கப்படும் என்கிறார்கள். அப்படிச் செய்வது வியாபாரிகளுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும். அவர்கள் இறக்குமதி செய்த உணவுப் பொருள்களை லெவிக்கு விட்டுவிட்டால், மறுபடியும் வியாபாரம் செய்ய முடியாத நிலை ஏற்படும். இதன் காரணமாக பெருமளவு இறக்குமதி ஆகக் கூடிய வாய்ப்புக்கும் தடைக் கற்களாக இந்த நடவடிக்கை இருக்கிறது.





அடுத்து, விற்பனை வரியைப் பொறுத்தவரையில், அரசு எதிர்பார்க்கும், அளவுக்கு மேல் அதிகமாக வசூலாகிறது. விலைவாசி ஏறிக்கொண்டே போவதால், விற்பனை வரி மூலம் வருகின்ற வருமானமும் உயர்ந்து கொண்டே வருகிறது. மதுவிலக்கை அமுல்படுத்தியதன் காரணமாக மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இந்த விற்பனை வரியை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள மதுவிலக்கைத் தளர்த்தியிருப்பதன் காரணமாக சென்ற ஆண்டு அரசுக்கு 100 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. நடப்பு ஆண்டில் மேலும் அதிகமான அளவுக்கு வருமானம் வரும். ஆகவே மதுவிலக்கையும் தளர்த்திவிட்டு விற்பனை வரியையும் போடுவதால் எந்தவித நன்மையும் நாட்டு மக்களுக்கு இல்லை. இன்றைக்கு மாநில அரசின் நிதி ஆதாரத்தை எடுத்துக் கொண்டால், விற்பனை வரியின் அளவு அதில் பெருமளவு சேர்ந்திருக்கிறது. ஆகவே விற்பனை வரியைப் பூரணமாக அரசாங்கம் எடுத்து விட வேண்டுமென்று நான் கூறுவதில் நியாயம் இருக்காது என்பதால், நான் அதைக் கூறவில்லை. மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாகவும், விலைவாசி உயர்வால் விற்பனை வரி வருமானம் உயர்ந்த காரணத்தாலும். அரசின் வருமானம் பெருமளவு பெருகியிருக்கிறது. இந்நிலையில் எப்படியும் விற்பனை வரியில் சில பொருள்களுக்காகவாவது சில விற்பனை வரிச் சலுகைகளை அரசு தந்திருக்க வேண்டும். ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கியிருக்க வேண்டும். இதை எல்லாம் செய்வார்கள் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது. எந்த வரியாக இருந்தாலும், குறைந்த சதவிகிதத்தில் இருந்தால்தான், வரி ஏய்ப்பு இருக்காது. மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இதை அமுலுக்குக் கொண்டுவந்த நேரத்தில், கொஞ்சமும் வரி ஏய்ப்பு செய்யவில்லை. இவ்வாறு வரியை உயர்த்திக்கொண்டே போவதால், வரி ஏய்ப்பு அதிகமாக நடைபெறுகிறது. வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு இதனால் பாதகம் இல்லை. ஆனால் வரியை ஒழுங்காகக் கட்டுபவர்களுக்குத்தான் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. கோடிக்கோடியாக வரி ஏய்ப்பவர்கள் இப்படி வரியைக் கூட்டுகிற நேரத்தில் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் ஒழுங்காக வரியைக் கட்டுபவர்களுக்கு இது மேலும் மேலும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. சர்சார்ஜ் என்றும், அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்றும் போட்டிருக்கிறார்கள். கூடுதலாக வணிகவரியை அரசுக்கு ஈட்டித்தர முன்வருபவர்களுக்கு ஒரு தண்டனையாக இது வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் மற்றும் சர்சார்ஜை அரசாங்கம் நீக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லா வரியையும் இணைத்து வரி 4 சதவிகிதம் என்று ஆக்க வேண்டும்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு எந்த அளவில் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும். பட்டுத் துணி மீது வரி விதித்திருப்பதைக் குறைக்க வேண்டும். அத்தியாவசியப் பொருள்கள் என பருப்பு, எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் போன்றவை அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இத்தகைய அத்தியாவசியப் பொருள்களுக்கு விற்பனை வரியை நீக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். வரி விகிதத்தைக் குறைப்பதால் எந்த வகையிலும் அரசின் வருமானம் குறையாது என்பதை நான் ஒரு உதாரணத்தின் வாயிலாக விளக்குகிறேன். குஜராத் மாநிலத்தில் கடலெண்ணெய்க்கு 3½ சதவிகிதம் என்று வரிவிகிதம் இருந்தது. இந்தியாவில் பெருமளவு கடலை எண்ணெய் உற்பத்தி செய்யும் மாநிலம் குஜராத் தான். அங்கு 3½ சதவிகிதம் என்று இருந்த வரியை 2 சதவிகிதம் என்று ஆக்கினார்கள். அப்படியும் வருமானம் குறையவில்லை. அந்த 2 சதவிகிதத்தைக் கூட இப்போது 1 சதவிகிதமாக ஆக்கியிருக்கிறார்கள். அப்படியும் வருமானம் குறையவில்லை. பஞ்சாபில் 1½ சதவிகிதம் தான் வரி இருக்கிறது, அதுபோல் மேற்கு வங்கத்தில் பெருமளவு கடுகு எண்ணெய் உற்பத்தியாகிறது. அங்கு கடுகுக்கு வரியே இல்லை. பொதுவாக வரி ஓரளவுக்கு மேல் இருக்கக் கூடாது. அதாவது, சேச்சுரேஷன் லிமிட்டுக்கு மேல் இருக்கக் கூடாது என்று பொருளாதார நிபுணர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள், அதற்கு மேல் வரி இருந்தால், வரி சரியாக வசூலாகாது, வரிஏய்ப்பு ஏராளமாக இருக்கும் என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் அரசு வரி விதிப்பதற்கு முன்பே எந்த அளவுக்கு வரி ஏற்றலாம், எந்த அளவுக்கு மக்கள் தாங்குவார்கள் என்பதையும் உன்னிப்பாகக் கருத்தில் கொள்ள வேண்டும். ஜப்பானில் வரி விகிதத்தைக் குறைத்ததன் காரணமாக, வருமானம் பெருகியது என்று பத்திரிக்கையில் நான் செய்தி பார்த்தேன். ஆகவே நான் சொன்ன பொருள்களுக்கெல்லாம் அரசு வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மத்திய அரசுத் திட்டங்களை தமிழகத்தில் அதிக அளவில் செயல்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். கேரளாவில் மத்திய அரசின் திட்டங்களை அமுல்படுத்த எல்லாக் கட்சியினரும் எந்தவிதபேதமும் இல்லாமல் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறார்கள். அம்மாதிரி நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய மத்திய அரசுத் திட்டங்களையெல்லாம் கட்சி பேதமில்லாமல் எம்.பி. க்களும் இந்த அரசும் சேர்ந்து வலியுறுத்த வேண்டும். சேது சமுத்திரத் திட்டம், பக்கிங்காம் கால்வாய்த் திட்டம், கரூர்—திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டம், திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும்



நடுவில் வல்ல நாட்டில் விமான நிலையம் அமைக்கும் திட்டம், கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலைத் திட்டம் போன்றவைகளை நிறைவேற்ற வலியுறுத்த வேண்டும். கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலைத் திட்டம் மிகவும் அத்தியாவசியமானது. இது கிடப்பில் இருப்பது சரியல்ல. இதை நிறைவேற்றுவது தேசியத்துக்கும் பாதுகாப்புக்கும் அவசியமானது. வாலி நோக்கம் போன்ற இடங்களில் மீன்பிடித் துறைமுகம் நிறுவ அரசு அனுமதித்திருக்கிறது. இப்படிப்பட்ட துறைமுகங்களின் வாயிலாகப் பிடிக்கப்படும் மீன் போன்ற பொருள்களையெல்லாம் கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்கப்பட்டால், அவ்வழியாக நகரத்திற்குக் கொண்டு செல்ல வாய்ப்பாக இருக்கும். ஆகவே இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இப்போது இருக்கிற சாலைகளையொட்டி முக்கியமான சில இடங்களில் இணைப்புச் சாலைகளைப் போட்டு விரிவுபடுத்தினாலே கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலை அமைந்துவிடும் என்பதையும் நான் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

(முற்பகல் 11-50)

காவிரி உபரி நீர், கட்டளைக் கால்வாய்த் திட்டத்தின்படி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் பகுதிகளுக்குப் பயன்படும் அளவுக்குத் திருப்பப்படும், கடலில் சென்று வீணாகாமல் அந்த உபரி நீரைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அளவிலே இருக்கும் இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறேன். அதைப் போலவே, தாமிரபரணி ஆற்றில் வெள்ளத்தின்போது வரும் உபரிநீர் கடலில் சென்று சேர்கிறது. அதைக் கருங்குளத்திலிருந்து சாத்தாங்குளம் வரை பயன் படுத்தும் அளவுக்குத் திரும்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பியாறு அணைத் திட்டம் நீண்டகாலமாக செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அதையும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவகெங்கைப் பகுதியில் கிராஃபைட் என்ற கனிவளம் இருக்கிறது. அது அரிதாகக் கிடைக்கும் ஒரு கனிவளமாகும். அதை 'பிளாக் கோல்ட்' என்றும் சொல்வார்கள். கறுப்புத் தங்கம் என்ற அளவிலே அதைச் சொல்கிறார்கள். தமிழ்நாட்டிலே சிவகெங்கையிலே அது கிடைக்கிறது, இராமநாதபுரம் மாவட்டம் ஒரு பின்தங்கிய பகுதி. ஆகவே, அங்கே கிடைக்கும் அந்தக் கனி

வளத்தை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும். கிராஃபைட்டை மூலப் பொருளாகக் கொண்டு செய்யும் பொருள்களை அங்கேயே செய்யும் வகையிலே அங்கே தொழில் கூடங்களை அமைக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் 5 நிமிடங்களில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** திருச்சிக்கும்-தஞ்சைக்கும் இடையிலே இந்த மாநிலத்தின் தலைநகரை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை நான் மிகவும் வரவேற்கிறேன். திருச்சிக்கும், தஞ்சைக்கும் இடையிலே 'வேஸ்ட் லேண்ட்' என்ற முறையிலே விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்கள் இருக்கின்றன. அதை பெருமளவில் ஆர்ஜிதம் செய்து அங்கே நம்முடைய தலைநகரை மாற்றுவதால் சென்னை நகரின் முக்கியத்துவம் போகாது. சென்னையில் துறைமுகம் இருக்கிறது. இது பெரிய வியாபாரஸ்தலம். ஆகவே, சென்னையின் முக்கியத்துவம் எந்த வகையிலும் போய்விடும் என்று கவலைப்பட வேண்டாம். இப்படிச் செய்தால், தமிழ்நாட்டிலே ஒரு புதிய நகரம் உருவாக வாய்ப்பு ஏற்படும். ஒரிசாவுக்கு 'புவனேஸ்வரம்,' பஞ்சாப்-ஹரியானாவுக்கு சண்டிகார் என்ற அளவிலே புதிய தலைநகரங்கள் வட மாநிலங்களிலேயும் உருவாகியிருக்கின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தை நான் மிகவும் வரவேற்கிறேன். படிப்படியாக இந்தத் திட்டத்தை அமுல்நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், இதைச் செயல்படுத்த வேண்டும், அதுபற்றிய திட்டத்தை இந்தச் சபையின் முன் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையிலே கர்நாடக மாநிலத்தில் பாட்டரியால் இயங்கும் இரு சக்கர வண்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அது வந்தால் பெட்ரோலியம் ப்ராடெக்ட்ஸ் பற்றாக்குறை உள்ள தற்போதைய சூழ்நிலையில் மக்களுடைய போக்குவரத்துக்கு அது மிகவும் பயன்படும் என்பதால், அப்படி பாட்டரியால் இயங்கும் வண்டிகளுக்கான ஒரு தொழிற்சாலையை நமது மாநிலமும் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது மின்சக்தி பற்றாக்குறை இருக்கிறது. நாம் இந்த சமயத்தில் சூரிய சக்தியை எப்படிப் பயன்படுத்தவேண்டும், காற்று சக்தியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆய்வை மேற்கொண்டு பரிசீலிக்க வேண்டும். சமயநல்லூரிலே ஒரு அனல் மின் நிலையம் இருந்தது. முன்பு இருந்த



ஆட்சிக் காலத்திலே அதை நிறுத்தி விட்டார்கள். அந்த அனல் மின் நிலையத்திற்கு ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள், கட்டிடங்கள் அப்படியே இருக்கின்றன. அதற்கு வேண்டிய இயந்திரங்கள்தான் அங்கே பொருத்தப்பட வேண்டும், ஆகவே, அங்கே இயந்திரங்கள் பொருத்தப்பட்டு சமயநல்லூரில் ஒரு அனல் மின் நிலையம் ஏற்படுத்த வேண்டும், அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பு நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

***திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றி எனக்கு முன் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவரவர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளுக்கு ஏற்றவாறு கருத்துக்களைச் சொன்னார்கள். நான் சாதாரண மக்களில் ஒருவன் என்ற முறையிலே, ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர், நீதிபதி என்ற முறையிலே, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மீது எனது கருத்துக்களைச் சொல்வதற்கு முன், இந்த மேலவையிலே நிதிநிலை சமர்ப்பிப்பது குறித்து என் மனதில் தோன்றும் ஒருசில எண்ணங்களைச் சொல்கிறேன். பட்ஜெட் என்பது பரமரகசியமாக வைக்க வேண்டிய ஒன்று. அதிலுள்ள எந்த விஷயமும் வெளியே யாருக்கும் சட்ட சபையிலே வைக்கும் முன்பு தெரியக்கூடாது, தெரிவிக்கக் கூடாது. அது வெளியே வந்துவிட்டால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே அதற்குப் பொறுப்பாகி, அவர் ராஜினாமா செய்ய வேண்டிய அளவுக்குக்கூட கோரிக்கை வரும். அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அந்த அறிக்கையை மேலவையிலே சமர்ப்பிக்கும்போது, அது எல்லோருக்கும் தெரிந்த ஒரு அறிக்கையாக ஆகிவிடுகிறது. ஏனென்றால் காலையிலே சட்டமன்றப் பேரவையிலே சமர்ப்பிக்கும் நிலை இருப்பதால், அதிலுள்ள விஷயங்கள் எல்லோருக்கும் தெரிந்து விடுகிறது. பத்திரிக்கைகளிலே செய்தியாக வெளி வருகிறது, ரேடியோவிலும் அதுபற்றிய செய்தி ஒலிபரப்பப்படுகிறது. சட்டமன்ற மேலவையிலே அது சமர்ப்பிக்கப்படும் போது, அதனுடைய முக்கியத்துவம் குறைந்து விடுகிறது. ஆகையால், மேலவை உறுப்பினர்கள் கூட இதிலே அக்கறை காட்டுவதில்லை. ஏதோ ஒரு ஃபார்மாலிட்டி என்ற அளவிலே தான் இருக்கிறது. மேலவை உறுப்பினர்களை உதாசீனம் செய்கிறார்கள் என்ற எண்ணம் கூட உருவாகிறது. ஆகையால், ஆளுநர் உரையின் போது இரு அவைகளையும் ஒன்றாகக் கூப்பிடுவதுபோல, பட்ஜெட்டுக்கும் இரு அவைகளையும் ஜாயின்ட் செஷனாகக்

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1982 மார்ச் 4

கூப்பிட வேண்டும். அதற்கு இடையூறு இருந்தால், பேரவையிலே நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பிக்கும் அதே நேரத்திலே மேலவையிலேயும் மேலவை முன்னவர் போன்றவர்களை வைத்து சமர்ப்பிக்க வேண்டும். இந்தக் கருத்தை இந்த அரசு நன்கு ஆராய்ந்து அடுத்த ஆண்டு இந்த நிதி நிலை அறிக்கை வெளியிடும்போது தக்க பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பொதுவாகச் சொல்லும்போது, ஏழை எளியவர்கள், பிற்பட்டோர் நலனை மனதில் கொண்டு இது தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பது புலப்படும். குறிப்பாக ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கும் திட்டத்தை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்திருப்பது, எவ்வளவு தூரம் ஏழைகளிடத்திலே, குழந்தைகளிடத்திலே இந்த அரசு பரிவோடு இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. அதற்காக அரசுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பட்ஜெட்டையும் அந்தக் காரணத்திற்காக நான் வரவேற்கிறேன். அது மட்டுமல்லாமல் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஓய்வு பெற்றவர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், இன்னும் நீதித் துறையினருக்கும் சில நன்மைகளைச் செய்திருக்கிறது இந்த அரசு. அவைகளை 106, 107, 120, 122 ஆகிய பாராக்களிலே மிகவும் விவரமாகச் சொல்லியிருக்கிறது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், சீப்ஜுடிஷியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளிலே, 'ஜெராக்ஸ்' கருவிகள் கொடுத்திருப்பதையும், எல்லா நீதிமன்றங்களுக்கும் டேப் ரெக்கார்டர்கள் கொடுக்க உத்தரவிட்டிருப்பதையும் மிகவும் வரவேற்கிறேன். இவைகள் எல்லாம் மக்களுடைய நன்மைக்காக துரிதமாக கேஸ்களை பைசல் செய்யும் வகையிலே எடுக்கும் நடவடிக்கைகளாகும். மேலும் கேஸ்களைத் துரிதமாகப் பைசல் செய்யும் வகையிலே புதிய கோர்ட்டுகள் அமைக்கவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், சீப் ஜுடிஷியல் மேஜிஸ்ட்ரேட்டுகளின் உபயோகத்திற்காக அவர்கள் மாவட்டத்தின் தலைமை நீதித்துறை அதிகாரிகள் என்ற வகையிலே கார்கள் வழங்க உத்தரவிடப்பட்டிருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் மொத்தத்திலே சொன்னால் நீதிபதிகளுக்கு உள்ள பிரச்சினைகளை இந்த அரசு பரிவோடு தீர்க்கிறது என்று சொல்ல முடியாது. சட்டம்-ஒழுங்கு, நீதி இவைகளை நிறைவேற்றுவதில் போலீசாரும், நீதித் துறையினரும் மிகவும் அக்கறையோடு உறுதுணையாக இருந்து பணியாற்றுகிறார்கள். ஆனால் இந்த அரசு போலீசாரிடம் காட்டும் பரிவை நீதிபதிகளிடம் காட்டவில்லை. போலீசாரைச் செல்லப் பிள்ளைகள் போலவும், நீதிபதிகளை மாற்றாந்தாய் மனப்பான்மையிலேயும் நடத்துகிறார்கள். உதாரணமாகப் போலீசார் இப்போது அநேகப் பலன்களைப் பெறுகிறார்கள். உதாரணமாக



1982 மார்ச் 4] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

ரென்ட் ஃப்ரீ குவார்ட்டர்ஸ் அவர்களில் பலருக்குக் கொடுக்கப்படுகிறது. ஓய்வு பெற்ற பின்புகூட, வீடு கட்டித்தரும் வகையில் ஒரு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நீதிபதிகளுக்கு, குறிப்பாக சென்னையிலே இருக்கும் நீதிபதிகளுக்குக் குடியிருக்க வீடு கட்டிக் கொடுக்க எந்தவிதமான முயற்சியும் இல்லை. நான் இதைப்பற்றிப் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

(நண்பகல் 12—00)

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டுவசதியைப்பற்றிப் பேசுவதால் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. அவர் ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். அப்போது இவ்வாறு நீதிபதிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் போடப்பட்டிருந்தால், அவரே அதனை நிறைவேற்றுவதற்கும் வசதியாக இருந்திருக்கும். அவர் காலத்தில் அப்படிப்பட்ட திட்டம் போடப்பட்டதா என்ற விவரத்தையாவது அவர் தெரிவிப்பாரா ?

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : போலீசாருக்கு எப்படித் தனியாக வீட்டு வசதி வாரியம் ஒன்று அமைக்கப்பட்டதோ அதைப்போல் நீதித் துறையில் இருக்கும் அனைவருக்கும் ஒரு வீட்டுவசதி வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் இங்கே விளக்கம் கேட்டதற்காக நான் பதில் சொல்ல விரும்புகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையில் உள்ள நீதிபதிகளுக்கு வீடுகட்டித்தர வேண்டும் என்ற எண்ணத்தில் வீட்டு வசதி வாரியத் தலைவர் ஒரு திட்டத்தை தயாரித்தனுப்பினார். அதன்படி சென்னை எழும்பூரில் உள்ள சீப் மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் காம்பவுண்டிற்குள் 36 அடுக்கு மாடிகளும், சைதாப்பேட்டையில் உள்ள கோர்ட் காம்பவுண்டிற்குள் 18 அடுக்கு மாடிகளும் உள்ள கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. இடங்களை பிரதம நீதிபதி அவர்களே வந்து பார்வையிட்டு அதற்கான இசைவையும் ஆர்வத்துடன் தெரிவித்திருந்தார்கள், ஆனால் உயர்நீதிமன்றம் பலமுறை எழுதியும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. என்ன காரணத்தால் இதை எடுக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை. இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் உள்ள நீதிபதிகள் வீட்டு வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** இவ்வளவு நல்ல திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளும் கட்சியின் சார்பில் வீட்டுவசதி வாரியத்தின் தலைவராக இருந்தபோது கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எதனால் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் நின்றது? இதற்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இடையூறாக நின்றார்களா அல்லது ஆளும்கட்சி இடையூறாக நின்றதா அல்லது வேறு ஏதாவது இடையூறாக இருந்ததா என்பதை அறிய விரும்புகிறேன். இவ்வள்வு நல்ல திட்டத்தை இனியாவது செயல்படுத்த இது உறுதுணையாக இருக்கும் என்பதால் இதைக் கேட்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** நான் அதைப்பற்றி ஒன்றும் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. அது இன்னும் அரசின் பரிசீலனையில் தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். அரசு அதைப் பரிவோடு கவனித்து இனியும் கர்லதாமதம் ஆகாமல் சீக்கிரத்தில் நிறைவேற்றும் என்றுதான் நம்புகிறேன்.

அடுத்து, சப்-ஜட்ஜுகளின் சம்பளம் பல்வேறு முறையீடுகளுக்குப் பின்னர், அதுவும் பல ஆண்டுகளுக்குப் பின்னர், உள்துறை ஆணை எண் 2491, தேதி 22—10—1980-ல் நியாயமான அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு அவர்களின் ஊதியத்தை உயர்த்தி வெளியிடப்பட்ட அரசாணை நாளதுவரை அமுல்செய்யப்படவே இல்லை. எந்தத் தேதியிலிருந்து அதை அமுல்படுத்துவது என்பதுபற்றியும், அதை எப்படி அமுல்படுத்துவது என்பது பற்றியும் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். என்னுடைய யோசனை என்னவென்றால் 1—4—1978 லிருந்து அவர்களின் சம்பளத்தை உயர்த்திவிட்டு, அதற்கான மானிடரி. எஃபெக்டை மட்டும் 22—10—1980 லிருந்து கொடுத்தால் போதும். அரசு இதைப் பரிசீலனை செய்து விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நீதித் துறையில் இருப்பவர்களில் அதிகமானவர்கள் சப்-மாஜிஸ்ட்டிரேட்டுகள். அவர்களின் அந்தஸ்தை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அல்லது ஜில்லா முன்சீப் பதவிக்கு உயர்த்த வேண்டும். 1976 ஆம் ஆண்டில் அரசாணை எண் 202-ல் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த இன்ட்டகிரேஷன் உத்தரவு என்ன காரணத்தாலோ நாளது வரை அமுலாக்கப்படாமலேயே இருக்கிறது. இந்த உத்தரவை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆறு ஆண்டுகளாக இது காலதாமதமானது என்ன காரணத்தால் என்பது தெரியவில்லை. எனவே இதை மனதில் கொண்டு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மற்றொரு விஷயம் சொல்கிறேன் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். 1965 ஆம் ஆண்டிலிருந்து சப்-மாஜிஸ்ட்ரேட் பதவிகளைப் பொறுத்தவரை, காலியான பல ஸ்தானங்கள் முறையாக, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக, சட்டப்படி நிரப்பப்படாமல் டெம்பரரியாக டிபார்ட்மென்டில் வேலை செய்பவர்களைக் கொண்டே அவர்களுக்கு எந்த பயிற்சியும் அளிக்காமலேயே நிரப்பப்பட்டு வந்திருக்கிறது. நியாயமாக சர்வீஸ் கமிஷன் மூலமாகச் செய்ய வேண்டியதைச் செய்யவே இல்லை. அதுவும் 15 வருடங்களுக்கு மேல் இப்படிச் செய்யாமலிருப்பது நல்லதல்ல. அதைப்போலவே 1976 ஆம் ஆண்டிலிருந்து ஜில்லா முன்சீப் பதவிகளும், பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் நியமனம் மூலமே நிரப்பப்பட்டு வருகின்றன. எனவே உடனடியாக சர்வீஸ் ரூல்ஸ்படி சர்வீஸ் கமிஷன் மூலமாகக் காலி ஸ்தானங்கள் அனைத்தும் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் 21 நிரந்தர நீதிபதிகளும், 4 அடிஷனல் நீதிபதிகளும் இருக்க வேண்டும். ஆனால் தற்போது 19 நீதிபதிகள்தான் இருக்கிறார்கள். 6 இடங்கள் காலியாக இருக்கின்றன. இதைப்பற்றி நான் சுமார் 1½ ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஒரு கேள்வி அனுப்பினேன். அது அனுமதிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அது இதுவரை லிஸ்டில், வினாப்பட்டியலில் வரவே இல்லை. பதிலே கொடுக்கப்படவில்லை. எனவே அரசு இதில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலி ஸ்தானங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏழை எளியவர்களுக்கும் நீதி அதிகச் செலவில்லாமல் கிடைக்க வேண்டும் என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. வழக்குகள் துரிதமாகப் பைசல் செய்யப்பட வேண்டும். எனவே மக்களுக்குப் பயன்படுகிற வகையில் அதிகமான கோர்ட்டுகளை பரவலாக அமைக்க வேண்டும். எந்த அளவுக்கு கோர்ட்டுகள் மக்களுக்கு அருகாமையில் அமைகின்றனவோ அந்த அளவுக்கு நல்லது. தற்போது கோவை மாவட்டத்திற்கும் நீலகிரி மாவட்டத்திற்கும் சேர்ந்து ஒரே டிஸ்ட்டிரிக்ட் கோர்ட் கோவையில் அமைந்திருக்கிறது. அதைப் போலவே சீஃப்ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கும் இரு மாவட்டங்களுக்கும் சேர்ந்து கோவையில் அமைந்திருக்கிறது. இதன் காரணமாக இந்தக் கோர்ட்டுகளுக்கு வரவேண்டிய நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மிகுந்த கஷ்டத்திற்கும் செலவுக்கும் உள்ளாகிறார்கள். எனவே

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1982 மார்ச் 4

எல்லா மாவட்டங்களிலும் இருப்பதைப்போல நீலகிரி மாவட்டத்திலும் தனியாக ஒரு ஜில்லா சீஃப்ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும் ஏற்படுத்தி, மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே சென்னையில் சுப்ரீம் கோர்ட்டின் பெஞ்ச் ஒன்றும், மதுரையில் சென்னை உயர்நீதி மன்றத்தின் பெஞ்ச் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. என்றாலும் இதில் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படாமலே இருக்கிறது. எனவே இதை அரசு பரிவோடு கவனித்து விரைவில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓய்வுபெற்றவர்களைப்பற்றி ஓரிரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஓய்வு பெற்றவர்களின் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை ரூ. 100 லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தியிருப்பதை நான் வரவேற்று நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பல நன்மைகளை இந்த அரசு ஓய்வுபெற்றவர்களுக்குச் செய்திருக்கிறது என்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களும் மற்றவர்களும்கூட ஓய்வு பெற்றவர்களைப்பற்றிக் குறிப்பிட்டு, அவர்களின் ஓய்வூதியத் தொகையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் எல்லாம் ஓய்வுபெற்றவர்களாக இல்லை என்றாலும், ஓய்வு பெற்றவர்களின் மீது அக்கறை காட்டியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, மகிழ்ச்சியும் அடைகிறேன். ஓய்வூதியம் பெறுவோர் சார்பாக ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் குறைந்தபட்சம் ரூ. 250 ஓய்வூதியமாக வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதை அரசு பரிவோடு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களுக்குக்கூட இப்போது நாம் மாதம் குறைந்தபட்சம் ரூ. 250 ஓய்வூதியமாக வழங்குகிறோம். தமிழ் அறிஞர்களுக்கு ரூ. 100 ஆக இருந்ததைத்தான் ரூ. 250 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். ஆகையால் ஓய்வுபெற்றவர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் 250 என்று நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் வெளிவந்த மத்திய அரசின் பட்ஜெட் பற்றி மற்ற உறுப்பினர்கள்கூட இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில்



1982 மார்ச் 4] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 150 என்றும், குடும்பப் பென்ஷன் ரூ. 140 என்றும் வைத்திருக்கிறார்கள். எனவே அதையும் அரசு கவனத்தில் கொண்டு ஓய்வு பெற்றவர்களுக்கு நல்ல முடிவைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் ஓய்வு பெற்றவர்களானாலும் சரி, இப்போது ஓய்வு பெறுகிறவர்களானாலும் சரி, அனைவருக்கும் விலைவாசி என்பது ஒன்றாகத்தான் இருக்கிறது. எனவே பென்ஷன் விகிதத்தைப் பொறுத்த வரையில், இருவருக்கும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இப்போது கொடுக்கப்படுகிற அதே விகிதத்தில்தான் முன்னாள் ஓய்வுபெற்றவர்களுக்கும் பென்ஷன் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பணியில் இருப்பவர்களுக்கு பஞ்சப் படி கொடுக்கப்படுகிறது. அது, ஓய்வுபெற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதைவிட மிக அதிகமாக இருக்கிறது. தற்போது பணியில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுவதில் சுமார் 40 சதவீதம் அல்லது பாதிதான் ஓய்வுபெற்றவர்களுக்கு டி.ஏ. வழங்கப்படுகிறது. எனவே இந்த நிலையை மாற்றிப் பதவியில் இருப்பவர்களுக்கு எந்த அளவுக்குப் பஞ்சப் படி வழங்கப்படுகிறதோ அதே அளவுக்கு பென்ஷன்தாரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மெடிகல் ரீஇம்பர்ஸ்மென்ட் பற்றி நான் ஏற்கெனவே பல முறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஓய்வுபெற்றவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 200 அளவுக்குத்தான் அது கொடுக்கப்படுகிறது. அதற்காக அவர்கள் ஆதரைஸ்டு மெடிகல் அட்டன்டெண்ட்களிடம் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டும். அதற்குப் பின்னால் அதை 'டிரஷரிக்கோ' அல்லது "பே & அக்கவுண்ட்ஸ்" ஆபீசுக்கோ கொண்டு போக வேண்டும். இதன் காரணமாக அவர்களுக்குப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. எனவே இதை மாற்றி அவர்களுக்கு ரூ. 20 அல்லது ரூ. 30 அல்லது ரூ. 40 அல்லது அரசு விரும்புகிற ஒரு அளவில் அதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஓய்வுபெற்றவர்கள் அனைவரும் வயதானவர்கள்தான். எனவே அவர்களுக்கு ஏதாவது உடல் நலக் குறைவு ஏற்பட்டுக்கொண்டேதான் இருக்கும். அதற்காக அவர்கள் கண்டிப்பாக டாக்டர்களிடம் போக வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே இதையும் கருத்தில் கொண்டு மாதந்தோறும் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்துவிட்டால், நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு ஓய்வுபெற்றவர்களும் வீட்டு வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சொந்த வீடோ, வாடகைக்கு வீடோ கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு நேரம் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு நான் இதோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1982-83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்திலே கலந்துகொள்ளுகிற வாய்ப்புத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்கே சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையின் மீது தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்திக் காட்டுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டியும், ஆதரித்தும், குறை கண்டும், இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை என்று சொல்லியும் தங்களுடைய வாதங்களை இங்கே வைத்தார்கள். நாங்கள் இதைப் பாராட்டுகிறபோது, "செஞ்சோற்றுக் கடன் தழிப்பதற்காக" இதைப் பாராட்டுகிறோம் என்ற குற்றச்சாட்டைக் கூட எங்கள் மீது சொன்னார்கள்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்று சொல்லுகிறான் வள்ளுவப் பெருந்தகை. நாங்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறோம் என்று சொன்னால், அப்படி பாராட்டுகிற காரணத்தாலே செஞ்சோற்றுக் கடன் கழிக்கப் பாராட்டுகிறார்கள் என்று குற்றம் சாட்டினால், "இதிலே ஒன்றுமே இல்லை" என்று சொல்லுகிற அந்தக் காரணத்தின் அடிப்படையிலே வைத்துப் பார்க்கின்றபோது, அவர்கள் செஞ்சோற்றுக் கடன் கழிக்க இப்படிச் சொல்கிறார்களோ என்ற ஐயப்பாடு எனக்கு வருகிறது. நியாயம் பொதுவானது. இரு தரப்புக்கும் பொதுவானது. வார்த்தையிலே வரக்கூடிய உட்பொருள் இரண்டு சாரார்க்கும் பொதுவானது: நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லுகிற நேரத்தில் அதை செஞ்சோற்றுக் கடன் என்று சொன்னால், இவர்கள் "ஒன்றும் இல்லை" என்று சொல்லுவ





தும் செஞ்சோற்றுக் கடன்தானோ ? எனக்கிருக்கிற ஐயமெல்லாம் இப்படி இவர்கள் பேசி அவர்களுடைய தலைவரை ஏமாற்றிவிடுவார்களோ என்ற ஐயப்பாடு எனக்கு அடிக்கடி வருகிறது. அந்த நிலைக்கு வந்துவிட்டார்களா என்ற உணர்வுதான் எங்களுக்கு ஏற்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது, இதை விளம்பரத்திற்காக நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். நாட்டிலே ஒரு வேளை சோறுகூட இன்றையதினம் கிடைக்காத நிலை இருக்கிறது. 100 கோடி ரூபாய் அளவிற்கு சத்துணவு வழங்குகிற திட்டத்தை எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்றால், அதை விளம்பர நோக்கத்தோடு அறிவித்திருக்கிறார்கள என்று சொன்னார்கள். எனக்கு பழைய காலங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தம். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழைப் பிள்ளைகளுக்கு ஒரு வேளை சத்துணவுத் திட்டம் அல்ல இது.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மதிய உணவுத் திட்டமாக இருந்தாலும் சரி, மதிய உணவிலும் கொஞ்சம் சத்து இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எங்களை விளம்பரப் பிரியர்கள் என்று சொல்லும் போது, எனக்குக் கடந்த காலம்தான் ஞாபகத்திற்கு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற இயக்கத்திலே உள்ளவர்கள், விளைகின்ற நெல்லில் இருந்து சிவப்பு முக்கோணம் வரையில் தங்களுடைய படம் வர வேண்டும் என்று விளம்பத்திற்காகவே வாழ்ந்தார்கள். அப்படி விளம்பரத்தால் வாழ்ந்தவர்கள்தான் எங்களைப் பார்த்து, விளம்பரத்திற்காகச் செய்திருக்கிறோம் என்றும், நாட்டிலே இருக்கின்ற நல்லவர்களும், அத்தனை மக்களும் பாராட்டுகிற, வரவேற்கிற ஒரு பெரிய திட்டத்தை விளம்பரத்திற்காக அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டம் என்றும் சொல்லி, அதைக் கிண்டல் செய்கிற அளவிலேதான் இன்றைய தினம் மனப்பக்குவம் இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டிலே இருக்கின்ற நல்லதொரு திட்டத்திலே, நடைமுறையிலே குறைகள் இருக்குமானால் அந்தக் குறைகளை அவர்கள் சுட்டிக்காட்டுவார்களேயானால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் அதனுடைய அடிப்படை நோக்கத்தையே தவறாகக் குறிப்பிட்டு இதிலே தவறு என்று சொல்லி ஆரம்பத்திலேயே முடக்கிவிட அவர்கள் முனைவார்களேயானால், நிச்சயமாக அது நாட்டுக்கு நல்லதாக இருக்க முடியாது என்பதை

இந்த நேரத்திலே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருது கிறேன். நோக்கம் நல்ல நோக்கம். நோக்கத்திலே குறை காண முடி யாது.

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, தெரிந்துகொள்ளு வதற்காகக் கேட்கிறேன். மதிய உணவு திட்டத்தின் கீழ் இரண்டு வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு எந்த அடிப்படையில் போட இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு ஒருவேளை தெரிந்திருந் தால், அதைச் சொன்னால், அதுபற்றிப் பரிசிலிக்கலாம்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : யார் பரிசீலிப்பது ? பரிசீலிக்கிற இடத் திலே நாங்கள் இருக்கிறோம். பரிசீலிக்க வேண்டியவர்கள் நாங்கள். பரிசீலிக்கிறேன் என்று சொல்லுவதன் பொருள் தெரியவில்லை. வேண்டு மானால் ஆலோசனை சொல்லுங்கள், ஏற்றுக்கொள்கிறேன். குறை இருந் தால் சொல்லுங்கள், ஏற்றுக்கொள்கிறோம்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாற்றுத் தலைவர் அவர்களே, அதை விமர்சிக் கிற இடத்திலே நாங்கள் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக் குச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : விமர்சனம் செய்பவர்கள் எங்கே வேண்டு மானாலும் இருக்கலாம். இங்கேதான் இருக்க வேண்டுமென்று இல்லை. 100 கோடி ரூபாய் திட்டத்தை நாங்கள் அறிவித்திருக்கும்போது, அதன் அடிப்படை நோக்கத்தைப் பற்றிக் குறை சொல்லுவது அல்லது நோக்கத்தை இழிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு பேசுவது சரியல்ல. நாடு பூராவும் வரவேற்கக் கூடிய திட்டம் இது. இந்தியாவிலேயே முன்னோடியாக நம்முடைய அரசு இந்த நாட்டிற்கு இதை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அவர்கள் பேசும்போது பல குற்றச்சாட்டுகளை இங்கே சொன்னார்கள். இந்த ஆட்சியிலே நடைபெறுகின்ற திட்டங்களையெல்லாம் வகைப்படுத்திச் சொல்லி, அதிலே குறைகள் இருக்குமானால், அந்தக் குறைகளை எடுத்துச் சொல்வார்களேயானால், நாங்கள் வரவேற்றிருப்போம். ஆனால் வேண்டு மென்றே பல குற்றச்சாட்டுக்களை இங்கே சொன்னார்கள்.

நெடும் பயணம் பற்றி நாடு பூராவும் பேசியாகிவிட்டது. மக்களும் பேசி விட்டார்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்ற போது அதையும் இங்கே கோடிட்டுக் காட்டி, நெடும் பயணத்தைப்பற்றிக் குறை சொல்லுகிறவர்கள், அண்ணாவினுடைய அல்லது பெரியாருடைய வழி யைத் தூற்றுகிறவர்களாக இருப்பார்கள் என்ற கருத்தில் சொன்னார்கள்.



நெடும் பயணம் போக வேண்டும், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அது தொடர் பயணமாகத்தான் இருந்ததே தவிர, நெடும் பயணமாக இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். நான் இன்னும் ஒன்றைச் சொல்லுவேன். நாட்டிலே நீதி புரட்சித் தலைவருடைய ஆட்சி யிலேதான் செம்மையாக இருக்கிறது, ஒழுங்காக இருக்கிறது, இந்தத் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்பதை இன்றைய தினம் நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். நீதி கேட்பது என்ற வரிசையிலே வருமானால், நீதி கேட்க ஆரம்பித்தால், அவர்கள் தாங்குவார்களா என்ற எண்ணம்தான் எங்களுக்கு எழுகிறது.

பழைய தமிழக வரலாற்று ஏடுகளைப் பார்த்தால், நாட்டிலே எத்தனை கொலைகள் எங்கெங்கே நடந்தன, அந்தக் கொலைகளுக்கு காரணகர்த்தாக் கள் யார், அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்ற பட்டியலைப் பார்த்தால், அது நிச்சயமாக அவர்களைப் பாதிக்கும். நீதி கேட்டு பயணம் போவதில் நியாயத்தோடு போவார்களேயானால், நாங்கள் வரவேற்கத் தயா ராகவிருக்கிறோம். அதற்குண்டான நீதியை இந்த நாட்டிலே நிலைநாட்ட எங்களுடைய புரட்சித் தலைவர் தயாராக இருக்கிறார் என்பதை இங்கே சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு அமைச்சர்கள் கிராமத்திற்கு பல்பொடி விற்கப் போகிறார்கள் என்று கிண்டலாக இங்கே பேசினார்கள். கிராமத்திற்குப் போனால், பல் பொடி விற்கத்தான் போக வேண்டுமென்று ஏன் அவர்கள் எண்ணுகிறார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. "கி.பி. இரண்டாயிரம் ஆண்டில் அனை வருக்கும் சுகாதார வசதி" என்று ஐக்கிய நாட்டுச் சபையில் யூனிசெஃப் நிறுவனம் முதலாவதாகப் போக்க வேண்டியது என்று சொல்லியிருப்பது "பல் நோய்" தான். பல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாட்டுச் சபையில் யூனிசெஃப் நிறுவனம் முதலாவது கோரிக்கையாக வைத்திருக்கிறது என்பதை இங்கே சொல்லுவது பொருத்த மாக இருக்கும் என்று கருதுகிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய பேச்சில் அந்தப் பற்பொடி வழங்குவதற்கான காரணங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கிராமத்திலே உள்ள மக்கள் செங்கல்லையும் மற்ற பொருள்களையும் போட்டு பற்களைத் தேய்க் கின்ற காரணத்தினாலே, பற்களினுடைய ஊண் பகுதியில் தேய்மானம் ஏற் பட்டு, அதனாலே பல வியாதிகள் வருவதாக எடுத்துச் சொன்னார்கள். பல் வியாதி வருவதால் பல வியாதிகள் வருகின்ற காரணத்தாலே, பல் நோக்குத் திட்டம் என்ற அடிப்படையிலே இந்தப் பற்பொடித் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இது ஏதோ நாங்கள்

கொண்டு வந்த புதிய திட்டம் அல்ல. ஏற்கெனவே யூனிசெப் நிறுவனம் என்று சொல்கின்ற, ஐக்கிய நாடு சபையிலேகூட பல் வியாதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்கள். ஆகவேதான் அந்த வியாதிகளைப் போக்கவேண்டும் என்பதில் நாமும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். அந்த அடிப்படையிலேதான், ஆண்டு இரண்டாயிரத்திற்குப் பிற்பட்ட காலத்திலே கொண்டுவரக்கூடிய அந்த நல்ல திட்டத்தை, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே முதலாவதாக நாங்கள் இன்றையதினம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதிலே குறை இருந்தால் சொல்லலாம். அமைச்சர்கள் போவது பற்பொடி விற்கத்தான் என்று சொல்லி கிண்டல் செய்வதில் பொருள் இருக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். இன்னொன்றையும் சொன்னார்கள்.

(பிற்பகல் 12-20)

மின்சாரம்பற்றி இங்கே மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள்' மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற திறனை இந்த ஆட்சி தனியாரிடத்திலே கொடுக்கலாமா வேண்டாமா என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற காரணத்தை வைத்துச் சொன்னார்கள். அண்ணாவினுடைய சமாதிக்கு ஒரு பக்கத்திலே கோட்டை இருக்கிறது. அந்த அண்ணாவினுடைய சமாதியைத் தாண்டி இந்தக் கோட்டைக்கு வருகிறபோது அந்த அண்ணாவினுடைய கொள்கையை அங்கே அடகு வைத்துவிட்டு, அண்ணாவினுடைய கொள்கையை மறந்துவிட்டு, இவர்கள் கோட்டைக்கு வருகிறார்களே, இவர்கள் கோமாளிகள் அல்லவா என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்.

* திரு. நீலநாராயணன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்ன குறிப்பிட்டேன் என்பதை அவர் கேட்டார்களோ கேட்கவில்லையோ அவர்களுக்கு நான் அதைத் தெளிவுபடுத்தவேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்ணாவினுடைய சமாதி கோட்டைக்கு வருகின்ற வழியிலே அமைந்திருப்பது எதற்காக என்று நான் கருதுகிறேன் என்றால், கோட்டைக்குச் செல்கின்றவர்கள் அண்ணாவின் கொள்கையை மறந்துவிடக் கூடாது, கொள்கைத் தம்பிகளாக கோட்டைக்குச் செல்ல வேண்டும். அதைச் சுட்டிக் காட்டுவதற்கும், அதை நினைவு படுத்துவதற்கும், கொள்கை மறந்த கோமாளிகளாக கோட்டைக்குப் போகக்கூடாது, அதை நினைவு படுத்துவதற்காகத்தான், இந்தக் கல்லறை இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன் என்று சுட்டிக் காட்டினேன். இதைத்தான் நான் என்னுடைய பேச்சிலே சுட்டிக்காட்டினேனே தவிர்த்து, கோட்டைக்கு வருகின்றவர்கள் அமைச்சர்கள் எல்லோரும் கோமாளிகள் என்ற எண்ணத்திலே சொல்லவில்லை. அண்ணாவினுடைய கொள்கையை அவர்கள் மறந்துவிட்டால், 'கோமாளிகள் ஆவார்கள். 'மறக்காமல் செயல்படுங்கள் என்று சுட்டிக் காட்டத்தான், நினைவு படுத்துவதற்குத்தான், இந்தக் கல்லறைக்குப் பக்கத்திலே கோட்டை இருப்பதைப்பற்றிச் சொல்லப்பட்டதே தவிர்த்து வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு அங்கத்தினர் திரு. நீலநாராயணன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். அண்ணா அவர்களுடைய சமாதி ஏன் கடற்கரைக்குப் பக்கத்தில் இருக்கிறது, கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். சிலர் வருகின்றபோது கோட்டைக்கு இந்தப் பக்கமாக சுற்றிக்கொண்டு வரும்போது, அண்ணா சமாதியைப் பார்க்காமல் வந்துவிடுகிறார்கள். அவர்களும் அந்தப் பக்கமாக வந்தால் அண்ணாவின் நினைவு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : அண்ணாவினுடைய கொள்கையை மறந்தவர்களாகக் கோட்டைக்கு வந்தால், கோமாளி என்று சொல்கிறார்கள். பரவாயில்லை. அவர்கள் சொல்கின்றபோது, ஒரு காரணத்தைச் சொல்லிச் சொன்னார்கள். அதாவது மின்சார உற்பத்தியைத் தேசியமயமாக்கும் கொள்கைக்கு மாறுபட்டுப்போனார்கள் என்று சொன்னார்கள்.

திரு. நீலநாராயணன் : இந்த மின்சாரத் துறை தனியார் துறைக்கு விடப்படுமா, விடப்பட மாட்டாதா என்பது விவாதத்திலே இருந்தது என்பது உண்மைதான். ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசுகிறபோது அந்த விவாதம் இடம் பெற்றது. அப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மிகத் தெளிவாக முடிந்த முடிவாக தனியார் துறையிலே விடுவதற்கு எங்களுக்கு ஒருமித்த கருத்து இருக்கிறது என்று பொருள்பட அன்றையதினம் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பின்னர் தான், ஒன்றன்பின் ஒன்றாக இந்தக் கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அங்கத்தினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : நினைவோடுதான் சொல்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்றபோது, மின்சாரத் துறையை தனியாருக்கு விடலாமா வேண்டாமா என்பது ஆய்வில் இருக்கிறது என்ற அளவிலேதான் பதில் சொல்லியிருப்பார்கள். தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று அண்ணா சொன்னார்கள். அண்ணா அவர்கள் தேசியத்திலே நம்பிக்கை உடையவர்கள். அந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

இந்த தேசிய கொள்கைக்குப் புறம்பாக நீங்கள் தனியாரிடத்திலே விடலாமா அல்லது விடக்கூடாதா என்ற சர்ச்சையிலே மூழ்கியிருக்கின்றீர்கள் என்று சொல்கிறார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அண்ணா அவர்கள் தேசிய மயமாக்குவதிலே நம்பிக்கை வைத்திருந்தார்கள். தேசியக் கொள்கையிலே அல்ல.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அந்தக் கொள்கைக்குப் புறம்பாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்காக அண்ணாவின் சமாதி கோட்டைக்குப் பக்கத்திலே இருப்பதைப்பற்றிக்கூட சுட்டிக் காட்டினார்கள். இங்கே நிதி நிலை அறிக்கையிலே அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணாவினுடைய கொள்கையை விட்டு விட்டு புறம்பாகப் போவதாகவும், மறந்து விட்டதாகவும் சொல்கின்றார்கள். அவர்களுக்கு நான் சொல்வேன். "உங்களுடைய கொள்கைகளை, லட்சியங்களை எந்த வகையிலே நிறைவேற்றியிருக்கிறீர்கள், இப்போது எப்படி அமர்ந்திருக்கிறீர்கள்-" என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும், யார் கோமாளித்தனத்திற்குச் சொந்தக்காரர்கள் என்பது என்னுடைய நினைவிற்கு வருகிறது. முஜீபீர் ரஹ்மான் என்று நீங்கள் சொன்ன காலமும் உண்டு.. மாநில சுயாட்சியைப்பற்றித் தீவிரமாக எடுத்துச் சொல்லிய காலமும் உண்டு. இந்த மாநில சுயாட்சியைப் பெற்றே தீருவோம் என்று சொன்னதும் உண்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அதிலே கம்பீரம் இருக்கிறது. அண்ணாவினுடைய லட்சியத்தை நாங்கள் மறக்கவில்லை, நாமத்தை மறக்கவில்லை. ஆனால் பாராளுமன்றத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்கின்ற அந்த நேரத்தில் தான் 'அம்மா திராவிட முன்னேற்றக் கழகம்' என்று சொல்கின்ற நிலையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைக் கேட்டு புளகாங்கிதம் ஏற்படுகிறது, அதைக் கேட்டு புத்துணர்ச்சி ஏற்படுகிறது என்று சொல்கின்ற நிலையும் இந்த நாடறிந்த ஒன்று என்பதை நான் இங்கே சொல்வது. பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.





* **திரு. நீலநாராயணன் :** இங்கே நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 'அம்மா தி.மு.க.' என்று சொல்வதிலே என்ன தவறு? இது உண்மையிலேயே அன்னை அந்தஸ்திலே தான் இருக்கின்றது. இது தி.மு.க. தான். அதிலேயிருந்து பிரிந்து சென்றதுதான் அவர்களே தவிர, அவர்கள் கழகம் ஒரிஜினல் அல்ல. இதுதான் உண்மையான திராவிட முன்னேற்றக் கழகம். இருக்கின்ற தி.மு.க. தான் அம்மா தி.மு.க தாய்க் கழகம் என்பதை நண்பர் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் அம்மா ஆவதிலே நாங்கள் ஆட்சேபணை சொல்ல விரும்பவில்லை. அதற்கு முன்னாலே தந்தை யார் என்பது பிரச்சினையாக இருக்கிறது. ஆனால் அம்மா ஆகின்றார்கள். நாங்கள் எப்படியோ உங்களுடைய மகனாக வர வேண்டும். நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் ஏற்றுக் கொண்டால் அது போதும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஏதோ மாநில சுயாட்சிக் கொள்கைகளை விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியிலே இருந்தாலும், விற்பனை வரியை மத்திய அரசு எடுத்துக்கொள்வது பற்றிய ஒரு தீர்மானம் வந்த போது, ராஜ்ய சபையிலே விவாதம் வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. வை. கோபாலசாமி என்ற உறுப்பினர் அவர்கள்தான் மாநிலங்களிடமிருந்து இந்த அதிகாரத்தைப் பறிக்கக்கூடாது என்றும், அதைப் பறிப்பதன் மூலம் மாநிலங்களுக்குப் பொருளாதார ரீதியில் ரொம்ப கடுமையான சூழ்நிலை ஏற்படும் என்றும், அதிலேயும் குறிப்பாக தமிழ் நாட்டைச் சேர்ந்த நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநில சுய ஆட்சிக்காக வாதாடியிருக்கிறார்கள். ஆனால் அப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் கூட அதிலே பங்கேற்கவில்லை, அதை எதிர்க்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** உங்களுடைய உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டிய நேரத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அவர் பேசியபோதே, நாங்களும் தெரிவிக்கவேண்டிய கட்டாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 மார்ச் 4

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து தவறான தகவல் தரக்கூடாது. ஒரு தீர்மானம் வருகிறபோது, அந்தத் தீர்மானத்தின் மீது கட்சி அடிப்படையில் தி.மு.க. எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறது. அப்படி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தெரிவிக்கவில்லை என்பதைத் தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மத்திய புலனாய்வுத்துறை சென்னையை நோக்கி வரவேண்டும், தமிழகத்தை நோக்கி வரவேண்டும், அந்தப் புலனாய்வுத் துறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அடிக்கடி சொல்வதிலே உள்ள மர்மம் எனக்குப் புரியவில்லை. மத்திய புலனாய்வுத் துறை வரவேண்டுமென்று சொல்கின்ற வரையிலே எப்படி மாநில சுயாட்சிக் கொள்கையை நிலைநாட்டப் போகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அம்மா தி.மு.க. என்று சொன்னவுடனே, தத்துவ ரீதியாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொல்கின்றபோது இப்படிச் சொல்கிறார்கள். ஆனால் எங்களைப் பார்த்து அண்ணாவினுடைய கொள்கையை மறந்துவிட்ட நிலையிலே போகிறோம் என்று சொல்கிறார்கள். லட்சியத்தை இங்கே மறந்துவிட்டார்களோ என்ற ஐயப்பாட்டை எழுப்பியிருக்கிறார்கள். நாங்கள் அண்ணாவை எந்த இடத்திலேயும், எந்த நேரத்திலேயும் மறக்கமுடியாத இடத்திலேதான் இருக்கிறோம். ஆனால் நீங்கள் அண்ணாவை மறந்து அம்மா என்ற அந்தஸ்தை நாடுகிற நிலையிலேதான் வந்திருக்கிறீர்கள் என்பதை இங்கே சொல்வது மிகப்பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத் துறையைப்பற்றிப் பேசினார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும்வரை அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மின் உற்பத்திக்கு 8 ஆண்டுகளில் அவர்கள் செலவிட்ட தொகை 106 கோடி ரூபாய் என்பதை இங்கே நினைவூட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். தமிழ்நாட்டிலே 8 ஆண்டுக்காலத்திலே மின் உற்பத்



திக்காக செலவிட்ட தொகை 106 கோடி ரூபாய். ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியில் 3 ஆண்டுகளில் மின் உற்பத்திக்கு செலவிட்டுக்கொண்டிருக்கும் தொகை 300 கோடி ரூபாயாகும். அவர்கள் 8 ஆண்டுக்காலத்தில் மின் உற்பத்திக்கு 106 கோடி ரூபாயைச் செலவிட்டார்கள்; ஆனால் 3 ஆண்டுக்காலத்தில் 300 கோடி ரூபாயை இந்த நாட்டு மின் உற்பத்திக்காக நாங்கள் செலவிட்டுக்கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, இந்த நாட்டிலே மின்சாரம் என்றால் என்ன என்று தெரியாத குடிசை வாழ் மக்களுக்கு, அவர்கள் மின்சாரத்தை நுகர்கின்ற அளவிற்கு வாய்ப்புகளும், வசதிகளும் இந்த ஆட்சியால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார வசதிகளை உருவாக்கப் போகிறோம், கம்பிகள் இழுக்கப்பட வேண்டும், அங்கே கம்பங்கள் நடப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த மின்சாரத்தை விவசாயப் பெருமக்கள் நுகர்ந்தார்களா என்றால் கிணற்று மேட்டிலே உட்கார்ந்துகொண்டு, எப்போது மின்சாரம் வரும், வரும் என்று ஏங்கும் நிலையில்தான் இருந்தார்கள். ஆனால் இன்றைய தினம், எங்களுடைய கழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகு. புனல் மின் திட்டமாக இருந்தாலும், அனல் மின் திட்டமாக இருந்தாலும் மின்சார உற்பத்தியை எப்படியாவது அதிகரிக்க வேண்டுமென்று, அதன் உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டுமென்று, அவர்கள் செலவழித்ததைப்போல ஏறக்குறைய 3 மடங்கு அதிகமாக, 3 ஆண்டுக் காலத்தில் மின்சாரத்திற்காக செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லியாக வேண்டும். அதுமட்டுமல்ல, தமிழகத்தின் விவசாயப் பெருமக்களுடைய உணர்வுகளைப் புரிந்து, அவர்கள் வாங்கிய கடனை கணிசமான அளவிற்கு இந்த அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. 1981 ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் தேதி ரிசர்வ் வங்கி கொடுத்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில்தான் 124 கோடி ரூபாயை விவசாயிகளுக்காக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை ரிசர்வ் வங்கி சொல்லியிருக்கிறது. அதே நேரத்தில் பக்கத்தில் உள்ள அரசுகளைப் பார்க்கிறேன். கர்நாடகத்தில் 7 கோடி ரூபாய் அளவிற்கு அந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது, ஆந்திரத்தில் அறுதியாகக் கிடையாது. கேரளாவில் 2.37 லட்சம் அளவிற்கு விவசாயிகள் பட்டிருக்கிற கடனை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மராட்டியத்தில் 49 கோடி ரூபாய்; மத்தியப் பிரதேசத்தில் இல்லை; உத்திரப் பிரதேசத்தில் 10 கோடி 96 லட்சம் ரூபாய்; அரியானாவில் 98 லட்சம்தான். ஆனால் தமிழகம் ஒன்றில்தான், எங்களுடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் 124 கோடி ரூபாய் ஏற்றுக்கொண்டு, விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்வுக்கு வழி வகுத்திருக்கிறார்கள். வள்ளுவர், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்

[திரு. காடுவெட்டி கண்ணப்பன்] [1982 மார்ச் 4

மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்று கூறியிருக்கிறார். ஆனால் பூச்சி மருந்தாக இருந்தாலும், சர்க்கரையாக இருந்தாலும், அதை அடுத்து கோதுமையாக இருந்தாலும், விவசாயப் பொருள்கள் எதுவாக இருந்தாலும், உழுதுண்டு செய்தோரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்ற புதிய இலக்கணத்தை உருவாக்கியவர்கள் இன்றைய தினம் எங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர். என்ற வள்ளுவன் வாக்குக்கிணங்க வேலை நடந்தால், மேழி பிடிப்பவன் உலகைக் காப்பான் என்ற உணர்வோடு 124 கோடி ரூபாயை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு தள்ளுபடி செய்துள்ளதுள்ள , . .

**திரு. சோ. ஆறுமுகம் :** இங்கேயே வள்ளுவர் குறளை எழுதி வைத்திருக்கிறார்கள். எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு—அதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் நினைவுபடுத்திக்கொண்டு பேசுவது நல்லது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** எனவே விவசாயப் பெருமக்களுடைய உணர்வுகளை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கும் அரசாக, 124 கோடி ரூபாயை தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதைத் தள்ளுபடி செய்வதற்கு இந்த அரசு முனைப்பாக இருக்கிறதென்பதை ரிசர்வ் வங்கி அறிக்கையிலேயிருந்து பார்க்கிறோம்.

இன்னொன்று சொல்லுவேன். 1978-79-லே தமிழகப் பொருளாதார மதிப்பீட்டைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். 1977 வரை தமிழக தொழில் துறை உற்பத்தி 4.4 விழுக்காடுதான். 1977 வரை, 7½ ஆண்டுக்காலம் இந்த நாட்டை ஆண்டவர்களுடைய உற்பத்தித் திறன் பெருக்கம் 4.4 சதவிகிதம்; ஆனால் 2 ஆண்டுகளில் 1979-ல் தொழில் துறை உற்பத்தி 17.7 சதவிகிதம். ஆக 10 சதவிகிதத்திற்கு மேல் தொழில் துறை உற்பத்தி எங்களுடைய புனிதத் தலைவர் ஆட்சியிலேதான். புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் தமிழகம் பொற்காலத்தை எட்டிக்கொண்டிருக்கிறது என்பதை எங்களால் நிரூபணம் செய்ய முடியும்.

நான் இன்னொன்றைச் சொல்லுவேன். தேசிய வளர்ச்சி தொழில் துறையில் 6.9 சதவிகிதம்; தமிழ் நாட்டினுடைய வளர்ச்சி இருப்பது 14.4 சதவிகிதம். இப்படி தொழில் துறையிலேகூட எங்களுடைய அரசு முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்ல முடியும்.



1982 மார்ச் 4] [திரு. காடுவெட்டி கண்ணப்பன்]

உற்பத்தித் திறனில்கூட 2 ஆண்டுகளில் 5.7 சதவிகிதம் தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது என்பதைச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும், அதுமட்டுமல்லாமல் மிச்சல் நிறைந்த மின் உற்பத்தித் திறன் 18 சதவிகிதம் என்ற இலக்கை எங்கள் அரசு எட்டியிருக்கிறது. தேசிய உற்பத்தித் திறன் 12.2 சதவிகிதம். புனிதத் தலைவர் ஆட்சியிலேதான் தமிழகத்தின் மின் உற்பத்தித் திறனானது 18 விழுக்காட்டை எட்டியிருக்கிறது. ஆக, எந்த நிலையிலே எடுத்துக்கொண்டாலும் எங்கள் கழக அரசு ஒரு குறியீட்டை எட்டிக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டு மக்களின் துயரங்களைத் துடைப்பதிலே இந்த அரசு கவனமாக இருக்கிறது. அண்ணா அவர்கள் சொன்னதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். யாருக்கு நீங்கள் நண்பர்கள் என்று கேட்டபோது, நண்பர்கள் அற்ற ஏழைகளுக்கு நண்பர்களாக இருப்போம் என்று சொன்னாராம். அதைத்தான் சொல்கிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மக்களின் வாழ்விற்கு உத்தரவாதம் தரும் திட்டங்களை—தன்னிறைவுத் திட்டமாக, வேலைக்கு உணவுத் திட்டமாக, 100 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டமாக—நிறைவேற்றி வருகிறது, நண்பர்கள் அற்ற ஏழைகளுக்கு நண்பர்களாக இருக்கும் இந்த அரசு.

அடுத்து விளம்பரம் பற்றிச் சொன்னார்கள். புரட்சித் தலைவருக்கு இனிமேல்தான் விளம்பரம் தேடவேண்டுமென்று இல்லை. 5 ஆண்டுகள் நிரம்பிய குழந்தையைப் பார்த்து புரட்சித் தலைவர் யார் என்று கேட்டால், உடனடியாக அந்தக் குழந்தை சொல்லுகின்ற அளவிற்கு இன்றைய தினம் அனைத்து மக்கள் உள்ளத்திலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள் அவர்கள் என்பதை என்னால் சொல்ல முடியும். இன்னொன்று சொல்லுவேன். நெல்லாக இருந்தாலும், பருத்தியாக இருந்தாலும், கோதுமையாக இருந்தாலும், சுவற்றிலே எழுதப்படுகிற சிவப்பு முக்கோணமாக இருந்தாலும், தங்களுடைய படம் வர வேண்டுமென்று எண்ணுகிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே, ஜீவா, அழகிரி, நேசமணியை மறக்கவில்லை; மருது பாண்டியரை மறக்கவில்லை. அவர்கள் நினைவாக, இந்த மண்ணுக்கு உழைத்த அந்த நல்லவர்களுடைய நினைவாக; அவர்கள் பெயர் நீண்ட காலம் இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்து, புதிய கழகங்களை அவர்கள் பெயர்கள் அலங்கரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஜீவாவை மறக்க முடியாது. காலுக்கு செருப்பில்லை; வயிற்றுக்குக் கூழில்லை; பசையற்றுப் போனோமடா தோழனே என்று பாடிய ஜீவாவை மறக்கக்கூடாது என்றுதான் அவர் பெயரிலே போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள்.

குற்றங்களைச் சொல்லுங்கள், குறைகளைச் சொல்லுங்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஒன்றுமே இல்லை என்று நீங்கள் சொல்லுவதைப் பார்க்கும்போது, நீங்கள் இருக்கும் இடத்திலே ஒன்றுமே இல்லை என்ற உணர்வுதான் ஏற்படுகிறது என்று சொல்லி, இந்த வாய்ப்பைக் கொடுத்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 12-40)

திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு, என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் ஏழை எளிய மக்களின் நலத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, தயாரித்திருக்கும் நம் தமிழக அரசை நான் மிகவும் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் மாநிலத்தில் பெரும்பான்மையோர் விவசாயத்தை நம்பி இருப்பவர்கள். அவர்களுக்காக, நம் அரசு, உணவு தானிய உற்பத்திக்குத் தேவையான, தாவர வித்துக்கள் உற்பத்திக்காக ரூபாய் 80 லட்சம் செலவில் விதைப் பண்ணைகளும் விதைகளைப் பதப்படுத்த, ரூபாய் 60 லட்சம் செலவில் புதிய பிரிவுகள் தொடங்க இருக்கிறது. உழவர்கள் தங்களுடைய விளை பொருள்கள், நல்ல முறையில் விற்பதற்கும், அவற்றை ஈடுகாட்டி முன்பணம் பெறுவதற்கும், சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இத்திட்டங்களினால் நமது விவசாயப் பெருமக்கள் நல்ல பலனை அடைவார்கள்.

கால்நடைகளுக்காக், சுகாதார வசதியும், சிகிச்சையும் அளிக்கும் பொருட்டு கால்நடை மருந்தகங்களை அதிக அளவில் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தினால் கால்நடைகளுக்கு அதிக பராமரிப்பு கிடைக்க வகை செய்த நம் அரசுக்கு நன்றி கூறுகிறேன்.

மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்குவதற்காக ரூபாய் 11.30 லட்சம் உதவித் தொகையாக, 1,000 ஏழைகளுக்கு வழங்க அரசு திட்டமிட்டிருக்கிறது. கிராமங்களில் வாழும் ஏழை மக்களின் குடிசைகளுக்கு நம் அரசு "மின்னொளி" வழங்கியிருக்கிறது. அவர்களின் இல்லங்களை ஒளிமயமாக்கியிருக்கிறது. இதற்காகவும் நம் அரசை நான் பாராட்டுகிறேன்.





கதர் கிராமத் தொழில் வாரியம் 1982-83-ல் கூடுதலாக 33,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க இருப்பதும், கைவினைஞர்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு ரூபாய் 7 கோடி அளவில் 18,000 கை வினைஞர்களுக்கு உதவியளிக்க எண்ணி அதற்கான திட்டங்களைத் தீட்டியிருப்பதும் பாராட்டுக்குரியது.

கைத்தறி நெசவாளர்களுக்கு, நம் அரசு, செலவுக் கடன்களை அனுமதிப்பதற்கு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் உதவியைப் பெற, அந்நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரக் கருதியுள்ளது. சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்காக, பொதுப்பணி பட்டறை ஒன்றை ஏற்படுத்த, திட்டமிடப்பட்டிருக்கிறது. இதன் பயனாக 700 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த நெசவாளர்கள் பயன் அடைய முடியும். நூற்பு ஆலைகள் மூலம் 3,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டமும் வரவேற்கக்கூடிய திட்டமாகும்.

பயணிகள் வசதிக்காக, வேலூர், ஈரோடு, நாகர்கோவில், காரைக்குடி போன்ற ஊர்களில் புதிய போக்குவரத்துக் கழகங்களை அமைக்க அரசு முடிவு செய்திருப்பதும், கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு நடைபாலம் கட்ட திட்டமிடப்பட்டிருப்பதும் பயணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும் நல்ல திட்டமாகும்.

சுற்றுலாப் பயணிகளில் குறைந்த வருமானம் உள்ள பயணிகளுக்கென அதிகச் செலவு ஏற்படாத வகையில், இடவசதி செய்து கொடுக்க சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இளைஞர் இல்லங்கள் 9 கட்டி வருவதாக, குறிப்பிட்டிருப்பது, மிகச் சாதாரணமான பயணிகளும் பயன் பெறும் வகையில் இருக்கிறது.

மகளிர்களுக்காக விளையாட்டுப் பள்ளி கோயம்புத்தூரில் அமைய இருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், நம் அரசுக்கு நன்றியும் கூறிக் கொள்கிறேன்.

[திருமதி. சீதாதேவி கிருஷ்ணசாமி] [1982 மார்ச் 4

கிராமியக் கலைகள், பாடல்களை நம் வருங்காலச் சந்ததியினர் அறியும் பொருட்டு அவைகளை ஒலிப்பதிவு செய்து பாதுகாக்கும் திட்டமும், வாய் வழியாய் வந்த அரிய அறிவுச் செல்வங்களை எழுத்தில் பதிப்பித்து, அதனைப் பாதுகாத்து இனிவரும் தலைமுறையினருக்கு கிடைக்க வழி செய்ய இருப்பதும், நம் அரசு, நம் நாட்டின் வருங்காலச் செல்வங்களின் மீது கொண்டிருக்கும் பொறுப்பை விளங்கிட வைக்கிறது.

மருத்துவமனைகளில், குறிப்பாக கோவையில் "மகப்பேறு" பிரிவில் மிகவும் இடவசதி குறைவாக இருப்பதால் அங்கு, குறிப்பாக அதிகமான படுக்கை வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு மிகுந்த கவனிப்புடன் சிகிச்சையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற கைம்பெண்கள் ஆகியோருக்கு அளிக்கும் உதவித் தொகையை அதிகரிப்பது குறித்து, அந்தத் தாய்மார்களின் சார்பிலும் உடல் ஊனமுற்றோர் சார்பிலும் என் நன்றியை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை விதவைப் பெண்களுக்கு வழங்கிவரும் தையல் மெஷின் தையல் கலை தெரிந்தவர்களுக்கு மட்டுமே பயன்படுகிறது. தையல்கலை தெரியாத விதவைப் பெண்களுக்கு நம் அரசு மின்சாரத்தினால் இயங்கும் மாவு அரைக்கும் இயந்திரங்களை வாங்க அல்லது ஏதாவது சிறிய தொழில்கள் செய்ய உதவித் தொகை அளித்தால் அந்த தையல் கலை தெரியாத பெண்களும் பயன் அடைவர் என்று என் கருத்தைக் கூறிக்கொள்கிறேன். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டத்திற்காக, நம் அரசை மீண்டும் பாராட்டி, நன்றி செலுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை **காலை 9.30 மணிக்குக் கூடும்.**

**அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.**

(பிற்பகல் 12.43)



## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

106. Notification issued with G.O. Ms. No. 94, Prohibition and Excise, dated the 6th July 1981 regarding an amendment to the Tamil Nadu Arrack (Manufacture) Rules, 1981. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

107. Notification issued with G.O. Ms. No. 56, Prohibition and Excise, dated the 12th June 1981 regarding an amendment to the Tamil Nadu Indian-made Foreign Spirits (Manufacture) Rules, 1981. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

108. Notification issued with G.O. Ms. No. 1282, Commercial Taxes and Religious Endowments, dated the 18th November 1981 regarding an amendmenc to the Commercial Taxes and Religious Endowments Department's Notification No. II (1)/C.T. & R.E./239 (b)/81, dated the 29th April 1981, published at pages 1-2 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 29th April 1981. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

109. Notification issued with G.O. Ms. No. 1834, Home, dated the 4th August 1981 regarding certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

*B. Reports, Notifications and Other Papers.*

Nil.

## இணைப்பு I

[478ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

